
பன்னிரு திருமுறைகள்



நான்காம் திருமுறை

தேவாரம்

மூலமும் உரையும்

தமிழ் நிலையம்

உ
சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள்
அருளிச் செய்த

தேவாரம்

நான்காம் திருமுறை
(மூலமும் தெளிவுரையும்)

உரையாசிரியர்:
வ.த. இராமசுப்பிரமணியம், எம்.ஏ.

தமிழ் நிலையம்,
ஏ.ஆர்.ஆர். காம்ப்ளக்ஸ்,
141, உஸ்மான் சாலை, தி. நகர்,
சென்னை – 600 017.

முதல் பதிப்பு : 1995

விலை : ரூ.. 125.00

Laser Typeset at : LKM Computer Prints, Madras – 17.
Printed at : Sankar Printers, Madras – 42.

பொருளடக்கம்

முன்னுரை

நற்றவன் நல்லூர்ச் சிவன்திருப்
　　பாதம்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற
　　வீரட்டர் பெய்கழற்றாள்
உற்றவன் உற்ற விடம்அடை
　　யார் இட ஒள்ளமுதாத்
துற்றவன் ஆமூரில் நாவுக்
　　கரசெனும் தூமணியே

— நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த திருத்தொண்டர் திருவந்தாதி – பாடல் 24. 11–ஆம் திருமுறை.

சைவ சமயத்தில், சமயக் குரவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் நால்வர். அவர்கள் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்க வாசகர் எனப்பெறுவர். இவர்களுள், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆகியோரால் அருளிச் செய்யப் பெற்ற திருப்பாடல்கள், தேவாரம் எனவும், மாணிக்க வாசகரால் அருளிச் செய்யப்பெற்ற திருப்பாடல்கள் திருவாசகம், திருக்கோவையார் எனவும் வழங்கப் பெறும்.

இவற்றுள், திருஞான சம்பந்தரால் அருளிச் செய்யப்பெற்ற பாடல்கள், முதல் மூன்று திருமுறை களாக வகுக்கப் பெற்றுள்ளன. நான்கு, ஐந்து, ஆறு ஆகிய திருமுறைகள் திருநாவுக்கரசு சுவாமிகளால்

அருளிச் செய்யப் பெற்ற தேவாரம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தது ஏழாம் திருமுறையாகும்.

இச் சைவத் திருமுறைகள் யாவும் பன்னிரு திருமுறைகளில் அடங்கும். ஒன்பதாம் திருமுறையில் திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி காட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதின்மரால் அருளிச் செய்த திருவிசைப்பா (திரு இசைப்பா), மற்றும் திருப் பல்லாண்டு அடங்கும். திருமூலநாயனார் அருளிச் செய்தது திருமந்திரம். இது பத்தாம் திருமுறை ஆகும்.

திருவாலவாய் உடையவராகிய சோமசுந்தரக் கடவுள் முதற்கொண்டு, காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், நக்கீரதேவர், கல்லாட தேவர், கபிலதேவர், பரண தேவர், இளம்பெருமான் அடிகள், அதிரா அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி என வரும் பன்னிருவரும் அருளிச் செய்தது பதினோராம் திருமுறை. சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்தது பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம். இது பன்னிரண்டாம் திருமுறையாகும்.

இத் திருமுறையாசிரியர்கள் இருபத்தெழுவருள், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், திருமூலர், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர் கோன், சேரமான் பெருமாள் நாயனார் ஆகிய எழுவரின் வரலாறுகள் பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ளன.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த 4, 5 மற்றும் 6 ஆகிய திருமுறைகள் 126 திருத்தலங்களை ஏத்திப் போற்றும் 312 திருப் பதிகங்களாக உள்ளன.

நான்காம் திருமுறையான இத் திருமுறையில் 50 திருத்தலங்களைப் பற்றி ஓதும் 113 திருப்பதிகங்களில் 1070 திருப்பாடல்கள் உள்ளன.

திருநாவுக்கரசர், ஈசனால் ஆட்கொள்ளப் பெற்றவர்; தமக்கையாராகிய திலகவதியாரின் வேண்டுகோளுக்கு இரங்கிய ஈசனின் திருவாக்கின்படி சூலையால் ஆட்கொள்ளப் பெற்றவர். ஈசனின் இத் திருவருளைப் பாலைக்காட்டித் திருஞான சம்பந்தரையும், சூலை காட்டித் திருநாவுக் கரசரையும், ஓலை காட்டிச் சுந்தரரையும் ஆண்ட கருணையாம் எனப் போற்றுவர், ஆன்றோர்.

திருநாவுக்கரசரின் திருப்பதிகமானது செந்தமிழ்ச் சுவையுடையதாய்க் கற்போரின் இதயத்தைத் தேனாய் இனிக்கச் செய்யும் தன்மையுடையதாய் விளங்குவதாகும். இந் நாயனாரின் முதல் திருப்பதிகத்தைச் செவிமடுத்து மகிழ்ந்து, சூலை நோயைத் தவிர்த்த சிவபெருமான், "பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளப் பதிகத் தொடை பாடிய பான்மையினால் நாவுக்கரசு என்று உலகு ஏழினும் நின் நல் நாமம் நயப்புற மன்னுக!" என அருளிச் செய்யலானார்.

திருநாவுக்கரசர், மெய்யுற்ற திருப்பணி செய்பவராய், விரவும் சிவ சின்னம் விளங்கிடத் தியான உணர்வுடன், ஈறு இன்றி எழும் திரு வாசகமும் கையில் திகழும் உழவாரப் படையும் கைக்கொண்டு

இருந்தனர் என்பது சேக்கிழார் சுவாமிகளின் திருவாக்கு.

திருநாவுக்கரசரின் திருத் தமிழானது, சூலை நோயை நீக்கியது. கொல்ல வந்த மதயானை வணங்கிக் கும்பிட்டுத் திரும்பிச் செல்லச் செய்தது; கல்லைத் தெப்பமாக்கிக் கடலில் மிதக்க வைத்துக் கரையில் சேர்த்தது, விடந்தீண்டி இறந்த அப்பூதி அடிகளாரின் மைந்தனான மூத்த திருநாவுக்கரசு என்னும் சிறுவனை உயிர்த்தெழச் செய்தது; மறைக் கதவத்தைத் திறக்கச் செய்தது.

உலகத்தோர்க்குக் கூறும் அறிவுரையாகத் திருப்பதிகம் எண் 15 பொது, பாவநாசத் திருப்பதிகம் விளங்குவதைக் காணலாம். 45 திருத்தலங்களை ஏத்திப் போற்றி, ஈசனை எண்ணுகின்ற இத் திருப்பதிகத் திருக்கடைக்காப்பாக மேவும் திருப்பாட்டு எண் 155இல் மன்னுயிரின் பாவ நாசத்தை உபதேசிக்கும் பாங்கினை எடுத்துக் கூறுவதற்கு வார்த்தைகள் போதா. இச் "செஞ் சொல் மாலை அடிச் சேர்த்தி எந்தை பெம்மான்! என் எம்மான்! என்பார் பாவ நாசமே" என்னும் அப்பர் சுவாமிகளின் திருவாக்கே மகாமந்திரமாகும்.

உயிர்கள் பிறவி கொள்வதும், உடலைக் கொண்டு வளர்வதும், ஈசன் திருக்கோயிலை வலம் வருதலும் வணங்குதலும் ஆக இதற்கே என்பதாகும் என்று அருளிச் செய்வது, திருப்பதிகம் எண் 9 திருஅங்க மாலையாகும்.

இவ்வுயிரானது, இவ் வுலகில் வினையின் காரணமாகப் பிறவி கொண்டுள்ளது. இப் பிறவி

யானது இறைவன் அருளால் ஏற்பட்டது. இப் பிறவியை வாய்ப்பாகக் கொண்டு இறைவனை வணங்கி, இனிப் பிறவாமையாகிய பெருநிலையை அடைய வேண்டும் என்பது, இத்திருமுறையின் சாரமாகும்.

இத் தன்மையை, உலகினுக்கு நன்கு எடுத்தோதும் வகையில், முற் பிறவியில் செய்த பாவங்கள் இம்மை வந்து சார்ந்து துன்புறுத்த, வருத்தம் கொள்வதுதான் என்னே! என வினவுவதும், அத்தகைய வினை வாராது இருக்க வேண்டுமானால் முன்னமேயே ஈசனை வணங்காமல் அயர்ந்தனையே! என்னே! என உணர்த்துதலும், நல்லுபதேசம் ஆகும். திருப்பாட்டு வ. எண் 1063 காண்க.

உலகத்தில் திருத்தொண்டர்கள் துயரற்ற வாழ்க்கையை மேவுதல் வேண்டும் என்பது, நாயனாரின் திருக்குறிப்பு. அவ்வாறு, இன்னலைத் தீர்த்தருளிச் செய்யாத நிலையில், "சொல்லக் கருதியது ஒன்று உண்டு. கேட்கில், தொண்டாய் அடைந்தார் அல்லற்படக் கண்டு பின் என் கொடுத்தி?" (திருப்பாட்டு வ. எண் 823) என, வினவும் பெற்றி யானது, திருத்தொண்டர்கள்பால் நாயனார் கொண்டுள்ள பெருங் கருணையை நனி விளக்கும்.

இத் திருமுறைகளை ஓதிப் பயனடைதலே மக்கட் பிறவியின் பேறு ஆகும். இத் திருமுறைகளுக்குத் தெளிவுரையாகச் சில கருத்துக்களை எடுத்துரைத்தலே யன்றி அதுவே முழுமையாகாது. இறைவன் உணர்த்தியருளத் திருவாய் மலர்ந்து, திருவுடைய பெரு மக்களால் உரைக்கப்பெற்ற திருமுறைக்கு உரை

காண்பது என்பது, கதிரவனை மின்மினியைக் கொண்டு காட்டுவித்தலை ஒக்கும்.

திருநாவுக் கரசரின் உவமைகளும், பழமொழி களும், அருளுபதேசங்களும், மகா மந்திரங்களும் இந் நூலில் ஏராளம். அவர்தம் திருவாக்காகக் கூறப் பெறின், பலமுறை "பவன்" என்னும் திருநாமத்தைப் பிடித்துப்பலகாலம் திரிந்தால், சிவன் என்னும் நாமத்தைத் தனக்கே உரிய ஈசன், செம்மேனி எம்மான் ஆட்கொண்டு அருள் புரிவான் திருப்பாட்டு 1058 என்பதாம். அத்தகைய நிலையில், நாவுக்கரசு என்னும் ஐந்தெழுத்துடைய அரசரின் பாதமே நம்மை உய்விக்கும். இதனைச் சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கின்படி பவக் கடலில் வீழும் மக்களைக் கரையேற்றும் ஒருவரை இக் கடலானது ஒரு கல்மேல் ஏற்றிடல் விந்தையோ! என உரைத்த திறத்தினை

இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ ?

– திருநாவுக்கரசு நாயனார் புராணம், பாட்டு 129

என அருளிச் செய்தவாறு ஓர்க.

தேவாரத் திருமுறைகள், ஆங்காங்கு ஓதுவா மூர்த்திகளால் ஓதப்பெற்றுப் பின்னர், சொற்பொழிவு களும் கருத்தரங்குகளும் என வெளிப் போந்தன. தற்போது, உரைகளின் தொகுதிகளுடன் மலர்கின்றன. இறைவன் திருவாக்கானது திருக் குறிப்பின் வண்ணம் அருளாளர்கள் வாயிலாக வெளிப்பட, அதன் மெய்ப் பொருள், அப் பெருமானே அன்றி வேறு இல்லை

என்பதே மெய். ஆயினும், ஓரளவு பொருளை மெய்யன்பர்கள் எளிதில் கொள்ளுமாறு "தமிழ் நிலைய"த்தினர் பன்னிரு திருமுறைகளை வெளியிடுகின்றனர். இது மிகப் பெரிய சிவ புண்ணியம் ஆகும். தமிழ் நெஞ்சங்கள், நன்கு பயின்று, ஓதி உய்யும் வகையில், சீரிய முறையில் அச்சிட்டு வெளியிடும் இத் தமிழ் நிலையதாருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இத்திருமுறையை அனைவரும் ஓதி உய்வார்களாக.

ஏற்றனை இடபம் சூலம்
இசையுநல் மேனி தாங்க
ஏற்றநின் பசிகண் டீசன்
இன்னமு தளித்துத் தாங்கக்
கூற்றமாய்ப் போந்த சூலை
குலையவெண் ணீறு தாங்கி
ஏற்றவா கீச நின்றன்
இணையடி என்த லைத்தே

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவடிகள் வாழ்க.

அன்பன்,
வ.த. இராமசுப்பிரமணியம்

திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாறு

1. திருஅவதாரம்

தென்னாற்காடு மாவட்டம் எனப் பின்னர் அழைக்கப்பட்ட திரு முனைப்பாடி நாட்டில், பெண்ணை ஆறு வளங் கொழிக்கச் சைவம் தழைக்க விளங்கியது திருவாமூர். ஆங்கு, மேன்மைமிகு சைவ வேளாளர் குலத்தில், பெருமைமிகு குறுக்கையர் குடியில் புகழனார் என்பவர் கற்பின் மிக்க நங்கை யாகிய மாதினியார் என்பவருடன் இல்லறம் இனிது நடத்தி வந்தார். அவர்களுக்குத் திலகவதியார், திருமகளாகத் தோன்றினார். அதன்பின் உலகிருள் நீக்கும் கதிரொளி போன்று, மருள் நீக்கியார் என்னும் புதல்வர் தோன்றினார்.

திலகவதியார் திருமணப் பருவம் அடைந்த நிலையில், சைவக் குலத்தைச் சார்ந்த சீலராக விளங்கிய கலிப்பகையார் என்பார்க்குத் திருமணம் பேசினர். அத்தருணம் அரச கட்டளையின்படி, அவர் போர் முனைக்குச் செல்ல வேண்டியதாயிற்று.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்து இவ்வுலகு" என்னும் நெறிப்படி புகழனார் தனது பொன்னுடலை நீத்தார். அவரைத் தொடர்ந்து கற்பின் மாண்பறிந்த பொற்பின் திருவாகிய மாதினியாரின் உயிரும் பிரிந்தது.

இளமைப் பருவத்தில் தவழ்ந்து கொண்டிருந்த திலவதியாரும் மருள்நீக்கியாரும் ஆற்றொணாத் துயர்க்

கடலில் அழுந்தித் துடிக்கும் ஞான்று, திலக வதியாருக்குத் திருமணம் பேசிய கலிப்பகையார் போர்க் களத்தில் வீர மரணம் அடைந்த செய்தி வந்து தாக்கியது.

தன்னை மணம் பேசிய கலிப்பகையாரே தனது கணவர், இனி உலகில் வாழேன் எனக் கொண்டு திலகவதியார் உயிர் துறக்கத் துணிந்தனர். அந் நிலையில், மருள் நீக்கியார், தாய் தந்தையரைப் பிரிந்த பின்னர் தமக்கையாரையும் இழப்பேனாயின் உயிர் தரியேன் என வேண்டத் திலகவதியார், தம்பியாரின் நலத்தைக் கருத்திற்கொண்டு மனைத் தவம் பூண்டு ஒழுகலானார்.

திலகவதியாரும் மருள்நீக்கியாரும் அறச் சாலைகள் வைத்தும் விருந்தளித்தும், சோலைகளை அமைத்தும் எழில் பெருக விளங்கினர்.

2. சமணம் சார்தல்

திலகவதியார் சிவாலயம் சார்ந்து சிவத் தொண்டாற்றி வணங்கி வரும் நாளில், மருள் நீக்கியார், சமண நெறியால் ஈர்க்கப் பெற்று அச் சமயத்தின்பால் எய்தி ஆங்குச் சிறந்து விளங்கித் 'தரும சேனர்' என்னும் சிறப்புப் பெயர் பூண்டு இருந்தார்.

3. சூலை தந்து ஆட்கொள்ளல்

திலகவதியார், சிவத் தொண்டு ஆற்றித் தன் தம்பியைச் சமணத்திலிருந்து மீட்டு உய்விக்க வேண்டும் என வேண்டுதல் செய்யலானார். "வேண்ட முழுதும் தருவோய் நீ! வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே"

என்னும் வாசகத்திற்கு இணங்க, திலகவதியாரின் வேண்டுதலும் இறைவனின் திருக்குறிப்பும் சேர்ந்து விளக்கமுறும் காலம் கனிவுற்றது.

ஈசன் திலகவதியாரின் கனவில் தோன்றி, "சூலை நோய் தந்து ஆட்கொள்வோம்'' என அருளிச் செய்தனர். இதனைச் சேக்கிழார் பெருமான், "உன்னுடைய மனக்கவலை ஒழிநீ! உன்னுடன் பிறந்தான் முன்னமே முனியாகி எனையடையத் தவம் முயன்றான். அன்னவனை இனிச் சூலை மடுத்து ஆள்வம்" என உரைத்தருளுகின்றார். மருள் நீக்கியார், சூலை நோயால் துன்புறலானார். ஈசனால் தருவிக்கப்பட்ட நோய், ஈசனாலன்றி வேறு எவ்வகையால் தீரும்? மருந்தால் தீரவில்லை. சமணர் ஆற்றும் மந்திர முறைகளாலும் தீரவில்லை. இந்த நிலையில் அவர் தமது தமக்கையாரை நினைவு கூர்ந்தார்.

4. திருவாளன் திருநீறு

திலகவதியார் சிவத் தொண்டு ஆற்றி வர, அன்னார்பால் சென்றடைந்தார் மருள் நீக்கியார். திருவதிகையில், திருமடத்தில் வாசம் புரியும் தமக்கையாரைப் பணிந்து வணங்கி "நந்தமது குலம் செய்த நற்றவத்தின் பயன் அனையீர்! இந்த உடல் கொடுஞ் சூலைக்கு இடைந்தடைந்தேன். இனி மயங்காது உய்ந்து கரையேறு நெறி உரைத்தருளும்" என மொழிந்த தம்பியாருக்குத் தமக்கையார் "கற்றை வேணியர் அருளே காணும் இது. கழலடைந்தோர் பற்றறுப்பார் தமைப் பணிந்து பணி செய்வீர்" எனப் பணித்தனர்.

திலகவதியார் திருவைந்தெழுத்தினை ஓதித் திருவாளன் திருநீற்றை அளிக்க, அதனைப் பணிவுடன் ஏற்றுக்கொண்ட தம்பியார், பெருவாழ்வு வந்தது என மகிழ்ந்தார். தமது திருமேனியில் ஆரப் பூசினார். திருப்பள்ளி எழுச்சியின் காலமெனப் போற்றப்பெறும் புலர் காலையில், "கூவின பூங்குயில், கூவின கோழி, குருகுகள் இயம்பின, இயம்பின சங்கம்'' எனப் பெறுங்காலத்துத் "துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால் தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால் சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்" என மொழியுமாறு மேவத் திலகவதியார் தமது தம்பியாரைத் திருவதிகை வீரட்டானத்தில் மேவும் செஞ்சடை முக்கண்ணர்பால் கொண்டு சென்றார். மருள் நீக்கியார் ஈசனைப் பணிந்தார்.

5. திருப்பதிகப் பெருமை

ஈசனைப் பணிந்த திருத் தொண்டருக்குத் திருத் தமிழ் மாலைகளைச் சாத்தும் உணர்வு கூடப் பெறக் "கூற்றாயினவாறு" எனத் தொடங்கும் திருப்பதிகம் எழுந்தது.

இத் திருப்பதிகத்தைக் கேட்டு மகிழ்ந்த ஈசன், நாயனாரின் வாக்கின் வளங்கொண்டு, "திரு நாவுக்கரசு" என்னும் திருநாமத்தை வழங்கினார். அக் கணமே சூலை நோயும் விலகியது. அதுமுதற் கொண்டு நாயனார், ஈசனைப் போற்றிப் பாடுவதும் உழவாரத் திருத்தொண்டு ஆற்றுவதும் ஆகிய பணிகளைப் புரிந்து வரலானார்.

6. சமணர் சீற்றம்

திருநாவுக்கரசர், சமணத்திலிருந்து சைவத்திற்குச் சென்றதையறிந்த சமணர்கள் சீற்றம் அடைந்தனர். அமண் சமயச் சார்புடைய மன்னன்பால் அணுகி முறையிட்டனர். மன்னன் அதனைச் செவி சாய்த்துத் திருநாவுக்கரசரை அழைத்து வருமாறு படை ஏவலர்களை அனுப்பினான். அதனைக் கண்ட நாவரசர், "நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்; நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்; ஏமாப்போம்; பிணியறியோம்; பணிவோம் அல்லோம்; இன்பமே; எந்நாளும் துன்பம் இல்லை" என்று எடுத்துரைத்தார்.

ஆயினும் யாவற்றையும் இறைவனே நடத்தும் பேரருளை எண்ணி மன்னனின் ஆணையின்படி உடன் செல்லலானார்.

7. நீற்றறையில் நாயனார்

திருநாவுக்கரசரை மன்னவன்பால் நிறுத்திய நிலையில் அரசன் யாது செய்யவேண்டும் என வினவினான். அமணர்கள் அவரை நீற்றறையில் இடுமாறு தெரிவித்தனர். அரசன் அவ்வாறே ஆணை பிறப்பிக்கச் சுண்ணாம்பு அறையில் அடியாரை இட்டனர். அடியவருக்கு அவ் வறையானது குளிர்ந்து காணப்பெற்றது. இத்தன்மையில், "மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நீழலே" என்னும் அற்புதத் திருப் பதிகம் எழுந்தது. ஏழு நாட்கள் இவ்வாறு இனிது இருந்த நாயனாரைக் கண்டு எல்லோரும் வியந்தனர்.

8. விடம் உண்ட வேந்தர்

நீற்றறையின் வெம்மையால் எவ்விடரும் இன்றி இனிது திகழ்ந்த திருநாவுக்கரசரின் ஆற்றலை மதியாத சமணர்கள் அரசன்பால் சென்று, அவருக்கு விடத்தினை ஊட்டி மாய்க்க வேண்டும் என முறையிட்டனர். நஞ்சு கலந்த பாற்சோறு கொண்டு ஊட்டுவித்தனர். ஆலத்தை அமுதாகக் கொண்ட அரனின் அடியவர்களுக்கு நஞ்சும் அமுதம் ஆகும் என்று துணிந்து அச்சோற்றினை உண்டு அவர் இனிது இருந்தனர்.

9. யானை கொண்டு இடர் செய்தல்

நஞ்சுணவு ஊட்டியும் நாவுக்கரசருக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத நிலைகண்டு, பட்டத்து யானையை ஏவி, இடர் விளைக்கத் துணிந்தனர். மன்னனின் ஆணையால் பட்டத்து யானையும் ஏவப் பட்டது. நாயனார், சிறிதும் அச்சமின்றி, யானையை உரித்துப் போர்த்திய நாதனின் அடியவர்களுக்கு யானையால் தீங்குண்டாகுமோ? என எண்ணிச் "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்" என்னும் திருப் பதிகத்தை அருளிச் செய்யலானார். "அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்சவருவதும் இல்லை" என்னும் மகுடம் இட்டு விளங்கியது, அவ்வற்புதத் திருப்பதிகம். யானை, நாயனாரை வணங்கி அகன்றது. தன்னை ஏவிய பாகர்களை மிதித்து அழித்தது.

10. கற்றுணை பூட்டிக் கடலில் பாய்ச்சுதல்

நீற்றறையிலும், நஞ்சுணவிலும், யானையைக் கொண்டு இடரச் செய்தலிலும் எத்தகைய இன்னலும் கொள்ளாதவராகித் திருவைந்தெழுத்தை ஓதியவாறு

மகிழ்ந்திருந்த நாவரசரைக் கல்லில் பூட்டிக்கடலில் எறிய ஆணையிட்டான் அரசன். கடலில், தூக்கி எறியப்பட்ட நாவரசர், கல்லைத் தெப்பமாகக் கொண்டு திருப்பாதிரிப்புலியூர் கடற்கரையைச் சார்ந்தார். இதனைக் "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்னும் அருந்தொடர் மகா வாக்கிய மந்திரமாகச் சாற்றுவதாயிற்று.

கரையேறிய திருநாவுக்கரசர், திருப்பாதிரிப் புலியூர் அரனை ஏத்தி "ஈன்றாளுமாய்" எனத் தொடங்கும் திருப்பதிகம் அருளிச் செய்யலானார். இறைவன், தனது அடியவர்களுக்குத் தோன்றாத் துணையாய் இருத்தலை உபதேசித்தார். ஆங்கிருந்து திருமாணி குழி திருத்தினை நகர் சார்ந்து, திருவதிகை வீரட்டானத்தை அடைந்த நாயனாரை அடியவர் பெருமக்கள் வணங்கி வரவேற்று உபசரித்தனர்.

சமணர்தம் சொற்கேட்டு இடர் விளைவித்த பல்லவ மன்னன் வருந்தி, நாயனாரைப் பணிந்து, சைவ நெறியைச் சார்ந்தான்.

11. சிவத்தல யாத்திரை

திருநாவுக்கரசர், இந்நாளில் சைவத் தலங்கள் பலவும் சென்று ஈசனை வணங்கித் தேமதுரத் தமிழ் மாலைகளால் ஏத்திப் பரவினார். திருவெண்ணை நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலான தலங்களைத் தரிசித்துத் திருப் பெண்ணாகடம் எனப் பெறும் கடந்தை நகரைச் சார்ந்தார்.

12. சூலமும் இடபக் குறியும் பொறிக்கப் பெறுதல்

நாவரசர் திருப்பெண்ணாகடத்தில், திருத்தூங்கானை மாடத்தில் எழுந்தருளியுள்ள இறைவனைத் தரிசித்தார். சமணர்பால் தொடர்பு கொண்டு இருந்த இந்த உடலானது களங்கம் அடைந்ததாகக் கருதினார். இவ்வுடல் கொண்டு உயிர் வாழ்தல் தகாது எனத் துணிந்தார். இவ்வுடலைத் தரிசித்து வாழ வேண்டுமாயின் ஈசனின் அருட் குறியாகிய சூலமும் இடபமும் தனது மேனியில் பொறித்தருள வேண்டும் என ஏத்திப் "பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம்" என்று எடுத்தோதும் திருப்பதிகத்தை அருளிச் செய்யலானார். அந் நிலையில் ஈசன் அருளினால் யாரும் அறியாதவாறு ஒரு சிவபூதமானது வந்து, நாயனாரின் திருத்தோளில் சூலக்குறியும் இடபக் குறியும் பொறித்தது.

நாயனார், இவ்வருட்குறிகள் பொறிக்கப் பெற்றதையறிந்து, ஈசன் திருவருளைப் போற்றி, ஆங்குப் பன்னாட்கள் வழிபட்டுத் திருத் தொண்டாற்றித் திருநெல்வாயில் அரத்துறை, திருமுதுகுன்றம் முதலான தலங்களை அடைந்து, ஈசனை ஏத்தித் திருத் தில்லையைச் சார்ந்தார்.

13. தில்லையம்பலவன் தரிசனம்

நாயனார், தில்லையில் எழுந்தருளியுள்ள ஆனந்தக்கூத்தனின் அழகு கண்டு மனங் குழைந்தார். பெருமானின் திரு கோலத்தில் வலக்கரத்தைத் தூக்கிக் காட்டும் திருக்குறிப்பானது "என்று வந்தாய்" என்று விளங்குமாறு உள்ள தன்மையைக் கண்டு

போற்றினார். அம்பலவாணனின் திருநடனத்தில் காட்டும் "குனித்த புருவமும் கொவ்வைச் செவ் வாயில் குமிண் சிரிப்பும், பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும் இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும், காணப் பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே" எனப் பிறவியின் பயனை உலகிற்கு ஓதியருளினார். பல நாட்கள் ஆங்கு ஈசனை வணங்கிப் பாமாலைகள் சாத்தி மகிழ்ந்த நாவுக்கரசர், சீகாழிப் பதியை அடைந்தார்.

14. ஆளுடைய பிள்ளையாரிடம் சார்தல் – முதல் சந்திப்பு

மூன்று வயதில் ஞானப்பால் உண்டு இறையருளால் அற்புதங்களை நிகழ்த்தித் திருப் பதிகங்கள் பாடி, ஈசனைப் போற்றும் திருஞான சம்பந்தரைக் கண்டு வணங்க வேண்டும் என்று கருதிய திருநாவுக்கரசர், பல தலங்களைப் பணிந்து சீகாழியைச் சார்ந்தார். நாவரசர் வரும் செய்தியை அறிந்த ஆளுடைய பிள்ளையார், எதிர் கொண்டு வரவேற்று உபசரித்தனர். அஞ்ஞான்று திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசரை நோக்கி "அப்பரே" என அழைக்க, நாயனாருக்கு அப்பர் சுவாமிகள் என்னும் திருப்பெயர் வழங்குவதாயிற்று.

"திருநாவுக்கரசர்" எனச் சிவபெருமான் வழங்கிய திரு நாமமும் "அப்பர்" எனத் திருஞானசம்பந்தர் அழைத்த திருநாமமும் நாயனாரின் இறையருட் செம்மையை நன்கு விளக்குவனவாகும். ஆங்குப் பலநாள் தலவாசம் செய்த நாயனார், மருங்கு சூழ்ந்த பல பதிகளையும் சார்ந்து திருக்கோலக்கா, திருக் கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கை,

திருநின்றியூர், திருநனிபள்ளி, திருச்செம்பொன் பள்ளி, திருமயிலாடுதுறை, திருத்துருத்தி, திருவேள்விக்குடி, திரு எதிர்கொள்பாடி, திருவாவடுதுறை, திருவிடை மருதூர் முதலான திருத்தலங்களைச் சார்ந்து திருச்சத்தி முற்றத்தை அடைந்தார்.

15. திருவடித் தீக்கை பெற்ற சீலம்

திருச்சத்தி முற்றத்தில் ஈசனை ஏத்தித் தரிசித்தபோது, நாயனாருக்கு, ஈசனின் திருவடித் தீக்கை பெற வேண்டும் என்னும் உணர்வு தோன்றியது. ஆங்கு அதனை விண்ணப்பமாக்கித் திருப்பதிகம் அருளிச் செய்த நாயனாரைத் திருநல்லூருக்கு வா" என, ஈசன் அசரீரியாக அருளிச் செய்தனர். திருநல்லூரில் ஈசன், திருநாவுக்கரசரின் தலையின்மீது தனது திருவடி மலர்களைச் சூட்டியருளினர். பேருவகை கொண்ட நாயனார், மனம் உருகி ஏத்தித் திருக்கருகாவூர், திருஆவூர்ப்பசுபதீச்சரம், திருப் பாலைத்துறை, திருபழனம் ஆகிய தலங்களை வணங்கித் திங்களூரை நண்ணினார்.

16. அரவம் தீண்டிய அரும் மைந்தனை உயிர்ப்பித்தது

திங்களூரில் அந்தணர்குலத் திலகராகிய அப்பூதி அடிகள், திருநாவுக்கரசரை நேரில் காணாத நிலையிலும், அவர்தம் அருள் சிறப்பினைக் கேட்டறிந்து, அவருக்கே அடியவராகி, அறப்பணிகள் செய்துவந்தார். எல்லாப் பணிகளும் திருநாவுக்கரசர் பெயரால் நடைபெற்று வந்தன. இதனையறிந்த நாயனார், அப்பூதி அடிகளின் திருமனையை நண்ணினார். தமது குருநாதர் வந்ததை அறிந்த அப்பூதி அடிகள், தமது திருமனையில் அமுது செய்தருள

வேண்டும் என வேண்டினார். நாயனார் இசைந்து அமுது செய்யப் புகும் நிலையில், திருவருட் குறிப்பால், அடிகளின் மூத்த மைந்தன் 'அரவம் தீண்டியதை அறிந்தார். அப்பூதி அடிகளார் அத்துன்பத்தைக் கருதாமல் தனக்கு அமுது படைக்கும் அன்பினை எண்ணி வியந்த நாயனார், அப் பாலகனின் உடலைத் திருக்கோயிலுக்குத் தருவித்து ஒன்று கொலாம் என்று தொடங்கும் அரியதோர் திருப்பதிகத்தை அருளிச் செய்யலானார். இறந்த மைந்தன், இறைவன் அருளால் உயிர்கொண்டு எழுந்தான். ஈசனின் திருவடி மலரானது, அப்பூதி அடிகளின் திருமுடியில் "குஞ்சிப் பூவாய்" விளங்குவன எனச் சிறப்பித்து ஓதிய நாயனாரின் அன்புதான் என்னே!

17. திருவாரூர்த் திருவிழா

திருநாவுக்கரசர், திருவாரூரைச் சார்ந்து இறைவனை வணங்குவதற்குத் திருவுள்ளம் கொண்டு, பழையாறை முதலான தளிகள் பலவும் வழிபட்டுத் திருவலஞ்சுழி, திருக்குடமூக்கு, திருநாலூர், திருச்சேறை, திருக்குடவாயில், திருவாஞ்சியம், திருக்கீழ்வேளூர், திருவிளமர் முதலான பதிகளை அடைந்து ஈசனைத் தொழுது போற்றித் திருப்பதிகங்கள் சாத்தித் திருவாரூரை நாடினார். ஆங்கு, அவ்வூர் மக்கள் திரளாகக் கூடி நாயனாரை வரவேற்றனர். நாயனார், அவ்வூர்ப் பெருமக்களின் பெருமையை எண்ணி, முன்னர் தாம் சமண சமயத்தில் இருந்த தன்மையை நினைவு கூர்ந்து இத்தகையவனுக்கும் புண்ணியம் உண்டு கொல் என ஏத்தினார். நமி நந்தி அடிகள் திருவாரூர்த் திருக் குளத்து நீர்கொண்டு திருவிளக்கு ஏத்திய

செம்மையினை "நாரூர்நறுமலர் நாதன் அடித் தொண்டன் நம்பிநந்தி நீரால் திருவிளக்கு இட்டமை நீள் நாடு அறியுமன்றே" (திருப்பாட்டு 987) என, எடுத்தோதினார். திருவாரூரில் புற்றிடங்கொண்ட பெருமானையும் திருவாதிரைப் பெருவிழாவினையும் ஏத்திப் போற்றிய நாயனார், "ஆரூரரைக் கையினால் தொழாது ஒழிந்து கனி இருக்கக் காய் கவர்ந்த கள்வனேன்" ஆயினேனே என ஏத்தினார். அந்நாளில், ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்தர் திருப்புகலூரில் எழுந்தருளியுள்ளதை அறிந்து, ஆங்குச் செல்லலானார்.

18. ஆளுடைய பிள்ளையார் பால் இரண்டாவது சந்திப்பு

திருஞான சம்பந்தர், திருப்புகலூரில் இருக்கத் திருநாவுக்கரசரின் வருகையை அறிந்து எதிர்கொண்டு சென்று அழைத்தனர். நாயனார், திருவாரூரில் நடைபெறும் ஆதிரைநாள் திருவிழாவைத் திருப் பதிகமாக ஏத்தி நிற்க இருபெரும் குரவர்களும் மற்றும் திருநீல நக்கர் சிறுத்தொண்டர், முருக நாயனாரின் திருமடத்தில் இனிது இருந்தனர். நாயனாரும் ஆளுடைய பிள்ளையாரும் அங்கு ஈசனை ஏத்தி மகிழ்ந்து, திருக்கடவூர், திருக்கடவூர் மயானம், திருவாக்கூர் ஆகிய தலங்களை வணங்கித் திருவீழி மிழலையைச் சார்ந்தனர்.

19. வீழி மிழலையில் படிக்காசு பெறுதல்

திருவீழிமிழலையில் சிலநாள் இரு குரவர்களும் இறைவனை வணங்கி இருந்த காலத்தில், மாரி சுருங்கி பஞ்சம் ஏற்பட்டது. நாட்டில் பட்டினி பெருகி மக்கள் வருந்திய நிலையில் ஈசன் கனவில் தோன்றிப்

"பொற்காசு அளிக்கின்றோம் உமது அடியவர்களுக்குக் குறைவின்றி அமுது படைத்திடுக" என்று கூறியருளினார். கிழக்குப் பீடத்தில் ஆளுடைய பிள்ளையாருக்கும், மேற்குப் பீடத்தில் நாயனாருக்கும் தினம் ஒரு பொற்காசு வழங்குதலாயிற்று. இறைவனின் அருளால் அக்காசுகளைக் கொண்டு அடியவர்களுக்கு அமுது அளித்தனர்.

20. மறைக்கதவம் திறப்பித்த மகிமை

இருபெரும் சமயக் குரவர்களும் திருமறைக் காட்டினை அடைந்தனர். அது வேதங்களால் பூசிக்கப்பெற்ற சிறப்புடைய தலம். அதன் நேர் வாயிலானது அடைப்பிக்கப்பட்டுத் திறக்கப்பெறாது, பக்கத்தில் வேறு வாயில் வழியாக உள் சென்று இறைவனை வணங்க வேண்டிய நிலை உள்ளதை அறிந்தனர். ஆளுடைய பிள்ளையார், நாவரசரை நோக்கித் திருக்கதவம் திறப்பிக்குமாறு திருப்பதிகம் பாடுக என்று அருளினார். நாயனார் திருப்பதிகம் பாடத் திருக்கதவம் திறப்பித்தது.

இருவரும், இறைவனைத் தரிசித்து மகிழ்ந்தனர். பின்னர் ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகம் பாடித் திருக்கதவத்தைத் தன் இயல்பில் இருக்கச் செய்தருளினார்.

21. திருவாய்மூர் தரிசனம்

நாயனார் நெடிது பாடியபின் திருக்கதவம் திறப்பித்ததும், பிள்ளையாரின் முதல் திருப்பாட்டில் திருக்கதவம் மூடியதும் நாவரசர் நெடிது நினைந்து பின்னர் உறங்கினார். அப்போது ஈசன் கனவில் தோன்றி, "வாய்மூருக்கு வா" என்று தெரிவிக்க

அக்கணமே எழுந்து செல்லலுற்றார். இச் செய்தி யறிந்த பிள்ளையார், பின் தொடர்ந்து சென்று, ஈசனைப் பாடினார். அங்கு ஈசன் திருக்காட்சியை நல்க, அதனைக் கண்ட பிள்ளையார், நாயனாருக்குக் காட்டுவித்தார்.

பின்னர் பிள்ளையார், பாண்டிய நாட்டில் அமணர்களை வாதத்தால் வெற்றி கொள்ளச் செல்லப் புறப்பட்டார்.

22. பழையாறை வடதளியில் வழிபாடு

நாயனார் மீண்டும் திருவீழிமிழலை, திருவா வடுதுறை முதலான தளிகள் பல சார்ந்து வணங்கிப் பழையாறைவடதளியிற் சேர்ந்தார். அக்கோயிலை அழித்து அமணர், பாழியாக ஆக்கினார் எனக் கேட்டு, நாயனார் அமுது கொள்ளாது உண்ணா நோன்பு இருந்தார். ஈசன், மன்னனின் கனவில் தோன்றி உரைக்க அவன் தூருகளைப் போக்கித் தூய்மை செய்து, நாயனாரை வணங்கினான். நாயனார் ஈசனை ஏத்தி மகிழ்ந்தார்.

23. பொதிசோறு பெற்ற பெருந்தகை

நாயனார், திருவானைக்கா, திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி, திருக்கற்குடி, திருப்பராய்த்துறை முதலிய தலங்களை வணங்கித் திருப்பைஞ்ஞீலியைச் சாரும்போது பசியும் நீர் வேட்கையும் கொண்டு வருந்தினார். ஈசன் வழியில் சோலையும் குளமும் அமைத்து, வழிப்போக்கர் போன்று, பொதி சோற்றுடன் அந்தணர் திருக்கோலத்தில் தோன்றினார். அவ்வந்தணர் அளித்த சோற்றினை உண்டு களைப்பு நீங்கிய நாயனார், சற்றுத் தூரம் வந்ததும் அந்தணர்

மறைந்தனைக் கண்டு ஈசனின் இன்னருளையும் பொதி சோறளித்துப் பசியாற்றியமையும் எண்ணிப் போற்றினார். பின்னர் திருவண்ணாமலை, திரு வோத்தூர், காஞ்சிபுரம், திருமாற்பேறு, திருக்கழுக் குன்றம், திருவான்மியூர், திருமயிலாப்பூர், திரு வொற்றியூர், திருவாலங்காடு, திருக்காளத்தி ஆகிய திருத்தலங்களைச் சார்ந்து வணங்கினார்.

24. திருக்கயிலைத் திருக்காட்சி

காளத்திநாதரைக் கண்டு தரிசித்து மகிழ்ந்த நாயனார், திருப்பருப்பதத்தை நண்ணி இறைஞ்சி, மலைப்பாதைகளும் வனங்களும் கடந்து கங்கையைக் கடந்து காசித் தலத்தைப் பணிந்தனர். திருக் கயிலையைக் காணவேண்டும் என்னும் வேட்கை மிகக் கைகளும் மார்பும் தேய உடல் வருந்தும் தன்மை யிலும் தொடர்ந்து சென்றார். ஈசன் முனிவர் வடிவத்தில் தோன்றிக் கயிலையைக் காண்பதற்கு அரியது, அப்பணியைக் கைவிடுக எனக் கூறியும், நாயனார் அதற்கு ஒவ்வாது விளங்க ஈசன் திருக்காட்சி நல்கி, "இப்பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் காண்பாயாக" என அருளிச் செய்யலானார். நாயனார், அவ்வாறே அப்பொய்கை யில் மூழ்கித் திருவையாற்றில் திருக்கயிலைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தார். யாவும் சிவனும் சக்தி வடிவாய் விளங்கும் தன்மையைக் கண்டு வணங்கிய நாயனார், "மாதர்ப் பிறைக்கண்ணி யானை" என எடுத்தோதும் திருப்பதிகத்தால் போற்றினார். பின்னர் திருநெய்த்தானம், திருமழபாடி ஆகிய தலங்களை வணங்கித் திருப்பூந்துருத்தியைச் சார்ந்தார்.

25. ஆளுடைய பிள்ளையார் பால் மூன்றாவது சந்திப்பு

பாண்டிய நாட்டிலிருந்து திருஞான சம்பந்தர் திரும்பி வருகின்றார் என்ற செய்தியை அறிந்த நாயனார், ஆங்கு திருச்சிவிகையைத் தாங்கியருளினார். நாயனார் திருப்பூந்துருத்தியில் உள்ளதை அறிந்த ஆளுடைய பிள்ளையார் "அப்பர் எங்குற்றார்?" என்று வினவ, அவரும் "உமது சிவிகை தாங்கும் பேறு பெற்று இங்குற்றேன்'' என அருளினார். இருபெரும் அருளாளர்களும் இனிது மகிழ்ந்து இருந்த பின்னர், நாயனார் பாண்டியநாடு செல்லத் தொடங்கினார்.

நாயனார் மதுரையில் ஆலவாய் அண்ணலைத் தரிசித்து மகிழ்ந்து, திருப்பூவணம், திரு இராமேச்சுரம், திருநெல்வேலி, திருக்கானப்பேர் முதலான தலங்களை யடைந்து வணங்கிப் பூம்புகலூர் அடைந்தார்.

26. திருவடிப்பேறு

திருப்புகலூரில் நெடிதுகாலம் திருப்பணியாற்றி உழவாரத் தொண்டு புரிந்து தண்டமிழ் மாலைகள் பல சாத்திப் பொன் பொருள் பற்றினை முற்றத் துறந்தவர் என விளங்கிய நாயனார், அரம்பையர்களின் நடனத்தால் ஈர்க்கப்படாதவராய், ஈசனைத் தியானித்த வாறு இருந்தனர். அந்தக் கரணங்கள் யாவும் புகலூர்ப் பெருமானையே பொருந்தி மேவப் "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்'' என்னும் திருத் தாண்டகம் அருளிச் செய்து ஞானவடிவாகத் திகழ்ந்து, சித்திரை மாதத்தில் சதயத்திரு நாளில் ஈசனின் இனிய திருவடிக்கண் ஐக்கியம் ஆனார்.

27. நாவரசரின் மாண்பு

மருள் நீக்கியார் என்னும் பிள்ளைத் திரு நாமம் கொண்ட நாயனார், திருநாவுக்கரசர் எனவும், அப்பர் எனவும், திருநாமங்கள் சூட்டப் பெற்றவரானார். இவர் ஆளுடைய அரசர் என்னும் சிறப்புப் பெயர் உடையவர். இவரது காலம் திருஞானசம்பந்தரின் காலம் ஆகும். இதனைக் கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்பர். இவர் 81 ஆண்டுகள் மண்ணுலகில் இருந்த அருளாளர் என்பது ஆன்றோர் திருவாக்கு.

உய்யும் தன்மையில் ஒண்தமிழ் மாலைகள் சாற்றிய திருநாவுக்கரசர் தம் திருவடிகளை ஏத்தி இறைஞ்சி வாழ்வோமாக.

திருநாவுக்கரசர் திருத்தாள் போற்றி!

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருநாட்டுத் தலவரிசைப் பதிகங்கள் அட்டவணை

வ. எ	திருத்தலம்	தல வரிசை எண்	4-ஆம் திரு முறை	5-ஆம் திரு முறை	6-ஆம் திரு முறை	மொத்த பதி கங் கள்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
I. தொண்டை நாடு-9						
1.	திருக்கச்சியேகம்பம்	1	7,44, 99	47,48	64,65	7
2.	திருக்கச்சிமேற்றளி	2	43			1
3.	திருமாற்பேறு	11	108	59,60	80	4
4.	திருவாலங்காடு	15	68		78	2
5.	திருப்பாசூர்	16		25	83	2
6.	திருக்காளத்தி	19			8	1
7.	திருவொற்றியூர்	20	45,46, 86	24	45	5
8.	திருவான்மியூர்	25		82		1
9.	திருக்கழுக்குன்றம்	28			92	1
	ஆக		9	7	8	24

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
II. நடு நாடு–9						
10.	திருநெல்வாயில் அரத்துறை	1		3		1
11.	பெண்ணாகடம் (திருத்தூங்கணை மாடம்)	2	109			1
12.	திருவதிகை வீரட்டம்	7	1,2,10, 24,25, 26,27, 28,104	53,54	3,4,5, 6,7	16
13.	திருமுதுகுன்றம்	9			68	1
14.	திருக்கோவலூர் வீரட்டம்	11	69			1
15.	திருப்பாதிரிப்புலியூர்	18	94			1
16.	திருமுண்டீச்சரம்	19			85	1
17.	திருஆமாத்தூர்	21		44	9	2
18.	திருவண்ணாமலை	22	63	4,5		3
	ஆக		13	6	8	27
III. காவிரி வடகரைத்தலம்–34						
19.	கோயில் (தில்லை)	1	22,23, 80,81	1,2	1,2	8
20.	திருவேட்களம்	2		42		1
21.	திருக்கழிப்பாலை	4	6,30, 106,65	40	12	5
22.	திருச்சாய்க்காடு	9	65		82	2
23.	திருவெண்காடு	11		49	35	2

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
24.	சீகாழி	14	82,83	45	35	2
25.	புள்ளிருக்கு வேளூர்	16		79	54	2
26.	திருநின்றியூர்	19		23		1
27.	திருப்புன்கூர்	20				
28.	திருநீடூர்	21			11	1
29.	திருஅன்னியூர்	22		8		1
30.	திருமணஞ்சேரி	25		87		1
31.	திருக்குறுக்கை வீரட்டம்	26	49,50			2
32.	திருக்குரக்குக்கா	28		75		1
33.	திருஓமாம்புலியூர்	31			88	1
34.	திருநாரையூர்	33		55	74	2
35.	திருக்கடம்பூர்	34		19,20		2
36.	திருப்பந்தணை நல்லூர்	35			10	1
37.	திருக்கஞ்சனூர்	36			90	1
38.	திருக்கோடிக்கா	37	51	78	81	2
39.	திருமங்கலக்குடி	38		73		1
40.	திருஆப்பாடி	40	48			1
41.	திருக்கொட்டையூர்	44			73	1
42.	திருஇன்னம்பர்	45	72,100	21	89	4
43.	திருப்புறம்பயம்	46			13	1
44.	திருவிசயமங்கை	47		71		1

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
45.	திருப்பழனம்	50	12,36, 87	35	36	5
46.	திருவையாறு	51	3,13, 38,39, 40,91, 92,98	27,28	37,38	12
47.	திருநெய்த்தானம்	52	37,89	34	41,42	5
48.	திருமழபாடி	54			39,40	2
49.	திருக்கானூர்	56		76		1
50.	திருஅன்பில் ஆலந்துறை	57		80		1
51.	திருவானைக்கா	60		31	62,63	3
52.	திருப்பைஞ்ஞீலி	61		41		1
	ஆக		29	26	24	79
IV.	காவிரித் தென்கரைத்தலம்–66					
53.	திருவாட்போக்கி	1		86		1
54.	திருக்கடம்பந்துறை	2		18		1
55.	திருப்பராய்த்துறை	3		30		1
56.	திருக்கற்குடி	4			60	1
57.	திருச்சிராப்பள்ளி	6		85		1
58.	திருஎறும்பியூர்	7		74	91	2
59.	மேலத்திருக்காட்டுப் பள்ளி	9		84		1
60.	திருஆலம்பொழில்	10			86	1
61.	திருப்பூந்துருத்தி	11	88	32	43	3

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
62.	திருக்கண்டியூர் வீரட்டம்	12	93			1
63.	திருச்சோற்றுத்துறை	13	41,85	33	44	4
64.	திருவேதிகுடி	14	90			1
65.	திருக்கருகாவூர்	18			15	1
66.	திருப்பாலைத்துறை	19		51		1
67.	திருநல்லூர்	20	97		14	2
68.	திருச்சத்திமுற்றம்	22	96			1
69.	பழையாறைவடதளி	24		58		1
70.	திருவலஞ்சுழி	25		66	72	2
71	திருக்குடமூக்கு (கும்பகோணம்)	26		22		1
72.	குடந்தைக் கீழ்க் கோட்டம்	27			75	1
73.	திருநாகேச்சரம்	29	66	52	66	3
74.	திருவிடைமருதூர்	30	35	14,15	16,17	5
75.	தென்குரங்காடுதுறை	31		63		1
76.	திருநீலக்குடி	32		72		1
77.	திருநல்லம்	34		43		1
78.	திருக்கோழம்பம்	35		64		1
79.	திருவாவடுதுறை	36	56,57	29	46,47	5
80.	திருத்துருத்தி	37	42			1
81.	திருமயிலாடுதுறை	39		39		1
82.	திருச்செம்பொன் பள்ளி	42	29	36		2

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
83.	திருநனிபள்ளி	43	70			1
84.	திருவலம்புரம்	44	55		58	2
85.	திருஆக்கூர்	46			21	1
86.	திருக்கடவூர் வீரட்டம்	47	31,107	37		3
87.	திருக்கடவூர் மயானம்	48		38		1
88.	திருநள்ளாறு	52		68	20	2
89.	திருமீயச்சூர் இளங்கோயில்	57		11		1
90.	திருவீழிமிழலை	61	64,95	12,13	50,51, 52,53	8
91.	திருவன்னியூர்	62		26		1
92.	கருவிலிக் கொட்டிட்டை	63		69		1
93.	அரிசிற்கரைப்புத்தூர்	66		61		1
94.	திருச்சிவபுரம்	67			87	1
95.	திருவாஞ்சியம்	70		67		1
96.	திருக்கொண்டீச்சரம்	72	67	70		2
97.	திருப்புகலூர்	75	16,54, 105	46	99	5
98.	திருப்பயற்றூர்	78	32			1
99.	திருச்செங்காட்டங் குடி	79			84	1
100.	திருமருகல்	80		88		1
101.	திருநாகைக் காரோணம்	82	71,103	83	22	4

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
102.	திருக்கீழ்வேளூர்	84			67	1
103.	திருப்பள்ளி முக்கூடல்	86			69	1
104.	திருவாரூர்	87	4,5,19, 20,21, 52,53, 101, 102	6,7	24,25, 26,27, 28,29, 30,31, 32,34	21
105.	திருவாரூர் அரநெறி	88	17		33	2
106.	பெருவேளூர்	92	60			1
107.	தலையாலங்காடு	93			79	1
108.	திருச்சேறை	95	73	77		2
109.	கடுவாய்ப்புத்தூர்	97		62		1
110.	அவளிவள் நல்லூர்	100	59			1
111.	திருவெண்ணியூர்	102		17	59	2
112.	திருப்பூவனூர்	103		65		1
113.	திருப்பேரெயில்	114		16		1
114.	திருக்கன்றாப்பூர்	120			61	1
115.	திருவலிவலம்	121			48	1
116.	திருக்கோளிலி	123		56,57		2
117.	திருவாய்மூர்	124		50	77	2
118.	திருமறைக்காடு	125	33,34	9,10	23	5
	ஆக		41	48	44	133
V. பாண்டிய நாடு-4						
119.	திரு ஆலவாய்	1	62		19	2

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
120.	திருப்புத்தூர்	6			76	1
121.	திருஇராமேச்சுரம்	8	61			1
122.	திருப்பூவணம்	11			18	1
	ஆக		2	–	3	5
VI. கொங்குநாடு–1						
123.	திருப்பாண்டிக் கொடுமுடி	6		81		1
VII. துளுவநாடு–1						
124.	திருக்கோகரணம்	1			49	1
VIII. வடநாடு–2						
125.	திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்)	1	58			1
126.	திருக்கயிலாயம்	5	47		55,56, 57	4
	ஆக		2		3	5
IX. பொது			8,9,11, 14,15, 18,74, 75,76, 77,78, 79,84, 110, 111, 112, 113	89,90, 91,92, 93,94, 95,96, 97,98, 99,100	70,71, 93,94, 95,96, 97,98	37
	ஆக		17	12	8	37

திருநாவுக்கரசர் தேவாரம்

திருநாட்டுத் தலவரிசைப் பதிகங்களின் அட்டவணைத் தொகுப்பு

வ. எ.	நாடு	தலங்களின் எண்ணிக்கை	திருப்பதிகங்களின் எண்ணிக்கை			
			4–ஆம் திருமுறை	5–ஆம் திருமுறை	6–ஆம் திருமுறை	மொத்தம்
I.	தொண்டைநாடு	9	9	7	8	24
II.	நடுநாடு	9	13	6	8	27
III.	காவிரி வடகரை	34	29	26	24	79
IV.	காவிரித் தென்கரை	66	41	48	44	133
V.	பாண்டியநாடு	4	2	–	3	5
VI.	கொங்குநாடு	1	–	1	–	1
VII.	துளுவநாடு	1	–	–	1	1
VIII.	வடநாடு	2	2	–	3	5
IX.	பொது	–	17	12	8	37
	ஆக	126	113	100	99	312

திருத்தலங்கள் : 126

திருப்பதிகங்கள் : 312

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

நான்காம் திருமுறை திருத்தலங்களின் வரிசை

பதிகம் – பொருளடக்கம்

(1)	(2)	(3)
	3. சூலப்படை 4. காண்டலே 5. முத்துவிதானம் 6. படுகுழிப் பல்வ 7. குழல்வலம் 8. குலம்பலம் பாவரு 9. வேம்பினை	19 20 21 52 53 101 102
6.	திருவாரூர் அரநெறி எத்தீ புகினும்	17
7.	திருவாலங்காடு வெள்ள நீர்	68
8.	திருவாலவாய் வேதியாவேதகீதா	62
9.	திருவாவடுதுறை 1. மாயிரு ஞாலம் 2. மஞ்சனே	56 57
10.	திருவிடைமருதூர் காடுடைச்சுடலை	35
11.	திரு இராமேச்சுரம் பாசமும் கழிக்க	61
12.	திரு இன்னம்பர் 1. விண்ணவர் 2. மன்னு மலைமகள்	72 100
13.	திருவையாறு 1. மாதர்ப் பிறைக்கண்ணி 2. விடகிலேன் 3. கங்கையை 4. குண்டனாய் 5. தானலாதுலகம் 6: குறுவித்தவா	3 13 38 39 40 91

(1)	(2)	(3)
	7. சிந்திப்பரியன	92
	8. அந்திவட்டத்திங்கட்	98
14.	திருவொற்றியூர்	
	1. வெள்ளத்தை	45
	2. ஓம்பினேன்	46
	3. செற்றுக்களிற்றுரி	86
15.	திருக்கச்சியேகம்பம்	
	1. கரவாடும்	7
	2. நம்பனை	44
	3. ஓதுவித்தாய்	99
16.	திருக்கச்சி மேற்றளி	
	மறையது	43
17.	திருக்கடவூர் வீரட்டம்	
	1. பொள்ளத்த	31
	2. மருள்துயர்	107
18.	திருக்கண்டியூர் வீரட்டம்	
	வானவர்	93
19.	திருக்கயிலாயம்	
	கனகமா	47
20.	திருக்கழிப்பாலை	
	1. வனபவள	6
	2. நங்கையை	30
	3. நெய்தற்குருகு	106
21.	திருக்கழுமலம் (சீகாழி)	
	1. பார்கொண்டு	82
	2. படையார்	83
22.	திருக்குறுக்கை வீரட்டம்	
	1. ஆதியிற் பிரமனார்	49
	2. நெடியமால்	50

(1)	(2)	(3)
35.	திருநனிபள்ளி முற்றுணை	 70
36.	திருநாகேச்சுரம் கச்சைசேர்	 66
37.	திருநாகைக்காரோணம் 1. மனைவிதாய் 2. வடிவுடைமலை	 71 103
38.	திருநெய்த்தானம் 1. காலனை வீழச் 2. பாரிடம் சாடிய	 37 89
39.	திருப்பயற்றூர் உரித்திட்டார்	 32
40.	திருப் பருப்பதம் கன்றினார்	 58
41.	திருப்பழனம் 1. சொல் மாலை 2. ஆடினார் ஒருவர் 3. மேவித்து	 12 36 87
42.	திருப்பாதிரிப்புலியூர் ஈன்றாளுமாய்	 94
43.	திருப்புகலூர் 1. செய்யர்ரவண் 2. பகைத்திட்டார் 3. தன்னைச் சரணென்று	 16 54 105
44.	திருப்பூந்துருத்தி மாலினைமால்	 88
45.	திருப்பெரு வேளூர் மறையணி	 60

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

பண்களும் பதிகங்களும்
நான்காம் திருமுறை

வ.எ.	பண்	திருப்பதிகங்கள்	மொத்தம்
1.	கொல்லி	திருப்பதிகம் 1 1 திருநேரிசை 22 முதல் 79 வரை 58 திருவிருத்தம் 80 முதல் 113 வரை 34	93
2.	காந்தாரம்	2 முதல் 7 வரை	6
3.	பியந்தைக் காந்தாரம்	8	1
4.	சாதாரி	9	1
5.	காந்தாரபஞ்சமம்	10–11	2
6.	பழந்தக்க நாகம்	12–13	2
7.	பழம் பஞ்சுரம்	14–15	2
8.	இந்தளம்	16–18	3
9.	சீகாமரம்	19–20	2
10.	குறிஞ்சி	21	1
		ஆக	113

குறிப்பு: திருநேரிசை, அறுசீர் விருத்தமாகவும் திருவிருத்தம், கட்டளைக் கலித்துறையாகவும் யாப்பிசை கொண்டு விளங்குவது என்பர்.

1. திருவதிகை வீரட்டானம்

தல விளக்கம்: நடுநாட்டுத் தலங்கள் 22இல், இது 7ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. அட்ட வீரட்டத்தலங்களுள் ஒன்று. ஈசன் திரிபுரத்தை எரித்த வீரச் செயல் நிகழ்ந்த இடம். திருநாவுக்கரசர் சூலை நோய் நீங்கப் பெற்ற தலம். திருநாவுக்கரசரின் தமக்கையார் திலகவதி அம்மையார் திருத்தொண்டு ஆற்றிய இடம்.

மற்றும் முதல் திருமுறை - பதிகம் எண் 46 காண்க.

திருவதிகை - ஊர் பெயர். வீரட்டானம் - கோயிலின் பெயர்

சுவாமி : வீரட்டேசுவரர், அதிகைநாதர், வீரட்ட நாதர்

அம்பிகை : திரிபுரசுந்தரி

தல மரம் : சரக் கொன்றை

தீர்த்தம் : கெடில நதி

பதிகக் குறிப்பு: திலகவதியார், தனது தம்பியார் சார்ந்துள்ள சமண நெறியிலிருந்து சைவநெறிக்கு அழைத்து அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்க, ஈசன், "சூலை தந்து ஆட்கொள்வோம் கவலை கொள்ளற்க!" என, அருள்புரிந்தார். திருநாவுக்கரசருக்குச் சூலை நோய் ஏற்பட்டு, எத்தகைய மருந்தினாலும் தீராத நிலையில், திருவருள் வயத்தால் அவருக்குத் தமது தமக்கையாரைக் காண வேண்டும் என்னும் நாட்டம் தோன்றியது. அவ்வாறு சென்று கண்டார். அவ்வமயம் திலகவதியார், திருநாவுக்கரச

ருக்குத் திருவைந்தெழுத்து ஓதித் திருநீற்றினை அளித்து, இறைவனை இறைஞ்சுமாறு பணித்தார். அவ்வண்ணமே, அவர், வீரட்டேசுவரரை நண்ணித் திருப்பதிகம் அருளிச் செய்ய, இறைவன் திருவருளால் சூலை நோய் அகன்றது. ஈசன், பொருள் சேர்பதிகம் அருளிச் செய்த பெற்றி கண்டு மகிழ்ந்து, “திருநாவுக் கரசர்” என்னும் பெயர் உலகிடை மலர்வதாக என அசரீரியாய்த் திருவாய் மலர்ந்தருளினார்.

திருநாவுக்கரசர் என்னும் திருநாமமானது இறை வனால் அருளப் பெற்றது எனக் கொள்க. இவருடைய பூர்வ திருப்பெயர் மருள் நீக்கியார் என்பதாம். இது ஒரு அற்புதத் திருப்பதிகம் ஆகும்.

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

1. **கூற்றாயின வாறு விலக்ககிலீர்**
கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய் அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதுஎன் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

தெளிவுரை: திருவதிகையில் கெடில நதியின் பக்கத்தில் மேவும் வீரட்டானத்தில் வீற்றிருக்கும் அழகிய தலைவனே! வினைப் பயனால் பிணியுற்றுத் துன்புறுதல் நியதியாயினும், அத்தகைய வினையானது, யாதென நான் அறியேன். அத்துன்பமானது, எத்தகைய தீர்வுக்கும் இடம் இன்றி என் உடலின்கண் குடரோடு சேர்ந்து வருத்துகின்றது. அப்பிணியானது கூற்று

வனைப் போன்று வருத்துகின்றது. என்னால் தாங்க முடியவில்லை அதனை விலக்காதது ஏனோ! தேவரீரே! என்னைப் பீடித்துள்ள வயிற்று நோயைத் தீர்த்தருள்வீராக. நான் இப்போது உமது திருவடிக்கே ஆளாக்கப்பட்டுத் தேவரீர், என்னை ஏற்றுக் கொண்டுள்ளீர். தேவரீரைப் பகலிலும் இரவிலும் பிரிதல் இல்லாது வணங்குவேன்.

சிறப்புரை: திருவாளன் திருநீற்றைத் தரித்துத் திருக் கோயிலின் கண் வந்துற்ற ஞான்றே திருவடிக்கு ஆட்பட்ட சிறப்பினை "ஏற்றாய் அடிக்கே" என்பது உணர்த்துவதாயிற்று. அடியவர்கள், துன்பம் இல்லாத நிலையை அடைதல் இயல்பாதலை நன்கு புலப் படுத்தும் செம்மையின் வழி, இப்பிணியை விலக்காமல் உள்ளீரே! என்னும் வியப்புத் தோன்றுமாறு "விலக்ககிலீர்" எனச் சுட்டப் பெறுவதாயிற்று.

இவ்வாறு, திருநீறு இட்ட அடியவர்கள் பிணியால் துன்புறுதல் ஆயிற்றே எனப் பிறர் கூறப்படுதலும் ஆயிற்று என்னும் உட்கருத்துத் தோன்ற, "கூற்று ஆயினவாறு" என்று உரைத்தல் சுட்டும். மற்றும், கூற்றுவனின் பிடியிலிருந்து மார்க் கண்டேயரைக் காத்த ஈசன் திருவருட் கருணையானது நெஞ்சிற் பதிய, அத்தகைய நிலையில், குடலில் தோன்றிய பிணியை உருவகித்தது ஆயிற்று எனலும் ஆகும். இது இறைவனுடைய அருளாற்றலால் அன்றிப் பிறவற்றால் தீர்க்க இயலாது எனவும் சுட்டுதலாயிற்று.

பிணி தீரும் வகையில் பலவாறான மருத்துவம் மற்றும் மந்திர வகைகளை முன்னர் கண்டிருந்தும் அவற்றால் தீர்க்கப்படாத நிலையினால், இப்பிணியின்

தோற்றத்தை யாராலும் அறிந்து கொள்ளாத இயல்பும் இவண் உணர்த்தியதாம்.

இனி வரும் காலங்களில், பகலும் இரவும் ஆகிய எல்லாக் காலத்திலும் தேவரீருக்குத் தொண்டு செய்யும் பாத்திரமாக ஆயினமையை உணர்த்தும் வகையாக "இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்" என உரைத்தருளப் பெற்றது. இது முழு நேரத் தொண்டினை விளக்கிற்று.

கூற்று – காலன்; கூறப்படும் சொல். கொடுமை – தீவினை; ஏற்றாய் – என்னை ஏற்றுக் கொண்டீர்; ஏறுவாகனம் உடையீர்.

2. நெஞ்சம்உமக் கேஇிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்இது ஒப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகிவந் தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக்கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

தெளிவுரை: வீரட்டானத்தில் வீற்றிருக்கும் அன்பிற்குரிய நாதனே! என்னுடைய நெஞ்சத்தில் உம்மையே பதித்து உள்ளேன். எல்லா நேரங்களிலும் தேவரீரையே நினைத்து இருந்தேன். தேவரீரை யன்றி வேறு ஒருவரையும் நினையாத என்மீது வந்து பற்றிக் கொண்டு நஞ்சு போன்று அச்சத்தைத் தரும் வயிற்றுப் பிணியை அகலுமாறு செய்வீர். அஞ்சாதே என்று உரைத்து அச்சத்தைப் போக்குவீர்.

சிறப்புரை: ஈசனை எவ்வகையிலிருந்து நினைத்தாலும், அப்பெருமானைப் போற்றிப் பரவுதலுக்கு ஒப்பாகும் என்பதனை ஓர்க. செயலால் வேறிடத்தின் வயப்பட்டு

இருப்பினும், நெஞ்சிற் குடிகொள்ளும் இறைவன் இவண் சுட்டப் பெறுகிறார்.

தன்னை நினைத்து வழிபடும் அடியவர்களின் நெஞ்சில் கோயில் கொள்ளும் இறைவனின் செம்மை யானது இவண் உரைக்கப் பெற்றது.

3. பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேஉமக்கு ஆட்செய்து வாழலுற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றம்ஏற்றுகந் தீர்சுற்றம் வெண்டலைகொண்டு
அணிந்தீர்அடி கேள்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

தெளிவுரை: திருவதிகையில் கெடிலநதிக்கரையின் கண் உள்ள வீரட்டானத்தில் உறையும் நாதனே! இறந்தவர்களை எரித்து மேவும் சாம்பலைத் திருமேனியில் பூசும் பெருமானே! தேவரீரைப் பணிந்து போற்றும் அடியவர்களின் பாவங்களைத் தீர்த்தருளும் வல்லமை யுடையவரே! பிரம கபாலத்தைக் கையில் ஏந்திப் பிச்சையேற்று உழல்பவரே! தேவரீர் எனக்கு அருள் புரிவீர் என்னும் 'துணிவால் உமக்கு ஆட்பட்டேன். இடபவாகனத்தில் மேவும் ஈசனே! சூலை நோய் என்னைச் சுட்டெரிக்கின்றது. அதனை விலக்குவீராக.

பாற்றுதல் – கெடுத்தல், அழித்தல்.

4. முன்னம்அடி யேன்அறி யாமையினால்
முனிந்துஎன்னை நலிந்து முடக்கியிடப்
பின்னைஅடி யேன்உமக்கு ஆளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்

தன்னைஅடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர்தம் கடன் ஆவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

தெளிவுரை: *வீரட்டானத்தில் வீற்றிருக்கும் பெருமானே! முன்னர், அறியாமையால் இருந்தேன். அஞ்ஞான்று எனக்குச் சூலை தந்து முனிந்து என்னை நலியுமாறு செய்தீர். இப்போது நான் தேவரீருக்கு ஆட்பட்ட அடிமை, அப்பிணி என்னைச் சுடுகின்றது. தலைவராகிய தேவரீர், அடியவர்களுடைய துயரைத் தீர்ப்பதன்றோ செய்யத் தகுத்த செயலாகும். அதனைப் புரிந்தருளும் வகையில் சூலை நோயைத் தீர்த்தருள்க.*

5. காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது ஒப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புனல் ஆர்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

தெளிவுரை: *நீர் நிறைந்த திருவதிகைக் கெடிலத்தின் வீரட்டானத் துறையில் மேவும் அம்மானே! நீரின் ஆழத்தில் சிக்கித் தடுமாறிப் பின் மீண்டு எழும் வழித்துறை அறியாது தவிப்பது போன்று நைகின்றேன். நீரில் விழுவதற்கு முன்னர் அறிவுறுத்திய மொழியைக் கேளாது இகழ்ந்தமையால் இவ்வாறு அழிகின்றேன். என்னைக் காத்தருள் புரிவீராக.*

சிறப்புரை: *சைவ சமயத்திலிருந்து பிறழ்ந்து சமண சமயத்தில் சென்ற நிலை, "நீத்தாய கயம்புக" என ஓதப்*

பெற்றது. தனது தமக்கையாராகிய திலகவதியாரின் அருஞ் சொல்லை இகழ்ந்து வெளியே சென்ற பழைமை நிலையை எடுத்து ஓதும் குறிப்பில் "காத்தாள் பவர் காவல் இகழ்ந்தமை" என ஓதப் பெறுவதாயிற்று.

திருவைந்தெழுத்தின் பெருமையை யுணர்ந்த தன்மையானது "வார்த்தை இது ஒப்பது" என ஏத்துதலாயிற்று.

கயம் – நீர் நிலை, குளம்.

6. சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலம்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யில்பலி கொண்டுஉழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடியேன் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

தெளிவுரை: வீரட்டானத்தில் வீற்றிருக்கும் ஈசனே! நல்ல நீர் கொண்டு தேவரீரை அபிடேகம் செய்து, தூய மலர் சாற்றித் தூபம் காட்டி ஏத்தும் பூசை வழிபாட்டினை யான் மறந்ததில்லை; நற்றமிழால் இசைபாடிப் போற்றும் மாண்பினை மறந்ததில்லை; நன்மையை அடைந்த காலத்திலும், தீமை உற்ற காலத்திலும் தேவரீரை மறந்ததில்லை; தேவரீரின் திருநாமத்தை மறந்ததில்லை. கபாலத்தை ஏந்திப் பலி கொண்டு உழல்பவரே! எனது உடம்பில் வாட்டும் சூலை நோயால் நான் கலங்குகின்றேன். அதனைத் தவிர்த் தருள்வீராக.

சிறப்புரை: சிவபூசை யாற்றும் சிறப்பானது "சலம் பூவொடு தூபம்" எனப் போற்றப்பட்டது. ஈசன்,

திருவாளனாகித் தமிழ் தந்த சிறப்பினை நனி உணர்த்தும் தன்மையில் தமிழோடு உள்ள இசையின் மாண்பானது ஏத்தப் பெறுவதாயிற்று. இத்தன்மையில், சுந்தர மூர்த்தி சுவாமிகள், "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் பழத்தினிற் சுவை ஒப்பாய்; கண்ணிடை மணி யொப்பாய் கடுவிருள் சுடரொப்பாய்" என, அருளிச் செய்துள்ளமையும் காண்க. ஈசனைப் "பேரும் ஓராயிரம் பேருடையார் பெண்ணோடு ஆணும் அல்லர்" எனப் புகன்றாலும், இவண், "உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்" என்பதில் நாமமாவது, திருவைந் தெழுத்து எனக் கொள்க. இதனை "நாதன் நாமம் நமச்சிவாயவே" என ஓதும் திருஞானசம்பந்தர் திருவாக்கால் தெளிக.

அலந்தேன் – கலங்கினேன்.

7. உயர்ந்தேன் மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவல் இலாமை யினால்
வயந்தேஉமக்கு ஆட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேஎன் வயிற்றின் அகம்படியே
பறித்துப் புரட்டி அறுத்து ஈர்த்திடநான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

தெளிவுரை: வீரட்டானத்தில் வீற்றிருக்கும் ஈசனே! இவ்வுலகில், எனக்கு, வழி நின்று உணர்த்துபவர் இல்லாத காரணத்தால் மனைவாழ்க்கையும், போகம் தரும் செல்வங்களுமே உயர்வுடையதெனப் பொய் யாகக் கருதி யிருந்தேன். இப்போது; அவை உயர்ந்தது அல்ல எனக் கருதி உமக்கு ஆட் செய்து வாழலாம் என்று நினைக்கும் போது, என் வயிற்றில் உள்ள சூலை

நோயூானது என்னை வாட்டிட நான் அயர்ந்தேன். அந்த நோய் என்னை வலித்திழுக்கின்றது. அதனைத் தவிர்த்தருள் வீராக.

சிறப்புரை: மனைவாழ்க்கையும், பொருட் செல்வமும் இறைவனைக் கருதாத காலத்தில் உயர்ந்த பொருளாகத் தோன்றுதலும், இறைவனைக் கருதிய காலத்தில் அவை சிறுமையுடையதாய் ஆதலும் உணர்த்தப் பெற்றது. இறைவனே பெரும் செல்வம் ஆதலும், அதனைப் பெறுதலே மன்னுயிர்களுக்கு உரிய பேறு என்பதும், உணர்த்தப் பெற்றது.

8. வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர்துணை யாரும்இல்லைச்
சங்கவெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றின் அகம்படியே
கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன் அடியேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

தெளிவுரை: வீரட்டானத்தில் விளங்கும் ஈசனே! பொய்மையும் சூதும் கொண்ட மனத்தின் காரணமாக நன்மையை ஆய்ந்து அறியும் தன்மை இல்லாமையினால், மனை வாழ்க்கையால் வாழும் நெறியினை உலகத்தவரின் பெரும் பேறாக வலிந்து கருதினேன். இப்போது அது பேறு ஆகாது என அறிந்தேன். வெண் குழையைக் காதில் அணிந்து விளங்கும் பெருமானே! என் வயிற்றில் பிணி இருந்து என்னை அயர்விக் கின்றது. அதனை அகற்றுவீராக.

9. பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலியும் பிறையீர்

துன்பே கவ லைபிணி என்றுஇவற்றை
நணுகாமல் துரந்து கரந்தும்இடர்
என்போலிகள் உம்மை இனித் தெளியார்
அடியார் படுவது இதுவேயாகில்
அன்பே அமையும்அதி கைக்கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

தெளிவுரை: வீரட்டானத்தில் வீற்றிருக்கும் ஈசனே! பொன் போன்ற ஒளிர்வுடைய திருமேனியுடையவரே! சடை முடியும் பிறைச் சந்திரனும் உடையவரே! எனக்குத் துன்பமும் கவலையும் தரும் பிணியானது நணுகாதவாறு காத்தருள்வீர். அடியவர்கள் துன்புறுவது என ஆயின், அவர்கள் உம்மை நன்கு உணர மாட்டார்கள். எனவே சூலையைத் தீர்த்தருள் வீராக.

போலி – போன்ற.

10. போர்த்தாய் அங்கொர் ஆனையின் ஈருரிதோல்
புறங்காடு அரங்காநடம் ஆடவல்லாய்
ஆர்த்தான் அரக்கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த அது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வீரட்டானத்தில் மேவும் ஈசனே! யானையின் தோலை உரித்துப் போர்த்து விளங்கும் நாதனே! சுடுகாட்டினை அரங்கமாகக் கொண்டு நடனம் புரியும் பெருமானே! இராவணனைக் கயிலை மலையின் கீழ் நெரித்துப் பின்னர் அருள் செய்த

பேற்றினைக் கருது வீராயின், பிணியால் வாடுகின்ற என்னுடைய துன்பத்தையும் தீர்ப்பீர். அன்றோ!

இது இராவணனின் இசை கேட்டு அருள் புரிந்த பெற்றியினை உணர்த்தியதாயிற்று. திருநாவுக்கரசர், தமது பிணியை அப் பான்மையில் தீர்த்தருளுமாறு கோருதலும் வேண்டுதலும் ஆயிற்று.

2. திருவதிகை வீரட்டானம்

தல விளக்கம்: *பதிகம் எண் 1 காண்க.*

பதிகக் குறிப்பு: *திருநாவுக்கரசர், சமணசமயத்திலிருந்து மீளவும் சைவம் சார்ந்ததை யொட்டி, அவர், சமணத்தில் பொய்ம்மை காட்டினார் என்னும் குற்றத்தைச் சுமத்தி மதம் கொண்ட யானையைக் கொண்டு இடரச் செய்தனர். அவ்வமயம், திருப்பதிகம் அருளிச் செய்ய யானையானது நாவுக்கரசரை வணங்கித் திரும்பிச் சென்றது. அதுவே இவ்வற்புதத் திருப்பதிகம்.*

பண் : *காந்தாரம்*

திருச்சிற்றம்பலம்

11. சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும்
வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முரண் ஏறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

தெளிவுரை: ஈசன், நறுமணம் கமழும் திருவெண்ணீற்றைக் குழையப் பூசுபவர்; ஒளிதரும் சந்திரனும், சூடாமணியும், அணிபவர்; அழகிய தோலை ஆடையாக உடையவர்; ஒளிவளரும் பவள வண்ணத் திருமேனியுடையவர்; அறத்தினை அரணாகக் கொண்டு விளங்கும் இடபத்தை வாகனமாகக் கொண்டவர்; அகன்று மேவும் படத்தையுடைய அரவத்தை ஆபரணமாக உடையவர். அப்பெருமான் நல்ல கெடில நதியில் மேவும் தீர்த்தமும் உடையவர். அத்தகைய சிறப்புடைய இறைவனுக்கு யாம் அடியவர் ஆகினோம். அதனால் யாம் அஞ்சுமாறு, உலகில் ஒரு பொருளும் இல்லை. எம்மை அஞ்சுமாறு செய்ய வருவதும் யாதும் இல்லை.

சிறப்புரை: அறத்தை எல்லையாகக் கொண்டு அதிலிருந்து பிறழாமல் மேவும் இடபமானது "அரண்முரண் ஏறு" என ஏத்தப் பெற்றது. முரண் என்பது இவண் அறத்தின் வலிமையை உணர்த்துதலாயிற்று.

திண்மையும் நன்மையும் உடைய கெடில நதியின் பெருமையானது இவண் ஏத்தப் பெற்றது. இது, இம்மை மறுமையில் திண்மையான நலத்தை நல்கும் கெடில நதியின் தன்மையாகும். இம்மையின் நலமென்பது, சிவனடியாராதலும், மறுமை நலமென்பது முத்திப் பேறடைதலும் எனக் கொள்க. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என வழங்கும் முச் சிறப்புக்களில், தீர்த்த மகிமையை உணர்த்திற்று. இத்தகைய கெடில நதியானது, திருத்தலத்திற்குரிய தீர்த்தமும் ஆயிற்று.

ஈசனின் அட்ட மூர்த்தங்களில், தீர்த்தம் ஒன்றாகும். (தீர்த்தம் – நீர்) பிற மூர்த்தங்கள், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன் ஆன்மா என்பன.

ஈசன் புனலாக விளங்கி அருள் வழங்குதலை, "ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" என்னும் மாணிக்கவாசகர் தம் திருவாக்கும், "சென்றாடு தீர்த்தம் கண்டாய்" என்னும் நாவரசர் பெரு வாக்கும் புகலும்.

திண்ணன் – திண் நல்; தமர் – அடியவர்.

12. பூண்டதோர் கேழல் எயிறும்
பொன்திகழ் ஆமை புரள
நீம்டதிண் தோள்வலம் சூழ்ந்து
நிலாக்கதிர் போலவெண் ணூலும்
காண்தகு புள்ளின் சிறகும்
கலந்தகட் டங்கங் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

தெளிவுரை: ஈசன், பன்றியின் கொம்பினை அணிந்தவர்; அழகிய ஆமையோட்டினைப் பொருந்தித் தவழுமாறு வைத்தவர்; நீண்டு, உறுதியுடன் மேவும் தோளில் குளிர்ந்து மேவும் நிலவின் ஒளிக் கதிர் போன்று முப்புரிநூல் விளங்கப் பெற்றவர்; கொக்கிறகு சூடியவர், மழுப்படையுடையவர், இடபக் கொடியுடையவர். அப்பெருமான் கெடில நதியைத் தீர்த்தமாகக் கொண்டு வீரட்டானத்தில் திகழ்பவர். அவருடைய அடியவர் யாம்.

எனவே, யாம் அஞ்சுவதற்குண்டான பொருள் எதுவும் இல்லை. எம்மை அஞ்சச் செய்யுமாறு வரக் கூடியதும் எதுவும் இல்லை.

13. ஒத்த வடத்திள நாகம்
உருத்திர பட்டம் இரண்டும்
முத்து வடக்கண் டிகையும்
முளைத்தெழு மூவிலை வேலும்
சித்த வடமும் அதிகைச்
சேணுயர் வீரட்டம் சூழ்ந்து
தத்தும் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

தெளிவுரை: ஈசன், நாகத்தை ஆரமாக உடையவர்; உருத்திரபட்டம் என்னும் தோளணியை உடையவர்; அம்பிகைக்குரிய இடப்பாகத்தில் முத்தும், வலப் பாகத்தில் உருத்திராக்கமும் மாலையாக உடையவர்; சூலப்படை யுடையவர். அப்பெருமான், சித்தவடம் என்னும் சைவத் திருமடம் சூழ, அதிகையில் விளங்கும் வீரட்டத்தின் அருகில் விளங்கும் கெடில நதியை உடையவர். அத்தகைய ஒப்பற்றவராகிய வீரட்ட நாதருக்கு நாம் அடியவர். ஆதலால், யாம் அஞ்சுவதும் இல்லை. எம்பால் அச்சம் தருமாறு வருவதும் யாதும் இல்லை.

14. மடமான் மறிபொற் கலையும்
மழுப்பாம்பு ஒருகையில் வீணை
குடமால் வரையதிண் தோளும்
குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமால் தழுவிய பாகம்
இருநிலன் ஏற்ற சுவடும்

தடமார் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

தெளிவுரை: *ஈசன், இளமையான மான்கன்றையும் மழுவையும் கையில் ஏந்தி யிருப்பவர்; பாம்பினைக் கரத்தில் அணிந்திருப்பவர்; ஒருகையில் வீணை ஏந்தியவர்; மலை போன்ற தோளையுடையவர்; மேருவை வில்லாகக் கொண்டு திருவிளையாடல் செய்தவர்; அர்த்தநாரியாய்த் திகழ்ந்து, சங்கர நாராயணனாகக் காட்சி நல்குபவர். அத்தகைய ஈசன், கெடில நதியைத் தீர்த்தமாக உடையவர். அப்பெரு மானுக்கு அடியவராகி விளங்குபவர் யாம். எனவே, யாம் அஞ்சுமாறு உள்ளது ஒன்றும் இல்லை. யாம் அஞ்சுமாறு வருவதும் ஏதும் இல்லை.*

15. பலபல காமத்த ராகிப்
பதைத்தெழு வார் மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும்
கணபதி என்னும் களிரும்
வலமேந்து இரண்டு சுடரும்
வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

தெளிவுரை: *பற்பல விருப்பத்தை உடையவர்கள் தங்கள் மனத்தில் தோன்றுவனவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் தன்மையில், கணபதிக் கடவுளை எண்ணி*

வணங்க, அவர், தமது பக்தர்களின் மலத் தொகுதியை நீக்கி அவர்கள் விரும்புவனவற்றையும் தந்தருளு கின்றார். ஈசன், அத்தகைய கணபதிக் கடவுளைக் குமாரராக உடையவர்; ஒளி திகழும் சூரியன், சந்திரன் ஆகிய இரு சுடர்களையும் கண்ணாக உடையவர்; பெருமை மிகுந்த திருக்கயிலாய மலையில் விளங்கு பவர்; அனைத்து நலன்களையும் நல்குகின்ற கெடில நற்புனலைத் தீர்த்தமாக உடையவர். அப்படிப்பட்ட ஒப்பற்றவராய் மேவும் சிவபெருமானாகிய வீரட்டே சுவருக்கு யாம் அடியவர் ஆயினோம்.

எனவே, யாம் கண்டு அஞ்சுமாறு உலகில் எந்தப் பொருளும் இல்லை. எமக்கு அச்சத்தை விளைவிக்கு மாறு செய்யும் பொருளும் இல்லை.

சிறப்புரை: தன்னைத் தாக்க வரும் யானைக்குக் கயமுகனை அழித்த கணபதிக் கடவுளின் திறத்தை ஓதி, அக்கடவுள் தமது பக்தர்களுக்கு அருள் புரியும் கருணையைப் புலப்படுத்துமாறு, “பலபல காமத்தர் ஆகிப் பதைத்து எழுவார் மனத்துள்ளே கல மலக்கு இட்டுத் திரியும் கணபதி என்னும் களிறு” என ஓதப் பெறுவதாயிற்று. இது! மதம் கொண்ட யானையை அஞ்ச வைக்கும் உபாயம் ஆயிற்று.

தாம், ஈசனுக்குத் தமர் ஆனதால் அச்சத்தை நீத்தமையும், அவ்வாறே பிறவற்றால் தம்மை அஞ்சு மாறு செய்ய இயலாது என்பதும், “அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை” என்னும் தொடர் சுட்டுவதாயிற்று.

காமம் – விருப்பம்; இரண்டு சுடர் – சூரியன், சந்திரன்; நலமார் கெடிலப்புனல் – புறத்தூய்மை, அகத்தூய்மை ஆகியன பொருந்தச் செய்து உயிரை, ஈசன் திருவடியில் பதியச் செய்து நலம் விளைவிக்கும்

கெடில நதியின் நீரின் செம்மையைச் சுட்டுதலாம். இது திருத்தலத் தீர்த்தம் ஆகும்.

16. கரந்தன கொள்ளி விளக்கும்
கரங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும்
பயின்றறி யாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாளர்
அறியப் படாததொர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

தெளிவுரை: *சிவபெருமான், மெல்லிய விளக்கொளி யாகிய இரவில், முழவின் ஒலி திகழவும் பதினெட்டு வகையான பூதகணங்கள் சூழவும் பாடல்களை இசைத்துத் திருக்கூத்துப் புரிபவர். அப்பெருமான், கெடில நதிக்கரையில் வீற்றிருக்கும் ஒப்பற்றவராகிய வீரட்டநாதர் ஆவார். அவருடைய தமர் நாம், எனவே எத்தன்மையிலும் யாம் அஞ்சுவதற்கு யாதொரு நிலையும் இல்லை. எம்மை அஞ்சுமாறு செய்ய வல்லதும் எதுவும் இல்லை.*

சிறப்புரை: *பெருஞ் சோதியாக விளங்குகின்ற பாங்கும் அப்பேரொளியானது கண்புலன்களுக்கு அப்பாற் பட்டு விளங்குகின்ற மாண்பும் தோன்ற, "கொள்ளி விளக்கு" எனச் சிறப்பித்து ஓதப் பெற்றது. எல்லை யற்ற அப்பேரொளியானது, குறைந்து தோன்றிப் புலனாகு தலின் சிறப்பானது, "கரந்தன" என ஓதப் பெற்றது.*

ஈசனின் திருக்கூத்து ஒவ்வொன்றும் திருவருட் செயலை நிகழ்த்தும் ஆற்றல் உடையது என்பதும்,

அதனை ஏனையோர் அறிந்து கொள்ள இயலாதது என்பதும், "அறியப்படாத தொர் கூத்து" எனச் சுட்டப் பெறுவதாயிற்று.

பாட்டு – வேதம்; சாமகானம்.

17. கொலைவரி வேங்கை யதளும்
குவவோடு இலங்குபொன் தோடும்
விலைபெறு சங்கக் குழையும்
விலையில் கபாலக் கலனும்
மலைமகள் கைக்கொண்ட மார்பும்
மணியார்ந்து இலங்கு மிடறும்
உலவு கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

தெளிவுரை: சிவபெருமான், கொலைத் தன்மையுடைய புலியின் தோலை உடையாகக் கொண்டு விளங்கு பவர்; திரட்சியும் பெருமையும் உடைய தோள்களை உடையவர்; காதில் தோடும் குழையும் அழகுடன் மேவி விளங்குபவர்; மதிப்பின் மிக்க பிரம கபாலத்தைப் பலியேற்கும் பாத்திரமாகக் கொண்டிருப் பவர்; உமாதேவியைத் திருமார்பில் ஒருபாகமாக வைத்திருப்பவர்; அழகுடன் ஒளிரும் நீல வண்ண மிடற்றை யுடையவர். அப்பெருமான் கெடில நதியைத் தீர்த்தமாகக் கொண்டு விளங்கும் வீரட்டநாதர். யாம் அவருடைய அடியவர். எனவே, யாம் எதற்கும் அஞ்சு வது இல்லை, எம்மை அஞ்சுமாறு செய்ய வல்லதும் எதுவும் இல்லை.

சிறப்புரை: ஈசன் அணிந்துள்ள புலித்தோல் உடையானது, தன்னைத் தாக்க வருபவர்களை அச்சப்

படுத்தும் சிறப்பினைச் சுட்டுவதாயிற்று. இத்தன்மை, "கொலை வரி வேங்கை யதள்'' என உரைக்கப் பெற்றது.

ஈசன் எட்டுத் தோள்களை வீசி யாடும் பெருமையும், மழு, மான், நெருப்பு, அரவம் முதலான வற்றையும் உடன் கொண்டு ஆடும் பேராற்றலும் பொருந்தக் காட்டும் பெருமை "குவவு'' என, உணர்த்தப் பெற்றது.

குவவு – பிணைவு, பெருமை, திரட்சி. தோளின் சிறப்பினை உணர்த்தியது.

18. ஆடல் புரிந்த நிலையும்
அரையில் அசைத்த அரவும்
பாடல் பயின்றபல் பூதம்
பல்லா யிரங்கொள் கருவி
நாடற்கு அரியதொர் கூத்தும்
நன்குயர் வீரட்டம் சூழ்ந்து
ஓடும் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

தெளிவுரை: ஈசன், அழகு மிளிரத் திருநடனம் புரிந்து மேவும் நிலையில், அரவத்தை அரையில் கட்டிப் பலவகையான பூதகணங்கள் பாடலை இசைக்க விளங்குபவர். அப்பெருமானுடைய திருக்கூத்துக்கு ஆயிரக்கணக்கான வாத்தியங்களாலும் ஈடுகொடுக்க முடியாது. அத்தகைய கலை நுட்பமும் பேராற்றலும் உடைய அப்பரமன், கெடில நதிக்கரையில் உள்ள வீரட்டத்தானத்தில் திகழ்பவர். அவ் இறைவனுக்கு, நாம் அடியவர் ஆயினோம். எனவே நாம் அஞ்சுமாறு

எப்பொருளும் இல்லை. எம்மை அஞ்சுமாறு செய்ய வல்லதும் ஏதும் இல்லை.

சிறப்புரை: ஈசனுடைய திருநடனச் சிறப்பும் அது எத்தகைய இசைக் கருவிகளாலும் ஈடு கொடுத்து வாசிப்பதற்கு அரியது என்பதும், இவண், “பல்லாயிரம் கொள் கருவி நாடற்க அரியதொர் கூத்து” என்று உணர்த்தப் பெற்றது.

19. **சூழும் அரவத் துகிலும்**
துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவள் அஞ்ச
அஞ்சாது அருவரை போன்ற
வேழம் உரித்த நிலையும்
விரிபொழில் வீரட்டம் சூழ்ந்து
தாழும் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

தெளிவுரை: ஈசன், அரவத்தைத் துகிலாக உடையவர்; கோவணத்தைக் கீழுடையாகக் கொண்டு விளங்குபவர்; உமாதேவியும் வெருவி அஞ்சுமாறு யானையை அடர்த்து அழித்து, அதன் தோலை உரித்தவர். அப்பெருமான், கெடில நதிக்கரையில் மேவும் வீரட்டானத்தில் வீற்றிருப்பவர். அக் கடவுளுக்கு யாம் அடியவர்.

எனவே நாம், அஞ்சுவது இல்லை; நமக்கு அச்சம் தரச் செய்வதும் ஏதும் இல்லை.

சிறப்புரை: ஈசன் யானையை அடர்த்த ஞான்று கருணை வயத்தராகிய உமாதேவியார் அஞ்சித்

தோன்றிய நிலையினை, "யாழின் மொழியவள் அஞ்ச" என ஓதப் பெற்றது. இது மலைபோன்று பெருந் தோற்றம் கொண்டு வந்த யானையைப் போர் செய்து அழித்ததும், அக்காட்சியைக் கண்ணுற்ற கருணைத் தாயாகிய தேவி, அஞ்சிய தன்மையும் சுட்டுதல் ஆயிற்று. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''மலைக்கு மகள் அஞ்ச மதகரியை உரித்தீர்'' (திருஅரிசிற் கறைப்புத்தூர் திருப்பதிகம் பாடல் 1.) என அருளிச் செய்தமை காண்க.

திருநாவுக்கரசரைத் தாக்க வந்த யானைக்கு ஈசனின் பேராற்றலை நினைவூட்டும் தன்மையில் இஃது அமைந்ததும் ஆகும். அச்சம் அற்ற நிலையில் திருநாவுக்கரசர் ஓதியருளிய நெறியில், மாணிக்க வாசகர், "தறிசெறி களிறும் அஞ்சேன் தழல் விழி உழுவை அஞ்சேன்" (அச்சப் பத்து பாடல் 8) என அருளிச் செய்த பாங்கும் நோக்குக.

20. நரம்பெழு கைகள் பிடித்து
நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாம்கொண்டு எடுத்தான்
ஒன்பதும் ஒன்றும் அலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான்
வளர்பொழில் வீரட்டம் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தனது வலிமையெல்லாம் திரட்டிப் பத்துத் தலைகளை உடைய இராவணன், கயிலை மலையை

எடுக்க, அவனை அலறி அழுமாறு அடர்த்துப் பின்னர் வரங்கள் கொடுத்தருள் புரிந்தவர் சிவபெருமான். அப்பெருமான் கெடில நதியைத் தீர்த்தமாகக் கொண்ட வீரட்டானத்தில் வீற்றிருப்பவர். ஒப்பற்ற வராகிய அவருக்கு அடியவர் ஆனமையால், யாம் அஞ்சுவதற்கு எதுவும் இல்லை. எம்மை அஞ்சுமாறு செய்வதும் ஏதும் இல்லை.

ஒன்பதும் ஒன்றும் – பத்துத் தலைகள்.

3. திருவையாறு

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலங்கள் 63-இல் இது, 51ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. திருநாவுக்கரசருக்குக் கயிலாயக் காட்சி அருளிய இடம்.

மற்றும் முதல் திருமுறைபதிகம் எண் 36 காண்க.

சுவாமி : பஞ்சநதேஸ்வரர், ஐயாற்றீசர், செம்பொற் சோதீஸ்வரர், பிரணதார்த்தி ஹரன்

அம்பிகை : தர்ம சம்வர்த்தினி, அறம் வளர்த்த நாயகி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : சூரிய தீர்த்தம், காவிரி

பதிகக் குறிப்பு: திருக்கயிலைக்குச் சென்று இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்னும் நோக்கில் புறப்பட்டுச் சென்ற திருநாவுக்கரசர், அங்கமெல்லாம் நைந்தும் ஆராப் பெரு விருப்பால் ஈசனை வேண்டினார்; கைகளால் தாவியும், மார்பால் உந்தியும் சென்றார். பின்னர் அரசர், புரண்டு புரண்டு சென்றனர்.

அந்நிலையில், மானசரோவர் என்னும் பொய் கையில் ஈசன் திருவருளால் முழுகித் திருவையாற்றுக் குளத்தில் எழுந்து கயிலைத் திருக்காட்சியைக் கண்டு தரிசித்துப், போற்றித் திருத்தாண்டகங்களை அருளிச் செய்த வாகீசர், இத்திருப்பதிகத்தை அருளிச் செய்ய லானார். திருக்கயிலைக் காட்சி நல்கிய தானம், தனிக் கோயிலாக உள்ளது.

பண் : காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

21. மாதர்ப் பிறைக் கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்து ஏத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயாறு அடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்

கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

தெளிவுரை: சிவபெருமான், அழகிய பிறைச்சந்திரனைத் தரித்திருப்பவர்; மலை மகளாகிய உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குபவர். அப்பெருமானைப் பூசிப்பதற்கு நன்னீரும், அருச்சிப்பதற்குப் பூக்களும் ஏந்திக் கொண்டு, புகழ்ப் பாக்களைப் பாடிச் செல்லும் அடியவர்கள் பின்னால் யானும் புகுவேன். உடல் தேய்ந்து, ஊர்ந்தும், புரண்டும் நைந்து செல்லுங்காலை, பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் சுவடு படாமல் எழுகின்ற பெரும் பேற்றை அடையும் போது, பிடியும் களிறும் போன்று, அம்பிகையுடன் விளங்கும்

ஈசனைக் கண்டேன். அப்பெருமானின் திருப்பாதங்கள் காண்பதற்கு இயலாதனவாகும். அதனை யான் காணும் பேற்றினை யுற்றேன்.

சிறப்புரை: தக்கனால் தேய்ந்து அழியுமாறு சாபம் பெற்ற சந்திரன், ஈசனைச் சரணடைந்து அழகு பெற்ற சிறப்பானது, "மாதர்பிறை" எனப் போற்றப்பட்டது. இது சந்திரசேகர மூர்த்தத்தின் அருட் சிறப்பினை வியந்து ஓதுதலாயிற்று.

பழவடியார்தம் திருக்கூட்டத்துடன் மகிழ்ந்து பின் செல்லுதலையும், அவர்களுடன் இணங்கி இருத்தலையும் உணர்த்தும் தன்மையில், "புகுவார் அவர்பின் புகுவேன்" எனப் புகலுதலாம்.

மாதர் – அழகு.

22. போழிளங் கண்ணியி னானைப்
 பூந்துகி லாளொடும் பாடி
வாழியம் போற்றிஎன் றேத்தி
 வட்டமிட்டு ஆடா வருவேன்
ஆழிவலவன் நின்று ஏத்தும்
 ஐயாறு அடைகின்ற போது
கோழிபெடை யொடும் கூடிக்
 குளிர்ந்து வருவன கண்டேன்

கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

தெளிவுரை: ஈசன், பிறைச்சந்திரனை அணிந்துள்ளவர்; உமாதேவியுடன் விளங்குபவர். அப்பெருமானை, வாழ்க என ஏத்தி மகிழ்ச்சியுடன் கைத்தாளம் தட்டி வட்டம் சுற்றி ஆடி எல்லாரும் வரும் போது, திருவையாற்றை நான் அடைந்து அவ்வாறே

சென்றேன். ஆங்கு, சேவல் பெடையுடன் திகழும் தன்மையில் ஈசன் அம்பிகையுடன் குலவி விளங்கு தலைக் கண்டேன். காணற்கு அரிய அவர் திருப்பாதத்தைக் கண்டேன்.

23. எரிப்பிறைக் கண்ணியி னானை
ஏந்திழை யாளொடும் பாடி
முரித்த இலயங்கள் இட்டு
முகமலர்ந்து ஆடா வருவேன்
அரித்தொழு கும்வெள் ளருவி
ஐயாறு அடைகின்ற போது
வரிக்குயில் பேடையொடு ஆடி
வைகி வருவன கண்டேன்

கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

தெளிவுரை: ஈசன், ஒளி திகழும் பிறைச் சந்திரனைத் தரிசித்து உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குபவர். அப்பெருமானைத் தரிசிக்கும் அடியவர்கள் முகமலர்ச்சியுடன் செல்கின்ற போது, தூய நீர் விளங்கும் ஐயாற்றை அடைந்து நானும் மகிழ்ந்து ஆடிச் சென்றேன். ஆங்கு, குயிலானது தனது பெடையுடன் விளங்குவதைப் போன்று தேவியுடன் விளங்கும் ஈசனைக் கண்டேன். காண்பதற்கு ஒண்ணாத ஈசனின் திருப்பாதத்தைக் கண்டேன்.

எரி – ஒளி, நிலவு.

24. பிறையிளம் கண்ணியி னானைப்
பெய்வளை யாளொடும் பாடித்
துறையிளம் பன்மலர் தூவித்
தோளைக் குளிரத் தொழுவேன்

அறையிளம் பூங்குயி லாலும்
ஐயாறு அடைகின்ற போது
சிறையிளம் பேடையொடு ஆடிச்
சேவல் வருவன கண்டேன்

கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

தெளிவுரை: *ஈசன், பிறைச் சந்திரனைச் சூடி, உமாதேவி யாரோடு வீற்றிருப்பவர். இனிய பூங்குயில் பாடுகின்ற ஐயாற்றினை அடைகின்ற போது, பல மலர்களைப் பறித்து அடியவர் பெருமக்கள் தூவிப் போற்றும் தன்மை போன்று நானும் மலர் தூவி மகிழ்ந்து தொழுவேன். அப்போது சேவல், சிறகுகளை யுடைய தனது பேடையொடு வருதலைப் போன்று ஈசனும் தேவியும் விளங்குதலைக் கண்டேன். காணற்கு இயலாத அப்பெருமானின் திருப்பாதத்தை நான் கண்டேன்.*

25. ஏடுமதிக் கண்ணி யானை
ஏந்திழை யாளொடும் பாடிக்
காடொடு நாடு மலையும்
கைதொழுது ஆடா வருவேன்
ஆடல் அமர்ந்துறை கின்ற
ஐயாறு அடைகின்ற போது
பேடை மயிலொடும் கூடிப்
பிணைந்து வருவன கண்டேன்

கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

தெளிவுரை: *பிறைச்சந்திரனைத் தரித்துள்ள சிவபெருமான்; உமாதேவியுடன் வீற்றிருப்பவர். அப்பெருமானைக் கண்டு தரிசிக்கும் தன்மையில் காடு,*

நாடு, மலை முதலான யாவும் கடந்து பாடிச் செல்கின்ற போது ஐயாறு என்னும் திருத்தலத்தை அடைந்தேன். ஆங்கு அப்பெருமான், தேவியோடு இருக்கும் காட்சியானது, மயில் தன் பேடையொடு சேர்ந்து இருக்கும் தன்மையுடையதெனக் கண்டேன். காணக்கிடைக்காத அவ்விறைவனுடைய திருப் பாதத்தை யான் கண்டேன்.

ஏடு மதி – பிறைச்சந்திரன்.

26. தண்மதிக் கண்ணியி னானைத்
தையல்நல் லாளொடும் பாடி
உண்மெலி சிந்தைய னாகி
உணரா உருகா வருவேன்
அண்ணல் அமர்ந்துறை கின்ற
ஐயாறு அடைகின்ற போது
வண்ணப் பகன்றிலொடு ஆடி
வைகி வருவன கண்டேன்

கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

தெளிவுரை: குளிர்ந்த பிறைச்சந்திரனைத் தரித்துள்ள ஈசன், தையல் நல்லாளாகிய உமாதேவியோடு விளங்கு பவர். நான் உள்ளத்தில் அப்பெருமானைத் தியானம் செய்தவாறு ஐயாற்றை அடைகின்ற போது, வண்ணம் மிக உடைய பிரிதல் கொள்ளாத அன்றில் பறவை வரக் கண்டேன். அவ்விறைவனுடைய திருவடியானது யாராலும் காண்பதற்கு அரியது. அத்திருப்பாதத்தை யான் கண்டேன்.

27. கடிமதிக் கண்ணியி னானைக்
காரிகை யாளொடும் பாடி

வடிவொடு வண்ணம் இரண்டும்
வாய் வேண்டுவ சொல்லி வாழ்வேன்
அடியிணை ஆர்க்கும் கழலான்
ஐயாறு அடைகின்ற போது
இடிகுரல் அன்னதோர் ஏனம்
இசைந்து வருவன கண்டேன்

கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

தெளிவுரை: *நல்லொளியுடன் விளங்கும் பிறைச் சந்திரனைத் தரித்துள்ள சிவபெருமான், உமாதேவி யோடு விளங்குபவர். அப்பெருமானது தோற்றப் பொலிவுடன் அருளாற்றலையும் இசைத்துப் போற்றி, வாயினால் பாடிச் சென்று ஐயாறு அடைகின்ற போது, இடிகுரல் போன்று முழங்கும் ஏனம் தன் துணையுடன் வருதலைக் கண்டேன். அப்பெருமானுடைய திருப் பாதமானது, காணுதற்கு அரியது. நான் அதனைக் கண்டேன்.*

28. விரும்பு மதிக்கண்ணி யானை
மெல்லிய லாளொடும் பாடிப்
பெரும்புலர் காலை எழுந்து
பெறுமலர் கொய்யா வருவேன்
அருங்கலம் பொன்மணி யுந்தும்
ஐயாறு அடைகின்ற போது
கருங்கலை பேடையொடு ஆடிக்
கலந்து வருவன கண்டேன்

கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

தெளிவுரை: *யாவரும் விரும்பி ஏத்தும் பிறைச் சந்திரனைச் சூடிய சிவபெருமான், உமாதேவியை*

உடனாகக் கொண்டு விளங்குபவர். பொழுது புலர்வதன் முன்னால் மலர்களைக் கொய்து பெருமானுக்கு அருச்சிக்கும் எழிலில் நான் ஐயாற்றை அடைகின்ற போது, ஆண்மான் தன் துணையோடு விளங்குதல் போன்ற ஈசனின் திருக்கோலத்தைக் கண்டேன். காணுதற்கு அரிய அப்பெருமானின் திருப்பாதத்தைக் கண்டேன்.

சிறப்புரை: ஈசனுக்கு, மலர் தூவிப் போற்றும் வழிபாட்டின் சிறப்பு இத்திருப்பாட்டில் "பெறுமலர்" என ஏத்தப் பெற்றது. இது மக்கட் பிறவிக்குப் பெரும் பேற்றினை அளிக்க வல்ல வழிபாடு என்பதனைச் சுட்டுதலாகும்.

பெறு மலர் - பேறு அளிக்கும் மலர். ஈசனுக்கு அருச்சித்தலும் மாலை தொடுத்து அணிவித்தலும் ஆகிய வழிபாட்டிற்கு உரித்தானது.

கலை – மான்.

29. முற்பிறைக் கண்ணியி னானை
மொய்குழ லாளொடும் பாடிப்
பற்றிக் கயிற்றுக் கில்லேன்
பாடியும் ஆடா வருவேன்
அற்றருள் பெற்றுநின் றாரோடு
ஐயாறு அடைகின்ற போது
நற்றுணைப் பேடையொடு ஆடி
நாரை வருவன கண்டேன்

கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

தெளிவுரை: இளம் பிறைச்சந்திரனைச் சூடிய சிவபெருமான் உமாதேவியோடு விளங்குபவர்.

அப்பெருமானைப் போற்றிப் பாடிப் பந்தபாசம் முதலான இவ்வுலகத் தொடர்பினை அறுத்து நீக்கும் மாண்பில் ஆடியும் பாடியும், அருள் பெற்ற பழ அடியார் திருக்கூட்டத்தினருடன் ஐயாறு அடைகின்ற போது, நாரை தனது துணையாகிய பேடையொடு விளங்கும் செம்மையில் ஈசனைக் கண்டேன். கண்டறியாத அப்பெருமானுடைய திருப்பாதத்தைக் கண்டேன்.

சிறப்புரை: வினையின் தொடர்ச்சியானது இவ்வுலகத்தில் பிறப்புக்குக் காரணமாக அமை தலையும், அதனை அறுத்து ஒழிக்க வேண்டும் என்னும் மெய்ம்மையையும் புகலும் தன்மையில், "கயிறு அறுக்க கில்லேன்" என ஓதப் பெற்றது. இதற்கு உபாயமாவது ஈசனைப் போற்றிப் பாடுதலாகும் என்பதும் இவண் உணர்த்தப் பெற்றது. வினைகளுக்கு ஏற்றவாறு பிறவி யானது வரையறுக்கப்படுகிறது என்பதும் அதனை அறுக்க வேண்டும் என்னும் அறிவுறுத்தலும் தோன்ற மாணிக்கவாசகர், "அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டிப் புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி மலம் சோரும் ஒன்பது வாயிற் குடில்" என அருளிச் செய்தமையும் காண்க. ஈசனைப் பற்றி னால், பிறவியைத்தரும் வினைக்கயிறு அறும் என்பது குறிப்பு.

முற்பிறை – முதற் கண் தோன்றும் வளர்பிறைச் சந்திரனை உணர்த்திற்று.

30. திங்கள் மதிக் கண்ணி யானைத்
தேமொழி யாளொடும் பாடி
எங்கருள் நல்கும்கொல் எந்தை
எனக்கினி என்னா வருவேன்

அங்கிள மங்கையர் ஆடும்
ஐயாறு அடைகின்ற போது
பைங்கிளி பேடையொடு ஆடிப்
பறந்து வருவன கண்டேன்

கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

தெளிவுரை: குளிர்ச்சியான சந்திரனைச் சூடிய சிவபெருமான், உமாதேவியோடு வீற்றிருக்கும் பரமன். அப்பெருமான் எவ்விடத்தில் இருந்து எனக்கு அருள்புரிவாரோ எனப் பேராவல் கொண்டு, தலங்கள் தோறும் தரிசித்து, ஐயாறு என்னும் திருத்தலத்தை அடைகின்ற போது, பைங்கிளியானது தனது பேடையுடன் விளங்கும் இனிமை போன்று இறைவன் தேவியோடு விளங்குதலைக் கண்டேன். காண்பதற்கு அரியதாகிய அப்பரமனின் திருப்பாதத்தை, யான், கண்டேன்.

தேமொழி – உமாதேவி.

31. வளர்மதிக் கண்ணியி னானை
வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததொர் காலம்
காண்பான் கடைக்கண்நிற் கின்றேன்
அளவு படாததொர் அன்போடு
ஐயாறு அடைகின்ற போது
இளமண நாகு தழுவி
ஏறுவருவன கண்டேன்

கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவபெருமான், வளரும் பிறைச் சந்திரனைச் சூடி, உமாதேவியை உடனாகக் கொண்டு திகழ்பவர். அப்பெருமானைக் கண்டு தொழ வேண்டும் என்னும் வேட்கையில் பல காலம் பாடிப் போற்றித் தோற்றம் பெறாத நிலையில், பேரன்போடு ஐயாறு என்னும் தலத்தை அடைகின்ற போது, எருதானது தன் துணையோடு பொருந்த விளங்கும் தன்மையில், ஈசன், தேவியுடன் விளங்கக் கண்டேன். அப்பெருமானுடைய, காணுதற்கரிய திருப்பாதத்தைக் கண்டேன்.

நாகு – பெடை; ஏறு – எருது.

4. திருவாரூர்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத்தலம் 127இல், இது 87ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. பஞ்சபூதத் தலங்களுள் பிருத்துவித் தலம். பிறக்க முத்தி தரும் தலம். "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருவாக்கு.

மற்றும் முதல் திருமுறைப் பதிகம் எண் 91 காண்க.

சுவாமி : வன்மீகநாதர், புற்றிடங் கொண்டார்

அம்பிகை : கமலாம்பிகை, அல்லியங் கோதை, நீலோத்பலாம்பாள்

தல மரம் : பாதிரி

தீர்த்தம் : கமலாலயம் (தேவ தீர்த்தம்)

தியாக ராஜா : வீதிவிடங்கர், அஜபா நடனம்

பண் : *காந்தாரம்*

திருச்சிற்றம்பலம்

32. பாடிளம் பூதத்தி னானும்
பவளச் செவ் வாய்வண்ணத் தானும்
கூடிள மென்முலை யாளைக்
கூடிய கோலத்தி னானும்
ஓடிள வெண்பிறை யானும்
ஒளிதிகழ் சூலத்தி னானும்
ஆடிளம் பாம்பசைத் தானும்
ஆரூர் அமர்ந்தஅம் மானே.

தெளிவுரை: *சிவபெருமான், பண்ணிசைத்துப் பாடும் பூதகணங்களை உடையவர்; பவளம் போன்ற சிவந்த திருவாய் உடையவர்; உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு மேவும் அழகுடையவர்; வெண்மையான பிறைச்சந்திரனைச் சூடியவர்; ஒளிதிகழும் சூலப்படை யுடையவர்; ஆடுகின்ற பாம்பை அரையில் கட்டி விளங்குபவர். அவர் திரு ஆரூரில் வீற்றிருக்கும் அன்புக்குரிய தலைவரேயாவார்.*

33. நரியைக் குதிரைசெய் வானும்
நரகரைத் தேவு செய்வானும்
விரதங்கொண் டாடவல் லானும்
விச்சின்றி நாறுசெய் வானும்
முரசதிர்ந் தானைமுன் னோட
முன்பணிந்து அன்பர்கள் ஏத்த
அரவரைச் சாத்திநின் றானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

தெளிவுரை: *சிவபெருமான், நரியைக் குதிரையாகச் செய்பவர்; மிகையான பாவகாரியங்களால் நரகிடை உழல்பவர்களைத் தேவர்களாக்குபவர்; மெய்வருத்தித்*

தியானித்தும், பூசித்தும் வணங்கி, விரதம் மேற்கொள்ளும் அடியவர்களை விரும்புபவர்; விதை போன்ற மூலப் பொருள் ஏதும் இன்றி மணம் கமழும் செயலைத் தருவிப்பவர். அப்பெருமான், முரசு இயம்பவும் அன்பர்கள் ஏத்தித் துதிக்க அரவத்தை அரையில் கட்டி மேவும் வீதி விடங்கராய் ஆரூரில் விளங்குபவர் ஆவார்.

சிறப்புரை: நரியைக் குதிரையாக்கிய ஈசனின் திருவிளையாடற் சிறப்பானது, "நரியைக் குதிரை செய்வானும்" எனப் போற்றப்பட்டது. இத்தன்மையில் மாணிக்க வாசகர், "நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப் பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந் துறையாய்" என அருளிச் செய்துள்ளமையும் காண்க. இவ்வரலாறு மாணிக்கவாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கிய ஈசன் திருவிளையாடலை இயம்பிற்று.

விதையாகிய மூலப் பொருள் இன்றி யாவும் செய்விக்கும் ஆற்றலுடைய ஈசனின் அருள் தன்மையானது, "விச்சின்றி நாறு செய்வானும்" என ஏத்தப் பெற்றது. இதனை, "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்னும் திருவாசக வாக்கும் கொண்டு நோக்குக. இத் திருத்தலத்தின் சிறப்பினால் தியாகேசரின் பெருமைக் குரிய வாத்தியப் பெருமையை உணர்த்துமாறு முரசதிர்ந்தானை முன்னோட முன் பணிந்து அன்பர்கள் ஏத்த" என ஓதப் பெறுவதாயிற்று.

விச்சு – வித்து; நாறு – நறுமணம்.

34. நீறுமெய் பூசவல் லானும்
நினைப்பவர் நெஞ்சத்து ளானும்

ஏறுகந்து ஏறவல் லானும்
எரிபுரை மேனியி னானும்
நாறு கரந்தையி னானும்
நான்மறைக் கண்டத்தி னானும்
ஆறு சடைக்கரந் தானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

தெளிவுரை: சிவபெருமான், திருநீற்றினைத் திருமேனியில் குழையப் பூசியவர்; தன்னை நினைத்து வணங்கும் பக்தர்களின் நெஞ்சங்களில் விளங்குபவர்; இடப வாகனத்தின் மீது உகந்து ஏறுபவர்; எரியும் நெருப்புப் போன்ற சிவந்த திருமேனியுடையவர்; நறுமணம் கமழும் சிவகரந்தை என்னும் பத்திரத்தை தரித்துள்ளவர்; நான்கு வேதங்களை விரித்து ஓதுபவர்; கங்கையைச் சடை முடியில் ஏற்றவர். அவர், ஆரூரில் வீற்றிருக்கும் அன்புக்குரிய தலைவரே யாவர்.

35. கொம்புநல் வேனி லவனைக்
குழைய முறுவல்செய் தானும்
செம்புனல் கொண்டுஎயில் மூன்றும்
தீயெழக் கண்சிவந் தானும்
வம்புநற் கொன்றையி னானும்
வாட்கண்ணி வாட்டமது எய்த
அம்பர் ஈருரி யானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

தெளிவுரை: ஈசன், மன்மதனை எரித்தவர்; முப்புரங்களை எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர்; மணம் வீசும் கொன்றை மாலை தரித்தவர்; உமாதேவியார் அயற்சி யடையுமாறு புலித் தோலை ஆடையாகக் கொண்டு மேவுபவர். அவர், ஆரூரில் வீற்றிருக்கும் அன்புக்குரிய தலைவரே ஆவார்.

வேனிலவன் – மன்மதன்; அம்பரம் – ஆடை.

36. ஊழி அளக்கவல் லானும்
உகப்பவர் உச்சியுள் ளானும்
தாழிளம் செஞ்சடை யானும்
தண்ணமர் திண்கொடி யானும்
தோழியர் தூதிடை யாடத்
தொழுதடி யார்கள் வணங்க
ஆழி வளைக்கையி னானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

தெளிவுரை: ஈசன், ஊழிக்காலத்தின் தலைவனாய் இருந்து காண்பவர்; தன்னை, மகிழ்ந்து ஏத்தும் அடியவர்களுக்குத் தலையாயவராய் நின்று அருள் புரிபவர்; விரிந்து நீண்ட சிவந்த சடைமுடியுடையவர். தியாகக் கொடியுடையவர். அப்பெருமான், அடியவர்கள் வணங்கவும், தோழியர் தூதுக் குறிப்பினை நவிலவும் கையை வளைத்து ஆடும் தியாகேசராய் ஆரூரில் வீற்றிருக்கும் அன்புக்குரிய தலைவரே ஆவார்.

சிறப்புரை: ஈசன், எக்காலத்திலும் விளங்கி மேவும் பரம் பொருள் என்பது, "ஊழி அளக்கவல்லான்" என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை, ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்" என, அருளிச் செய்தமையும் காண்க.

ஈசன், தன்னைப் போற்றும் அடியவர்கள்பால் உயர்ந்து விளங்கும் மாண்பு, "உகப்பவர் உச்சியுள்ளானும்" என ஏத்தப் பெற்றது. இந்நெறியில் சுந்தர மூர்த்தி சுவாமிகள், "உரைப்பார் உரை உகந்து உள்க வல்லார் தங்கள் உச்சியாய்" (திருப்பும் கொளியூர் அவிநாசி திருப்பதிகம், பாடல் எண் 4) என அருளிச் செய்துள்ளதும் காண்க. இத்திருப்பாட்டின் பின்னிரு

அடிகளும் இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள வீதி விடங்கரின் நடனத் திருக்காட்சியைச் சுட்டுதலாகும்.

37. **ஊர்திரை வேலையுள் ளானும்**
உலகிறந்த ஒண்பொரு ளானும்
சீர்திரு பாடலுள் ளானும்
செங்கண் விடைக்கொடி யானும்
வார்தரு பூங்குழ லாளை
மருவி யுடன்வைத் தவனும்
ஆர்திரை நாளுகந் தானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

தெளிவுரை: சிவபெருமான், பாற்கடலில் பள்ளி கொண்டு மேவும் திருமாலாய் விளங்குபவர்; உலகம் யாவையும் கடந்து மேவும் ஒப்பற்ற விழுப் பொருளாய்த் திகழ்பவர்; ஈசனைப் போற்றும் புகழ்ப் பாடலுள் ஒளிர்பவர்; இடபக் கொடி யுடையவர்; உமாதேவியை ஒருபாகமாகக் கொண்டு விளங்குபவர். அப்பெருமான், திருவாதிரை என்னும் நாளுக்கு உரிய வராகி மகிழ்ந்து, ஆரூரில் வீற்றிருக்கும் அன்புக்குரிய தலைவரே ஆவார்.

சிறப்புரை: ஈசன், திருமாலாக விளங்கி அருள் புரிவதல் "ஊர்திரை வேலையுள்ளான்" என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில் திருஞானசம்பந்தர், "மிகும் அலை கடல் நடு அரிதுயில் அமர் அரி உரு இயல் பரன் உறை பதி சிலைமலி மதிள் சிவபுரம் நினைபவர் திருமகளொடு திகழ்வரே" (முதல் திருமுறை பதிகம் எண் 2 சிவபுரம் பாடல் எண் 218) என அருளிச் செய்தமை நோக்குக. இந்நெறியில், "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு

பாகனார்தாம் வருவர்" எனவரும் சிவஞான சித்தியார் சுபக்கம் பாடல் எண் 115–இல் ஓதியருளுதலும் காண்க.

ஊர் திரைவேலை – பாற்கடல்; ஆர்திரை – திருவாதிரை.

38. தொழற்கு அங்கை துன்னிநின் றார்க்குத்
தோன்றி அருளவல் லானும்
கழற்கு அங்கை பன்மலர் கொண்டு
காதல் கனற்றநின் றானும்
குழற்கங்கை யாளையுள் வைத்துக்
கோலச் சடைக்கரந் தானும்
அழற்கு அங்கை ஏந்தவல் லானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

தெளிவுரை: *சிவபெருமான், அழகிய கரங்களைக் கூப்பித் தொழுகின்ற அடியவர்களுக்கு அருள் புரிபவர்; தனது திருவடிக்கு மலர் தூவிப் போற்றுகின்ற அன்பர்களின் உள்ளத்தில் அன்பு பெருக நின்று விளங்குபவர்; கங்கையைச் சடை முடியில் வைத்தவர்; அழகிய திருக்கரத்தில் நெருப்பை ஏந்தியவர். அப்பெருமான், ஆரூரில் வீற்றிருக்கும் அன்புக்குரிய தலைவரே யாவார்.*

சிறப்புரை: *ஈசனைத் தொழுது போற்றுகின்ற அடியவர்களின் மேன்மையானது முதல் இரு அடிகளில் ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், மாணிக்கவாசகர், "கரங்குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க! சிரங்குவிவார் ஓங்கு விக்கும் சீரோன் கழல் வெல்க" எனவும் "தொழுத கை துன்பம் துடைப்பாய் போற்றி" எனவும் அருளிச் செய்தமை காண்க.*

காதல் கனற்ற – அன்பின் மேலிட்டு விளங்குதல்; அழற்கு – நெருப்பினை உணர்த்தியது.

39. ஆயிரம் தாமரை போலும்
ஆயிரம் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும்
ஆயிரம் தோளுடை யானும்
ஆயிரம் ஞாயிறு போலும்
ஆயிரம் நீள்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

தெளிவுரை: *ஈசன், தாமரை போன்ற திருவடி யுடையவர்; பொன் போன்று ஒளிரும் தோளழகு உடையவர்; ஒளி திகழும் சிவந்த சடை முடியுடை யவர். அப்பெருமான், ஆயிரம் திருநாமங்களை உடையவராகி, ஆரூரில் வீற்றிருக்கும் அன்பிற்குரிய தலைவரே யாவார்.*

சிறப்புரை: *ஈசனுடைய திருநாமச் சிறப்பானது, "ஆயிரம் பேருகந்தானும்" என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், மாணிக்கவாசகர், "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என, அருளிச் செய்தமை காண்க. இறைவனின் திருநாமச் செம்மை யினை அருணகிரி நாதர், "நாதவிந்து கலாதீ நமோ நம! வேதமந்த்ர சொரூபா நமோ நம! ஞான பண்டித சுவாமி நமோ நம! வெகுகோடி நாம சம்பு குமாரா நமோ நம!" எனக் கோடிக் கணக்கான திருநாமங் களைச் சுட்டிய மாண்பினையும் நோக்குக.*

ஆயிரம் – பன்மை குறித்தது.

40. வீடரங் காநிறுப் பானும்
விசும்பினை வேதி தொடர
ஓடரங் காகவைத் தானும்
ஓங்கியொர் ஊழியுள் ளானும்

காடரங் காமகிழ்ந் தானும்
காரிகை யார்க்கள் மனத்துள்
ஆட்ரங் கத்திடை யானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

தெளிவுரை: சிவபெருமான், பக்குவப்பட்ட நல்ல ஆன்மாக்களுக்கு முத்திப் பேறு அளிப்பவர்; பிரமன் அன்னப் பறவையாக வடிவு கொண்டு வானில் தேடுமாறு செய்தவர்; பிரம கபாலம் ஏந்தி இருப்பவர்; ஊழிக்காலந் தோறும் நிலை பெற்றிருப்பவர்; மயானத்தை அரங்காகக் கொண்டு நடனம் புரிபவர்; தாருகவனத்தில் மேவும் மங்கையர்தம் உள்ளத்தைக் கவர்ந்தவர். அப்பெருமான், ஆரூரில் வீற்றிருக்கின்ற அன்பிற்குரிய தலைவரே யாவார்.

வேதி – பிரமன்.

41. பையம் சுடர்விடு நாகப்
பள்ளிகொள்வான் உள்ளத் தானும்
கையஞ்சு நான்குடை யானைக்
கால்விர லால்அடர்த் தானும்
பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப்
புகழ்புரிந் தார்க்கருள் செய்யும்
ஐயஞ்சின் அப்புறத் தானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவபெருமான், திருமாலின் உள்ளத்தில் விளங்குபவர்; இருபது கரம் உடைய இராவணனைத் திருப் பாத விரலால் அடர்த்தியவர்; பொய்யை விட்டு மெய்ந் நெறியைப் பேசும் அடியவர்களுக்கு அருள் புரிபவர். அப்பெருமான், இருபத்தைந்து தத்துவங்

களையும் கடந்து நிற்பவராகி, ஆரூரில் வீற்றிருக்கும் அன்புக்குரிய தலைவரே ஆவார்.

சிறப்புரை: திருமால் முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு அளித்து மகிழ்ந்த தியாகேசரின் தலப் பெருமையானது. "நாகப் பள்ளி கொள்வான் உள்ளத்தான்" என ஏத்தப் பெற்றது.

கை அஞ்சு நான்கு உடையான் – இருபது கரமுடைய இராவணன்; ஐயஞ்சின் – 5×5=25 தத்துவங்களை உணர்த்தியது.

5. திருவாரூர்

தல விளக்கம்: *பதிகம் எண் 4 காண்க.*

குறிப்பு: *இத்திருப்பதிகத்தில், திருப்பாடல்தோறும் பழமொழிக் குறிப்பு அமையப் பெற்ற தன்மையை யொட்டி பழமொழிப் பதிகம் எனவும் பெயர் பெறும்.*

பழமொழி

பண் : *காந்தாரம்*

திருச்சிற்றம்பலம்

42. மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொ ழாதே
உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி
உழிதந்தென் உள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலை குயில்கூவ
மயில்ஆலும் ஆரூ ரரைக்
கையினால் தொழாதுஒழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேனே.

தெளிவுரை: *நெஞ்சமே! திருவெண்ணீற்றைக் குழையப் பூசிய திருமேனியராகிய சிவபெருமானுடைய*

திருவடியைப் பணிந்து தொழாது, பிற நெறியில் சார்ந்தனையே! மலர்ச் சோலையில் குயில் கூவ, மயில் நடனம் புரியும் ஆரூரின் கண் மேவும் பெருமானைக் கைகூப்பித் தொழுது போற்றாது, நன்மை யெல்லாம் இழந்தனையே! கனியிருக்கக் காயைக் கவர்ந்த கள்வனைப் போல் ஆயினையே!

சிறப்புரை: இத்திருப்பாட்டானது, "கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" எனவரும் திருக்குறட் கருத்தை உடையது. இது, ஈசனின் திருவடியைத் தொழுதலாவது கனியென உணர்த்தி, அப்பெருமானைத் தியானித்து நெஞ்சில் இருத்திக் கொள்ளும் தன்மையைச் சுட்டியது. ஈசனையன்றிப் பிறவற்றில் மனத்தைச் செலுத்துவது காய்கவர்தலாயிற்று. கள்வன், மேலான பொருளைக் கவர்தலைச் செய்பவன். இக்கள்வன், அதனையும் செய்யவில்லை என்பது குறிப்பு.

43. என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்டு
என்னையோர் உருவம் ஆக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்டு
என்னுள்ளம் கோயில் ஆக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண்டு
அருள்செய்த ஆரூ ரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்
காக்கைப்பின் போன வாறே.

தெளிவுரை: இந்த உயிரானது, ஒரு தேகத்தைக் கொள்ளும் தன்மையில் எலும்பு, நரம்பு, தோல் முதலானவையால் உருவம் பெற்று, இந்த உலகில் நிலவு வதாயிற்று. பின்னர், இன்பத்தை நல்கி, வினை தீர்த்து, உள்ளமே கோயிலாக விளங்க வீற்றிருக்கின்ற ஆரூர்க் கடவுள், அன்பினைச் சொரிந்து ஆட்கொண்டவராய்

இருக்கின்றார். அப்பெருமானின் திருமுன்னர் வீற்றிருந்து ஏத்தும் செயலைப் புரியாது, நெஞ்சமே! பயனற்ற செயலிலும், துன்பத்தைத் தரும் நிலையிலும் இருக்கலாமா! இது முயல் விட்டுக் காக்கையைப் பின் தொடர்வதைப் போல் ஆகும் அல்லவா!

சிறப்புரை: முயல் நேர் வழியில் செல்லும் இயல் புடையது என்பதும் அவ்வழியில் செல்வது பயனைத் தரும் என்பதும் ஆகும். காக்கை, வானில் பறந்து செல்வதாலும் அந்த வழியில் பின் பற்றிச் செல்லுதல் பயனற்றதும் கடுமையுடையதும் ஆகும் என்பதும் உணர்த்துதல் ஆயிற்று.

கூழாட் கொண்டு – அன்பு சோரக் குழைத்தல்.

44. பெருகுவித்து என்பாவத்தைப் பண்டெலாம்
குண்டர்கள்தம் சொல்லே கேட்டு
உருகுவித்துஎன் உள்ளத்தின் உள்ளிருந்த
கள்ளத்தைத் தள்ளிப் போக்கி
அருகுவித்துப் பிணிகாட்டி ஆட்கொண்டு
பிணிதீர்த்த ஆரூரர்தம்
அருகிருக்கும் விதியின்றி அறம்இருக்க
மறம்விலைக்குக் கொண்ட வாறே.

தெளிவுரை: பாவம் பெருகச் சமண் சொற்களையே கேட்டு, என் உள்ளத்தில் இயல்பாக விளங்கும் சிவ உணர்வை ஒதுக்கித் தள்ளிய காலத்தில் ஈசன் எனக்குப் பிணி காட்டித் தீர்த்தருளியவர். அவர் ஆரூரில் மேவும் ஈசன். அத்தகைய பெருமானின் திருவடியை அடைந்து அறநெறியில் திகழ்வதற்கு மாறாக மறநெறியில் காலத்தைப் போக்கினேனே!

45. குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார்
நகைநாணாது உழிதர் வேனைப்
பண்டமாப் படுத்தென்னைப் பால்தலையில்
தெளித்துத்தன் பாதம்காட்டித்
தொண்டெலாம் இசைபாடத் தூமுறுவல்
அருள்செய்யும் ஆரூரரைப்
பண்டெலாம் அறியாதே பனிநீரால்
பாவைசெயப் பாவித் தேனே.

தெளிவுரை: முன்னர் நான் சமண நெறியில் இருந்தேன். என்னைப் பார்த்துப் பலரும் ஏளனமாக நகை செய்த காலத்தில், நாணம் கொள்ளாது திரிந்தேன். அத்தகைய என்னைப் பயனுள்ள பொருளாகச் செய்து, என் தலையில் பால் முதலியன கொண்டு தெளித்துத் தூய்மைப்படுத்தித் திருவடியைக் காட்டி அருள் புரிந்து, திருத்தொண்டர்களின் இசையில் நனைந்து மலர வைத்தவர், ஆரூரில் வீற்றிருக்கும் பெருமான். இத்தகைய அருள் சொரியும் அப் பெருமானுடைய பெருமையை அறியாது வீணாகக் காலத்தைப் போக்கினேனே! பனி நீரால் பதுமை செய்தால் எவ்வாறு தோற்றம் அமையாதோ, அவ்வாறு அறியாமையும் பயனற்ற தன்மையும் கொண்டு வீணுக்குத் திரிந்தேனே!

பால்தலையில் தெளித்தல் – தூய்மை செய்தல்; தீட்சை.

46. துன்னாகத் தேனாகித் துர்ச்சனவர்
சொற்கேட்டுத் துவர்வாய்க் கொண்டு
என்னாகத் திரிதந்து ஈங்கு இருகையேற்று
இடஉண்ட ஏழையே னான்
பொன்னாகத்து அடியேனைப் புகப்பெய்து
பொருட் படுத்த ஆரூரரை

என்னாகத் திருத்தாதே ஏதன்போர்க்கு
ஆதனாய் அகப்பட் டேனே.

தெளிவுரை: கொடிய நாகத்தைப் போன்று தீயவனாகித் தீய குணத்தவருடைய சொற்களை மதித்து என்னை இழிவாக்கித் திரிந்து இரு கையாலும் உணவை ஏற்று உண்டு காலத்தைப் போக்கிய அடியவனை, பொன் போன்ற மேனியுடையவனாக்கியவர் ஆரூர்க் கடவுள். அத்தகைய பரமனை நான் நெஞ்சத்தில் இருத்தி ஏத்தாது, இழிந்தவனாகக் காலத்தைக் கழித்தனனே! குற்றம் புரியும் ஒருவனுக்கு இழந்த தன்மை யுடையவன் அகப்பட்டதைப் போன்று நான் இழிந்தவனானேனே!

துன்னாகம் – தீய நாகம்; துர்ச்சனர் – தீயவர்; ஏதன் – குற்றம் உடையவன்; ஆதல் – இழிந்தவன், அறிவிலி, மூடன்.

47. பப்போதிப் பவணனாய்ப் பறித்த தொரு
தலையோடே திரிதர்வேனை
ஒப்போட ஓதவித்துஎன் உள்ளத்தின்
உள்ளிருந்துஅங்கு உறுதிகாட்டி
அப்போதைக்கு அப்போதும் அடியவர்கட்கு
ஆரமுதாம் ஆரூரரை
எப்போதும் நினையாதே இருட்டறையின்
மலடு கறந்து எய்த்த வாறே.

தெளிவுரை: பயனற்ற சொற்கள் பல கூறி சமண நெறியைச் சார்ந்து திரிந்த போது, தனது அடியவர்களுக்கு இணையாக மெய்ப் பொருளை ஓதுவித்து என் உள்ளத்தின் உள்நின்று சைவத்தின் உறுதியைக் காட்டி, எப்போதும் ஆரமுதமாய்த் திகழும் ஆரூரரை நினையாது யான் இருந்தனனே! இருட்டறையில் மலட்டுப் பசுவைக் கொண்டு கறந்ததைப் போன்று அறியாமையில் காலத்தைப் போக்கினேனே!

சிறப்புரை: மலட்டுப் பசு கறவாது என்பதும் இருட்டறையில் பொருள் துலங்காது இருத்தல் என்பதும் பிற சமயங்களில் மெய்ப் பொருளை அறிவதற்கு உபாயம் ஏதும் இல்லை என்பதனை உணர்த்தும். பல்லார் முனியப் பயனில சொல்லும் தன்மையைப் "பப்பு ஓதி" என உணர்த்தப் பெற்றது.

48. கதியொன்றும் அறியாதே கண்ணழலத்
தலைபறித்துக் கையில் உண்டு
பதியொன்று நெடுவீதிப் பலர்காம
நகை நாணாது உழிதர் வேற்கு
மதிதந்த ஆரூரில் வார்தேனை
வாய்மடுத்துப் பருகி உய்யும்
விதியின்றி மதியிலி யேன் விளக்கிருக்க
மின்மினித்தீக் காய்ந்த வாறே.

தெளிவுரை: நற்கதிக்குரிய பொருளை அறியாது பலரும் எள்ளி நகை செய்யுமாறு திரிந்தவனுக்குச் சிவஞானத் தின் மதியைத் தந்தருளியவர் ஆரூர் மேவும் தேன் போன்ற ஈசன். அப் பரமனின், திருவடித் தேனைத் திருநாமம் கொண்டு ஏத்தும் வாயிலாகப் பருகி உய்தி கொள்ளாது, யான் மதியற்று இருந்தேனே! தீக்காயும் நோக்கில் விளக்கினைத் தேராது, மின்மினிப் பூச்சியைக் கொண்டு முயன்ற தன்மையாய் ஆகி விட்டதே!

சிறப்புரை: மின்மினியின் ஒளியில் தீயைப் பெற முடியாதது போன்று பிறநெறியில் மெய்ப் பொருளை உணர முடியாது என்பது குறிப்பு.

49. பூவையாய்த் தலைபறித்துப் பொறியற்ற
சமண்நீசர் சொல்லே கேட்டுக்

காவிசேர் கண்மடவார்க் கண்டோடிக்
கதவடைக்கும் கள்வ னேன்றன்
ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை
ஆட்கொண்ட ஆரூ ரரைப்
பாவியேன் அறியாதே பாழூரிற்
பயிக்கம்புக்கு எய்த்த வாறே.

தெளிவுரை: *வளமற்ற புறச் சமயத்தவர் கூறுவனவற்றை மனத்தில் கொண்டு அவ்வழியில் சிக்குண்ட அடியவனை, இவன் உலகிடை இருந்தது போதும் எனக் கருதி ஆவியைச் செலவிடாது, காத்து என் அறியாமையைப் போக்கிக் குற்றத்தை நீக்கி ஆட் கொண்ட பெருமான், திருவாரூரில் வீற்றிருக்கும் ஈசன் ஆவார். இது காலம் வரை அப் பெருமானின் அருள் தன்மையை அறியாது நான் இருந்தேனே! பாழடைந்து நைந்து அழிந்துள்ள ஊரில் பிச்சை ஏற்கச் சென்று அலைந்து வருந்தியது போன்று என் நிலை ஆகியதே!*

சிறப்புரை: *பாழூரில் பிச்சை கொள்ள இயலாது என்ற அறிவு துலங்காமையும், அவ்வாறு செய்து வருந்திய நிலையும் பிற சமய நெறியில் இருந்த தன்மையை எண்ணி வருந்தியதாயிற்று.*

பூவை – வளமற்ற; பயிக்கம் – பிச்சை.

50. ஒட்டாத வாளவுணர் புரமூன்றும்
ஓரம்பின் வாயில்வீழக்
கட்டானைக் காமனையும் காலனையும்
கண்ணினொடு காலின்வீழ
அட்டானை ஆரூரில் அம்மானை
ஆர்வச்செற் றக்கு ரோதம்
தட்டானைச் சாராதே தவமிருக்க
அவம்செய்து தருக்கி னேனே.

தெளிவுரை: சிவபெருமான், பணிந்து சாராத அசுரர்களின் மூன்று புரங்களையும் ஓர் அம்பால் வீழுமாறு செய்தவர்; மன்மதனைத் திருவிழியாலும், காலனைத் திருப்பாதத்தாலும் மாயுமாறு செய்தவர்; திருவாரூரில் விளங்கும் அன்புக்குரிய தலைவர்; ஆசையின் வயத்தால் உண்டாகும் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் (பொறாமை) ஆகிய ஆறு குற்றங்களும் அடியவர்களுக்கு உண்டாகாதவாறு புரிபவர். அப்பெருமானைச் சார்ந்து உய்வு பெறாது தருக்கித் திரிந்தவனாய் நான் இருந்தேனே! இது, நன்மையைத் தரும் நிலையுடைய தவநெறியை விடுத்துப் பாவத்தை உண்டாக்கும் அவமாகிய தீமையைப் புரிந்தவாறு ஆயிற்று.

ஒட்டாத – அன்பற்ற; கட்டான் – வீரம் காட்டியவன்; அட்டான் – அழித்தவன்; தட்டான் – தட்டுப்படாத; அவம் – தீமை, குற்றம்.

51. மறுத்தானொர் வல்லரக்கன் ஈரைந்து
முடியினொடு தோளும் தாளும்
இறுத்தானை எழில்முளரித் தவிசின் மிசை
இருந்தான்றன் தலையில் ஒன்றை
அறுத்தானை ஆரூரில் அம்மானை
ஆலாலம் உண்டு கண்டம்
கறுத்தானைக் கருதாதே கரும்பிருக்க
இரும்புகடித்து எய்த்த வாறே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசனை வணங்கிச் செல்ல மறுத்துக் கயிலையைப் பெயர்க்கத் தொடங்கிய இராவணனுடைய பத்துத் தலைகளும், இருபது தோளும், தாளையும் நெரியுமாறு செய்தவர் சிவபெருமான். அவர், தாமரையின் மீது வீற்றிருக்கும் பிரமனின் ஐந்து

தலைகளில் ஒன்றைக் கொய்தவர்; ஆரூரில் மேவும் அன்புக்குரிய தலைவர்; ஆலகால விடத்தை உட்கொண்டு நீலகண்டனாக விளங்குபவர். கரும்பு போன்று இனியவராகத் திகழும் அப்பெருமானைக் கருதி இனிமை கொள்ளாது இரும்பைக் கடித்துத் துன்புற்றவாறு என்னைப் பாழாக்கிக் கொண்டேனே!

இது கரும்பிருக்க இரும்பு கடித்துத் துன்புறும் அறியாமையில் உழன்ற நெஞ்சினை இகழ்ந்து உரைத்தல் ஆயிற்று.

தாள் – தாடை கன்னம் ஆகியவற்றைக் குறித்தது;
கருதுதல் – தியானித்து ஏத்துதல்.

6. திருக்கழிப்பாலை

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம் 63இல், இது 4ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. வால்மீகி முனிவர் வழிபட்டது. மற்றும் இரண்டாம் திருமுறை பதிக எண் 157 காண்க.

சுவாமி : பால்வண்ணநாதர்

அம்பிகை : வேதநாயகி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : கொள்ளிடம்

பண் : காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

52. வனபவள வாய்திறந்து வானவர்க்கும்
தானவனே என்கின் றாளாற்
சினபவளத் திண்டோள்மேற் சேர்ந்திலங்கு
வெண்ணீற்றன் என்கின் றாளால்

அனபவள மேகலையொடு அப்பாலைக்
கப்பாலான் என்கின் றாளால்
கனபவளம் சிந்தும் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

தெளிவுரை: *திரட்சியான பவளம் விளங்குகின்ற கழிப் பாலையில் வீற்றிருக்கும் சிவபெருமானைக் கண்டுற்ற நங்கை ஒருத்தி, வனப்பு மிகுந்த தனது பவளவாய் திறந்து, தேவர்களுக்கு அருள் செய்யும் பெருமானே! எனவும், பவளம் போன்ற சிவந்த உறுதியான தோளின் மீது திருவெண்ணீறு அணிந்த பெருமானே! எனவும், அன்னம் போன்றவளாகிய பவளம் போன்ற மேகலை அணிந்த உமாதேவியோடு விளங்கி, யாவும் கடந்த பரம்பொருளாய் விளங்கும் நாதனே! எனவும் மொழிபவள் ஆயினளே.*

குறிப்பு: *இது, ஈசனைக் கண்ட நங்கை ஒருத்தியின் பக்தி வயப்பட்ட தன்மையை மற்றொருத்தியின் கூற்றாக இயம்புதல் ஆயிற்று.*

வனபவளவாய் – அழகிய பவள வாய்.

53. வண்டுலவு கொன்றை வளர்புன்
சடையானே என்கின் றாளால்
விண்டலர்ந்து நாறுவதொர் வெள்ளெருக்க
நாண்மலருண்டு என்கின் றாளால்
உண்டயலே தோன்றுவதொர் உத்தரியப்
பட்டுடையன் என்கின் றாளால்
கண்டயலே தோன்றும் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

தெளிவுரை: *நீர் முள்ளிச் செடிகள் விளங்கும் கழிப் பாலையில் வீற்றிருக்கும் சிவபெருமானைக் கண்டு தரிசித்த நங்கையொருத்தி, "வண்டு உலவும் கொன்றை*

மலர் தரித்த சடையுடைய நாதனே!'' எனவும், "வெள்ளெருக்க மாலை சூடிய ஈசனே!" எனவும், "பட்டாடையை மேலாடையாக உடைய பரமனே!" எனவும் மொழிதல் ஆயினள்.

கண்ட – கண்டல் – நீர்முள்ளி. நீரின் வளத்தை உணர்த்தியது. "கண்டல் முண்டல்கள் சூழ் கழிப்பாலை" என்பது சுந்தரர் திருவாக்கு திருநாட்டுத் தகை பாடல் 2; கழிப் பாலைச் சேர்வான் – சிவபெருமான்.

54. பிறந்திளைய திங்கள்எம் பெம்மான்
முடிமேலது என்கின் றாளால்
நிறங்கிளரும் குங்குமத்தின் மேனி
அவன்நிறமே என்கின் றாளால்
மறங்கிளர்வேற் கண்ணாள் மணிசேர்
மிடற்றவனே என்கின் றாளால்
கறங் கோத மல்கும் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

தெளிவுரை: ஒலித்து மேவும் கடலலையின் ஓதம் மல்கும் கழிப்பாலையில் வீற்றிருக்கும் சிவபெருமானைக் கண்டு தரிசித்த நங்கை யொருத்தி, இளமை திகழும் பிறைச் சந்திரனை, எம்பெருமான் திருமுடியின்மேல் தரித்து விளங்குபவர் என்கின்றாள்; அப் பெருமானுடைய வண்ணத் திருமேனியானது, குங்குமத்தின் நிறமே உடையது என்கின்றாள்; உமா தேவியை ஒத்த வண்ணம் உடைய நீலகண்டத்தை உடைய நாதன் என்கின்றாளே.

55. இரும்பார்ந்த சூலத்தன் ஏந்தியொர்
வெண்மழுவன் என்கின் றாளெல்
சுரும்பார் மலர்க் கொன்றைச் சுண்ணவெண்
ணீற்றவனே என்கின் றாளால்

பெரும்பாலன் ஆகியொர் பிஞ்ஞக
வேடத்தன் என்கின் றாளால்
கரும்பானல் பூக்கும் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

தெளிவுரை: *கருங்குவளை மலர் பூக்கும் கழிப்பாலை யில் மேவும் சிவபெருமானைக் கண்டு மகிழ்ந்த நங்கை யொருத்தி, இரும்பாலாகிய பெரிய, வல்லமையுடைய சூலத்தை ஏந்தியவராய், ஒளி திகழும் மழுப்படையை உடையவரே! என்கின்றாள்; வண்டுகள் பொருந்திய கொன்றை மலரைச் சூடியவர் திருவெண்ணீற்றினைத் திருமேனியில் குழையப் பூசி விளங்கும் பெருமானே! என்கின்றாள்; மனத்தைக் கொள்ளை கொள்ளும் வாலிபர் ஆகிச் சடை முடியை அழகுடன் விளங்கப் பெற்ற திருக்கோலத்தை உடையவரே! என்கின்றாளே.*

சிறப்புரை: *தாருக வனத்தில் ஈசன் கொண்ட திருக் கோலக் காட்சியானது பெரும்பாலன் என ஓதப் பெற்றது. இது, பால் போன்று இனிமை தரும் பண்பும் பெருமையைத் தோற்றுவிக்கும் அழகிய பாங்கும் உடைத்தாம்.*

கரும்பானல் – கருங்குவளை, மன்மதனின் பஞ்ச பாணத்தில் செலுத்தும் மலர்களில் ஒன்றாகும்.

56. பழியிலான் புகழுடையன் பால்நீற்றன்
ஆனேற்றன் என்கின் றாளால்
விழியுலாம் பெருந்தடங்கண் இரண்டல்ல
மூன்றுளவே என்கின் றாளால்
சுழியுலாம் வருகங்கை தோய்ந்த
சடையவனே என்கின் றாளால்
கழியுலாம் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

தெளிவுரை: உப்பங்கழி சூழ்ந்த கழிப்பாலையில் வீற்றிருக்கும் சிவபெருமானைக் கண்டு தரிசித்து நங்கை யொருத்தி, யாராலும் பழிக்கப்படாதவராகவும் புகழை யுடையவராகவும் பால் போன்ற வெண்மையான திருநீற்றை அணிந்து விளங்குபவராகவும், இடப வாகனத்தை உடையவராகவும் திகழ்பவர் ஈசனே! எனகின்றாள்; திருவிழியை இரண்டல்லாது மூன்று கொண்டுள்ளவர் அப்பெருமான், என்கின்றாள்; அவர் கங்கையைச் சடை முடியில் வைத்தவரே என்கின்றாள்.

57. பண்ணார்ந்த வீணை பயின்ற
விரலவனே என்கின் றாளால்
எண்ணார் புரமெரித்த எந்தை
பெருமானே என்கின் றாளால்
பண்ணார் முழவதிரப் பாடலொடு
ஆடலனே என்கின் றாளால்
கண்ணார் பூஞ்சோலைக் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

தெளிவுரை: கண்ணுக்கு இனிய மலர்களை நல்கும் சோலைகளை உடைய கழிப்பாலையில் மேவும் ஈசனைக் கண்டு தரிசித்த நங்கை யொருத்தி, பண்ணிசை விளக்கும் வீணையை இனிது மீட்டும் விரலை உடைய நாதனே! என்கின்றாள்; நல்லறத்தை எண்ணி நோக்காத அசுரர்களுடைய மூன்று புரங்களை எரித்த எந்தை பெருமானே! என்கின்றாள்; பண்ணின் இசைக்கு ஏற்பத் தாளப் பண், தண் முழவு அதிருமாறு பாடவும், ஆடவும் வல்ல நாதனே! என்கின்றாளே.

58. முதிரும் சடை முடிமேல் மூழ்கும்
இளநாகம் என்கின் றாளால்

அதுகண்டு அதன்அருகே தோன்றும்
இளமதியம் என்கின் றாளால்
சதுர்வெண் பளிக்குக் குழைகாதின்
மின்னிடு மேஎன்கின் றாளால்
கதிர்முத்தம் சிந்தும் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

தெளிவுரை: ஒளி திகழும் முத்துக்களைக் கொழித்து விளங்குகின்ற கழிப்பாலையில் வீற்றிருக்கும் ஈசனைக் கண்டு தரிசித்த நங்கையொருத்தி, முதிர்ந்த சடை முடியின் மீது இளமையான நாகத்தை அணிந்தவர் என்கின்றாள்; அத்தகைய நாகத்தைக் கண்டு அச்சம் தவிர்ந்து, அருகே இளைய பிறைச்சந்திரன் விளங்கிற்று என்கின்றாள்; மேன்மையுடையதும் வெண்ணிறமாய் ஒளிரக் கூடியதுமான பளிங்கு போன்ற குழையைக் காதில் மின்னுமாறு கொண்டு மேவும் இறைவனே, என்கின்றாளே.

சதுர் – மேன்மை.

59. ஓரோதம் ஓதி உலகம்
பலிதிரிவான் என்கின் றாளால்
நீரோதம் ஏற நிமிர்புன்
சடையானே என்கின் றாளால்
பாரோத மேனிப் பவளம்
அவன்நிறமே என்கின் றாளால்
காரோத மல்கும் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

தெளிவுரை: மேகம் போன்ற குளிர்ச்சி பொருந்திய கடலின் ஓதம் மல்கும் கழிப்பாலையில் வீற்றிருக்கும் ஈசனைத் தரிசித்து மகிழ்ந்த நங்கையொருத்தி, நன்கு ஓர்ந்து கொள்ளத்தகும் வேதத்தை ஓதி, உலகத்தில் பலி

கொள்ளும் பெருமானே! என்கின்றாள்; கங்கையைச் சடை முடியில் ஏற்ற நாதனே என்கின்றாள்; நீர் சூழ்ந்த இவ்வுலகில் பவளம் போன்ற வண்ணம் கொண்டு விளங்கும் இறைவனே! என்கின்றாளே.

ஓர் ஓதம் – ஓர்ந்து கொள்ளத்தகும் வேதம்; நீரோதம் – கங்கை.

60. வானுலாம் திங்கள் வளர்புன்
சடையானே என்கின் றாளால்
ஊனுலாம் வெண்தலைகொண்டு ஊரூர்
பலிதிரிவான் என்கின் றாளால்
தேனுலாம் கொன்றை திளைக்கும்
திருமார்பன் என்கின் றாளால்
கானுலாம் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

தெளிவுரை: *சோலைகள் விளங்கச் சூழ்ந்த கழிப்பாலையில் வீற்றிருக்கும் சிவபெருமானைக் கண்டு தரிசித்து மகிழ்ந்த நங்கை யொருத்தி, வானத்தில் மேவும் சந்திரனைச் சூடிய மென்மையான சடை முடியுடைய நாதனே! என்கின்றாள்; ஊன் உடைய மண்டை ஓட்டை ஏந்தி ஊர்கள்தோறும் திரிந்து பலி ஏற்ற ஈசனே! என்கின்றாள்; தேன் விளங்கும் கொன்றை மலர் தரித்து மேவும் திருமார்பனே! என்கின்றாளே.*

கான் – கடற்கரைச் சோலை.

61. அடர்ப்பரிய இராவணனை அருவரைக்கீழ்
அடர்த்தவனே என்கின் றாளால்
சுடர்ப்பெரிய திருமேனிச் சுண்ணவெண்
ணீற்றவனே என்கின் றாளால்
மடற்பெரிய ஆலின்கீழ் அறநால்வர்க்கு
அன்றுரைத்தான் என்கின் றாளால்

கடற்கருவி சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கடலில் இருந்து தோன்றும் பண்டங்கள் சூழ விளங்கும் கழிப்பாலையில் வீற்றிருக்கும் ஈசனைத் தரிசித்து மகிழ்ந்த நங்கையொருத்தி, வரபலத்தில் மேம்பட்டு வெல்லுதற்கு அரியவனாக விளங்கிய இராவணனை, அருவரையாகிய கயிலையின் கீழ் நெரியுமாறு செய்த நாதனே! என்கின்றாள்; நெருப்பின் சுடர் போன்ற பெருமைக்குரிய செந்திருமேனியின் மீது திருவெண்ணீற்றினை அணிந்த இறைவனே! என்கின்றாள்; அகன்ற இலைகலையுடைய பெரிய கல்லால மரத்தின் கீழ் வீற்றிருந்து சனகாதி முனிவர்களாகிய நால்வர்க்குச் சிவதருமத்தை உரைத்த பெருமானே! என்கின்றாளே.

7. திருக்கச்சியேகம்பம்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத்தலம் 32இல், இது முதலாவது திருத்தலம். மூவர் பெரு மக்கள் பாடல் பெற்றது. அம்பிகை, மணலால் சிவலிங்கம் செய்து வழிபடும் ஞான்று, வெள்ளப் பெருக் கெடுத்தலைக் கண்டு தழுவ, அருள் சுரந்த தலம். அன்னை காமாட்சி 32 அறங்களைப் புரிந்த தலம்.

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 133 காண்க.

கச்சி - ஊர்பெயர்; ஏகம்பம் - கோயிலின் பெயர்.

சுவாமி : ஏகாம்பரநாதர், திருவேகம்பர்

அம்பிகை : ஏலவார்குழலி, காமாட்சியம்மை

தல மரம் : *மா மரம்*

தீர்த்தம் : *சிவகங்கை*

பண் : *காந்தாரம்*

திருச்சிற்றம்பலம்

62. கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனல்ஏந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

தெளிவுரை: சிவபெருமான், வஞ்சனையுடைய கொடிய நெஞ்சம் உடையவர்களுக்கு அரியவர்; அத்தகைய வஞ்சனையைக் கொள்ளாத அன்பர்களின் உள்ளத்தில் மகிழ்ந்து குடிகொண்டு விளங்குபவர்; இடப வாகனத்தில் வீற்றிருப்பவர்; அரவமானது ஆடவும், சடை முடியானது பரந்து தாழவும், அழகிய கையினில் நெருப்பை ஏந்தி, நள்ளிருளில் நடனம் புரிபவர். அத்தகைய பெருமானை நான் என் மனத்தில் வைத்து ஏத்துகின்றேன். இது, கச்சித் திருவேகம்பரைச் சுட்டியது.

சிறப்புரை: சிவபெருமான், வஞ்சம் கொண்டு வாழும் நெஞ்சினர்க்கு அரியவராகவும், வன்மையான நெஞ்சம் இல்லாதவர்பால் மகிழ்ந்து விளங்கும் மாண்பினராகவும் இருத்தல், "வன்நெஞ்சர்க்கு அரியானைக் கரவார்பால் விரவாடும் பெருமானை" என ஓதப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "நெஞ்சில் வஞ்சம் கெடப் பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே! ஆரா அமுதே!" என உரைத்து அருளியதும் ஓர்க.

63. தேனோக்கும் கிளிமழலை உமைகேள்வன் செழும்பவளம்
தானோக்கும் திருமேனி தழலுருவாம் சங்கரனை
வானோக்கும் வளர்மதி சேர்சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

தெளிவுரை: சிவபெருமான், தேனின் இன்சுவையும் கிளியின் மழலை மொழியும் கொண்டு விளங்கும் உமாதேவியின் துணைவர்; செழுமையான திரட்சி யுடைய பவளம், வியந்து நோக்குமாறு மேவும் செந்தழல் வண்ணத் திருமேனியுடையவர்; சங்கரன் என்னும் திருநாமம் கொண்டவராகி, மன்னுயிர் களுக்கு இன்பத்தைப் புரிபவர்; வானில் திகழும் வளர் பிறைச் சந்திரனைச் சடை முடியின் மீது சூடி விளங்குபவர்; தேவர்களுக்கும் மற்றும் ஏனையவர் களுக்கும் தலைவர். அப்பெருமானை என் மனத்தில் இருத்தி வைத்து ஏத்தினேன்.

சிறப்புரை: கிளியானது ஐந்தறிவு கொண்டு மேவும் சிவனாயினும், ஆறறிவு கொண்டு மேவும் மக்கட் பிறவி போன்று உயர்ந்த சொற்களைப் பயின்று விளங்கு தலைத் தேநோக்கும் எனச் சுட்டப் பெறுதல் ஆயிற்று. இது மழலைச் சொல்லின் இனிமையை உணர்த்தும் தன்மையில் தேன் நோக்கும் கிளி என்பதும் ஆகும்.

உயர்ந்த நிலையுடைய வானவர்கள் ஏத்துதலானது மாணிக்கவாசகர் அருளிச் செய்தவாறு, "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால் தாழ்த்துவதும் தாம் உயர்ந்து தம்மை எல்லாம் தொடி வேண்டி" எனும் மாண்பாதல் காண்க. மாந்தர்கள் ஈசனை வணங்கி நற்கதியடையு மாறு ஏத்துதல், "ஏனோர்க்கும் பெருமானை" என உரைத்தருளப் பெற்றது. இத்தன்மையில், "எமக்கும்

ஏனோர்க்கும் தம் கோனைப் பாடேலோர் எம்பாவாய்'' என்னும் திருவெம்பாவை அமுத வாக்கும் காண்க.

உமாதேவியின் துணைவனாய் விளங்கும் ஈசனின் பெருமையானது, "உமை கேள்வன்'' என உணர்த்தப் பெற்றது. இந்நெறியில், ஈசனின் இனிய நெருக்கத்தினை, "என்னுடை ஆரமுது, எங்கள் அப்பன், எம்பெருமான், இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன், தமையன், எம் ஐயன்'' (திருப்பொற் சுண்ணம் பாடல் 13) என வரும் திருவாதவூரர் அமுத மொழியாலும் காண்க.

64. கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத்தொழ நின்ற முதலவனை
*அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடகத்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

தெளிவுரை: சிவபெருமான், தேவர்களால் கைதொழுது மலர் தூவி விருப்பத்துடன் ஏத்தப் பெறுபவர்; மேலும் அவர்களால், மூன்று காலங்களிலும் வணங்கப்படும் முதன்மையுடையவர். அப்பெருமானை, அவ்வப் போது மலரும் பூக்களைக் கொண்டு அருச்சித்து, ஐம்புலன் வழியாகச் செல்லும் விருப்பங்களைக் கட்டுப்படுத்தி, என்னுடைய மனத்தில் வைத்து ஏத்தினேன். அக்கடவுள், எனக்கு எப்போதும் இனிமை யானவர்.

சிறப்புரை: ஈசனை, மலர் தூவிப் போற்றி வணங்குதலை இத்திருப்பாட்டு நுதலிற்று. இத்தன்மையில், திருஞான சம்பந்தர், "பூவார் மலர் கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்'' (முதல்

திருமுறை பதிகம் எண் 69 திருவண்ணாமலை பாடல் வ.எண் 743) அருளிச் செய்தமையும் காண்க. இந்நெறியில், "தொழுத கை துன்பம் துடைப்பாய் போற்றி" என அருளிச் செய்த மணிவாசகர் அமுத மொழியும் நோக்குக.

•அப்போடு என்பதும் பாடம். இது நீர் கொண்டு பூசித்து ஏத்தி எனப் பொருளாம்.

65. அண்டமாய் ஆதியாய் அருமறையொடு ஐம்பூதப்
பிண்டமாய் உலகுக்கோர் பெய்பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர்தா மலர்தூவிச் சொல்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை என்மனத்தே வைத்தேனே.

தெளிவுரை: சிவபெருமான், அண்டமாகவும், ஆதிப் பரம்பொருளாகவும், வேதங்களாகவும், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதப் பொருள்களாகவும் விளங்கி உலகத்திற்கு யாவும் நல்குகின்ற ஒண் பொருளாக விளங்கும் பிஞ்ஞகர். அப்பெருமானைத் தொண்டர்கள் மலர் தூவிப் போற்றிப் புகழ்ப் பாடல்களைக் கூறி ஏத்துகின்றனர். அவர், இண்டை மாலை தரித்து மேவும் சடை முடியுடையவர். அத்தகைய ஈசனை என் மனத்தில் வைத்து ஏத்தினேன். திருவேகம்பரை மனத்தில் வைத்த பாங்கினை இது உணர்த்துவதாயிற்று.

சிறப்புரை: ஈசன், அண்டமாய் விளங்குகின்ற சிறப்பினை, இத்திருப்பாட்டு ஓதுதலாயிற்று. இத்தன்மையில், சுந்தரமூர்த்தி சுவாமிகள், "அண்டா நின்னை யல்லால் இனி யாரை நினைக் கேனே" என அருளிச் செய்தமையும் நோக்குக.

ஈசனின் அட்ட மூர்த்தங்களுள் ஐம்பூதங்கள் இத்திருப்பாட்டில் ஓதப் பெற்றது. ஏனையவை: சூரியன், சந்திரன், உயிர் என்பன.

ஈசனைப் போற்றி உரைக்கும் புகழ்ப் பாடல்கள், ''சொல் மாலை புனைதல்'' எனச் சிறப்பித்து ஓதுதலாயிற்று. இது, ஈசனின் அருள் வயத்தராகிய அடியவர் பெருமக்கள் ஏத்தும் புகழ்ப் பாடல்களை உணர்த்தியதாயிற்று. இத்தன்மையில், சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப் பானை'' என அருளிச் செய்தமை காண்க. மற்றும், மாணிக்கவாசகர், "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை" என அருளிச் செய்தமையும் நோக்குக.

பெய் – அருள். பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க. திருவாசகம்; பிஞ்ஞகன் – அழகிய சடை முடியுடைய ஈசன்; இண்டை – பல வண்ண மலர்களைச் சேர்த்து முடியில் இணைத்துக் கட்டிய பாங்கினை உணர்த்தியது; தொண்டர்தா மலர் தூவி – தொண்டர் தாம் மலர்தூவி, அலர் தூவி; அலர் – மலர்.

66. ஆறேறு சடையானை ஆயிரம்பேர் அம்மானைப்
பாறேறு படுதலையிற் பலிகொள்ளும் பரம்பரனை
நீறேறு திருமேனி நின்மலனை நெடுந்தூவி
ஏறேறும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

தெளிவுரை: சிவபெருமான், கங்கையைச் சடை முடியில் ஏற்றுத் தோயப் பெற்றவர்; ஆயிரம் திருநாமங்களையுடைய அன்புக்குரியவர்; பிரமகபாலத்தை ஏந்திப் பலிகொள்பவர்; மேலான பரம் பொருளாய் விளங்குபவர்; திருமேனியில் திருவெண்ணீறு தரித்தவர்; மன்னுயிரின் மும்மல உபாதையை

நீக்குபவராய் விளங்கித் தான் எம்மலமும் இல்லாதவர்; இடப வாகனத்தில் வீற்றிருப்பவர். அப் பெருமானை என்னுடைய மனத்தில் வைத்து ஏத்துகின்றேன். இது, திருவேகம்ப நாதரை மனத்தில் பதித்த பாங்கினை உணர்த்துதலாயிற்று.

பாறேறுபடுதலை – பிரம கபாலம்; நெடுந்தூவி – இடபத்தின் நீண்ட வாலைக் குறித்தது.

67. தேசனைத் தேசங்கள் தொழநின்ற திருமாலால்
பூசனைப் பூசனைகள் உகப்பானைப் பூவின்கண்
வாசனை மலைநிலம்நீர் தீவளிஆ காசமாம்
ஈசனை எம்மானை என்மனத்தே வைத்தேனே.

தெளிவுரை: சிவபெருமான், ஒளிமயமானவர்; உலகத்தாரால் தொழுது போற்றப்படும் திருமாலால் பூசிக்கப் படுபவர்; உயிர்கள் தன்னைப் பூசித்து வணங்கும் பெற்றியை உகப்பவர்; பூவின் நறுமணமாக விளங்கு பவர்; மலைகளின் சிறப்புடைய நிலம் மற்றும் நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களாகத் திகழ்பவர். அத்தகைய ஈசன் என் அன்புக்குரிய தலைவர். அப்பெருமானை என் மனத்தில் வைத்து ஏத்தினேன். இது திருவேகம்ப நாதனைத் தன் நெஞ்சின் கண் பதித்த பாங்கினை உணர்த்தியதாம்.

சிறப்புரை: ஈசன், ஒளிமயமாக விளங்கி மேவுதல், "தேசன்" என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில் "தேசனே தேனார் அமுதே சிவபுரனே" எனவும், "தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள் ஈசனார்க்கு அன்பார் யாம்" எனவும் மாணிக்கவாசகர் அருளிச் செய்த வண்ணமும் நோக்குக.

திருமால் உலகத்தைக் காத்தல் செய்யும் கர்த்தா என்பதும், திருவுடை மன்னரைக் காணின்

திருமாலைக் கண்ட தன்மையை உணர்த்தும் பாங்கும் தோன்ற, "தேசங்கள் தொழ நின்ற திருமால்" என உணர்த்தப் பெற்றது.

வளி – காற்று.

68. நல்லானை நல்லான நான்மறையோடு ஆறங்கம்
வல்லானை வல்லார்கண் மனத்துறையும் மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத்
துகளேதும்
இல்லானை எம்மானை என்மனத்தே வைத்தேனே.

தெளிவுரை: சிவபெருமான், யாவர்க்கும் நலம் செய்பவர்; நன்மை விளங்கும் நான்மறையும் ஆறு அங்கமும் ஆனவர்; யாவும் வல்லவர்; ஞான வயத்தராய் விளங்குபவரின் மனத்தில் உறைபவர்; சொல்லப் பெறும் ஒலியாகத் திகழ்பவர்; சொல்லின் பொருளாக விளங்குபவர்; மாசு நீங்கிய மாண்புடையவர். அன்பிற்குரிய அப்பெருமான், எம் தலைவர் ஆவார். அவரை என் மனத்தில் வைத்து ஏத்தினேன்.

சிறப்புரை: ஈசனை, நலம் செய்வர் என்னும் பெருமை தோன்ற "நல்லானை" என ஏத்தப் பெற்றது. இந்நெறியில் அருட் பிரகாச வள்ளல் இராமலிங்க சுவாமிகள், "நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம் கொடுக்கும் நலமே!" என அருளிச் செய்தமையும் காண்க.

துகள் – மாசு, சிறுமை.

69. விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்
புரித்தானைப் பதம்சந்திப் பொருளுருவாம்
புண்ணியனைத்

தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேல் மதில்மூன்றும்
எரித்தானை எம்மானை என்மனத்தே வைத்தேனே.

தெளிவுரை: *ஈசன், சனகாதி முனிவர்கள் நால்வருக்கு அறப் பொருள் உணர்த்தியவர்; வேதங்கள் நான்கினையும் தோற்றுவித்தவர்; அவ்வேதங்களின் பொருளாகவும் விளங்குபவர்; புண்ணியமாக விளங்குபவர்; கங்கையைச் சடை முடியில் தரித்தவர். அசுரர்களின் மூன்று புரங்களையும் எரித்தவர். என் அன்பிற்குரிய அப்பெருமானை என் மனத்தில் வைத்து ஏத்தினேன்.*

சிறப்புரை: *ஈசன், புண்ணிய மூர்த்தமாக விளங்கும் பெற்றி, "புண்ணியன்" என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் அருட் பிரகாச வள்ளலார், "பொது நடத்தரசே புண்ணியனே! புலவரெல்லாம் புகழ்க் கண்ணியனே!" எனவும்; மாணிக்கவாசகர், "போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே!" எனவும் அருளிச் செய்தமையும் காண்க.*

70. ஆகம்பத் தரவணையான் அயன்அறிதற்கு அரியானைப்
பாகம்பெண் ஆண்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோதும் இறையானை மதிற்கச்சி
ஏகம்ப மேயானை என்மனத்தே வைத்தேனே.

தெளிவுரை: *பத்து அவதாரங்களை உடைய திருமாலும், மற்றும் பிரமனும் காணுதற்கு அரியவராகிய சிவபெருமான் ஒரு பாகம் பெண்ணாகவும், இன்னொரு பாகம் ஆணாகவும் மேவும் உயிர்களுக் கெல்லாம் தலைவர். பெருமையுடைய வேதங்களை விரித்து ஓதும் அப் பெருமான், நெடிய மதில் களையுடைய கச்சி ஏகம்பத்தில் வீற்றிருப்பவர். அவரை என் மனத்தில் வைத்து ஏத்தினேன்.*

ஆகம் பத்து – தசாவதாரம். உடல் பத்து.

71. அடுத்தானை உரித்தானை அருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை என்மனத்தே வைத்தேனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவபெருமான், தன்னை அடுத்துப் பாய்ந்த யானையின் தோலை உரித்தவர்; அருச்சுனனுக்குப் பாசுபதம் என்னும் அத்திரத்தை அருளிச் செய்தவர்; மேரு மலையை வில்லாகக் கொண்டு கூர்மையான அம்பு ஒன்று தொடுத்து முப்புரங்களை எரித்தவர்; சுனைகள் பெருகும் திருக்கயிலை மலையை எடுத்த இராவணனைத் தடுத்துத் தனது திருப்பாத விரலால் நெரித்தவர் ஈசன். அப் பெருமானை என் மனத்தில் வைத்து ஏத்தினேன்.

சிறப்புரை: ஈசன் முப்புரத்தை ஓரம்பினால் எரித்த செயலானது இத்தலத்தில் மேவும் திருவேகம்பப் பெருமானின் அருட் செயலாகச் சொல்லப்பட்ட தன்மையினை, மாணிக்கவாசகர்,

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தம்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற

என அருளிச் செய்த அமுதமொழியாலும் நோக்குக.

அடுத்தானை – அடுத்த யானை.

8. பொது

பதிகக் குறிப்பு: சிவனெனும் ஓசை.

பண் : பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

72. சிவனெனும் ஓசையல்லது அறையோ உலகில்
திருநின்ற செம்மை யுளதே
அவனுமோர் ஐயம்உண்ணி அதளாடையாவது
அதன் மேலொர் ஆடல்அரவம்
கவணள வுள்ளஉண்கு கரிகாடு கோயில்
கலனாவ தோடு கருதில்
அவனது பெற்றி கண்டும் அவன்நீர்மைகண்டும்
அகநேர்வர் தேவர் அவரே.

தெளிவுரை: சிவசிவ என்று அரனுடைய திருநாமத்தைச் சொல்லுவதையும் அதனைச் செவி குளிரக் கேட்பதை யும் விடத் திருவேறு நின்ற செம்மையுடைய பேறு உலகில் வேறு உள்ளதோ! அத்திருச் சொல்லுக்கு உரிய சிவபெருமான், பிச்சை ஏற்று உணவினைக் கொண்டும், தோலாடையை உடுத்தியும், அதன் மீது, ஆடுகின்ற அரவத்தைக் கட்டியும் விளங்குபவர். ஒரு கவணளவு உணவு கொள்வதையும் சுடுகாட்டைக் கோயிலாகவும், கபாலத்தைப் பிச்சைப் பாத்திர மாகவும் கொண்டு மேவும் அப்பெருமானுடைய பெற்றியையும் இனிமையையும் நோக்கித் தேவர்கள் எல்லாரும் மனத்தில் ஏத்திப் போற்றுகின்றனர்.

சிறப்புரை: சிவநாமத்தின் ஓசையானது இவண் போற்றப் பட்டது. அவ் ஓசை யல்லது பிறவற்றைக் கூறுதல் ஒல்லாது என்னும் திருவாக்கானது, திரு நின்ற செம்மை என, நன்கு ஓதுதலாயிற்று. இந்நியதியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "திரு நின்ற செம்மையே செம்மையாக கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்'' எனப் புகன்றருளிய மாண்பும் நோக்குக. சிவன் எனும் ஓசையின்

சிறப்பினைச் "சிவசிவ என்கிலர் தீவினையாளர், சிவசிவ என்றிடத் தீவினைமாளும், சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர், சிவசிவ என்னச் சிவகதி தானே" (திருமந்திரம்–2716) என்னும் திருமூல நாயனாரின் திருவாக்கும் இத்தன்மைத்தாம. இந்நெறியினில்,

அரகர என்ன அரிய தொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே

(திருமந்திரம் 916) எனவரும் அருள் பாடலையும் ஓர்க.

73. விரிகதிர் ஞாயிறுஅல்லர் மதியல்லர்வேத
விதியல்லர் விண்ணும் நிலனும்
திரிதரு வாயுஅல்லர் செறுதீயும் அல்லர்
தெளிநீரும் அல்லர் தெரியில்
அரிதரு கண்ணியாளை ஒருபாக மாக
அருள்கார ணத்தில் வருவார்
எரியரவுஆர மார்பர் இமையாரும் அல்லர்
இமைப்பாரும் அல்லர் இவரே.

தெளிவுரை: ஈசன், ஞாயிறு, சந்திரன், வேதம், ஆகாயம், நிலம், காற்று, நெருப்பு, நீர் எனப்படும் பொருள் வளமான அட்ட மூர்த்தமாக விளங்குபவராயினும் அவையே ஆயினர் எனப் புகழப்படுபவர் அல்லர். உமாதேவியாரை உடனாகக் கொண்டு, அடியவர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு வரும் அப்பெருமான், அரவத்தைத் திருமார்பில் ஆரமாகக் கொண்டு விளங்குபவர். அவர், இமைத்தல் செய்யாத தேவரும் அல்லர்; இமைக்கும் எழிலுடைய மண்ணுலகத்தவரும் அல்லர்.

சிறப்புரை: இது, ஈசன் யாவுமாயும், அல்லையுமாயும் ஒருவனாய் எல்லாமாயும் விளங்கி எத்தன்மையாலும் பற்றப்படாதவராய் விளங்கும் தன்மையை ஓதுதல் ஆயிற்று. இத்தன்மையில், "யாவையுமாம் அல்லையு மாம் சோதியனே, துன்னிருளே! தோன்றா பெருமை யனே!" என அருளிச் செய்துள்ள மாணிக்கவாசகர் தம் திருவாக்கும் காண்க.

74. தேய்பொடி வெள்ளைபூசி அதன்மேலொர் திங்கள்
திலகம் பதித்த நுதலர்
காய்கதிர் வேலை நீல ஒளிமா மிடற்றர்
கரிகாடர் காலொர் கழலர்
வேய்உடனாடு தோளிஅவள் விம்மவெய்ய
மழுவீசி வேழ உரிபோர்த்
தேயிவர்ஆடு மாறும்இவள் காணுமாறும்
இதுதான் இவர்க்கொர் இயல்பே.

தெளிவுரை: ஈசன், திருவெண்ணீற்றைக் குழையப் பூசி விளங்குபவர்; சந்திரனைத் தரித்த நெற்றி உடையவர்; சூரியனின் வெங்கதிர் மேவும் கடலின் நீல வண்ணம் போன்ற கண்டத்தை உடையவர்; மயானத்தில் நின்று நடனம் ஆடுபவர்; வீரக்கழல் அணிந்தவர். அப் பெருமான், மூங்கிலைப் போன்ற தோளுடைய உமாதேவி, உடன் நடனம் ஆடி மகிழ, மழு ஆயுதத்தை வீசி, யானையின் தோலைப் போர்த்தி ஆடுகின்றவ ராயும், அதனைத் தேவி காணுமாறும் உடையவர். இத்தன்மையே இவ் இறைவனுக்கு உரிய அருள் தன்மை ஆயிற்று.

சிறப்புரை: ஈசனின் திருநடனச் சிறப்பானது, "கரிகாடர்" எனவும், "இவர் ஆடுமாறும், இவள் காணு மாறும்" எனவும் ஏத்தப் பெற்றது. இது, ஈசனின்

திருநடனத்தைக் கண்டு தேவி மகிழும் பெற்றி யினையும் உரைத்தருளியவாறு ஆயிற்று. ஈசன் திருநடனம் புரிந்து உலகினை இயக்குதலையும் மன்னுயிர்களை மகிழ்வித்தலையும் உணர்த்துதலாகும். இத்தன்மையினில், மனவாசகம் கடந்தார் அருளிச் செய்த உண்மை விளக்கத்தில்,

> தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
> சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமற
> ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தமுத்தி
> நான்ற மலர்ப்பதத்தை நாடு

— பாடல் எண் 36

என அருளிச் செய்த மாண்பும் நோக்குக. இத்திருப்பாட்டு, ஈசன் ஐந்தொழில் ஆற்றும் அருளிச் செயலை ஓதுதலாயிற்று.

தேய்பொடி வெள்ளை – திருவெண்ணீறு; வேய் – மூங்கில்.

75. வளர்பொறி ஆமைபுல்கி வளர்கோதை வைகி
வடிதோலும் நூலும் வளவக்
கிளர்பொறி நாகம்ஒன்று மிளிர்கின்ற மார்பர்
கிளர்காடு நாடு மகிழ்வர்
நளிர்பொறி மஞ்ஞையன்ன தளிர்போன்றுசாயல்
அவள்தோன்று வாய்மை பெருகிக்
குளிர்பொறி வண்டுபாடு குழலாள்ஒருத்தி
உளள்போல் குலாவி யுடனே.

தெளிவுரை: ஈசன், ஆமை ஓட்டினை அணிபவர்; பெருகி வளரும் கங்கையை உடையவர்; அழகிய தோலை உடுத்தியவர்; முப்புர நூல் அணிந்த திருமார் பினர்; மயானத்தில் கிளர்ந்து நடனம் புரிபவர்; மக்கள் நிலவும் நாட்டில் நனி விளங்குபவர். அப்பெருமான், மயில் போன்ற சாயலை யுடையவளும், வண்டு

இசைக்கும் கூந்தலை உடையவளும் ஆகிய உமாதேவியை எக்காலத்திலும் உடன் கொண்டு மேவும் அம்மை அப்பராகி மகிழ்ந்து இருப்பவரே ஆவார்.

76. உறைவது காடுபோலும் உரிதோல் உடுப்பர்
விடையூர்வது ஓடு கலனா
இறைஇவர் வாழும் வண்ணம் இதுவேலும்ஈசர்
ஒருபால் இசைந்தது ஒருபால்
பிறைநுதல் பேதைமாசர் உமைஎன்னு நங்கை
பிறழ்பாட நின்று பிணைவான்
அறைகழல் வண்டுபாடும் அடிநீழல் ஆணை
கடவா தமரர் உலகே.

தெளிவுரை: ஈசன், உறைவது மயானம் போலும்; அவர், தோலை உடுத்தியவர்; இடப வாகனம் உடையவர்; பிச்சை எடுக்கும் கலனாக பிரம கபாலத்தைக் கொண்டிருப்பவர். இத்தகைய வண்ணத் திருக்கோலத் தையுடைய சிவபெருமான், உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர். அப்பெருமாட்டி, பாடல் இசைக்கத் தனது திருக்கழல் ஒலிக்க நடனம் புரியும் அப்பெருமானுடைய திருவடி நிழலைத் தேவர்கள் கனிந்து வணங்குவார்கள்.

77. கணிவளவ் வேங்கையோடு கடிதிங்கள் கண்ணி
கழல்கால் சிலம்ப அழகார்
அணிகிளர் ஆரவெள்ளை தவழ்சுண்ண வண்ண
வியலார் ஒருவர் இருவர்
மணிகிளர் மஞ்ஞை ஆல மழையாடு சோலை
மலையான் மகட்கும் இறைவர்
அணிகிளர் அன்ன வண்ணம் அவள்வண்ண வண்ணம்
அவர்வண்ண வண்ணம் அழலே.

தெளிவுரை: ஈசன், புலித் தோலை உடையாகக் கொண்டவர்; சந்திரனைத் தரித்தவர்; காலில் வீரக் கழல் அணிந்தவர்; அழகிய வெண்மை நிறம் கொண்ட, அரவம், எருக்கம் பூ ஆகியவற்றை ஆரமாகக் கொண்டவர். ஒப்பற்ற ஒருவராகிய அப்பெருமான், அம்மையப்பராகிய இருவர் எனத் திகழ்பவர். நவ மணிகள் விளங்கவும், மயில் நடனம் ஆடவும், மேகம் சூழ்ந்த சோலை விளங்கும் இமய மலைக்கு மன்னனின் மகளாகிய உமையவளின் தலைவர், சிவபெருமான். அப்பெருமாட்டி, எழில் அன்ன வண்ணம் கொண்டு திகழ, அப்பெருமானின் திருவண்ணமாவது தீ வண்ணமே.

வெள்ளை – ஈசனின் ஆரத்தைக் குறித்தது. வெள்ளெருக்கு அட்ட மலரில் ஒன்றாதல் காண்க. மழை – மேகம்; அழல் – நெருப்பு, தீ.

78. நகைவளர் கொன்றை துன்று நகுவெண்தலையர்
நளிர்கங்கை தங்கு முடியர்
மிகைவளர் வேதகீதம் முறையோடும் வல்ல
கறைகொள் மணி செய்மிடறர்
மிகைவளர் கோதை மாதர் முனிபாடு மாறும்
எரியாடுமாறும் இவர்கைப்
பகைவளர் நாகம் வீசி மதியங்குமாறும்
இதுபோலும் ஈசர் இயல்பே.

தெளிவுரை: ஈசன், ஒளிமிக்க கொன்றை மலரைத் தரித்தவர்; மண்டை ஓட்டை மாலையாக உடையவர்; கங்கை சடை முடியில் தோயப் பெற்று விளங்குபவர்; வேதங்களை இசைத்து ஓதுபவர்; நீலமணி போன்ற கண்டத்தை உடையவர். அப்பெருமான், உமாதேவியார் துடிப்புடன் நன்கு பாட, நெருப்பினைக் கையில் ஏந்தி நாகமும் ஆடுமாறு வீசி, அதுவும் ஆடுமாறு நடனம் புரியும் இயல்பு உடையவர்.

நகை – ஒளி விளக்கம், பிரணவ புட்பமாகிய கொன்றை மலரைச் சுட்டியது; நகுவெண்தலை – மண்டையோடு; மிகைவளர் கோதை – உமையவள்.

79. ஒளிவளர் கங்கைதங்கும் ஒளிமால்அயன்றன்
உடல்வெந்து வீய சுடர்நீறு
அணிகிளர் ஆரவெள்ளை தவழ்சுண்ணவண்ணர்
தமியார் ஒருவர் இருவர்
களிகிளர் வேடம்உண்டொர் கடமாஉரித்த
உடைதோல் தொடுத்த கலனார்
அணிகிளர் அன்னதொல்லை அவள்பாகமாக
எழில்வேதம் ஓதும் அவரே.

தெளிவுரை: ஒளி திகழ மேவும் கங்கை தரித்த செவ்வொளி படரும் சடை முடியுடைய சிவபெருமான், ஒளியின் மேம்படும் திருவெண்ணீற்றினை அணிபவர்; தமியராய் ஒப்பற்றவராகவும், அம்மை அப்பராய் இருவராகவும் விளங்குபவர்; தாருக வனத்தில் வதியும் மகளிர்தம் மனைதொறும் சென்று பலி ஏற்பவராய்ப் பிட்சாடணமூர்த்தியாய்த் திரிந்தவர்; யானையின் தோலை உரித்து அதனைப் போர்வையாகக் கொண்டவர்; புலித் தோலை ஆடையாக உடுத்தியவர்; தொன்மையாய் மேவும் உமா தேவியைப் பாகமாகக் கொண்டு விளங்குபவர். அப்பெருமான், எழில் சேர்க்கும் வேதத்தை விரித்து ஓதுபவரே ஆவார்.

கடமா – யானை.

80. மலைமட மங்கையோடும் வடகங்கை நங்கை
மணவாளராகி மகிழ்வர்
தலைகல னாகஉண்டு தனியே திரிந்து
தவவாணர் ஆகி முயல்வர்

விலையிலி சாந்தம் என்று வெறிநீறுபூசி
விளையாடும் வேட விகிர்தர்
அலைகடல் வெள்ளமுற்றும் அலறக்கடைந்த
அழல்நஞ்சம் உண்ட அவரே.

தெளிவுரை: சிவபெருமான், மலைமகளாகிய உமா தேவியையும், அலை மகளாகிய கங்காதேவியையும் ஏற்று, அவர்களுக்கு மணவாளராகி மகிழ்பவர்; பிரமனுடைய தலையைப் பலியேற்கும் பாத்திரமாகக் கொண்டு, தனியே உணவு ஏற்றுத் திரிந்தவர்; தவவேந்தராய் விளங்கியவர்; பெருமை நிறைந்த மணம் தரும் திருநீறு பூசும் திருவண்ணம் உடையவர்; வேடுவராகச் சென்று அருச்சுனரிடம் திருவிளையாடல் புரிந்தவர். அப்பெருமான், பாற்கடலைக் கடைந்த போது தோன்றிய கொடிய நஞ்சினை உட்கொண்டவரே ஆவார்.

விலையிலி – பெருமை மிகுந்த; அழல் நஞ்சம் – கொடிய நஞ்சு

81. புதுவிரி பொன்செய் ஓலை ஒருகாதொர் காது
சுரிசங்க நின்று புரள
விதிவிதி வேதகீதம் ஒருபாடு மோதம்
ஒருபாடு மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றை துன்று சடைபாகமாதர்
குழல்பாக மாக வருவர்
இதுஇவர் வண்ண வண்ணம் இவள்வண்ண வண்ணம்
எழில்வண்ண வண்ணம் இயல்பே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், ஒளிதிகழும் தோடு ஒரு காதிலும், குழை ஒரு காதிலும் விளங்க மேவுபவர்; விதிக்கப் பெறும் வேதங்களைக் கீதமாக இசைத்து மெல்ல ஓதுகின்ற தன்மையில் அத்தோடுகளைப்

பெற்றுள்ளவர்; கொன்றை மாலை தரித்தவர்; சடை முடியின் ஒரு மாதாகிய கங்கையும், திருமேனியில் ஒரு மாதாகிய உமாதேவியையும் உடையவர். இத் தன்மையில் அம்மை அப்பராயும் அர்த்தநாரியாயும் உடைய ஈசனின் எழில் வண்ணமானது திகழும் இயல்பாயிற்று.

சிறப்புரை: இரு கந்தருவர்களைக் காதில் அணிந்து விளங்கி வேத கீதத்தை இனிது ஏற்கும் ஈசனின் அருளிச் செயலானது, இத்திருப்பாட்டில் ஓதப் பெற்றது.

9. பொது

திருஅங்க மாலை

பண் : *சாதாரி*

திருச்சிற்றம்பலம்

82. தலையே நீ வணங்காய் – தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேரும் தலைவனைத்
தலையே நீவணங்காய்

தெளிவுரை: சிவபெருமானை வணங்குக. அப் பெருமான் தலைகளை மாலையாகக் கொண்டவர்; பிரமனுடைய தலையைக் கலனாகக் கொண்டு பலி ஏற்றவர். எனவே ஈசனைத் தலையால் வணங்கி உய்தி பெறுக.

சிறப்புரை: இத்திருப்பாட்டு நெஞ்சுக்கு உரைப்பதாக அமையாது, உடலின் தலையாய அங்கமாகிய தலையை நோக்கிக் கூறப்பட்டதாகும். நெஞ்சானது

நினைத்துப் போற்ற, இச்சரீரத்தின் முதன்மை அங்கமாகிய தலையை விளித்துக் கிரியா வழிபாடாக ஓதப் பெற்றது. ஆதலின், இது திருஅங்க மாலை எனச் சிறப்புற்ற தலை மாலையானது. நூறு கோடி பிரமர்களும் ஆறு கோடி நாராயணர்களும் எண்ணில் அடங்காத அளவற்ற இந்திரர்களும் ஆகிய முத்திரத்தினரின் தலை ஓடுக்ளால் இணைக்கப் பெற்றது. இது ஈசனின் பேராற்றலை உணர்த்திய தாகும்.

"கோளிற் பொறியிற் குணம் இலவே எண் குணத்தான் தாளை வணங்காத் தலை" என்னும் திருக் குறள் கருத்தின் வழி தலைவணங்குதல் தலையாய பணி என்று உணர்த்துதலை நோக்குக.

திரியங்க வணக்கம், பஞ்சங்க வணக்கம், அட்டங்க வணக்கம் ஆகியவற்றுள் ஆடவர்க்கு அட்டங்க வணக்கமும் மகளிர்க்கு பஞ்சங்க வணக்கமும் உரித்தாம் எனக் கொள்க. தலையே நீ வணங்காய் என இருமுறை உரைத்த வண்ணமானது, தலை என்று சொல்லப்படும் பொருட் சிறப்பின் மேன்மையும் - பெற்றியும், தலையின் மாண்பும், வணங்குதலின் பேறும் நனி ஏத்தப் பெறுதலாம் என ஓர்க.

83. **கண்காள் காண்மின்களோ – கடல்**
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின்று ஆடும் பிரான் தன்னைக்
கண்காள் காண் மின்களோ.

தெளிவுரை: கண்களே! ஈசனைக் கண்டு தரிசியுங்கள். அப்பெருமான், பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உட்கொண்டு நீலகண்டனாக விளங்குபவர்; எட்டுத்

தோள்களையும் வீசி நின்று, ஆடும் பேராற்றல் உடைய பெருமான். கண்களே! அப்பெருமானைக் கண்டு தரிசித்து மகிழ்க.

சிறப்புரை: நஞ்சுண்ட கண்டனாக விளங்கும் ஈசனின் மாண்பானது அடியவர்களுக்கு அருளிச் செய்யும் கருணையையும் அப்பெருமானின் எல்லையற்ற ஆற்றலையும் உணர்த்துதல் ஆயிற்று.

இத்தன்மையில் ஈசனைக் கண்டு தரிசிக்கும் கண்களின் சிறப்பினைச் சேக்கிழார் பெருமான்,

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்
உண்மையாம் எனில் உலகர்முன் வருகென உரைப்பார்

— திருஞான சம்பந்தர் புராணம், பாடல் 1087

எனச் சிறப்பித்தலைக் கொண்டு கண்கள் ஈசனைத் தரிசித்தலின் பேற்றினை ஓர்க.

84. செவிகொள் கேண்மின்களோ – சிவன்
எம் மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான் திறம் எப்போதும்
செவிகொள் கேண்மின்களோ.

தெளிவுரை: செவிகளே! ஈசனுடைய திருப்புகழ்ப் பாடல்களையும், அருட் செயல்களையும் கேட்பீராக. அப்பெருமான், எமது இறைவன்; செம்பவள வண்ணம் உடையவர்; தீயைப் போன்ற திருமேனியுடைய தலைவர். அப்பெருமானுடைய திருவருட் செயலைப் பிறர் கூறும்போது செவிகளே! கேளுங்கள்.

சிறப்புரை: கேள்வியால் தோட்கப்படாத செவியானது, கேட்பினும் கேளாத்தகையவே என்பதும்; செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம், செல்வத்துள் எல்லாம் தலை என்பதும் இவண் வலியுறுத்தப் பெற்றது. ஈசனின் திருப்புகழ்ப் பெற்றி யினைக் கேட்டுப் பழகாத செவியின் இழிவை மாணிக்கவாசகர், "சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரில் ஐம்புலன்களால் முந்தையான காலம் நின்னை எய்திடாத மூர்க்கனேன்" (திருச்சதகம் 79) எனவும்; "எண்ணமே உடல் வாய் மூக்கொடு செவி கண் என்று இவை நின்கணே வைத்து மண்ணின் மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய் வருக என்று அருள் புரிவாயே" (வாழாப் பத்து பாடல் எண் 5) எனவும் அருளிச் செய்துள்ள மாண்பினையும் நோக்குக.

85. மூக்கே நீ முரலாய் – முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்.

தெளிவுரை: மூக்கே! நீ, ஈசனுடைய திருவைந் தெழுத்தை – திருநாமத்தைத் தியானம் செய்யும் வழியாக ஒலித்து (முரன்று) ஓதுவாயாக. அப்பெருமான், மயானத்தில் உறையும் முக்கண்ணன் ஆவார்; ஈசனின் திருவாக்கினையே நோக்கி மேவும் உமாதேவியின் மணவாளர். அப்பெருமானை ஏத்துக.

86. வாயே வாழ்த்துகண்டாய் – மத
யானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்து ஆடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்து கண்டாய்

தெளிவுரை: வாயே! ஈசனை வாழ்த்திப் பேசுவாயாக. அப்பெருமான், யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர்; பேய்கள் விரித்தாடும் மயானத்தில் நடனம் புரிபவர். அப்பிரானை, வாயே! வாழ்த்துவாயாக.

சிறப்புரை: வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தலைவனாகிய ஈசனை வாழ்த்துதல் செய்தலை இது உணர்த்திற்று. இத்தன்மை யில் மாணிக்கவாசகர், "சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச் சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர்" என அருளியமையும் நோக்குக.

87. நெஞ்சே நீ நினையாய் – நிமிர்
புன்சடை நின் மலனை
மஞ்சாடும் மலைமங்கைம ணாளனை
நெஞ்சே நீ நினையாய்.

தெளிவுரை: நெஞ்சே! நீ ஈசனை நினைத்து ஏத்து வாயாக. அப் பெருமான், புல்லிய மென்மையான சடை முடியுடையவர்; மலம் கலவப் பெறாதவர்; உமா தேவியின் மணாளர். நெஞ்சமே! அவரை நினைந்து ஏத்துக.

சிறப்புரை: ஈசனை, நெஞ்சமானது நினைத்துப் போற்றுதல் வேண்டும் என்பது வலியுறுத்தப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என அருளிச் செய்த மாண்பினையும் கொள்க.

88. கைகாள் கூப்பித் தொழீர் – கடி
மாமலர் தூவிநின்று

பைவாய்ப் பரம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்

தெளிவுரை: கைகளே! ஈசனைத் தொழுது போற்றுக. நறுமணம் மிகுந்த மலர்களைத் தூவி நின்று ஏத்திப் பாம்பினை அரையில் கட்டிய பரமனாகிய சிவபெருமானைத் தொழுக.

சிறப்புரை: இது ஈசனைக் கரங்களைக் கூப்பித் தொழுதலும் மலர்தூவி ஏத்துதலும் ஆகிய இரு புண்ணியச் செயல்களை ஆற்றும் மாண்பினை ஓதுதல் ஆயிற்று. இத் தன்மையில், "தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி" எனவும்; "கரங்குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க" எனவும் அருளிச் செய்த மாணிக்கவாசகரின் அமுத மொழி காண்க.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், "தடங்கையால் மலர் தூய்த் தொழுவாரைத் தன்னடிக்கே செல்லு மாறு வல்லானை" (திருவாழ்கொளி புத்தூர்ப் பதிகம், பாடல் எண் 4) என அருளிச் செய்த மாண்பும் காண்க.

89. ஆக்கை யாற்பயன்என் – அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாதஇவ்
ஆக்கையாற் பயன் என்.

தெளிவுரை: ஈசனின் திருக்கோயிலை வலம் வந்து வணங்க வேண்டும்; மலர்கள் பறித்துக் கைகளால் மாலை தொடுத்து அணிவிக்க வேண்டும்; மலர் தூவி அருச்சித்துப் போற்ற வேண்டும் அவ்வாறு இல்லாத இத்தேகத்தால் என்ன பயன் ஏற்படும்? ஒரு பயனும் இல்லை என்பது குறிப்பு.

சிறப்புரை: வினைக்கு ஏற்றவாறு இவ் உடம்பானது தரப்பட்டுள்ளது. எனவே இவ் உடம்பானது உண்டு உயிர்த்து மரித்தலுக்கே உரியது என்று கொள்ளாது, இதனைத் தந்த ஈசனை நினைத்து வழிபடுதல் வேண்டும் என்பதனை உணர்த்தியதாயிற்று. இது, இறைவனுக்குத் தேகத்தால் செய்யும் நன்றியாகும். அரன் கோயிலை வலம் வருதலும், பூக்களைத் தொடுத்து அருச்சித்தலும் தேகமானது ஆற்றுதற்குரிய திருத்தொண்டாம் எனக் கொள்க. இத்தன்மையில், திருஞானசம்பந்தர், "பூ நாளும் தலை சுமப்பப் புகழ் நாடனம் செவி கேட்ப நாநாளும் நவின்று ஏத்தப் பெறலாமே நல்வினையே" (இரண்டாம் திருமுறை; பாடல் வ.எண் 439; திருச்சாய்க் காட்டுத் திருப்பதிகம்) என அருளிச் செய்தமையும் நோக்குக.

யாக்கையின் பயன் அரன் கோயிலை வலம் வருதலும் பூக்களால் அருச்சித்தலும் என ஓதப் பெற்றது.

90. **கால்களாற் பயன்என் – கறைக்**
கண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்
கால்களாற் பயன் என்.

தெளிவுரை: நீலகண்டத்தராக விளங்கும் ஈசனின் திருக்கோயில்களை வலம் வரவேண்டும்; அழகிய கோகரணம் என்னும் திருத்தலத்தை வலம் வர வேண்டும். அவ்வாறு செய்யாத கால்களால் பயன் என்ன விளையும்? ஒன்றும் இல்லை என்பது குறிப்பு.

சிறப்புரை: முந்தைய திருப்பாட்டில் யாக்கையின் வழிக் கைகளுக்குரிய பணிகளை அறிவுறுத்திய ஆளுடைய

அரசர், இத்திருப்பாட்டில் யாக்கையின் வழிக் கால்களுக்குரிய செம்மைப் பணியை உணர்த்தினர் என்க.

91. **உற்றார் ஆருளரோ – உயிர்**
கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லால்நமக்கு
உற்றார் ஆருள ரோ.

தெளிவுரை: உற்றவர்கள் என்று நமக்கு யார் இருக்கின்றார்கள்? உயிரானது இத்தேகத்திலிருந்து பிரிந்து செல்லும்போது ஈசனையன்றி வேறு யாரும் இல்லை. அப்பெருமானே உயிர்க்குத் துணையாக இருக்கக் கூடியவர். அவரே குற்றாலத்தில் வீற்றிருக்கும் கூத்தப் பெருமான். எனவே, உயிர்க்குத் துணையாய் விளங்கும் ஈசனையன்றி, உயிர் நீங்கும் காலத்தில் யாரும் துணை நின்று காக்க இயலாது என்பதாம். ஈசன் உயிருக்குத் துணையாக விளங்கப் பிறவாப் பெருஞ் செல்வத்தை அருளும் பெற்றியை உணர்த்தியது.

92. **இறுமாந் திருப்பன் கொலோ – ஈசன்**
பல்கணத்து எண்ணப் பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்சென்றங்கு
இறுமாந்து இருப்பன் கொலோ.

தெளிவுரை: இவ்வாறு, நமது தலை, கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கை, தேகம், கால் ஆகிய அங்கங்களைக் கொண்டு ஈசனை வணங்குதலும், அப்பெருமானின் புகழைக் கேட்டலும், உரைத்தலும், நினைத்தலும், பூக்கள் தூவி அருச்சித்தலும், திருக்கோயிலை வலம் வருதலும் ஆகிய செயல்களை மேவும் தன்மையில், பிறவியின் உறுபயன் தோற்றம் கொள்கின்றது. அதன்

வழி, இளைய மான் கன்றை ஏந்தி விளங்கும் சிவபெருமானுடைய திருவடி மலரின்கீழ் இருக்கும் பெருமை நிகழ்கின்றது. அது, பலவகையான சிவகணத்தினர்களுள் ஒருவராக விளங்கப் பெறும் பேறாகும். அத்தகைய பெரும் பேற்றால் மும்மலங் களும் நீங்கப் பெற்றும் பேரின்பத்தினை மாந்தியும் (நுகர்ந்தும்) திகழ்வேன்.

சிறப்புரை: பல்திறத்தினராகிய சிவகணங்கள் சிவபெருமானுடைய சேவடியின்கீழ் விளங்குகின்ற செம்மையானது இவண் ஓதப் பெற்றது. சேரமான் பெருமான் நாயனார் கண நாதர்களுள் ஒருவராக விளங்குமாறு அருளப் பெற்ற சிறப்பினையும் ஓர்க.

இறுமாந்து – ஆணவம் முதலான மலம் இற்று நீங்கி பேரின்பம் நனி மாந்தி மேவும் செம்மையை உணர்த்தியது.

93. தேடிக் கண்டு கொண்டேன் – திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருமாலும் பிரமனும் தேடியும் காணப் பெறாத தலைமை உடையவர் சிவபெருமான். அப்பெருமானை நான் தேடினேன். அவர் என் உள்ளத்தில் கோயில் கொண்டு உள்ளார் என்று கண்டு கொண்டேன்.

சிறப்புரை: எல்லா இடங்களிலும் மேவும் சிவபெருமான் உடலின்கண் மேவும் உயிரைக் கோயிலாகக் கொண்டு விளங்குபவர். அப்பெரு மானைப் புறத் தோற்றத்தைக் காணும் ஊனக்

கண்களால் நெஞ்சிற்குள் உணர ஒல்லும் என்பதும் இவண் சுட்டப் பெற்றது. இந்நெறியில் நாவுக்கரசர், "நாடி நாரணன் நான்முகன் என்றிவர் தேடியும் திரிந்தும் காண வல்லரோ! மாட மாளிகை சூழ் தில்லை அம்பலத்து ஆடிபாதம் என நெஞ்சுள் இருக்கவே" என அருளிச் செய்தவாறும் நோக்குக. மாணிக்கவாசகர், "தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான் தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்" (திருவேசறவு பாடல் எண் 10) என அருளிச் செய்தமையும் காண்க. "என் உள்ளம் கவர் கள்வன்" என ஏத்தும் திருஞான சம்பந்தரின் திருவாக்கும் காண்க.

10. திருவதிகை வீரட்டானம்

தல விளக்கம்: *பதிகம் எண் 1 காண்க.*

பதிகக் குறிப்பு: திருக்கெடிலவாணர் என்னும் சிறப்புப் பெயர் கொண்டு ஏத்தப் பெறுவது.

பண் : *காந்தார பஞ்சமம்*

திருச்சிற்றம்பலம்

94. **முளைக்கதிர் இளம்பிறை மூழ்க வெள்ளநீர்**
வளைத்தெழு சடையினர் மழலை வீணையர்
திளைத்ததோர் மான்மறிக் கையர் செய்யபொன்
கிளைத்துழித் தோன்றிடுங் கெடில வாணரே.

தெளிவுரை: ஈசன், ஒளி கொண்டு வளரும் பிறைச் சந்திரனைச் சூடியவர்; பெருகி வரும் கங்கை தோயும் சடை முடியுடையவர்; இனிமை திகழும் இழை யோடும் மழலையுடைய வீணையுடையவர்;

மிகையான மகிழ்ச்சியுடன் விளங்கும் மானைக் கையில் ஏந்தியவர். அப்பெருமான், அழகு மிளிரப் பெருகியோடும் கெடில நதிக்கரையில் வீற்றிருக்கும் வீரட்டநாதரே ஆவார்.

சிறப்புரை: "யாழினிது குழலினிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்பது, திருக்குறள். மழலைச் சொல்லின் இனிமையானது இதன் வழி ஏத்தப் பெற்றது. இறைவனுக்கு மன்னுயிர்கள் அனைத்தும் குழந்தைகள் ஆதலால், அவர்களுடைய தோத்திரப் பாக்கள் மழலைச் சொல்லுக்கு நிகராகி இன்பம் பயத்தலை நினைவு கூர்ந்த மாண்பில், அவை இனிமையுற்றதாயின. அத்தகைய இனிமையை, ஈசன் மீட்டும் வீணையின் இசைக்கு ஏற்றம் புகழும் பெற்றி யினில், ''மழலை வீணையர்'' எனும் அருந் தொடரானது நல்குதல் ஆயிற்று.

பொன் – அழகு. பொன் போன்ற வளமும் பெருக்கும்.

95. ஏறினர் ஏறினை ஏழை தன்னொரு
கூறினர் கூறினர் வேதம் அங்கமும்
ஆறினர் ஆறிடு சடையர் பக்கமும்
கீறின உடையினர் கெடில வாணரே.

தெளிவுரை: ஈசன், இடப வாகனத்தில் ஏறிக் காட்சி தருபவர்; உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர்; வேதங்கள் நான்கினோடும் அதன் ஆறு அங்கங்களும் விரித்து ஓதுபவர்; அவ்வேதங்களாகவும் அதன் ஆறு அங்கங்களாகவும் விளங்குபவர்; எல்லாப் பக்கங்களிலும் சடை முடியிலிருந்து பரவி விளங்கு மாறு திகழ்பவர்; கிழிந்த ஆடையை உடுத்தி இருப்பவர். அவர் கெடில நதிக்கரையில் வீற்றிருக்கும் வீரட்ட நாதரே ஆவார்.

சிறப்புரை: ஏறினர் ஏறினை எனும் கூற்றானது இடப வாகனத்தில் ஏறி வீற்றிருந்து அருள் நல்குகின்ற சிவபெருமானுடைய பெரும் மாட்சிமையை இயம்புவதாயிற்று. இத்தன்மையில் மாணிக்கவாசகர் "பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை" என அருளிச் செய்த அமுதவாக்கும் (திருச்சதகம் பாடல் எண் 49) காண்க.

சிவபெருமானின் கீறிய ஆடையானது கிழிக்கப் பெற்ற ஆடையைச் சுட்டியதாகும். இதனைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள், "கீளார் கோவணமும் திருநீறு மெய்பூசி" என அருளியவாறும் காண்க. கீறிய உடை என்பது தோல் உடை எனலும் ஆகும்.

ஏறு – 1) இடபம்; 2) ஓதுதல்; ஆறு – 1) அங்கம் ஆறு; 2) கங்கை; ஏழை – உமாதேவி. கீறின – கிழிந்த.

96. விடந்திகழ் கெழுதரு மிடற்றர் வெள்ளைநீறு
உடம்பழகு எழுதுவர் முழுதும் வெண்ணிலாப்
படர்ந்தழகு எழுதரு சடையில் பாய்புனல்
கிடந்தழகு எழுதிய கெடில வாணரே.

தெளிவுரை: சிவபெருமான், பாற்கடலில் எழுந்த நஞ்சினை மிடற்றினில் திகழுமாறு புரிந்தவர்; வெண்மை திகழும் திருநீற்றின் பொலிவு கொண்டு, திருமேனியில் அழகு விளங்குமாறு செய்பவர்; நாற்புறமும் விரிந்து பரவும் சடை முடியின் மீது வேகமாகப் பாயும் கங்கை நீர் தோய இருத்தியவர். அவர், அழகு மிகுந்த கெடில நதிக்கரையில் மேவும் வீரட்ட நாதரே ஆவார்.

சிறப்புரை: "நீறு இல்லா நெற்றிபாழ்" எனவும், "ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்" எனவும் மொழியப்

பெறும் வாசகத்திற்கு இணங்கத் திருவெண்ணீற்றின் பொலிவும், ஊருக்கு அழகு செய்யும் கெடில நகரின் அழகு மிக்க ஏற்றமும் முறையே, "வெள்ளை நீறு உடம்பு அழகு எழுதுவர்" எனவும், "அழகு எழுதிய கெடிலம்" எனவும் உணர்த்தப் பெற்றது.

97. **விழுமணி அயில்எயிற்று அம்பு வெய்யதோர்**
கொழுமணி நெடுவரை கொளுவிக் கோட்டினார்
செழுமணி மிடற்றினர் செய்ய வெய்யதோர்
கெழுமணி யரவினர் கெடில வாணரே.

தெளிவுரை: சிவபெருமான், உயர்ந்த மணிகள் கொண்டு வலிமையானதாகச் செய்யப்பட்ட மூன்று மதில்களை அக்கினிக் கணை தொடுத்து மேரு மலையை வில்லாகக் கொண்டு அழித்தவர்; நீல மணி போன்ற மிடறுடையவர்; கொடிய நாகத்தை ஆபரணமாகக் கொண்டவர். அவர் கெடில நதிக் கரையில் வீற்றிருக்கும் ஈசரே ஆவார்.

98. **குழுவினர் தொழுதெழும் அடியர் மேல்வினை**
தழுவின கழுவுவர் பவள மேனியர்
மழுவினர் மான் மறிக் கையர் மங்கையைக்
கெழுவின யோகினர் கெடில வாணரே.

தெளிவுரை: சிவபெருமான், அடியவர் திருக் கூட்டத்தினரால் வழிபடப் பெறுபவர்; அப்பெரு மக்களின்பால் பற்றியுள்ள வினைகளை நீக்குபவர்; பவளம் போன்ற சிவந்த திருமேனியுடையவர்; மழுப்படையும், மானும் கையில் ஏந்தி உள்ளவர். அப்பெருமான், உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டு விளங்கி யோக நியதியில் வீற்றிருப்பவர். அவர் கெடில நதிக்கரையில் வீற்றிருக்கும் வீரட்ட நாதரே ஆவார்.

சிறப்புரை: இத்திருப்பாட்டானது அடியவர்கள் குழுமி ஏத்துகின்ற மாண்பினை விளக்குவதாயிற்று. இத்தகைய வழிபாட்டுச் சிறப்பினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "காலையிலும் மாலையிலும் கடவுள் அடிபணிந்து கசிந்த மனத்தவர் பயிலும் கலய நல்லூர்" என அருளிச் செய்தவாறும் நோக்குக. இந்நெறியில் மாணிக்க வாசகர், "கலந்து நின்னடியாரோடு அன்று வாளா களித்திருந்தேன்" (பிரார்த்தனைப் பத்து; பாடல் எண் 1) என அருளிச் செய்தமையும் காண்க.

அத்தகைய அடியவர் மீது பற்றியுள்ள ஆகாமியம் எனப்படும் இப்பிறவியில் செய்கின்ற வினையும், இப் பிறப்புக்குக் காரணமாகியதும் இன்னும் இப் பிறவியில் நுகரவிருக்கும் பிராரத்தம் என்னும் வினையும், வரும் பிறவிக்கு என்னும் வினையும் விலகிச் செல்லும் என்பதனை, "மேல் வினை தழுவின கழுவுவர்" என்பது உணர்த்தப் பெற்றது.

ஈசன், அம்பிகையை உடனாகக் கொண்டு மன்னுயிர்க்குப் போகத்தையும் யோக நிலையை நாடும் உயிர்களுக்கு, அவ்வாறாகிய பேற்றினையும் புரிபவர். ஒருவரே இருவகைச் சிறப்பினையும் அருளும் கர்த்தாவாகி விளங்கும் தன்மையானது, "மங்கையைக் கெழுவின யோகினர்" என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், "பெண்பால் உகந்திலனேல் பேதாய் இரு நிலத்தோர் விண்பால் யோகு எய்தி வீடுவர் காண்" எனவும், "நன்றாக நால்வர்க்கும் நான் மறையின் உட்பொருளை அன்று ஆலின் கீழ் இருந்து அங்கு அறம் உரைத்தான்" எனவும் வரும் மாணிக்க வாசகர் தம் அமுதவாக்கும் காண்க.

கெடில நதியானது இத்திருத்தலத்தின் தீர்த்தம் ஆதலும், அதன் வழி இத்திருத்தலத்தில் எழுந்தருளி யுள்ள ஈசனின் திருப்பெயராகக் கெடில வாணர் என அழைக்கப்படுதலும் நனி ஓர்க. இது, "ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" என்னும் பொருட் குறிப்பாகி, வினை நீக்கத்தினை அடியவர் களுக்கு அருளிச் செய்து, பிறவாமையாகிய பேற்றினை நல்குகின்ற வண்ணத்தினை ஓதுதல் ஆயிற்று.

99. அங்கையில் அனல்எரி யேந்தி ஆறுஎனும்
மங்கையைச் சடையிடை மணப்பர் மால்வரை
நங்கையைப் பாகமும் நயப்பர் தென்திசைக்
கெங்கையது எனப்படும் கெடில வாணரே.

தெளிவுரை: ஈசன், அழகிய கையில் அனல் மிக்கு எரியும் நெருப்பினை ஏந்தியவர்; கங்கையாகிய தேவியைச் சடை முடியில் வைத்த மணவாளர்; மலை மகளாகிய உமாதேவியை விரும்பி ஒரு பாகத்தில் ஏற்றவர். அப்பெருமான், தென்திசைக் கங்கை எனப்படும் கெடில நதிக்கரையில் வீற்றிருக்கும் வீரட்ட நாதரே ஆவார்.

சிறப்புரை: ஈசன், குளிர்ச்சி மிகுந்த சோதியாக விளங்கும் மாண்பினர் எனினும், பெருந் தீயைக் கையில் ஏந்திய தன்மையையும் நன்கு உணர்த்தும் பாங்கினில், "அனல் எரியேந்தி" எனச் சுட்டப் பெற்றது.

மால்வரை மங்கை – இமயவல்லி;
உமாதேவி; தென்திசைக் கெங்கை – கெடில நதி.

100. கழிந்தவர் தலைகலன் ஏந்திக் காடுறைந்து
இழிந்தவர் ஒருவர்என்று எள்க வாழ்பவர்

வழிந்துஇழி மதுகர மிழற்ற மந்திகள்
கிழிந்ததேன் நுகர்தரும் கெடில வாணரே

தெளிவுரை: சிவன் ஒருவரே எல்லாக் காலத்திலும் விளங்குபவர், ஏனைய மூர்த்திகள் எனப்படும் திருமால் ஆறு கோடியும், பிரமர் நூறு கோடியும் ஆகியவர்கள் கழிந்தவர்களாக மேவ, அவர்களுடைய மண்டை ஓடுகளைக் கோத்து மாலையாகக் கொண்டும், கையில் ஏந்தியும், இடுகாட்டில் திரிபவர் எனப் பிறரால் இழிவாகவும் பேசப்படுபவர், அப்பெருமான். அவர், வண்டுகள் நுகர்ந்து மேவ, மந்திகள் தன் கூட்டைக் கிழித்து ஆட, அது சிந்துகின்ற கெடில நதியின் கரையில் வீற்றிருக்கும் வீரட்டேஸ் வரரே ஆவார்.

மதுகரம் – வண்டு.

101. கிடந்தபாம்பு அருகுகண்டு அரிவை பேதுறக்
கிடந்தபாம்பு அவளையோர் மயில்என்று ஐயுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே
கிடந்துதான் நகுதலைக் கெடில வாணரே.

தெளிவுரை: சிவன் திருமுடியில் தவழ மேவும் பாம்பானது, இடப்பாகத்தில் வீற்றிருக்கும் உமா தேவியைக் கண்டு மயில் என நினைத்து மயங்குகின்றது. உமாதேவியார் பாம்பைக் கண்டு பேதுறுகின்றாள். இந்த நிலையில் கங்கை விளங்கும் சடை முடியில் மேவும் பிறைச் சந்திரன், நாகத்தைக் கண்டு ஏங்குகின்றது. இவர்கள் செயலை எண்ணி வீரட்ட நாதராகிய கெடில்வாணர் மென்முறுவல் செய்கின்றார்.

சிறப்புரை: இத் தன்மையானது, ஒன்றுக்கொன்று மாறுபட்ட பண்புகளைக் கொண்டவையாயினும்

ஈசன் திருமுன்பு மிளிர்ந்து விளங்கும் பெற்றியினை உடையது என ஓதுதலாயிற்று. (பாட்டு வ.எண் 509–உம் காண்க.)

102. வெறியுறு விரிசடை புரள வீசியோர்
பொறியுறு புலியுரி அரைய தாகவும்
நெறியுறு குழலுமை பாக மாகவும்
கிறிபட உழிதர்வர் கெடில வாணரே.

தெளிவுரை: சிவன், நறுமணம் கமழும் சடை முடியானது விரிந்து புரளி வீசி ஆடுபவர்; புலியின் தோலை அரையில் உடுத்தியவர்; நெறிப்படுத்தி அலங்கரிக்கப்பட்ட கூந்தலையுடைய உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்குபவர்; தாருகவனத்து மகளிர் மயங்குமாறு பலி ஏற்றுத் திரிபவர். அவர் கெடிலவாணரே ஆவார்.

103. பூண்டதேர் அரக்கனைப் பொருவில் மால்வரைத்
தூண்டு தோளவைபட அடர்த்த தாளினார்
ஈண்டுநீர்க் கமலவாய் மேதிபாய்தரக்
கீண்டுதேன் சொரிதரும் கெடில வாணரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவபெருமான் தேர்மீது செல்லும் இராவணனுடைய பெருமை மிக்க மலை போன்ற தோள்கள் அழியுமாறு திருப்பாதத்தால் அடர்த்தவர். அப்பெருமான், தாமரை மலரின் மீது எருமை பால் சொரிய, அத்துடன் தேனும் சேர்ந்து பெருகும் நீரின் சிறப்புடைய கெடில நதியின் கரையில் வீற்றிருக்கும் வீரட்டேஸ்வரரே ஆவார்.

பொருவில் – எதிர்த்துப் போரிடுவோர் இல்லாத பெருமையைக் குறித்தது; கமலம் – தாமரை; மேதி – எருமை.

11. பொது

நமச்சிவாயத் திருப்பதிகம்

பதிகக் குறிப்பு: திருநாவுக்கரசர், சமண சமயத்திலிருந்த காலத்தில், அவரைச் சூலை நோயால் பீடிக்கச் செய்து ஆட்கொண்டார் சிவன். திருவதிகையில் வீரட்டேசத்தில் "கூற்றாயின வாறு விலக்ககிலீர்" என எடுத்தோதிப் பாடிய நாவுக்கரசுக்குச் சூலை கடிதில் நீங்கிற்று. இதனைப் பொறுக்காத மாற்றுச் சமயத்தினர், மன்னனின் துணை கொண்டு பற்பல இன்னல்களைச் செய்தனர். கல்லில் பிணித்துக் கடலில் எறிந்தனர்; அப்போது ஆளுடைய அரசர், திருவைந்தெழுத்தினை ஓதிக் கல்லையே தெப்பமாகக் கொண்டு கரை ஏறினார். அதுவே இத் திருப்பதிகம் சிவன் பாலைக் காட்டித் திருஞானசம்பந்தரையும், சூலை காட்டித் திருநாவுக்கரசரையும், ஓலை காட்டிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் ஆட்கொண்டார் என்பது ஆன்றோர் வாக்கு.

மாணிக்கவாசகரை ஈசன் அந்தணர் திருக்கோலத்தில் குருமணியாக வந்து ஆண்டனர். இதனை, "அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்" என்கிறது திருவாசகம்.

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

104. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே.

தெளிவுரை: வாயினால் சொல்லப்படும் சொல்லாகிய வேதத்தின் முதல்வன் சிவபெருமான். அப்பெருமான் சோதி வடிவாக விளங்குபவர். அவருடைய ஒளி மயமான அழகிய பொலிவு மிக்கு மேவும் திருவடியின் பால், நெஞ்சைப் பதித்துத் தொழுது ஏத்த, நல்ல துணையாகி விளங்குபவர். கல்லில் கட்டிக் கடலில் என்னைத் தூக்கி எறிந்த காலத்திலும் எனக்குத் துணை நின்று காத்தருளியது, நமச்சிவாய என்னும் திருவைந் தெழுத்தே.

சிறப்புரை: "சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு, ஈசன் அருளாணை வழங்கிய மாண்பினைச் சேக்கிழார் பொழிந்த வழியில் "சொல்" என்னும் திருவார்த்தை யின் பொலிவினை நன்கு காணலாம். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்னும் தன்மையில், சொல்லும் அதற்கு உரிய பொருளுமாக விளங்கும் ஈசனின் நாமத்தை ஓதி உரைக்க, அப் பெருமான் துணை நின்று அருள் செய்தலை உணர்த்திற்று. அச் சொல்லானது திருவைந்தெழுத் தாயிற்று. அது நமச்சிவாய என்பது.

ஈசனின் திருவடிச் சிறப்பானது, "பொற்றுணைத் திருந்தடி" என ஏத்தப் பெற்றது. இது திருவடியை முதலாகக் கொண்டு திருவைந்தெழுத்தினை ஓதுகின்ற முறையைச் சுட்டுவதாம். இதனை,

ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம் – கூடு
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

— உண்மை விளக்கம், பாடல் 33

என்னும் திருபாட்டானது விளக்குகின்றது. இத் தன்மையில்,

திருவடி	–	நகரம்	ந
உதரம்	–	மகரம்	ம
தோள்	–	சிகரம்	சி
முகம்	–	வா	வா
முடி	–	ய	ய

எனத் துணை நின்று, நல்கதிக்கு இட்டுச் செல்லும் தன்மையில் அதன் சிறப்புத் தோன்ற நற்றுணையாவது "நமச்சிவாயவே" என ஓதுதல் ஆயிற்று.

திருவைந்தெழுத்தானது சொற்றுணையாகியும் பொற்றுணையாகியும் நற்றுணையாகியும் விளங்கி உயிருள் கலந்து நின்று காத்தல் புரிவது எனக் கொள்க.

பஞ்சபூதப் பொருள்களால் இத்தேகமானது விளங்குவதும், இத்தேகத்தில் நிலவும் ஆன்மாவைக் கோயிலாகக் கொண்டு ஈசன் விளங்குவதும் ஆகிய மெய்ம்மையால், ஐம்பூதப் பொருள்களில் அடங்கும் கல்லும், கடலும் ஈசனின் அருள் வண்ணம் நின்று காத்தல், "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச் சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்பதன் வாயிலாக உணர்த்தப் பெற்றது.

இச் சிறப்பானது ஈசனின் திருநாமமாகிய திருவைந்தெழுத்தை மனம் ஒன்றி அப்பெருமானின் திருவடியைப் பொருந்தத் தொழுவதன் வாயிலாக ஆயிற்று என்பதாம்.

105. பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன்அஞ்சு ஆடுதல்

கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சி வாயவே.

தெளிவுரை: பூக்களில் சிறப்புடையது தாமரை மலர்; பசுவின் பயனுள்ள தன்மையாவது ஈசனுக்குப் பூசனை யாற்றப் பஞ்சகௌவியத்தை வழங்கும் பெருமை; அரசனுக்குரிய சிறப்பாவது, நீதி வழங்குவதில் விருப்பு வெறுப்பு இன்றி ஆட்சி செய்யும் முறைமை; அவ்வாறே, நாவினுக்கு உரிய தன்மையாவது, நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை ஓதுதலே ஆகும்.

சிறப்புரை: தாமரையில், கலைமகளும் திருமகளும் வாசம் செய்யும் சிறப்புடைய நிலையினைக் குறித்தலும், ஈசனின் பூசனைக்குப் பஞ்சகௌவியத்தை வழங்கும் பசுவின் மேன்மையைக் குறித்தலும் ஆகிய யாவும் அறிவையும் செல்வத்தையும் வழிபாட்டின் மேன்மையையும் உணர்த்திற்று. அரசன் நீதி வழங்கும் சிறப்பானது, ஒழுக்கத்தின் மேன்மையை நிலைநிறுத்து வதாயிற்று. இந்நியதியில், இவ்வுடம்பினையும் உயிரையும் நல்வழியில் இயங்கச் செய்தற்கு நாவானது, "நமச்சிவாய" என்னும் திருவைந்தெழுத்தை ஓத வேண்டும் என்பதாம்.

இத்தன்மையில், "நாதன் நாமம் நமச்சிவாயவே" எனத் திருஞானசம்பந்தரும்; "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருளிச் செய்தமை காண்க. மற்றும், "நாயினேன் உனை நினையவும் மாட்டேன் நமச்சிவாய என்று உன்னடி பணியாப் பேயனாகிலும் பெருநெறி காட்டாய்" (செத்திலாப் பத்து, பாடல் 7) என வரும் திருவாசக அமுத மொழி யும் காண்க.

106. விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின்று அறுப்பது நமச்சிவாயவே.

தெளிவுரை: விண்ணளவு உயரத்திற்கு விறகுக் கட்டைகளை அடுக்கி வைத்தாலும் அதனை எரிக்க அதன் அளவு நெருப்பு கொண்டு அதை எரிக்க வேண்டிய தில்லை. சிறு நெருப்புப் பொறி கொண்டு அளவு கடந்த அவ்விறகுக் கட்டைகளை எரித்து, ஒன்றும் இல்லாமல் செய்து விடலாம். அத் தன்மையில், பல பிறவிகளில் செய்து, வினை மூட்டைகளாகிய பாவங்கள் நம்மைத் தொடர்ந்து பற்றி இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தை விளைத்துக் கொண்டு இருக்கும் நிலையில், நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தானது நண்ணி நின்று அப்பாவங்களைச் சுட்டெரிக்கின்றது.

சிறப்புரை: விறகினை எரிப்பதற்கு ஓர் உபகரணம் தேவைப்படுவது போன்று, பிறவிகள்தோறும் செய்து பெருகிச் சேரும் பாவமானது தாமாகவே விடுபடாது என்பதும் திருவைந்தெழுத்தினைக் கொண்டு அப் பாவங்களைத் தீய்க்க முடியும் என்பதனையும் இத்திருப்பாட்டு நன்கு உணர்த்திற்று.

பாவமாவது இவ்வுயிரை நண்ணித் துன்பம் தரும் பிறவிகளைத் தரவல்லது என்பது, “பயின்ற பாவத்தை உலகினிற் பயின்று பண்ணிய பாவத்தை” என விரித்தோதப் பெற்றது. ஆயின், திருவைந்தெழுத்தானது, பாவத்தை நண்ணி நின்று அதனைப் பொசுக்கி அழித்து, உயிருக்கு உறுதுணையாய் நின்று, பேரின்ப

மாகிய முத்திச் செல்வத்தை மறுமைக்கு உரித்தாக்கு கின்றது.

இது, இம்மையிலும் நலம் தரும் சொல் துணையாகிறது எனக் காண்க.

107. இடுக்கண்பட்டு இருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிரான்என்று வினவுவோம் அல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினும் அருளின் நாம்உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

தெளிவுரை: இவ்வுலகிடைத் துன்பத்தால் சூழ்ந்து இருந்தாலும், பிறரை நோக்கி, "எம்மைக் காக்கும் நீவிரே தலைவர்" என்று முகமன் சொல்ல மாட்டோம். மலையளவு துன்பத்தில் உழன்றாலும் அதிலிருந்து விடுவித்துக் காப்பதும், அச்சத்தைப் போக்குவதும் அருளின் வயமாகத் திகழும் நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தே ஆகும்.

சிறப்புரை: இத்திருப்பாட்டானது, திருவைந் தெழுத்தினை ஓதும் அடியவர் பெருமக்களுக்கு நேரும் புறத் துன்பமாகிய, பிணி, வறுமை முதலானவையும் அகத் துன்பமாகிய அச்சம் முதலானவையும் இல்லாமையாக்கும் பெற்றியை உணர்த்துவதாயிற்று.

இத்தன்மையில், ஆளுடைய அரசரின் திருமொழி களாகிய, "அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை'' எனவும்; ''நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்'' எனவும்; "நமச்சிவாயவே நானவின்று ஏத்துமே, நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே!" எனவும் வழங்கப் பெறும் அருள் மொழிகளாலும் காண்க.

108. வெந்தநீறு அருங்கலம் விரதிகட்கு எலாம்
அந்தணர்க்கு அருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக்கு அருங்கலம் திகழு நீள்முடி
நங்களுக்கு அருங்கலம் நமச்சி வாயவே.

தெளிவுரை: ஈசனைத் தியானித்தும், விரதம் பூண்டும் வணங்குகின்ற அடியவர்களுக்கு, அருங்கலமாக விளங்கிச் சிறப்பினை நல்குவது, திருவெண்ணீறு. அந்தணர்களுக்குச் சிறப்பினை நல்குவது வேதமும் அதன் ஆறு அங்கங்களையும் ஓதுதல் ஆகும். பிறைச் சந்திரன், ஈசனின் திருமுடியின் மீது திகழ்ந்து சிறப்புடன் மிளிர்தலே அதற்கு அருங்கலம். அத் தன்மையில் நமக்கு அருங்கலமாகக் கொள்ளத் தக்கது, நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தே யாகும்.

சிறப்புரை: இத் திருப்பாட்டில் திருநீற்றின் பெருமை யானது நன்கு ஓதப் பெறுவதாயிற்று. "மந்திரமாவது நீறு," "வானவர் மேலது நீறு," "அருத்தமதாவது நீறு," "அவலம் அறுப்பது நீறு," "முத்தி தருவது நீறு" எனத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்த வாக்கினை ஓர்க. சுந்தரமூர்த்தி சுவாமிகள், "முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்" என அருளிச் செய்தமையும் காண்க. திருநின்ற செம்மைக்குத் திருவெண்ணீறு விளங்குதல் போன்று அந்தணர்கள் வேதம் ஓதுதலின் சிறப்பு ஓதப் பெற்றது.

தேய்ந்து அழியும் சாபத்தைத் தக்கனிடம் பெற்ற சந்திரன், வேறு புகலிடம் இன்றிச் சிவபெருமானைத் தஞ்சம் அடைந்து சிறப்புற்ற தன்மையைப் போன்று, இவ்வுலகில் வினைப் பொதியைச் சுமக்கும் மன்னுயிர்களைக் காத்து அருள் புரிவது, நமச்சிவாய

என்னும் திருவைந்தெழுத்து என உணர்த்தப் பெற்றது. இது, "நங்களுக்கு அருங்கலம்" என உணர்த்தலாயிற்று.

அருங்கலம் – வேண்டப்படுவது; சிறப்புதருவது;
நங்கள் – மன்னுயிர்கள்.

109. சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாள்தொறும் நல்கு வான்நலன்
குலமில ராகிலும் குலத்திற்கு ஏற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

தெளிவுரை: ஈசன், வேண்டுதல் வேண்டாமை என்னும் குணத்தின்பாற் படாதவராய் யாவருக்கும் அருள் புரியும் பெற்றியுடையவர்; உயிர்களுக்கு இனிமை வழங்குபவர்; தனக்கு அடிமை பூண்டு விளங்குகின்ற அடியவர்களுக்கன்றி, ஏனையோர்க்கு நலன் கரப்பவர். அடியவர்களுக்கு எல்லாக் காலங்களிலும் நலம் புரிபவர்; ஆகம விதிப்படியும் ஆசார சீலத்திலும் ஒருங்கே திகழ்ந்து ஏத்துபவராயினும், அவ்வாறு இன்றிப் பக்தி வயத்தினால் ஈசனுக்கு அடிமை பூண்டு திகழ்பவராயினும், அவ்வவர்தம் தரத்தின் செம்மைக்கு ஏற்ப நலன்களைக் கொடுப்பவர்; அப் பெருமானின் திருவைந்தெழுத்தாகிய நமச்சிவாய என்னும் சொல்லும் அத்தகைய செம்மையை அருளவல்லது.

சிறப்புரை: எல்லா சீவன்களுக்கும் உயர்வு தாழ்வின்றி அவ்வவற்றின் வினைக்கு ஏற்ற வகையில் அருள்புரியும் பாங்கு, "சலமிலன்" எனச் சுட்டப் பெற்றது.

ஆணவம் ஒழிந்து தன்னைச் சரணம் அடைகின்ற ஆன்மாக்களுக்கு அருள் செய்தலையும் ஏனையோர்க்குக் கரந்து நிற்றலையும் நனி புகலும் செம்மையினில், "சார்ந்தவர்க்கு அலால் நலமிலன் நாள்

தொறும் நல்குவான் நலன்'' என ஏத்தப் பெற்றது. இத் தன்மையில் மாணிக்கவாசகர், ''புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க'' எனவும், "சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க'' எனவும் "ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே'' எனவும் அருளிச் செய்தவாறும் காண்க.

இத்தகைய அருள் செயல்களைப் புரிவது நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தானது, "கொடுப்பது நமச்சிவாயவே'' என உணர்த்தப் பெறுவ தாயிற்று. இந்நெறியில் "நாதன் நாமம் நமச்சிவாயவே'' என அருளிச் செய்த திருஞானசம்பந்தரின் திருவாக்கும் ஓர்க. இது, ஈசனின் வேறிலதாகத் திருவைந்தெழுத்தானது மேவுதலைப் புகன்றது.

110. வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென்று உருவம் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே.

தெளிவுரை: உலகப் பற்றினை நீக்கிய திருத்தொண்டர் கள் ஒன்று கூடி, அரநாமத்தை ஓதும் நிலை கண்டு, அந் நெறியில் பற்று கொண்டு நான் விரைந்து ஓடிச் சென்றேன். ஆங்குச் சிவப்பொலிவின் அருங்காட்சி யைக் கண்டேன். கண்டதும், எனது புறப்பற்றெலாம் அற்று, அத்தெய்வீகக் காட்சியை நாடினேன். அத் தருணத்திலேயே மகாவாக்கியமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தானது என்னை நாடிப் பற்றியது.

சிறப்புரை: இத்திருப்பாட்டானது சிவனடியார்களின் பெருமையும், அப்பெருமக்களின் பற்றற்ற தன்மையும்,

இறை வழிபாடும் உணர்த்துவதாயிற்று. திருத் தொண்டர்களின் இணக்கத்தையும், அவர்கள் பெறுகின்ற சிறப்பினையும், மாணிக்கவாசகர், "பிறவிதனைத் தூரும் பரிசு துரிசு அறுத்துத் தொண்ட ரெல்லாம் சேரும் வகையால் சிவன்கருணைத் தேன் பருகி ஆரும்குலாத் தில்லையாண்டான்" என ஏத்தும் மாண்பினை நோக்குக.

திருத்தொண்டர்களைக் கண்ட அளவில், அவர்கள்பால் நாடிச் செல்லும் துரிதம், "ஓடினேன் ஓடிச் சென்று உருவங் காண்டலும் நாடினேன்" என உணர்த்துதல் ஆயிற்று. இறைவன், திருவருள் வாய்த்தால் அன்றி, அம் மகாமந்திரத்தை ஓதுதற்கு அரியது என்னும் மாண்பு, "நாடிற்று நமச்சிவாயவே" என உணர்த்துவதாயிற்று.

111. இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

தெளிவுரை: வீட்டு மனைகளில் ஏற்றி வைக்கப்படும் ஒளிவிளக்கானது, புற இருளை அகற்றுகின்ற தன்மை உடையது. திருவைந்தெழுத்தாகிய நமச்சிவாய என்பது, அகவிளக்காக விளங்கி, மனத்தின் இருளை நீக்க வல்லது. அத் திருவைந்தெழுத்து, சொல் வடிவிலும், சோதி வடிவிலும் விளங்கிப் பயில்வோரும் கேட்போரும் ஆகிய பலராகிய உள்ளங்களிலும் இருந்து விளங்கச் செய்கிறது. பலரும் காணுமாறு விளங்குகின்ற - நன்மை வழங்கும் விளக்காக உள்ளது, நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தே.

சிறப்புரை: ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங் களை அகற்றும் திருவைந்தெழுத்தின் பெருமை, "இருள் கெடுப்பது" என ஓதப் பெற்றது.

ஈசன் பாலின்படு நெய்போல் மறைய நின்றுள்ள நிலையில், உறவு கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால் முறுக வாங்கிக் கடையமுன் நிற்கும் தன்மையில், இத் திருவைந்தெழுத்தை அகத்தில் பதித்து நிற்க விளக்கமுறும் பாங்கு இவ்வாறு ஓதுதலாயிற்று.

112. முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்று அங்கு அடைந்தவர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.

தெளிவுரை: யாவற்றுக்கும் முன் விளங்கும் சிவநெறியின் முதல்வராக விளங்குபவர், முக்கண்ணராகிய சிவபெருமான். அப்பெருமானின் நெறியாகிய சைவநெறியைச் சரணம் என உறுதியுடன் பற்றி ஒழுகும் பெருமக்கள் எல்லாருக்கும் நன்னெறியை நல்கும் சொல்லாவது நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தே ஆகும்.

சிறப்புரை: "சைவத்தின் மேற் சமயம் வேறில்லை" எனவும், "சிவனோடு ஒக்கும் தெய்வமும் இல்லை" எனவும் மொழியப் பெற்றது.

113. மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் லார்தமக்கு இடுக்கண் இல்லையே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: பெருமையுடையவளாய்ப் பிணைந்து நிலவும் உமாதேவியைப் பாகமாகக் கொண்டு திகழும் ஈசனின் திருவடியை, நாவிற்குப் பிணையாகிய நமச்சிவாயத் திருப்புதிகமாம் இத் திருப்பதிகத்தால் ஏத்தித் தொழுபவர்களுக்கு, எத்தகைய துன்பமும் இல்லை.

இது, இம்மையிலும் துன்பம் இல்லை; மறுமை யிலும் துன்பம் இல்லை எனவாயிற்று.

சிறப்புரை: *1.* இது நமச்சிவாயத் திருப்பதிகம் என ஓதப் பெறுவதாயிற்று. திருவைந்தெழுத்தாகிய **"நமசிவய"** என்பதனைத் **தூலபஞ்சாட்சரம்** என்பர். "நமச்சிவாய வாழ்க" என்கிறது திருவாசகம். இதனைப் பிரணவத் தோடு சேர்த்து உச்சரித்தல் வேண்டும் என்பர் ஆன்றோர்.

2. **"சிவயநம"** என்னும் திருவைந்தெழுத்தினைச் **சூக்கும பஞ்சாட்சரம்** என்பர். "நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்" என அருளிச் செய்துள்ளார் மாணிக்கவாசகர். இதில் "சிவ" என்பது பதியையும், "ய" என்பது உயிரை (பசு)யும், "நம" என்பது பாசத்தையும் குறிக்கும் என்பர்.

3. **"சிவய சிவ"** என்னும் பஞ்சாட்சரம் **அதி சூக்கும பஞ்சாட்சரம்.** இதனை இருதலை மாணிக்கம் என்பர்.

4. **"சிவ சிவ"** என்பது **காரண பஞ்சாட்சரம்** ஆகும். "சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்" என்பது திருமூலர் வாக்கு.

5. **"சிவ"** என்பது **மகாகாரண பஞ்சாட்சரம்.** இதனைச் சிவசக்தி சொரூபம் என்பர். "சிவன் எனும் ஓசையல்லது அறையோம்" என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு. பாடல் வ. எண் 72 காண்க.

12. திருப்பழனம்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம் 63இல், இது 50ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. இது திருவையாற்றை மையமாகக் கொண்ட ஏழூர் தலங்களில் ஒன்று. ஏனையவை: திருநெய்த்தானம், திருச்சோற்றுத்துறை, திருப்பூந்துருத்தி, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருமழபாடி என்பன.

இது சந்திரன் வழிபட்ட திருத்தலம். மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 67 காண்க.

சுவாமி : ஆபத்சகாயர்

அம்பிகை : பெரியநாயகி

தல மரம் : வாழை

தீர்த்தம் : மங்கள தீர்த்தம்

பண் : பழந்தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

114. சொல்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னி
பொன்மாலை மார்பன்என் புதுநலம் உண்டு
இகழ்வானோ.

தெளிவுரை: நல்லிசை கொண்டு ஈசனைப் போற்றி வாழ்கின்ற குயிலினங்களே! வண்டுகள் ரீங்காரம் செய்து பண் இசைக்கும் மாலைகள் பல வண்ணம் தரித்திருக்கும் சிவபெருமான், பழனம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருப்பவர்; இளமையான பிறைச் சந்திரனைத் திருமுடியில் கொண்டு, பொன் போன்ற கொன்றை மலரைத் திருமார்பில் பொலிய விளங்கு பவர். அப்பெருமான், என்னை அடிமை கொண்டு என் உள்ளத்தில் மேவும் அன்புத் தேனைப் பருகியவர். அவரிடம் என்னைப் பற்றிச் சொல்வீராக. அவர் உங்களை இகழவே மாட்டார். அத்தகைய பேரன்பு உடையவர் அவர்.

இது அகத்துறையின்பாற்பட்டுத் தலைவி, தலைவன்பால் தூது அனுப்பி நினைவூட்டும் பாங்கினில் அமைந்தது.

சிறப்புரை: "உன்னை உகப்பன் குயிலே" என்னும் மணிவாசகர் வாக்கின் வழியில் குயிலின் இனிய குரல் வளத்தின் மேன்மை கண்டு தூது அனுப்பும் நோக்கில் இத் திருப்பாட்டானது ஏத்தப் பெற்றது. ஈசன் பால் தன்னை இழந்த நலமானது "புதுநலம்" எனச் சிறப்பிக்கப் பெற்றது. இத்தன்மையில், "புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ" என வரும் திருவாசக அமுதவாக்கின் நயமும் (திருவெம் பாவை 3) காண்க.

115. கண்டகங்காண் முண்டகங்காள் கைதைகாண் நெய்தல்காள்
பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப் பழனத்தான்
வண்டுலாம் தடமூழ்கி மற்றவன்என் தளிர்வண்ணம்
கொண்டநாள் தானறிவான் குறிக்கொள்ளாது ஒழிவானோ.

தெளிவுரை: முள்ளிச் செடி காணும் தாமரைகளே! தாழையைக் காணும் நெய்தல்காள்! ஈசன், பாண்டரங்கம் என்னும் புகழ்ப்பாடல்கள் ஓய்விலாது விளங்கும் பழன நகரில் விளங்குபவர்; பொய்கையில் மூழ்கி நீராட என் தளிர் வண்ணத்தைக் கொண்டு என்னை ஆட்கொண்டவர். அப்பெருமான் என்னை நன்கு அறிவார். எனவே என்னைக் குறித்து அருளாது இருப்பரோ! இது மலர் விடு தூது ஆயிற்று.

116. மனைக்காஞ்சி இளங்குருகே மறந்தாயோ மதமுகத்த
பனைக்கைமா வுரிபோர்த்தான் பலர்பாடும் பழனத்தான்
நினைக்கின்ற நினைப்பெல்லாம் உரையாயோ
நிகழ்வண்டே
சுனைக்குவளை மலர்க்கண்ணாள் சொற்றூதாய்ச்
சோர்வாளோ.

தெளிவுரை: வீட்டுத் தோட்டங்களில் விளங்கும் காஞ்சி மரங்களில் வாசம் செய்யும் இளம் பறவையே! சிவபெருமான், மதம் பொருந்திய நீண்ட துதிக்கை யுடைய யானையைக் கொன்று, அதன் தோலைப் போர்த்திக் கொண்டவர்; பல்லோராலும் பாடிப் போற்றப்படும் பழனத்தில் வீற்றிருப்பவர். நான் நினைப்பதெல்லாம் உரைப்பயோ! முன்னர் வண்டு மொய்க்கும் குவளை மலர் போன்ற கண்ணுடை யாளைத் தூது சொல்ல அனுப்பினேன். அவள் மயங்கினளோ!

117. புதியையாய் இனியையாம் பூந்தென்றால் புறங்காடு
பதியாவது இதுஎன்று பலர்பாடும் பழனத்தான்
மதியாதார் வேள்விதனை மதித்திட்ட மதிகங்கை
விதியாளன் என்னுயிர்மேல் விளையாடல் விடுத்தானோ.

தெளிவுரை: எப்போதும் புதியதாகவும் இனிமை யாகவும் நறுமணம் கமழுமாறு வீசும் தென்றலே! சிவபெருமான், மயானத்தை இடமாகக் கொண்டவர்; பலர் போற்றிப் பாடும் பழனத்தில் வீற்றிருப்பவர்; மதியாத தக்கனுடைய வேள்வியைப் பொருட்டாகக் கருதிப் பங்கேற்ற அனைவரையும் வீரபத்திரர் திருக்கோலம் தாங்கித் தண்டித்தவர்; சந்திரனையும் கங்கையையும் சடை முடியில் தரித்துத் தமது ஆக்ஞைக்கு விதித்தவர். அப்பெருமான், என் ஆன்மாவில் கலந்து திருவிளையாட்டைப் புரிந்தனரோ!

சிறப்புரை: உயிர்க்கு இனிமையும் மூச்சுக்குப் புத்துணர் வையும் வழங்கும் தென்றல் காற்றின் சிறப்பானது, "புதியை யாய் இனியை யாம்" என, ஏத்தப் பெற்றது. இது ஈசனின் அட்ட மூர்த்தங்களில் ஒன்றாதல் காண்க.

மதியாதார் வேள்வி – தக்க யாகம்.

118. மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த இசைபாடும் பழனம்சேர் அப்பனைஎன்
கண்பொருந்தும் போதத்தும் கைவிடநான் கடவேனோ.

தெளிவுரை: மண்ணுலகத்தில் இனிது வாழும் மாந்த ருக்கும், சிறப்பான ஆசார சீலத்தோடு, தூய்மையான தீர்த்தம் விண்ணுலகத்தில் பொருந்தித் திகழும் தேவ ருக்கும் முத்திப் பேறாய் விளங்குபவர், சிவபெருமான். அப்பெருமான், பண்ணிசை ஓங்கும் பழனத்தில் வீற்றிருக்கும் என் அப்பன். அவரை நான் கண் துஞ்சி மறையும் காலத்திலும் வழிபடாமல் இருப்பனோ!

நான் உயிருள்ள வரை அப் பெருமானை இறைஞ்சி ஏத்துவேன் என்பது குறிப்பு.

119. பொங்கோத மால்கடலிற் புறம்புறம்போய் இரைதேரும்
செங்கால்வெண் மடநாராய் செயற்படுவது அறியேனான்
அங்கோல வளைகவர்ந்தான் அணிபொழில்சூழ்
பழனத்தான்
தங்கோல நறுங்கொன்றைத் தாரருளாது ஒழிவானோ.

தெளிவுரை: *பொங்கி வரும் பெரிய கடலிற் புறம் சென்று இரை தேடும் சிவந்த கால்களை உடைய வெண்நாரையே! நான், என் நிலை மறந்து செயலற்றேன். அழகிய வளையலைக் கவர்ந்த, அழகிய பொழில் சூழ்ந்த பழனத்தில் வீற்றிருக்கும் சிவ பெருமான், நறுமணம் கமழும் கொன்றை மாலை அணிந்தவர். அவர் அருள் புரியாது இருப்பாரோ!*

சிறப்புரை: *தன்னுடைய வயத்தை இழந்து மெய்ஞ்ஞான உணர்வினால் ஆட்கொண்ட செயலானது "செயற் படுவது அறியேன்" என ஓதப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "செய்வது அறியாச் சிறு நாயேன்" என உரைத்தருளுதலும் (திருவாசகம் பாடல் 56) காண்க.*

120. துணையார முயங்கிப் போய்த் துறைசேரும் மடநாராய்
பணையார வாரத்தான் பாட்டோவாப் பழனத்தான்
கணையார இருவிசும்பிற் கடியரணம் பொடிசெய்த
இணையார மார்பன்என் எழில்நலம் உண்டு
இகழ்வானோ.

தெளிவுரை: *துணையாக விளங்கும் பெடையுடன் நீர்த்துறை சேரும் நாரையே! பக்தி ஆரவாரமும் புகழ்ப் பாடல்களும் ஓய்வின்றி விளங்குகின்ற பழனத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான், விரிந்து பரந்த வானத்தில் கோட்டைகளை அமைத்திருந்து, தீயன புரிந்த மூன்று அசுரர்களையும், அவர்களுடைய கோட்டைகளையும்*

எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர். அப்பெருமான் என் எழிலையும், உள்ளத்தையும் கவர்ந்த திருமார்பினை உடையவர். அவர்பால் என்னைப் பற்றிப் பேசுக. அவர் இகழ்தல் செய்யாதவர்.

121. கூவைவாய் மணிவரன்றிக் கொழித்தோடும் காவிரிப்பூம்
பாவைவாய் முத்திலங்கப் பாய்ந்தாடும் பழனத்தான்
கோவைவாய் மலைமகள்கோன் கொல்லேற்றின் கொடியாடைப்
பூவைகாண் மழலைகாள் போகாத பொழுதுளதே.

தெளிவுரை: குவியலும் திரட்சியுமாய் விளங்குகின்ற நவமணியும் முத்தும் கொழித்து மேவும் காவிரியன்னை பாயும் பழனத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான், கோவைக் கனி போன்ற இதழ் கொண்டு மேவும் உமாதேவியைப் பாகமாகக்கொண்டு விளங்குபவர்; வீரம் மிக்க இடபக் கொடியுடையவர். நாகணவாய்ப் பறவையே! நான் அப்பெருமானையே நினைத்து ஏங்கு கின்றேன். அதனால் பொழுது போகாதது போன்று நீண்டு வளர்கின்றதே, என் செய்வேன்!

122. புள்ளிமான் பொறியரவம் புள்ளுயர்த்தான் மணிநாகப்
பள்ளியான் தொழுதேத்த இருக்கின்ற பழனத்தான்
உள்ளுவார் வினைதீர்க்கும் என்றுரைப்பர் உலகெல்லாம்
கள்ளியே னானிவர்க்குஎன் கனவளையும் கடவேனோ.

தெளிவுரை: அழகிய புள்ளிகளையுடைய மானும், அரவமும், மற்றும் பிரமன் திருமால் ஆகியோரும் தொழுது ஏத்த இருக்கின்றவர், திருப்பழனத்தில் மேவும் ஈசன். அப்பெருமானை நினைத்துப் போற்றும் அடியவர்களின் வினை யாவும் தீரும் என உலக மெல்லாம் உரைக்கும். கள்ளத்தன்மையுடையவளாகிய நான் என் கைவளையும் நழுவக் கலங்கி ஏங்கு

கின்றேன். இது அன்பின் மிகையை விதந்து ஓதுதலாயிற்று.

123. வஞ்சித்துஎன் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிற்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன் என்னைக் கவர்ந்து ஆட்கொண்டு வளை கொண்ட நிலையில் ஏங்க வைத்து வாராமல் இருப்பினும், அவர் மென்மையான சிறகுகளையுடைய அன்னப் பறவை விரிந்து திகழும் பழனத்தில் வீற்றிருப் பவர். உலகின் துன்பங்கள் யாவும் நலிந்து அஞ்சியோடு மாறு, வேள்விகளைப் புரியும் அப்பூதியடிகளின் திருமுடியின் மீது விளங்கும் மலர் என விளங்குவது, அப்பெருமானின் சேவடியே.

சிறப்புரை: அப்பூதிஅடிகளாரின் திருப்பணியானது இவண் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் திருநாவுக்கரசர் பால் பேரன்பு பூண்டு அவர் திருப்பெயரை நாட்டித் தொண்டு செய்து வந்தவர். அறுபத்து மூன்று நாயன் மார்களுள் ஒருவர். ஈசன் திருவடி மலரானது இவ்வடியவர்தம் முடியில் விளங்கும் மலர் என ஏத்தப் பெறும் சீரினை ஓர்க.

குஞ்சிப்பூ – முடியில் சூடுகின்ற பூ. இதனை ஈசன் திருவடி மலராகப் போற்றப்பட்டது; கோடியையே – கோடு இயையே; அகத்துறையில் தலைவன் வருவனோ என எண்ணிக் கண்களை மூடிக்கொண்டு தலைவியானவள் இரண்டு கோடுகளைக் கிழிக்க, அவை இயையும் தன்மையில் தலைவன் வருவான் எனும் குறிப்புக் கொண்டு மகிழ்வாள். அத்தன்மையில் இது வேண்டுதல் ஆயிற்று.

13. திருவையாறு

தல விளக்கம்: *பதிகம் எண் 3 காண்க.*

பண் : *பழந்தக்கராகம்*

திருச்சிற்றம்பலம்

124. விடகிலேன் அடிநாயேன் வேண்டியக்கா லியாதொன்றும்
இடகிலேன் அமணர்கள்தம் அறவுரைகேட்டு அலமந்தேன்
தொடர்கின்றேன் உன்னுடைய தூமலர்ச்சே வடிகாண்பான்
அடைகின்றேன் ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே.

தெளிவுரை: *ஈசனைப் பிணையாகப் பற்றி நான், விடாமல் போற்றுபவன் ஆனேன். கீழ்மையுடைய நாய்த் தன்மை உடையவனாய்ப் பிறர்க்கு, அறம் செய்து ஈதலை செய்யாதவனானேன்; அமணர்கள் உரைக்கும் உரைகளைக் கேட்டு அதன்வழி நடந்து துயருற்றேன். சிவபெருமானே! இப்போது தேவரீருடைய செழுமையான திருவடியைத் தரிசிப்பதற்காகத் தொடர்ந்து செல்கின்றேன். இந்நிலையில் திருவையாற்றை அடைகின்றேன். நான் ஆங்கு எழுந்தருளியுள்ள தேவரீரின் அடியவன் ஆகி உய்ந்தேன்.*

சிறப்புரை: *ஈசனை நனி பற்றி மேவும் உறுதியானது, "விட கிலேன்" என உணர்த்தப் பெற்றது. இனி, மாணிக்கவாசகர். "செப்புதற்கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ செல்வமே சிவபெருமானே! எய்ப்பிடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்து அருளுவது*

இனியே" எனச் சிக்கெனப் பிடித்தும் விடாமல் பற்றி மேவும் மாண்பினையும் ஓதுதலாயிற்று.

நாயினது இழிந்த பிறவித் தன்மையும், அதன் உயர்ந்ததாகிய நன்றியுணர்வினையும் ஒருசேர உணர்த்தும் தன்மைய, "அடிநாயேன்" என உரைக்கப் பெற்றது. இது, எத்தன்மையிலும் தலைவனுக்குக் கட்டுப்பட்டு மேவுதலும் நன்றியுடையதாதலும் ஆகிய பண்பினை ஏத்துதலாகும். இத்தன்மையில் "நாயேனைத் தன்னடிகள் பாடு வித்த நாயகனை" என மணிவாசகரும், "நாயேன் பல நாளும் நினைப்பின்றி மனத்துன்னைப் பேயாய்த் திரிந்தலைந்தேன் பெறலாகா அருள் பெற்றேன்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருளிச் செய்த பாங்கினைக் காண்க.

125. **செம்பவளத் திருவுருவர் திகழ்சோதி குழைக்காதர்**
கொம்பமரும் கொடிமருங்குற் கோல்வளையாள் ஒருபாகர்
வம்பவிழு மலர்க்கொன்றை வளர்சடைமேல் வைத்துகந்த
அம்பவள ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே.

தெளிவுரை: ஈசன், செம்பவளம் போன்ற வண்ணத் திருமேனியுடையவர்; மனத்திற் குளிர்ச்சி நல்கும் சோதியாய்த் திகழ்பவர்; காதில் குழை அணிந்தவர்; கொடி போன்ற மெல்லிய இடையும், அழகிய வளையலும் அணிந்து விளங்கும் உமாதேவியை, ஒரு பாகமாகக் கொண்டவர்; நறுமணம் கமழும் கொன்றை மலரைச் சடை முடியின் மீது வைத்து மகிழ்பவர். அப்பெருமான், திருவையாற்றில் வீற்றிருக்கும் சிவபெருமான் ஆவார். அப்பெருமானுக்கு நான் அடிமை கொண்டு மகிழும் ஆளாகி உய்ந்தேன்.

சிறப்புரை: இத்திருத்தலத்தில் மேவும் ஈசனின் திருநாம மாகிய செம்பொன் சோதி என்பது "திகழ் சோதி" என ஓதப் பெற்றதைக் காண்க.

ஈசன் தோடுடைய செவியர் என்பதும், குழைக் காதர் என்பதும் ஆங்காங்கு ஓதப் பெற்ற தன்மையில், உமைக்குரிய அணிகலனாகிய தோடும், ஆடவர்க்குரிய அணிகலனாகக் குழையும் குறிப்பிடுதலைக் காண்க. இரண்டு கந்தருவர்கள் - அஸ்வதரன், கம்பதரன் என்பவர்கள், காதில் குழையாக இருந்து இசைத்துப் பாடுகின்றனர் என்பது புராண வரலாறு.

ஈசனுக்கு ஆளாய் நின்று பணிந்து ஏத்துதலின் சிறப்பு, "ஐயாறர்க்கு ஆளாய் நான் உய்ந்தேனே" என உரைக்கப் பெற்றது. இத்தன்மையில், "அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தவாறும் நோக்குக. ஈசனை ஏத்தித் தாள்மலர்களை மலர்தூவிப் போற்றுதலும், கசிந்து மனம் உருகிப் போற்றுதலும் ஆகிய செயல்களை மேவுதல் "ஆள்" என்னும் தன்மையால் இவண் குறிப்பிடுதல் ஆயிற்று. இந்நெறியில், "தாளதாமரைகள் ஏத்தித் தடமலர் புனைந்து நையும் ஆளலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே" (அச்சப் பத்து 6) என அருளிச் செய்த திருவாசக அமுத வாக்கும் காண்க.

126. **நணியானே சேயானே நம்பானே செம்பொன்னின்**
துணியானே தோலானே சுண்ணவெண் ணீற்றானே
மணியானே வானவர்க்கு மருந்தாகிப் பிணிதீர்க்கும்
அணியானே ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே.

தெளிவுரை: ஈசன், அண்மையில் நண்ணி விளங்குபவர்; மிகத் தொலை தூரத்திலும் இருப்பவர்; நண்பனாய்த்

திகழ்பவர்; செம்பொன்னின் சோதியானவர்; தோலை உடுத்தியவர்; திருவெண்ணீற்றுத் திருமேனியர்; மாணிக்கமாக ஒளிர்பவர்; வானவர்களுக்குத் துன்பம் ஏதும் நிகழாமல் காப்பவர்; அழகு மிக்கவர். அத்தகைய பெருமான், ஐயாற்றில் வீற்றிருப்பவர். அவருக்கு நான் ஆளாகி உய்ந்தேன்.

127. ஊழித்தீ யாய்நின்றாய் உள்குவார் உள்ளத்தாய்
வாழித்தீ யாய்நின்றாய் வாழ்த்துவார் வாயானே
பாழித்தீ யாய்நின்றாய் படர்சடைமேற் பனிமதியம்
ஆழித்தீ ஐயாறர்க்கு ஆளாய் நான் உய்ந்தேனே.

தெளிவுரை: ஈசன் ஊழித் தீயாய் நின்று எல்லாவற்றையும் தன்பால் ஈர்த்துப் பிரளய காலத்தில் விளங்குபவர்; உடலில் தோன்றும் மூன்று வகையான தீயாகி வாழும்படி செய்பவர்; வாழ்த்திப் போற்றும் அன்பர்தம் வாய்ச் சொல்லாக விளங்குபவர்; உலகினைப் படைக்கும் வெப்பமானவர்; படர்ந்து மேவும் சடை முடியின் மீது குளிர்ந்த பிறைச் சந்திரனைச் சூடியவர். அப்பெருமான், கடல் போன்ற என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து சுழன்று வரும் தீயாகி விளங்கும் ஐயாற்றினர். அவருக்கு நான் ஆளாகி உய்ந்தனன்.

சிறப்புரை: ஊழி முதல்வனாய் மேவும் ஈசனின் பேராற்றலை ஊழித்தீயாய் என ஏத்தி உணர்த்தப் பெற்றது. இத்தேகத்தின் உயிர்ப்புச் சக்தியாய் விளங்கிப் பாதுகாக்கும் மூன்று வகையான தீயாகிய ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணாக்கினி என்பன "வாழித்தீ" என உரைப்பதாயிற்று.

128. சடையானே சடையிடையே தவழும்தண் மதியானே
விடையானே விடையேறிப் புரமெரித்த வித்தகனே

உடையானே உடைதலை கொண்டு ஊரூர்உண்
பலிக்குழலும்
அடையானே ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே.

தெளிவுரை: ஈசன், சடை முடியுடையவர்; அதன் மேல் குளிர்ந்த சந்திரனைத் தரித்தவர்; இடப வாகனத்தை உடையவர்; முப்புரங்களை எரித்த வித்தகர்; என்னை ஆளாக உடையவர்; பிரம கபாலம் ஏந்திப் பலி ஏற்க, ஊர் தொறும் திரிந்தவர். அப்பெருமான், அடைதற்கு எதுவும் இல்லாத தன்மையில், தம்பால் யாவரும் அடையுமாறு புரிபவர். ஐயாற்றில் உள்ள அவருக்கு நான் ஆளாகி உய்ந்தேன்.

சிறப்புரை: ஈசன் யாவற்றையும் உடையவர் என்பது. "உடையானே" என ஏத்தப் பெற்றது. இது தன்னை அப் பெருமானுக்கு ஆட்படுத்திக் கொண்ட பாங்கினையும் உணர்த்தும். இத்தன்மையில் மாணிக்க வாசகர், "ஆடகச்சீர் மணிக் குன்றே! இடையறா அன்பு உனக்கு என் ஊடகத்தே நின்று உருகத் தந்தருள் எம் உடையானே" எனவும், "உடைய நாதனே போற்றி நின்னலாற் பற்று மற்று எனக்கு ஆவது ஒன்று இனி உடையனோ!" எனவும் அருளிச் செய்தவாறும் காண்க.

129. நீரானே தீயானே நெதியானே கதியானே
ஊரானே உலகானே உடலானே உயிரானே
பேரானே பிறைசூடி பிணிதீர்க்கும் பெருமான்என்று
ஆராத ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே.

தெளிவுரை: ஈசன், நீராகவும் நெருப்பாகவும் விளங்கு பவர்; நற்கதியைத் தரும் தியானமாகவும் நற்கதி யாகவும் விளங்குபவர்; ஊரும், உலகும், உடலும், உயிருமாக விளங்குபவர்; மொழியப் பெறும் எல்லாச்

சொற்களும் குறிக்கும் பெயராகவும் திகழ்பவர். அவர், பிறைசூடும் பெருமான் ஆவார்; பிணி தீர்க்கும் பெருமானாய்த் திகழ்பவர்; அத்தகையவர் ஐயாற்றில் வீற்றிருக்கும் சிவபெருமான். நான் அவருக்கு ஆளாகி உய்ந்தனன்.

நெதி – செல்வம்; தியானம்.

130. **கண்ணானாய் மணியானாய் கருத்தானாய் அருத்தானாய்**
எண்ணானாய் எழுத்தானாய் எழுத்தினுக்கோர் இயல்பானாய்
விண்ணானாய் விண்ணிடையே புரமெரித்த வேதியனே
அண்ணான ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே.

தெளிவுரை: ஈசன், கண்ணாகவும், கண்ணின் மணியாகவும், கருத்தாகவும் அகத்தில் நுகர்கின்ற பொருளாகவும் விளங்குபவர்; எண்ணும் எழுத்தும் ஆனவர்; எழுதுகின்ற எழுத்துக்கும் மூலமாய் இயங்கு பவர்; ஆகாயமாக விரிந்து மேவுபவர்; ஆகாயத்தில் திரிந்த மூன்று புரங்களை எரித்துச் சாம்பலாக்கியவர்; வேதமாகத் திகழ்பவர்; அண்மையாய்த் தோன்றி அருள் வழங்கும் ஐயாற்றில் வீற்றிருப்பவர். அப்பெருமானுக்கு நான் ஆளாகி உய்ந்தனன்.

சிறப்புரை: ஈசன் எல்லா எழுத்துக்கும் இயல்பாகி விளங்குதல், "எழுத்திற்கோர் இயல்பானாய்" என உணர்த்தப் பெற்றது. இதனை, "அகர முதல எழுத்தெல்லாம்" என வரும் திருக்குறள் கருத்தினைக் கொண்டும் நோக்கற்பாலது. இத்தன்மையில், சுந்தர மூர்த்தி சுவாமிகள், "அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய் அடியேன் உய்யப் போவதோர் சூழல்

சொல்லே'' (திருநெல்வாயில் அரத்துறைப் பதிகம், பாடல் எண் 7) என அருளிச் செய்தவாறும் காண்க.

அருத்தம் – அருந்துதல், நுகர்தல்;
அண்ணான – அண்ணுதல், அண்மையாதல், நெருக்கம்.

131. மின்னானாய் உருமானாய் வேதத்தின் பொருளானாய்
பொன்னானாய் மணியானாய் பொருகடல்வாய்
முத்தானாய்
நின்னானார் இருவர்க்கும் காண்பரிய நிமிர்சோதி
அன்னானே ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே.

தெளிவுரை: *ஈசன், மின்னலை நிகர்த்த ஒளியும் அதன் உருவமும் ஆனவர்; வேதத்தின் பொருளானவர்; பொன்னும், மணியும், கடலின் முத்தும் ஆனவர்; பிரமனும் திருமாலும் காண்பரிய பெருஞ்சோதி ஆனவர். அப்பெருமானே ஐயாற்றில் மேவும் சிவபெருமான். அவருக்கு நான் ஆளாகி உய்ந்தனன்.*

132. முத்திசையும் புனற்பொன்னி மொய்பவளம் கொழித்து
உந்தப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப் பலகாலும் பணிந்து ஏத்த
எத்திசையும் வானவர்கள் எம்பெருமான் எனஇறைஞ்சும்
அத்திசையாம் ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே.

தெளிவுரை: *முத்துக்களையும் பவளங்களையும் கொழிக்கின்ற பொன்னி நதியில் பக்தர்கள் மூழ்கி எழுந்து பணிந்து ஏத்தவும், தேவர்கள் எல்லாத் திசைகளிலிருந்தும் "எம்பெருமானே!" என இறைஞ்சி வாழ்த்தவும் உள்ளனர். அவர்களுக்கு அந்த அந்தத் திசைகளில் அருள் நல்கும் பெருமான் ஐயாற்றீசர். அவருக்கு நான் ஆளாகி உய்ந்தனன்.*

முத்திசையும் – முத்து இசையும்; பொன்னி – காவிரி.

133. கருவரைசூழ் கடலிலங்கைக் கோமானைக் கருத்தழியத்
திருவிரலால் உதைகரணம் செய்துகந்த சிவமூர்த்தி
பெருவரைசூழ் வையத்தார் பேர்நந்தி என்றேத்தும்
அருவரைசூழ் ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், இராவணனின் தீய கருத்தானது அழியுமாறு, திருப்பாத விரலால் அடர்த்து உகந்த சிவமூர்த்தியாய் விளங்குபவர்; மலைகள் சூழ்ந்த இவ்வையத்தில் அன்பர்களால் நந்தி என ஏத்தப் பெறுபவர். அவர், அருமையாக ஏத்தப் பெறும் மூங்கில் கள் சூழ்ந்து விளங்கும் ஐயாற்று ஈசன் ஆவார். அவருக்கு நான் ஆளாகி உய்ந்தனன்.

நந்தி – ஈசன். குருவடிவாய் மேவுதலைக் குறித்தது.
அருவரை – வரை – மூங்கில்.

14. பொது – தச புராணத் திருப்பதிகம்

பதிகக் குறிப்பு: தசபுராணம் என்பது 1. சைவ புராணம், 2. பவுடிக புராணம், 3. மார்க்கண்டேய புராணம், 4. இலிங்க புராணம், 5. கந்த புராணம், 6. வராக புராணம், 7. வாமன புராணம், 8. மச்ச புராணம், 9. கூர்ம புராணம், 10. பிரமாண்ட புராணம் ஆகும். இவை சைவத்தைக் குறிக்கும். வைணவம், பாகவதம், நாரதீயம், கருட புராணம் ஆகிய நான்கும் வைணவத்தின் பாற்பட்டது. பிரம புராணமும் பதும புராணமும் பிரமனுக்கு உரியது. பிரம கைவர்த்தம் என்பது சூரியனைக் குறித்தது. ஆக்கினேயம் என்பது அக்கினிக்கு உரித்தானது. ஆக புராணங்கள் பதினெட்டு.

சைவ புராணத்தின் கருத்துக்கள் இத்திருப் பதிகத்தில் வருவதால் இது தசபுராணத் திருப்பதிகம் எனப் போற்றப்படுகிறது.

பண் : பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

134. பருவரை யொன்றுசுற்றி அரவங்கைவிட்ட
இமையோர்இரிந்து பயமாய்த்
திருநெடு மால் நிறத்தை அடுவான் விசும்பு
சுடுவான் எழுந்து விசைபோய்ப்
பெருகிட மற்றிதற்கொர் பிதிகாரம் ஒன்றை
அருளாய் பிரானே எனலும்
அருள்கொடு மாவிடத்தை எரியாமல் உண்ட
அவன் அண்டர் அண்டர் அரசே.

தெளிவுரை: தேவர்கள், மேரு மலையை மத்தாகக் கொண்டு, வாசுகி என்னும் அரவத்தை நாணாகப் பற்றிப் பாற்கடலைக் கடைந்த போது கொடிய நஞ்சானது வெளிப்பட்டது. அதன் வெம்மையைத் தாங்க முடியாது தேவர்கள் அஞ்சிச் சிதறி ஓடினர். திருமால் தனது நிறம் மாறி வெதும்பினார். இத் துன்பத்திலிருந்து நீங்குமாறு அருள் புரிவீராக! என அனைவரும் ஏத்த, அக்கொடிய நஞ்சினைத் தமது கண்டத்தில் தேக்கி வைத்துப் பாதுகாத்தவர் ஈசன். அவரே, அண்டங்கள் யாவற்றுக்கும் அரசர் ஆவார்.

135. நிரவொலி வெள்ளம் மண்டி நெடுஅண்டமூட
நிலநின்று தம்ப மதுவப்
பரமொரு தெய்வம்எய்த இதுஒப்பதில்லை
இருபாலு நின்று பணியப்
பிரமனும் மாலும் மேலை முடியோடு பாதம்
அறியாமை நின்ற பெரியோன்

பரமுத லாயதேவர் சிவனாயமூர்த்தி
அவனா நமக்கொர் சரணே.

தெளிவுரை: *பிரமனும் திருமாலும் தமக்குள் பெரியவர் யார் என வாதிட்டு முரணும் காலத்தில் சிவ பெருமான் பெருந்தூணாகத் தோன்றி, அடிமுடி காண முடியாதவாறு அமைந்தனர். பின்னர் அவ்விருவரும் ஈசனின் இருபுறமும் நின்று பணிந்தனர். அத்தகைய ஈசனே சிவமூர்த்தியாவர். யா்ம் அப் பெருமானைச் சரணம் அடைந்தனம்.*

136. காலமும் நாள்கள்ஊழி படையாமுன்ஏக
உருவாகி மூவர் உருவில்
சாலவும் ஆகிமிக்க சமயங்கள் ஆறின்
உருவாகி நின்ற தழலோன்
ஞாலமு மேலை விண்ணோடு உலகேழும் உண்டு
குறளாய் ஓர் ஆலின் இலைமேல்
பாலனும் ஆயவற்கொர் பரமாய மூர்த்தி
அவனா நமக்கொர் சரணே.

தெளிவுரை: *உலகமும் காலமும் தோன்றுவதற்கும், யாவும் படைக்கப்படுவதற்கும் முன்னால் ஏகனாக விளங்கியவர் சிவபெருமான். பின்னர் அயன், அரி, அரன் என் மூன்று வடிவினர் ஆயினர். எல்லாமாய் விளங்கும் அப்பெருமான் ஆறு சமயங்களாகவும் விளங்குபவர். உலகேழும் உண்ட திருமால், ஆலிலை யின் மேல் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்க அவருக்குப் பரம் பொருளாக விளங்குபவர், அவர். நாம் அவரைச் சரண் அடைந்தோம்.*

அறு சமயம்: 1) பாசுபதம், மகா விரதம், காபாலிகம், வாமனம், பைரவம், சைவம்.

2) சௌரம், காணபத்திரம், கௌமாரம், வைணவம், சாக்தம், சைவம்.

137. நீடுயர் விண்ணுமண்ணு நெடுவேலை குன்றொடு
உலகேழும் எங்கு நலியச்
சூடிய கையராகி இமையோர் கணங்கள்
துதியோதிநின்று தொழலும்
ஓடிய தாரகன்றன் உடலம் பிளந்தும்
ஒழியாத கோபம் ஒழிய
ஆடிய மாநடத்தெம் அனலாடி பாதம்
அவையா நமக்கொர் சரணே.

தெளிவுரை: வானுலகத்தினரும் மண்ணுலகத்தினரும் மற்றும் ஏழு உலகங்களும் நலியுமாறு செய்தவன் தாருகாசூரன். அஞ்சான்று எல்லாரும் சிவபெருமானைத் துதி செய்து காத்து அருளுமாறு வேண்டினர். ஈசன் தன்னை அழித்து விடுவரோ என்று ஓடிய தாருகாசூரனின் உடலைக் கிழித்து பெரிய நடனத்தைப் புரிந்து சினத்தையும் அழிவையும் அடக்கிக் காத்தருளினார். அப்பெருமானுடைய ஆடிய பாதமே நமக்குச் சரண் ஆகும்.

குறிப்பு: கந்தபுராணத்தில் வரும் தாருகன் வேறானவன்.

138. நிலைவலி இன்றிளங்கும் நிலனோடு விண்ணும்
நிதனம்செய் தோடு புரமூன்று
அலைநலி வஞ்சியோடி அரியோடு தேவர்
அரணம் புகத்தன் அருளால்
கொலைநலி வாளிமூள அரவங்கைநாணும்
அனல்பாய நீறு புரமா
மலைசிலை கையில்ஒல்க வளைவித்த வள்ளல்
அவனா நமக்கொர் சரணே.

தெளிவுரை: தனக்கு நிகர் யாரும் இல்லாத வகையில் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் அழித்துத் துன்புறுத்திய மூன்று கோட்டைகளையுடைய அசுரர் களை; மேருவை வில்லாகக் கொண்டு வாசுகி என்ற அரவத்தைக் கயிறாகப் பற்றி அக்கினிக் கணை தொடுத்து எரித்துச் சாம்பலாக்கிக் காத்தருளியவர் சிவபெருமான். அவ் வள்ளலைச் சரண மடைவோம்.

139. நீலநன்மேனி செங்கண் வளைவெள் ளெயிற்றன்
எரிகேச நேடிவருநாள்
காலைநன் மாலைகொண்டு வழிபாடு செய்யும்
அளவின் கண் வந்து குறுகிப்
பாலனை யோட ஓடப் பயம் எய்துவித்த
உயிர்வவ்வு பாசம் விடும்அக்
காலனை வீடு செய்த கழல் போலும் அண்டர்
தொழுது ஓதுசூடு கழலே.

தெளிவுரை: நீல மேனியும் சிவந்த கண்ணும் வளைந்த வெண்பல்லும் நெருப்புப் போன்ற தலைமுடியும் உடையவன், காலன். காலையும் மாலையும் வழிபாடு செய்யும் மார்க்கண்டேயரை அணுகி அஞ்சுமாறு விரட்டிய அக்காலனைத் திருப்பாதத்தால் அழித்தவர் சிவபெருமான். அத்திருக்கழலே உலகத்தவர் தொழுது போற்றவும் ஓதி ஏத்தவும் முடியின்கண் சூடப் பெறுவதும் ஆகும்.

சிறப்புரை: காலனைக் காய்ந்த ஈசனைப் போற்றி அத்திருப்பாதமே தலையில் சூடத்தக்கது என ஓதி யுரைத்தல் காண்க.

140. உயர்தவ மிக்கதக்கன் உயர்வேள்வி தன்னில்
அவியுண்ண வந்த இமையோர்

பயமுறும் எச்சன் அங்கி மதியோனும் உற்ற
படிகண்டு நின்று பயமாய்
அயனொடு மாலும்எங்கள் அறியாமையாதி
கமியென்று இறைஞ்சி அகலச்
சயமுறு தன்மைகண்ட தழல்வண்ணன்எந்தை
கழல்கண்டு கொள்கை கடனே.

தெளிவுரை: உயர்ந்ததாகிய தவத்தினைப் புரிந்தவன் தக்கன். அவன் புரிந்த வேள்வியில், அவிர்ப்பாகத் தினை நாடி வந்த தேவர்களும் எச்சன் அக்கினி முதலானோரும் ஈசனுக்கு அஞ்சி ஓடினர்; பிரமனும் திருமாலும் அறியாமையைப் பொறுத்தருளுமாறு வேண்டினர். அத்தகைய ஆற்றல் மிக்க தழல் வண்ண னாகிய ஈசனின் திருக்கழலைக் கண்டு தரிசித்தலே எமக்குக் கடமையாகும்.

கமி – பொறுத்தல்.

141. நலமலி மங்கை நங்கை விளையாடி ஓடி
நயனத் தலங்கள் கரமா
உலகினை ஏழுமுற்றும் இருள்மூடமூட
இருள்ஓட நெற்றி யொருகண்
அலர்தர வஞ்சிமற்றை நயனங்கைவிட்டு
மடவாள் இறைஞ்ச மதிபோல்
அலர்தரு சோதிபோல அலர்வித்த முக்கண்
அவனா நமக்கொர் சரணே.

தெளிவுரை: நலங்களை வழங்கும் உமாதேவியார் விளையாட்டின் பாங்காக ஈசனின் இரு திருவிழி களையும் திருக்கரங்களால் புதைப்ப உலகம் யாவும் இருள் மயமாகியது. அப்போது அவ்விருளை நீக்கும் தன்மையில் ஈசன் நெற்றிக் கண்ணைத் திறந்து உலகின் இருள் கெடுமாறு ஒளியை உண்டாக்கினார். அவ்

வெப்பத்தைக் கண்டு அஞ்சிய அம்பிகை ஈசனை ஏத்த அது மதியைப் போல் குளிர்ந்தது. அத்தகைய முக்கண் மூர்த்தியை நாம் சரண் அடைந்தனம்.

வஞ்சி – அம்பிகை.

142. கழைபடு காடு தென்றல் குயில்கூவ அஞ்சு
கணையோன் அணைந்து புகலும்
மழைவடி வண்ணன்எண்ணி மகவோனைவிட்ட
மலரான தொட்ட மதனன்
எழில்பொடி வெந்துவீழ இமையோர்கள் கணங்கள்
எரியென்று இறைஞ்சி யகலத்
தழல்படு நெற்றி யொற்றை நயனம் சிவந்த
தழல்வண்ணன் எந்தை சரணே.

தெளிவுரை: இனிமையுடைய கரும்பு வில்லைக் கொண்டு மலர்க் கணை தொடுத்து ஈசன்பால் ஏவுமாறு திருமால், இந்திரன், பிரமன் ஆகியோர் மன்மதனைப் பணித்தனர். அவ்வாறு மன்மதன் செயற் படுத்த, ஈசனின் நெற்றிக் கண்ணால் எரியுண்டு அழிந்தான். அத்தகைய ஆற்றல் மிகுந்த சிவபெருமான், எம் தந்தை. நாம் அவரிடம் சரணம் அடைந்தோம்.

143. தடமலர் ஆயிரங்கள் குறைஒன்றதாக
நிறைவென்று தன்கண் அதனால்
உடன்வழி பாடுசெய்த திருமாலை எந்தை
பெருமான் உகந்து மிகவும்
சுடரடி யான்முயன்று சுழல்வித்துஅரக்கன்
இதயம் பிளந்த கொடுமை
அடல்வலி ஆழியாழி அவனுக்களித்த
அவனா நமக்கொர் சரணே.

தெளிவுரை: ஆயிரம் தாமரை மலர் கொண்டு வழிபாடு செய்த திருமால், ஒரு மலர் குறைவாக இருக்கக் கண்டு,

தன்னுடைய கண்ணை இடந்து அருச்சித்தார். அவ்வழிபாட்டில் உகந்த சிவபெருமான், சலந்தரா சுரனை அழிப்பதற்காகத் தனது திருப்பாத விரலால் தோற்றுவித்த ஆழிப்படையைத் திருமால் மகிழுமாறு அளித்தார். அத்தகைய பெருமைக்குரிய ஈசன்பால் நாம் சரணம் அடைந்தோம்.

144. கடுகிய தேர்செலாது கயிலாய மீது
கருதேல் உன்வீரம் ஒழிநீ
முடுகுவ தன்று தன்மம் எனநின்று பாகன்
மொழிவானை நன்று முனியா
விடுவிடு வென்றுசென்று விரைவுற் றரக்கன்
வரையுற் றெடுக்க முடிதோள்
நெடுநெடு இற்றுவீழ விரலுற்ற பாத
நினைவுற்றது என்றன் மனமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: விரைந்து செல்லக் கூடிய விமானத்தைக் கயிலாய மலையின் மீது செலுத்தக் கருதேல் என பாகனானவன் இராவணனுக்கு உரைக்க, அவன் செவி மடுக்காது முனிவுற்று விரைந்து சென்று கயிலையை எடுக்கலுற்றான். அதனால் அவனது தோளும் முடியும் இற்று அழுந்துமாறு ஈசன் திருப்பாத விரலால் ஊன்றின். அத்தகைய திருவடியை என் மனமானது ஏத்துதல் ஆயிற்று.

15. பொது - பாவநாசத் திருப்பதிகம்

பதிகக் குறிப்பு: பாவநாசமே என முடித்துப் பாவங்களைப் போக்கும் வழிகளை உபதேசித்து அருளுவதால் இது பாவநாசத் திருப்பதிகம் என ஏத்தப் பெறுவதாயிற்று.

பண் : பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

145. பற்றற்றார்சேர் பழம்பதியைப் பாசூர்நிலாய பவளத்தைச்
சிற்றம்பலத்தெம் திகழ்கனியைத் தீண்டற்கரிய
திருவுருவை
வெற்றியூரில் விரிசுடரை விமலர் கோனைத் திரைசூழ்ந்த
ஒற்றியூர்எம் உத்தமனை உள்ளத்துள்ளே வைத்தேனே.

தெளிவுரை: ஈசன், புறப்பற்றற்ற அடியவர்கள் சேரும் பழம் பதியாக விளங்கும் திருப்புனவாயில் என்னும் தலத்தில் வீற்றிருப்பவர்; திருப்பாசூரில் விளங்கும் பவளம் போன்றவர்; சிற்றம்பலத்தில் வீற்றிருந்து திகழ்பவர்; தீண்டுதற்கு அரியவராய்த் தீண்டாத் திருமேனியாக விளங்குபவர்; வெற்றியூரில் விளங்கும் விரிசுடரானவர்; விமலர்; யாவருக்கும் தலைவர்; கடல் சூழ்ந்த திருஒற்றியூரில் மேவும் உத்தமர். அப்பெரு மானை நான் என் உள்ளத்துள்ளே வைத்து ஏத்து கின்றேன்.

சிறப்புரை: திருப்புனவாயில் என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவனுடைய திருநாமம், பழம்பதி நாதர் என்பது. இது பாண்டிய நாட்டுத் தலங்கள் 14இல் 7ஆவது திருத்தலம். இத் திருத்தலத்தைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "பத்தர்தாம்பலர் பாடி நின்றாடும் பழம்பதி, பொத்தில் ஆந்தைகள் பாட்டறாப் புனவாயிலே" என அருளிச் செய்துள்ளமை காண்க. மாணிக்கவாசகர், "பாண்டி நாடே பழம்பதியாகவும் பக்தி செய் அடியரைப் பரம் பரத்து உய்ப்பவன்" எனக் கீர்த்தித் திருஅகவலில் ஏத்து தலையும் காண்க. வெற்றியூர் என்பது வைப்புத் தலம் என்பர். அட்ட வீரட்டத் தலங்களைக் குறித்தலாம் எனவும் கொள்வர்.

ஈசனுடைய சிவலிங்க மூர்த்தத்தை தீண்டாது பூசித்து வழிபடும் தலங்களாகத் திருவிற் கோலம், திருவூறல், திருக்காளத்தி முதலானவற்றை உணர்த்தும் தன்மையில் "தீண்டற்கரிய திருவுரு" எனப் பெற்றது.

146. ஆனைக்காவில் அணங்கினை ஆரூர்நிலாய அம்மானைக்
கானப்பேரூர்க் கட்டியைக் கானூர்முளைத்த கரும்பினை
வானப்பேரார் வந்தேத்தும் வாய்மூர்வாழும் வளம்புரியை
மானக்கயிலை மழகளிற்றை மதியைச் சுடரை மறவேனே.

தெளிவுரை: ஈசன், திருவானைக்காவின் தெய்வமாய் விளங்குபவர்; திருவாரூரில் நிலவும் அன்புக்குரியவர்; கானப்பேரில் வீற்றிருப்பவர்; திருக்கானூரில் திகழ்பவர்; தேவர்கள் தொழுது ஏத்தும் திருவாய் மூரில் வீற்றிருப்பவர்; பெருமை மிக்க கயிலை மலையில் விளங்குபவர்; அப்பெருமான், அழகிய களிறு போன்றவர்; திங்களும் கதிரவனும் போன்ற சுடர் ஒளி உடையவர். அவரை நான் எக்காலத்திலும் மறவேன்.

சிறப்புரை: ஈசன், ஆண் யானையாகவும் அம்பிகை பெண் யானையாகவும் மேவி நோக்க விநாயகப் பெருமானின் திருஅவதாரம் நிகழ்ந்தது. இதனை ஆளுடைய பிள்ளையார், "பிடியதன் உரு உமை கொள மிகு கரியது வடிகொடு தனது அடி வழிபடும் அவர் இடர் கடி கணபதி வர அருளினன்" (முதல் திருமுறை திருவலிவலம் திருப்பதிகம்; பாடல் வ.எண் 1330) என அருளிச் செய்தமை காண்க. இது, மழகளிறு என ஓதப் பெறுவதாயிற்று.

அணங்கு – தெய்வம். சிவசக்தியை உணர்த்தலும் ஆகும்;
மழகளிறு – இளமையான களிறு.

147. மதியங்கண்ணி ஞாயிற்றை மயக்கம் தீர்க்கும் மருந்தினை
அதிகை மூதூர் அரசினை ஐயாறுஅமர்ந்த ஐயனை
விதியைப் புகழை வானோர்கள் வேண்டித் தேடும் விளக்கினை
நெதியைஞானக் கொழுந்தினை நினைந்தேற்கு உள்ளம் நிறைந்ததே.

தெளிவுரை: சிவபெருமான், சந்திரனைச் சடை முடியில் சூடியவர்; சூரியன் போன்று ஒளி மிக்கவர்; அஞ்ஞானத்தைத் தீர்க்கும் அருமருந்து ஆகுபவர்; திருவதிகையில் வீற்றிருந்து பாதுகாப்பவர்; திருவை யாற்றில் விளங்கும் தலைவர்; ஊழாக உள்ளவர்; பெரும் புகழாக விளங்கும் வேதநாயகர்; தேவர்கள் விரும்பி ஏத்தும் ஒளிச் சுடராகியவர்; பெருஞ்செல்வ மாகத் திகழ்பவர்; ஞானக் கொழுந்தாக விளங்குபவர். அப்பெருமானை நினைத்து ஏத்திய என் உள்ளம் பூரணமாக நிறைவு கொண்டது.

சிறப்புரை: ஈசன், அஞ்ஞானத்தைத் தீர்க்கும் மருந்தாக விளங்குதல், "மயக்கம் தீர்க்கும் மருந்தினை" என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் அகத்தில் விளங்கித் தெளிவினைத் திகழ வைக்கும் ஞானசக்தி யாக மேவும் இறைவனின் எழில் வண்ணமானது ஏத்தப் பெறுவதாயிற்று. இதனை, "நல்லக விளக்கது நமச்சிவாயவே" (பாட்டு வ.எண் 111) என, அருளிச் செய்த தன்மையையும் கொண்டு நோக்குக. மற்றும் இது, திருவைந்தெழுத்தின் பெருமையை உணர்த்துதல் ஆயிற்று. இந்நெறியில், "காலை எழுந்து தொழுவார் தங்கள் கவலைகளைவாய் கறைக் கண்டா! மாலை மதியே! மலை மேல் மருந்தே! மறவேன் அடியேன்" (திருக்கச்சூர் ஆலக்கோயில் திருப்பதிகம்; பா. 5) எனச்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தவாறும் காண்க.

148. புறம்பயத்தெம் முத்தினைப் புகலூர் இலங்கு
பொன்னினை
உறந்தை யோங்கு சிராப்பள்ளி உலகம் விளக்கு
ஞாயிற்றைக்
கறங்குமருவிக் கழுக்குன்றிற் காண்பார்காணும்
கண்ணானை
அறஞ்சூழ்அதிகை வீரட்டத்து அரிமான் ஏற்றை
அடைந்தேனே.

தெளிவுரை: ஈசன், புறம்பயத்தில் விளங்கும் முத்துப் போன்றவர்; திருப்புகலூரில் மேவும் பொன் போன்றவர்; உறையூரில் ஓங்குபவர்; சிராப்பள்ளியில் மேவும் ஞாயிறு போன்றவர்; திருக்கழுக்குன்றில் மேவிக் கண்டு தரிசிக்கும் அன்பர்களுக்குக் கண் போன்று விளங்குபவர்; அறநெறி திகழும் திருவதிகையில் விளங்கும் வீரட்டானத்தில் வீற்றிருக்கும் சிங்கம் போன்ற பெருமையுடையவர்; அப் பெருமானை நான் சரணம் என அடைந்தேன்.

உறந்தை – உறையூர். மூக்கீச்சுரத்தைக் குறித்தது.

149. கோலக்காவிற் குருமணியைக் குடமூக்குறையும்
விடமணியை
ஆலங்காட்டில் அந்தேனை அமரர் சென்னியாய்
மலரைப்
பாலில்திகழும் பைங்கனியைப் பராய்த்துறைஎம்
பசும்பொன்னைச்
சூலத்தானைத் துணையிலியைத் தோளைக்
குளிரத்தொழுதேனே.

தெளிவுரை: ஈசன், திருக்கோலக்காவில் குருமணியாய்த் திகழ்பவர்; குடமூக்கில் விளங்கும் திருநீலகண்டர்; திருவாலங்காட்டில் விளங்கும் தேன் போன்றவர்; தேவர்கள் தலையின் மீது விளங்கும் மலர் ஆகியவர்; பாலின் சுவையாய் விளங்குபவர்; திருப்பராய்த் துறையில் விளங்கும் பொன் போன்றவர்; சூலத்தை ஏந்தியவர். அப்பெருமான் யாருடைய துணையும் இன்றித் தனித்து மேவுபவர். நான், அவருடைய திருத் தோளைக் கண்டு மனம் குளிரத் தொழுதேன்.

சிறப்புரை: குரு நாதராய் ஈசன் விளங்கி ஞானத்தை அருளிச் செய்யும் மாண்பு, "குருமணி" என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், மாணிக்கவாசகர், "கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க" எனவும்; "ஊழி முதல் சிந்தாத நன்மணி வந்து என்பிறவித் தாழைப் பறித்தவா தோணோக்கம் ஆடாமோ" எனவும்; "கூத்தா! காத்தாட் கொள்ளும் குருமணியே" எனவும் அருளிச் செய்த மாண்பும் இவண் நோக்குக.

ஈசன், "பாலிற் படுநெய் போல் மறைய நின்றுளான், மாமணிச் சோதியான்" என்னும் திருநாவுக்கரசரின் திருவாக்கிற்கு அமைய, பாலின் சுவையானது, பைங்கனி என ஏத்திக் கூறப்பட்டது. பருகினாலன்றிப் பாலின் சுவை விளங்காதது போல, பக்தி செய்து வழிபட்டால் அன்றிப் பெருமானின் இனிய அமுதத்தை நுகர்தல் இயலாது என்பது இத்திருப்பாட்டின் வாயிலாக உணர்த்தப் பெற்றது.

விடமணி – நீல கண்டத்தையுடையவர்.

150. மருகல்உறைமா ணிக்கத்தை வலஞ்சுழியின் மாலையைக்
கருகா வூரிற் கற்பகத்தைக் காண்டற்கரிய
கதிரொளியைப்

பெருவேளூர்எம் பிறப்பிலியைப் பேணுவார்கள் பிரிவரிய
திருவாஞ் சியத்து எம்செல்வனைச் சிந்தையுள்ளே
வைத்தேனே

தெளிவுரை: ஈசன், திருமருகலில் வீற்றிருக்கும் மாணிக்க வண்ணர்; திருவலஞ்சுழியில் வீற்றிருக்கும் பெருமை உடையவர்; திருக்கருகாவூரில் கற்பகம் போன்று அருள் புரிபவர்; காட்சிக்கு அரிய ஒளிமயமாகியவர்; பெருவேளூரில் வீற்றிருக்கும் பிறவாப் பெருந்தகைபாய் அருள் புரிபவர்; திருவாஞ்சியத்தில் வீற்றிருக்கும் செல்வர். அப்பெருமானை, என் சிந்தையுள் நிலவப் பதித்தேன்.

மாணிக்கம் – திருமருகலில் வீற்றிருக்கும் ஈசனின் திருப்பெயர்.

151. எழிலார்இராச சிங்கத்தை இராமேச்சுரத்துஎம்
எழிலேற்றைக்
குழலார்கோதை வரைமார்பிற் குற்றாலத்துஎம் கூத்தனை
நிழலார்சோலை நெடுங்களத்து நிலாயநித்த மணாளனை
அழலார்வண்ணத்து அம்மானை அன்பில்
அணைத்துவைத்தேனே.

தெளிவுரை: ஈசன், எழில் மிக்க சிங்கராசனைப் போன்றவர்; இராமேச்சுரத்தில் ஏறுபோன்று கம்பீரமாக வீற்றிருந்து அருள் புரிபவர்; உமாதேவியை, மலை போன்ற திருமார்பில் பாகமாகக் கொண்டு, குற்றாலத்தில் வீற்றிருக்கும் கூத்தப் பெருமானாய்த் திகழ்பவர்; வளம் பெருகும் சோலை திகழும் நெடுங் களத்தில் நிலவும் மணாளர்; நெருப்புப் போன்ற செவ் வண்ணம் மேவும், அன்பிற்குரியவர். அப்பெருமானை நான் அன்புடன் அணைத்துக் கொண்டேன்.

அன்பில் அணைத்தல் – நெஞ்சிற் கொள்ளுதல்.

152. மாலைத்தோன்றும் வளர்மதியை மறைக்காட்டுறையு
மணாளனை
ஆலைக் கரும்பின் இன்சாற்றை அண்ணாமலைஎம்
அண்ணலைச்
சோலைத்துருத்தி நகர்மேய சுடரில்திகழும் துளக்கிலியை
மேலைவானோர் பெருமானை விருப்பால் விழுங்கி
இட்டேனே.

தெளிவுரை: *சிவபெருமான், வளர்ந்து மேவும் சந்திரனைப் போன்று நாளும் பெருகி அருள் நல்குபவர்; திருமறைக்காட்டில் உறையும் மணவாளர்; ஆலைக் கரும்பின் சாற்றைப் போன்று, பருகுவார் நெஞ்சில் இனிமையாய் விளங்குபவர்; திருவண்ணா மலையில் வீற்றிருந்தருளும் அண்ணல்; சோலை சூழ்ந்த துருத்தியில், மேவும் சுடர் போன்றவர்; அசை வற்று மேவுபவர்; மேன்மையுடைய தேவர்களின் தலைவர். அப்பெருமானை நான் விரும்பி என் நெஞ்சிற்குள் விழுங்கிப் பேரின்பத்தை ஆன்மாவிற்கு அளித்தேன்.*

சிறப்புரை: *சுவை மிக்க உணவை உட்கொள்ளுதலைப் போன்று, ஈசனை நெஞ்சிற்பதிய வைத்து விளங்கும் மாண்பினை, "விழுங்கி இட்டேனே" எனச் சுட்டப் பெற்றது. இடுதல் என்பது உயிர்க்குப் பேரின்பத்தை உண்டாக்கிய சிறப்பினை நவின்றதாம். இத்தன்மையில், திருமூலநாயனார், "உரம் பெற முப்பாழ் ஒளியை விழுங்கி இருந்த என் நந்தி இதயத்து உளானே!" (திருமந்திரம் 25.92) என ஓதியருளியவாறும் காண்க.*

153. சோற்றுத்துறைஎம் சோதியைத் துருத்திமேய தூமணியை
ஆற்றிற்பழனத்து அம்மானை ஆலவாய்எம் மருமணியை

நீற்றிற்பொலிந்த நிமிர்திண்டோள் நெய்த்தானத்தென்
நிலாச்சுடரைத்
தோற்றக் கடலை அடலேற்றைத் தோளைக் குளிரத்
தொழுதேனே.

தெளிவுரை: *ஈசன், திருச்சோற்றுத் துறையில் விளங்கும் சோதியானவர்; திருப்பூந்துருத்தியில் மேவும் தூமணி யாய்த் திகழ்பவர்; திருப்பழனத்தில் வீற்றிருக்கும் அன்பிற்குரியவர்; ஆலவாயில் திகழும் மணி போன்றவர்; திருவெண்ணீறு பொலியத் திகழும் திண் தோள் கொண்டு, திருநெய்த்தானத்தில் விளங்கும் நிலவொளியைப் போன்றவர்; கடல் போன்று யாங்கணும் விரிந்து திகழ்பவர். அப்பெருமானைக் கண்டு மனம் குளிரத் தொழுதேன்.*

மருமணி – மருவும் மணி, அருமணி.

154. புத்தூர் உறையும் புனிதனைப் பூவணத்துளம்
போரேற்றை
வித்தாய் மிழலை முளைத்தானை வேள்விக்குடிஎம்
வேதியனைப்
பொய்த்தார் புரமூன்று எரித்தானைப் பொதியின்மேய
புராணனை
வைத்தேன் என்றன் மனத்துள்ளே மாத்தூர்மேய
மருந்தையே.

தெளிவுரை: *ஈசன், புத்தூரில் உறையும் புனிதர்; திருப் பூவணத்தில் மேவும் அடலேறு போன்றவர்; திருவீழி மிழலையில் வீற்றிருப்பவர்; திருவேள்விக்குடியில் மேவும் வேதநாயகர்; மாயைத் தன்மையுடைய மூன்று அசுரர் புரங்களையும் எரித்தவர்; பொதிய மலையில் மேவும் தொன்மையானவர். அப்பெருமான்*

மாத்தூரில் விளங்கும் அருமருந்தானவர்; அவரை என் மனத்தகத்தே இருத்தி ஏத்தினேன்.

புத்தூர் – திருப்புத்தூர், திரு அரிசிற் கரைப் புத்தூர் என்பர். வைப்புத்தலமும் ஆகும் என்பர்; மாத்தூர் – திருஆமாத்தூர். வைப்புத்தலம் எனலும் உண்டு; பொய்தார் புரம் – மாயையில் வல்ல முப்புர அசுரர்களின் கோட்டைகள்.

155. முந்தித்தானே முளைத்தானை மூரிவெள்ளேறு ஊர்ந்தானை
அந்திச் செவ்வான் படியானை அரக்கன் ஆற்றல் அழித்தானைச்
சிந்தைவெள்ளப் புனலாட்டிச் செஞ்சொல்மாலை அடிச் சேர்த்தி
எந்தை பெம்மான் என்எம்மான் என்பார் பாவநாசமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், தானே தோன்றியவர்; வெள்ளை இடபத்தை வாகனமாக உடையவர்; அந்திச் செவ்வானம் போன்ற குளிர்ந்த சிவந்த வண்ணத்தினர்; இராவணனுடைய ஆற்றலை அழித்தவர். அத்தகைய சிவபெருமானைச் சிந்தையில் தேக்கியும் மனம் குளிரச் சொல் மாலையால் திருவடியைத் தொழுது போற்றியும், எந்தையே! என் பெருமானே! என்று கசிந்து ஏத்துபவர்களுடைய பாவம் கெடும்.

சிறப்புரை: ஈசன், முதன்மையானவர் என்பதும் தானே முன்னிருந்து – என்றும் உளவாகிப் பிறரால் தோற்றுவிக்கப்படாத சுயம்புவாய்த் திகழ்பவர் என்பதும் "முந்தித்தானே முளைத்தானை" என ஓதப் பெற்றது.

இத் திருப்பதிகமானது திருத்தலங்கள் பலவற்றில் வீற்றிருந்து அருள் வழங்கும் ஈசனை ஏத்திப் போற்றுகிறது. இதில் சுட்டப் பெறும் தலங்கள் 45.

16. திருப்புகலூர்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 75ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. திருநாவுக்கரசு சுவாமிகள் சித்திரைச் சதய நாளில் ஈசன் திருவடியிற் கலந்த திருத்தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் செங்கல்லைப் பொன்னாக மாற்றி அருள் செய்த பதி; அக்கினி, பரத்துவாசர் முதலியோர் வழிபட்டது. மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 2 காண்க.

சுவாமி : அக்னிபுரீஸ்வரர், சரண்ய புரீஸ்வரர், கோணப்பிரான்

அம்பிகை : கருந்தார்குழலி, சூளிகாம்பாள்

தல மரம் : புன்னை

தீர்த்தம் : அக்னி தீர்த்தம்

பண் : இந்தளம்

திருச்சிற்றம்பலம்

156. செய்யர் வெண்ணூலர் கருமான் மறிதுள்ளும்
கையர் கனைகழல் கட்டிய காலினர்
மெய்யர் மெய்ந் நின்றவர்க்கல்லா தவர்க்கென்றும்
பொய்யர் புகலூர்ப் புரிசடை யாரே.

தெளிவுரை: ஈசன், சிவந்த வண்ணத்தினர்; வெண்மையான முப்புரி நூல் அணிந்த திருமார்பினர்; மான் கன்று ஏந்திய கையினர்; வீரக் கழலைக் காலில் கட்டியுள்ளவர்; மெய்ந்நெறியாய் விளங்குபவர்; மெய்ம்மையுடன் மேவும் அடியவர்க்கு அல்லால்

பொய்மையுடையவர்களுக்குத் தோன்றாதவர். அவர் புகலூரில் வீற்றிருக்கும் புரிசடையாரே ஆவார்.

சிறப்புரை: மெய்யன்பர்களுக்கு நன்கு விளங்கிக் காட்சி நல்குதலும், பொய் வேடம் கொள்பவர்களுக்கு அரியவராய் இருத்தலும் ஆகிய ஈசனின் பாங்கு, "மெய்யர் மெய்ந் நின்றவர்க்கு, அல்லாதவர்க்கு என்றும் பொய்யர்" என உரைக்கப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், மெய்ம்மையுடைய அடியவர்தம் கூட்டத்தை விழைந்து மேவும் பாங்கில், "மைகலந்த கண்ணி பங்க! வந்து நின் கழற்கணே மெய் கலந்த அன்பர் அன்பு எனக்கும் ஆக வேண்டுமே" *(திருச்சதகம் 73)* என உரைத்தருளுதலும் நோக்குக.

157. மேகநல் ஊர்தியர் மின்போல் மிளிர்சடைப்
பாக மதிநுத லாளையொர் பாகத்தர்
நாக வளையினர் நாக உடையினர்
போகர் புகலூர்ப் புரிசடை யாரே.

தெளிவுரை: ஈசன், மால்விடையை வாகனமாக உடையவர்; மின்னலைப் போன்று ஒளிரும் சடை முடியுடையவர்; பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றி யுடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு இருப்பவர்; நாகத்தை வளைத்து ஆரமாகக் கட்டி இருப்பவர்; யானையின் தோலை மேலே போர்த்தி இருப்பவர்; சிவமும் சக்தியும் ஆகி உயிர்களுக்குப் போகத்தை வழங்குபவர். அப்பெருமான், புகலூரில் வீற்றிருக்கும் புரிசடையாரே ஆவார்.

சிறப்புரை: முதலடியில் ஓதப் பெறும் மிளிர்சடை என்பது ஈசனின் திருமுடியின் வண்ணத்தையும் ஈற்றடியின்கண் பாடல்தோறும் உரைக்கப் பெறும்

"புரிசடையார்" என்பது திருநாமப் பொலிவையும் சுட்டுதலாகும் எனக் கொள்க.

மேக நல் ஊர்தி – மால்விடை; நாகம் – 1. அரவம், 2. யானை.

158. பெருந்தாழ் சடைமுடி மேற்பிறை சூடிக்
கருந்தாழ் குழலியும் தாமும் கலந்து
திருந்தா மனமுடை யார்திறத் தென்றும்
பொருந்தார் புகலூர்ப் புரிசடை யாரே.

தெளிவுரை: *புகலூரில் வீற்றிருக்கும் புரிசடையாராய் மேவும் சிவபெருமான், சடை முடியின் மீது பிறைச் சந்திரனைச் சூடி, உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு அர்த்தநாரியாகி விளங்குபவர். அவர் பக்தி கொண்டு ஈசனைப் பணியாதவர்பால் எக்காலமும் பொருந்தாதவராகித் தன்னை வணங்கும் அன்பர்கள் பால் எப்போதும் குடிகொள்வர்.*

கருந்தாழ்குழலி – திருத்தலத்தின் அம்பிகையின் திருநாமத்தைக் குறித்தது; திருந்தா மனம் – உலக மாயையின் காரணமாகச் சிக்குண்டு ஈசனை நாடாதவன் மனம்.

159. அக்குஆர் அணிவடம் ஆகத்தர் நாகத்தர்
நக்கார் இளமதிக் கண்ணியர் நாள்தொறும்
உக்கார் தலைபிடித்து உண்பலிக்கு ஊர்தொறும்
புக்கார் புகலூர்ப் புரிசடை யாரே.

தெளிவுரை: *சிவபெருமான், அழகிய திருமேனியில் உத்திராக்க மாலையை அணிந்தவர்; நாகத்தை அணிந்தவர்; இளமையான சந்திரனைத் தரித்தவர்; பிரமகபாலத்தைக் கையில் ஏந்தி ஊர் தொறும் சென்று பலியேற்றவர். அப்பெருமான் புகலூரில் வீற்றிருக்கும் புரிசடையாரே ஆவார்.*

அக்கு – உருத்திராக்கம். எலும்பும் ஆம்.

160. ஆர்த்தார் உயிர்அடும் அந்தகன் தன்னுடல்
பேர்த்தார் பிறைநுதற் பெண்ணினல் லாள்உட்கக்
கூர்த்தார் மருப்பிற் கொலைக்களிற்று ஈருரி
போர்த்தார் புகலூர்ப் புரிசடை யாரே.

தெளிவுரை: *சிவபெருமான், உயிர்களைத் துன்புறுத்தி ஆரவாரம் செய்து திரிந்த அந்தகாசுரனுடைய உடலைக் கூறாக்கி அழித்தவர்; பெண்ணின் நல்லாளாகிய உமாதேவியார் வெருவுமாறு யானை யின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர். அவர் புகலூரில் வீற்றிருக்கும் புரிசடையாரே ஆவார்.*

161. தூமன் சுறவம் துதைந்த கொடியுடைக்
காமன் கணைவலம் காய்ந்தமுக் கண்ணினர்
சேம நெறியினர் சீரை யுடையவர்
பூமன் புகலூர்ப் புரிசடை யாரே.

தெளிவுரை: *வலிமையான சுறா மீனைக் கொடியாக உடைய மன்மதன் கணைதொடுத்த போது, அவனை எரிந்து சாம்பலாகுமாறு செய்த முக்கண்ணுடைய சிவபெருமான், உயிர்களைப் பாதுகாக்கும் நெறியுடை யவர்; பெரும் புகழையுடையவர். அவர், பூவுலகத்தில் பெருமையுடன் மேவும் புகலூரில் வீற்றிருக்கும் புரிசடையாரே ஆவார்.*

162. உதைத்தார் மறலி உருளவொர் காலால்
சிதைத்தார் திகழ்தக்கன் செய்தநல் வேள்வி
பதைத்தார் சிரங்கரங் கொண்டுவெய் யோன்கண்
புதைத்தார் புகலூர்ப் புரிசடை யாரே.

தெளிவுரை: *ஈசன், மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த காலனைத் திருப்பாதத்தால் உதைத்து அழித்தவர்; தக்கன் செய்த வேள்வியைத் தகர்த்து,*

அவிர்ப்பாதத்தை ஏற்க வேண்டும் என்று பங்கேற்ற அக்கினி, சூரியன் முதலானோரின் கரம், சிரம், கண், முதலாக அழியுமாறு வீரம் விளைவித்தவர். அவர் புகலூரில் வீற்றிருக்கும் புரிசடையாரே ஆவார்.

நல்வேள்வி – காத்தருளும் தன்மையுடைய பொது நோக்கில் வேள்வியானது நல்வேள்வி என ஏத்தப் பெற்றது. அது ஈசனை மதியாது செய்யப்பட்ட தன்மையில், அதனைத் தகர்த்து வேள்வி ஆற்றுதலின் சிறப்பினை நிலை நிறுத்துவான் வேண்டி போற்றப்பட்டது.

163. கரிந்தார் தலையர் கடிமதில் மூன்றும்
தெரிந்தார் கணைகள் செழுந்தழல் உண்ண
விரிந்தார் சடைமேல் விரிபுனல் கங்கை
புரிந்தார் புகலூர்ப் புரிசடையாரே.

தெளிவுரை: ஈசன், இறந்தவர்களின் மண்டை ஓட்டினை உடையவர்; முப்புர அசுரர்களின் மதில்களை எரித்துச் சாம்பலாக்குமாறு கணை தொடுத்தவர்; விரிந்து பரவும் சடையின் மீது பெருகும் புனலாகிய கங்கையைத் தோய வைத்தவர்; அப்பெருமான் புகலூரில் வீற்றிருக்கும் புரிசடையாரே ஆவார்.

164. ஈண்டார் அழலின் இருவரும் கைதொழ
நீண்டார் நெடுந்தடு மாற்ற நிலையஞ்ச
மாண்டார்தம் என்பு மலர்க்கொன்றை மாலையும்
பூண்டார் புகலூர்ப் புரிசடை யாரே.

தெளிவுரை: பிரமன், திருமால் ஆகிய இருவரும் கைதொழுது ஏத்தும் தன்மையில் பெருஞ் சோதி வடிவாகி ஆதியும் அந்தமும் காணாதவாறு ஓங்கிய ஈசன், இறந்தவர்களின் எலும்பையும், பிரணவ புட்பமாகிய கொன்றை மலர் மாலையையும் தரித்தவர். அப்பெருமான் புகலூரில் வீற்றிருக்கும் புரிசடையாரே.

இருவர் – பிரமனும், திருமாலும்.

165. கறுத்தார் மணிகண்டம் கால்விரல் ஊன்றி
இறுத்தார் இலங்கையர் கோன்முடி பத்தும்
அறுத்தார் புலன்ஐந்தும் ஆயிழை பாகம்
பொறுத்தார் புகலூர்ப் புரிசடை யாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், தேவர்கள உய்யும் தன்மையில், பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உட்கொண்டு கறுத்த கண்டத்தினர்; இலங்கையின் வேந்தனாகிய இராவணனைத் தனது திருப்பாத விரலை ஊன்றி கயிலை மலையின் கீழ் அவனுடைய பத்துத் தலையும் நலியுமாறு செய்தவர். ஐம்புலன்களை அறுத்து யோகியாய் நிலவியவர்; உமாதேவியை ஒருபாகமாகக் கொண்டு அர்த்தநாரியாய் விளங்குபவர். அவர் புகலூரில் வீற்றிருக்கும் புரிசடையாரே ஆவார்.

ஆயிழை – உமாதேவி.

17. திருவாரூர் அரநெறி

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலங்கள் 127இல், இது 88ஆவது திருத்தலம். திருநாவுக்கரசர் பாடல் பெற்றது. இது திருவாரூர் திருக்கோயில் வளாகத்தில் தனிக் கோயிலாக உள்ளது. நமிநந்தி அடிகள் வழிபட்டது. இதனை அசலேச்சரம் என்பர்.

சுவாமி : அகிலேஸ்வரர்

அம்பிகை : புவனேஸ்வரி, வண்டார்குழலி

பண் : இந்தளம்

திருச்சிற்றம்பலம்

166. எத்தீ புகினும் எமக்குஒரு தீதுஇலை
தெத்தே எனமுரன்றுஎம்முள் உழிதர்வர்

முத்தீ யனையதொர் மூவிலை வேல்பிடித்து
அத்தீ நிறத்தார் அரநெறி யாரே.

தெளிவுரை: தீங்கு செய்ய வேண்டும் என்று யார் கருதினாலும் எமக்கு ஒரு தீங்கும் இல்லை. ஈசன், என் உள்ளத்தில் ஒலித்து நின்று திருக்கூத்து புரிபவர், அவர் மூன்று தீயைப் போன்று விளங்கும், மூன்று இலைகளை உடைய சூலத்தைக் கையில் பற்றிக் கொண்டு, அத்தகைய தீவண்ணத்துடன் அரநெறியில் வீற்றிருப்பவரே ஆவார்.

தெத்தே – ஒலிக்குறிப்பு; உழிதர்வர் – விளங்குபவர்.

167. வீரமும் பூண்பர் விசயனொ டாயதொர்
தாரமும் பூண்பர் தமக்கன்பு பட்டவர்
பாரமும் பூண்பர்நற் பைங்கண் மிளிர்அரவு
ஆரமும் பூண்பர் அரநெறி யாரே.

தெளிவுரை: ஈசன், விசயனோடு போர் செய்து வீரம் காட்டும் இயல்பினர்; உமாதேவியைப் பாகமாகக் கொண்டு அம்மையப்பராய் விளங்குபவர்; அன்பு கொண்டு மேவும் அடியவர்களுக்குப் பாதுகாப்பாக விளங்கிக் காத்தருள் புரிபவர்; ஒளிரும் அரவத்தை ஆரமாகப் பூண்டு திகழ்பவர். அப்பெருமான் அரநெறியில் வீற்றிருப்பவரே ஆவார்.

தாரம் – உமாதேவி; பாரம் – அடியவர்களைக் காத்தருளும் மாட்சிமை.

168. தஞ்ச வண்ணத்தர் சடையினர் தாமுமொர்
வஞ்ச வண்ணத்தர் வண்டார்குழ லாளொடும்
துஞ்ச வண்ணத்தர் துஞ்சாதகண் ணார்தொழும்
அஞ்ச வண்ணத்தர் அரநெறி யாரே.

தெளிவுரை: ஈசன், தன்னைத் தஞ்சம் அடைந்தவர்களைக் காத்தருளும் அருள் வண்ணத்தினர்; சடை

முடியுடையவர்; பிறரால் அறியப் பெறாத திருக் குறிப்பின் வண்ணத்தினர்; உமாதேவியோடு விளங்கு கின்ற எழில் வண்ணத்தினர்; தேவர்கள் தொழுது ஏத்த அஞ்சேல் எனக் காக்கும் பெருவண்ணத்தினர். அப்பெருமான் அரநெறியில் வீற்றிருப்பவரே ஆவார்.

வண்டார் குழலாள் – இத்திருத்தலத்தில் விளங்குகின்ற அம்பிகையின் திருநாமம்; துஞ்சாத கண்ணார் – தேவர்.

169. விழித்தனர் காமனை வீழ்தர விண்ணின்று
இழித்தனர் கங்கையை ஏத்தினர் பாவம்
கழித்தனர் கல்சூழ் கடியரண் மூன்றும்
அழித்தனர் ஆரூர் அரநெறி யாரே.

தெளிவுரை: ஈசன், மன்மதனை விழித்து நோக்கி எரித்தவர்; கங்கையை மண்ணுலகில் பரவுமாறு, பகீரதச் சக்கரவர்த்தியின் தவத்திற்கு இசைந்து அருள் புரிந்தவர்; தன்னை வணங்கி ஏத்தும் அடியவர்களின் பாவத்தைத் தீர்ப்பவர்; முப்புர அசுரர்களுடைய கோட்டைகளை எரித்துச் சாம்பலாக்கியவர். அப்பெருமான், ஆரூர் அரநெறியில் வீற்றிருப்பவரே ஆவார்.

கல்சூழ் கடியரண் மூன்றும் – முப்புரம்.

170. துற்றவர் வெண்டலை யிற்சுருள் கோவணம்
தற்றவர் தம்வினை யானவெலாம்அற
அற்றவர் ஆரூர் அரநெறி கைதொழ
உற்றவர் தாம்ஒளி பெற்றனர் தாமே.

தெளிவுரை: ஈசன், பிரம கபாலத்தைக் கொண்டு பலி ஏற்று உணவு கொண்டவர்; வேதத்தைக் கோவண ஆடையாகக் கொண்டு கட்டியவர்; தம்மை ஏத்தும் அடியவர்களுடைய வினை யாவும் அறுமாறு

செய்பவர். அப்பெருமான் ஆரூர் அரநெறியில் வீற்றிருக்க, அவரைத் தொழுது ஏத்துபவர்கள் பிறவியில் ஒளியைப் பெற்றவர்களே ஆவார்.

சிறப்புரை: வினை நீங்கப் பெறுதலும் அதனால் பேரொளியாகிய ஞானம் பெற்றுத் திகழ்தலும் முத்திப் பேற்றுக்கு உரித்த சாதனமாதலை, "தம் வினையான வெலாம் அற அற்றவர் ஆரூர் அரநெறி கை தொழ உற்றவர் தாம்" எனவும், "ஒளி பெற்றனர் தாமே" எனவும் உணர்த்தப் பெற்றது.

இத்தன்மையில் மாணிக்கவாசகர், "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே! சிவபெருமானே!" என அருளிச் செய்தமையும் காண்க.

வெண்டலை – பிரம கபாலம்; அற்றவர் – பற்றற்றவர்; கைதொழ உற்றவர் – அடியவர்கள்.

171. கூடர வத்தர் குரற்கிண் கிணியடி
நீடர வத்தர்முன் மாலை யிடையிருள்
பாடர வத்தர் பணம்அஞ்சு பைவிரித்து
ஆடர வத்தர் அரநெறி யாரே.

தெளிவுரை: ஈசன், அரவத்தைத் தரித்திருப்பவர்; கிண்கிணி எனும் ஒலியையுடைய சிலம்பினைத் திருப்பாதத்தில் அணிந்துள்ளவர்; மயானத்தின் இருளில் பாடி ஆடும் பேரொலியுடையவர். ஐந்து படங்களையுடைய நாகம் ஆடுமாறு அணிந்து மேவும் அப்பெருமான், அரநெறியில் வீற்றிருப்பவரே ஆவார்.

172. கூடவல் லார்குறிப் பில்உமை யாளொடும்
பாடவல் லார்பயின்று அந்தியும் சந்தியும்

ஆடவல் லார்திரு வாரூர் அரநெறி
நாடவல் லார்வினை வீடவல் லாரே.

தெளிவுரை: ஈசன், உமாதேவியாரோடு இணைந்து அம்மையப்பராய் விளங்குபவர்; பாடுபவர்; அந்தியும் சந்தி நேரங்களிலும், ஆடல் புரிய வல்லவர்; அப்பெருமான், திருவாரூர் அரநெறியில் வீற்றிருப்பவர்; அவரை நாடி வணங்குபவர்களுக்கு வினை யாவும் தீரும்.

173. பாலை நகுபனி வெண்மதி பைங் கொன்றை
மாலையும் கண்ணியும் ஆவன சேவடி
காலையும் மாலையும் கைதொழுவார் மனம்
ஆலயம் ஆரூர் அரநெறி யார்க்கே.

தெளிவுரை: ஈசன், பால் போன்ற வெண்மையான பிறைச் சந்திரனைச் சூடியவர்; கொன்றை மாலை தரித்தவர். அப் பெருமானுடைய சேவடியைக் காலையும் மாலையும் கைதொழுது போற்றுபவர்களின் மனமே ஆலயம் ஆகும். அது ஆரூரில் நிலவும் அரநெறியில் வீற்றிருக்கும் பெருமானுக்கு உரியது.

சிறப்புரை: இத்திருப்பாட்டானது காலையும் மாலையும் ஈசனைத் தொழுதல் வேண்டும் எனவும், அத்தகைய பேரன்பர்களுடைய மனமே கோயில் எனவும் ஓதுதல் ஆயிற்று. இத்தன்மையில் காலையிலும் மாலையிலும் வணங்கும் சிறப்பினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "காலையிலும் மாலையிலும் கடவுள் அடி பணிந்து கசிந்த மனத்தவர் பயிலும் கலய நல்லூர் காணே" என அருளிச் செய்தமை காண்க.

நினைத்து ஏத்தும் அடியார்கள் உள்ளத்தில் ஈசன் கோயில் கொண்டு விளங்கும் சிறப்பினை

நம்பியாரூரர், "சிந்தித்து என்றும் நினைந்து எழுவார்கள் சிந்தையில் திகழும் சிவன்றன்னை" (திருக்கச்சி யேகம்பம் பதிகம்; பாடல் 8) என அருளிச் செய்தமை காண்க. "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்னும் திருமந்திரமும், "சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான் திருப்பெருந்துறையுறை சிவனே! எந்தையே! ஈசா! உடலிடங் கொண்டாய் யான் இதற்கு இலன்ஓர் கைம்மாறே!" (பாடல் 395) என்னும் திருவாசகமும் நோக்குக.

174. முடிவண்ணம் வானமின் வண்ணம்தம் மார்பின்
பொடிவண்ணம்தம் புகழ் ஊர்தியின் வண்ணம்
படிவண்ணம் பாற்கடல் வண்ணம் செய்ஞாயிறு
அடிவண்ணம் ஆரூர் அரநெறி யார்க்கே.

தெளிவுரை: ஈசன், வானத்தில் தோன்றும் மின்னரின் வண்ணம் போன்று திருமுடியின் வண்ணம் கொண்டவர். ஊர்ந்து செல்லும் அவரது வெள்விடை போன்று, திருமார்பில் குழையப் பூசும் திருநீற்றின் வண்ணம் வெண்மை உடையது. அவர், பாற்கடலின் வண்ணம் திகழும் எழில் வண்ணத் திருமேனியில் உமாதேவியாரைப் பாகமாகக் கொண்டுள்ளவர். அப் பெருமானுடைய திருவடியின் வண்ணமானது, செஞ்ஞாயிறு போன்ற ஒளி வண்ணம் உடையதே. அத்தகைய வண்ணங்களையுடையவர் ஆரூரில் மேவும் அரநெறியில் வீற்றிருக்கும் பெருமானே ஆவார்.

படி வண்ணம் – அருளது சக்தியாகும் என்னும் குறிப்புத் தோன்ற அம்பிகையை உணர்த்தியது.

175. பொன்கவில் புன்சடை யானடி யின்நிழல்
இன்னருள் சூடிஎள் காதும்இ ராப்பகல்

மன்னவர் கின்னரர் வானவர் தாம்தொழும்
அன்னவர் ஆரூர் அரநெறி யாரே.

தெளிவுரை: அழகு நவிலும் மென்மையான, நீண்டு விரிந்து பரந்த ஒளி திகழும் சடை முடியுடைய ஆரூரின் அரநெறியில் வீற்றிருக்கும் பெருமானின் திருவடி ஒளியின் கீழ் இருந்து, இனிய அருளைப் பருகி மன்னர்களும், தேவர்களும், கின்னரர்களும் இரவும் பகலும் தொழுகின்றனர்.

புன்சடை – மென்மையான சடை;
அடியின் நிழல் – ஒளிமிகும் திருவடி.

176. பொருள் மன்னனைப் பற்றிப் புட்பகம் கொண்ட
மருள் மன்னனை எற்றி வாளுடன் ஈந்து
கருள் மன்னு கண்டம் கறுக்க நஞ்சுண்ட
அருள் மன்னர் ஆரூர் அரநெறி யாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: குபேரனிடமிருந்து புட்பக விமானத்தைக் கவர்ந்த இராவணன், கயிலையைப் பெயர்த்த போது அவனைத் திருப்பாதத்தால் அடர்த்தி, வீரம் மிக்க வாளை வழங்கியவர், சிவபெருமான். அவர், தேவர் களையும் மாந்தர்களையும் காத்தருளும் அருளின் அழகராயும் வேந்தராயும் திகழ்பவர்; தமது கண்ட மானது கருமை கொண்டு திகழுமாறு நஞ்சினை உண்டவர். அப்பெருமான் ஆரூர் அரநெறியாரே.

பொருள் மன்னன் – குபேரன்; மருள் மன்னன் – இராவணன்; அரநெறி – இது, அரனெறி அல்லது அறநெறி என இருந்து பின்னர் மாறி இருத்தல் வேண்டும் என மொழிந்தனர் தமிழ் வல்லோர். உரையின்கண் அரனெறி எனக் குறிப்பிடுகின்றனர். (தருமபுர ஆதீனம் வெளியீடு 1957)

18. பொது - விடம் தீர்த்த திருப்பதிகம்

பதிகக் குறிப்பு: திருநாவுக்கரசர், திங்களூர் மேவி, அப்பூதிஅடிகளாரின் திருமனையில் நண்ணி அமுது செய்ய இணங்கினார். அப்போது இறைவனின் அருட் குறிப்பால் உணவு அருந்துவதற்குத் திருஉள்ளத்தில் தடுமாற்றம் ஏற்பட்டது. அப்பூதிஅடிகளாரின் திருமகனாகிய மூத்த திருநாவுக்கரசு என்பானை அரவம் தீண்டிய செய்தி வெளிப்படுத்தப்படுகிறது.

அந்நிலையில், திருக்கோயிலின் திருமுன்னர் அப் பாலகனைக் கொணர்வித்துத் திருப்பதிகம் அருளிச் செய்து விடம் தீர உயிர்ப்பித்து அருள் புரிந்தனர், ஆளுடைய அரசர். இஃது அற்புதத் திருப்பதிகம்.

பண் : இந்தளம்

திருச்சிற்றம்பலம்

177. ஒன்றுகொ லாம்அவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாம்உய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாம்இடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாம்அவர் ஊர்வதுதானே.

தெளிவுரை: அன்பர்களுடைய சிந்தையில் ஒன்றி இருந்து ஓங்கி உயரும் திருக்கயிலாய மலையை உடையவர், சிவபெருமான். அஃது ஒன்றே ஒன்று; அப்பெருமான், சந்திரனை வளர்ந்து திகழுமாறு சூடிக் காத்தருளியவர். அதுவும் ஒன்றே; பிரமனின் ஐந்து சிரங்களில் ஒன்றினைக் கொய்து, அதனை ஏந்திப் பலி ஏற்றவர், ஈசன். அத்திருவோடு ஒன்றே ஆகும்.

அப்பெருமான் வாகனமாக ஊர்ந்து செல்வது ஒற்றை எருதே.

சிறப்புரை: கயிலையும் சந்திரனு, பிரம கபாலமும் ஒன்றேயாகி இருத்தலும், அதனை உரியவாறு ஈசன் கொண்டிருத்தலும், இத்திருப்பாட்டில் உணர்த்தப் பெற்றன. ஈசன் ஒற்றை இடபத்தில் வீற்றிருப்பது அருள் புரியும் ஒப்பற்ற வண்ணமானது, "ஊர்வதும் ஒன்று கொலாம்" எனச் சுட்டப் பெற்றது.

வெண்டலை – பிரம கபாலம்; ஊர்வது – இடப வாகனம்.

178. இரண்டுகொ லாம்இமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாம்இலங் கும்குழை பெண்ணாண்
இரண்டுகொ லாம்உரு வம்சிறு மான்மழு
இரண்டுகொ லாம்அவர் எய்தின தாமே.

தெளிவுரை: ஈசன், தேவர்கள் தொழுது போற்றும் பரஞானம், அபர ஞானம் ஆகிய இரண்டு திருப் பாதங்களை உடையவர்; இலங்குகின்ற குழை இரண்டினைக் காதில் அணிந்திருப்பவர்; பெண் ணுருவும் ஆணுருவும் கொண்டு அம்மையப்பராய்த் திருமேனியுடையவர். அவர் மான், மழு ஆகிய இரண்டையும் ஏந்திய கையினரே ஆவார்.

சிறப்புரை: "இரண்டு கொலாம் இலங்கும் குழை" என ஏத்தியதானது தோடு என்னும் அணிகலனையும் உணர்த்தும்; அவ்வாறு இன்றிக் காதிற் குழையாக விளங்குகின்ற இரு கந்தருவர்களாகிய அஸ்வதரன், கம்பதரன் ஆகியோரையும் சுட்டும்.

179. மூன்றுகொ லாம்அவர் கண்ணுத லாவன
மூன்றுகொ லாம்அவர் சூலத்தின் மொய்யிலை

மூன்றுகொ லாம்கணை கையது வில்நாண்
மூன்றுகொ லாம்புரம் எய்தன தாமே.

தெளிவுரை: ஈசன், மூன்று கண்களையுடையவர். அப்பெருமான், மூவிலை வேல் போன்ற சூலத்தை ஏந்தியவர். அவர் வில், நாண், அம்பு என மூன்றும் கொண்டு முப்புரம் எரித்தவர். அவர் வாயு, திருமால், அக்கினி ஆகிய மூவரைக் கணையாகக் கொண்டு எய்து, மூன்று புரங்களை எரித்துச் சாம்பலாக்கியவர் எனவும் உணர்த்தும்.

180. நாலுகொ லாம்அவர் தம்முகம் ஆவன
நாலுகொ லாம்சன னம்முதல் தோற்றமும்
நாலுகொ லாம்அவர் ஊர்தியின் பாதங்கள்
நாலுகொ லாம்மறை பாடின தாமே.

தெளிவுரை: ஈசனுக்குத் திருமுகம் நான்காகும். பிறப்பின் வகை நான்காம். ஈசன் ஏறுகின்ற இடபத்தின் பாதங்கள் நான்கு. அப்பெருமான் பாடும் வேதம் நான்கு.

ஈசன் திருமுகம் நான்கு – பாடல் வ. எண் 600 காண்க.

181. அஞ்சுகொ லாம்அவர் ஆடர வின்படம்
அஞ்சுகொ லாம்அவர் வெல்புலனாவன
அஞ்சுகொ லாம்அவர் காயப்பட்டான்கணை
அஞ்சுகொ லாம்அவர் ஆடின தாமே.

தெளிவுரை: ஈசன் ஆபரணமாகப் பூண்டு விளங்கும் அரவம் ஐந்து தலைகளை உடையது. அப்பெருமான் வெற்றி கண்டது ஐம்புலன்கள். அவர் நெற்றிக் கண் கொண்டு எரித்தது, மன்மதனுடைய தேகமாகும். அவர் கொண்டிருந்த கணையானது, தாமரை அசோகு, மா, முல்லை, கருங்குவளை ஆகிய ஐந்து

மலர்களால் ஆகியது. ஈசன் பூசனையால் அபிடே கிக்கப்படுவது பசுவின் பஞ்ச கௌவியம் ஆகும்.

ஆடின – பூசை ஏற்று அபிடேகம் கொள்வது.

182. ஆறுகொ லாம்அவர் அங்கம் படைத்தன
ஆறுகொ லாம்அவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாம்அவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாம்சுவை யாக்கின தாமே.

தெளிவுரை: *ஈசன் வகுத்த வேதத்தின் அங்கம் ஆறு; அப்பரமனின் திருக்குமாரராகிய முருகக் கடவுளுக்குத் திருமுகம் ஆறு; ஈசன் அணிந்திருக்கும் மாலையைச் சுழன்று விளங்கும் வண்டின் கால்கள் ஆறு. உணவின் சுவை ஆறு.*

அங்கம் ஆறு – சிக்கை, கற்பசூத்திரம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம்; அறுசுவை – கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு.

183. ஏழுகொ லாம்அவர் ஊழி படைத்தன
ஏழுகொ லாம்அவர் கண்ட இருங்கடல்
ஏழுகொ லாம்அவர் ஆளும் உலகங்கள்
ஏழுகொ லாம்இசை யாக்கின தாமே.

தெளிவுரை: *ஈசன் ஊழிதோறும் படைக்கும் தன்மை ஏழு பிறவிகள் ஆகும். அவர், கண்ட கடல்கள் ஏழு, உலகங்கள் ஏழு; இசை ஏழு.*

பிறவி ஏழு – 1. தேவர்; 2. மனிதர்; 3. மிருகம்; 4. பறவை; 5. ஊர்வன; 6. நீர்வாழ்வன; 7. தாவரம்.

கடல் ஏழு: 1. உப்பு; 2. தேன்; 3. கருப்பஞ்சாறு; 4. தயிர்; 5. நெய்; 6.பால்; 7. நீர்.

உலகு ஏழு - மேல் ஏழு: 1. பூலோகம்; 2. புவர்லோகம்; 3. சுவர்லோகம்; 4. சனலோகம்; 5. தபோலோகம்; 6. மகாலோகம்; 7. சத்யலோகம். இதனைப் பூ, புவம், சுவர்க்கம், மா, தவம், பிரமம், சிவலோகம் எனவும் உரைப்பர்.

கீழ் ஏழு: 1. அதலம்; 2. விதலம்; 3. சுதலம்; 4. தராதலம்; 5. மகாதலம்; 6. இரசாதலம்; 7. பாதாளம். இதனை, அதலம், விதலம், சுதலம், நிதலம், தராதலம், இரசாதலம், பாதலம் எனவும் உரைப்பர்.

இசை ஏழு: 1. குரல்; 2. துத்தம்; 3. கைக்கிளை; 4. உழை; 5. இளி; 6. விளரி; 7. தாரம். இது, சஞ்சமம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாரம் எனவும் உரைப்பர். இதனைச் சரிகமபதநி என்பர்.

184. எட்டுகொ லாம்அவர் ஈறில் பெருங்குணம்
எட்டுகொ லாம்அவர் சூடும் இனமலர்
எட்டுகொ லாம்அவர் தோளிணை யாவன
எட்டுகொ லாம்திசை யாக்கின தாமே.

தெளிவுரை: ஈசன் எண் குணத்தையுடையவர். அவர் சூடுகின்ற இனமலர்கள் எட்டு ஆகும். அப்பெருமான் எண் தோள் உடையவராய் வீசி நின்று ஆடுபவர். அவரால் படைக்கப் பெற்ற திசைகள் எட்டாகும்.

பெருங்குணம் எட்டு: 1. தன் வயத்தர்; 2. தூய உடம்பினர்; 3. இயற்கை உணர்வினர்; 4. முற்றும் உணர்பவர்; 5. இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குபவர்; 6. பேரருள் உடையவர்; 7. எல்லையற்ற ஆற்றல் உடையவர்; 8. வரம்பில்லாத இன்பம் உடையவர்.

மலர் எட்டு: *1. புன்னை; 2. வெள்ளெருக்கு; 3. சண்பகம்; 4. நந்தியா வர்த்தம்; 5. குவளை (நீலோற்பலம்) 6. பாதிரி; 7. அலரி; 8. செந்தாமரை. அகமலர்களாவன: கொல்லாமை; அருள்; ஐம்பொறி அடக்குதல்; பொறை; தவம்; வாய்மை; அன்பு; அறிவு என்பன.*

185. **ஒன்பது போல்அவர் வாசல் வகுத்தன**
ஒன்பது போல்அவர் மார்பினில் நூலிழை
ஒன்பது போல்அவர் கோலக் குழற்சடை
ஒன்பது போல்அவர் பாரிடம் தானே.

தெளிவுரை: *ஈசன் மன்னுயிர் கொண்டு மேவும் இத் தேகத்திற்கு ஒன்பது துவாரங்களை வகுத்தவர். அப்பெருமான் முப்புரி நூலில் ஒவ்வொரு புரியும் மூன்று இழைகளாக ஒன்பது புரிகளை அணிந்து விளங்குபவர். அவர் ஒன்பது சடைகளை விரித்து ஆடுபவர். அவர் ஒன்பது கண்டங் கொண்டருள் பரப்பு உடையவர்.*

வாசல் ஒன்பது – செவிகள் இரண்டு, கண்கள் இரண்டு, நாசித் துவாரங்கள் இரண்டு, வாய் ஒன்று; மலக்கழிவு உறுப்புக்கள் இரண்டு ஆக ஒன்பது என்பது. ஒன்பது பாரிடம் – நவகண்ட பூமிப்பரப்பு.

186. **பத்துக்கொ லாம்அவர் பாம்பின்கண் பாம்பின்பல்**
பத்துக்கொ லாம்எயி றும்நெரிந்து உக்கன
பத்துக்கொ லாம்அவர் காயப்பட்டான் தலை
பத்துக்கொ லாம்அடி யார்செய்கை தானே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *ஈசன் அணிந்திருக்கும் ஐந்து தலை கொண்ட பாம்பின் கண்ணும் பல்லும் பத்து; இராவணன் ஈசனால் கயிலையின் கீழ் நெரிப்பட்டு விழுந்த பல்லும் நலிந்த முடியும் பத்து. அடியவர்கள் பத்து நற்குணங்களால் செய்யப்படுவன பக்தியே.*

19. திருவாரூர்

தல விளக்கம்: *பதிகம் எண் 4 காண்க.*

பண் : *சீகாமரம்*

திருச்சிற்றம்பலம்

187. சூலப்படையானைச் சூழாக வீழருவிக்
கோலத் தோள் குங்குமஞ்சேர் குன்றுஎட்டு
உடையானைப்
பால்ஒத்த மென்மொழியாள் பங்கனைப் பாங்காய
ஆலத்தின் கீழானை நான்கண்டது ஆரூரே.

தெளிவுரை: *சிவபெருமான், சூலப்படையினர்; குன்றி லிருந்து வீழும் அருவி போன்று, அழகிய குங்குமம் போன்ற சிவந்த, குன்று அன்ன எட்டுத் தோள்களை உடையவர்; பால் போன்ற இனிமையும், சத்தும் உடைய, மென்மையான மொழி பேசும் உமாதேவி யைப் பாகம் கொண்டவர்; ஆல் நிழலின் கீழ் இருந்து சனகாதி முனிவர்களுக்கு அறம் உணர்த்தியவர். அப்பெருமானை நான் திருவாரூரிலே கண்டேன்.*

188. பக்கமே பாரிடங்கள் சூழப் படுதலையில்
புக்கவூர்ப் பிச்சையேற்று உண்டு பொலிவுடைத்தாய்க்
கொக்கிறகின் தூவல் கொடியெடுத்த கோவணத்தோடு
அக்கணிந்த அம்மானை நான்கண்டது ஆரூரே.

தெளிவுரை: *சிவபெருமான், பூதகணங்கள் பக்கத்தில் சூழ விளங்குபவர்; மண்டை ஓட்டை ஏந்தி ஊர் தோறும் சென்று பிச்சை ஏற்று உண்டவர்; பொலிவு உடையவராய்க் கொக்கின் இறகைச் சூடியவர்;*

கோவண ஆடையுடையவர்; பாசி மணியணிந்தவர். அப்பெருமானை நான் ஆரூரில் கண்டேன்.

அக்குமணி – பாசிமணி, சங்கு மணி, எலும்பு, உருத்திராக்கம்.

189. சேய உலகமும் செல்சார்வும் ஆனானை
மாயப்போர் வல்லானை மாலைதாழ் மார்பானை
வேயொத்த தோளியர்தம் மென்முலைமேல் தண்சாந்தின்
ஆயத் திடையானை நான்கண்டது ஆரூரே.

தெளிவுரை: சிவபெருமான், இவ்வுலகம் மட்டும் அல்லாது தொலைவில் உள்ள எல்லா உலகங்களும் ஆனவர்; அருள் நலம் மேவிச் செல்லுகின்ற சார்வாகிய இறுதியுடைய முத்தியுலகமும் ஆனவர்; மாயையில் வல்லவர்களாகிய முப்புர அசுரகளை வென்றவர்; நீண்ட மாலைகளை அணிந்த திருமார்பினர்; மூங்கிலைப் போன்ற தோளுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு அம்மையப்பராகிக் காட்சி தருபவர். அப்பெருமானை நான் ஆரூரில் கண்டேன்.

சிறப்புரை: ஈசனே யாவுமாய் விளங்குகின்ற தன்மை யானது, "சேய உலகமும் செல்சார்வும் ஆனான்" என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில், "எல்லா உலகமும் ஆனாய் நீயே ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே" என அருளிய நாவரசரின் திருவாக்கும் நோக்குக.

மாலை – மலர் மாலை; எலும்புமாலையும் பொருந்தும். மண்டை ஓடுகளைக் கோர்த்து அணிந்த தன்மையையும் சுட்டும்.

190. ஏறேற்ற மாவேறி எண்கணமும் பின்படர
மாறேற்றார் வல்லரணம் சீறி மயானத்தில்
நீறேற்ற மேனியனாய் நீள்சடைமேல் நீர்ததும்ப
ஆறேற்ற அந்தணனை நான்கண்டது ஆரூரே.

தெளிவுரை: சிவபெருமான், இடப வாகனத்தில் ஏறி எண்கணத்தவரும் ஏத்துமாறு திகழ்பவர்; மாற்றுக் கொள்கையுடையவராகித் தீமை விளைவித்த முப்புர அசுரர்களைச் சீறி எரித்தவர்; மயானத்தில் விழைந்து ஆடுபவர்; சடை முடியின் மீது கங்கை நீரை ஏற்றவர்; திருநீறு பூசிய திருமேனியர். அந்தணராய் மேவும் அப்பெருமானை நான் ஆரூரில் கண்டேன்.

சிறப்புரை: ஈசனை அந்தணன் எனக் குறிப்பிட்டு ஓதப் பெற்றது. இத்தன்மையில், "அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்" எனவும், "கொந்தணவும் பொழிற் சோலைக் கூங்குயிலே! இதுகேள் நீ! அந்தணன் ஆகி வந்து இங்கே அழகிய சேவடி காட்டி ஏந்தமராம் இவன் என்று என்னையும் ஆட் கொண்டருளும் செந்தழல் போல் திருமேனித் தேவர் பிரான்" எனவும் வரும் திருவாசக அமுத வாக்கினையும் காண்க.

மாறு ஏற்றார் – மாற்றம் கொண்ட முப்புர அசுரர்கள். அவர்கள்: வித்தியுன்மாலி, தாருகாட்சன், கமலாட்சன்; எண்கணத்தார் – 1. அருளிப்பாடியர்; 2. உரிமையில் தொழுவார்; 3. உருத்திர பல்கணத்தார்; 4. விரிசடை விரதிகள்; 5. அந்தணர்; 6. சைவர்; 7. பாசுபதர்; 8. காபாலிகர் என்பர். நந்தி, மகாகாளர், உமாதேவி, விநாயகர், சுப்பிரமணியர், இடப தேவர், பிருங்கி, சண்டேசுவரர் எனவும் பகர்வர். ஆறு – கங்கை.

191. தாங்கோல வெள்ளெலும்பு பூண்டுதம் மேறேறிப்
பாங்கான ஊர்க்கெல்லாம் செல்லும் பரமனார்
தேங்காவி நாறும் திருவாரூர்த் தொன்னகரில்
பூங்கோயில் உண்மகிழ்ந்து போகாதிருந்தாரே.

தெளிவுரை: சிவபெருமான், அழகிய வெள்ளெலும்பு மாலை அணிந்தவர்; இடப வாகனத்தில் ஏறி அமர்ந்து எல்லா ஊர்களுக்குச் செல்லும் பரமன்.

அப்பெருமான் திருவாரூர் என்னும் தென்னகரில் மேவும் பூங்கோயிலில் மகிழ்ந்து வீற்றிருப்பவர்.

பூங்கோயில் – திருக்கோயிலின் பெயர்.

192. எம்பட்டம் பட்டம் உடையானை ஏர்மதியின்
நும்பட்டம் சேர்ந்த நுதலானை அந்திவாய்ச்
செம்பட்டு உடுத்துச் சிறுமான் உரியாடை
அம்பட்டு அசைத்தானை நான்கண்டது ஆரூரே.

தெளிவுரை: ஈசன், பெருமையுடைய நெற்றியில் வீரப்பட்டத்தைக் கட்டி உள்ளவர்; அழகிய சந்திரனைச் சூடியவர்; பட்டும் தோலுடையும் உடுத்தியவர்; மான் ஏந்திய கரத்தினர். அப் பெருமானை நான் ஆரூரில் கண்டேன்.

193. போழொத்த வெண்மதியம் சூடிப் பொலிந்திலங்கு
வேழத்து உரிபோர்த்தான் வெள்வளையாள்
தான்வெருவ
ஊழித்தீ யன்னானை ஓங்கொலிமாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான்கண்டது ஆரூரே.

தெளிவுரை: ஈசன், பிறைச் சந்திரனைச் சடை முடியின் மீது சூடிப் பொலிந்து விளங்குபவர்; யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர்; தனது திருவிளையாடல்களைப் புரியும்போது, உமாதேவியும் வெருவுமாறு ஆற்றும் தன்மையுடையவர்; ஊழித் தீயைப் போன்று வெப்பம் உடையவர்; பேரொலி திகழ ஆர்க்க விளங்கிச் செலுத்தப்படும் தேரின் மீது நிலவி உலா வரும் வித்தகர். அப்பெருமானை, நான் ஆரூரில் கண்டேன்.

சிறப்புரை: ஈசன், ஊழி முதல்வனாய் விளங்கி எக்காலத்திலும் அழியாத நிலைப் பொருளாய்த்

திகழும் பெற்றி, "ஊழித் தீ அன்னானை" என உணர்த்தப் பெற்றது.

ஆழித்தேர் – திருவாரூர் தேரின் சிறப்பினை உணர்த்திற்று. "திருவாரூர்த் தேரழகு என்பது" அருள் வாக்கியமாய் வழங்கப் பெறுதலும் காண்க.

194. வஞ்சனையா ரார்பாடும் சாராத மைந்தனைத்
துஞ்சிருளில் ஆடல் உகந்தானைத் தன்தொண்டர்
நெஞ்சிருள் கூரும் பொழுது நிலாப்பாரித்து
அம்சுடராய் நின்றானை நான்கண்டது ஆரூரே.

தெளிவுரை: ஈசன், வஞ்சனையாகப் பாடும் தன்மையை உடையவர்பால் சாராதவர்; அடர்ந்த நள்ளிருளில் நடனத்தை உகந்து ஆடுபவர்; தொண்டர் தம் உள்ளத்தில், துன்பம் சூழ்ந்து வருந்தும் போது, தண்ணொளி தந்து அருஞ்சுடராய் விளங்கி இனிமை தருபவர். அப்பெருமானை, நான் ஆரூர் என்னும் தலத்தில் கண்டேன்.

சிறப்புரை: ஈசனை வஞ்சித்துப் போற்றுதல் யாண்டும் கூடாமையாகும் என்பது, "வஞ்சனை யாரார் பாடும் சாராத மைந்தனை" என ஏத்தப் பெற்றது. இந்நெறியில் மாணிக்கவாசகர்,

பார்பாடும் பாதாளர் பாடும் விண்ணோர் தம்பாடும்
ஆர்பாடும் சாரா வகையருளி ஆண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ

— திருத்தெள்ளேணம்; பாடல் 13

என அருளிச் செய்தமை காண்க.

ஈசன், தனது தொண்டர்கள் வினையின் வயத்தினால் நெஞ்சில் இருள் சூழ்ந்து துன்புற்று

வருந்தும் போது, அவர்தம் உள்ளத்துள் புகுந்து நிலவொளி போன்ற குளிர்ச்சியைத் தந்து மகிழ்ச்சியை விளைவிப்பவர். இத்தன்மையில் திருஞானசம்பந்தர், "தேவியோர் கூறினர் ஏறது ஏறும் செலவினர் நல்குரவு என்னை நீக்கும் ஆவியர் அந்தணர் அல்லல் தீர்க்கும் அப்பனார்" (முதல் திருமுறை - 8 திருஆவூர்ப் பசுபதீச்சரம் திருப்பாட்டு; வ. எண் 79) என அருளிச் செய்தமையும் நோக்குக.

195. **காரமுது கொன்றை கடிநாறு தண்ணென்ன**
நீரமுது கோதையோடு ஆடிய நீள்மார்பன்
பேரமுதம் உண்டார்கள் உய்யப் பெருங் கடல்நஞ்சு
ஆரமுதா உண்டானை நான்கண்டது ஆரூரே.

தெளிவுரை: சிவபெருமான், கார் காலத்தில் அமுதம் போன்று செழிப்புடன் மேவும் நறுமணம் கமழும் கொன்றை மலரைத் திருமார்பில் தரித்தவர்; நீரமுதாக விளங்கும் கங்காதேவியைச் சடைமுடியில் தரித்தவர்; தேவர் அமுதம் உண்டு நன்கு வாழும் தன்மையில் பெருங் கடலில் முதற் கண் விளைந்த நஞ்சினை அமுதம் என உட்கொண்டவர். அப்பெருமானை நான் ஆரூரில் கண்டேன்.

சிறப்புரை: நஞ்சானது, உட்கொள்ளத் தக்கதன்று. தேவர்கள் எல்லாம் அதன் வெப்பத்தைத் தாங்காது அச்சம் உற்றுச் சிதறி ஓட, ஈசன், விரும்பி நாடுகின்ற அமுதத்தைப் போன்று, அக்கொடிய நஞ்சினை உகந்து அருந்தினர். இத்தன்மையில் ஈசனின் பரத்துவத்தை நனி விளக்கிய நிலையில், "கடல் நஞ்சு ஆரமுதா உண்டானை" என ஏத்துதலாயிற்று. இதனைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள், "ஆலந்தான் உகந்து அமுது செய் தானை; ஆதியை; அமரர் தொழுது ஏத்தும் சீலம் தான்

பெரிதும் உடையானைச் சிந்திப்பாரவர் சிந்தை யுளானை; ஏலவார் குழலாள் உமை நங்கை, என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற கால காலனைக் கம்பன் எம் மானைக் காணக் கண் அடியேன் பெற்றவாரே" (திருக்கச்சி ஏகம்பம் பதிகம், பாடல் எண் 1) என ஏத்திய சிறப்பும் காண்க.

196. தாடழுவு கையன் தாமரைப்பூஞ் சேவடியன்
கோடலா வேடத்தன் கொண்டதோர் வீணையினான்
ஆடரவக் கிண்கிணிக்கால் அன்னானோர் சேடனை
ஆடும்தீக் கூத்தனை நான்கண்டது ஆரூரே.

தெளிவுரை: *சிவபெருமான், நீண்ட கைகளை உடையவர்; தாமரை மலர் போன்ற திருவடியை உடையவர்; கோடுதல் இல்லாத திருப்பொலிவுடன் மேவுபவர்; வீணையைக் கையில் ஏந்தியவர்; ஆடுகின்ற அரவத்தைப் பூண்கின்ற ஆரமாகவும், கிண்கிணி என ஒலிக்கின்ற நாதத்தை உடைய வீரக்கழலும், சிலம்பும், காலில் அணிந்திருப்பவர்; பெருமையுடன் திகழ்பவர்; நெருப்பினைக் கையில் ஏந்தி நடனம் புரிபவர்; அப் பெருமானை, நான் ஆரூரில் கண்டேன்.*

சிறப்புரை: *ஈசன் நீண்டு விளங்கி வீசி நின்று ஆடி, அருள் நல்கும் கைகளை உடையவர் என்பது, தாள் தழுவுகையன் என ஓதப் பெற்றது. இத்தன்மையில், மாணிக்கவாசகர், "நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர் பாண்டி நன் நாடரால் அன்னே என்னும்" (அன்னை பத்து; பாடல் எண் 5) என அருளிச் செய்தமையும் காண்க. ஈசன், வீணையைக் கையிலேந்தி விளங்கி, வாசிக்கும் பெற்றி, "கொண்டதோர் வீணையினான்" என, ஏத்தப் பெறுவதாயிற்று. இதனைத் திருஞானசம்பந்தர், "வேயுறு தோளி பங்கன் விடம்*

உண்ட கண்டன் மிக நல்ல விணை தடவி" என அருளியவாறும் காண்க.

ஈசன், தனது திருப்பாதத்தில் வீரக்கழலும், சிலம்பும் ஒலிக்க மேவும் தன்மை, "கிண்கிணிக் காலன்னானோர் சேடன்" என ஏத்தப் பெற்றது. இந்நெறியில், "வாதவூரினில் வந்து இனிது அருளிப் பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்" என வரும் திருவாசக அமுதமொழியும் நோக்குக.

சேடன் – பெருமையுடையவன், பெரியோன்; சேடு – பெருமை, நன்மை, அழகு, இனிமை; தாடழுவுகை – தாள் தழுவு கை, நீண்ட கரத்தைச் சுட்டிற்று.

197. மஞ்சாடு குன்றடர வூன்றி மணிவிரலால்
துஞ்சாப் போர் வாளரக்கன் தோள்நெரியக் கண்குருதிச்
செஞ்சாந்து அணிவித்துத் தன்மார்பில் பால்வெண்ணீற்று
அஞ்சாந்து அணிந்தானை நான்கண்டது ஆரூரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவபெருமான், மேகம் தவழும் கயிலை மலையை அழகு திகழும் திருப்பாத விரலால் ஊன்றி, இராவணனுடைய தோள்கள் நெரியவும், கண்கள் குருதியைப் பெருக்கவும் அடர்த்தவர். அவர், பால் போன்ற திருவெண்ணீற்றைக் குழைத்துத் திருமார்பில் பூசியவர். அப்பெருமானை, நான் ஆரூரில் கண்டேன்.

குன்று – கயிலை மலை.

20. திருவாரூர்

தல விளக்கம்: பதிக எண் 4 காண்க.

பண் : சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

198. காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன்
மனம் புகுந்தாய் கழலடி
பூண்டு கொண்டு ஒழிந்தேன்
புறம்போயினால் அறையோ
ஈண்டுமாடங்கள் நீண்டமாளிகைமேல்
எழுகொடிவான் இளம்மதி
தீண்டிவந்து உலவும்
திருவாரூர் அம்மானே.

தெளிவுரை: *மாட மாளிகைகளும், மாளிகையின் மீது சந்திரனைத் தீண்டுமாறு விளங்கும் உயர்ந்து எழும் வண்ணக் கொடிகளும் நிலவும் திருவாரூரில் மேவும் அன்புக்குரிய தலைவனே! தேவரீரைக் கண்டு தரிசித்து மகிழ்தலையே நான் நோக்கமாகக் கருதி இருந்தேன். தேவரீர், என் மனத்தில் புகுந்தீர். தேவரீருடைய திருவடி நெஞ்சில் பதிய, என் வினைகள் நீங்கின. தேவரீரை இனிப் புறத்தே விடேன். யான் புறம் செல்லலாகாது. உரைப்பீராக. காப்பீர் என்பது குறிப்பு.*

சிறப்புரை: *ஈசனைப் புறத்தே விடாமல் நெஞ்சிற் பதித்தலும், அவ்வாறே ஈசன் எக்காலமும் நெஞ்சிற் குடிகொண்டு விளங்கும் பெற்றியும் இவண், "மனம் புகுந்தாய் கழலடி பூண்டு கொண்டு ஒழிந்தேன் புறம் போயினால் அறையோ" என உணர்த்தப் பட்டது. ஈசனின், தடுத்தாளும் பேரருள் உடைமையானது, உள்ளிருந்து உணர்த்தும் மாண்பாக, "அறையோ" எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில், திருமூலர், "சிவமல்லது இல்லை அறையே சிவமாம் தவமல்லது இல்லை தலைப்படுவார்க்கு" (திருமந்திரம்; பாடல் எண் 1534) என அருளிய பாங்கினையும் கொள்க.*

199. கடம்படந் நடம் ஆடினாய் களை
கண்ணினக்கொரு காதல் செய்தடி
ஒடுங்கிவந்து அடைந்தேன்
ஒழிப்பாய் பிழைப்பவெல்லாம்
முடங்கிறால் முதுநீர் மலங்கிள
வாளை செங்கயல் சேல்வ ரால்களிறு
அடைந்த தண்கழனி
அணியாரூர் அம்மானே.

தெளிவுரை: இறால், வாளை, கயல், சேல் முதலானவை திகழும் குளிர்ச்சியும் நீர்வளமும் கொண்ட கழனிகளையுடைய அழகிய ஆரூரில் மேவும் அன்பிற்குரிய தலைவனே! அஜபா நடனம் புரியும் தியாகேசனே! அடியவர்களின் துன்பத்தைத் தீர்க்கும் ஈசனே! பெருங்காதல் கொண்டு தேவரீரின் திருவடியில் நான் ஒடுங்குமாறு அடைந்தேன். என் பிழைகள் யாவையும் தீர்த்தருள்வீராக.

பிழைப்ப வெல்லாம் ஒழிப்பாய் – தீவினைப் பயன் யாவும் தீர்த்தருள் புரியுமாறு வேண்டுகின்ற பிரார்த்தனையாயிற்று.

200. அருமணித்தடம் பூண்முலை
அரம்பையரொடு அருளிப் பாடியர்
உரிமையில் தொழுவார்
உருத்திர பல்கணத்தார்
விரிசடை விரதிகள் அந்தணர் சைவர்
பாசுபதர் கபாலிகள்
தெருவினிற் பொலியும்
திருவாரூர் அம்மானே.

தெளிவுரை: அழகிய மணிகளையுடைய அரம்பையரோடு அருளிப் பாடியவர், உரிமையில் தொழுபவர், உருத்திர பல்கணத்தார், விரிசடை விரதிகள், அந்தணர், சைவர், பாசுபதர், காபாலிகள் ஆகிய எண்

கணத்தினரும் (பாடல் வ.எண் 190) தெருவில் பொலிந்து தொடரத் திருவாரூரில் மேவும் ஈசன் திருவுலா வருபவராவார்.

201. பூங்கழல் தொழுதும் பரவியும்
புண்ணியா புனிதாஉன் பொற்கழல்
ஈங்கிருக்கப் பெற்றேன்
என்னகுறை யுடையேன்
ஓங்குதெங்கிலை யார்கமுகுஇள
வாழைமாவொடு மாதுளம்பல
தீங்கனி சிதறும்
திருவாரூர் அம்மானே.

தெளிவுரை: ஓங்கி வளரும் தென்னை மரங்கள், பாக்கு மரங்கள், வாழை, மா, மாதுளம் மற்றும் தீங்கனிகள் சிதறும் வளமுடைய திருவாரூரில் மேவும் அன்புக்குரிய தலைவனே! தேவரீருடைய பூங்கழலைத் தொழுதும் பரவிப் போற்றியும், புண்ணியனே! புனிதனே! என ஏத்தியும் நான் இருக்கப் பெற்றேன். ஆதலால், என்ன குறை எனக்கு உள்ளது? குறை ஏதும் இல்லை என்பது குறிப்பு.

சிறப்புரை: ஈசனின் பொற் கழலைப் பணிந்து ஏத்தக் குறை யாவும் விலகிச் செல்லும் பெற்றியை இத்திருப்பாட்டானது உணர்த்திற்று. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "தானந்தமில்லான் தனையடைந்த நாயேனை ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான் காணேடி" எனவும், "தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர்; அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்!" எனவும், ஓதியருளியமையும் காண்க.

ஈசனைப் போற்றும் தன்மையில் வினைகடியும் பெற்றியைப் "புண்ணியா" எனவும், மும்மலநாசம்

செய்தலைப் "புனிதா" எனவும் ஏத்துதலாம். வினை நீக்கமும் மல நாசமும் ஒரு சேர நிகழும் பெற்றியினை, "போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே" என வரும் திருவாசக அமுத வாக்காலும் காண்க. சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஈசனின் புனிதத்தின் மாண்பினை, "மெய்யனை மெய்யின் நின்றுணர் வானை மெய்யில்லாதவர் தங்களுக்கு எல்லாம் பெய்யனைப் புரம் மூன்று எரித்தானைப் புனிதனைப் புலித் தோலுடையானைச் செய்யனை வெளிய திருநீற்றில் திகழு மேனியன் மான் மறி ஏந்தும் மைகொள் கண்டனை வாழ்கொளி புத்தூர் மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே!" என அருளிச் செய்தவாறும் காண்க.

202. நீறுசேர்செழு மார்பினாய் நிரம்
பாமதியொடு நீள்சடை யிடை
ஆறுபாய வைத்தாய்
அடியே அடைந் தொழிந்தேன்
ஏறி வண்டொடு தும்பியஞ்சிறகு
ஊன்றவிண்ட மலரிதழ்வழி
தேறல்பாய்ந்து ஒழுகும்
திருவாரூர் அம்மானே.

தெளிவுரை: வண்டும் தும்பியும் அழகிய சிறகுகளை ஊன்றிப் பதித்தலால் மலர்ந்த பூக்களிலிருந்து வழிந்து பெருகும் தேன் ஊறும் திருவாரூரில் வீற்றிருக்கும் அன்புடைய தலைவனே! திருவெண்ணீறு குழையப் பூசும் திருமார்பினையுடைய ஈசனே! பிறைச் சந்திரனைச் சடை முடியில் திகழக் கங்கையைத் தரித்த பரமனே! தேவரீரின் திருவடியை அடைந்து எனது வினை யாவும் நீங்கப் பெற்றேன்.

சிறப்புரை: ஈசன் திருவடியடைதலும் தீவினைகள் நீங்கப் பெறுதலும், ஒளி வர, இருள் விலகுதலைப் போன்று, ஒரே நிலையில் நிகழத் தக்கதாகும் எனக் கொள்க.

மக்கட் பிறவியில் ஒழிக்கத்தக்கது வினைத் தொகுதியே ஆகும் என்பது இவண் "ஒழிந்தேன்" எனப் பொது நிலையில் உணர்த்தப் பெற்றது.

நீறுசேர்செழுமார்பு – மார்பின் செழுமைக்குத் திருவெண்ணீறு காரணமாதலைச் சுட்டப் பெற்றது. இது திருவெண்ணீற்றின் மேன்மையை உணர்த்திற்று.

203. அளித்து வந்தடி கைதொழுமவர்
மேல்வினைகெடும் என்றி வையகம்
களித்துவந் துடனே
கலந்தாடக் காதலராய்க்
குளித்துமூழ்கியும் தூவியும் குடைந்து
ஆடு கோதையர் குஞ்சியுட்புகத்
தெளிக்கும் தீர்த்தம் அறாத்
திருவாரூர் அம்மானே.

தெளிவுரை: திருவாரூரில் வீற்றிருக்கும் அன்பிற்குரிய தலைவனே! இத்திருத்தலமானது தீர்த்தச் சிறப்பு உடையது. அன்பு மிக்கவராய்க் குளித்து மூழ்கியும், குடைந்து ஆடியும் தூவித் தெளித்தும் இத்தீர்த்தத்தை ஆடவரும் மகளிரும் பெறுகின்றனர். அந்நிலையில் தேவரீரின் திருவடியைப் பணிந்து கைதொழுது ஏத்து கின்றனர். அதன் பயனாக அடியவர்கள் வினை நீங்கப் பெறுகின்றனர்.

சிறப்புரை: புனித தீர்த்தம் ஆடிப் பெருமானை ஏத்தும் அடியவர்களுடைய வினை நீங்கப் பெறுதல், "கைதொழுபவர் மேல் வினை கெடும்" என உணர்த்தப்

பெற்றது. உயிரைப் பற்றி எஞ்சியுள்ள சஞ்சிதவினை கெடும் என்பதைச் சுட்டிற்று. இது இப்பிறவியில் பற்றி மேவும் ஆகாமியம் என்னும் வினையையும் உணர்த்தும். இது, மறுமைக்கு உரிய வினையை இல்லாமையாக்கும் என்பதாம். இப்பிறவியின்கண் பிராரத்த வினையினால் இதுவரை கழிந்தது போக எஞ்சியுள்ள காலங்களில் நுகருவதற்கு விதிக்கப் பெற்ற வினையாவும் கெடும்.

குஞ்சி – கூந்தல்.

204. திரியு மூவெயில் தீயெழச் சிலை
வாங்கிநின்றவ னேயென் சிந்தையுள்
பிரியுமாறு எங்ஙனே
பிழைத்தேயும் போகலொட்டேன்
பெரியசெந்நெற் பிரம்புரிகெந்த
சாலிதிப்பிய மென்றி வையகத்து
அரியும் தண்கழனி
அணிஆரூர் அம்மானே.

தெளிவுரை: பெரிய செந்நெல், பிரம்புரி, சாலி முதலான நெல் வகைகளின் வளப்பம் கொண்ட ஆரூரில் வீற்றிருக்கும் அன்பிற்குரிய தலைவனே! திரிந்து சென்று தீயன புரிந்த மூன்று கோட்டைகளும் எரிந்து சாம்பலாகுமாறு வில்லேந்திக் கணை தொடுத்த ஈசனே! என் சிந்தையிலிருந்து தேவரீர் எங்ஙனம் பிரிய இயலும். நான் தவறியும் தேவரீரைப் போகுமாறு செய்ய மாட்டேன்.

சிறப்புரை: இது ஈசனை நன்கு பற்றிய உறுதியினைப், "பிரியுமாறு எங்ஙனே! பிழைத்தேயும் போக லொட்டேன்" என ஏத்துதலாயிற்று. ஈசன் பால் கொண்ட, அளவு கடந்த பக்தியும் அப்பெருமானைச்

சிக்கெனப் பற்றிய மாண்பும் இவண் ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், "இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கு எழுந்தருளுவது இனியே!" என, ஓதும் மணிவாசகரின் அமுதமொழியும் காண்க.

205. பிறத்தலும் பிறந் தாற்பிணிப்பட
வாய்ந்து அசைந்து உடலம் புகுந்து நின்று
இறக்குமாறு உளதே
இழிந்தேன் பிறப்பினைநான்
அறத்தை யேபுரிந்த மனத்தனாய்
ஆர்வச்செற்றக் குரோதம் நீக்கியுன்
திறத்தனாய் ஒழிந்தேன்
திருவாரூர் அம்மானே.

தெளிவுரை: திருவாரூரில் வீற்றிருக்கும் அன்பிற்குரிய தலைவனே! பிறவி எடுத்தலும், பிறந்து எடுத்த பிறவியில் நோயுற்று உடல் நலிந்தும் தளர்ச்சியுற்றும் இறக்குமாறு உடையது இவ்வாழ்க்கை. தேவரீரை அடைந்த யான் தேவரீரின் கருணையால் இத்தன்மையை ஒழித்தேன்; பிறப்பினை நீத்தேன்; அறத்தையே புரியும் மனத்தினன் ஆனேன்; உணர்வைக் களைந்தேன். இவை யாவும் தேவரீரின் அருள் வல்லமையால் நிகழ்ந்தது.

சிறப்புரை: ஈசனே, பிறவா யாக்கைப் பெரியோன். அப்பெருமான் பிறவாமை என்னும் பேற்றினை அளிக்க வல்லவர். இது, "இழிந்தேன் பிறப்பினை" என ஓதப் பெற்றது. அப்பெருமானின் அருளால் யாவும் நடத்தப் பெறுதலை மாணிக்கவாசகர், "மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே கள்ளப் புலக்குரம்பை கட்டு அழிக்க வல்லானே" என உரைத்தருளியதும் காண்க. மற்றும் ஈசனின் அருள் திறத்தினைப்

"பாசவேர் அறுக்கும் பழம் பொருள் தன்னைப் பற்றுமாறு அடியனேற் கருளிப் பூசனை உகந்து என் சிந்தையுள் புகுந்து பூங்கழல் காட்டிய பொருளே! தேசுடை விளக்கே! செழுஞ்சுடர்மூர்த்தீ! செல்வமே! சிவபெருமானே!" (பிடித்த பத்து பாடல் எண் 7) என, அருளிச் செய்தமையும் நோக்குக.

இது ஈசனை நன்கு பற்றித் திகழ்வதால் ஆகும் பயனை விளக்கிற்று.

206. **முளைத்த வெண்பிறை மொய்சடையுடை**
யாய்எப் போதும்என் நெஞ்சிடம் கொள்ள
வளைத்துக் கொண்டிருந்தேன்
வலிசெய்து போகலொட்டேன்
அளைப் பிரிந்த அலவன்போய்ப்
புகுந்தகாலமும் கண்டு தன்பெடை
திளைக்கும் தண்கழனித்
திருவாரூர் அம்மானே.

தெளிவுரை: சேற்றிலிருந்து வெளியே வந்த ஆண் நண்டானது வளைக்குள் புகுந்து, தன்பெடை கண்டு மகிழும் குளிர்ச்சி மிக்க வளங் கொழிக்கும் கழனி களையுடைய திருவாரூரில் மேவும் அன்பிற்குரிய தலைவனே! இளமையான வெண்பிறைச் சந்திரனைத் தரித்த பெருமானே! தேவரீரை என் நெஞ்சில் வளைத்துக் கொண்டு இருந்தேன். இப்போது நான் வலிமையாகப் பிடித்துக் கொண்டேன். தேவரீரை வெளியே செல்ல விடமாட்டேன்.

சிறப்புரை: தன் பெடையை மகிழச் செய்யும் நண்டினை உவமை காட்டி, ஆரூரில் மன்னுயிர்களை மகிழ்விக்கும் ஈசனின் கருணைத் திறத்தை இத்திருப்பாட்டானது வியந்து ஏத்தியதாயிற்று.

ஈசனைத் தன்னகத்தே வளைத்துப் பதித்தானது தன் மனமானது ஈசனையே வட்டம் இட்டுச் சுற்றும் மாண்பினை உணர்த்துதல் ஆயிற்று. இறுகப் பற்றிய நிலையை, "வலி செய்து போக லொட்டேன்" என, விளம்புதலாயிற்று. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவது இனியே" என அருளிச் செய்தவாறும் காண்க.

அளை – சேறு; அலவன் – ஆண்நண்டு.

207. நாடினார்கம லம்மலர்அய னோடு
இரணியன் ஆகம் கீண்டவன்
நாடிக் காண மாட்டாத்
தழலாய நம்பானைப்
பாடுவார்பணி வார்பல்லாண்டிசை
கூறு பத்தர்கள் சித்தத் துள்புக்குத்
தேடிக் கண்டு கொண்டேன்
திருவாரூர் அம்மானே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருவாரூர் மேவும் அன்பிற்குரிய தலைவனே! மலர் மேல் உறையும் பிரமனும், இரணியன் உடலைக் கிழித்த திருமாலும் காண முடியாதவாறு பெருந் தழலாகி ஓங்கிய நம்பனே! தேவரீரைப் பாடுபவர்களும், பணிபவர்களும், பல்லாண்டு கூறுபவர்களும் ஆகிய பக்தர்களின் சித்தத்தில் விளங்குபவரே நீவிர் எனத் தேடிக் கண்டு கொண்டேன்.

சிறப்புரை: பக்தர் பெருமக்களில் முத்தரத்தினர் இத்திருப்பாட்டின் வழி உணர்த்தப் பெற்றது. இத் தன்மையில் பாடுவதும் பணிவதும் பல்லாண்டு

கூறுவதும் பக்தியின் வயப்பட்டது என்பதனைப் "பாடுவார் பணிவார் பல்லாண்டிசை கூறுபக்தர்கள்" என ஓதப் பெற்றது. மாணிக்கவாசகர், "பாட வேண்டு நான் போற்றி நின்னையே பாடி நைந்துருகி நெக்கு நெக்காட வேண்டு நான் போற்றி அம்பலத்தாடு நின் கழற் போது நாயினேன் கூட வேண்டுநான்" என, உரைத்தருளும் பெற்றியும் காண்க. இது பாடுதலும் பணிதலும் ஆகியது. பரமன் புகழை ஓதி வாழ்த்துதல் என்பது, பல்லாண்டிசை எனப் பெற்றது. இதனை "அன்ன நடை புரிந்து பின்னைப் பிறவி யறுக்க நெறி தந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே" எனவும், "சிற்றம்பலமே இடமாகப் பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே" எனவும் சேந்தனார் அருளிச் செய்தவாறும் (9ஆம் திருமுறை) காண்க.

பல்லாண்டு இசை – வாழ்த்து கூறுதல்.

21. திருவாரூர்

தல விளக்கம்: *பதிகம் எண் 4 காண்க.*

பதிகக் குறிப்பு: திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் அருட் பேரொளியாய் மக்களுக்கு அருள் வழங்கிய காலத்தில், திருப்புகலூரை நோக்கிச் செல்லும் நாவுக் கரசரும், ஆளுடைய பிள்ளையாரும் சந்தித்தனர். அஞ்ஞான்று, திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகேசரின் மார்கழித் திருவாதிரை நன்னாள் திருவிழாவின் சிறப்பினை அருளிச் செய்தது இத்திருப் பதிகம். இது, திருவாதிரைத் திருப்பதிகம் எனப் போற்றப்படுவது.

திருவாதிரைத் திருப்பதிகம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

208. முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தன்ஆரூர் ஆதிரைநாளால் அதுவண்ணம்.

தெளிவுரை: முத்துக்களைக் கோர்வையாகக் கட்டிய மேல் விதானத்தில், மணிகளும் பொன்னும் இழைக்கப் பெற்ற கவரி விளங்க, முறைப்படி பக்தர்களும் பாவையர்களும் சூழ, ஈசன் பொலிபவர். அவர் பின்னே வித்தகத் திருக்கோலத்தில், எண் கணத் தினருள் ஒருவராகிய விரதிகள் தலைமாலை ஏந்தியுள்ளனர். அத்தகைய எழில் வண்ணம் உடையது ஆரூரில் மேவும் ஈசனின் திருவாதிரை நாளின் சிறப்பாகும்.

சிறப்புரை: ஈசனின் திருவிழாக்களும், மார்கழித் திருவாதிரை நாளின் சிறப்பானது, இவண் ஏத்தப் பெற்றது. இத்திருவிழாவின் நாயகராகிய ஈசனின் திருநாமமாய்ச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "ஆதியன், ஆதிரையன், அயன்மால் அறிதற்கு அரிய சோதியன், சொற்பொருளாய்ச் சுருங்காமறை நான்கினையும் ஓதியன், உம்பர்தம் கோன், உலகத்தினுள் எவ்வுயிர்க்கும் நாதியன், நம் பெருமான் நண்ணும் ஊர் நனிபள்ளியதே!" என அருளிச் செய்தமை காண்க.

திருவாதிரை நாளின் சிறப்பினைத் திருஞான சம்பந்தர், "கார் திருசோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான் ஆர்திரைநாள் காணாதே போதியோ

பூம்பாவாய்" (இரண்டாம் திருமுறை திருமயிலைத் திருப்பதிகம் பாடல் வ. எண் 505) என அருளிச் செய்த வாறும் நோக்குக.

209. நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்
பிணிதான் தீரும்என்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்கட்கு
அணியான் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

தெளிவுரை: அண்மையிலும் சேய்மையிலும் உள்ள அனைவரும், நாள் தோறும் வந்து ஏத்திப் பிணி தீர்த்து அருள்வீராக, என வேண்டுகின்றனர். மணியே! பொன்னே! மைந்தா! மணாளா! எனப் போற்றித் தொழுகின்றனர். அவ்வாறு ஏத்தும் அடியவர்களுக்கு அண்மையாய் மேவி அருள் நல்குபவர் ஆரூர் ஈசன். அது ஆதிரைத் திருநாளின் வண்ணம் ஆயிற்று.

210. வீதிகள் தோறும் வெண்கொடியோடு விதானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர்மாமணிகள் ஒளிதோன்றச்
சாதிகளாய் பவளமு முத்துத் தாமங்கள்
ஆதியாரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

தெளிவுரை: வீதிகள் தோறும் வெண் கொடிகளும் விதானத்தில் சுடர் விடும் மணிகளும் ஒளி தோன்ற அலங்கரிக்கப்பட்டுப் பவளமும் முத்தும் பொலிய விளங்கும் மாலைகளும் திகழத் திருவாதிரை நாளில் வண்ணம் கொண்டுள்ளது.

211. குணங்கள்பேசிக் கூடிப்பாடித் தொண்டர்கள்
பிணங்கித்தம்மிற் பித்தரைப் போலப் பிதற்றுவார்
வணங்கிநின்று வானவர்வந்து வைகலும்
அணங்கன்ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

தெளிவுரை: திருத்தொண்டர்கள், ஈசனின் எண்குணச் சிறப்புக்களைப் பேசியும், திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியும் ஏத்துகின்றனர்; பக்தி வயத்தினால் தம் தம் நிலை மறந்து, அர நாமத்தை ஓதுகின்றனர்; வணங்கி நின்று தொழுகின்றனர். தேவர்கள் நாள்தோறும் வந்து துதிக்கின்றனர். இத்தகைய வண்ணம் உடையது, ஈசன் விளங்கும் ஆரூரில் நிலவும் திருவாதிரை நாள்.

சிறப்புரை: ஈசனின் ஆற்றல் அணங்கன் என ஏத்தப் பெற்றது. ஈசன் அணங்கு ஆகிய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்கும் தன்மையில் "அணங்கன் ஆரூர்" என ஏத்துதல் ஆயிற்று எனலும் பொருந்தும். இதனை, மாணிக்கவாசகர், "வணங்கத் தலைவைத்து, வார் கழல் வாய் வாழ்த்த வைத்து, இணங்கத் தன் சீரடியார் கூட்டமும் வைத்து. எம்பெருமான் அணங்கொடு அணி தில்லையம் பலத்தே ஆடுகின்ற குணம் கூரப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ" என அருளிச் செய்தமையும் காண்க.

அணங்கு – தெய்வத் தன்மை.

212. நிலவெண்சங்கும் பறையும் ஆர்ப்ப நிற்கில்லாப்
பலரும்இட்ட கல்லவடங்கள் பரந்தெங்கும்
கலவ மஞ்ஞை கார்என்று எண்மிக் களித்துவந்து
அலமர்ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்.

தெளிவுரை: நிலவைப் போன்ற வெண் சங்கும் பறையும் ஆர்த்து எழவும் பலரும் எழுப்பும் நடனத்திற்குரிய வாத்தியங்கள் முழங்கவும், மயில்கள் அவ்வொலி களைக் கேட்டு இடி முழங்கும் ஒலியெனக் கருதி, மழை வரும் என எண்ணிக் களித்தும் நடனம் புரிகின்றன. அத்தகைய எழுச்சியுடையது ஆதிரை நாளின் எழில் வண்ணம்.

கல்லவடங்கள் – தியாகேசரின் நடனத் திருக் கோலத்தைக் குறிப்பால் உணர்த்திற்று.

213. விம்மா வெருவா விழியாத் தெழியா வெருட்டுவார்
தம்மாண்பு இலராய்த் தரியார் தலையால் முட்டுவார்
எம்மான் ஈசன் எந்தைஎன் அப்பன் என்பார்கட்கு
அம்மான் ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்.

தெளிவுரை: *பக்தியால் விம்மியும், வெருவியும், விழித்து நோக்கித் தன்னிலை தளர்ந்தும் இருக்கும் அடியவர் களுக்குத் தலைவனாய் விளங்கும் சிவபெருமான், பேரருள் புரிபவர். அத்தகைய அன்பின் வண்ணத்தை உடையது ஆதிரை நாள்.*

214. செந்துவர் வாயார் செல்வன் சேவடி சிந்திப்பார்
மைந்தர்களோடு மங்கையர்கூடி மயங்குவார்
இந்திரனாதி வானவர் சித்தர் எடுத்தேத்தும்
அந்திரன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

தெளிவுரை: *மகளிர் ஈசனின் திருவடியைச் சிந்தித்து ஏத்துகின்றனர். ஆடவரும் பெண்டிரும் கூடி இருந்து தொழுது பக்தி வயப்படுகின்றனர். இந்திரன் முதலான தேவர்களும் சித்தர்களும் ஏத்தி வணங்குகின்றனர். அத்தகைய நிலைப்பாடு உடையது, திருவாரூரில் விளங்கும் ஈசனின் திருவாதிரைத் திருநாளின் எழில் வண்ணம் ஆகும்.*

அந்திரன் – ஈசனின் உறுதியான நிலைப்பாட்டினைக் குறித்தது.

215. முடிகள் வணங்கி மூவாதார்கள் முன்செல்ல
வடிகொள் வேய்த்தோள் வானரமங்கையார் பின்செல்லப்
பொடிகள் பூசிப் பாடும் தொண்டர்புடைசூழ
அடிகள் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணமே.

தெளிவுரை: தேவர்கள், தலைகளைத் தாழ்த்தி வணங்கி முன் செல்கின்றனர். அழகிய மூங்கில் அன்ன தோளுடைய பெருமையுடன் விளங்கும் மங்கையர்கள் பின் செல்கின்றனர். திருவெண்ணீறு முகத்திலும் சரீரத்திலும் பொலியப் பூசிப் பாடுகின்ற திருத் தொண்டர்கள் புடை சூழத் திருவாரூரில் வீற்றிருக்கும் பெருமானின் ஆதிரைத் திருநாள், வண்ணம் உடைய தாய்த் திகழ்வதாகும்.

மூவாதார் – தேவர்கள்; வானர மங்கையர் – வான் அர மங்கையர் – அரனை ஏத்தும் மங்கையர்.

216. துன்பநும்மைத் தொழாத நாள்கள் என்பாரும்
இன்ப நும்மை ஏத்து நாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்
அன்பன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

தெளிவுரை: எல்லார்க்கும் அன்பனாய் விளங்கும் ஆரூர் நாயகனின் திருவாதிரை நாளில் தரிசிக்கும் அடியவர்கள், ஈசனே! தேவரீரைத் தொழாத நாள்கள் துன்பம் உள்ள நாள்கள் எனவும், தேவரீரை ஏத்தித் தொழும் நாள்கள் இன்பம் பயக்கும் நாள்கள் எனவும், தேவரீர் எம்மைத் திருத்தொண்டராய் ஆட்கொண்டு பணி கொள்வீராக எனவும் ஏத்துகின்றனர்.

சிறப்புரை: ஈசனைத் தொழும் நாள் இன்பம் உடையது எனவும், தொழாத நாள் துன்பம் உடையது எனவும் இவண் உணர்த்தப் பெற்றது. இத் தன்மையில், "உம்மை மறந்திட்ட நாள் கெட்ட நாள்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நமச்சிவாயத் திருப் பதிகத்தில் (பாடல் 2) உணர்த்தியருளியவாறும் காண்க.

217. பாரூர் பௌவத் தானைபத்தர் பணிந்தேத்தச்
சீரூர் பாடல் ஆடல் அறாத செம்மாப்பார்ந்து

ஓரூர் ஒழியாது உலகம்எங்கும் எடுத்தேத்தும்
ஆரூரன்றன் ஆதிரை நாளால் அது வண்ணம்.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: பாரில் விளங்கும் கடல் போன்றவர், சிவபெருமான். அவர், பக்தர்களால் புகழ்ந்து ஏத்தப் படுபவர்; ஓர் ஊர் என்று அமையாது உலகம் எங்கிலும் திகழ்ந்து விளங்குபவர். அப்பெருமான் ஆரூரில் வீற்றிருப்பவர். அவர் காணும் திருவாதிரை நாளின் வண்ணம் மிகப் பொலிவுடையது.

பௌவம் – கடல்.

22. கோயில்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம் 63இல், இது முதலாவது திருத்தலம். சிதம்பரம் என வழங்கப் படுவது. மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. கோயிலின் பெயர், தில்லை பஞ்ச சபைகளுள் இது பொற்சபை; ஏனையவை: திருவாலங்காடு – இரத்தினச் சபை; திரு ஆலவாய் – வெள்ளிச்சபை; திருநெல்வேலி – தாமிரச்சபை; திருக்குற்றாலம் – சித்திரச்சபை. பஞ்ச பூதத்தலங்களுள் இது ஆகாயம்; ஏனையவை: திருக்காளத்தி – வாயு (காற்று); திருவண்ணாமலை – அக்கினி (நெருப்பு); திருவாரூர் – பிருத்துவி (நிலம்); திருவானைக்கா – அப்பு (நீர்); காஞ்சிபுரத்தைப் பிருத்தி வித்தலமாகக் கொள்ளுதலும் உண்டு.

மற்றும் முதல் திருமுறை, பதிகம் எண் 80 காண்க.

சுவாமி : திருமூலட்டநாதர்

அம்பிகை : உமையம்மை

சுவாமி : நடராசர், சபா நாயகர்

அம்பிகை : சிவகாமசுந்தரி

தல மரம் : தில்லை, ஆல்

தீர்த்தம் : சிவகங்கை முதலியன

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

218. செஞ்சடைக் கற்றை முற்றத்து இளநிலா வெறிக்கும் சென்னி
நஞ்சடை கண்டனாரைக் காணலா நறவநாறு
மஞ்சடை சோலைத் தில்லை மல்குசிற்றம்பலத்தே
துஞ்சடை இருள்கிழியத் துளங்குளரி ஆடுமாறே.

தெளிவுரை: சிவபெருமான், சிவந்த அடை போன்ற ஒளி திகழும் சடை முடியின் மீது இளமையான நிலவைத் தரித்தவர்; நஞ்சு தேங்கிய நீல மணி கண்டத்தை உடையவர்; மேகத்தைத் தொடும் நறுமணம் கமழும் தேன் விளங்கும் சோலை மல்கும் தில்லைச் சிற்றம்பலத்தில், உற்ற இருள் அகலத் திருக்கரத்தில் நெருப்பேந்தித் திருநடனம் புரிபவர்.

சிறப்புரை: ஈசன் ஆனந்த நடேசராய்த் திருநடனம் புரிதலையும், அதனால் அஞ்ஞானத்தின் இருள் விலகி ஞானத்தீ விளங்குதலையும் உணர்த்தும் தன்மை, "துஞ்சு அடை இருள் கிழியத் துளங்கு எரி ஆடுமாறே" என ஓதப் பெற்றது.

219. ஏறனார் ஏறுதம்பால் இளநிலா வெறிக்கும் சென்னி
ஆறனார் ஆறுசூடி ஆயிழை யாளோர் பாக

நாறுபூஞ் சோலைத் தில்லை நவின்றசிற் றம்பலத்தே
நீறுமெய் பூசிநின்று நீண்டெரி யாடுமாறே.

தெளிவுரை: சிவபெருமான், இடப வாகனத்தில் ஏறுபவர்; இளமையான பிறைச் சந்திரனைத் திருமுடியில் தரித்தவர்; கங்கையைத் தரித்தவர்; உமாதேவியை ஒரு பாகமாக உடையவர்; நறுமணம் கமழும் பூஞ்சோலை திகழும் தில்லைச் சிற்றம்பலத்தில் திருநீறு பூசிய திருமேனியுடையவராய்த் திகழ்கின்ற நீண்டு சுடர் விடும் நெருப்பேந்தி ஆடல் புரிபவர்.

சிறப்புரை: இடபவாகனம் உடைய ஈசன், 'ஏறுதம்பால் ஏறனார்' எனவும், கங்கை தரித்த மாண்பினை 'ஆறு சூடிய ஆறனார்' எனவும் சுட்டப் பெற்றார்.

பேரானந்தத்தைத் தரிசிப்போர்க்கு வழங்கும் பெற்றியானது "நவின்ற சிற்றம்பலம்" என ஏத்தப் பெற்றது. இது, தரிசிக்க முத்திப் பேறு வழங்கும் மாண்பினையும் நவில்வதாயிற்று.

ஆயிழை – உமாதேவி.

220. சடையனார் சாந்த நீற்றர் தனிநிலா வெறிக்கும் சென்னி
உடையனார் உடைதலையில் உண்பதும் பிச்சையேற்றுக்
கடிகொள்பூந் தில்லைதன்னுள் கருது சிற்றம்பலத்தே
அடிகழல் ஆர்க்க நின்று அனலெரி யாடுமாறே.

தெளிவுரை: ஈசன், சடை முடியுடையவர்; சாந்தம் நல்கும் திருவெண்ணீற்றைத் திருமேனியில் பூசி விளங்குபவர்; ஒப்பற்ற நிலவினைத் திருமுடியின் மீது சூடியவர்; பிரமனுடைய கபாலத்தை ஏந்தி அதைப் பலி ஏற்கும் பாத்திரமாகக் கொண்டு, பிச்சை ஏற்று உண்பவர்; நறுமணம் கமழும் பூந்தில்லைச் சிற்றம்

பலத்துள் வீரக்கழல் ஆர்க்க ஒலித்து நின்று, எரியேந்தி ஆடுபவர்.

சிறப்புரை: மன்னுயிர்களுக்குப் பேரின்பத்தை அளிக்க வல்ல திருநீற்றின் பெருமையை உணர்த்தும் மாண்பு, "சாந்த நீற்றல்" என ஓதப் பெற்றது. இந்நெறியில் திருஞானசம்பந்தர், "மாறு கொண்டார் புரம் எரித்த மன்னவனே கொடி மேல் ஏறு கொண்டாய்! சாந்தம் ஈதென்று எம்பெருமான் அணிந்த நீறு கொண்டார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே" (முதல் திருமுறை; பாடல் வ. எண் 565) என அருளிச் செய்தமை காண்க.

பஞ்ச பூதத் தலங்களுள் ஒன்றாகப் பூமியில் பொலிதலைப் பூந்தில்லை என ஏத்தப் பெற்றது. நெஞ்சிற் கருதி ஏத்தும் சிறப்பும் திருவடியைத் தொழுது ஏத்தும் பேறும் நனி விளங்கும் தன்மை, "கருது சிற்றம் பலத்தே அடிகழல் ஆர்க்க" என ஓதப் பெற்றது.

பூ – பொலிவு, அழகு, தாமரையும் சுட்டும்.

221. பையரவு அசைத்த அல்குல் பனிநிலா வெறிக்கும் சென்னி
மையரிக் கண்ணி யாளும் மாலுமோர் பாகமாகிச்
செய்யரி தில்லை தன்னுள் திகழ்ந்தசிற் றம்பலத்தே
கையெரி வீசிநின்று கனலெரி யாடுமாறே.

தெளிவுரை: ஈசன், படம் கொண்ட பாம்பை அசைத்துக் கட்டியவர்; குளிர்ந்த நிலவைச் சென்னியில் தரித்தவர்; உமாதேவியை ஒருபாகமாக உடையவர்; திருமாலை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர்; வயல்களின் வளம் மிகுந்த தில்லையின்

கண் திகழ்ந்து மேவும் சிற்றம்பலத்தில் கைகளை வீசிக் கனலை ஏந்தி ஆடுபவர்.

222. ஓதினார் வேதம் வாயால் ஒளிநிலா வெறிக்கும் சென்னி
பூதனார் பூதம்சூழப் புலியுரி அதள னார்தாம்
நாதனார் தில்லைதன்னுள் நவின்றசிற்றம் பலத்தே
காதில்வெண் குழைகள் தாழக் கனலெரி யாடுமாறே.

தெளிவுரை: ஈசன், வேதங்களை விரித்து ஓதியவர்; ஒளி மேவும் நிலவைச் சென்னியில் சூடியவர்; ஐம்பூதங் களாகத் திகழ்பவர்; பூதப்படைகள் சூழ்ந்து பொலிய விளங்குபவர்; புலித்தோலை ஆடையாக உடையவர்; எல்லாருக்கும் நாதனாக விளங்குபவர். அப்பெருமான், தில்லையின்கண் மிளிரும் சிற்றம் பலத்தில் காதில் வெண்குழைகள் விளங்கக் கையில் நெருப்பை ஏந்தித் திருநடனம் புரிபவர்.

223. ஒருடம்பு இருவர்ஆகி ஒளிநிலா வெறிக்கும் சென்னிப்
பாரிடம் பாணிசெய்யப் பயின்றஎம் பரம மூர்த்தி
காரிடம் தில்லைதன்னுள் கருதுசிற்றம் பலத்தே
பேரிடம் பெருகநின்று பிறங்கெரி யாடுமாறே.

தெளிவுரை: ஈசன், ஒருடம்பை உடையவர் என்பராய்ச் சிவசக்தியாய் அர்த்தநாரி என இருவண்ணத்தில் திருக் கோலம் தாங்கியவர்; ஒளி திகழும் நிலவைச் சென்னி யின் மீது சூடியவர்; பூதகணங்கள் தாளம் இட அதற்கு ஏற்றவாறு நடனம் புரிபவர்; பரம்பொருளாய் விளங்கும் திருமூர்த்தி. அப்பெருமான், கார் மேகம் சூழ்ந்து திகழும் தில்லையுள் யாவரும் கருதி ஏத்தும் சிற்றம்பலத்தில் எரியேந்தித் திருநடனம் புரிபவர்.

பேரிடம் பெருக – அகண்டமாய் வளர்தல்.

224. முதல்தனிச் சடையை மூழ்க முகிழ்நிலா வெறிக்கும் சென்னி
மதக்களிற்று உரிவை போர்த்த மைந்தரைக் காணலாகு
மதர்த்து வண்டு அறையும்சோலை மல்குசிற் றம்பலத்தே
கதத்ததோர் அரவம் ஆடக் கனலெரி யாடுமாறே.

தெளிவுரை: *தனிச் சிறப்புடைய சிவபெருமானுடைய திருச்சடை முடியை மூழ்கச் செய்யும் தன்மையில், நிலவொளியானது முகிழ்த்து விளங்கும் மாண்பில் திகழ்கின்றது. மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்து மேவும் ஈசன், வண்டு ஒலிக்கும் சோலை மல்கும் சிற்றம்பலத்தில், அரவம் ஆடக் கையில் எரியேந்தி ஆடுபவர்.*

225. மறையனார் மழுவொன்றுஏந்தி மணிநிலா வெறிக்கும் சென்னி
இறைவனார் எம்பிரானார் ஏத்துவார் இடர்கள் தீர்ப்பார்
சிறைகொள் நீர்த்தில்லை தன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே
அறைகழல் ஆர்க்கநின்று அனல்எரி ஆடுமாறே.

தெளிவுரை: *ஈசன், வேதமாக விளங்குபவர்; மழுப்படை உடையவர்; ஒளி மிகும் சந்திரனைச் சென்னி மிசைச் சூடியவர்; எம் இறைவனாகியவர்; எம் தலைவர்; ஏத்தி வழிபடும் அடியவர்களுடைய இடர்களைத் தீர்ப்பவர்; பொய்கைகளும் நீர்நிலைகளும் விளங்கும் தில்லையில் திகழும் சிற்றம்பலத்தில் வீரக்கழல் ஒலிக்க ஆர்த்து நின்று கையில் நெருப்பேந்தித் திருநடனம் புரிபவர்.*

226. விருத்தனாய்ப் பாலனாகி விரிநிலா வெறிக்கும் சென்னி
நிருத்தனார் நிருத்தம் செய்ய நீண்டபுன் சடைகள் தாழக்

கருத்தனார் தில்லைதன்னுள் கருதுசிற் றம்பலத்தே
அருத்தமா மேனிதன்னோடு அனலெரி யாடுமாறே.

தெளிவுரை: *ஈசன், விருத்தனாகவும், பாலனாகவும் விளங்குபவர்; ஒளி திகழும் நிலவினைச் சென்னியில் ஒளிரப் பெற்றவர்; திருநடனத்தினர்; திருநடம்புரியும் தன்மையில் நீண்ட மென்மையான சடை முடிகள் தாழுமாறு விளங்குபவர்; தில்லைச் சிற்றம்பலத்தில் உமாதேவியாரோடு திகழ்ந்து, கையில் நெருப்பு ஏந்தி நடனம் புரிபவர்.*

சிறப்புரை: *ஈசன், விருத்த குமார பாலராகிய திருவிளையாடற் புராணக் குறிப்பானது, "விருத்த னாய்ப் பாலனாகி" என ஓதப் பெற்றது.*

அருத்தமாமேனி – உமாதேவி. அர்த்தநாரியாய் மேவும் சிறப்பினை ஓதியது; எறிக்கும் – வீசும்.

227. பாலனாய் விருத்தனாகிப் பனிநிலா எறிக்கும் சென்னிக்
காலனைக் காலாற் காய்ந்த கடவுளார்
விடையொன்றேறி
ஞாலமாம் தில்லைதன்னுள் நவின்றசிற் றம்பலத்தே
நீலஞ்சேர் கண்டனார்தான் நீண்டெரி யாடுமாறே.

தெளிவுரை: *ஈசன், பாலனாகியும் விருத்தனாகியும் திருக் கோலம் தாங்கித் திருவிளையாடல் புரிபவர்; குளிர்ந்த நிலவொளி வீசுகின்ற பிறைச்சந்திரனைச் சென்னியில் சூடியவர்; மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த காலனைத் திருப்பாதத்தால் உதைத்துக் காய்ந்த கடவுள்; இடப வாகனத்தில் ஏறி விளங்குபவர்; நீலகண்டத்தை உடையவர்; ஞானத்தின் சிறப்பாம் தில்லைச் சிற்றம்பலத்தில் திகழ்பவர். அப்பெருமான், நீண்டு சுடர்விடும் நெருப்பினை ஏந்தித் திருநடனம் புரிபவர்.*

ஞாலமாம் தில்லை – பாட்டு வ எண் 491 காண்க.

228. மதியிலா அரக்கன்ஓடி மாமலை எடுக்க நோக்கி
நெதியன்தோள் நெரியவூன்றி நீடிரும்பொழில்கள் சூழ்ந்த
மதியந்தோய் தில்லைதன்னுள் மல்குசிற்றம்பலத்தே
அதிசயம் போலநின்று அனலெரி யாடுமாறே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தனது பாதையின் குறுக்கே தோன்றிய தென்று கருதிய மதியில்லாத இராவணன், கயிலை மலையை எடுக்கத் தொடங்கினான். அஞ்ஞான்று, பெரும் செல்வனாகிய ஈசன், அவ் அரக்கனின் தோள் நெரியுமாறு திருப்பாத விரலால் அடர்த்தனர். நீண்ட பொழில் சூழ்ந்த தில்லையில் மேவும் சிற்றம்பலத்தில் அதிசயம் போன்று கையில் எரியேந்தி அப்பெருமான், நடனம் புரிபவர்.

சிறப்புரை: இத் திருப்பதிகத்தில் பாடல் தோறும் தண்ணொளி பரவும் திங்களின் ஒளியும் திருக்கரத்தில் தீ ஏந்தித் திருநடம் புரியும் தன்மையும் உணர்த்தப் பெறும் சிறப்பினைக் காண்க. இதனை, அதிசயம் எனக் குறிக்கும் பாங்கினில், "சிற்றம்பலத்தே அதிசயம் போல நின்று அனலெரியாடுமாறே!" என ஓதப் பெறுதலும் நோக்குக.

ஈசனின் திருவடிவமானது, அதிசயமாக விளங்கி உள்ளத்தில் ஈர்க்கப் பெறுதலை உணர்த்தும். இத்தன்மையில், "அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே" எனவும், "அதிசயமான வடிவுடையாள்" எனவும் வரும் அபிராமி அந்தாதித் திருவார்த்தையும் காண்க.

நெதியன் – செல்வன்; சிவபெருமான்; நெதி – தியானம் – தியானப் பொருளானவன்.

23. கோயில்

தல விளக்கம்: *பதிக எண் 22 காண்க.*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

229. பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்திசெய்கேன் என்னைநீ இகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்து ஆடுகின்ற
அத்தாஉன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே.

தெளிவுரை: *பரம்பொருளே! மேலான யோகத்தின் நாயகனாய் விளங்கும் ஈசனே! நான், பக்தி உணர்வுடன் பாடுவதில்லை. உள்ளத்தில் ஒரு வேட்கையை வைத்துப் பக்தி செய்கின்றேன். ஆயினும், என்னை இகழ்ச்சி புரியாது அருள் புரிவீராக. முத்தனே! முதல்வனே! தில்லையம்பலத்தில் நடனம் புரிகின்ற அத்தனே! தேவரீரின் திருக்கூத்தினைக் காணும் பொருட்டு, அடியேன் வந்துற்றனன்.*

சிறப்புரை: *இத் திருப்பாட்டானது, நடராசப் பெருமானைத் தரிசனம் செய்யும் அன்பர்களுக்கு, அருள் வழங்கும் பெற்றியினை உணர்த்திற்று. பரம யோகியாய் விளங்கும் ஈசன், முத்தியளிக்கும் முதல் வனாய் மேவித் தன்னைத் தரிசிப்பவர்கள், பக்தியில் குறைந்தவர்களானாலும், முத்திப் பேற்றை நல்குபவர் எனச் சுட்டுதலாயிற்று. இது தரிசிக்க முத்தி தரும் திருத்தலப் பெருமையை ஓதுதலாயிற்று. மற்றும், நினைக்க முத்தி தரும் தலம் திருவண்ணாமலை எனவும், பிறக்க முத்தி தரும் தலம் திருவாரூர் எனவும்*

வசிக்க முத்தி தரும் தலம் காஞ்சிபுரம் எனவும், மரிக்க முத்தி தரும் தலம் காசி எனவும் வழங்கப் பெறுதல் காண்க.

ஈசனின் அன்புடைய நற்பாங்கு, அத்தன் என ஓதுதல் ஆயிற்று. கண்டு தரிசித்து மகிழ்தல் என்பது திருநடனமே என்பதனைச் சுட்டுமாறு, "உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த வாறே" என உரைத்தலும் நோக்குக.

230. கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்பன தோளிபங்கா
ஒருத்தரால் அறியவொண்ணாத் திருவுரு உடைசோதீ
திருத்தமாம் தில்லை தன்னுள் திகழ்ந்தசிற்றம் பலத்தே
நிருத்தநான் காணவேண்டி நேர்பட வந்தவாறே.

தெளிவுரை: மூங்கில் போன்ற மென்மையான தோள் உடைய உமாதேவியைப் பாகமாகக் கொண்டு மேவும் திருவடிவத்தையுடைய சோதியே! உயர்ந்ததாகிய தேவரீரின் திருவுள்ளக் குறிப்பினை அறிந்து, அக் கருத்தில் யான் ஏத்திப் பாடுகின்றிலேன் ஆயினும், மலம் நீக்கி மன்னுயிர்களைத் திருத்தி, ஞானத் தெளிவினை நல்குகின்ற தில்லையுள் விளங்கும் சிற்றம் பலத்தில் புரியும் திருநடனத்தினைக் காணும் எண்ணத் துடன் யான் வந்துற்றனன்.

காம்பு – மூங்கில்.

231. கேட்டிலேன் கிளைபிரியேன் கேட்குமா கேட்டியாகில்
நாட்டினேன் நின்றன்பாத நடுப்பட நெஞ்சினுள்ளே
மாட்டினீர் வாளைபாயு மல்குசிற் றம்பலத்தே
கூட்டமாம் குவிமுலை யாள்கூடநீ ஆடுமாறே.

தெளிவுரை: ஈசனே! தேவரீரின் திருநடனச் சிறப்பினை முன்னர் கேட்டிலேன். பின்னர் அடியவர்களைப்

பிரியாதும், திருப்பாதத்தை நெஞ்சில் பதித்தும் தேவரீர் திருநடனத்தைக் காண வேண்டும் என்று கொண்டனன். நீர்வளம் மிகுந்த சிற்றம்பலத்தில் தேவரீர் திருக்கூட்டத்தினர் பக்கம் திகழவும் உமாதேவியார் உடன் திகழவும் ஆடும் அத்திருக்காட்சி யானது என்பால் குடி கொண்டது.

232. **சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை யடிமைசெய்ய**
எந்தைநீ யருளிச் செய்யா யாதுநான் செய்வதென்னே
செந்தியார் வேள்வி யோவாத்தில்லைச் சிற்றம்பலத்தே
அந்தியும் பகலும்ஆட அடியிணை அலசுங் கொல்லோ.

தெளிவுரை: ஈசனே! செறிந்த நல்லடிமை கொண்டு தேவரீரை ஏத்துவதற்கு என் சிந்தையைத் திகைக்க வைக்காது அருள் புரிவீராக. தேவரீர் அருளாது இருந்தால் யான் என் செய்வது? செம்மை தரும் தீ வளர்க்கும் அந்தணர்கள், வேள்வியை ஓய்வு இல்லாது புரிய விளங்கும் தில்லையுள், சிற்றம்பலத்தில் நடம் புரியும் திருவடிகள் வருந்தும் தன்மையதோ! திருவடி வருந்தாது என்பதும் அருள்வீராக என்று வேண்டு தலும் குறிப்பு.

சிறப்புரை: ஈசனின் அருளின்றி அப்பெருமானை ஏத்தி வழிபடுதலும் ஒல்லாது, என்னும் தன்மை, "சிந்தையைத் திகைப்பியாதே," "நான் செய்வது என்னே!" என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச் சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை முந்தை வினை முழுது மோய உரைப்பன் யான்" என அருளிச் செய்தமை காண்க.

அந்தணர்கள் ஓய்வின்றி வேள்வியாற்றும் சிறப்பு, "செந்தியார் வேள்வியோ வாத் தில்லைச் சிற்றம்பலம்" என உணர்த்தப் பெற்றது. இந்நெறியில் திருஞான சம்பந்தர், "கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம்" என உரைத்தருளப் பெற்றதும் (முதல் திருமுறை, கோயில்; பாடல் வ.எண் 864) காண்க.

காலை அந்தி, மாலை அந்தி ஆகிய இருபொழுதும், பகலும் ஆடுகின்ற ஈசனின் அடியிணை வருந்துமோ! அதனால் அடியேனுக்கு அருள் புரிவதற்குத் தடை யாது! என்னும் வியப்பு விளங்குமாறு உரைத்தருளும் பெற்றியும் நோக்குக.

அலசும் – வருந்தும்.

233. கண்டவா திரிந்துநாளும் கருத்தினால் நின்றன் பாதம்
கொண்டிருந்தது ஆடிப்பாடிக் கூடுவன் குறிப்பினாலே
வண்டுபண் பாடும் சோலை மல்குசிற் றம்பலத்தே
எண்டிசை யோரும்ஏத்த இறைவநீ யாடுமாறே.

தெளிவுரை: ஈசனே! தேவரீருடைய திருப்பாதங்களைக் கருதியும், நெஞ்சில் பதித்தும், தன்னிச்சை கூடக் கண்டவாறு திரிந்தும், ஆடியும், பாடியும், ஏத்தி மகிழ்வேன். வண்டு பாடும் சோலை மல்கும் சிற்றம் பலத்தில் எட்டுத் திசையிலும் உள்ள அடியவர் ஏத்த விளங்கும் இறைவனே! தேவரீரின் நடனம் பேருவகை அளிக்கும் தன்மையது.

234. பார்த்திருந்து அடியனேனான் பரவுவன் பாடியாடி
மூர்த்தியே என்பன் உன்னை மூவரின் முதல்வன்
என்பன்

ஏத்துவார் இடர்கள் தீர்ப்பாய் தில்லைச்சிற் றம்பலத்துக்
கூத்தாஉன் கூத்துக் காண்பான் கூடநான் வந்தவாறே.

தெளிவுரை: *ஈசனே! அடியவனாகிய நான், தேவரீரைத் தரிசித்துப் பரவிப் போற்றுவேன்; பாடியும் ஆடியும் மூர்த்தியே என ஏத்துவேன்; மும்மூர்த்திகளின் தலைவன் என்று போற்றுவேன். ஏத்தி வழிபடும் அன்பர்களுடைய இடர்களைத் தீர்த்தருளும் தில்லைச் சிற்றம்பலத்தில் வீற்றிருக்கும் கூத்தப் பெருமானே! தேவரீருடைய திருக்கூத்தினைக் காண அடியேன் வந்துற்றேன்.*

சிறப்புரை: *சிவபெருமான், மூவர்க்கும் மேலானவர் என்பதனை, "மூவரின் முதல்வன் என்பன்" என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் "முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்! மூவரும் அறிகிலர் யாவர் மற்றறிவார்!" என அருளிச் செய்யும் திருவாசக அமுத மொழியும் காண்க.*

திருஞானசம்பந்தர், பிரமன் திருமால் உருத்திரன் ஆகிய மூவரால் ஏத்தப் பெறும் தன்மையில் சிவன் மேலோங்கி நிற்றலைத் திருச்சிவபுரத் திருப்பதிகம் (முதல் திருமுறை; பதிகம் எண் 21) வாயிலாக உரைத்தருளிய பாங்கினையும் நோக்குக.

235. பொய்யினைத் தவிரவிட்டுப் புறமலா அடிமைசெய்ய
ஐயநீ அருளிச் செய்யாய் ஆதியே ஆதிமூர்த்தி
வையகந் தன்னில் மிக்க மல்குசிற் றம்பலத்தே
பையநுன் னாடல்காண்பான் பரமநான் வந்தவாறே.

தெளிவுரை: *நித்தியம் அல்லாத பொருள்களின்பால் உள்ள பற்றினைக் களைந்து நீக்கிப் புறம் போகல் ஒட்டாதபடி அடிமை செய்வதற்கு, என் ஐயனே!*

ஆதியே! ஆதிமூர்த்தி! அருள் புரிவீராக. எல்லாச் சிறப்புகளும் மிகுந்து இப்பூவுலகில் திகழும் சிற்றம் பலத்தில் தேவரீரின் திருநடனத்தைக் காண்பதற்காக நான் வந்தேன்.

236. **மனத்தினார் திகைத்து நாளும் மாண்பலா நெறிகள் மேலே**
கனைப்பரால் என்செய்கேனோ கறையணி கண்டத்தானே
தினைத்தனை வேதங்குன்றாத் தில்லைச்சிற் றம்பலத்தே
அனைத்துநின் னிலயம் காண்பான் அடியனேன் வந்தவாறே.

தெளிவுரை: மனமானது, மருட்சி அடைந்து அஞ்ஞானத்தில் மூழ்கி மாண்பற்ற நெறிகளில் தாவி நின்று வருத்தினால் நான் என் செய்வனோ! நீலகண்டனாக இருந்து அருள் நல்கும் பெருமானே! வேத நெறியிலிருந்து சிறிதளவும் தவறாது விளங்கும் தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடல் புரியும் நாதனே! தேவரீரின் நடனக் காட்சியில் விளங்கும் அருளின் இலயத்தைக் காண்பதன் பொருட்டு யான் வந்தேன். அருள் புரிவீராக என்பது குறிப்பு.

237. **நெஞ்சினைத் தூய்மைசெய்து நினைக்குமா நினைப்பியாதே**
வஞ்சமே செய்தியாலோ வானவர்தலைவனேநீ
மஞ்சடை சோலைத் தில்லை மல்குசிற்றம் பலத்தே
அஞ்சொலாள் காணநின்று அழகநீ ஆடுமாறே.

தெளிவுரை: தேவர்களின் தலைவனே! என் நெஞ்சானது தூய்மையாக இருந்து தேவரீரை நினைத்து ஏத்த வேண்டும். அவ்வாறு நினைய ஒட்டாது வஞ்சனையாய் இருப்பீராயின், யான் என்

செய்வேன்! மேகம் சூழும் சோலையுடைய தில்லையில் திகழும் சிற்றம்பலத்தில் மேவும் நடராசப் பெருமானே! தேவரீரானவர், அழகிய சொல் உரைக்கும் உமாதேவியார் காண, ஆடுகின்ற அழகர் அல்லவா!

சிறப்புரை: சிவகாமியம்மை காணத் திருநடனம் புரியும் ஈசனின் திருச்செயலை, இத்திருப்பாட்டு உணர்த்திற்று. இது, "அஞ்சொலாள் காண நின்று அழகக நீ ஆடுமாறு" என ஓதப் பெற்றது. இந்நெறியில் உமாதேவியார் அழகிய சொல் கொண்டு பாட, ஈசன் ஆடுகின்ற சிறப்பினைத் திருஞானசம்பந்தர், "தளிர் இள வளர் என உமைபாடத் தாளம் இட ஓர் தழல் வீசிக்கிளர் இளமணியரவு அரை ஆர்த்து ஆடும் வேடக் கிறிமையார்" (இரண்டாம் திருமுறை 247; திருவாய்மூர் திருப்பதிகம்; பாடல் வ.எண் 1201) என அருளியவாறும் காண்க.

238. மண்ணுண்ட மாலவனும் மலர்மிசை மன்னினானும்
விண்ணுண்ட திருவுருவம் விரும்பினார் காணமாட்டார்
திண்ணுண்ட திருவேமிக்க தில்லைச்சிற்றம் பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பரமநீ யாடுமாறே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருமாலும், பிரமனும் வானுயர எழுந்த (ஈசனின்) திருவுருவத்தைக் காண விரும்பினர். ஆயினும், தோற்றம் கொள்ளாது மேவிய உறுதி மிக்க திருவே! தில்லைச் சிற்றம்பலத்தில் பண்ணிசைந்த பாடலுக்கு உகந்து ஆடும் பரமனே! தேவரீருடைய நடனக் காட்சியினைக் காணுமாறு வந்தேன். அருள் புரிவீராக என்பது குறிப்பு.

24. திருவதிகை வீரட்டானம்

தல விளக்கம்: *பதிகம் எண் 1 காண்க.*

பதிகக் குறிப்பு: திருப்பாடல்கள்தோறும் கொப்பளித்த என்னும் தொடர் சாற்றி வருதலால் இது கொப்பளித்த என்னும் அடை மொழியுடன் ஏத்தப் பெற்றது.

கொப்பளித்த திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

239. இரும்புகொப் பளித்தயானை
ஈருரி போர்த்தஈசன்
கரும்புகொப் பளித்தஇன்சொல்
காரிகை பாகமாகச்
கரும்புகொப் பளித்தகங்கைத்
துவலைநீர் சடையில்ஏற்ற
அரும்புகொப் பளித்தசென்னி
அதிகைவீ ரட்டனாரே.

தெளிவுரை: *ஈசன், கருத்த இரும்பு போன்ற பலம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர்; கருப்பஞ்சாறு போன்ற இனிய தன்மையில் மொழிபுகலும் உமாதேவியைப் பாகமாக உடையவர்; வண்டு உதிர்க்கும் தேன் மலர் போன்ற இனிய கங்கையைச் சடையில் ஏற்றவர். அப்பெருமான், சென்னியில் மலர்கள் சூடி விளங்கும் அதிகை வீரட்டனாரே.*

240. கொம்புகொப் பளித்ததிங்கள்
கோணல்வெண் பிறையும்சூடி
வம்புகொப் பளித்தகொன்றை
வளர்சடை மேலும்வைத்துச்

செம்புகொப் பளித்தமூன்று
மதிலுடன் சுருங்கவாங்கி
அம்புகொப் பளிக்கஎய்தார்
அதிகைவீ ரட்டனாரே.

தெளிவுரை: ஈசன், வளைந்த கொம்பு போன்ற கோணு தலையுடைய பிறைச் சந்திரனைச் சூடியவர்; மணம் கமழும் கொன்றை மலரை நீண்டு விரிந்த சடை முடியின் மீது தரித்தவர்; செம்பினால் ஆக்கப் பெற்ற அசுரர்களின் மூன்று மதில்கலும் எரிந்து சாம்பலாகு மாறு அம்பு தொடுத்தவர். அப்பெருமான் அதிகை வீரட்டனாரே ஆவார்.

241. விடையும்கொப் பளித்தபாதம்
விண்ணவர் பரவியேத்தச்
சடையும்கொப் பளித்ததிங்கள்
சாந்தம்வெண் ணீறுபூசி
உடையும்கொப் பளித்தநாகம்
உள்குவார் உள்ளத்தென்றும்
அடையும்கொப் பளித்தசீரார்
அதிகைவீ ரட்டனாரே.

தெளிவுரை: ஈசன், இடப வாகனத்தில் வீற்றிருந்து அருள் புரிபவர்; தேவர்களால் பரவி ஏத்தப்படுபவர்; சடை முடியின் மீது சந்திரனைத் தரித்துள்ளவர்; சாந்தம் திகழ வழங்கும், மணம் கமழ் திருவெண்ணீற்றைத் திருமேனியில் பூசி விளங்குபவர்; நாகத்தை அரையில் கட்டி விளங்குபவர்; நினைத்து ஏத்தும் அடியவரின் உள்ளத்தில் எக்காலத்திலும் விளங்குபவர். அப் பெருமான், சிறப்பு மிக்க அதிகை வீரட்டனாரே ஆவார்.

242. கறையும்கொப்ப ளித்தகண்டர்
காமவேள் உருவமங்க
இறையும்கொப் பளித்தகண்ணார்
ஏத்துவார் இடர்கள்தீர்ப்பார்
மறையும்கொப் பளித்தநாவர்
வண்டுண்டு பாடும்கொன்றை
அறையும்கொப் பளித்தசென்னி
அதிகைவீ ரட்டனாரே.

தெளிவுரை: *ஈசன், நஞ்சின் கறை பதிந்த நீலகண்டத்தை உடையவர்; மன்மதனின் உடலானது, ஒரு நொடிக்குள் வெந்து சாம்பலாகுமாறு எரித்த நெருப்புக் கண்ணுடையவர்; ஏத்திப் போற்றும் மெய்யன்பர் களுடைய துன்பங்களைத் தீர்ப்பவர்; நான்கு வேதங் களையும் விரித்து ஓதும் நாவினர்; வண்டுகள் தேனை உண்டு ரீங்காரம் இசைத்துப் பாடி வட்டமிடும் கொன்றை மலரைச் சென்னியின் மீது தரித்தவர். அப்பெருமான், அதிகை வீரட்டனாரே ஆவார்.*

243. நீறுகொப் பளித்தமார்பர்
நிழல்திகழ் மழுவொன்று ஏந்திக்
கூறுகொப் பளித்த கோதைத்
கோல்வளை மாதோர்பாகம்
ஏறுகொப் பளித்தபாதம்
இமையவர் பரவி யேத்த
ஆறுகொப் பளித்த சென்னி
அதிகைவீரட் டனாரே.

தெளிவுரை: *ஈசன், திருவெண்ணீறு பூசிய திருமார் பினர்; ஒளி திகழும் மழுப்படை ஏந்தியவர்; அழகிய வளையலை அணிந்த உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு திகழ்பவர்; இடபவாகனத்தில் ஏறி அமர்ந்து காட்சி நல்குபவர்; தேவர்களால் பரவி ஏத்தப்*

பெறுபவர்; பொங்கி எழும் கங்கையைச் சென்னியின் மீது தரித்தவர்; அப்பெருமான், அதிகை வீரட்டனாரே.

நிழல் – ஒளி; கோதை – கூந்தல்; மாது – உமையவள்.

244. வணங்குகொப் பளித்தபாதம்
 வானவர் பரவி யேத்தப்
பிணங்குகொப் பளித்த சென்னிச்
 சடையுடைப் பெருமை யண்ணல்
சுணங்குகொப் பளித்த கொங்கைச்
 சுரிகுழல் பாகமாக
அணங்குகொப் பளித்த மேனி
 அதிகைவீ ரட்டனாரே.

தெளிவுரை: *ஈசன், எல்லாத் தேவர்களுக்கும் செய்கின்ற வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் தாமே ஏற்கும் திருப்பாதம் உடையவர்; தேவர்களால் ஏத்தப்படுபவர்; ஒன்றுக்கொன்று பிணைந்து விளங்கும் சடை முடியுடைய அண்ணல்; மெல்லிய இடையுடைய உமாதேவியைப் பாகமாக உடையவர்; அழகிய திருமேனியுடையவர். அப்பெருமான், அதிகை வீரட்டனாரே ஆவார்.*

சிறப்புரை: *எத்தகைய தன்மையில் எத் தெய்வத்தை வணங்கினும் எல்லா வணக்கங்களும் சிவபெருமானுக்கே உரித்தாதல், "வணங்கு கொப் பளித்த பாதம்" என ஓதப் பெற்றது. இத்தன்மை, "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்" (சித்தியார் சுபக்கம் 115) என்னும் சாத்திரத் திருப்பாட்டும் காண்க.*

சுணங்கு – மெல்லிய இடையை உணர்த்திற்று. அணங்கு – அழகு.

245. சூலம்கொப் பளித்த கையர்
சுடர்விடு மழுவாள் வீசி
நூலும்கொப் பளித்த மார்பில்
நுண்பொறி அரவம் சேர்த்தி
மாலும் கொப் பளித்த பாகர்
வண்டுபண் பாடும் கொன்றை
ஆலங்கொப் பளித்த கண்டத்து
அதிகைவீ ரட்டனாரே.

தெளிவுரை: ஈசன், சூலத்தைக் கரத்தில் ஏந்தி விளங்குபவர்; சுடர் விடும் மழுவாள் உடையவர்; முப்புரிநூல் அணிந்த திருமார்பினர்; படம் கொண்டு ஆடும் அரவத்தை ஆபரணமாக உடையவர்; திருமாலை ஒரு பாகமாகக் கொண்டு திகழ்பவர்; வண்டு இசை பாடும் கொன்றை மலர் மாலை சூடியவர்; நஞ்சினைத் தேக்கிய நீலகண்டத்தினர். அப்பெருமான், அதிகை வீரட்டனாரே ஆவார்.

246. நாகம்கொப் பளித்த கையர்
நான்மறை யாய பாடி
மேகங்கொப் பளித்த திங்கள்
விரிசடை மேலும் வைத்துப்
பாகங்கொப் பளித்த மாதர்
பண்ணுடன் பாடி யாட
ஆகங்கொப் பளித்த தோளார்
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: ஈசன், நாகத்தைக் கங்கணமாகக் கட்டிய கையினர்; நான்கு வேதங்களையும் பாடிய திருவாயினர்; மேகத்தில் தவழும் சந்திரனைச் சடை முடியில் திகழ வைத்தவர்; உமாதேவியானவர் "தளிர் இள வளர் ஒளி" எனத் தாளம் இட்டுப் பாடத் திருநடனம் புரிந்தும், அத்தகையை தேவியைப் பாக

மாகக் கொண்டு. அர்த்த நாரியாகவும் ஆகி, இரு நிலைகளிலும் வேறாகித் தனித்தும், ஒன்றாகி இணைந்தும் திகழ்பவர். அப்பெருமான் அதிகை வீரட்டனாரே ஆவார்.

ஆகம் – ஈசனின் திருமேனி.

247. பரவுகொப் பளித்த பாடல்
பண்ணுடன் பத்தர் ஏத்த
விரவுகொப் பளித்த கங்கை
விரிசடை மேவ வைத்து
இரவுகொப் பளித்தகண்டர்
ஏத்துவார் இடர்கள் தீர்ப்பார்
அரவுகொப் பளித்த கையர்
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: *ஈசன், பக்தர்கள் பரவி ஏத்தும் இசை மிக்க பாடல்களை ஏற்று அருள் புரிபவர்; விரிந்த சடையில் கங்கையைத் தரித்து மேவுபவர்; கரிய நஞ்சினைப் பதித்த கண்டத்தை உடையவர்; ஏத்தும் அடியவர் களின் துன்பத்தைத் தீர்ப்பவர்; அரவத்தைக் கங்கண மாக உடையவர். அப்பெருமான், அதிகை வீரட்டனாரே.*

சிறப்புரை: *சிவபெருமான், பரவிப் பாடி ஏத்தும் அன்பர்களின் துயர் தீர்க்கும் பெற்றி, "பரவு கொப் பளித்த பாடல் பண்ணுடன் பத்தர் ஏத்த" எனவும், இடர் தீர்க்கும் அருள் தன்மையை, "ஏத்துவார் இடர்கள் தீர்ப்பார்" எனவும் ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், "பாடுவார் பசி தீர்ப்பாய் பரவுவார் பிணி களைவாய்" (திருக்குருகாவூர் வெள்ளடை; பாடல் 3) எனவும், "தொழுவார் அவர் துயர் ஆயன தீர்த்தல் உன தொழிலே" (திருவெண்ணெய்நல்லூர்*

பதிகம்; எண் 9) எனவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தமை காண்க.

மாணிக்கவாசகர், "பரவுவார் இமையோர்கள், பாடுவன நால் வேதம்" (திருச்சதகம் 17) எனவும், "பாரோர் விண்ணோர் பரவியேத்தும் பரனே பரஞ் சோதி" (ஆசைப்பத்து 7) எனவும் அருளிச் செய் தமையும் காண்க.

இரவு – இருள். நஞ்சின் கருமையைக் குறித்தது; அரவு கொப்பளித்தல் – நாக கங்கணம்.

248. தொண்டைகொப் பளித்த செவ்வாய்த்
துடியிடைப் பரவை யல்குல்
கொண்டைகொப் பளித்த கோதைக்
கோல்வளை பாக மாக
வண்டுகொப் பளித்த தீந்தேன்
வரிக்கயல் பருகி மாந்தக்
கொண்டைகொப் பளித்த தெண்ணீர்க்
கெடிலவீ ரட்ட னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *பவள வாயும் துடியிடையும் கெண்டை விழியும் நீண்ட கூந்தலும் அழகிய வளையலும் கொண்ட உமாதேவியைப் பாகமாக ஏற்று விளங்கும் சிவபெருமான், வண்டு அறையும் மலரில் உள்ள தேனைப் பருகும் கயல்களையுடைய கெடில நதியின் கரையில் விளங்கும் வீரட்டானரே ஆவார்.*

25. திருவதிகை வீரட்டானம்

தல விளக்கம்: *பதிகம் எண் 1 காண்க.*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

249. வெண்ணிலா மதியந் தன்னை
விரிசடை மேவ வைத்து
உண்ணிலாப் புகுந்து நின்றங்கு
உணர்வினுக்கு உணரக் கூறி
விண்ணிலார் மீயச்சூரார்
வேண்டுவார் வேண்டி லார்க்கே
அண்ணியார் பெரிதும் சேயார்
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: சிவபெருமான், வெண்மையான பிறைச் சந்திரனை, விரிந்த சடை முடியின் மீது திகழுமாறு செய்தவர்; மெய்யன்பர்களின் உள்ளத்தில் புகுந்து நின்று உணர்வினுக்கு உணர்வாய் மேவி உணர்த்தி அருள்பவர்; தேவர் உலகம் போன்று விளங்கும் மீயச்சூரில் திகழ்பவர்; விரும்பி ஏத்துபவர்களுக்கு அண்மையராகவும், ஏத்தாதவர்களுக்குப் தொலை விலும் இருப்பவர். அவர், அதிகை வீரட்டனாரே.

அண்ணியார் – அண்மையில் இருப்பவர்.

250. பாடினார் மறைகள் நான்கும்
பாய்இருள் புகுந்துஎன் உள்ளம்
கூடினார் கூடல் ஆல
வாயிலார் நல்ல கொன்றை
சூடினார் சூடல் மேவிச்
சூழ்சுடர் சுடலை வெண்ணீறு
ஆடினார் ஆடல் மேவி
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: சிவபெருமான், நான்கு வேதங்களையும் ஓதி விரித்தவர்; என் வஞ்ச மனத்திடைப் புகுந்து கூடினவர்; கூடல் ஆலவாயில் விளங்குபவர்; பிரணவ

புட்பமாகிய கொன்றை மலரைச் சூடியவர்; சுடலையில் விளங்கும் வெண் சாம்பலைப் பூசி மகிழ்பவர்; நடனம் புரிபவர். அவர் அதிகை வீரட்டனாரே ஆவார்.

சிறப்புரை: சிவபெருமான், கொன்றை மலரைச் சூடி உள்ளவர். அதனைப் பிரணவ புட்பம் என்பர். அது இத்திருப்பாட்டில் "நல்ல கொன்றை சூடினார்" என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டர் தொகையில், "வம்பறா வரிவண்டு மணம் நாற மலரும் மது மலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்" எனச் சிறப்பித்து, நற்கொன்றை என ஏத்தியருளியதும் காண்க.

பாய் இருள் – உள்ளத்தின் உள்ளே. அஞ்ஞானத்தைக் குறித்தது.

251. ஊனையே கழிக்க வேண்டில்
உணர்மின்கள் உள்ளத் துள்ளே
தேனைய மலர்கள் கொண்டு
சிந்தையுள் சிந்திக் கின்ற
ஏனைய பலவுமாகி
இமையவர் ஏத்தநின்று
ஆனையின் உரிவை போர்த்தார்
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: ஊனாகிய இவ் உடம்பினைக் கொண்டு இருக்கும் இப்பிறவித் துன்பத்திலிருந்து நீங்க வேண்டு மானால், உள்ளத்தில் மேவும் அன்புத்தேன் மலர்கள் கொண்டு ஏத்தி ஈசனைப் பரவுமின். அப்பெருமான், சிந்தையுள் கோயில் கொண்டு விளங்குபவர்; சிந்திக் கின்ற எல்லாப் பொருள்களாகவும் ஏனைய பலவு மாகவும் விளங்குபவர்; தேவர்களால் ஏத்தப்

பெறுபவர்; யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர். அவர், அதிகை வீரட்டனாரே ஆவார்.

சிறப்புரை: பிறவி நீங்க வேண்டுமானால் ஈசனைச் சிந்தித்து ஏத்த வேண்டும் என்று இத்திருப்பாட்டு உபதேசித்தது. சிந்தையில் தோன்றுகின்ற எல்லாமாய் ஈசன் விளங்குகின்றார் என்பது, “சிந்தையுட் சிந்திக் கின்ற ஏனைய பலவுமாகி” என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில், சுந்தரமூர்த்தி சுவாமிகள், “சீலந்தான் பெரிதும் உடையானைச் சிந்திப்பார் அவர் சிந்தை யுளானை” (திருக்கச்சி ஏகம்பம்) எனவும், “சிந்தித்து என்றும் நினைந்து எழுவார்கள் சிந்தையில் திகழும் சிவன்றன்னைப் பந்தித்த வினைப்பற்றறுப் பானை” (திருக்கச்சி யேகம்பம் 8) எனவும் அருளிச் செய்தமை காண்க. மாணிக்கவாசகர், “சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான் திருப்பெருந்துறையுறை சிவனே! எந்தையே ஈசா! உடலிடங் கொண்டாய் யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே” (கோயில் திருப்பதிகம்; பாடல் 10) அருளிச் செய்தமையும் காண்க. இது அகமலராகிய அட்டபுட்பத்தை உணர்த்தியது.

252. துருத்தியாங் குரம்பை தன்னில்
தொண்ணூற்றங்கு அறுவர் நின்று
விருத்திதான் தருக என்று
வேதனை பலவும் செய்ய
வருத்தியால் வல்லவாறு
வந்துவந் தடைய நின்ற
அருத்தி யார்க்கு அன்பர் போலும்
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: உணவு முதலானவற்றால் துருத்தி வளர்க் கப்படும் இவ்வுடம்பானது 96 தத்துவங்களால் மேவி

விருத்தி செய்யப்படுகிறது. மேலும் தனக்குத் தேவை யெனவும், தருக எனவும் கேட்டுக் கொண்டே இருக்கிறது. வருத்தத்தினையும் தருகின்றது. ஈசன், வல்லவாறு வந்து அன்புகாட்டி அருள் செய்பவர். அத்தகைய அன்பர்க்கு அன்பராய் விளங்குபவர் அதிகை வீரட்டனாரே ஆவார்.

சிறப்புரை: இத் தேகமானது *96* தத்துவங்களை உடையதெனக் கூறப்பட்டது. இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "அறுபதும் பத்தும் எட்டும் ஆறினோடு அஞ்சு நான்கும் துறுபறித் தனைய நோக்கிச் சொல்லிற் றொன்றாகச் சொல்லார் நறுமலர்ப் பூவும் நீரும் நாள் தொறும் வணங்குவார்க்கு அறிவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே" (திருவாரூர்ப் பதிகம்; பாடல் எண் *3*) என அருளிச் செய்தமையும் காண்க.

உடலின்கண் *72,000* நரம்புகள் பரவியுள்ளன. ஒன்பது பிரதான துவாரங்களுடன் *96* தத்துவங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதனை, நமது முன்னோர்கள் வகுத்துள்ளனர். *96* தத்துவங்களாவன: பூதம் *5*; புலன் *5*; கர்மேந்திரியம் *5*; ஞானேந்திரியம் *5*; கோசங்கள் *5*; அவத்தை *5*; நாடி *10*; வாயு *10*; வினை *2*; சரீரம் *3*; மலம் *3*; தோஷம் *3*; குணம் *3*; மண்டலம் *3*; ஈஷனை *3*; ஆதாரம் *6*; ஆசயம் *7*; விகாரம் *8*; கரணம் *4*; ஆத்மா *1*. மற்றும் பாட்டு வ. எண் *520* காண்க.

253. பத்தியால் ஏத்தி நின்று
பணிபவர் நெஞ்சத் துள்ளார்
துத்தியைந் தலையநாகம்
சூழ்நடை முடிமேல் வைத்து
உத்தர மலையர் பாவை
உமையவள் நடுங்க அன்று

அத்தியின் உரிவை போர்த்தார்
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: சிவபெருமான், பக்தியால் ஏத்தும் அன்பர்களின் நெஞ்சத்தில் குடி கொண்டு இருப்பவர்; ஐந்து தலைகளையுடைய நாகத்தைச் சடை முடியில் திகழ வைத்தவர்; உத்தர மலையாகிய இமாசல மன்னனின் மகளாகிய உமாதேவி வெருவுமாறு, யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர். அவர், அதிகை வீரட்டனாரே.

254. வரிமுரி பாடி என்றும்
வல்லவாறு அடைந்து நெஞ்சே
கரியுரி மூடவல்ல
கடவுளைக் காலத் தாலே
சுரிபுரி விரிகு ழலாள்
துடியிடைப் பரவை யல்குல்
அரிவையோர் பாகர்போலும்
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: அழகிய பாடல்களைப் பாடி நெஞ்சத்தை ஈசன்பால் பதித்து ஏத்துக. யானையின் தோலைப் போர்த்திக் கொள்ளும் வல்லமையுடைய கடவுள் ஈசன். அவர் சுருண்ட கூந்தலும் துடி இடையும் கொண்ட உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்குபவர். அவர், அதிகை வீரட்டனாரே.

சிறப்புரை: நெஞ்சம் கனிந்தும் உயர் பொருளைத் தரவல்லதும் ஆகிய கருத்துள்ள பாடல்களை அழகிய பாடல் என்பர். இது, "வரி முரி பாடி" என ஏத்தப் பெற்றது.

யானையின் தோலைப் போர்த்திக் கொள்ளுத லானது எல்லாம் வல்ல ஈசனுக்கே வல்லது என்பது, "கரியுரி மூட வல்ல கடவுள்" என ஏத்தி ஓதப் பெற்றது. "யானையின் பசுந்தோல் பிறர் உடம்பிற் பட்டால் கொல்லும்" தன்மையாம் என்பது வழக்கு (சிந்தாமணி 2787 உரை). இத்தன்மையில் "வாரணத்து உரிபோலே தப்பாமல் கொல்லும் உரை" எனலும் நோக்குக.

255. நீதியால் நினைசெய் நெஞ்சே
நிமலனை நித்த மாகப்
பாதியாம் உமைதன் னோடும்
பாகமாய் நின்று எந்தை
சோதியாய்ச் சுடர்வி ளக்காய்ச்
சுண்ணவெண் ணீற தாடி
ஆதியும் ஈறும் ஆனார்
அதிகை வீரட்ட னாரே.

தெளிவுரை: ஈசனை ஏத்தி வணங்க வேண்டும் என்பது மன்னுயிர்க்கு உரிய விதி. அதனை நினைத்து நெஞ்சே! வணங்குக. ஈசன், உமாதேவியைப் பாகமாகக் கொண்டு அர்த்தநாரியாய்த் திகழ்பவர். சோதியாகவும் சுடராகவும் விளங்குபவர். திருவெண்ணீற்றினைப் பூசி விளங்குபவர்; ஆதியாகவும் முடிவாகவும் ஆகி, உயிர் களைக் காப்பவர். அவர் அதிகை வீரட்டனாரே.

சிறப்புரை: ஈசன், உமாதேவியைப் பாகம் கொண்டு அம்மையப்பராய் விளங்கிக் காட்சி தருவதானது மன்னுயிர்களுக்கு கருணை வயத்தராய் நின்று அருள் செய்யும் தன்மைத்தே என்பது, "நித்தமாகப் பாதி யாம் உமைதன்னோடும் பாகமாய் நின்ற எந்தை" என உணர்த்தப் பெற்றது. ஈசன் சோதியும் சுடராயும் விளங்கும் சிறப்பினை, "சோதியே சுடரே சூழ் ஒளி

விளக்கே" என (அருட்பத்து 1) மாணிக்கவாசகர் அருளிச் செய்தமையும் காண்க.

256. எல்லியும் பகலும் எல்லாம்
துஞ்சு வேற்கு ஒருவர் வந்து
புல்லிய மனத்துக் கோயில்
புக்கனர் காமன் என்னும்
வில்லியங் கணையி னானை
வெந்துக நோக்கி யிட்டார்
அல்லியம் பழனவேலி
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: அஞ்ஞானத்தால் இரவும் பகலும் உறங்கி இருந்த என் மனத்திற்குள்ளே புகுந்து கோயில் கொண்டவர் சிவபெருமான். அப்பெருமான், மன்மதனை வெந்து சாம்பலாகுமாறு செய்தவர். அவர், அல்லி மலர்களும் வயல்களும் திகழும் அதிகையில் வீற்றிருக்கும் வீரட்டனாரே.

257. ஒன்றவே உணர்தி ராகில்
ஓங்காரத்து ஒருவன் ஆகும்
வென்றஐம் புலன்கள் தம்மை
விலக்குதற்கு உரியீர் எல்லாம்
நன்றவன் நாரணனும்
நான்முகன் நாடிக் காண்குற்று
அன்றவர்க்கு அரியர் போலும்
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: ஈசனோடு ஒன்றி இருந்து மகிழ வேண்டும் என்னும் உணர்வினைக் கொள்வீரனால் ஓங்காரத் திற்கு உரிய ஒருவனாகிய சிவபெருமானை ஏத்த வேண்டும். அவர் ஐம்புலன்களை வென்றவர். அவரை நினைத்து ஏத்த நீங்களும் புலன்களை வெல்லுவதற்கு

உரியவர் ஆவீர். அப்பெருமான், திருமாலும் பிரமனும் காண்பதற்கு அரியவராகி ஓங்கி உயர்ந்தவர். அவர் அதிகை வீரட்டனாரே ஆவார்.

சிறப்புரை: ஐம்புலன்களை வென்ற ஈசன் ஓங்கார ரூபனாய் விளங்குதல், "ஓங்காரத்து ஒருவன்" என உணர்த்தப் பெற்றது. பிரணவ எழுத்தாகிய இதனின் சிறப்பினை நன்கு உணர்ந்து காண ஈசனை உணர்தல் ஆகும் எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள் ஐயா என ஓங்கி, ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என அருளிச் செய்தமையும் காண்க.

258. தடக்கையால் எடுத்து வைத்துத்
தடவரை குலுங்க ஆர்த்துக்
கிடக்கையால் இடர்கள் ஓங்கக்
கிளர்மணி முடிகள் சாய
முடக்கினார் திருவி ரலான்
முருகமர் கோதை பாகத்து
அடக்கினார் என்னை யாளும்
அதிகைவீ ரட்ட னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தனது பெரிய கைகளால் கயிலை மலையை எடுத்து ஆர்த்த இராவணனுடைய முடிகள் துன்புறுமாறு தன் திருப்பாத விரலால் அழுத்தியவர் ஈசன். அவர் அழகும் இளமையும் திகழும் உமா தேவியை ஒரு பாகத்தில் கொண்டு அம்மையப்பராக வீற்றிருந்து என்னை ஆள்பவர். அப்பெருமான் அதிகை வீரட்டனாரே.

26. திருவதிகை வீரட்டானம்

தல விளக்கம்: *பதிகம் எண் 1 காண்க.*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

259. நம்பனே எங்கள் கோவே
நாதனே ஆதி மூர்த்தி
பங்கனே பரம யோகீ
என்றென்றே பரவி நாளும்
செம்பொனே பவளக் குன்றே
திகழ்மலர்ப் பாதம் காண்பான்
அன்பனே அலந்து போனேன்
அதிகைவீ ரட்ட னீரே.

தெளிவுரை: *நம்பனே! எங்கள் தலைவரே! காக்கும் அரசே! ஆதிமூர்த்தியாய் விளங்குபவரே! எல்லாப் பொருள்களிலும் பங்குற்றுத் திகழ்பவரே! யோகத்தில் விளங்கும் பரமரே! எனத் தேவரீரைப் பரவித் துதித்துப் போற்றி நாள்தோறும் ஏத்துகின்றேன். பொன் போன்ற அழகுடையவரே! பவளக் குன்று போன்ற செம்மேனி யரே! தேவரீரின் மலர்ப்பாதத்தைக் காண வேண்டும் என்று அலைந்து வாடினேன். அன்புக்குரிய பெருமானே! அதிகை வீரட்டத்தில் வீற்றிருப்பவர் நீவிரே!*

260. பொய்யினால் மிடைந்த போர்வை
புரைபுரை அழுகி வீழ
மெய்யனாய் வாழ மாட்டேன்
வேண்டிற்று ஒன்று ஐவர்வேண்டார்

செய்ததா மரைகள் அன்ன
சேவடி இரண்டும் காண்பான்
ஐயநான் அலந்து போனேன்
அதிகைவீ ரட்ட னீரே.

தெளிவுரை: ஈசனே! இத்தேகமானது பொய்த் தன்மை உடையது. நிலையில்லாதது. அழுகிப் பாழ் கொள்ளக் கூடியது. இத்தகைய தேகத்தைக் கொண்டு மெய்யன் என்னும் பெயருடையவனாய் நான் வாழ மாட்டேன். நான் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று கருதினாலும் ஐம்புலன்கள் இணங்காது. எனவே இதிலிருந்து மீள வேண்டும் என்னும் கருத்தில் தேவரீருடைய சேவடிகள் இரண்டையும் காணுமாறு அலைந்து வருந்தினேன். ஐயனே! நீவிர் அதிகை வீரட்டத்தில் உள்ளவரே!

சிறப்புரை: இவ்வுடம்பின் இழிந்த தன்மையை இத்திருப்பாட்டு ஓதுதல் ஆயிற்று. "காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா மாயனார் குயவன் செய்த மண்ணுப் பாண்டம் ஓடடா" என்னும் சித்தர் பாடல் கருத்தும் காண்க. இந்நெறியில் மாணிக்க வாசகர், "புன்புலால் யாக்கை புரைபுரை கனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்து என் என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட ஈசனே! மாசிலா மணியே!" *(பிடித்தபத்து 10)* என, அருளியமையும் காண்க. இத்தன்மையில் திருஞானசம்பந்தர், இவ்வுடல் கொண்டு வருந்தும் நிலையை நீக்கும் தன்மையில், ஈசனைத் தொழு மின்களே என அருளிச் செய்த பெற்றியினை முதல் திருமுறை; திருத்தூங்கானை மாடம் (பெண்ணாகடம்); திருப்பதிகம் எண் 59இல், அறிவுறுத்தியவாறும் நோக்குக.

261. நீதியால் வாழ மாட்டேன்
நித்தலும் தூயே னல்லேன்
ஓதியும் உணர மாட்டேன்
உன்னையுள் வைக்க மாட்டேன்
சோதியே சுடரே உன்றன்
தூமலர்ப் பாதம் காண்பான்
ஆதியே அலந்து போனேன்
அதிகைவீ ரட்ட னீரே.

தெளிவுரை: *ஈசனே! நான், அற நூல்களில் விதித்த நியதிப்படி வாழாதவன் ஆனேன்; தூய்மையுடைய நெஞ்சினேன் இல்லை; பிறர் நற்கருத்துக்களை ஓதி உரைத்தாலும் ஏற்று நடந்ததில்லை; தேவரீரை யான் உள்ளத்தில் பதிய வைத்தேனில்லை. சோதியும் சுடருமாய் மேவும் பெருமானே! உமது தூய மலர்ப் பாதங்களைக் காணும் தன்மையில், பொருளில்லாது அலைந்து வருந்தினேன். ஆதியே! நீவிர் அதிகை வீரட்டத்தில் உள்ளவரே.*

262. தெருளுமா தெருள மாட்டேன்
தீவினைச் சுற்றம் என்னும்
பொருள்உளே அழுந்தி நாளும்
போவதோர் நெறியும் காணேன்
இருளுமா மணிகண் டாநின்
இணையடி இரண்டும் காண்பான்
அருளுமாறு அருள வேண்டும்
அதிகைவீ ரட்ட னீரே.

தெளிவுரை: *ஈசனே! நான் தெளிந்த ஞானம் உடையவனாகவும் இல்லை; எத்தனையோ பிறவிகளில் செய்த தீய வினைகள் யாவும் சுஞ்சித கன்மம், பிராரத்த கன்மம் என என்னைச் சுற்றி இருக்கும் சுற்றமாகப் பெற்றுள்ளேன்; நற்பொருளைத் தேர்ந்து அறிந்து*

நன்னெறியில் செல்வதற்கும் இல்லாது மாயையால் தள்ளப்பட்டு அழுந்துகின்றேன். நீலகண்டராய் விளங்கும் பெருமானே! தேவரீருடைய திருவடிகள் இரண்டினையும் காண வேண்டும் என விழைகின்றேன். தேவரீர் எனக்கு எவ்வகையில் அருள வேண்டுமோ அவ்வாறு அருள் புரிய வேண்டும். தேவரீர் அதிகையில் வீற்றிருக்கும் வீரட்டரே அன்றோ!

தெருள் – தெளிவு, ஞானம்; இருளுமா மணி கண்டர் – நீலகண்டர், சிவபெருமான்.

263. அஞ்சினால் இயற்றப் பட்ட
ஆக்கைபெற் றதனுள் வாழும்
அஞ்சி னால் அடர்க்கப் பட்டிங்கு
உழிதரும் ஆத னேனை
அஞ்சினால் உய்க்கும் வண்ணம்
காட்டி னாய்க்கு அச்சம் தீர்ந்தேன்
அஞ்சினாற் பொலிந்த சென்னி
அதிகைவீ ரட்ட னீரே.

தெளிவுரை: இந்தச் சரீரமானது, நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களால் யாக்கப் பெற்றது. இத்தேகத்திற்குள் ஐம்புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றால் ஈர்க்கப் பெற்று இடருற்று இழிந்தேன். அத்தகைய அடியவனேனைத் தேவரீர், திருவைந்தெழுத்தால் உய்த்துக் கடைத் தேறும் வண்ணம் காட்டினீர்! யான் அச்சம் தீர்ந்தேன். அதிகை வீரட்டத்தில் வீற்றிருக்கும் தேவரீர், பசுவிலிருந்து பெறப்படும் பஞ்சகௌவியத்தைப் பூசைப் பொருளாகச் சென்னியில் ஏற்று உகந்தவரே!

264. உறுகயிறு ஊசல் போல
ஒன்றுவிட்டு ஒன்று பற்றி

மறுகயிறு ஊசல் போல
வந்துவந்து உலவு நெஞ்சம்
பெறுகயிறு ஊசல் போலப்
பிறைபுல்கு சடையாய் பாதத்து
அறுகயிறு ஊசல் ஆனேன்
அதிகைவீ ரட்ட னீரே.

தெளிவுரை: கயிறு ஊசல், ஒரு நிலையில் நில்லாது ஆடிக் கொண்டு இருத்தல் போல, என் மனமானது ஒன்றினைப் பற்றியது. பின்னர் அதனை விடுத்து மறுபக்கம் செல்வது போல நெஞ்சமானது உலவித் தாவிச் சென்றது. தேவரீருடைய திருப்பாதத்தில் நெஞ்சத்தைப் பதித்தேன். தேவரீரின் பெருமைமிகு சடை முடியை என் நெஞ்சமானது ஊசற்கயிறு எனப் பெற்றது. என் மனமானது அறுந்த ஊசல் போன்று நிலத்தில் வீழ்ந்தது. மனம் அமைதியுற்றது. அத்தகைய நிலையில் அதிகை வீரட்டத்தில் மேவும் நீவிரே ஆக்கித் தேற்றியவர் என்பது குறிப்பு.

சிறப்புரை: ஊசல் கொண்டு புறப்பொருளைப் பற்றி மனம் தாவும் நிலையை இத்திருப்பாட்டு ஓதிற்று. ஈசன் திருவடியில் பொருந்தி நிற்றலின் ஏற்றமானது, ஈசனைப் பற்றுதலால் உண்டாகும் என உணர்த்தப் பெற்றது.

265. கழித்திலேன் காம வெந்நோய்
காதன்மை என்னும் பாசம்
ஒழித்திலேன் ஊன்கண் நோக்கி
உணர்வெனும் இமைதி றந்து
விழித்திலேன் வெளிறு தோன்ற
வினையெனும் சரக்குக் கொண்டேன்
அழித்திலேன் அயர்த்துப் போனேன்
அதிகைவீ ரட்ட னீரே.

தெளிவுரை: ஈசனே! காமம் என்னும் வெம்மை மிகுந்த நோயிலிருந்து யான் விடுபடவில்லை. பாசத்தை ஒழிக்க வில்லை. உடலைப் பாதுகாக்கும் எண்ணத்தில் திளைத்து நல்லுணர்வு என்னும் ஞானக் கண் கொண்டு எதனையும் நோக்கவில்லை. வாழ்க்கையில் மெலிந்தேன். தீயவினைச் சுமையை நிரம்ப ஏற்றேன். அவ்வினைகளை அழிக்கும் தன்மையில் மேவாது வினையின் சுமை அழுத்திக் கொண்டிருக்க நான் அயற்சியடைந்தேன். அதிகையில் வீற்றிருக்கும் வீரட்டன் நீவிரே! என்னைக் காத்தருள்வீராக என்பது குறிப்பு.

266. மன்றத்துப் புன்னை போல
மரம்படு துயரம் எய்தி
ஒன்றினால் உணர மாட்டேன்
உன்னையுள் வைக்க மாட்டேன்
கன்றிய காலன் வந்து
கருக்குழி விழுப்பதற்கே
அன்றினான் அலமந் திட்டேன்
அதிகைவீ ரட்ட னீரே.

தெளிவுரை: ஈசனே! ஊரின் நடுவிலே விளங்கும் நிழல் தரும் புன்னை மரமானது பலராலும் தாக்கப்பட்டுத் துயர் உறுதல் போல, நான், புலன்கள், தீவினைகள் காம வெந்நோய், பாசம் முதலானவற்றால் தாக்கப் பட்டுத் துயரம் எய்தினேன். இத்தகைய துயருள் ஆழ்ந்து வருந்தினாலும் நான் நல்லுணர்வு கொள்ளாதவனானேன். தேவரீரை நெஞ்சுள் பதிக்கவில்லை. கனன்று சினந்து விளங்கும் காலன் வந்து உயிரைக் கவர்ந்து, மீண்டும் பிறவியைக் கொடுக்கும் தன்மையிலும் கருக்குழியில் விழுவதிலும்

எண்ணி வருந்துகின்றேன். அதிகையில் மேவும் வீரட்டன் நீவிரே! அருள்புரிவீராக! என்பது குறிப்பு.

267. பிணிவிடா ஆக்கை பெற்றேன்
பெற்றம்ஒன்று ஏறு வானே
பணிவிடா இடும்பை என்னும்
பாசனத்து அழுந்து கின்றேன்
துணிவிலேன் தூயன் அல்லேன்
தூமலர்ப் பாதம் காண்பான்
அணியனாய் அறிய மாட்டேன்
அதிகைவீ ரட்ட னீரே.

தெளிவுரை: ஈசனே! நான் நோயினால் பீடிக்கப்படும் தேகத்தைப் பெற்றேன். இடப வாகனத்தில் வீற்றிருக்கும் பெருமானே! என்னைப் பணிவிப்பதி லிருந்து நீங்காத கன்ம வினையைச் சுற்றமாகப் பற்றித் துன்பத்திற்கே ஆளாகி அழுந்துகின்றேன். புலன்களை வென்று மீளும் துணிவு அற்றவனாகவும், நெஞ்சம் தூய்மையில்லாதவனாகவும் உள்ளேன். தேவரீருடைய திருப்பாத மலர்களைக் காண்பதற்கு அண்மையில் இருந்தும் அதனை உணராதவனானேன். அதிகை வீரட்டத்தில் மேவும் பெருமானே! தேவரீர், உணர்த்தினாலன்றி உணர முடியாது என்பது குறிப்பு.

268. திருவினாள் கொழுந னாரும்
திசைமுகம் உடைய கோவும்
இருவரும் எழுந்தும் வீழ்ந்தும்
இணையடி காண மாட்டா
ஒருவனே எம்பி ரானே
உன்திருப் பாதம் காண்பான்
அருவனே அருள வேண்டும்
அதிகைவீ ரட்ட னீரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் முறையே கீழ் நோக்கித் தாழ்ந்தும் மேல் நோக்கிப் பறந்தும் சென்று தேடியும் இணையடியைக் காண மாட்டாத ஒருவனாகிய ஈசனே! எம் தலைவனே! அருவப்பொருளாக விளங்கும் நாதனே! அதிகை வீரட்டனே! தேவரீர், திருப்பாத மலர் காட்டி உய்யுமாறு புரிவீராக.

எழுந்தும் வீழ்ந்தும் – ஈசனைக் காணப் பிரமன் அன்னப் பறவையாய்ப் பறந்து வானில் சென்றது எழுந்தும் எனவும், திருமால் பூமிக்குள் பன்றி வடிவில் குடைந்து சென்றது வீழ்ந்தும் எனவும் சுட்டப் பெற்றது.

27. திருவதிகை வீரட்டானம்

தல விளக்கம்: *பதிகம் எண் 1 காண்க.*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

269. மடக்கினார் புலியின் தோலை
மாமணி நாகம் கச்சா
முடக்கினார் முகிழ்வெண் திங்கள்
மொய்சடைக் கற்றை தன்மேல்
தொடக்கினார் தொண்டைச் செவ்வாய்த்
துடியிடைப் பரவை யல்குல்
அடக்கினார் கெடில வேலி
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: சிவபெருமான், புலியின் தோலை உடையாக மடித்துக் கட்டியவர்; பெருமை மிக்க மாணிக்கத்தைக் கொண்டு விளங்கும் நாகத்தைக் கச்சாக இறுக்கிக் கட்டியவர்; வெள்ளொளியை முகிழ்க்கும் பிறைச் சந்திரனைச் சடை முடியின் மீது

சூடியவர்; உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்குபவர். அவர் கெடில நதியின் கரையில் உள்ள அதிகை வீரட்டனாரே.

செவ்வாய்த் துடியிடைப் பரவையல்குல் – உமாதேவியார்; வேலி – வேலியாக உடையது, கரை.

270. சூடினார் கங்கை யாளைச்
சூடிய துழனி கேட்டங்கு
ஊடினாள் நங்கை யாளும்
ஊடலை ஒழிக்க வேண்டிப்
பாடினார் சாம வேதம்
பாடிய பாணி யாலே
ஆடினார் கெடில வேலி
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: சிவபெருமான், கங்காதேவியைச் சடை முடியில் தரித்தவர். அப்பெருமான் கங்கை தரிக்கும் ஒலியைக் கேட்டு, இடப்பாகத்தில் விளங்கிய உமாதேவி சினமுற்று ஊடினார். ஈசன், அவ்வூடலைத் தீர்க்கும் தன்மையில், சாம வேதத்தை இசைத்துப் பாடித் தாளம் இட்டுத் திருநடனம் புரிந்தார். அப்பெருமான், கெடில நதியின் கரையில் விளங்கும் அதிகை வீரட்டனாரே.

சிறப்புரை: ஈசன், கங்கையைத் தரித்ததும், உமாதேவியை உடனாகக் கொண்டதும், வேதத்தினை ஓதித் திருநடனம் புரிந்ததும் இத்திருப்பாட்டில் உணர்த்தப் பெற்றது. கங்கையைத் தரித்தது, தரணியில் வெள்ளம் சூழ்ந்து அழியாமல் தடுத்தல் பொருட்டும், உமா தேவியைப் பாகமாகக் கொண்டது, உலக உயிர்களுக்குப் போகத்தை நல்குவதன் பொருட்டும் ஆயிற்று என்பது வரலாறு. இதனைத்

திருவாதவூரடிகள், "சலமுகத்தால் அவன் சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லாம் பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேட்டாம் சாழலோ" எனவும், "பெண்பால் உகந்திலனேற் பேதாய் இரு நிலத்தோர் விண்பால் யோகு எய்தி வீடுவர் காண் சாழலோ" எனவும் அருளிச் செய்தவாறு காண்க.

இது, ஈசன் பரமயோகியாய் மேவி அறம் உணர்த்துதலும், போகியாய் - அம்மையப்பராய் விளங்கி உயிர்களுக்குப் போகம் விளைவித்தும் தான் ஒருவனாகவே இருந்து புரியும் செம்மையையும் பேராற்றலையும் உணர்த்திற்று.

ஈசன் திருநடனம் புரிந்து உயிர்களை இயங்க வைக்கும் பான்மையை உணர்த்துதல் ஆயிற்று.

துழனி – ஒலி.

271. கொம்பினார் குழைத்த வேனல்
கோமகன் கோல நீர்மை
நம்பினார் காண லாகா
வகைய தோர் நடலை செய்தார்
வெம்பினார் மதில்கள் மூன்றும்
வில்லிடை எரித்து வீழ்த்த
அம்பினார் கெடில வேலி
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: மன்மதன், தன் மலர்க்கணைகளால் ஈசனின் தவத்தைக் கலையச் செய்து பார்வதி தேவியைத் திருமணம் செய்து கொள்ளுமாறு புரிய வேண்டும் என நம்பி இருந்த நிலையில், அந்த நம்பிக்கையானது காணலாகாத தன்மையில் ஈசன், அவனுக்குப் பெருந் துன்பத்தைச் செய்யுமாறு நெற்றிக்

கண்ணால் நோக்கி எரித்தார். அவர், தீயவர்களாகிய முப்புர அசுரர்களையும் கோட்டைகளையும் எரித்து வீழ்த்திய அம்பினர். அப்பெருமான் கெடில நதிக்கரையில் மேவும் அதிகை வீரட்டனாரே.

சிறப்புரை: முப்புர அசுரர்களை எரித்த திருத்தலத்தின் வரலாறு இத்திருப்பாட்டில் சுட்டப் பெற்றது காண்க.

272. மறிபடக் கிடந்த கையர்
வளரிலா மங்கை பாகம்
செறிபடக் கிடந்த செக்கர்ச்
செழுமதிக் கொழுந்து சூடிப்
பொறிபடக் கிடந்த நாகம்
புகையு மிழ்ந்து அழல வீக்கிக்
கிறிபட நடப்பர் போலும்
கெடிலவீ ரட்ட னாரே.

தெளிவுரை: ஈசன், மான் ஏந்திய கையுடையவர்; இளமை வளரும் எழில் மிக்க உமாதேவியாரைப் பாகமாக உடையவர்; சிவந்து ஒளிறும் சடை முடியின் மீது பிறைச்சந்திரனைச் சூடியவர்; நாகத்தை அறையிற் கட்டி விளங்குபவர். பிறர் மயங்குமாறு பித்தர் போலும் நடையுடையவர். அவர் கெடில நதிக்கரையில் வீற்றிருக்கும் வீரட்டனாரே.

273. நரிவரால் கவ்வச் சென்று
நற்றசை யிழந்தது ஒத்த
தெரிவரான் மால்கொள் சிந்தை
தீர்ப்பதோர் சிந்தை செய்வார்
வரிவரால் உகளும் தெண்ணீர்க்
கழலிசூழ் பழன வேலி
அரிவரால் வயல்கள் சூழ்ந்த
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: நரியானது, தண்ணீரில் துள்ளித் திரியும் வரால் மீனைக் கவ்வும் நோக்கத்தில் செயல்படத் தன் வாயில் முன்னரே பெற்றிருக்கும் ஊனை (நல்தசை) இழக்கும். அத்தன்மையில் மயங்கிய நிலையில் உள்ள மாந்தர்களின் சிந்தையைச் செம்மையாக்கி, ஞானமும் தெளிவும் நல்குபவர், சிவபெருமான். அவர், வயல்கள் சூழ்ந்த அதிகை வீரட்டனாரே.

274. புள்ளலைத் துண்ட வோட்டில்
உண்டு போய்ப் பலாசங் கொம்பின்
சுள்ளலைச் சுடலை வெண்ணீறு
அணிந்தவர் மணிவெள் ளேற்றுத்
துள்ளலைப் பாகன் றன்னைத்
தொடர்ந்திங்கே கிடக்கின் றேனை
அள்ளலைக் கடப்பித் தாளும்
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: ஈசன், பிரம கபாலத்தில் பலி ஏற்று உணவு பெற்று உட்கொண்டவர்; மயானத்தில் உள்ள சாம்பலைப் பூசியவர்; இடப வாகனத்தில் ஏறி அமர்ந்தவர். அப்பெருமானை நினைந்து ஏத்தி இங்கே, நான், என் செயலற்றுக் கிடக்கின்றேன். அதிகை வீரட்டனாரே! நாகத்திலிருந்து கடந்து செல்வதற்கு எனக்குத் துணை புரிவீராக. இது பிறவாமையை வேண்டும் குறிப்பாயிற்று.

புள்ளலைத் துண்ட ஓடு – பிரம கபாலம்; பாகன் – வாகனத்தில் அமர்ந்த ஈசன்; அள்ளல் – சேறு – நரகம்.

275. நீறிட்ட நுதலர் வேலை
நீலஞ்சேர் கண்டர் மாதர்
கூறிட்ட மெய்யராகிக்
கூறினார் ஆறு நான்கும்

கீறிட்ட திங்கள் சூடிக்
கிளர்தரு சடையி னுள்ளால்
ஆறிட்டு முடிப்பர் போலும்
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: ஈசன், நெற்றியில் திருவெண்ணீறு அணிந்தவர்; கடல் நஞ்சினை உண்ட நீலகண்டர்; திருமேனியின் ஒரு கூறாக உமாதேவியை உடையவர்; நான்கு வேதமும் அதன் ஆறு அங்கமும் விரித்தவர்; பிறைச் சந்திரனைச் சூடிய சடை முடியின் மீது கங்கையைத் தரித்து விளங்குபவர். அவர், அதிகை வீரட்டனாரே.

276. காணிலார் கருத்தில் வாரார்
திருத்தலார் பொருத்த லாதார்
ஏணிலார் இறப்பும் இல்லார்
பிறப்பிலார் துறக்க லாகார்
நாணிலார் ஐவ ரோடும்
இட்டுளனை விரவி வைத்தார்
ஆணலார் பெண்ணும் அல்லார்
அதிகைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: ஈசன், காட்சிக்கு உட்படாதவர்; கருத்தினைக் கடந்து நின்ற பெருமையுடையவர்; அவருடைய திருக்குறிப்பிலிருந்து யாராலும் மாற்று தற்கு ஒல்லாதவர்; அவரவர்களுக்கு வேண்டியவாறு, மாறாதவர்; வளர்தல், இறத்தல், பிறத்தல், துறத்தல் என இல்லாதவர். நாணத்தை அற்றவராகிய ஐம்புலக் கூட்டாக விளங்கும் இத்தேகத்தில் என்னை நிலவச் செய்தவர்; ஆண், பெண் என எதுவும் இல்லாதவர். அவர் அதிகை வீரட்டனாரே.

277. தீர்த்தமா மலையை நோக்கிச்
செருவலி அரக்கன் சென்று
பேர்த்தலும் பேதை அஞ்சப்
பெருவிரல் அதனை யூன்றிச்
சீர்த்தமா முடிகள் பத்தும்
சிதறுவித் தவனையன்று
ஆர்த்தவாய் அலற வைத்தார்
அதிகைவீ ரட்ட னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *புனிதமாகிய கயிலை மலையை இராவணன் பெயர்த்தலும், உமாதேவி அஞ்சி வெருவத் திருப்பாதப் பெருவிரலை ஊன்றி, அவனுடைய புகழ் மிக்க பத்து முடிகளும் துன்புற்று அலறுமாறு செய்தவர் ஈசன். அவர் அதிகை வீரட்டனாரே.*

தீர்த்தமா மலை – புனித கயில்லை மலை.

28. திருவதிகை விரட்டானம்

தல விளக்கம்: *பதிகம் என் 1 காண்க.*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

278. முன்பெலாம் இளைய கால
மூர்த்தியை நினையா தோடிக்
கண்கண இருமி நாளும்
கருத்தழிந்து அருத்தம் இன்றிப்
பின்பகல் உணங்கல் அட்டும்
பேதைமார் போன்றேன் உள்ளம்

அன்பனாய் வாழ மாட்டேன்
அதிகைவீ ரட்ட னீரே.

தெளிவுரை: அதிகை வீரட்டனீரே! இளமைக் காலத்தில் தேவரீரை நினைத்து ஏத்தாதவனாகி, இளமையின் துடிப்புடன் கணீர் என்னும் ஒலி பெருக்கிக் கருத்து அழிந்து, மெய்ப் பொருளை நாடாத வனாய் இருந்தேன். முற்பகலில் எல்லாருக்கும் உணவை அளித்துப் பிற்பகலில் வற்றிப் போன சுவை அற்ற உணவைக் கொள்ளும் மகளிர் போன்று, முதுமைக் காலத்தில் உள்ளேன். அன்புடைய வனாகவும் வாழ மாட்டேன். இறைவனே!

உணங்கல் – வற்றிய உணவு.

279. கறைப் பெருங் கண்டத் தானே
காய்கதிர் நமனை அஞ்சி
நிறைப்பெருங் கடலும் கண்டேன்
நீள்வரை உச்சி கண்டேன்
பிறைப்பெரும் சென்னி யானே
பிஞ்ஞகா இவைய னைத்தும்
அறுப்பதோர் உபாயம் காணேன்
அதிகைவீ ரட்ட னீரே.

தெளிவுரை: அதிகை வீரட்டனீரே! கறை போன்ற நீலகண்டத்தை உடைய பெருமானே! சினங் கொண்டு நோக்கும் நமனை எண்ணி அஞ்சிக் கடலில் நீராடினால் புண்ணியம் நல்கும் என அவ்வாறு செய்தேன்; மலையின் உச்சியில் இருந்து தவம் புரிந்தேன். பிறைச் சந்திரனைத் தரித்த சடை முடியுடைய நாதனே! யாது செய்தும் வினை அறுப்பதற்கு உரிய உபாயத்தைக் காணாதவனானேன்.

ஈசனை அன்றி அருள்பவர் வேறில்லை என்பது குறிப்பு.

280. நாதனார் என்ன நாளும்
நடுங்கின ராகித் தங்கள்
ஏதங்கள் அறிய மாட்டார்
இணையடி தொழுதோம் என்பார்
ஆதனான் அவன்என்று எள்கி
அதிகைவீ ரட்ட னேநின்
பாதநான் பரவாது உய்க்கும்
பழவினைப் பரிசி லேனே.

தெளிவுரை: அதிகை வீரட்டனே! தானே யாவற்றுக்கும் தலைவன், நாதன் என எண்ணிச் செருக்குற்றுக் குற்றங் களைச் செய்பவராயினர். மனம் பதியாதவராகி, நற்கருத்தும் இன்றி, இறைவனை வணங்குகின்றோம் என்பார். நான் கீழ்மையானவன்; குற்றம் உடையவன்; வினைப் பரிசு உடையவனாதலின், தேவரீரின் பாத மலர்களைப் பணிந்து ஏத்திலன்; என்னைக் காத்து அருள் புரிபவர் ஈசனே, என்பது குறிப்பு.

281. சுடலைசேர் சுண்ண மெய்யர்
சுரும்புண விரிந்த கொன்றைப்
படலைசேர் அலங்கன் மார்பர்
பழனம்சேர் கழனித் தெங்கின்
மடலைநீர் கிழிய ஓடி
அதனிடை மணிகள் சிந்தும்
கெடிலவீ ரட்ட மேய
கிளர்சடை முடிய னாரே.

தெளிவுரை: ஈசன், மயானத்தில் இருக்கும் சுட்ட சாம்பலைத் திருமேனியில் பூசி விளங்குபவர்; வண்டுகள் தேனுண்டு சுற்றும் கொன்றை மலரை,

விரிந்த மார்பில் மாலையாக அணிந்திருப்பவர். அவர், நீர் நிலைகளும் கழனிகளும் நிறைந்து விளங்கத் தென்னை மரங்கள், வளமுடன் திகழ மேவும் கெடில நதிக்கரையில், வீற்றிருக்கும் சடை முடியுடைய நாதரே.

282. மந்திரம் உள்ளதாக
மறிகடல் எழுநெய் யாக
இந்திரன் வேள்வித் தீயில்
எழுந்ததோர் கொழுந்தின் வண்ணம்
சிந்திர மாக நோக்கித்
தெருட்டுவார் தெருட்ட வந்து
கந்திர முரலும் சோலைக்
கானலம் கெடிலத் தாரே.

தெளிவுரை: மேரு மலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பை நாணாகவும் கொண்டு இந்திரன் முதலான தேவர்கள் பாற்கடலைக் கடைய முனைந்து ஆற்றிய போது, நஞ்சு வெளிப்பட்டது. ஈசன், அத்தகைய அச்சத்தைத் தோற்றுவித்து வெருட்டச் செய்பவர். அவர் மேகம் சூழ்ந்த சோலையுடைய கெடில நதிக் கரையில் விளங்கும் வீரட்டனாரே.

மந்திரம் – மேருமலை; கந்திரம் – கந்தரம், மேகம்.

283. மைஞ்ஞலம் அனைய கண்ணாள்
பங்கன்மா மலையை யோடி
மெய்ஞ்ஞரம்பு உதிரம் பில்க
விசைதணிந்து அரக்கன் வீழ்ந்து
கைஞ்ஞரம்பு எழுவிக் கொண்டு
காதலால் இனிது சொன்ன
கிஞ்ஞரம் கேட்டு கந்தார்
கெடிலவீ ரட்ட னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: மையின் நலத்தினையுடைய உமா தேவியைப் பாகமாக உடைய சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலை மலையை, மெய்யின் நரம்புகள் புடைக்க எடுத்த இராவணன், தன்னுடைய வேகம் தணியுமாறு உடல் தளர்ந்து வீழ்ந்தனன். அப்போது அவன் கைந் நரம்பு எடுத்து, வீணையாக மீட்டி ஈசனை ஏத்த, அவர் மகிழ்ந்தனர். அப்பெருமான் கெடில வீரட்டனாரே.

மைஞ்ஞலம் – மைந்நலம்; மெய்ஞ்ஞரம்பு – மெய்நரம்பு; கைஞ்ஞரம்பு – கைந் நரம்பு; கிஞ்ஞரம் – கின்னரம், யாழ்.

29. திருச்செம்பொன்பள்ளி

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 42ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடப் பெற்றது. செம்பொனார் கோயில் என வழங்கப்படுவது. இந்திரன் வழிபட்ட தலம். தாட்சாயணிக்கு அருள் புரிந்ததும் வீரபத்திரர் தோன்றியதும் ஆகிய சிறப்புடையது. வசிட்டர், அகத்தியர், பிரமன், குபேரன் வழிபட்டது. மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 25 காண்க.

சுவாமி : சொர்ணபுரீஸ்வரர், தேவப்பிரியர்,
சுவர்ணலட்சுமீசர், செம்பொன்பள்ளியார்

அம்பிகை : சுகந்த குந்தளாம்பிகை, தாட்சாயணி,
மருவார்குழலி, புஷ்பாளகி

தல மரம் : வன்னி, வில்வம்

தீர்த்தம் : சூரிய தீர்த்தம், காவிரி

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

284. ஊனினுள் உயிரை வாட்டி
உணர்வினார்க்கு எளியர் ஆகி
வானினுள் வான வர்க்கும்
அறியலா காத வஞ்சர்
நான்எனில் தானே என்னும்
ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனும்இன் னமுதும் ஆனார்
திருச்செம்பொன் பள்ளி யாரே.

தெளிவுரை: சிவபெருமான், இவ்வுடம்பினை விரதம் தவம் முதலானவற்றால் மேவச் செய்து இறை உணர்வுடைய அன்புடையவர்களுக்கு, எளிமையாக விளங்கி அருள் நல்குபவர்; வானுலகத்தில் மேவும் தேவர்களுக்கும் அறியப்படாதவராக விளங்குபவர்; நான் என்னும் அகந்தையின் உணர்வின்றி, எல்லாம் ஈசனே என்னும் தெளிந்த ஞானம் கொண்டு மேவும் பக்தர்கள் நெஞ்சில், தேனும் அமுதும் ஆக விளங்கி, இனிமை சேர்ப்பவர். அப் பெருமான் திருச் செம்பொன்பள்ளியாரே.

சிறப்புரை: ஈசன், உடம்பினுள் கோயில் கொண்டு இருத்தலின் சிறப்பினையும், உடலின் மேன்மைக்கும் உயிரின் மேன்மைக்கும் தவம், விரதம் முதலானவை மேற்கொள்ளும் மாண்பினை இத்திருப்பாட்டில் எடுத்தோதுதல் ஆயிற்று. இத்தன்மை, "உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே'' (திருமந்திரம் 725) என்னும் திருமூலர் வாக்கும் காண்க.

இத் திருத்தலத்தில் மேவும் ஈசன் திருநாமமானது, இத் திருப்பாட்டில் ஓதப் பெறுதல் ஆயிற்று.

285. நொய்யவர் விழுமி யாரும்
நூலின் நுண் ணெறியைக் காட்டும்
மெய்யவர் பொய்யும் இல்லார்
உடல்எனும் இடிஞ்சில் தன்னில்
நெய்யமர் திரியும் ஆகி
நெஞ்சத்துள் விளக்கும் ஆகிச்
செய்யவர் கரிய கண்டர்
திருச் செம்பொன் பள்ளியாரே.

தெளிவுரை: *ஈசன், நொய் போன்று நுண்மையானவர்; பெருமையுடையவர்; வேத நூல்களின் நுட்பங்களைக் காட்டும் மெய்ம்மையுடையவர்; பொய்மை அற்றவர்; உடலாகிய அகல் விளக்கில் நெய்யில் விளங்கிச் சுடர் விடும் திரிபோன்றவர்; நெஞ்சின் விளக்காகத் திகழ்பவர்; சிவந்த திருமேனி உடையவர்; கரிய தன்மையுடைய நஞ்சினைக் கழுத்தில் தேக்கி, நீலகண்டராக விளங்குபவர். அவர் திருச்செம்பொன் பள்ளியில் வீற்றிருக்கும் ஈசனே.*

சிறப்புரை: *பொய்மை இல்லாதவராகி, மெய்ம்மை உடையவாகி, உடலின்கண் ஒளி தரும் ஆன்மச் சுடர் என விளங்குபவர் சிவபெருமான் என்பதனை, "உடல் எனும் இடிஞ்சில் தன்னில் நெய்யமர் திரியும் ஆகி" என ஏத்தப் பெறுவதாயிற்று. திரி இன்றேல், எரிதல் மேவாது என்பது போல, ஆன்மச் சுடராய் ஈசன் விளங்குதலை, "பொய்விட்டு நானே புரிசடையான் அடி நெய் விட்டிலாத இடிஞ்சிலும் ஆமே'' (திருமந்திரம் 503) என்னும் திருமூலர் திருவாக்கும் காண்க.*

ஆன்மச் சுடராய் மேவும் ஈசன் நெஞ்சின் ஒளியாய்த் திகழ்தல், "நெஞ்சத்துள் விளக்குமாகி" என

ஓதப்பெறுவதாயிற்று. இது, உள்ளத்தின் வெளிப்பாடும் ஈசனே ஆற்றிப் புரிதலைச் சுட்டுதலாம்.

இடிஞ்சில் – அகல்.

286. வெள்ளியர் கரியர் செய்யர்
விண்ணவர் அவர்கள் நெஞ்சுள்
ஒள்ளியர் ஊழியூழி
உலகமது ஏத்த நின்ற
பள்ளியர் நெஞ்சத் துள்ளார்
பஞ்சமம் பாடி யாடும்
தெள்ளியார் கள்ளந் தீர்ப்பார்
திருச்செம்பொன் பள்ளி யாரே.

தெளிவுரை: ஈசன், வெண்மையர்; கரியர்; செம்மை யானவர்; தேவர்களின் உள்ளத்தில் ஒளிர்பவர்; ஊழிகள் தோறும் உலகத்தாரால் ஏத்தப் பெறும் நிலைத்த தன்மையுடையவர்; நெஞ்சில் விளங்குபவர்; பஞ்சமம் என்னும் பண் இசைத்துப் பாடியாடும் மாண்பினர். அவர் தெளிந்த ஞானியாய் விளங்கி, உள்ளத்தில் தோன்றும் அஞ்ஞான இருளை அகலச் செய்யும் திருச்செம்பொன்பள்ளியாரே.

சிறப்புரை: மும்மூர்த்தியாய் விளங்கும் ஈசனின் பெற்றி, "வெள்ளியர், கரியர், செய்யர்" என ஓதப் பெறுதல் ஆயிற்று. இது சதாசிவமூர்த்தியின் வண்ணங் களை உணர்த்துதலும் ஆகும். இத்தன்மையில் திருஞானசம்பந்தர் இத்திருவண்ணத்தை ஏத்தி (மூன்றாம் திருமுறை) உரைத்தருளியவாறும் காண்க.

287. தந்தையும் தாயு மாகித்
தானவன் ஞான மூர்த்தி
முந்திய தேவர் கூடி
முறை முறை இருக்குச்சொல்லி

எந்தைநீ சரணம் என்றங்கு
இமையவர் பரவி யேத்தச்
சிந்தையுட் சிவம தானார்
திருச்செம்பொன் பள்ளி யாரே.

தெளிவுரை: ஈசன், தந்தையும் தாயுமாகித் தானே உயிர்க்கு உயிராகி இயக்குபவர்; ஞானத்தின் மூர்த்தி யாய்த் திகழ்பவர்; தேவர்கள் எல்லாம் கூடி, வேதங்கள் ஓதிப் போற்றிச் சரணம் அடைந்து எந்தையே! என ஏத்தப் பெறுபவர்; அவர்களுடைய சிந்தையுள் சிவமாய் விளங்குபவர். அவர் திருச்செம்பொன்பள்ளி யாரே.

288. ஆறுடைச் சடையர் போலும்
அன்பருக்கு அன்பர் போலும்
கூறுடை மெய்யர் போலும்
கோளரவு அரையர் போலும்
நீறுடை அழகர் போலும்
நெய்தலே கமழு நீர்மைச்
சேறுடைக் கமல வேலித்
திருச்செம்பொன் பள்ளி யாரே.

தெளிவுரை: ஈசன், கங்கையணிந்த சடை முடியுடை யவர்; அன்பு செலுத்தும் அடியவர்கள்பால் அன்பாகத் திகழ்பவர்; உமாதேவியைத் திருமேனியில் ஒரு கூறாகக் கொண்டு அம்மையப்பராய் விளங்குபவர்; வலிமையான அரவத்தை அரையில் கட்டியவர்; திருவெண்ணீற்றைக் குழையப் பூசி விளங்குபவர். அவர், நெய்தல் பூக்களும் தாமரை மலர்களும் விளங்கும் வயல் வளம் மிகுந்த திருச்செம்பொன் பள்ளியாரே.

289. ஞாலமும் அறிய வேண்டில்
நன்றென வாழ லுற்றீர்
காலமும் கழிய லான
கள்ளத்தை ஒழிய கில்லீர்
கோலமும் வேண்டா ஆர்வச்
செற்றங்கள் குரோத நீக்கில்
சீலமும் நோன்பும் ஆவார்
திருச் செம்பொன் பள்ளி யாரே.

தெளிவுரை: உலகத்தில் திகழும் நன்மக்களே! இவ்வுலகில் நன்கு வாழலாம். கள்ளத் தனம், வஞ்சனை ஆகியவற்றை நீக்குவீராக. பகையும் குரோதமும் நீக்குக. புனைதல், அலங்கரித்தல் முதலான திருக்கோலமும் தேவையில்லை. நல்லொழுக்கமும் ஈசனை வழிபடும் நோன்பும் கொண்டு வழிபடுக. ஈசன், அத்தகைய சீலமும் நோன்பும் ஆகி விளங்குபவர். அவர், திருச் செம்பொன்பள்ளியாரே.

290. புரிகாலே நேசம் செய்ய
இருந்தபுண் டரீகத் தாரும்
எரிகாலே மூன்றும் ஆகி
இமையவர் தொழநின் றாரும்
தெரிகாலே மூன்று சந்தி
தியானித்து வணங்க நின்று
திரிகாலம் கண்ட எந்தை
திருச்செம் பொன் பள்ளியாரே.

தெளிவுரை: நன்கு தியானம் செய்து அன்பு கொண்டு ஏத்த உள்ளத் தாமரையில் வீற்றிருக்கும் சிவபெருமான் நெருப்பு காற்று மற்றும் மூன்றாகிய நிலம், நீர், ஆகாயம் என ஐம்பூதங்களாகி விளங்குபவர். தேவர்களால் தொழுது ஏத்தப் பெறும் அப்பெருமான், காலை, மதியம், மாலை ஆகிய முப்போதுகளிலும் ஏத்தப்

படுபவர். அவர் மூன்று காலங்களிலும் மேவும் எந்தை திருச்சொம்பொன்பள்ளியாரே.

கால் – காற்று, மூச்சு; புரிகாலே – ஆத்ம தியானத்தை உணர்த்தியது; திரிகாலம் – கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம்.

291. காருடைக் கொன்றை மாலை
கதிர்மதி அரவி னோடும்
நீருடைச் சடையுள் வைத்த
நீதியார் நீதி யுள்ளார்
பாரொடு விண்ணு மண்ணும்
பதினெட்டுக் கணங்கள் ஏத்தச்
சீரொடு பாட லானார்
திருச்செம்பொன் பள்ளி யாரே.

தெளிவுரை: சிவபெருமான், கார்காலத்தில் திகழும் கொன்றை மாலை சூடியவர்; ஒளி வீசுகின்ற சந்திரனும், அரவமும், கங்கையும் சடை முடியில் வைத்து மிளிர்பவர்; நீதியாய் விளங்குபவர்; பூவுலகமும் விண்ணுலகமும் ஏத்தும் பெருமையுடையவர்; பதினெண் கணங்களால் ஏத்தப் பெறுபவர். சீர்பாடும் பாடலாகவும் அதன் பொருளாகவும் விளங்கும் அப்பெருமான், திருச்செம்பொன்பள்ளி யாரே.

292. ஓவாத மறைவல் லானும்
ஓதநீர் வண்ணன் காணா
மூவாத பிறப்பி லாரும்
முனிகளா னார்கள் ஏத்தும்
பூவான மூன்று முந்நூற்று
அறுபதும் ஆகும் எந்தை
தேவாதி தேவர் என்றும்
திருச்செம்பொன் பள்ளி யாரே.

தெளிவுரை: சிவபெருமான், எக்காலத்திலும் நிலைத்து விளங்கும் வேதங்களை ஓதுகின்ற பிரமனும், கடல் வண்ணனாக விளங்கும் திருமாலும் காணாதவாறு ஓங்கித் திகழ்ந்தவர். அப்பெருமானுக்கு மூப்பும் இல்லை, பிறப்பும் இல்லை. அவர், முனிவர்களால் ஆயிரத்து எண்பது மலர் கொண்டு ஏத்தப்படுபவர். எந்தை தேவாதி தேவராகிய அவர், திருச்செம்பொன் பள்ளியாரே.

293. அங்கங்கள் ஆறு நான்கும்
அந்தணர்க்கு அருளிச் செய்து
சங்கங்கள் பாட ஆடும்
சங்கரன் மலையெ டுத்தான்
அங்கங்கள் உதிர்ந்து சோர
அலறிட அடர்த்து நின்றும்
செங்கண்வெள் ளேறது ஏறும்
திருச்செம்பொன் பள்ளி யாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், நான்கு வேதங்களையும் அதன் ஆறு அங்கங்களையும் அந்தணர்களுக்கு ஓதியருளியவர்; சூழ்ந்து சங்கமித்து மேவும் பூத கணங்கள் பாடுகின்ற பாடல்களுக்கு ஏற்ப, நடனம் புரிபவர்; அருள் வழங்கும் இனிமையைப் புரிபவர்; கயிலையை எடுத்த இராவணனுடைய அங்கங்கள் நலியுமாறு அடர்த்தவர்; வெள்ளை இடப வாகனத்தில் வீற்றிருப்பவர். அவர் திருச்செம்பொன்பள்ளியாரே.

30. திருக்கழிப்பாலை

தல விளக்கம்: பதிகம் எண் 6 காண்க.

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

294. நங்கையைப் பாதம் வைத்தார்
ஞானத்தை நவில வைத்தார்
அங்கையில் அனலும் வைத்தார்
ஆனையின் உரிவை வைத்தார்
தங்கையில் யாழும் வைத்தார்
தாமரை மலரும் வைத்தார்
கங்கையைச் சடையுள் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே.

தெளிவுரை: ஈசன், உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்குபவர்; ஞானத்தை அருளிச் செய்பவர்; அழகிய கையில் நெருப்பு ஏந்தியவர்; யானையின் தோலைப் போர்த்திக் கொண்டுள்ளவர்; யாழினைக் கரத்தில் ஏந்தியவர்; தாமரை மலரை வைத்திருப்பவர்; கங்கையைச் சடையில் தோயத் தரித்தவர்; அவர், திருக்கழிப்பாலையில் பொருந்தி மேவுபவரே.

சேர்ப்பனார் – அருளைச் சேர்த்து விளங்கும் பெற்றியை உணர்த்திற்று.

295. விண்ணினை விரும்ப வைத்தார்
வேள்வியை வேட்க வைத்தார்
பண்ணினைப் பாட வைத்தார்
பத்தர்கள் பயில வைத்தார்
மண்ணினைத் தாவ நீண்ட
மாலினுக்கு அருளும் வைத்தார்
கண்ணினை நெற்றி வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே.

தெளிவுரை: ஈசன், உயர்ந்ததாகிய வானுலகத்தை யாவரும் விரும்புமாறு செய்தவர்; வேள்வியில் எல்லாப் பேறுகளையும் தோற்றுவித்து, அதனை

யாவரும் விரும்பி ஏத்தும் தன்மையில் செய்தவர்; அன்பர்களைப் பண்ணின் இசை கொண்டு பாடி மகிழுமாறு அருள் புரிபவர்; மன்னுயிர்களைப் பக்தி செய்து இன்பம் கொள்ளும் தன்மையில் பயிலச் செய்தவர்; திருமால் நெடிது உயர்ந்து, உலகினைத் தாவி அளக்கும் வல்லமையை அருளிச் செய்தவர்; அக்கினிக் கண்ணைத் தனது நெற்றியில் வைத்தவர். அவர் கழிப்பாலையில் மேவி அருள் வழங்கும் சிவபெருமானே.

296. வாமனை வணங்க வைத்தார்
வாயினை வாழ்த்த வைத்தார்
சோமனைச் சடைமேல் வைத்தார்
சோதியுள் சோதி வைத்தார்
ஆமனெய் யாட வைத்தார்
அன்பெனும் பாசம் வைத்தார்
காமனைக் காய்ந்த கண்ணார்
கழிப்பாலைச் சேர்ப்பனாரே.

தெளிவுரை: ஈசன், திருமாலாகிய வாமனன் பூசித்து வணங்குமாறு செய்தவர்; வாயால் நன்கு வாழ்த்து மாறு செய்தவர்; சந்திரனைச் சடைமுடியின் மீது சூடியவர்; சோதியைத் தருகின்ற மூலச்சுடராய்த் திகழ்பவர்; பசுவிலிருந்து கிடைக்கப் பெறும் நெய் முதலான பஞ்சகௌவியத்தால் பூசித்து அபிடேகிக்கப் படுபவர்; அன்பு என்னும் பிணித்தலை - ஈர்க்கும் தன்மையை அருள் புரிபவர்; மன்மதனை எரித்தவர். அவர் கழிப்பாலையில் மேவும் பெருமானே.

297. அரியன அங்கம் வேதம்
அந்தணர்க்கு அருளும் வைத்தார்
பெரியன புரங்கள் மூன்றும்
பேரழல் உண்ண வைத்தார்

பரியதீ வண்ண ராகிப்
பவளம்போல் நிறத்தை வைத்தார்
கரியதோர் கண்டம் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே.

தெளிவுரை: ஈசன், அரிய பொருளாக விளங்குகின்ற நான்கு வேதங்களையும் அதன் ஆறு அங்கங்களையும் அந்தணர்கள் ஓதுகின்றவாறு அருளைப் புரிந்தவர்; அசுரர்களின் முப்புரக் கோட்டைகள் எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர்; தீவண்ணராகிப் பவள நிறத்தின் எழிலாய் விளங்குபவர்; நீலகண்டத்தை உடையவர்; அவர் கழிப்பாலையில் வீற்றிருக்கும் பெருமானே.

298. கூரிருள் கிழிய நின்ற
கொடு மழுக் கையில் வைத்தார்
பேரிருள் கழிய மல்கு
பிறைபுனல் சடையில் வைத்தார்
ஆரிருள் அண்டம் வைத்தார்
அறுவகைச் சமயம் வைத்தார்
காரிருள் கண்டம் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே.

தெளிவுரை: ஈசன், அடர்ந்த இருளையும் விலகச் செய்யும் ஒளி திகழும் மழுப்படையைக் கையில் வைத்திருப்பவர்; இருளை வெருட்டும் பிறைச் சந்திரனையும் கங்கையையும் சடையின் மீது வைத்தவர்; மாயையால் சூழப்பட்ட அண்டங்களைத் தோற்றுவித்து அறுவகைச் சமயங்களுக்கும் மூலமாய்த் திகழ்பவர்; இருள் போன்ற கரிய நஞ்சினைக் கண்டத்தில் வைத்து நீலகண்டராய் விளங்குபவர். அவர் கழிப்பாலையில் சேர்ந்து விளங்கும் பரமனே.

299. உள்தங்கு சிந்தை வைத்தார்
உள்குவார்க்கு உள்ளம் வைத்தார்
விண்தங்கு வேள்வி வைத்தார்
வெந்துயர் தீர வைத்தார்
நள்தங்கு நடமும் வைத்தார்
ஞானமும் நாவில் வைத்தார்
கட்டங்கம் தோள்மேல் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே.

தெளிவுரை: ஈசன், உள்ளத்தில் பொருந்தும் சிந்தனையைத் தந்தவர்; உயர்ந்த நிலையை அளிக்க வல்ல வேள்வியை யாத்து அருளியவர்; மன்னுயிர் களின் துயர் தீருமாறு புரிபவர்; நள்ளிருளில் நடனம் பயிலும் இயல்பினர்; ஞாலத்து உயிர்கள் நல்லொலிச் சொல்லாம் திருவைந்தெழுத்தை நாவினால் ஓதி ஞானம் பெறச் செய்பவர்; மழுவாயுதத்தைத் தோளின் மீது தரித்திருப்பவர். அவர் கழிப்பாலையில் மேவும் பரமனே.

கட்டங்கம் – மழு.

300. ஊனப்பேர் ஒழிய வைத்தார்
ஓதியே உணர வைத்தார்
ஞானப்பேர் நவில வைத்தார்
ஞானமும் நடுவும் வைத்தார்
வானப்பேர் ஆறு வைத்தார்
வைகுந்தற்கு ஆழி வைத்தார்
கானப்பேர் காதல் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே.

தெளிவுரை: ஈசன், இத் தேகத்திற்கு வைக்கப் பெற்ற பெயர் மறந்து, தன்னிலையற்றுப் பற்றற்று வாழும் தன்மையை அருளிச் செய்பவர்; திருவைந்தெழுத்

தினை ஓதுமாறு செய்து உணரச் செய்தவர்; ஞானத்தின் கருத்தினை அறிய வைத்தவர்; ஞானபூசையாகிய, நற்பொருளை ஓதுதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் ஆகியவற்றினைப் புரிவிப்பவர்; கங்கையைச் சடை முடியில் வைத்தவர்; திருமாலுக்கு ஆழிப் படையை அருளிச் செய்தவர்; கானப்பேர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருப்பவர்; அவர் கழிப்பாலையில் மேவும் இறைவரே.

301. **கொங்கினும் அரும்பு வைத்தார்**
கூற்றங்கள் கெடுக்க வைத்தார்
சங்கினுள் முத்தம் வைத்தார்
சாம்பரும் பூச வைத்தார்
அங்கமும் வேதம் வைத்தார்
ஆலமும் உண்டு வைத்தார்
கங்குலும் பகலும் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே.

தெளிவுரை: ஈசன், மலர்களில் மகரந்தங்களைக் கமழுமாறு வைத்தவர்; கூற்றங்களால் அழியப்பட்டுக் கெடுதல் நேராதவாறு காப்பவர்; சங்கினுள் முத்து பிறக்குமாறு புரிபவர்; சாம்பலைப் பூசி நற்கதியடையுமாறு புரிபவர்; வேதமும் அங்கமும் ஓதி உய்யும் வகையை வகுத்தவர்; நஞ்சினை உண்டு விண்ணுலகையும் மண்ணுலகையும் காத்தவர்; இரவும் பகலும் ஆக மாறி வரும் நியதியை வகுத்தவர். அவர் கழிப்பாலையில் சேர்ந்து மேவும் பரமரே.

சிறப்புரை: தோன்றும் பொருள் யாவும் நிலையற்றனவாயும் நீர்க்குமிழி போன்றும், மடிதலின் இயல்பானது "கூற்றங்கள்" எனப் பகர்ந்து அதன் அழிவினைக் கெடுத்த தன்மையைக் கெடுக்க வைத்தார் என்

உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "ஊன மில்யோனியின் உள்வினை பிழைத்தும்" எனத் தொடங்கிப் "புல் வரம் பாய பலதுறை பிழைத்தும்" ஈறாக இருபது இடங்களில் பிழைக்குமாறு செய்யும் ஈசன் கருணையை வியக்கும் பெற்றியினைக் காண்க. ஆறு கோடி மாய சக்திகள் வேறு வேறு வகையில் தொடங்கி ஆட்படுத்தலும் ஓர்க. இவ்வாற்றான் மீட்டுக் காத்தருள் புரிபவர் ஈசனே என இவண் உணர்த்தப் பெற்றது.

302. சதுர்முகன் தானும் மாலும்
தம்மிலே இகலக்கண்டு
எதிர்முகம் இன்றி நின்ற
எரியுரு அதனை வைத்தார்
பிதிர்முகன் காலன் றன்னைக்
கால்தனில் பிதிர வைத்தார்
கதிர்முகம் சடையில் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே.

தெளிவுரை: ஈசன், பிரமனும் திருமாலும் தம்மில் மாறுபட்டு வாதம் புரிய அவர்களுக்குத் தோன்றாத வாறு எரியுருவாகி ஓங்கி உயர்ந்தவர்; விழித்துச் சினத்தைக் காட்டும் காலனைத் திருப்பாத மலரால் உதைத்து அடர்த்தவர்; ஒளியைத் தனது தண்மையான கதிர்களால் வழங்கும் பிறைச் சந்திரனைச் சடை முடியின் மீது வைத்தவர். அப்பெருமான், கழிப் பாலையில் மேவி இருந்து அருள் வழங்கும் பரமரே.

303. மாலினாள் அணங்கை அஞ்ச
மதில்இலங் கைக்கு மன்னன்
வேலினான் வெகுண்டு எடுக்கக்
காண்டலும் வேத நாவன்

நூலினான் நோக்கி நக்கு
நொடிப்ப தோர் அளவில் வீழக்
காலினால் ஊன்றி யிட்டார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: பெருமையுடைய உமாதேவியானவர் அஞ்சுமாறு, இராவணன் கயிலை மலையைப் பெயர்த்து எடுக்க, முப்புரிநூல் அணிந்த திருமார்பினரும் வேதம் ஓதும் திருநாவினை உடையவராகிய ஈசன், நொடிப் பொழுதில் அவ்வரக்கன் வீழ்ந்து நையுமாறு திருப்பாத விரலால் ஊன்றியவர். அப்பெருமான் கழிப்பாலையில் மேவும் பரமரே ஆவார்.

மால் – பெருமை.

31. திருக்கடவூர் வீரட்டம்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 47ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. திருக்கடையூர் என வழங்கப்படுகிறது. அட்ட வீரத் தலங்களுள் ஒன்று. மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த காலனைத் திருப்பாதத்தால் உதைத்து அழித்த தலம். அபிராமி பட்டருக்கு, அமாவாசை அன்று பூரணச் சந்திரன் தோன்றுமாறு அருளிச் செய்த அன்னை அபிராமி -இத்திருத்தலத்தில் எழுந்தருளி யுள்ள அம்பிகையாகும்.

மற்றும் மூன்றாம் திருமுறை பதிகம் 8 காண்க.

சுவாமி : அமிர்த்தகடேஸ்வரர்

அம்பிகை : அபிராமி

தல மரம் : வில்வம், சாதி

தீர்த்தம் : அமிர்த தீர்த்தம், சிவகங்கை

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

304. பொள்ளத்த காய மாயப்
பொருளினைப் போக மாதர்
வெள்ளத்தைக் கழிக்க வேண்டில்
விரும்புமின் விளக்குத் தூபம்
உள்ளத்த திரியொன்று ஏற்றி
உணருமாறு உணர வல்லார்
கள்ளத் தைக் கழிப்பர் போலும்
கடவூர்வீ ரட்ட னாரே.

தெளிவுரை: இவ்வுடலானது பல துவாரங்களை உடையது. மாயத்தின் வகையில் பற்றியதாக உள்ளது. இவற்றை நீக்க வேண்டுமானால், உள்ளத்தின் உள்ளே விளங்குகின்ற இறையுணர்வைத் திரியாகக் கொண்டு ஏற்ற வேண்டும். அப்போது மெய்யுணர்வு தோன்றும்; ஞானம் பெருகும்; மாயை அகலும்; அத்தகைய செயலைப் புரிபவர் கடவூர் வீரட்டனாரே.

சிறப்புரை: ஈசன் உள்ளத்தில் திகழும் சோதியாகவும் சுடர் ஒளி விளக்காகவும் விளங்கி மெய்யுணர்வைத் தருகின்ற பாங்கினை, இத்திருப்பாட்டு உணர்த்திற்று. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "பொய்யாயின வெல்லாம் போய் அகல, வந்து அருளி மெய்ஞ் ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!" என அருளிச் செய்தமை காண்க.

305. மண்ணிடைக் குரம்பை தன்னை
மதித்துநீர் மையல் எய்தில்

விண்ணிடைத் தரும ராசன்
வேண்டினால் விலக்கு வார்ஆர்
பண்ணிடைச் சுவைகள் பாடி
ஆடிடும் பத்தர்க் கென்றும்
கண்ணிடை மணியர் போலும்
கடவூர்வீ ரட்ட னாரே.

தெளிவுரை: இவ்வுலகத்தில் இந்த மானிட தேகம் பெருமை உடையது எனக் கருதி, அத் தேகத்தின் வளர்ச்சிக்கும் சுகத்திற்கும் உரிய ஊட்டத்தைக் கொடுத்தீராயின், எமதருமன் உயிரைக் கவருமாற்றால் நாடினால் விலக்குபவர் யார்? எனவே, பண்ணின் இசை விளங்கும் ஈசனின் புகழைப் பாடிப் போற்று மின். பக்தி வயத்தால் உணர்வு கொண்டு மகிழ்ந்து ஆடுமின். அத்தகைய பக்தர்களுக்குக் கண்மணி போன்று அருள் புரிபவர், கடவூர் வீரட்டனாரே.

சிறப்புரை: இத்திருத்தலமானது மார்க்கண்டேயரைக் காத்த, ஈசனின் அருளைப் பெற்று விளங்கும் சிறப்புடையது. இவ்வரலாறு இத்திருப்பாட்டின் குறிப்பால் உணர்த்தப் பெற்றமை காண்க.

குரம்பை – தேகம், உடம்பு.

306. பொருத்திய குரம்பை தன்னுள்
பொய்ந்நடை செலுத்து கின்றீர்
ஒருத்தனை உணர மாட்டீர்
உள்ளத்திற் கொடுமை நீக்கீர்
வருத்தின களிறு தன்னை
வருத்துமா வருத்த வல்லார்
கருத்தினில் இருப்பர் போலும்
கடவூர்வீ ரட்ட னாரே.

தெளிவுரை: இத்தேகத்தின் மீது மும்மலத்தின் குவியலாகக் கருதப்படும் பொய்ந்நடை கொண்டு செலுத்தி வளர்க்கின்றீர். உடலுக்குள் விளங்கும் ஆன்மாவையும், அதனைக் கோயிலாகக் கொண்டு மேவும் ஈசனையும் உணராதவர் ஆனீர். உள்ளத்தில் குரோதம் முதலான கொடுமையான பண்பினையும் நீக்காதவர் ஆனீர். இவ்வளவுக்கும் காரணம் ஐம்புலன் ஆகிய யானைகள் வருத்திக் கொண்டிருப்பதேயாகும். அத்தகைய களிற்றை, வருத்தும் தன்மையில் வருத்த வல்லவர் ஈசன் ஆவார். அவர் கடவூர் வீரட்டனாரே. அவரை ஏத்துமின்.

ஒருத்தன் – ஈசன்.

307. பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தர்க்குப் பத்தர் ஆகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு
ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார்
கடவூர்வீ ரட்ட னாரே.

தெளிவுரை: பொழுது புலர்வதற்கு முன்னர், அதிகாலை (உஷகாலம்)யில் உடல் தூய்மை செய்து நீராடி, ஈசனுக்குப் பக்தி உணர்வுடன், அரும்பும், மலர்களும் கொண்டு பெரு விருப்பத்துடன் விளக்கும், தூபமும் ஏத்தி, விதிப்படி இட்டு வணங்குகின்ற பக்தர் களுக்குக் கரும்பின் கட்டி போல் நெஞ்சுள் நின்று இனிமை தருபவர் கடவூர் வீரட்டனாரே.

சிறப்புரை: ஈசனைப் பித்தன் என ஓதுதல் காண்க. சிவபெருமான் பக்தர்களுக்கு அருள் செய்தலை

மேவும் வகையில், உமாதேவியைப் பாகமாகக் கொண்டு அம்மையப்பராய் விளங்கும் தன்மை பெரும்பித்தன் என ஓதப் பெற்றது. இதனை மாணிக்க வாசகர், "பெண்பால் உகந்தான் பெரும் பித்தன் காணேடி" எனவும், "அயன் மால் போற்றி செயும் பித்தன் பெருந்துறை மேய பிரான்; பிறப்பறுத்த அத்தன்" (திருத்தெள்ளேணம் 16) எனவும், அருளிச் செய்தமை காண்க. சுந்தரமூர்த்தி சுவாமிகள் "பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா" என ஏத்துதலும் காண்க.

கரும்பின் கட்டியானது, வாயில் சிறுகச்சிறுக ஊறிக் கலந்து நொடி தோறும் இன்சுவை நல்கும் தன்மையைப் போன்று, சிவபெருமான் உள்ளத்தில் இழைந்து பேரின்பத்தை அருள் செய்யும் பாங்கு, "கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே!" என உணர்த்துதல் ஆயிற்று.

308. தலக்கமே செய்து வாழ்ந்து
தக்கவாறு ஒன்றும்இன்றி
விலக்குவார் இலாமை யாலே
விளக்கத்திற் கோழி போன்றேன்
மலக்குவார் மனத்தின் உள்ளே
காலனார் தமர்கள் வந்து
கலக்க நான் கலங்கு கின்றேன்
கடவூர்வீ ரட்ட னீரே.

தெளிவுரை: இழிந்த செயல்களைச் செய்தும், தகுந்தது என எதுவும் இன்றியும், செய்யும் இழி செயலைச் செய்ய வொட்டாது தடுப்பாரும் எவரும் இன்றி, நான் வாழ்ந்தேன். கோழியின் விளக்கத்திற் போன்று கட்டுப்பாடு எதுவும் இல்லாமையானேன். காலனின்

தூதுவர்கள் என் உள்ளத்தில் புகுந்து கலக்க, நான் கலங்குகின்றேன். கடவூர் வீரட்டத்தில் மேவும் ஈசனே! என்னைக் காப்பீராக என்பது குறிப்பு.

சிறப்புரை: கட்டுப்பாடு அற்ற தன்மையில் விளங்கும் குணமானது, "விளக்கத்திற் கோழி போன்றேன்" என ஓதப் பெற்றது. தன் உணர்வு கொண்டு கூவுதலும் பிறர் ஏவுதல் இன்றித் தானே கூவுதலை நிறுத்திக் கொள்ளு தலும் கோழியின் இயல்பாதலும், பிறர் செய்விக்க ஒல்லாததும் ஆகிய குண விசேடத்தை இது உணர்த்துத லாயிற்று.

தலக்கம் – இழி செயல்.

309. பழியுடை யாக்கை தன்னில்
பாழுக்கே நீர்இ றைத்து
வழியிடை வாழ மாட்டேன்
மாயமும் தெளிய கில்லேன்
அழிவுடைத் தாய வாழ்க்கை
ஐவரால் அலைக்கப் பட்டுக்
கழியிடைத் தோணி போன்றேன்
கடவூர்வீ ரட்ட னீரே.

தெளிவுரை: பிணி முதலியவற்றால் நொந்து பழிக்கப் படக் கூடியது இந்த சரீரம் ஆகும். இத்தகைய சரீரத்துக்கு ஊட்டம் கொடுப்பது போன்ற செயல் களில் மேவி, நல்வழியின்படி வாழாதவனாய் ஆனேன். அத்தகைய வாழ்வானது மாயையுடையது என, அழியாதவனானேன். இத்தகைய அழிவுக்குரிய வாழ்க்கையில் ஐம்புலன்களால் அலைக்கப்பட்டேன். கழியிடைத் தோணி போன்று வெறுமனாய் உள்ளேன். கடவூர் வீரட்டத்தில் மேவும் ஈசனே! நீவிரே எனக்குக் கதி அளிப்பீர்! என்பது குறிப்பு.

சிறப்புரை: புலன்களால் அலைக்கப்படும் இச்சரீரத்தின் இழிவும் அஞ்ஞானத்தின் பெருக்கமும் "ஐவரால் அலைக்கப் பட்டுக் கழியிடைத் தோணி போன்றேன்" என ஓதப் பெற்றன. இத்தன்மையில் திருஞான சம்பந்தர், "ஆய மாய காயந் தன்னுள் ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்; மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவல மேயவனே!" (முதல் திருமுறை-50; திருவலி வலம்; பாடல் வ. எண் 543.) என அருளிச் செய்தமை காண்க. இந்நெறியில் மாணிக்கவாசகர், "மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய விலங்கு மனத்தால்" என ஓதியருளியதும் காண்க.

310. மாயத்தை அறிய மாட்டேன்
மையல்கொள் மனத்த னாகிப்
பேயொத்துக் கூகை யானேன்
பிஞ்ஞகா பிறப்பொன்று இல்லி
நேயத்தால் நினைக்க மாட்டேன்
நீதனேன் நீச னேநான்
காயத்தைக் கழிக்க மாட்டேன்
கடவூர்வீ ரட்ட னீரே.

தெளிவுரை: ஈசனே! மண்ணுலக வாழ்க்கை நிலை யற்றது என நான் அறியாதவனானேன். இதில் மையல் கொண்டு, பேய் போன்று அஞ்ஞானமாகிய இருளில் கூகை போன்று கிடந்தேன். அழகிய சடை முடியுடைய நாதனே! பிறவா யாக்கைப் பெரியோனே! நான் நேயம் கொண்டு நினைக்கவில்லை; தாழ்ந்தவனானேன். பிறவியை நீக்க வேண்டும் என்ற எண்ணமும் இல்லாது உள்ளேன். கடவூர் வீரட்டத்தில் வீற்றிருக்கும் பெருமானே! என்னைக் கனிந்தருள் புரிந்து காக்க என்பது குறிப்பு.

காயத்தைக் கழித்தல் – பிறப்பறுத்தல்.

311. பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து
பாழுக்கே நீர் இறைத்தேன்
உற்றலால் கயவர் தேறார்
என்னும்கட் டுரையோடு ஒத்தேன்
எற்றுளேன் என்செய் கேனான்
இடும்பையால் ஞானம் ஏதும்
கற்றிலேன் களைகண் காணேன்
கடவூர்வீ ரட்ட னீரே.

தெளிவுரை: ஈசன் திருவடியைப் பற்றி நில்லாது, வாழ்க்கையைக் கழித்தேன். பாழுக்கே நீர் பாய்ச்சினாற் போன்று, உடலை மட்டும் பயனின்றி வளர்த்தேன். "கெட்டால் அன்றிக் கயவர் தேரார்" என்னும் சொல்லுக்கு இலக்கானேன். நான் என் செய் வேன்! துன்பம் கொண்டேன். ஞானம் அற்று அறியாமையாகிய அஞ்ஞானத்தில் உழல்கின்றேன். இதற்குப் பற்றுக்கோடு ஏதும் காணேன். கடவூர் வீரட்டத்தில் மேவும் பெருமானே! நீவிரே கனிந்து அருள் புரிவீராக! என்பது குறிப்பு.

பற்றிலா வாழ்க்கை – ஈசனின் திருவடிப் பற்று இல்லாத வாழ்க்கை, பொய் வாழ்க்கை; தேறார் – மெய்ப்பொருளின் உண்மை அறியாதவர்; கறைகண் – பற்றுக்கோடு.

312. சேலினேர் அனைய கண்ணார்
திறம்விட்டுச் சிவனுக்கு அன்பாய்ப்
பாலுநல் தயிர் நெய் யோடு
பலபல ஆட்டி என்றும்
மாலினைத் தவிர நின்ற
மார்க் கண்டர்க்காக அன்று
காலனை உதைப்பர் போலும்
கடவூர்வீ ரட்ட னாரே.

தெளிவுரை: மனத்தில் தோன்றும் காம எண்ணங்களை அழித்து, ஈசனுக்கு அன்பாகி, நெய்யும் பாலும் தயிரும், மற்றும் கனிகள், வாசனைப் பொடிகள் முதலான பலபல பூசைப் பொருள்களைக் கொண்டு பூசித்து வணங்கி, மயக்கத்தினை நீக்கி நின்ற மார்க்கண்டே யருக்காக அன்று காலனை உதைத்தவர் கடவூர் வீரட்டனாரே.

சிறப்புரை: சிவபூசையின் புறப்பூசையாக ஆற்றும் சிறப்பு, "பாலுநல் தயிர் நெய்யோடு பலபல ஆட்டி" என ஓதப் பெற்றது. இத்தன்மையில், சுந்தர மூர்த்தி சுவாமிகள், "நெய்யும் பாலும் தயிரும் கொண்டு நித்தல் பூசனை செய்யலுற்றார்" என ஏத்தியமையும் காண்க.

அகப்பூசனையாக, "காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக மனம் அணி இலிங்கமாக நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீர் அமைய ஆட்டிப் பூசனை ஈசனார்க்குப் போற்ற இக்கு ஆட்டினோமே" என்னும் நாவுக்கரசர் திருவாக்கும் (பாடல் வ.எண் 739) காண்க.

313. முந்துரு இருவ ரோடு
மூவரும் ஆயினாரும்
இந்திர னோடு தேவர்
இருடிகள் இன்பம் செய்ய
வந்திரு பதுகள் தோளால்
எடுத்தவன் வலியை வாட்டிக்
கந்திரு வங்கள் கேட்டார்
கடவூர்வீ ரட்ட னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், பிரமன் திருமால் ஆகிய இருவர் உருவத்திலும் விளங்குபவர். உருத்திரன், மகேஸ்வரன்,

சதாசிவம் ஆகிய மூவருடைய உருவமாகவும் திகழ்பவர். இந்திரன் முதலான தேவர்களும், முனிவர் களும் ஈசனைப் போற்றி வணங்கி இருக்கின்ற நிலையில் இருபது தோள்களையுடைய இராவணன் கயிலையை எடுத்தனன். அவனது வலிமை எல்லாம் கெடுமாறு அடர்த்தி வருத்திய ஈசன், அவ்அரக்கன் பாடிய இசையைக் கேட்டு வீற்றிருப்பவர் ஆயினார். அவர் கடவூர் வீரட்டனாரே.

சுந்திருவங்கள் – இராவணன் இசைத்த பண்ணைக் குறித்தது.

32. திருப்பயற்றூர்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 78ஆவது திருத்தலம். திருநாவுக்கரசர் பாடல் பெற்றது. திருப்பயத்தங்குடி என வழங்கப்படுகிறது. பைரவ மகரிஷி வழிபட்டது. பிரமதீர்த்தத்தில் நீராடி அம்பிகையை வழிபட்டால் கண் நோய் நீங்கும் என்பது வழக்கு.

சுவாமி : முக்த புரீஸ்வரர், திருப்பயற்றுநாதர்

அம்பிகை : சிலந்தி மரம் (மஞ்சள் நிறத்தில் சிலந்தி வடிவத்தில் பூக்கும். இலை புன்னை மரத்தின் அமைப்புடையது)

தீர்த்தம் : கருணா தீர்த்தம் (பிரம தீர்த்தம்)

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

314. உரித்திட்டார் ஆனை யின்தோல்
உதிரஆறு ஒழுகி யோட
விரித்திட்டார் உமையாள் அஞ்சி
விரல்விதிர்த்து அலக்கல் நோக்கித்

தரித்திட்டார் சிறிது போது
தரிக்கிலர் ஆகித் தாமும்
சிரித்திட்டார் எயிறு தோன்றத்
திருப்பயற்று ஊர னாரே.

தெளிவுரை: ஈசன், யானையின் தோலை உரித்தவர்; இரத்தம் கசிய அத்தோலை விரித்து, உமாதேவி அஞ்சுமாறு தன் தோளில் போர்த்துக் கொண்டவர்; அம்பிகையின் அச்சம் தெளியத் தம் பல் தெரியுமாறு சிரித்தவர். அவர் திருப்பயற்றூர் என்னும் ஊரில் வீற்றிருக்கும் பெருமானே.

அலக்கல் – அசைவு, நடுக்கம்.

315. உவந்திட்டு அங்கு உமையோர் பாகம்
வைத்தவர் ஊழி ஊழி
பவந்திட்ட பரம னார்தான்
மலைசிலை நாகம் ஏற்றிக்
கவர்ந்திட்ட புரங்கள் மூன்றும்
கனலெரி யாகச் சீறிச்
சிவந்திட்ட கண்ணர் போலும்
திருப்பயற் றூர னாரே.

தெளிவுரை: சிவபெருமான், உமாதேவியாரை உவப்புடன் ஒரு பாகத்தில் வைத்தவர்; மேருமலையை வில்லாகவும், வாசுகி என்னும் நாகத்தை நாணாகவும் கொண்டு, கனன்று எரியும் அக்கினியைக் கணையாகச் செலுத்தி அசுரர்களுடைய மூன்று கோட்டைகளும் எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர். அவர், திருப் பயற்றூரில் மேவும் பெருமானே ஆவார்.

316. நங்களுக்கு அருள தென்று
நான்மறை ஓதுவார்கள்

தங்களுக் கருளும் எங்கள்
தத்துவன் தழலன் தன்னை
எங்களுக்கு அருள்செய் என்ன
நின்றவன் நாகம் அஞ்சும்
திங்களுக்கு அருளிச் செய்தார்
திருப்பயற் றூர னாரே.

தெளிவுரை: ஈசன், தங்களுக்கு அருள் புரிபவர் என்னும் கருத்தில் நான்கு மறைகளையும் ஓதுகின்ற அந்தணர் களுக்கு அருள் புரியும் தத்துவன்; தழல் வண்ணராக விளங்குபவர்; மன்னுயிர்களால் எங்களுக்கு அருள் புரிவீராக என ஏத்தப் பெறுபவர்; இராகு, கேது ஆகிய கிரகங்களுக்கு அஞ்சும் இயல்பினையுடைய சந்திரனுக்கு அருள் செய்து, சடை முடியில் வைத்தவர். அவர், திருப்பயற்றூரில் மேவும் பரமரே ஆவார்.

317. பார்த்தனுக்கு அருளும் வைத்தார்
பாம்பரை ஆட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார்
சாமுண்டி சாம வேதம்
கூத்தொடும் பாட வைத்தார்
கோளரா மதிய நல்ல
தீர்த்தமும் சடையில் வைத்தார்
திருப்பயற் றூர னாரே.

தெளிவுரை: ஈசன், அர்ச்சுனனுக்குப் பாசுபதம் அளித்து அருள் புரிந்தவர்; நாகத்தை அரையில் கட்டியவர்; ஐயனாரைத் திருமகனாகப் பெற்றவர்; காளியை நடனம் புரியவும் வேதம் பாடவும் வைத்தவர்; நாகம், சந்திரன், கங்கை ஆகியனவற்றைச் சடை முடியில் திகழுமாறு வைத்தவர். அவர் திருப்பயற்றூரில் மேவும் பரமரே ஆவார்.

பார்த்தன் – அர்ச்சுனன்; சாத்தன் – சாஸ்தா – ஐயனார்; சாமுண்டி – காளி; நல்ல தீர்த்தம் – புனித கங்கை.

318. மூவகை மூவர் போலும்
முற்றுமாம் நெற்றிக் கண்ணர்
நாவகை நாவர் போலும்
நான்மறை ஞானம் எல்லாம்
ஆவகை ஆவர் போலும்
ஆதிரை நாளர் போலும்
தேவர்கள் தேவர் போலும்
திருப்பயற் றூர னாரே.

தெளிவுரை: ஈசன், முத்தொழிலை மேவும் மும்மூர்த்திகளாக விளங்குபவர்; நெற்றியில் கண்ணுடையவர்; "நாமுதலான புலன் வழிகளில், நா"வினால் மேவி நான்மறைகளை ஓதி, ஞானம் பெருகும் அருளைப் புரிபவர்; ஆதிரை நன்னாளுக்கு உரியவர்; தேவர்களின் தலைவர். அவர் திருப்பயற்றூரில் மேவும் இறைவரே.

319. ஞாயிறாய நமனும் ஆகி
வருணனாய்ச் சோமனாகித்
தீயறா நிருதி வாயுத்
திப்பிய சாந்தனாகிப்
பேயறாக் காட்டில் ஆடும்
பிஞ்ஞகன் எந்தை பெம்மான்
தீயறாக் கையர் போலும்
திருப்பயற் றூர னாரே.

தெளிவுரை: ஈசன் – சூரியன், இயமன், வருணன், சந்திரன், அக்கினி, நிருதி, வாயு, சாந்தன் என அட்டதிக்குப் பாலகராக விளங்குபவர்; பேய்கள் நிலவும் சுடுகாட்டில் நடனம் புரிபவர்; அழகிய சடைக் கோலத்தராகிய எந்தை பெருமான்; 'நெருப்பினைக்

கையில் ஏந்தி உள்ளவர். அவர் திருப்பயற்றூரில் மேவும் பரமரே ஆவார்.

அட்டதிக்குப் பாலகர் – இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பர். சாந்தன், குபேரன் ஈசானன் இந்திரன் ஆகியோரைக் குறிக்கும். சந்திர சூரியர் ஆகிய இரு சுடர்களைத் தவிர, எண்மர் எனச் சுட்டப் பெறுதல் ஆகும்.

320. ஆவியாய் அவியும் ஆகி
அருக்கமாய்ப் பெருக்கமாகிப்
பாவியர் பாவம் தீர்க்கும்
பரமனாய்ப் பிரமனாகிக்
காவியங் கண்ண ளாகிக்
கடல்வண்ண மாகி நின்ற
தேவியைப் பாகம் வைத்த
திருப்பயற் றூர னாரே.

தெளிவுரை: ஈசன், வேள்வியாகவும் அதன் அவிர்ப்பாக மாகவும் திகழ்பவர்; அரிதாகி இன்மை எனப்படு பவராகவும், பெருகி வளரும் இயல்பினராகவும் உள்ளவர்; பாவம் சேர்ந்து விளங்கும் உயிர்களின் பாவத்தைத் தீர்க்கின்ற பரமனாகவும், பரப்பிரம மாகவும் திகழ்பவர்; இத்திருத்தலத்தில் எழுந்தருளி யுள்ள காவியங் கண்ணி என்னும் அம்பிகையாக விளங்குபவர்; கடல் வண்ணத்தினராகிய உமா தேவியைப் பாகம் கொண்டு திகழ்பவர். அவர், திருப்பயற்றூரில் மேவும் பரமரே.

321. தந்தையாய்த் தாயும் ஆகித்
தரணியாய்த் தரணியுள்ளார்க்கு
எந்தையும் என்னநின்ற
ஏழுல குடனும் ஆகி
எந்தைஎம் பிரானே என்றென்று
உள்குவார் உள்ளத்து என்றும்

சிந்தையும் சிவமும் ஆவார்
திருப்பயற் றூர னாரே.

தெளிவுரை: ஈசன், தந்தையாகவும் தாயாகவும் இருந்து காத்தருள்பவர்; மண்ணுலகம் ஆகியவர்; இவ்வுலகத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் எந்தை பிரானாக விளங்குபவர்; ஏழுலகும் ஆகி விளங்குபவர்; எல்லாராலும் ஏத்தப் பெறுபவர்; உள்ளத்தில் ஒரு மனத்துடன் ஏத்தும் அன்பர்களின் சிந்தையும் சிவமும் ஆகிப் பேதமில்லாது விளங்குபவர். அவர் திருப் பயற்றூரில் மேவும் பரமரே.

322. புலன்களைப் போக நீக்கிப்
புந்தியை ஒருங்க வைத்து
இலங்களைப் போக நின்று
இரண்டையும் நீக்கி ஒன்றாய்
மலங்களை மாற்ற வல்லார்
மனத்தினுள் போகமாகிச்
சினங்களைக் களைவர் போலும்
திருப்பயற் றூர னாரே.

தெளிவுரை: ஐம்புலன்களின் ஆசை வழியே போகங்களைத் துய்க்க வேண்டும் என்னும் தன்மையை நீக்கிச் சிந்தையைத் தெளிவுடையதாக்கி, இலங்கள் எனப்படும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை எனப்படும் ஆறு ஆதாரங்களைக் கடந்து நின்று; நான், எனது எனப்படும் அகப்பற்றும் புறப்பற்றும் ஆகிய இரண்டையும் நீக்கி, அவனே தானேயாகிய ஒரு நிலையுடையவராக விளங்கி, மும்மலங்களை மாற்றுபவர்களுடைய மனத்தில் குடிகொண்டு வெளிப்படுபவர், சிவபெருமான். அவர் மனத்தினுள்

நன்கு விளங்கி மேவ, சினம் காமம் யாவும் தாமே விலகும். அத்தகைய பெருமான், திருப்பயற்றூரில் மேவும் இறைவரே.

சிறப்புரை: ஈசனை, ஒரு மனத்தினராகி ஏத்தும் அன்பர்களின் பெருமையினை இத்திருப்பாட்டு ஓதுதல் ஆயிற்று. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "புழுவினாற் பொதிந்திடு குரம்பையில் பொய்தனை ஒழிவித்திடும் எழில் கொள் சோதி எம் ஈசன் எம்பிரான் என்னுடை அப்பன் என்றென்று தொழுத கையினர் ஆகித் தூய் மலர்க் கண்கள் நீர் மல்கு தொண்டர்க்கு வழுவிலா மலர்ச் சேவடிக் கண் நம் சென்னி மன்னி மலருமே!" (சென்னிப்பத்து 8) என அருளியவாறும் காண்க. இறைவன் உள்ளிருந்து எழும்பும் பேரருளை, "மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக் காலால் எழுப்பும் கருத்து அறிவித்தே அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும் குமுத சகாயன் குணத்தையும் கூறி" என ஔவையார் அருளிச் செய்தவாறும் நோக்குக.

இலம் – உடலின்கண் இலயித்து மேவும் ஆறு ஆதாரங்களைக் குறிக்கும் என்பது ஆன்றோர் உரை. இல்லம் ஆம்.

323. மூர்த்திதன் மலையின் மீது
போகரதா முனிந்து நோக்கிப்
பார்த்துத்தான் பூமி மேலாற்
பாய்ந்துடன் மலையைப் பற்றி
ஆர்த்திட்டான் முடிகள் பத்தும்
அடர்த்துநல் அரிவை அஞ்சத்
தேத்தெத்தா என்னக் கேட்டார்
திருப்பயற் றூர னாரே.

தெளிவுரை: சிவமூர்த்தியாகிய ஈசன் திகழ்கின்ற கயிலை மலையின் மீது ஏன் போகக் கூடாது எனச் சினமுற்று

நோக்கிய இராவணன், அதனைப் பெயர்க்க முனைந்தான். அப்போது அவ்வரக்கன் முடிகள் பத்தும் நெரிய அடர்த்தியவராய், உமாதேவியாரின் அச்சத்தைப் போக்கியவர் சிவபெருமான்.

இராவணன் தன் தவற்றை உணர்ந்து இசைத்துப் பாட அதனை மகிழ்ந்து கேட்ட பெருமான், திருப்பயற்றூரில் மேவும் பரமரே.

மூர்த்தி – ஈசன்; அரிவை – உமாதேவியார்;
தேத்தெத்தா – இசையின் வண்ணத்தைக் குறித்தது.

33. திருமறைக்காடு

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 125ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. வேதாரண்யம் என வழங்கப்படுவது. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. ஏனைய விடங்கத் தலங்களாவன: 1. திருவாரூர் – அஜபா நடனம் – வீதி விடங்கர்

2. திருநள்ளாறு – உன்மத்த நடனம் – நகவிடங்கர்
3. திருநாகைக் காரோணம் – பாராவார தரங்க நடனம் – சுந்தர விடங்கர்
4. திருவாய்மூர் – கமல நடனம் – நீல விடங்கர்
5. திருக்கோளிலி – பிருந்த நடனம் – அவனிவிடங்கர்
6. திருக்காறாயில் – குக்குட நடனம் – ஆதி விடங்கர்.

மற்றும் முதல் திருமுறை – பதிகம் 22இல் காண்க.

சுவாமி : மறைக்காட்டீஸ்வரர், வேதாரண்யேஸ்வரர், வேதவனேசர்

அம்பிகை : யாழைப் பழித்த நாயகி, வீணாவாத விதூஷணி

தல மரம் : வன்னி

தீர்த்தம் : வேத தீர்த்தம் (கடல்)

தியாக
ராஜா : புவனி விடங்கர் - அம்ஸபாத நடனம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

324. இந்திர னோடு தேவர்
இருடிகள் ஏத்து கின்ற
சுந்தர மானார் போலும்
துதிக்கலாம் சோதி போலும்
சந்திர னோடு கங்கை
அரவையும் சடையுள் வைத்து
மந்திர மானார் போலும்
மாமறைக் காட னாரே.

தெளிவுரை: *ஈசன், இந்திரன் முதலான தேவர்களும் ரிஷிகளும் ஏத்தும் சிறப்புடையவர்; ஏத்திப் போற்றும் துதிகளுக்கெல்லாம் சோதியாய் விளங்குபவர்; சந்திரனும், கங்கையும் அரவமும் சடை முடியில் திகழுமாறு வைத்தவர்; மறையின் மந்திரமாக விளங்கு பவர். அவர் பெருமையுடைய மறைக்காட்டில் விளங்கு பவரே.*

325. தேயன நாட ராகித்
தேவர்கள் தேவர் போலும்
பாயன நாடு அறுக்கும்
பத்தர்கள் பணிய வம்மின்
காயன நாடு கண்டங்கு
அதனுளார் காள கண்டர்
மாயன நாடர் போலும்
மாமறைக் காட னாரே.

தெளிவுரை: ஈசன், பெரும் சிறப்புக்குரிய முத்தி உலகத்தின் தலைவராகுபவர்; தேவர்களுக்கெல்லாம் மகாதேவர்; சுற்றியுள்ள புறப் பற்றுகளை அறுக்கும் பக்தர்களே! அப் பெருமானைப் பணிந்து ஏத்த வாருங்கள். தேவர்கள், கொடிய நஞ்சினைக் கண்டு வருந்தி அச்சம் கொண்டு ஓட, அதனைக் கண்டு அவர் களுக்கு அபயம் அளித்து அருள் புரிந்து அக் கொடிய நஞ்சினைப் பருகிக் கரிய கண்டத்துடன் விளங்குபவர் ஈசன். அப்பெருமானைத் திருமால் போற்றி வணங்கு பவர். அவர் பெருமையுடைய மறைக்காட்டில் மேவும் பரமரே.

தே – பெருமை, சிறப்பு; பாயன – பாசனம், சுற்றம்; காய் – துன்பம்.

326. அறுமைஇவ் வுலகு தன்னை
ஆம்எனக் கருதி நின்று
வெறுமையின் மனைகள் வாழ்ந்து
வினைகளால் நலிவு ணாதே
சிறுமதி அரவு கொன்றை
திகழ்தரு சடையுள் வைத்து
மறுமையும் இம்மையாவார்
மாமறைக் காடனாரே.

தெளிவுரை: இவ்வுலகமானது நிலையில்லாதது. இதனை நிலையுடையது எனக் கருதி வெறுமை உடையதாய் எத்தகைய நற்பயனையும் தராதமனை வாழ்க்கையுடன் வாழ்ந்து, வினைகளால் நலியப் பெறாதீர். பிறைச் சந்திரனும், அரவமும், கொன்றை மலரும் சடையின் மீது திகழத் தரித்திருக்கும் ஈசனை ஏத்துமின். இம்மைக்கும் மறுமைக்கும் அவரே துணையாய் விளங்குபவர். அத்தகைய பெருமான், பெருமையுடன் மேவும் மறைக்காடனாரே.

அறுமை – நிலையற்றது.

327. கால்கொடுத்து இருகை யேற்றிக்
கழிநிரைத்து இறைச்சி மேய்ந்து
தோல்படுத்து உதிர நீரால்
சுவரெடுத்து இரண்டு வாசல்
ஏல்உடைத் தாஅ மைத்தங்கு
ஏழுசா லேகம் பண்ணி
மால்கொடுத்து ஆவி வைத்தார்
மாமறைக் காட னாரே.

தெளிவுரை: குடிமேவும் வீட்டிற்குக் கால் கொடுத்தல், கையால் ஏற்றுதல், கழிகளை வரிசைப் படுத்துதல், மேற் கூரை வேய்தல், சேறு நீர் கொண்டு பூசுதல், சுவர் வைத்தல் வாசல் வைத்தல், சாலேகம் (ஜன்னல்) அமைத்தல் முதலானவை அமைத்தல் போன்று இந்த தேகத்திற்கும், கால், கை, ஊன் (இறைச்சி), தோல், கழி (எலும்பு), இரண்டு வாசல், ஏழு சாலேகம் (ஆக 9 துவாரங்கள் குறித்தது) இவற்றை வைத்து மயக்கத்தைக் கொடுத்து, ஆவி (உயிர்)யைத் தந்தவர் மாமறைக் காடரே.

மால் – மயக்கம், பெருமை.

328. விண்ணினார் விண்ணின் மிக்கார்
வேதங்கள் விரும்பி ஓதப்
பண்ணினார் கின்ன ரங்கள்
பத்தர்கள் பாடி யாடக்
கண்ணினார் கண்ணின் உள்ளே
சோதியாய் நின்ற எந்தை
மண்ணினார் வலங்கொண்டு ஏத்து
மாமறைக் காட னாரே.

தெளிவுரை: சிவபெருமான், விண்ணாகவும் அதனினும் மிகுந்தவராகவும் விளங்குபவர்; வேதங்கள் விரும்பி

ஏத்துமாறு புரிந்தவர்; இனிய இசை கொண்டு பக்தர்கள் பாடியாடுமாறு புரிந்தவர்; கண்ணாகவும், கண்ணின் ஒளியாகவும் விளங்குபவர்; எனக்குத் தந்தை யானவர்; மண்ணுலகத்தினர் வலம் கொண்டு ஏத்தும் மாண்பினர்; அவர் மாமறைக் காடரே.

329. அங்கையுள் அனலும் வைத்தார்
அறுவகைச் சமயம் வைத்தார்
தங்கையில் வீணை வைத்தார்
தம்மடி பரவ வைத்தார்
திங்களைக் கங்கை யோடு
திகழ்தரு சடையுள் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார்
மாமறைக் காட னாரே.

தெளிவுரை: ஈசன், கையில் நெருப்பு ஏந்தியவர்; ஆறு சமயங்களைத் தோற்றுவித்தவர்; கையில் வீணை ஏந்தியவர்; மன்னுயிர்களையும் மற்றும் தேவாதி தேவர்களையும் தமது அடியைத் தொழுமாறு புரிபவர்; சந்திரனையும் கங்கையையும் சடை முடியின் மீது வைத்தவர்; உமாதேவியைப் பாகமாகக் கொண்டவர். அவர் மாமறைக் காடரே.

அறுவகைச் சமயம்; திருப்பாட்டு வ. எண் 136 காண்க.

330. கீதராய்க் கீதம் கேட்டுக்
கின்னரம் தன்னை வைத்தார்
வேதராய் வேதம் ஓதி
விளங்கிய சோதி வைத்தார்
ஏதராய் நட்டம் ஆடி
இட்டமாய்க் கங்கையோடு
மாதையோர் பாகம் வைத்தார்
மாமறைக் காட னாரே.

தெளிவுரை: ஈசன், இசைப் பாடல்களில் விருப்பம் உடையவராய்க் கின்னரங்களைத் தோற்றுவித்தவர்; வேதமாகவும் வேதம் ஓதும் மாண்பினராகவும் சோதி யாகவும் திகழ இருப்பவர்; ஒரு காரண கர்த்தராய் நடனம் புரிந்தவர்; கங்கையை விருப்பத்துடன் சடை முடியில் வைத்தவர்; உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவர். அவர் மாமறைக் காடனாரே.

சிறப்புரை: ஈசன் கீதங்களில் விருப்பம் உடையவர் என்பது "கீதராய்க் கீதம் கேட்டுக் கின்னரம் தன்னை வைத்தார்" என ஓதப் பெற்றது. இதன் வழியில் அசுவதரர், கம்பதரர் ஆகிய இரு கந்தருவர்களைக் காதில் குழையாகக் கொண்டு விளங்குபவர் என்பது வரலாறு.

ஏது – காரணம்.

331. • கனத்தினார் வலியு டைய
கடிமதில் அரணம் மூன்றும்
சினத்தினுட் சினமாய் நின்று
தீயெழச் செற்றார் போலும்
தனத்தினைத் தவிர்ந்து நின்று
தம்மடி பரவு வார்க்கு
மனத்தினுள் மாசு தீர்ப்பார்
மாமறைக் காட னாரே.

தெளிவுரை: ஈசன், வலிமையும் பெரும் சிறப்பும் உடையவர்; வலிமையுடைய முப்புரங்களைத் தீக்கணை செலுத்தி எரித்துச் சாம்பலாக்கியவர்; தான் என்னும் அகந்தையைத் தவிர்த்து நின்று ஏத்தும் அடியவர்களுடைய மன மாசைத் தீர்த்தருள்பவர். அவர் மாமறைக் காடனாரே.

தனம் – அகந்தைத் தனம், தான் என்னும் செருக்கு.

332. தேசனைத் தேசன் றன்னைத்
தேவர்கள் போற்றி சைப்பார்
வாசனை செய்து நின்று
வைகலும் வணங்கு மின்கள்
காசினைக் கனலை என்றும்
கருத்தினில் வைத்த வர்க்கு
மாசினைத் தீர்ப்பர் போலும்
மாமறைக் காட னாரே.

தெளிவுரை: சிவபெருமான், ஒளி மயமானவர்; தேவர்களால் போற்றி செய்யப்படுபவர்; அப் பெருமானைத் தூப தீபங்களால் ஏத்தி வழிபடுவீராக; பொன் மயமாகவும் கனல் மயமாகவும் மேவும் அப்பெருமானைக் கருத்தில் பதிக்கும் அன்பர்களுடைய குற்றங்களைத் தீர்ப்பவர், அவர்; அவர் மாமறைக்காடரே.

சிறப்புரை: ஈசன், ஒளியாகித் தோன்றி இருந்த இடத்தில் நின்று ஈர்த்தலும், பொன்னாக (காசு - பொன்) மிளிர்ந்து, கவரும் அழகும், கனலாக இருந்து, எல்லாத் திசைகளிலும் வியாபித்து மன்னுயிர்கள்பால் அருள் உணர்வை இயங்கச் செய்தலும், ஆகிய முத்தன்மைகளை இத் திருப்பாட்டு ஓதுதல் ஆயிற்று.

333. பிணியுடை யாக்கை தன்னைப்
பிறப்பறுத்து உய்ய வேண்டில்
பணியுடைத் தொழில்கள் பூண்டு
பத்தர்கள் பற்றி னாலே
துணிவுடை அரக்கன் ஓடி
எடுத்தலும் தோகை அஞ்ச
மணிமுடிப் பத்து இறுத்தார்
மாமறைக் காட னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *இந்த யாக்கையானது நோய்த் தன்மை உடையது. வினையால் பிணிக்கப்பட்டது. இத்தகைய கட்டு விலகுமாறு, பிறப்பினை அறுத்து நீக்கி உய்ய வேண்டுமானால், ஈசனுக்குத் தொண்டு புரியும் பணிகளைப் பூண்டு, பக்தர்கள் பற்றி நிற்பார்களாக. அத்தகைய ஈசன் அரக்கனாகிய இராவணனுடைய முடியை நெரித்த வல்லமை உடையவர். அவர் மாமறைக்காடரே.*

சிறப்புரை: தொழில்கள் ஆற்றிப் பணி செய்தல் என்பது, ஈசனின் திருப்பணியைக் குறிப்பால் உணர்த்துதலாயிற்று. இது திருநாவுக்கரசு சுவாமிகள் உழவாரப் பணி ஆற்றிய தன்மையை உணர்த்துவதாம் என்று உரைத்தலும் சிறப்பாம்.

34. திருமறைக்காடு

தல விளக்கம்: *பதிகம் எண் 33 காண்க.*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

334. தேரையு மேல்க டாவித்
திண்ணமாத் தெழித்து நோக்கி
ஆரையு மேலு ணரா
ஆண்மையான் மிக்கான் றன்னைப்
பாரையும் விண்ணும் அஞ்சப்
பரந்த தோள் முடிய டர்த்துக்
காரிகை அஞ்சல் என்பார்
கலிமறைக் காட னாரே.

தெளிவுரை: தேரை வானில் செலுத்தி இராவணன், தனக்கு மேலாக யாரும் இல்லை என்று செருக்குற்று ஆணவத் தன்மையுடையவனாய் ஆரவாரிக்க, பூவுலகும் வானுலகும் அஞ்சுமாறு பரந்த வலிமையுடைய அவனுடைய தோளும் முடியும் அடர்த்து, உமாதேவியை அஞ்சற்க என்று உரைத்தவர் மறைக் காட்டில் விளங்கும் ஈசனே.

இத் திருப்பதிகம் இராவணனை அடர்த்த திறத்தைச் சுட்டுதலாம்.

335. முக்கிமுன் வெகுண்டு எடுத்த
முடியுடை யரக்கர் கோனை
நக்கிருந்து ஊன்றிச் சென்னி
நாள்மதி வைத்த எந்தை
அக்கரவுஆமை பூண்ட
அழக னார் கருத்தினாலே
தெக்குநீர்த் திரைகள் மோதும்
திருமறைக் காட னாரே.

தெளிவுரை: முயற்சி செய்து கயிலை மலையை எடுத்த இராவணனின் முடிகள் நெரியுமாறு ஊன்றிய ஈசன், சடை முடியில் சந்திரனைத் தரித்தவர்; எலும்பு, அரவம், ஆமை ஓடு ஆகியவற்றை மாலையாகக் கொண்ட அழகர்; அவர் கடலலை மோதும் திருமறைக்காட்டில் மேவும் பரமனே!

336. மிகப்பெருத்து உலாவ மிக்கான்
நக்கொரு தேர் கடாவி
அகப்படுத் தென்று தானும்
ஆண்மையான் மிக்க ரக்கன்
உகைத்தெடுத் தான்ம லையை
ஊன்றலும் அவனையாங்கே

நகைப் படுத் தருளினான் ஊர்
நான்மறைக் காடு தானே.

தெளிவுரை: தனக்கு இணை யாரும் இல்லை என இறுமாந்து இருந்து உலவிய இராவணன் தேரில் செல்லும் போது, கயிலை மலையை உந்தி எடுக்க, ஈசன் திருப்பாதத்தால் ஊன்றி, அவ்வரக்கனைப் பிறர் நகைக்குமாறு செய்தவர். அப்பெருமான், நான்கு வேதங்களின் சிறப்புடைய மறைக்காட்டில் மேவியவரே.

337. அந்தரத் தேர்க டாவி
யாரிவன் என்று சொல்லி
உந்தினான் மாமலையை
ஊன்றலும் ஒள்அ ரக்கன்
பந்தமாம் தலைகள் பத்தும்
வாய்கள்விட் டலறிவீழச்
சிந்தனை செய்து விட்டார்
திருமறைக் காட னாரே.

தெளிவுரை: வானத்தில் தேர் செலுத்திய இராவணன் கயிலை மலையைப் பெயர்த்து எடுக்க, அவனுடைய பத்துத் தலைகளும் வாய் விட்டு அலறி வீழுமாறு திருப்பாத விரலால் ஊன்றி அடர்த்தவர், திருமறைக் காட்டில் மேவும் பரமனே.

338. தடுக்கவும் தாங்க வொண்ணாத்
தன்வலி யுடைய னாகிக்
கடுக்கவோர் தேர்க டாவிக்
கையிரு பதுக ளாலும்
எடுப்பன்நான் என்ன பண்டம்
என்றெடுத் தானை ஏங்க

அடுக்கவே வல்லன் ஊராம்
அணிமறைக் காடு தானே.

தெளிவுரை: தனது வலிமையை எவராலும் தடுக்க முடியாதவனாய் விளங்கிய இராவணன், வானத்தில் தேரில் சென்ற போது, தனது இருபது கரங்களாலும் கயிலை மலையை எடுத்தனன். ஒரு பண்டத்தை எடுப்பது போன்று செயற்பட்ட அவ்வரக்கனைத் தனது திருப்பாத விரலால் அடர்த்து நலியச் செய்து விளங்கியவர், ஈசன். அவருடைய ஊர், அழகு மிளிரும் திருமறைக்காடே.

339. நாள்முடிக் கின்ற சீரான்
நடுங்கியே மீது போகான்
கோள்பிடித் தார்த்த கையான்
கொடியன் மா வலியன் என்று
நீள்முடிச் சடையர் சேரு
நீள்வரை எடுக்க லுற்றான்
தோள்முடி நெரிய வைத்தார்
தொல்மறைக் காட னாரே.

தெளிவுரை: இராவணனுக்கு அஞ்சி, சூரியன் இலங்கையின் மீது வெப்பம் காட்டாதவன். கிரகங் களை அடக்கி ஆள்பவன், இராவணன். அவன் கொடியவன். அவன் வலிமை உடையவன் தானே என்னும் சிந்தையால், நீண்ட சடை முடியுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கயிலாய மலையை எடுக்கலுற்றான். அத்தருணத்தில் அவனுடைய தோளும் முடியும் நெரியச் செய்தவர், ஈசன். அத்தகையவர் மறைக்காடரே.

340. பத்துவாய் இரட்டிக் கைகள்
உடையன் மா வலியன் என்று

பொத்திவாய் தீமை செய்த
பொருவலி அரக்கர் கோனைக்
கத்திவாய் கதற அன்று
கால்விரல் ஊன்றி யிட்டார்
முத்துவாய் திரைகள் மோதும்
முதுமறைக் காட னாரே.

தெளிவுரை: இராவணன், பத்து வாய் இருபது கை உடையவன்; பெரு வலிமையுடைவன் எனச் செருக் குற்றவன். அவனை, வாயால் கதறி அழுமாறு, திருப்பாத விரலால் ஊன்றியவர், ஈசன். அவர் முத்துப் போல் வெண்மையான கடல் அலைகள் மோதும் மறைக்காட்டில் மேவும் பரமனே.

341. பக்கமே விட்ட கையான்
பாங்கிலா மதிய னாகிப்
புக்கனன் மாமலைக் கீழ்ப்
போதுமாறு அறிய மாட்டான்
மிக்கமா மதிகள் கெட்டு
வீரமும் இழந்த வாறே
நக்கன பூதம் எல்லாம்
நான்மறைக் காட னாரே.

தெளிவுரை: இராவணன், பக்கங்களில் தொடர்ச்சி யாகக் கைகளை உடையவனாய், நன் மதியற்றவனாய்க் கயிலை மலையை எடுக்கப் புக, தான் மலைக்குள் புகுந்து அழுந்துவோம் என அறிகிலாது, மதி கெட்டு, வீரமும் இழந்தான். பூதகணங்கள் எல்லாம் அவ்வரக் கனை நகை செய்ய, ஈசன் விளங்கும் இடமாவது மறைக்காடே.

சிறப்புரை: இராவணனுடைய பத்துத் தலைகளும் அறிவிழந்த தன்மை, மதிகள் கெட்டு எனச் சுட்டப் பெறுவதாயிற்று.

342. நாணஞ்சு கையன் ஆகி
நன்முடி பத்தி னோடு
பாணஞ்சு முன் னிழந்து
பாங்கிலா மதியனாகி
நீணஞ்சு தானு ணரா
நின்றெடுத் தானை அன்று
ஏணஞ்சு கைகள் செய்தார்
எழில்மறைக் காட னாரே.

தெளிவுரை: இராவணன், தன் வலிமை இழந்து நாண் ஏற்றிப் போர் தொடுக்க அஞ்சும் தன்மையனாய் வீரம் கெட்டுப் பக்திப் பெருக்கு தோன்ற பண் இசைக்கும் பாங்குடன், நீண்டு அருளும் திருவைந்தெழுத்து ஓதுபவனாய் மேவ, அருள் புரிந்தவர் மறைக் காடனாரே.

343. கங்கைநீர் சடையுள் வைக்கக்
காண்டலும் மங்கை யூடத்
தென்கையான் தேர் கடாவிச்
சென்றெடுத் தான்ம லையை
முன்கைமா நரம்பு வெட்டி
முன்னிருக்கு இசைகள்பாட
அங்கைவாள் அருளி னானூர்
அணிமறைக் காடு தானே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், கங்காதேவியைச் சடையுள் வைத்த செயலைக் கண்டு உமாதேவி ஊடல் செய்தார். அத்தருணத்தில் இரா்வணன் கயிலையை எடுக்க அத் திருமலையைத் திருப்பாத விரலால் மலை அசையாது நிலைத்தது. உமையவளின் ஊடல் தீர்ந்தது. இராவணன் நரம்பினை எடுத்து இசை பாட, ஈசன்

வாளும் வாழ்நாளும் அளித்தருளினார். அப் பெரு மானுடைய ஊர் மறைக்காடு ஆகும்.

35. திருவிடைமருதூர்

தல விளக்கம்: *காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 30ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. மகாலிங்கத்தலம். இதனைப் பஞ்சலிங்கத் தலம் என்பர்.*

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 32 காண்க.

சுவாமி : *மகாலிங்கேஸ்வரர், மருதவனேஸ்வரர், மருதவாணர்*

அம்பிகை : *பிருகத் சுந்தர குஜாம்பிகை, பெருநல முலையம்மை*

தல மரம் : *மருது (அர்ஜுனம்)*

தீர்த்தம் : *காருண்ய அமிர்த தீர்த்தம் - காவிரி*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

344. காடுடைச் சுடலை நீற்றர்
கையில்வெண் டலையர் தையல்
பாடுடைப் பூதம் சூழப்
பரமனார் மருத வைப்பில்
தோடுடைக் கைதை யோடு
சூழ்கிடங் கதனைச் சூழ்ந்த
ஏடுடைக் கமல வேலி
இடை மருது இடங்கொண் டாரே.

தெளிவுரை: *ஈசன், மயானத்தில் திகழும் சுடலை நீற்றினைத் திருமேனியில் பூசுபவர்; கையில் கபாலம்*

ஏந்தியவர்; உமாதேவியார் அருகில் விளங்கப் பூதகணங்கள் சூழ விளங்கும் பரமர்; இதழ்களை உடைய தாழை விளங்கத் தாமரை மலர் சூழ மேவும் இடைமருதில் வீற்றிருப்பவர்.

ஏடு – பூ இதழ்.

345. முந்தையார் முந்தி யுள்ளார்
மூவர்க்கு முதல்வ ரானார்
சந்தியார் சந்தி யுள்ளார்
தவநெறி தரித்து நின்றார்
சிந்தையார் சிந்தை யுள்ளார்
சிவநெறி யனைத்தும் ஆனார்
எந்தையார் எம்பி ரானார்
இடைமருது இடங் கொண்டாரே.

தெளிவுரை: ஈசன், முன்னைப் பழம் பொருட்கும் பழம் பொருளாய் விளங்குபவர்; மும்மூர்த்திகளுக்கும் முதன்மையானவர்; சந்திக்கால வழிபாட்டிலும், தவநெறியிலும் மேவுபவர்; சிந்தையாகவும் சிந்திக்கும் பொருளாகவும் உள்ளவர்; சிவநெறி அனைத்தும் ஆகியவர்; எந்தை பிரானாய் விளங்குபவர்; அவர் இடை மருதில் விளங்கும் பெருமானே.

346. காருடைக் கொன்றை மாலை
கதிர்மணி அரவி னோடு
நீருடைச் சடையுள் வைத்த
நீதியார் நீதியாய
போருடை விடையொன் றேற
வல்லவர் பொன்னித் தென்பால்
ஏருடைக் கமலம் ஓங்கும்
இடைமருது இடங் கொண்டாரே.

தெளிவுரை: ஈசன், கார் காலத்தில் விளங்கும் கொன்றை மலர் மாலையும், ஒளி திகழும் மாணிக்கத்தையுடைய அரவத்தையும், கங்கையையும் சடைமுடியின் மீது கொண்டுள்ளவர்; நீதியுடையவர்; நீதியின்பாற்படும் இடப வாகனத்தில் ஏறி விளங்குபவர். காவிரியின் தென்பால் சிறப்புடைய தாமரை மலர் பெருகி ஓங்கும் இடை மருதில், அப்பெருமான் வீற்றிருப்பவரே.

347. விண்ணினார் விண்ணின் மிக்கார்
வேதங்கள் நான்கும் அங்கம்
பண்ணினார் பண்ணின் மிக்க
பாடலார் பாவம் தீர்க்கும்
கண்ணினார் கண்ணின் மிக்க
நுதலினார் காமற் காய்ந்த
எண்ணினார் எண்ணின் மிக்க
இடை மருது இடங்கொண் டாரே.

தெளிவுரை: ஈசன், விண்ணாகவும், அதனின் மிக்கவராகவும் விளங்குபவர்; நான்கு வேதங்களையும் அதன் அங்கங்களையும் விரித்தவர்; பண்ணில் அமையப் பெற்ற இசைப் பாடல்களைப் பாடும் பக்தர்களின் பாவத்தைத் தீர்க்கும் பொருளாகி, உடன் மேவி விளங்குபவர்; நெற்றியில் கண்ணுடையவர்; மன்மதனை எரித்தவர்; எண்ணத்தில் நிறைந்து மிகுந்து மேவும் இடை மருதில், அப்பெருமான் வீற்றிருப்பவரே.

348. வேதங்கள் நான்கும் கொண்டு
விண்ணவர் பரவி யேத்தப்
பூதங்கள் பாடி யாடல்
உடையவன் புனிதன் எந்தை
பாதங்கள் பரவி நின்ற
பத்தர்கள் தங்கள் மேலை

ஏதங்கள் தீர நின்றார்
இடைமருது இடங்கொண் டாரே.

தெளிவுரை: ஈசன், தேவர்களால் வேதங்களைக் கொண்டு பரவி ஏத்தப்படுபவர்; பூதங்கள் பாடிப் போற்ற ஆடல் புரிபவர்; புனிதராகத் திகழ்பவர்; எந்தையாகிய திருப்பாதங்களைப் பரவி ஏத்தி நிற்கும் பக்தர்கள், தங்கள்மேல் பற்றியுள்ள வினைகள் யாவும் தீர அருள் புரிபவர்; அத்தகு அருள் தன்மையுடைய அவர், இடைமருதில் வீற்றிருப்பவரே.

ஏதங்கள் – சஞ்சித, பிராரத்த, ஆகாமிய வினைச் சுமைகள்.

349. பொறியரவு அரையில் ஆர்த்துப்
பூதங்கள் பலவும் சூழ
முறிதரு வன்னி கொன்றை
முதிர் சடை மூழ்க வைத்து
மறிதரு கங்கை தங்க
வைத்தவர் எத்தி சையும்
எறிதரு புனல்கொள் வேலி
இடைமருது இடங்கொண் டாரே.

தெளிவுரை: ஈசன், அரவத்தை அரையில் அசைத்துக் கட்டியவர்; பூதகணங்கள் சூழ விளங்குபவர்; வன்னிப் பத்திரம், கொன்றை மலர் ஆகியவற்றை முற்றிய சடை முடியில் மூழ்கவைத்துக் கங்கையைத் தங்க வைத்தவர். அவர், எத் திசையும் நீர் வளத்தால் சூழப் பெற்ற இடை மருதில் இடம் கொண்டவரே.

350. படரொளி சடையின் உள்ளால்
பாய்புனல் அரவி னோடு
சுடரொளி மதியம் வைத்துத்
தூவொளி தோன்றும் எந்தை

அடரொளி விடையொன் றேற
வல்லவர் அன்பர் தங்கள்
இடர்அவை கெடவு நின்றார்
இடைமருது இடங்கொண் டாரே.

தெளிவுரை: *ஈசன், படர்ந்து ஒளி திகழ மேவும் சடை முடியின் உள்ளே, பாய்கின்ற கங்கையைத் தோய வைத்தவர்; அரவத்துடன், பிறைச் சந்திரனையும் திகழ வைத்தவர்; தூய ஒளியாய் விளங்குபவர்; இடப வாகனத்தில் ஏறித் திகழ்பவர்; அன்பர்களுடைய இடர்கள் யாவையும் தீர்த்து அருள் புரிபவர். அவர் இடை மருதில் இடம் கொண்டு மேவுபவரே.*

351. கமழ்தரு சடையின் உள்ளாற்
கடும்புனல் அரவி னோடு
தவழ்தரு மதியம் வைத்துத்
தன்னடி பலரும் ஏத்த
மழுவது வலங்கை யேந்தி
மாதொரு பாக மாகி
எழில்தரு பொழில்கள் சூழ்ந்த
இடைமருது இடங்கொண் டாரே.

தெளிவுரை: *ஈசன், நறுமணம் கமழும் சடை முடியுள் கங்கையைத் தரித்தவர்; அரவும் சந்திரனும் சூடியவர்; தனது திருவடியைப் பலரும் ஏத்துமாறு மழுப் படையை வலக்கையில் ஏந்தியவர்; உமாதேவியை ஒரு பாகமாக உடையவர். அப்பெருமான், எழில் தரும் பொழில்கள் சூழ்ந்த இடை மருதினை, இடமாகக் கொண்டவரே ஆவார்.*

352. பொன்திகழ் கொன்றை மாலை
புதுப்புனல் வன்னி மத்தம்
மின்திகழ் சடையில் வைத்து
மேதகத் தோன்று கின்ற

அன்றவர் அளக்க லாகா
அனல்எரி யாகி நீண்டார்
இன்றுடன் உலகம் ஏத்த
இடைமருது இடங் கொண்டார்.

தெளிவுரை: ஈசன், பொன் போன்று திகழும் பிரணவ புஷ்பமாகிய கொன்றை மாலையும், தூய நீராகிய கங்கையும், மற்றும் வன்னிப் பத்திரமும் ஊமத்தம் பூவும் மின்னலைப் போன்று திகழும் சடை முடியில் வைத்து, மேன்மைத் தகவுடையவராய் விளங்குபவர்; திருமாலும் பிரமனும் காணாதவாறு சோதி வடிவாக நீண்டு விளங்கியவர். அப்பெருமான், உலகம் யாவும் ஏத்த, இடைமருதில் இடம் கொண்டவரே.

353. மலையுடன் விரவி நின்று
மதியிலா அரக்க னூக்கத்
தலையுடல் அடர்த்து மீண்டே
தலைவனாய் அருள்கள் நல்கிச்
சிலையுடை மலையை வாங்கித்
திரிபுரம் மூன்றும் எய்தார்
இலையுடைக் கமல வேலி
இடைமருது இடங்கொண் டாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கயிலை மலையுடன் கலந்து நின்ற இராவணன், மதியில்லாதவனாய்த் தூக்க, அவனுடைய தலையும் உடலும் அடர்த்தவர், ஈசன். தலைவராய் மேவும் அவர், பின்னர் அவ்வரக்கனுக்கு அருள் புரிந்தனர். அப்பெருமான் மேருமலையை வில்லாகக் கொண்டு பகைத்துப் பொருத, முப்புர அசுரர்களின் கோட்டைகளை எரித்தவர். அத்தகைய

ஈசன், தாமரை மலர்கள் நாற்புறமும் சூழ்ந்து மணங் கமழும் இடைமருதில் இடம் கொண்டவரே ஆவார்.

36. திருப்பழனம்

தல விளக்கம்: *திருப்பதிகம் எண் 12 காண்க.*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

354. ஆடினார் ஒருவர் போலும்
அலர்கமழ் குழலினாளைக்
கூடினார் ஒருவர் போலும்
குளிர்புனல் வளைந்த திங்கள்
சூடினார் ஒருவர் போலும்
தூயநன் மறைகள் நான்கும்
பாடினார் ஒருவர் போலும்
பழனத்தெம் பரமனாரே.

தெளிவுரை: *ஈசன், திருநடம் புரிந்த பெருமான்; மலர் போன்ற நறுமணம் கமழும் கூந்தலையுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு மேவும் ஒப்பற்ற ஒருவர்; குளிர்ந்த கங்கையையும், வளைந்த பிறைச் சந்திரனையும் சடையின் மீது சூடியவர்; தூய நெறியை நவிலும் நன்மறைகள் நான்கினையும் விரித்து ஓதியவர். அவர், பழனத்தில் மேவும் எம் பரமனாரே.*

355. போவதோர் நெறியும் ஆனார்
புரிசடைப் புனிதனார் நான்
வேவதோர் வினையிற் பட்டு
வெம்மைதான் விடவுங் கில்லேன்
கூவல்தான் அவர்கள் கேளார்
குணமிலா ஐவர் செய்யும்

பாவமே தீர நின்றார்
பழனத்து எம் பரமனாரே.

தெளிவுரை: ஈசன், நற்கதிக்கு அழைத்துச் செல்லும் நெறியாக விளங்குபவர்; அந்நெறியில் சேர்க்கும் புனிதராய் விளங்கும் புரிசடைநாதர்; நான், துன்பத்தால் நைந்து வாடுகின்ற வினையுடையவனானேன்; துன்பத்தை விடாதவனானேன்; கூவிச் சொன்னாலும், ஐம்புலன்கள் என் சொல்லைக் கேளாதவை ஆயின. நற்குணங்கள் மேவாத இவ் ஐவர் செய்யும் பாவங்கள் யாவும் தீர வேண்டும் என்று உறுதி பூண்டு வீற்றிருப்பவர், பழனத்தில் திகழும் எம் பரமனாரே.

356. கண்டராய் முண்ட ராகிக்
கையில்ஓர் கபாலம் ஏந்தித்
தொண்டர்கள் பாடி யாடித்
தொழுகழல் பரம னார்தாம்
விண்டவர் புரங்கள் எய்த
வேதியர் வேத நாவர்
பண்டைஎன் வினைகள் தீர்ப்பார்
பழனத்து எம்பரம னாரே.

தெளிவுரை: ஈசன், நீல கண்டராய் விளங்குபவர்; ஒளிதிகழ் கண்ணுடைய அழகிய நுதலை (நெற்றி) உடையவர்; கையில் கபாலம் ஏந்தியவர்; தொண்டர்கள் பக்தியுடன் பாடியும் ஆடியும் ஏத்திப் போற்றப்படும் திருக்கழலை உடையவர்; பரம் பொருளாகியவர்; பகைவர்களின் மும்மதில்களை எரித்தவர்; வேதநாயகர்; வேதம் ஓதி விரிப்பவர்; என்னுடைய பண்டைய வினைகளாகிய சஞ்சிதம்,

பிராரத்தம் ஆகிய வினைகளைத் தீர்ப்பவர். அவர் பழனத்தில் வீற்றிருக்கும் எம் பரமனாரே.

கண்டர் – நீலகண்டர்; முண்டம் – நெற்றி.

357. நீரவன் தீயினோடு
நிழலவன் எழில தாய
பாரவன் விண்ணின் மிக்க
பரமவன் பரம யோகி
ஆரவன் அண்ட மிக்க
திசையி னோடு ஒளிக ளாகிப்
பாரகத்து அமிழ்தம் ஆனார்
பழனத்தெம் பரம னாரே.

தெளிவுரை: *ஈசன் – நீரும், நெருப்பும், ஒளியும், எழில் மிக்க பூவுலகமும் ஆகியவர்; விண்ணுலகத்தினும் மிகுந்த பரம் ஆகவும், பரமயோகியாகவும், மற்றும் எல்லாமாகவும், அண்டங்களாகவும், திசைகளாகவும் விளங்குபவர்; சூரியன், சந்திரன், விண்மீன்கள் என எல்லா ஒளிகளும் ஆகியவர். அத்தகைய பெருமான், இம் மண்ணுலகத்தின் அமுதமாகியவர். அவர், பழனத்தில் வீற்றிருக்கும் எம் பரமனாரே.*

358. ஊழியார் ஊழி தோறும்
உலகினுக்கு ஒருவர் ஆகிப்
பாழியார் பாவம் தீர்க்கும்
பராபரர் பரம தாய
ஆழியான் அன்னத் தானும்
அன்றவர்க்கு அளப்பரிய
பாழியார் பரவி யேத்தும்
பழநத்துஎம் பரம னாரே.

தெளிவுரை: *ஈசன், ஊழியின் முதல்வராய் விளங்கு பவர்; ஊழிகள்தோறும் பாவம் புரியும் மன்னுயிர்*

களின் பாவத்தைத் தீர்க்கும் பராபரர்; பரத்துவம் உடைய சக்கரப் படையுடைய திருமாலும், அன்னமாகிய பிரமனும், அளப்பரியவாறு ஓங்கி உயர்ந்த பெருமை உடையவர். அடியவர்கள் பரவி ஏத்தும் பழனத்தில் மேவும் அவர், எம் பரமனாரே.

பாழி – பெருமை, வலிமை, பாழ்த்தன்மை.

359. ஆலின்கீழ் அறங்கள் எல்லாம்
அன்றவர்க்கு அருளிச் செய்து
நூலின்கீழ் அவர்கட் கெல்லா
நுண்பொருள் ஆகி நின்று
காலின்கீழ் காலன் றன்னைக்
கடுகத்தான் பாய்ந்து பின்னும்
பாலின்கீழ் நெய்யும் ஆனார்
பழனத்து எம்பரம னாரே.

தெளிவுரை: ஈசன், கல்லால மரத்தின்கீழ் அமர்ந்து சனகாதி முனிவர்கள் முதலானோர்க்கு உபதேசித்தவர்; நூற்களைக் கண்டு அறிபவர்க்கு நுண்பொருளாகியவர்; காலனைக் காலால் உதைத்து அழித்தவர். அத்தகைய பெருமான் பாலில் நெய் போல் மறைய நின்றுள்ளவர். அவர் பழனத்தில் மேவும் எம் பரமனாரே.

ஈசனின் உபதேசம் பெற்றவர்கள்: அகத்தியர், புலத்தியர், சககாதியர் நந்திதேவர், சாமுசித்தர்.

360. ஆதித்தன் அங்கி சோமன்
அயனொடு மால் புதனும்
போதித்து நின்றுலகில்
போற்றிசைத் தாரி வர்கள்
சோதித்தார் ஏழுலகும்
சோதியுள் சோதி யாகிப்

பாதிப்பெண் உருவம் ஆனார்
பழனத்து எம்பரம னாரே.

தெளிவுரை: சூரியன், அக்கினி, சந்திரன், பிரமன், திருமால், புதன் ஆகிய இவர்கள் ஈசனைத் தோத்திரம் செய்தவர்களாகி உலகில் போதனை செய்தவர்கள். இவர்கள் ஈசனைக் காண வேண்டும் என்று ஏழுலகத்திலும் தேடினர். ஆயினும் அப்பெருமான், காண்பதற்கு அரியவராகிச் சோதியுள் சோதியாக விளங்கியவர். அவர் உமாதேவியைப் பாகம் கொண்டு, அம்மையப்பராய்க் காட்சியுறுபவர். அவர், பழனத்தில் மேவும் எம் பரமனாரே.

361. கால்தனால் காலற் காய்ந்து
காருரி போர்த்த ஈசர்
தோற்றனார் கடலுள் நஞ்சைத்
தோடுடைக் காதர் சோதி
ஏற்றினார் இளவெண் திங்கள்
இரும்பொழில் சூழ்ந்த காயம்
பாற்றினார் வினைகள் எல்லாம்
பழனத்து எம்பரம னாரே.

தெளிவுரை: ஈசன், காலால் காலனை உதைத்து அழித்தவர்; கரிய யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர்; கடலில் தோன்றிய நஞ்சுக்கும் காரணமாகி, அதனை உட்கொண்டு தேவர்களையும் காத்தவர்; தோடுடைய செவியர்; சோதியாய் மேவும் வெள்விடையை வாகனமாக உடையவர்; இளமையான பிறைச் சந்திரனைச் சூடி, அதனை வளருமாறு செய்து காத்தவர்; என் வினைகள் யாவையும் அழித்தவர். அவர் பழனத்தில் மேவும், எம் பரமனாரே.

362. கண்ணனும் பிரம னோடு
காண்கில ராகி வந்தே
எண்ணியும் துதித்தும் ஏத்த
எரியுரு வாகி நின்று
வண்ணநன் மலர்கள் தூவி
வாழ்த்துவார் வாழ்த்தி யேத்தப்
பண்ணுளாம் பாடல் கேட்டார்
பழனத்துளம் பரம னாரே.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் காண வேண்டும் என்று முனைந்தும் காண்கிலராகி, எண்ணியும் துதித்தும் ஏத்தப் பேரழல் ஆகி விளங்கும் பெருமான், ஈசன். அப்பெருமான் வண்ணம் திகழும் நல் மலர்களால் தூவி வாழ்த்தப்படுபவர்; புகழ்ப் பாடல் களால் இனிது ஏத்தப்படுபவர்; அவர், பழனத்தில் மேவும் எம் பரமனாரே.

363. குடையுடை அரக்கன் சென்று
குளிர்கயி லாய வெற்பின்
இடைமிட வரலை அஞ்ச
எடுத்தலும் இறைவன் நோக்கி
விடையுடை விகிர்தன் தானும்
விரலினால் ஊன்றி மீண்டும்
படை கொடை அடிகள் போலும்
பழனத்து எம் பரம னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இராவணன், கயிலாய மலையை எடுக்க உமாதேவி மலை அசைவைக் கண்டு அஞ்ச, இறைவன் திருப்பாத விரலால் ஊன்றி, அவனை அடர்த்தார். அவ் அரக்கன் ஏத்திப் பாட, வீரவாள் அருளிச் செய்தவர், அப்பெருமான். அவர், பழனத்தில் மேவும் எம் பரமனே.

சிறப்புரை: *கயிலாய மலையின் தன்மையானது, குளிர் கயிலாயம் என ஏத்தப் பெற்றது. இது, இயற்கையின் வண்ணத்தையும், ஈசனின் பேரின்பக் குளிர்ச்சியையும் ஒருசேரச் சுட்டுதலாயிற்று.*

மடவரல் – உமாதேவியார்.

37. திருநெய்த்தானம்

தல விளக்கம்: *காவிரி வடகரைத் தலம் 63இல், இது 52ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. திருவையாற்றை மைய மாகக் கொண்ட சப்த ஸ்தானங்களுள் ஒன்று. தில்லை ஸ்தானம் என ஊர்ப்பெயர் வழங்கப்படுகிறது.*

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 15 காண்க.

சுவாமி : *நெய்யாடி அப்பர்*

அம்பிகை : *பாலாம்பிகை.*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

364. காலனை வீழச் செற்ற
கழலடி இரண்டும் வந்தென்
மேலவா இருக்கப் பெற்றேன்
மேதகத் தோன்று கின்ற
கோலநெய்த் தானம் என்னும்
குளிர்பொழிற் கோயில் மேய
நீலம்வைத் தனைய கண்ட
நினைக்குமா நினைக்கின் றேனே.

தெளிவுரை: சிவபெருமான், காலனை அழியுமாறு செற்ற திருக்கழல் உடையவர். அவர் அத்திருப் பாதங்கள் இரண்டினையும் என் தலைமீது இருக்கப் பெற்றுப் புனிதம் கொண்டேன். மேன்மைத் தகவு உடைய அழகிய நெய்த் தானத்தில், குளிர்ந்த பொழில் களையுடைய கோயிலில், வீற்றிருக்கும் நீல கண்டராகிய அப்பெருமானைத் தற்போதம் அற்ற நிலையில், நினைத்து ஏத்துகின்றேன்.

சிறப்புரை: இத் திருப்பாட்டானது, திருநாவுக்கரசரின் முடியின் மீது ஈசன், திருவடியைச் சூட்டி அருளிய சிறப்பினை, "கழலடி இரண்டும் வந்தென் மேலவா இருக்கப் பெற்றேன்" என ஓதப் பெறுதலாயிற்று. இதனைச் சேக்கிழார் பெருமான், "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்று அவர் தம் சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்" (திருநாவுக்கரசு நாயனார் புராணம்; பாடல் 195) என ஓதியருளியமையும் காண்க. இத்தன்மையில், "இணையார் திருவடி என் தலை மேல் வைத்தலுமே துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்" என்னும் திருவாசக வாக்கும் காண்க.

365. காமனை அன்று கண்ணாற்
கனலெரி யாக நோக்கித்
தூமமும் தீபம் காட்டித்
தொழுமவர்க்கு அருள்கள் செய்து
சேமநெய்த் தானம் என்னும்
செறிபொழிற் கோயில் மேய
வாமனை நினைந்த நெஞ்சம்
வாழ்வுற நினைந்த வாறே.

தெளிவுரை: *ஈசன், மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்தவர்; தூப தீபம் காட்டி ஏத்தித் தொழுகின்ற அடியவர்களுக்கு அருள் புரிபவர்; மன்னுயிர்க்குப் பாதுகாப்பாக விளங்கும் பொழில் சூழ்ந்த நெய்த்தானம் என்னும் கோயிலில் வீற்றிருப்பவர். அப் பெருமானை நினைத்து ஏத்துகின்ற நெஞ்சமானது, வாழ்க்கையில் மேன்மையுற நினைக்கும் பெருமைக்கு உரியதாகும்.*

சிறப்புரை: இம்மையில், துன்பம் அற்ற நல்வாழ்வும், மறுமையில் முத்திப் பேறு அடைதலும், வாழ்கையின் பயனாகும் என்பதனை, "வாழ்வுற நினைந்தவாறு" எனச் சுட்டப் பெற்றது.

வாமன் – ஈசன்; சேமம் – பாதுகாப்பு.

366. பிறைதரு சடையின் மேலே
பெய்புனற் கங்கை தன்னை
உறைதர வைத்த எங்கள்
உத்தமன் ஊழி யாய
நிறைதரு பொழில்கள் சூழ
நின்றநெய்த் தானம் என்று
குறைதரும் அடிய வர்க்குக்
குழகனைக் கூட லாமே.

தெளிவுரை: *ஈசன், பிறைச் சந்திரனைச் சடை முடியில் சூடியவர்; கங்கையை அச் சடையின்மீது உறையுமாறு வைத்தவர்; பொழில் சூழ்ந்த நெய்த்தானத்தில் வீற்றிருப்பவர்; குறைவற்ற தன்மையில் அடியவர் களுக்கு அருள் புரிபவர். அப் பெருமானை நாடி ஏத்து வீராக.*

367. வடிதரு மழுவொன்று ஏந்தி
வார்சடை மதியம் வைத்துப்

பொடிதரு மேனி மேலே
புரிதரு நூலர் போலும்
நெடிதரு பொழில்கள் சூழ
நின்றநெய்த் தானமேவி
அடிதரு கழல்கள் ஆர்ப்ப
ஆடும்எம் அண்ண லாரே.

தெளிவுரை: ஈசன், வடித்துக் கூராக்கிய மழுப் படையுடையவர்; நீண்ட சடையின் மீது பிறைச் சந்திரனைச் சூடியவர்; திருவெண்ணீறு தரித்த திருமேனியில் முப்புரி நூல் திகழ அணிந்தவர்; நெடிய பொழில்கள் சூழும் நெய்த்தானத்தில் மேவி விளங்கு பவர். அப்பெருமான் திருப்பாதங்களில் கழல்கள் ஆர்க்க, நடனம் புரியும் அண்ணலாரே.

368. காடிட மாக நின்று
கனலெரி கையில் ஏந்திப்
பாடிய பூதம் சூழப்
பண்ணுடன் பலவும் சொல்லி
ஆடிய கழலர் சீரார்
அந்தண் நெய்த் தானம் என்றும்
கூடிய குழக னாரைக்
கூடுமாறு அறிகி லேனே.

தெளிவுரை: ஈசன், சுடுகாட்டை இடமாகக் கொண்டு எரிகின்ற நெருப்பைக் கையில் ஏந்திப் பூத கணங்கள் சூழ நின்று பண்ணுடன் இசைத்துப் பாடத் திருக்கூத்து புரிபவர். திருநடனம் புரியும் அப்பெருமான், அழகிய குளிர்ச்சி மிக்க நெய்த்தானத்தில் எக்காலத்திலும் வீற்றிருப்பவர்.அவரைச் சேர்ந்து விளங்கி மகிழ்ந் திருக்கும் நெறியை அறிகிலேனே.

369. வானவர் வணங்கி யேத்தி
வைகலும் மலர்கள் தூவத்

தானவர்க்கு அருள்கள் செய்யும்
சங்கரன் செங்கண் ஏற்றன்
தேனமர் பொழில்கள் சூழத்
திகழு நெய்த் தான மேய
கூனிள மதியி னானைக்
கூடுமாறு அறிகி லேனே.

தெளிவுரை: ஈசன், தேவர்களால் வணங்கப் பெற்று மலர் தூவி, நாள்தோறும் ஏத்தப்படுபவர்; அவர் களுக்கு அருள் புரிபவர்; இடப வாகனத்தை யுடையவர்; தேன் மணக்கும் பொழில் சூழ்ந்த நெய்த் தானத்தில் மேயவர்; வளைந்த பிறைச் சந்திரனைச் சூடியவர். அப்பெருமானைச் சார்ந்து மேவிக் கூடுகின்ற நெறியை அறிகிலேனே.

370. கால்அதிர் கழல்கள் ஆர்ப்பக்
கனலெரி கையில் வீசி
ஞாலமும் குழிய நின்று
நட்டமது ஆடு கின்ற
மேலவர் முகடு தோய
விரிசடை திசைகள் பாய
மாலொரு பாக மாக
மகிழ்ந்த நெய்த்தான னாரே.

தெளிவுரை: ஈசன், திருக்காலில் அதிர்ந்து ஒலிக்கும் கழலை அணிந்தவராய், எரிகின்ற நெருப்பினைக் கையில் ஏந்தி. வீசி நின்று நடனம் புரிபவர். அவர் ஆடுகின்ற போது, மண்ணுலகம் நனி விளங்கி மேவ, மேலுலகத்தின் முகடானது தோய, விரிந்த சடைகள் பரவி விளங்கத் திருமால் ஒரு பாகமாக இருந்து மகிழுமாறு திகழ்பவர். அப்பெருமான் நெய்த் தானத்தில் வீற்றிருப்பவரே.

371. பந்தித்த சடையின் மேலே
பாய்புன லதனை வைத்து
அந்திப் போதுஅனலும் ஆடி
அடிகளை ஆறு புக்கார்
வந்திப்பார் வணங்கி நின்று
வாழ்த்துவார் வாயின் உள்ளார்
சிந்திப்பார் சிந்தை யுள்ளார்
திருந்து நெய்த்தான னாரே.

தெளிவுரை: ஈசன், சேர்த்துக் கட்டிய சடை முடியின் மீது, கங்கையை வைத்தவர்; மாலை வேளையில், அனல் ஏந்தி ஆடுபவர். அவர் வந்துதித்து வணங்கவும், வாழ்த்திப் போற்றவும் சிந்தித்துத் தியானம் செய்யவும் அருள் புரிபவர். அப்பெருமான், மன்னுயிர்களைத் தீநெறியிற் செல்லாது, திருந்திய நன்னெறியில் மேவு மாறு புரியும் நெய்த்தானத்தில் வீற்றிருப்பவரே.

சிறப்புரை: இத் திருப்பாட்டானது, மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் மேவும் அடியவர்கள் பெறும் சிறப்பினை ஏத்துதலாயிற்று. மேலும், "வந்திப்பார் வணங்கி நின்று வாழ்த்துவார் வாயின் உள்ளார் சிந்திப்பார் சிந்தையுள்ளார்" என உணர்த்தப் பெற்றது.

372. சோதியாய்ச் சுடரும் ஆனார்
சுண்ணவெண் சாந்து பூசி
ஓதிவாய் உலகம் ஏத்த
உகந்துதாம் அருள்கள் செய்வார்
ஆதியாய் அந்தம் ஆனார்
யாவரும் இறைஞ்சி யேத்த
நீதியாய் நியமம் ஆகி
நின்றநெய்த் தான னாரே.

தெளிவுரை: ஈசன், சோதியாய் விளங்குபவர்; சுடராய் நின்று ஒளிர்பவர்; திருவெண்ணீற்றைக் குழையப்

பூசுபவர்; கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தவர் ஏத்த, உகந்து அருள் செய்பவர்; ஆதியும் அந்தமும் ஆனவர்; எல்லாரும் இறைஞ்சி ஏத்த, நீதியும் நியமமும் ஆகி நின்று விளங்குபவர். அப்பெருமான், நெய்த்தானத்தில் வீற்றிருப்பவரே.

ஓதிவாய் – கடல் சூழ்ந்த.

373. இலையுடைப் படைகை யேந்தும்
இலங்கையர் மன்னன் றன்னைத்
தலையுடல் அடர்த்து மீண்டே
தான்அவற்கு அருள்கள் செய்து
சிலையுடன் கணையைச் சேர்த்துத்
திரிபுரம் எரியச் செற்ற
நிலையுடை அடிகள் போலும்
நின்றநெய்த் தானனாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வேல் என்னும் படையை ஏந்திய இராவணனுடைய தலையும் உடலும் அடர்த்து, மீண்டும் அவனுக்கு அருள்களைச் செய்தவர், ஈசன். அவர், மேரு மலையை வில்லாகக் கொண்டு கணை தொடுத்துத் திரிபுரங்கள் எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர். அப்பெருமான், எக்காலத்திலும் நிலைத்து மேவி அருள் புரியும் பேறாளர். அவர் நெய்த்தானத்தில் வீற்றிருப்பவரே.

இலையுடைப்படை – வேற்படை.

38. திருவையாறு

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 3 காண்க.

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

374. கங்கையைச் சடையுள் வைத்தார்
கதிர்பொறி அரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார்
திசைதிசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார்
மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார்
ஐயன் ஐயாற னாரே.

தெளிவுரை: ஈசன், கங்கை, அரவம், சந்திரன் ஆகிய வற்றைச் சடை முடியில் திகழுமாறு வைத்தவர்; உலகத்தில், எல்லாத் திசைகளிலும் வாழ்பவர்கள், தன்னை ஏத்திப் போற்றி வணங்குமாறு செய்தவர்; உமாதேவியை ஒருபாகத்தில் வைத்து அம்மையப்பராய் மேவுபவர்; மான் கன்றும் மழுவும் கையில் ஏந்தியவர்; அழகிய உள்ளங்கையில் நெருப்பேந்தியவர். அப்பெருமான் என் ஐயாற்றில் மேவும் தலைவரே.

375. பொடிதனைப் பூச வைத்தார்
பொங்குவெண் ணூலும் வைத்தார்
கடியதோர் நாகம் வைத்தார்
காலனைக் கக்க வைத்தார்
வடிவுடை மங்கை தன்னை
மார்பி லோர் பாகம் வைத்தார்
அடியிணை தொழவும் வைத்தார்
ஐயன் ஐயாற னாரே.

தெளிவுரை: ஈசன், திருநீறு பூசியவர்; முப்புரி நூலணிந்தவர்; கடுமையான விடம் கொண்ட நாகத்தைத் தரித்தவர்; காலனின் உயிரைப் போக்கி

யவர்; உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டு விளங்குபவர்; தமது திருவடியை அனைவரும் தொழுது ஏத்தி, நற்கதி பெறுமாறு செய்பவர், அவர், ஐயாற்றில் மேவும் தலைவரே.

ஐயன் – தலைவர்.

376. உடைதரு கீளும் வைத்தார்
உலகங்கள் அனைத்தும் வைத்தார்
படைதரு மழுவும் வைத்தார்
பாய்புலித் தோலும் வைத்தார்
விடைதரு கொடியும் வைத்தார்
வெண்புரி நூலும் வைத்தார்
அடைதர அருளும் வைத்தார்
ஐயன்ஐ யாற னாரே.

தெளிவுரை: ஈசன், கீழ் உடையாகக் கோவணத்தை அணிந்தவர்; எல்லா உலகங்களையும் படைத்தவர்; மழுப்படையை ஏந்தியுள்ளவர்; புலித்தோலை உடுத்தியவர்; இடபக் கொடி யுடையவர்; வெண்மை யான முப்புரிநூல் திருமார்பில் திகழுமாறு அணிந்துள்ளவர்; உலகுயிர்கள் ஏத்தி வணங்கித் திருவடிக்கண் சரணம் அடையுமாறு அருள் புரிபவர். அவர், ஐயாற்றில் மேவும் தலைவரே.

சிறப்புரை: சிவபெருமான், கிழிந்த ஆடையைக் கோவணமாக அணிந்திருக்கும் பெற்றிமையானது "உடைதரு கீளும் வைத்தார்" என உணர்த்தப் பெற்றது. இத் தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "கீளார் கோவணமும் திருநீறு மெய்பூசி உன்றன் தாளே வந்தடைந்தேன் தலைவா என்னை ஏற்று கொள் நீ" (திருமழபாடி திருப்பதிகம் 2) என, அருளிச் செய்த வாறும் காண்க.

தன்னைச் சரணம் அடைந்தவர்களுக்கு அருளும் ஈசனின் கருணையானது, "அடைதர அருளும் வைத்தார்" என ஏத்தப் பெற்றது.

377. தொண்டர்கள் தொழவும் வைத்தார்
தூமதி சடையில் வைத்தார்
இண்டையைத் திகழ வைத்தார்
எமக்கென்றும் இன்பம் வைத்தார்
வண்டுசேர் குழலி னாளை
மருவி யோர் பாகம் வைத்தார்
அண்டவா னவர்கள் ஏத்தும்
ஐயன்ஐ யாற னாரே.

தெளிவுரை: ஈசன், தொண்டு செய்யும் அன்பர்களால் தொழுது ஏத்தப்படுபவர்; தூய சந்திரனைச் சடை முடியில் வைத்தவர்; இசையும் பூவும் சேர்த்துத் தொடுக்கப் பெற்று மேவும் இண்டை மாலையைத் தரித்திருப்பவர்; எமக்குப் பேரின்பம் திகழுமாறு புரிய வைத்தவர்; உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டு விளங்குபவர்; அண்டத்தில் உள்ள வானவர்கள் ஏத்தும் தலைவர்; அவர் ஐயாற்றில் வீற்றிருப்பவரே.

சிறப்புரை: ஈசன், பேரின்பத்தை அடியவர்களுக்கு எல்லாக் காலத்திலும் அருள் செய்பவர் என்னும் தன்மை, "எமக்கு என்றும் இன்பம் வைத்தார்" என ஓதப் பெற்றது. இது மன்னுயிர்களுக்கு ஈசன் புரியும் அருளாதலும், அத்தகைய இன்பத்தை உயிரானது தமக்குத் தாமே பெற்றுக் கொள்ள இயலாமையும் உணர்த்துதலாயிற்று. இத் தன்மையில் ஈசனே இன்பத்தை அருள் செய்பவர் என்பதனை, "இன்பம் தருவன், குயிலே! ஏழுலகும் முழுது ஆளி! அன்பன் அமுது அளித்து ஊறும் ஆனந்தன்" (குயிற்பத்து 6)

எனவும், "உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மாய தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே! சிவபெருமானே!" (பிடித்த பத்து 9) எனவும், மாணிக்கவாசகர் அருளிச் செய்தவாறும் காண்க.

378. வானவர் வணங்க வைத்தார்
வல்வினை மாய வைத்தார்
கானிடை நடமும் வைத்தார்
காமனைக் கனலா வைத்தார்
ஆனிடை ஐந்தும் வைத்தார்
ஆட்டுவார்க்கு அருளும் வைத்தார்
ஆனையின் உரிவை வைத்தார்
ஐயன்ஐ யாற னாரே.

தெளிவுரை: ஈசன், தேவர்களால் ஏத்தப்படுபவர்; கொடிய வினைகளைத் தீர்ப்பவர்; மயானத்தில் திருக்கூத்து புரிபவர்; மன்மதனை எரித்துச் சாம்பலாக்கியவர்; பசுவினிடம் உயர்ந்ததாகிய பஞ்சகௌவியத்தை விளங்கி மேவுமாறு படைத்தவர்; அத்தகைய பஞ்ச கவ்வியத்தைக் கொண்டு, அபிடேகம் செய்து பூசிக்கும் அடியவர்களுக்கு அருள் புரிபவர்; யானையின் தோலை உரித்து அதனைப் போர்வையாகப் போர்த்திக் கொண்ட தலைவர். அவர் ஐயாற்றில் வீற்றிருப்பவரே.

சிறப்புரை: மன்னுயிரைப் பற்றி நின்று, பிறவிகள் தோறும் தனது செயலால் நிகழ்விக்கும் வினையானது, வல்வினை என உணர்த்தப் பெற்றது. நல்வினை தீவினை என இருவகையாக இருப்பினும், இரண்டும் பிறவிக்கு வித்தாக இருப்பதால் "இருள் சேர்

இருவினை" எனத் திருவள்ளுவரால் ஓதப் பெற்றது. இவ்விரு வினைகளும் வலிமையுடன் மேவி, உயிரின் பால் பதிந்து, பிறவி எடுத்தலுக்குக் காரணமாக விளங்குகின்றது. எனவே இது "வல்வினை" என உணர்த்துதலாயிற்று. இத்தகைய தன்மையினை மாணிக்கவாசகர், "பொல்லா வினையேன்" என ஓதுதல் காண்க. இத்தகைய வினையை நீக்குபவர் ஈசனே, என்பதனை, "மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சாராமே கள்ளப் புலக்குரம்பை கட்டு அழிக்க வல்லானே!" (சிவபுராணம்) எனவும், "கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத்து அழுத்தி வினைகடிந்த வேதியனைத் தில்லை நகர் புக்குச் சிற்றம்பலம் என்னும் ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய் (திருவம்மானை–5) எனவும், மாணிக்கவாசகர் அருளியவாறும் காண்க.

379. சங்கணி குழையும் வைத்தார்
சாம்பர்மெய் பூச வைத்தார்
வெங்கதிர் எரிய வைத்தார்
விரிபொழில் அனைத்தும் வைத்தார்
கங்குலும் பகலும் வைத்தார்
கடுவினை களைய வைத்தார்
அங்கமது ஓத வைத்தார்
ஐயன் ஐயாற னாரே.

தெளிவுரை: ஈசன், சங்கினால் இழைக்கப் பெற்ற குழை யணிந்தவர்; திருவெண்ணீற்றைத் திருமேனியில் பூசி விளங்குபவர்; வெங்கதிர் எனப்படும் சூரியனுக்கு ஒளியைத் தந்து, அதன் ஒளிச் சத்தியால் விரிந்து மேவும் பொழில்களைப் பெருகச் செய்தவர்; இரவும் பகலும் ஆக்கியவர்; கடுமையுடைய வினைகள் தீருமாறு செய்பவர்; வேதமும் அதன் ஆறு அங்கமும்

ஓதுமாறு செய்தவர். அவர் ஐயாற்றில் வீற்றிருக்கும் தலைவரே யாவர்.

அங்கமது – வேதமும் அதன் அங்கமும்.

380. **பத்தர்கட்கு அருளும் வைத்தார்**
பாய்விடை யேற வைத்தார்
சித்தத்தை ஒன்ற வைத்தார்
சிவமதே நினைய வைத்தார்
முத்தியை முற்ற வைத்தார்
முறைமுறை நெறிகள் வைத்தார்
அத்தியின் உரிவை வைத்தார்
ஐயன்ஐ யாற னாரே.

தெளிவுரை: ஈசன், பக்தர்களுக்கு அருள் புரிபவர்; இடப வாகனத்தை உடையவர்; அடியவர்களுடைய சித்தத்தைத் தன்பால் ஒன்றுமாறு செய்பவர்; சிவத்தையே நினையுமாறு புரிபவர்; முத்திப் பேற்றை இனிது அடையுமாறு செய்பவர்; ஒழுக்க நெறிகளும் ஆகம நெறிகளும் தோன்றச் செய்து அவ்வழியாகிய மெய்ந் நெறிகளில் மாந்தர்கள் ஒழுகுமாறு புரிபவர்; யானையின் தோலை உடையவர், அவர் ஐயாற்றில் மேவும் தலைவரே.

சிறப்புரை: மன்னுயிர்கள், திருநின்ற செம்மையில் திகழும் மாண்பில், சிவபெருமானை நினைத்தலும், சித்தத்தை அப்பெருமான்பால் சேர்த்தலும் ஆகிய அருளைப் புரிபவர் ஈசனே என்பது "சித்தத்தை ஒன்ற வைத்தார் சிவமதே நினைய வைத்தார்" என ஓதப் பெற்றது. சித்தத்தைத் தன்பால் ஈர்க்கும் மாண்பினை மாணிக்கவாசகர், "சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை'' எனவும், "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" எனவும், அருளிச்

செய்தவாறும் காண்க. "சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்" என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவாக்கும் காண்க.

அத்தியின் உரிவை – யானையின் தோல்.

381. ஏறுகந்து ஏற வைத்தார்
இடைமருது இடமும் வைத்தார்
நாறுபூங் கொன்றை வைத்தார்
நாகமும் அரையில் வைத்தார்
கூறுமை பாகம் வைத்தார்
கொல்புலித் தோலும் வைத்தார்
ஆறுமோர் சடையில் வைத்தார்
ஐயன்ஐ யாற னாரே.

தெளிவுரை: ஈசன், இடப வாகனத்தை உகந்து ஏறுபவர்; திருவிடை மருதூர் என்னும் திருத்தலத்தில் மேவுபவர்; நறுமணம் கமழும் கொன்றை மலர் மாலை தரித்தவர்; நாகத்தை அரையில் கட்டியவர்; உமாதேவியை ஒருபாகமாக வைத்தவர்; புலித்தோலை உடுத்தியவர்; கங்கையைச் சடையில் தரித்தவர். அவர் ஐயாற்றில் வீற்றிருக்கும் தலைவரே.

382. பூதங்கள் பலவும் வைத்தார்
பொங்குவெண் ணீறும் வைத்தார்
கீதங்கள் பாட வைத்தார்
கின்னரம் தன்னை வைத்தார்
பாதங்கள் பரவ வைத்தார்
பத்தர்கள் பணிய வைத்தார்
ஆதியும் அந்தம் வைத்தார்
ஐயன்ஐ யாற னாரே.

தெளிவுரை: ஈசன், பல்வகையான பூதகணங்களை யுடையவர்; ஒளிர்ந்து மேவி அருள் வழங்கும் திருவெண்ணீற்றைத் திருமேனியில் உடையவர்;

சாமகானம் முதலான கீதங்களையும் இசைத்துப் பாடும் புகழ்ப் பாடல்களையும் தோற்றுவித்தவர். மன்னுயிர்கள் பரவி ஏத்தி நற்கதியுற்று உய்யுமாறு புரிப்வர்; பக்தர்கள் பணிந்து ஏத்த அருள் புரிபவர்; ஆதியும் அந்தமும் தோற்றுவிப்பவராய்க் கர்த்தா ஆகுபவர். அவர், ஐயாற்றில் வீற்றிருக்கும் தலைவரே.

383. இரப்பவர்க்கு ஈய வைத்தார்
ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம்
கடுநர கங்கள் வைத்தார்
பரப்புநீர்க் கங்கை தன்னைப்
படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக்கு அருளும் வைத்தார்
ஐயன்ஐ யாற னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், யாசிப்பவர்களுக்கு உதவ வேண்டும் என்னும் தயையை மாந்தர்களுக்குத் தோற்றுவித்தவர்; அவ்வாறு அறம் புரியும் நல்லோர்கள், நன்மையுறுமாறு அருள்புரிபவர்; தருமம் செய்யாது உலோபியாய் இருப்பவர்களுக்குக் கொடுமையான நரகங்களை வைத்து, அதில் ஆழ்ந்து துன்புறுமாறு செய்பவர்; கங்கையைச் சடை முடியில் தரித்து விளங்குபவர்; கயிலை மலையைப் பெயர்த்த இராவணன், ஏத்திப் போற்ற அவனுக்கு அருள் புரிந்தவர். அவர் ஐயாற்றில் வீற்றிருக்கும் தலைவராவர்.

39. திருவையாறு

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 3 காண்க.

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

384. குண்டனாய்ச் சமண ரோடே
கூடிநான் கொண்ட மாலைத்
துண்டனே சுடர்கொள் சோதீ
தூநெறி யாகி நின்ற
அண்டனே அமரர் ஏறே
திருவையாறு அமர்ந்த தேனே
தொண்டனேன் தொழுதுன் பாதம்
சொல்லிநான் திரிகின் றேனே.

தெளிவுரை: நான், சமணத்தில் இருந்தபோது மதி மயக்கத்தைத் துண்டித்த சுடர் மிகும் சோதியே! தூய நெறியாக விளங்கி மேவி அண்டமாய் விளங்கும் ஈசனே! தேவர்கள் தலைவனே! திருவையாற்றில் வீற்றிருக்கும் தேன் போன்ற இனிமையானவனே! நான் தொண்டு செய்பவனாய்த் தேவரீருடைய திருப்பாதத்தைத் தொழுதும் திருவைந்தெழுத்தைத் தியானித்தும் திரிகின்றவனானேன்.

சிறப்புரை: "தொண்டனேன்" என ஓதப் பெறுதலாவது, உழவாரப் பணியாற்றும் திருத்தொண்டினையும்; "திரிகின்றேன், எனப்படுதலாவது, திருத்தலங்கள் தோறும் சென்று தற்போதம் அற்று விளங்கும் மாண்பினையும், உணர்த்துதலாம் எனக் கொள்க.

மாலைத் துண்டன் – மயக்கத்தைத் துண்டித்த ஈசன் திருவருளைச் சுட்டிற்று.

385. பீலிகை இடுக்கி நாளும்
பெரியதோர் தவமென்று எண்ணி
வாலிய தறிகள் போல
மதியிலார் பட்ட தென்னே

வாலியார் வணங்கி யேத்தும்
திருவையாறு அமர்ந்த தேனோடு
ஆலியா எழுந்த நெஞ்சம்
அழகிதா எழுந்த வாறே.

தெளிவுரை: *மயிற் பீலியைக் கைக் கொண்டு இருத்தலையே தவம் என்று எண்ணி, வாலிபத்தின் மதர்ப்பினால் அழிதல் போன்று, மதியற்றவர் பால்சேர்ந்து நைந்தேன்! வாலி வணங்கியேத்தும் பெருமானே! திருவையாற்றில் வீற்றிருக்கும் தேனே! தேவரீருடன் இணைந்து மகிழ்ந்த நெஞ்சமானது மிகவும் செம்மையுற்றது.*

சிறப்புரை: *ஈசனோடு மகிழ்ந்து விளங்கும் நெஞ்சின் தன்மை "ஆலியா எழுந்த நெஞ்சம் அழகிதாம்" என ஏத்தப் பெற்றது. இது நெஞ்சத்தின் அழகினை ஓதுதலாயிற்று. இத்தன்மையில், "ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப் பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே" என்னும் சேந்தனார் திருப்பாண்டு (பா 9)ம் நோக்குக.*

பீலி – மயில் தோகை; வாலியதறிகள் – தறிகெட்டுத் திரியும் வாலிபர்கள்; ஆலிக்கும் – மகிழ்ச்சி கொண்டு பூரித்தல்.

386. தட்டிடு சமண ரோடே
தருக்கிநான் தவம்என்று எண்ணி
ஒட்டிடு மனத்தி னீரே
உம்மையான் செய்வ தென்னே
மொட்டிடு கமலப் பொய்கைத்
திருவையாறு அமர்ந்த தேனோடு
ஒட்டிடும் உள்ளத் தீரே
உம்மைநான் உகந்திட்டேனே.

தெளிவுரை: *சமணத்தில் இருந்ததைத் தவம் என்று எண்ணிய என் மனத்திலும் பதிந்து விளங்கும் பெருமானே! தேவரீரை யான் எவ்வாறு புகழ்வேன்! தாமரை மலர் விளங்கும் பொய்கையுடைய திருவை யாற்றில் அமர்ந்த தேனே! என் உள்ளத்தில் ஒட்டி உள்ள ஈசனே! உம்மை நான் உகந்து ஏத்தினன்.*

387. பாசிப்பல் மாசு மெய்யர்
பலமிலாச் சமண ரோடு
நேசத்தால் இருந்த நெஞ்சை
நீக்குமாறு அறிய மாட்டேன்
தேசத்தார் பரவி யேத்தும்
திருவையாறு அமர்ந்த தேனை
வாசத்தால் வணங்க வல்லார்
வல்வினை மாயு மன்றே.

தெளிவுரை: *சமணத்தில் நேயம் கொண்டு இருந்த என் நெஞ்சினை, ஈசன் தன்பால் நாட்டி, நீக்க முடியாத வாறு செய்தேன். எல்லா உலகத்தினரும் பரவி யேத்தும் ஈசனே! திருவையாற்றில் அமர்ந்த தேன் போன்றவரே! தேவரீருடைய திருப்பாத மலர்களை அன்புடன் தொழ வல்லவர், வல்வினையி லிருந்து நீங்கப் பெறுவர்.*

388. கடுப்பொடி யட்டி மெய்யில்
கருதியோர் தவம்என்று எண்ணி
வடுக்களோடு இசைந்த நெஞ்சே
மதியிலீ பட்ட தென்னே
மடுக்களில் வாளை பாயும்
திருவையாறு அமர்ந்த தேனை
அடுத்துநின்று உன்னு நெஞ்சே
அருந்தவம் செய்த வாறே.

தெளிவுரை: சமணரோடு இருந்து உழன்ற நெஞ்சமே! நீ அடைந்த நன்மைதான் யாது! ஒன்றும் இல்லை. மடுக்களில் வாளை பாயும் சிறப்புடைய திருவையாற்றில் அமர்ந்த தேன் போன்ற ஈசனைச் சார்ந்து நின்று, ஏத்துக. அதுவே அரிய தவத்தைப் புரிந்த மாண்புடையதாகும்.

சிறப்புரை: இனிமையாகி, நாவின் சுவையாகி, உடலுக்கும் நன் மருந்தாகுவது, தேன். அத்தன்மையில், ஈசன், உள்ளத்தில் திளைத்துப் பேரின்பத்தை நல்கி, உயிர்க்குத் துணை நின்று நற்கதியை – முத்திப் பேற்றை அளிக்கவல்லவர். இக்குறிப்புத் தோன்ற ஈசனைத் "திருவையாறு அமர்ந்ததேனை" என ஏத்தப் பெற்றது. "அம்பலத்தரசே அருமருந்தே! ஆனந்தத் தேனே அருள் விருந்தே" என்னும் திருவருட் பிரகாச வள்ளலாரின் திருவாக்கும், இனிது காண்க. இத்தன்மையில், மாணிக்கவாசகர், "நானேயோ தவம் செய்தேன் "சிவாயநம" எனப் பெற்றேன்; தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்" *(திருவேசறவு 10)* என அருளிச் செய்தவாறும் நோக்குக.

389. துறவியென்று அவமது ஓரேன்
சொல்லிய செலவு செய்து
உறவினால் அமண ரோடும்
உணர்விலேன் உணர்வொன்று இன்றி
நறவமார் பொழில்கள் சூழ்ந்த
திருவையாறு அமர்ந்த தேனை
மறவிலா நெஞ்ச மேநல்
மதியுனக்கு அடைந்த வாறே.

தெளிவுரை: நெஞ்சமே! துறவு என்னும் பெயரிலே அவமே கொண்டு இருந்தனை. அவத்தின்பால்

உள்ளனை என்னும் உணர்வும் இன்றி இருந்தனை. பொழில் சூழ்ந்த திருவைய்யாற்றில் அமர்ந்த தேன் போன்ற ஈசனை மறவாத நெஞ்சமே! இப்போது தான் உனக்கு நல்ல அறிவு ஏற்பட்டது.

390. பல்லுரைச் சமண ரோடே
பலபல காலம் எல்லாம்
சொல்லிய செலவு செய்தேன்
சோர்வன் நான் நினைந்த போது
மல்லிகை மலரும் சோலைத்
திருவையாறு அமர்ந்த தேனை
எல்லியும் பகலும் எல்லாம்
நினைந்த போது இனிய வாறே.

தெளிவுரை: சமணருடன் பலகாலம் இருந்து என் வாழ்க்கையைக் கழித்தேன். மல்லிகை மலரும் சோலை யுடைய திருவையாற்றில் அமர்ந்த தேன்போன்ற இனிய ஈசனை, நான் நினைத்த போது எனக்குச் சோர்வு நீங்கியது. இரவும் பகலும் இனிமை தோன்றிய நிலையில் ஆயினேன்.

391. மண்ணுளார் விண்ணு ளாரும்
வணங்குவார் பாவம் போக
எண்ணிலாச் சமண ரோடே
இசைந்தனை ஏழை நெஞ்சே
தெண்ணிலா எறிக்கும் சென்னித்
திருவையாறு அமர்ந்த தேனைக்
கண்ணினாற் காணப் பெற்றுக்
கருதிற்றே முடிந்த வாறே.

தெளிவுரை: ஒளி மிகுந்த பிறைச் சந்திரனைச் சென்னியில் சூடித் திருவையாற்றில் வீற்றிருக்கும் தேன் போன்ற இனிய சிவபெருமானை, மண்ணுலகத்

தினரும், தேவர்களும் வணங்கிப் பாவத்தைப் போக்கிக் கொள்கின்றனர். எண்ணற்ற காலம் சமணருடன் இருந்து காலத்தைக் கழித்த நெஞ்சமே! அப்பெருமானைக் கண்ணாற் கண்டு தரிசித்து ஏத்துக. நீ வேண்டும் என்று கருதும் முத்திப் பேறு, நினக்கு வாய்த்தது என்று முடிவாகக் கொள்க. இது, முத்திப் பேற்றின் உறுதிப் பாட்டினை ஓதுதலாயிற்று.

392. குருந்தமது ஒசிந்த மாலும்
குலமலர் மேவி னானும்
திருந்துநல் திருவ டியும்
திருமுடி காண மாட்டார்
அருந்தவ முனிவர் ஏத்தும்
திருவையாறு அமர்ந்த தேனைப்
பொருந்த நின்று உன்னுநெஞ்சே
பொய்வினை மாயும் அன்றே.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் திருவடியையும், திருமுடியையும் முறையே தேடியும் காணப் பெறாதவராகிய ஈசன் முனிவர்களால் ஏத்தும் திருவையாற்றில், தேன் என இனிமையுடையவராய் வீற்றிருப்பவர். நெஞ்சமே! அப்பெருமானுடைய திருவடிகள் மனத்தில் பொருந்துமாறு பதித்து நினைப்பாயாக. மும்மலக் கட்டும் இருவினைப் பாசமும் நின்னை விட்டு நீங்கும்.

393. அறிவிலா அரக்கன் ஓடி
அருவரை எடுக்க லுற்று
முறுகினான் முறுகக் கண்டு
மூதறி வாளன் நோக்கி
நிறுவினான் சிறுவி ரலால்
நெரிந்துபோய் நிலத்தில்வீழ

அறிவினால் அருள்கள் செய்தான்
திருவையாறு அமர்ந்த தேனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இராவணன், கயிலை மலையை எடுக்க முனையக் கண்டு, ஈசன் திருப்பாத விரலால் நெரித்து, அவனை நிலத்தில் அழுத்தினார். அவ்வரக்கன் நல்லறிவு கொண்டு பாடி ஏத்த, அருள் புரிந்தவர், அப்பெருமான். அவர் திருவையாற்றில் அமர்ந்த தேன் போன்ற இனியவரே.

40. திருவையாறு

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 3 காண்க.

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

394. தானலாது உலகமில்லை சகமலாது அடிமையில்லை
கானலாது ஆடல்இல்லை கருதுவார் தங்களுக்கு
வானலாது அருளும்இல்லை வார்குழல் மங்கையோடும்
ஆனலாது ஊர்வது இல்லை ஐயன்ஐயாற னார்க்கே.

தெளிவுரை: சிவபெருமான், தானே உலகமானவர். உலகம் அவருக்கு அடிமையாகும். அவர், சுடுகாட்டில் ஆடுபவர்; கருதி ஏத்தும் அடியவர்களுக்கு வான் போன்ற சிறப்புடன் அருள் புரிபவர்; உமாதேவியோடு வீற்றிருப்பவர்; இடபத்தை வாகனமாகக் கொண்டு ஊர்ந்து செல்லுபவர். அத்தகைய பெருமையுடைய தலைவர், ஐயாற்றில் மேவும் ஈசனே.

395. ஆலலால் இருக்கையில்லை அருந்தவ முனிவர்க்கன்று
நூலலால் நொடிவதில்லை நுண்பொருள்
ஆய்ந்துகொண்டு

மாலுநான் முகனும்கூடி மலரடி வணங்க வேலை
ஆலலால் அமுதம்இல்லை ஐயன்ஐயாற னார்க்கே.

தெளிவுரை: திருவையாற்றில் மேவும் தலைவருக்கு, கல்லால மரத்தின் நீழலே இருக்கையாகும்; அருந்தவ முனிவர்களாகிய சனகாதி முனிவர்களுக்கு உபதேசித்த அறம், கைவிரலால் நொடிக்கும் பாவனையைக் காட்டும் சின் முத்திரையாகும்; திருமால் நான்முகன் முதலியோர் கூடித் திருவடியை வணங்கி ஏத்த அவர் உட்கொண்ட உணவாவது கடல் நஞ்சு ஆகும்.

வேலை ஆல – கடல் நஞ்சு.

396. நரிபுரி சுடலை தன்னில் நடமலால் நவிற்றல் இல்லை
சுரிபுரி குழலியோடும் துணையலால் இருக்கை இல்லை
தெரிபுரி சிந்தையார்க்குத் தெளிவலால் அருளும் இல்லை
அரிபுரி மலர்கொடு ஏத்தும் ஐயன்ஐ யாறனார்க்கே.

தெளிவுரை: ஈசன், நரிகள் திரியும் மயானத்தில் நடனம் புரிபவர்; சுருண்ட கூந்தலையுடைய உமாதேவியைப் பாகமாகக் கொண்டுள்ளவர்; தெளிந்த ஞானியர்களுக்கு ஞானமே அருளாகத் திகழ விளங்கும் அப்பெருமான், திருமாலால் மலர் கொண்டு ஏத்தப் படுபவர். அவர், ஐயாற்றில் மேவும் தலைவராவார்.

397. தொண்டலால் துணையும் இல்லை தோலாது உடையும் இல்லை
கண்டலாது அருளும் இல்லை கலந்தபின் பிரிவதில்லை
பண்டைநான் மறைகள்காணாப் பரிசினன் என்றென்று எண்ணி
அண்டவா னவர்கள் ஏத்தும் ஐயன் ஐயாற னார்க்கே.

தெளிவுரை: ஈசனுக்குத் திருத் தொண்டர்களே துணையாய் விளங்குபவர்கள்; அவர் தோலுடையை உடுத்துபவர். அப்பெருமானைக் கண்டு தரிசித்துப் போற்றுதலே அருளாகும். அவரைக் கண்டு தரிசித்து உள்ளத்தில் நிறுத்திய பின்னர் பிரிவு என்பது இல்லை. நான் மறைகளாலும் காணுதற்கு அரியவர் என்று எல்லா அண்டங்களிலும் உள்ள தேவர்கள் அப்பெருமானை ஏத்துகின்றனர். அத்தகைய பெருமை யுடைய தலைவர், ஐயாற்றில் மேவும் ஈசனாவார்.

398. எரியலால் உருவம்இல்லை ஏறலால் ஏறம்இல்லை
கரியலால் போர்வையில்லை காண்பகுசோதியார்க்குப்
பரிவிலா அமரர்கூடிப் பெருந்தகைப் பிரான்என்று ஏத்தும்
அரியலால் தேவி யில்லை ஐயன்ஐ யாற னார்க்கே.

தெளிவுரை: ஈசன், நெருப்பின் வண்ணம் உடையவர்; இடபத்தில் ஏறுபவர்; யானையின் தோலைப் போர்வையாக உடையவர்; தேவர்கள் எல்லாரும் கூடிப் பெருந்தகையே என்று ஏத்தும் திருமால், தேவியாக விளங்குபவர். அத்தகைய தலைவர், திருவையாற்றில் மேவும் பெருமானே.

கரி – யானையின் தோல்.

399. என்பலால் கலனும்இல்லை எருதலால் ஊர்வதில்லை
புன்புலால் நாறுகாட்டிற் பொடியலால் சாந்தும்இல்லை
துன்பிலாத் தொண்டர் கூடித் தொழுதழுது ஆடிப்பாடும்
அன்பலாற் பொருளும் இல்லை ஐயன்ஐயாற னார்க்கே.

தெளிவுரை: ஈசன், எலும்பினை அணிகலனாக உடையவர்; இடபவாகனத்தில் ஏறுபவர்; மயானத்தில் விளங்கும் சாம்பலைப் பூசுபவர்; திருத்தொண்டர்கள்

கூடித் தொழுது போற்றி ஆடிப்பாடும் அன்பினையே பொருளாக உடையவர். அத்தகைய தலைவர், ஐயாற்றில் வீற்றிருக்கும் பெருமானே.

400. கீளலால் உடையும்இல்லை கிளர்பொறி அரவம் பைம்பூண்
தோளலால் துணையும் இல்லை தொத்தலர் கின்றவேனில்
வேளலால் காயப்பட்ட வீரரும் இல்லை மீளா
ஆளலாற் கைம்மாறு இல்லை ஐயன்ஐ யாறனார்க்கே.

தெளிவுரை: ஈசன், கோவண ஆடையுடையவர்; அரவத்தை ஆபரணமாக உடையவர்; மன்மதனை எரித்தவர். மீளா ஆளாக இருப்பது அப்பெருமானுக்குச் செய்யும் கைம்மாறு ஆகும். அத்தலைவர், ஐயாற்றில் மேவும் ஈசனே.

சிறப்புரை: ஈசன் அருள் புரிந்து மன்னுயிரைக் காக்கும் தன்மைக்கு மீளா ஆளாக இருத்தலே கைம்மாறு ஆகும் என்பது "மீளா ஆளலாற் கைம்மாறு இல்லை" என, ஓதப் பெற்றது. இத்தன்மையில் அப்பர் பெருமான், "தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரன் நற்சங்கவெண்குழை யோர் காதிற் கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க் கொய் மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே!" (6-ஆம் திருமுறை 98 மறுமாற்றத் திருத்தாண்டகம்) என அருளிச் செய்தமை காண்க. இந்நெறியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே" என அருளியமையும் காண்க.

வேனில் வேள் – மன்மதன்.

401. சதமலாது அடிமையில்லை தானலால் துணையும் இல்லை
நகமெலாம் தேயக்கையால் நாள்மலர்தொழுது தூவி
முகமெலாம் கண்ணீர்மல்க முன்பணிந்து ஏத்தும் தொண்டர்
அகமலால் கோயில்இல்லை ஐயன்ஐ யாறனார்க்கே.

தெளிவுரை: ஈசனுக்கு உலகம் அடிமையாகும். அப்பெருமானுக்குத் துணைவர் என்று சொல்லப்படுபவர் தானேயன்றி வேறில்லை. நாள்தோறும் மலர் பறித்துத் தூவித் தொழுது, பக்தியால் கசிந்து உருகிப் போற்றிக் கண்ணீர் மல்கப் பணிந்து ஏத்தும், தொண்டர்களின் உள்ளத்தில், கோயில் கொண்டு விளங்குபவர், அப்பரமன். அத்தகைய மாண்பினை உடைய தலைவர், ஐயாற்றில் மேவும் பெருமானே.

சிறப்புரை: உள்ளம் உருகிக் கண்ணீர் மல்க ஏத்தும் அடியவர்களின் உள்ளத்தில் ஈசன் கோயில் கொண்டிருத்தலை, இத்திருப்பாட்டானது உணர்த்திற்று. இத்தன்மையுடைய பக்தர்களைத் திருஞானசம்பந்தர், “காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்” என உணர்த்துதல் காண்க. உள்ளம் உருகி நின்று ஈசனை ஏத்தி வழிபடும் செம்மையினை, மாணிக்கவாசகர், “உள்ளம் தாள் நின்று உச்சியளவு நெஞ்சாய் உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா வெள்ளந்தான் பாயாதால்” (திருச்சதகம் 21) என அருளிச் செய்தமை காண்க. மற்றும், “மெய்ம் முழுதும் கம்பித்து அழும் அடியாரிடை ஆர்த்து வைத்து ஆட்கொண்டருளி” (நீத்தல் விண்ணப்பம் 27) என வரும் திருவாசக அமுத வாக்கும் காண்க.

திருப்பாட்டு எண் 397-இல், "தொண்டு அலால் துணையும் இல்லை" என ஓதியது ஈசனின் எண் குணங் களுள் பேரருள் உடைமையையும், இத்திருப்பாட்டில் "தானலால் துணையும் இல்லை" என ஓதப் பெறுத லாவது, முடிவில்லாத ஆற்றல் உடைமையையும் உணர்த்தற் பாலதாம்.

முகமெலாம் கண்ணீர் மல்க – பக்திப் பெருக்கால் நெக்குருகி உகுக்கும் கண்ணீர் பெருகுதல்.

402. உமையலாது உருவம்இல்லை உலகலாது உடையது இல்லை
நமையெலாம் உடையராவர் நன்மையே தீமையில்லை
கமையெலாம் உடையராகிக் கழலடி பரவும் தொண்டர்க்கு
அமைவிலா அருள்கொடுப்பார் ஐயன்ஐ யாறனார்க்கே.

தெளிவுரை: ஈசன், உருவமாகத் தோற்றுவிப்பது உமா தேவியின் (அருளது சக்தியாகும்) வடிவம்; உடைமை யாகத் கொள்வது உலகமே; அவர் நம்மை உடையவர்; நன்மை புரிபவர் அன்றித் தீமை புரியாதவர்; பொறுமை யுடையவராய்த் திருவடி பணியும் அடியவர்களுக்கு, அளவற்ற செல்வங்களை வழங்கி அருள்புரிபவர். அத்தகைய ஐயன், ஐயாற்றில் மேவும் பரமனே.

கமை – பொறுமை.

403. மலையலால் இருக்கை யில்லை மதித்திடா அரக்கன் தன்னைத்
தலையலால் நெரித்ததில்லை தடவரைக் கீழடர்த்து
நிலையிலார் புரங்கள்வேவ நெருப்பலால் விரித்ததில்லை
அலையினார் பொன்னி மன்னும் ஐயன்ஐ யாறனார்க்கே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், கயிலை மலையை இருப்பிடமாகக் கொண்டு விளங்குபவர்; மதியாத இராவணனுடைய தலையை நெரித்தவர்; முப்புர அசுரர்களின் கோட்டைகளை நெருப்பால் எரித்தவர். அலைகளையுடைய காவிரியாற்றின் கரையில் மன்னும் ஐயாற்றில் அப் பெருமான் வீற்றிருப்பவர்.

இது காவிரி வடக்கரைத்தலம் என்னும் குறிப்பு தோன்ற "பொன்னி மன்னும் ஐயன்" என உணர்த்தப் பெறுதலாயிற்று.

41. திருச்சோற்றுத்துறை

தல விளக்கம்: காவிரித் தென்கரைத்தலம் 127இல், இது 13ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடியது. திருவையாற்றை மையமாகக் கொண்ட சப்தஸ்தானங்களில் ஒன்று. இந்திரன், சூரியன், கௌதமர் வழிபட்டது.

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 28 காண்க.

சுவாமி : தொலையாச் செல்வர், சோற்றுத் துறைநாதர்

அம்பிகை : ஒப்பிலாம்பிகை, அன்னபூரணி

தீர்த்தம் : காவிரி

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

404. பொய்விரா மேனி தன்னைப்
பொருளெனக் காலம் போக்கி
மெய்விரா மனத்தன் அல்லேன்
வேதியா வேத நாவா

ஐவரால் அலைக்கப் பட்ட
ஆக்கைகொண்டு அயர்த்துப் போனேன்
செய்வரால் உகளும் செம்மைத்
திருச் சோற்றுத் துறையனாரே.

தெளிவுரை: ஈசனே! பொய்மை விரவி மேவும் இவ்வுடம்பை, உயர்ந்த பொருளாகக் கருதிக் காலத்தை வீணாகப் போக்கினேன். நான், மெய் விளங்குகின்ற மனத்தை உடையவனல்ல; வேதத்தின் தலைவராகவும் வேதத்தை விரித்து ஓதுபவராகவும் விளங்கும் நாதனே! ஐம்புலன்களால் அலைக்கப்பட்ட யாக்கையால் யான் அயர்ச்சி அடைந்தேன். வயல்களில் வரால் (மீன்கள்) உகளும் நீர்வளம் நிறைந்த செம்மை மிகும் திருச் சோற்றுத் துறையில் மேவும் பெருமானே! அருள் புரிவீராக, என்பது குறிப்பு.

ஐவர் – ஐம்புலன்கள்; செய் – வயல்.

405. கட்டராய் நின்று நீங்கள்
காலத்தைக் கழிக்க வேண்டா
எட்டவாம் கைகள் வீசி
எல்லிநின் றாடு வானை
அட்டகா மலர்கள் கொண்டே
ஆனஞ்சும் ஆட்ட ஆடிச்
சிட்டாய் அருள்கள் செய்வார்
திருச்சோற்றுத் துறையனாரே.

தெளிவுரை: நல்ல உடற்கட்டு இருக்கிறது என்று கருதி நீங்கள், வாழ்நாள் காலத்தை வீணாகக் கழிக்க வேண்டாம். ஈசன், எட்டுக் கைகளை வீசி இரவில் நின்று நடனம் ஆடுபவர். அப்பெருமானை, அட்ட மலர்களாகிய புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியா வர்த்தம், நீலோற்பலம் (குவளை), பாதிரி,

அலரி, செந்தாமரை ஆகிய மலர்கள் கொண்டு தூவிப் போற்றி வணங்குவீராக. பசுவிலிருந்து கிடைக்கப் பெறும் பஞ்சகௌவியத்தைக் கொண்டு அப்பெருமானைப் பூசித்து ஏத்துவீராக. இவ்வாறு தொழுது ஏத்த, பெருந்தகையாய் மேவும் சிவபெருமான், அருள்களைப் புரிவார். அத்தகைய ஈசன், திருச்சோற்றுத் துறையனாரே.

சோற்றுத் துறையனார் – தலத்தின் திருப்பெயரும் ஈசன் திருப்பெயரும் ஒருசேர உணர்த்தியதாயிற்று; கா – சோலை.

406. கல்லினால் புரமூன்று எய்த
கடவுளைக் காதலாலே
எல்லியும் பகலும் உள்ளே
ஏகாந்த மாக ஏத்தும்
பல்லில்வெண் தலைகை யேந்திப்
பல்இலம் திரியும் செல்வர்
சொல்லுநன் பொருளும் ஆவார்
திருச் சோற்றுத் துறைய னாரே.

தெளிவுரை: மேருமலையை வில்லாகக் கொண்டு, முப்புரங்களைக் கணை தொடுத்து எய்து எரித்துச் சாம்பலாக்கிய கடவுள், சிவபெருமான். அப்பெருமானை, இரவும் பகலும் உள்ளத்தில் பதித்து ஏகாந்தமாக இருந்து, தியானம் செய்வீராக. அவர், பிரமகபாலத்தைக் கையில் ஏந்திப் பல இல்லங்களில் திரிந்து, பலிகொள்ளும் செல்வர். சொல்லும், அதன் பொருளுமாய் எங்கும் வியாபித்து இருப்பவர். அத்தகைய ஈசன், திருச்சோற்றுத்துறை நாதரே.

கல் – மேருமலை; பல் இலம் – பல இல்லங்கள்.

407. கறையராய்க் கண்ட நெற்றிக்
கண்ணராய்ப் பெண்ணோர் பாகம்

இறையராய் இனிய ராகித்
தனியராய்ப் பனிவெண் திங்கள்
பிறையராய்ச் செய்த எல்லாம்
பீடராய்க் கேடில் சோற்றுத்
துறையராய்ப் புகுந்துஎன் உள்ளச்
சோர்வு கண்டு அருளினாரே.

தெளிவுரை: ஈசன், கறை பொருந்திய கண்டத்தைக் கொண்டு நீலகண்டர் என விளங்குபவர்; நெற்றியில் கண் கொண்டு முக்கண்ணர் ஆவர்; உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு அம்மையப்பராய் விளங்குபவர்; உள்ளத்தில் இருந்து பக்தர்கள் பால் இனிமை வழங்குபவர்; தனித்தத்துவயோகியாய் விளங்குபவர்; குளிர்ந்த வெண்பிறைச் சந்திரனைச் சூடிச் சந்திர சேகரன் எனத் திகழ்பவர்; யாவும் நிகழ்த்தும் பெருமையுடையவர் அப்பெருமான், சோற்றுத் துறையில் மேவி என் உள்ளத்தில் புகுந்து சோர்வு நீக்கி, அருள் செய்த பரமரே.

408. பொந்தையைப் பொருளா எண்ணிப்
பொருக்கெனக் காலம் போனேன்
எந்தையே யேக மூர்த்தி
என்று நின்று ஏத்த மாட்டேன்
பந்தமாய் வீடும் ஆகிப்
பரம் பர மாகி நின்று
சிந்தையுள் தேறல் போலும்
திருச் சோற்றுத் துறைய னாரே.

தெளிவுரை: எந்தையே! ஏக மூர்த்தியாய் விளங்கும் பெருமானே! இவ்வுடலையே பெரிதாக எண்ணிக் காலம் கழிதலையும் அறியாதவனாய் வாழ்நாளைக் கழித்து விட்டேன். உடலும் உயிரும் சேர்த்துப் பந்தம் பெறச் செய்பவரும் நீவிர்; வீடுபேறும் நீவிர்;

யாங்கணும், வியாபித்துள்ள பரம்பரனும் நீவிர். அந்தோ! தேவரீரை ஏத்தாதவனானேன். சிந்தையில் தேன் போன்று இனிமையுடன் மேவும் தேவரீர், திருச் சோற்றுத் துறை நாதரே. அருள் புரிவீராக என்பது குறிப்பு.

சிறப்புரை: மன்னுயிரைத் தேகத்திற் செலுத்திப் பிறவி கொள்ளுமாறு, வினையின் பந்தமாகத் திகழ்பவரும், அத்தகைய பந்தங்களின் கட்டு அறுத்து முத்திப் பேறு என விளங்குபவரும் ஈசனே ஆவார் என்பது "பந்தமாய் வீடும் ஆகி" என உணர்த்தப் பெற்றது. இத் தன்மையில் மாணிக்கவாசகர், "பந்தமும் ஆய் வீடும் ஆயினாருக்கு ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே" எனவும், "அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க; பந்தமும் வீடும் படைப் போன் காண்க" எனவும் அருளிச் செய்தவாறும் நோக்குக.

பொந்தை – தேகம், உடம்பு.

409. பேர்த்து இனிப் பிறவா வண்ணம்
பிதற்றுமின் பேதை பங்கன்
பார்த்தனுக்கு அருள்கள் செய்த
பாசுப தன்தி றமே
ஆர்த்துவந்து இழிவது ஒத்த
அலைபுனல் கங்கை யேற்றுத்
தீர்த்தமாய்ப் போத விட்டார்
திருச்சோற்றுத் துறைய னாரே.

தெளிவுரை: மீண்டும் பிறவியைக் கொள்ளாத வண்ணத்தை பெறுமாறு அம்மையப்பராகிய ஈசனை ஏத்துவீராக! அர்ச்சுனருக்கு அருள் செய்து பாசுபதத்தை நல்கிய திறத்தினை ஏத்துக!

அப் பெருமான், கங்கையைச் சடை முடியின் மீது ஏற்றுப் பூமியின் மீது புனித தீர்த்தமாக மிளிருமாறு, பகீரதச் சக்கரவர்த்தியின் தவத்தின் பயனாய்த் திகழ வைத்தவர். அவர் திருச்சோற்றுத்துறை நாதரே.

பேதை – உமாதேவியார்; பாசுபதன் – ஈசன்.

410. கொந்தார்பூங் குழலி னாரைக்
கூறியே காலம் போன
எந்தைஎம் பிரானாய் நின்ற
இறைவனை ஏத்தாது அந்தோ
முந்தரா அல்கு லாளை
உடன்வைத்த ஆதிமூர்த்தி
செந்தாது புடைகள் சூழ்ந்த
திருச்சோற்றுத் துறைய னாரே.

தெளிவுரை: மனை வாழ்க்கையைப் பெரிதாக எண்ணிக் காலத்தைப் போக்கி, வாழ்க்கை கழிந்ததே! எந்தை பிரானாகிய ஈசனை ஏத்தாது வீணாகியதே! உமாதேவியை உடனாகக் கொண்டு அம்மையப்பராக விளங்கும் ஆதிமூர்த்தியே! மகரந்தங்கள் விளங்கும் திருச்சோற்றுத் துறை நாதரே!

இது, இறைவனை ஏத்தாது கழிக்கும் காலத்தை எண்ணி வருந்துதல் ஆயிற்று.

411. அங்கதி ரோன வனை
அண்ணலாக் கருத வேண்டா
வெங்கதி ரோன் வழியே
போவதற்கு அமைந்து கொள்மின்
அங்கதி ரோன வனை
உடன்வைத்த ஆதி மூர்த்தி
செங்கதி ரோன் வணங்கும்
திருச்சோற்றுத் துறைய னாரே.

தெளிவுரை: சூரியனைப் பெருங் கடவுளாகக் கருத வேண்டாம். அவன் கண்டப் பிடித்த சிவ வழிபாட்டு நெறியைக் கொள்வீராக. ஈசன், சூரியனைத் தன்னிடத்தில் வைத்த ஆதிமூர்த்தியாவார். அத்தகு சூரியன் வழிபட்ட ஈசன், திருச்சோற்றுத்துறை நாதரே.

சிறப்புரை: சூரியன், ஈசனுக்கு வலது கண்ணாக விளங்கும் குறிப்பும், அவன் ஈசனை வழிபட்டுப் பேறு பெற்ற திருத்தலச் சிறப்பும் இத்திருப்பாட்டில் சுட்டப் பெறுவதாயிற்று.

412. ஓதியே கழிக்கின் றீர்கள்
உலகத்தீர் ஒருவன் றன்னை
நீதியால் நினைய மாட்டீர்
நின்மலன் என்று சொல்லீர்
சாதியா நான்மு கனும்
சக்கரத் தானும் காணாச்
சோதியாய்ச் சுடரதானார்
திருச் சோற்றுத் துறைய னாரே.

தெளிவுரை: உலகத்தில் மேவும் மாந்தர்களே! ஈசனை ஏத்தி ஓதுகின்றீர். அப்பெருமானை நெஞ்சத்துள் உணர்ந்து தியானம் செய்யுங்கள். அப்பெருமானை நின் மலனே! என்று போற்றுவீராக. அப் பெருமான், பிரமன், திருமால் ஆகியவர்களும் காணாத அருட் பெருஞ் சோதியாய்த் திகழ்ந்து சுடராகி விளங்கியவர். அவர் திருச்சோற்றுத்துறை நாதரே.

சிறப்புரை: ஈசன், உள்ளத்தின் உணர்வின்றி ஓதும் சொற் களுக்கு அப்பாற்பட்டவர் என்பதும், உணர்வில் நிறுத்தி ஏத்தும் தன்மையுடையவர் என்பதும் நனி விளங்க "ஓதியே கழிக்கின்றீகள்" எனவும், "நீதியா நினைய மாட்டீர்" எனவும் உணர்த்துதலாயிற்று.

இதனை, மாணிக்கவாசகர், "அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை ஆனந்தமாய்க் கசிந்து உருக என்பர மல்லா இன்னருள் தந்தாய்; யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறு" (கோயில் திருப்பதிகம் 2) என அருளிச் செய்தவாறும் காண்க.

ஓதி – மனம் பதியாது உரைத்தல்; நின்மலன் – மலம் அற்றவன். அடியவர்களின் மும்மலத்தை நீக்குபவன். ஈசன்; சுடரதானார் – சோதியாகவும் அதற்குக் காரணமாக விளங்கும் சுடரும் ஆனவர்.

413. மற்றுநீர் மனம்வை யாதே
மறுமையைக் கழிக்க வேண்டில்
பெற்றதோர் உபாயம் தன்னால்
பிரானையே பிதற்றுமின்கள்
கற்றுவந்து அரக்கன் ஓடிக்
கயிலாய மலையெ டுக்கச்
செற்றுகந் தருளிச் செய்தார்
திருச்சோற்றுத் துறைய னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: மறுமையில் பிறப்பு அடையாதவாறு முத்திப் பேற்றினை அடைய வேண்டுமானால், அதற்கு உபாயமாவது, ஈசனின் திருநாமத்தையே ஏத்தி உரைப்பீராக. பிறவற்றின் மீது மனத்தைப் பதிக்க வேண்டாம். அப்பெருமான் கயிலையை எடுத்த இராவணனைச் செற்று அடக்கினவர் என்றாலும், அவன் ஏத்திப் போற்ற அருளிச் செய்தவர். அவர் திருச் சோற்றுத்துறை நாதரே.

சிறப்புரை: இது, குற்றம் செய்த இராவணனுக்கும் அருள் செய்த ஈசனின் பேரருள் உடைமையை உணர்த்திற்று. இத் தன்மையில் வினை நீக்கி முத்திப் பேறு அருளும்

ஈசனின் அருள் மாண்பினை உலகுக்கு உணர்த்தியதாயிற்று.

42. திருத்துருத்தி

தல விளக்கம்: *காவிரித் தென்கரைத்தலம் 127–இல் இது, 37ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. குத்தாலம் என வழங்கப் பெறுவது. அம்பிகை பூசித்து, விதிப்படி மணம் புரிந்ததலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உடற்பிணி நீங்கிய தலம். (திருப்பூந்துருத்தி, என்பது வேறு. அது 11வது திருத்தலம். அப்பர் பாடல் பெற்றது. பதிகம் எண் 88 காண்க.) மற்றும் இரண்டாம் திருமுறை–பதிகம் எண் 98 காண்க.*

சுவாமி : *உக்தவேதீஸ்வரர், சொன்னவாறு அறிவார்*

அம்பிகை : *அமிர்தமுகிழாம்பிகை, மிருதுமுகிழாம்பிகை, பரிமள சுகந்த நாயகி, அரும்பன்ன வனமுலையாள்*

தல மரம் : *உத்தாலமரம்*

தீர்த்தம் : *சுந்தர தீர்த்தம், பத்ம தீர்த்தம், காவிரி*

தல விநாயகர் : *துணைவந்த பிள்ளையார்*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

414. பொருந்திய குரம்பை தன்னைப்
பொருளெனக் கருத வேண்டா
இருத்தியெப் பொழுதும் நெஞ்சுள்
இறைவனை யேத்து மின்கள்
ஒருத்தியைப் பாகம் வைத்தங்கு
ஒருத்தியைச் சடையுள் வைத்த

துருத்தியம் சுடரி னானைத்
தொண்ட னேன் கண்டவாறே.

தெளிவுரை: இந்த சரீரத்தை ஒரு பொருளாகக் கொள்ள வேண்டாம். நெஞ்சில் இறைவனை நிறுத்தி ஏத்துமின். அப்பெருமான், உமாதேவியை ஒரு பாகம் கொண்டு அம்மையப்பராகவும், கங்கை என்னும் நங்கையைச் சடையுள் வைத்துக் கங்காதரனாகவும் திகழ்பவர். அவர், துருத்தியில் அழகிய சுடராய் விளங்குதலைத் தொண்டனாகிய நான் கண்டேன்.

415. சவைதனைச் செய்து வாழ்வான்
சலத்துளே அழுந்து கின்ற
இவையொரு பொருளும் அல்ல
இறைவனை யேத்து மின்னோ
அவைபுரம் மூன்றும் எய்து
அடியவர்க்கு அருளிச் செய்த
சுவை யினைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்டவாறே.

தெளிவுரை: மனைவி மக்கள் உறவுகளைப் பெருக்கி வாழும் தன்மையைக் கருதித் துன்பத்திற்குள் அழுந்துவது ஒரு பொருளாக ஆகாது. ஈசனை ஏத்துமின். அவர் முப்புரங்களை எரி செய்து அடியவர்களுக்கு அருளிச் செய்பவர். ஏத்தும் அடியவர்களின் மனத்தில் இருந்து மகிழ்விப்பவர். அவர் துருத்தியில் மேவுபவர். அப்பெருமானைத் தொண்டனாகிய நான் கண்டேன்.

சுவை – சபை; உறவினர்களின் பெருக்கம்.

416. உன்னிஎப் போதும் நெஞ்சுள்
ஒருவனை ஏத்து மின்னோ
கன்னியை ஒருபால் வைத்துக்
கங்கையைச் சடையுள் வைத்துப்

பொன்னியின் நடுவு தன்னுள்
பூம்புனல் பொலிந்து தோன்றும்
துன்னிய துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே.

தெளிவுரை: நெஞ்சினுள், எல்லாக் காலத்திலும் ஈசனை வைத்து ஏத்துமின், உமாதேவியை ஒருபால் திகழ வைத்து அம்மையப்பராகிக் கங்கையைச் சடையுள் வைத்தவர், ஈசன். அப்பெருமான், காவிரியாறு இருமருங்கும் சூழ விளங்கும் துருத்தியில் விளங்கத் தொண்டனாகிய நான் கண்டேன்.

சிறப்புரை: ஒரு காலத்தில் இத்திருத்தலமானது இரு மருங்கும் காவிரியால் சூழப்பட்டு இருந்த குறிப்பானது இத்திருப்பாட்டில் ஓதப் பெற்றது. தற்போது இவ் ஆறு கோயிலின் வடபுறம் செல்கின்றது.

417. ஊன்தலை வலிய னாகி
உலகத்துள் உயிர்கட்கு எல்லாம்
தான்தலைப் பட்டு நின்று
சார்கனல் அகத்து வீழ
வான்தலைத் தேவர் கூடி
வானவர்க்கு இறைவா என்னும்
தோன்றலைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்டவாறே.

தெளிவுரை: ஊன் பெருக்கித் தடித்த உடம்பினைக் கொண்டு உலகத்தில் உள்ள பிற உயிர்களை நெரிக்கித் தானே மேன்மையுடையவனாய் நின்று, அதனால் பிறர் துன்பப் படவும், தேவர்கள் எல்லாம் துதித்து, ஈசனே! அருள் புரிவீராக என ஏத்த, அனைத்தும் புரிவிப்பர் இறைவன் ஆவார். அவர் துருத்தியில்

மேவுபவர். தொண்டனாகிய நான் அப்பெருமானைக் கண்டேன்.

418. உடல்தனைக் கழிக்க லுற்ற
உலகத்துள் உயிர்கட்கு எல்லாம்
இடர்தனைக் கழிய வேண்டில்
இறைவனை யேத்து மின்னோ
கடல்தனில் நஞ்சம் உண்டு
காண்பரி தாகி நின்ற
சுடர்தனைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே.

தெளிவுரை: உடலைக் கொண்டு கன்ம வினையைக் கழிக்க மேவும் இவ்வுலக வாழ்க்கையில், உயிர்களின் துன்பம் நீங்க வேண்டுமானால் ஈசனை ஏத்துமின். அப்பெருமான், கடலில் தோன்றிய நஞ்சினை உண்டும், காண்பதற்கு அரியதாகவும் மேவும் சோதிச் சுடராய்த் துருத்தியில் வீற்றிருப்பவர். அவரை நான் கண்டேன்.

419. அள்ளலைக் கடக்க வேண்டில்
அரனையே நினைமி னீர்கள்
பொள்ளல்இக் காயந் தன்னுள்
புண்டரீ கத்தி ருந்த
வள்ளலை வான வர்க்கும்
காண்பரி தாகி நின்ற
துள்ளலைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே.

தெளிவுரை: பிறவி என்னும் சேற்றைக் கடக்க வேண்டுமானால், ஈசனையே ஏத்துவீராக. ஈசன், இத்தேகத்திற்குள் விளங்கும் உள்ளமாகிய அகத் தாமரையில் திகழ்பவர். அப் பெருமான், அடியவர் களுக்கு வழங்குகின்ற வள்ளல். வானவர்களுக்கும்

அரியவராகிய அப்பரமன், இடப வாகனத்தில் விளங்கு பவராய்த் துருத்தியில் வீற்றிருப்பவர். அவரைத் தொண்டனேன் கண்டேன்.

420. பாதியில் உமையாள் தன்னைப்
பாகமா வைத்த பண்பன்
வேதியன் என்று சொல்லி
விண்ணவர் விரும்பி ஏத்தச்
சாதியாம் சதுர்மு கனும்
சக்கரத் தானும் காணாச்
சோதியைத் துருத்தி யானைத்
தொண்ட னேன் கண்ட வாறே.

தெளிவுரை: ஈசன், உமாதேவியைத் திருமேனியில் பாகமாக வைத்து அர்த்தநாரியாக விளங்குபவர்; வேதநாயகனாகத் தேவர்களால் விரும்பி ஏத்தப் படுபவர்; உயர்ந்த வகையாய் மேவும் பிரமனும் திருமாலும் காண்பதற்கு அரியவராகிச் சோதியாய் நெடிது ஓங்கியவர். அவர், துருத்தில் வீற்றிருக்கத் தொண்டனாகிய யான் கண்டேன்.

சாதி – உயர் தன்மை, பிறவியும் ஆகும்.

421. சாமனை வாழ்க்கை யான
சலத்து ளேஅழுந்த வேண்டா
தூமநல் அகிலும் காட்டித்
தொழுதுஅடி வணங்கு மின்னோ
சோமனைச் சடையுள் வைத்துத்
தொன்னெறி பலவும் காட்டும்
தூமனத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே.

தெளிவுரை: அழியக் கூடியதாகிய மனை வாழ்க் கையைப் பெரிதாகக் கருதி, அதன் வழியே ஏங்கித்

துன்பத்தில் அழுந்த வேண்டாம். ஈசனுக்கு நன்மணம் கமழும் அகில் முதலான தூபங்களைக் காட்டித் தொழுது, திருவடியை வணங்குவீராக. பிறைச் சந்திரனைச் சடை முடியின் மீது தரித்த ஈசன், தூய்மை யான மனத்தினர் மேவும் துருத்தியில் வீற்றிருப்பவர். தொண்டனேன் அவரைக் கண்டேன்.

சிறப்புரை: மனை வாழ்க்கையின் துன்பப் பாங்கு, "சாமனை வாழ்க்கை" என ஓதப் பெற்றது. இத் தன்மையில், சுந்தரமூர்த்தி சுவாமிகள், "வெறுத் தேன்மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன் விளங்கும் குழைக்காதுடை வேதியனே" (திரு அஞ்சைக்களம் திருப்பதிகம்; பாடல் 8) எனவும்; மாணிக்கவாசகர், "வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும் பித்த உலகு" (திருக்கோத்தும்பி; பாடல் 6) எனவும் அருளிச் செய்தவாறும் காண்க.

சா – மடிதல், அழிதல்; சோமன் – சந்திரன்.

422. குண்டரே சமணர் புத்தர்
 குறியறி யாது நின்று
கண்டதே கருதுவார்கள்
 கருத்தொண்ணாது ஒழிமினீர்கள்
விண்டவர் புரங்கள் எய்து
 விண்ணவர்க்கு அருள்கள் செய்த
தொண்டர்கள் துணையி னானைத்
 துருத்திநான் கண்ட வாறே.

தெளிவுரை: சமணரும் புத்தரும் மெய்ந் நிலையாகிய குறிக்கோளை — சிவலிங்கத்தின் சிறப்பினை அறியாது, தமக்குச் சரி எனப் புலனாதலை மொழிவர். அவற்றை ஏற்க வேண்டாம். பகைவராகிய முப்புர அசுரர்களை வென்று, எரி செய்து, தேவர்களுக்கு அருள் புரிந்த

பரமன், துருத்தியில் மேவுபவர். அப் பெருமான், திருத்தொண்டர்களுக்குத் துணையாக விளங்குபவர். அவரை நான் கண்டேன்.

சிறப்புரை: ஈசனே குறியாக மேவி விளங்கும் தன்மை யானது, இத்திருப்பாட்டில் உணர்த்தப் பெற்றது. இது, ஈசனை அறியும் குறிக்கோளும், அவ்வழி ஒழுகுகின்ற நெறியும் உரைத்தலாயிற்று. சுந்தரமூர்த்தி சுவாமிகள், "நெறியே நின்மலனே! நெடுமால் அயன் போற்றி செய்யும் குறியே நீர்மையனே!'' (திருமழபாடி திருப்பதிகம் 9) என அருளிச் செய்தவாறும் நோக்குக. "குறிக்கோள் இலாது கெட்டேன் சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்துளானே!'' (பாடல் வ.எண் 657) என்னும் அப்பர் திருவாக்கும் காண்க.

குறி – குறிக்கோள், சிவலிங்கமும் ஆம்.

423. பிண்டத்தைக் கழிக்க வேண்டில்
பிரானையே பிதற்று மின்கள்
அண்டத்தைக் கழிய நீண்ட
அடலரக் கன்றன் ஆண்மை
கண்டொத்துக் கால்விரலால்
ஊன்றிமீண்டு அருளிச் செய்த
துண்டத்துத் துருத்தி யானைத்
தொண்ட னேன் கண்ட வாறே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இவ் உடம்பினைக் கொண்டு பிறந்து, வாழும் நிலையை விட வேண்டும். எனக் கருது வீராயின், ஈசனின் திருநாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சாடனம் செய்வீராக. அவர், இராவணனின் ஆண்மையைத் திருப்பாத விரலால் ஊன்றி அழித்து, மீண்டும் அருளிச் செய்த அருளுடையவர்.

அப்பெருமான், நிலவின் துண்டைத் தரித்துத் துருத்தியில் வீற்றிருப்பவர். அவரைத் தொண்டனேன் கண்டேன்.

பிண்டம் – பிறப்பு, உடல்; துண்டம் – பிறைச் சந்திரன்; நிலவுத் துண்டு.

43. திருக்கச்சிமேற்றளி

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம் 32இல், இது இரண்டாவது திருத்தலம். திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆகியோர் பாடல் பெற்றது. காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் என்னும் பகுதியில் உள்ளது. திருமால் பூசித்துச் சிவசாரூபம் பெற்ற திருத்தலம்.

சுவாமி : திருமேற்றளி நாதர்

அம்பிகை : திருமேற்றளி நாயகி

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

424. மறையது பாடிப் பிச்சைக்கு
என்றுஅகம் திரிந்து வாழ்வார்
பிறையது சடைமு டிமேற்
பெய்வளை யாள்த னோடும்
கறையது கண்டம் கொண்டார்
காஞ்சிமா நகர்தன் உள்ளார்
இறையவர் பாடல் ஆடல்
இலங்குமேற் றளிய னாரே.

தெளிவுரை: ஈசன், வேதங்களைப் பாடி, மனைகள் தோறும் திரிந்து பிச்சை ஏற்று வாழ்பவர்; பிறைச் சந்திரன் விளங்கும் சடை முடியின் மீது கங்கையைத்

தரித்தவர்; நீலகண்டத்தை உடையவர்; காஞ்சி மாநகருள் மேவும் இறைவர். அவ்வர் பாடலும் ஆடலும் ஓயாது மேவும் திருமேற்றளிநாதரே ஆவார்.

பெய் வளையாள் – கங்கை; மேற்றளியனார் – கோயிலின் திருப் பெயரும் ஈசன் திருப்பெயரும் உணர்த்திற்று.

425. மாலன மாயன் றன்னை
மகிழந்தனர் விருத்தராகும்
பாலனார் பசுபதியார்
பால்வெள்ளை நீறுபூசிக்
காலனைக் காலாற் செற்றார்
காஞ்சிமா நகர்தன் உள்ளார்
ஏலநற் கடம்பன் தந்தை
இலங்குமேற் றளிய னாரே.

தெளிவுரை: ஈசன், மேகம் போன்ற வண்ணம் கொண்ட திருமாலை· மகிழ்ந்து ஏற்றவர்; விருத்தராகவும் பாலராகவும் விளங்குபவர்; உயிர்களுக்கெல்லாம் தலைவர்; பால் போன்ற திருவெண்ணீறு அணிந்தவர்; காலனைத் திருப்பாதத்தால் உதைத்து அழித்தவர்; காஞ்சி மாநகருள் விளங்குபவர்; நறுமணம் கமழும் கடப்பமாலை அணிந்த முருகவேளின் தந்தை. அவர் மேற்றளியில் மேவும் திருமேற்றளிநாதரே ஆவார்.

மால் – மேகம்; பசு – உயிர்.

426. விண்ணிடை விண்ண வர்கள்
விரும்பிவந்து இறைஞ்சி வாழ்த்தப்
பண்ணிடைச் சுவையின் மிக்க
கின்னரம் பாடல் கேட்பார்
கண்ணிடை மணியின் ஒப்பார்
காஞ்சிமா நகர்தன் உள்ளார்

எண்ணிடை எழுத்தும் ஆனார்
இலங்குமேற் றளிய னாரே.

தெளிவுரை: விண்ணுலகத்தில் மேவும் தேவர்கள் விரும்பி வந்து இறைஞ்சி வாழ்த்த விளங்கும் சிவபெருமான், பண்ணின் சுவை மிகுந்த புகழ்ப் பாடல்களைக் கேட்டு மகிழ்பவர்; கண்ணில் விளங்கும் மணிபோன்றவராகி ஒளி கொண்டு உணர்த்துபவர்; எண்ணிடை எழுத்தும் ஆனவர். அவர், திருமேற்றளி நாதரே ஆவார்.

சிறப்புரை: எண் என்பது கணிதம். அது, கருவியும் செய்கையும் என இரு வகைப்படும். அதனோடு ஒற்றுமையுடையது எழுத்து. இது அதனோடு இயையும் சொல்லும் அதற்கு உரிய பொருளும் ஆயின. (திருக்குறள், பரிமேலழகர் உரை) ஈசன், கருவியும் செய்கையும், சொல்லும், அதன் பொருளும், அதனை அறிவிக்கும் கண்ணும் ஒளியும் ஆகுதல், "கண்ணிடை மணியின் ஒப்பார்," "எண்ணிடை எழுத்தும் ஆனார்" என உணர்த்துதல் ஆயிற்று.

427. சோமனை அரவி னோடு
சூழ்தரக் கங்கை சூடும்
வாமனை வானவர்கள்
வலங்கொடு வந்து போற்றக்
காமனைக் காய்ந்த கண்ணார்
காஞ்சிமா நகர்தன் உள்ளார்
ஏமநின் றாடும் எந்தை
இலங்குமேற் றளிய னாரே.

தெளிவுரை: ஈசன், சந்திரனை அரவத்தோடு கங்கையும் சூழ்ந்து விளங்குமாறு சூடியவர்; அழகர்; தேவர்களால் போற்றப்படுபவர்; மன்மதனை எரித்தவர்; காஞ்சிமா

நகரின் உள்ளே இனிது நின்று ஆடும் எந்தை. அவர், திருமேற்றளிநாதரே ஆவார்.

வாமன் – அழகுடையவன், ஈசன்; ஏமம் – இனிமை, பாதுகாவல்.

428. ஊனவர் உயிரி னோடும்
உலகங்கள் ஊழி யாகித்
தானவர் தனமும் ஆகித்
தனஞ்செய னோடு எதிர்ந்த
கானவர் காள கண்டர்
காஞ்சிமா நகர்தன் உள்ளார்
ஏனம்அக் கோடு பூண்டார்
இலங்குமேற் றளிய னாரே.

தெளிவுரை: ஈசன், ஊனாய் விளங்கும் உடம்பாகவும், அதன் உயிராகவும், உலகமாகவும், ஊழிக்கால மாகவும், தானம் செய்யும் தன்மையாகவும், செய்யப் பெறும் தனங்களாகவும் விளங்குபவர்; அருச்சுன னோடு எதிர்த்துப் போர் செய்த, கானில் விளங்கும் வேடராகியவர்; கரிய கண்டத்தை உடையவர்; காஞ்சி நகரின் உள்ளே பன்றியின் கொம்பும், எலும்பும், மண்டை ஓடும் பூண்டவர். அவர் திருமேற்றளி நாதரே ஆவார்.

சிறப்புரை: ஈசன் ஊனாகவும் உயிராகவும் விளங்குதல், "ஊனவர் உயிரினோடும்" என ஓதப் பெற்றது. இத்தன்மையில், "ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்" என அருளிச் செய்யப்பட்ட திருவாசக அமுத வாக்கும் காண்க.

தனஞ்செயன் – அருச்சுனன்; ஏனம் – பன்றி.

429. மாயனாய் மால னாகி
மலரவ னாகி மண்ணாய்த்

தேயமாய்த் திசைஎட்டாகித்
தீர்த்தமாய்த் திரிதர் கின்ற
காயமாய்க் காயத்துள்ளார்
காஞ்சிமா நகர்தன் உள்ளார்
ஏயமென் தோளி பாகர்
இலங்குமேற் றளிய னாரே.

தெளிவுரை: ஈசன் – திருமால், இந்திரன், நான்முகன் எனத் திகழ்பவர்; நிலம், தேசம் எட்டுத் திசைகளாகவும் திகழ்பவர்; புனித தீர்த்தமாக விளங்குபவர்; திரிந்து உலவுகின்ற சரீரமாகவும், அச்சரீரத்தில் மேவும் சீவனாகவும் விளங்குபவர். அவர் காஞ்சி மாநகரில் மென்மையான தோளுடைய உமாதேவியைப் பொருந்த மேவி விளங்கும் அம்மையப்பராகியவர். அவர், திகழ்கின்ற திருமேற்றளிநாதரே ஆவார்.

மாயன் – திருமால்; மால் – இந்திரன்;
காயத்துள்ளார் – சீவன், ஆன்மா.

430. மண்ணினை உண்ட மாயன்
தன்னையோர் பாகம் கொண்டார்
பண்ணினைப் பாடி யாடும்
பக்தர்கள் சித்தம் கொண்டார்
கண்ணினை மூன்றும் கொண்டார்
காஞ்சிமா நகர்தன் உள்ளார்
எண்ணினை எண்ண வைத்தார்
இலங்குமேற் றளிய னாரே.

தெளிவுரை: சிவபெருமான், உலகத்தை உண்டு காத்தருளிய திருமாலை ஒரு பாகமாக உடையவர்; பண்ணின் இசை பெருகப் பாடி ஆடும் பக்தர்களின் சித்தத்தில் விளங்குபவர்; மூன்று கண்களை உடையவர்; காஞ்சி மாநகரில் விளங்குபவர்.

அப்பெருமான், எண்ணத்தில் யாவும் எண்ணுமாறு புரிந்து, பக்தியை அருள்பவர். அவர், நனி விளங்குகின்ற திருமேற்றளி நாதரே ஆவர்.

431. செல்வியைப் பாகம் கொண்டார்
சேந்தனை மகனாக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு
மாமலர்க் கொன்றை சூடிக்
க்ல்வியைக் கரையி லாத
காஞ்சிமா நகர்தன் னுள்ளார்
எல்லியை விளங்க நின்றார்
இலங்குமேற் றளிய னாரே.

தெளிவுரை: சிவபெருமான், அறம் வளர் செல்வியாகத் திகழ்ந்த உமாதேவியை — காமாட்சியை ஒரு பாகமாகக் கொண்டவர்; முருகனைத் திருமகனாகக் கொண்டவர்; கங்கையோடு கொன்றை மாலை சூடியவர்; கல்வியின் பெருக்கமும் மேன்மையையும் எல்லையற்று மேவும் காஞ்சி மாநகரில், கதிரவனைப் போன்று ஒளி விளங்க நின்றவர். அப்பெருமான், நன்கு விளங்கும் திருமேற்றளிநாதரே ஆவார்.

மல்லிகைக் கண்ணி – கங்கையை உவமித்தது; எல்லி – சூரியன்; செல்வி – எக்காலத்திலும் கன்னித் தன்மையில் மேவும் உமாதேவி.

432. வேறிணை யின்றி என்றும்
விளங்கொளி மருங்கி னாளைக்
கூறியல் பாகம் வைத்தார்
கோளரா மதியும் வைத்தார்
ஆறினைச் சடையுள் வைத்தார்
அணிபொழில் கச்சி தன்னுள்
ஏறினை ஏறும் எந்தை
இலங்குமேற் றளிய னாரே.

தெளிவுரை: உவமை கூறுவதற்கு வேறு ஏதும் இன்றி ஒளி போன்று திகழும் உமாதேவியை ஒரு பாகமாக வைத்து மேவும் சிவபெருமான், அரவமும் சந்திரனும் தரித்திருப்பவர்; கங்கையைச் சடை முடியில் வைத்துள்ளவர். அழகிய பொழில் விளங்கும் கச்சியில் திகழும் அப்பெருமான், இடபத்தின் மீது வீற்றிருக்கும் எந்தையாவார். அவர் நன்கு விளங்கும் திருமேற்றளியில் திகழ்பவரே.

433. தென்னவன் மலையெ டுக்கச்
சேயிழை நடுக்கம் கண்டு
மன்னவன் விரலால் ஊன்ற
மணிமுடி நெரிய வாயால்
கன்னலின் கீதம் பாடக்
கேட்டவர் காஞ்சி தன்னுள்
இன்னவற்கு அருளிச் செய்தார்
இலங்குமேற் றளிய னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இராவணன் கயிலையை எடுத்த ஞான்று, உமாதேவியார் நடுக்கம் உற, ஈசன், தன் திருப்பாத விரலால் ஊன்றி அவ் அரக்கனின் மணிமுடியை நெரித்தனர். அவ்வமயம் அவ்வரக்கன், சாமவேத கீதம் பாடக் கேட்ட ஈசன், காஞ்சியுள்ளிருந்து அருள் புரிந்தனர். அவர், நனி விளங்கும் திருமேற்றளியில் வீற்றிருப்பவரே ஆவார்.

தென்னவன் – இராவணன்; சேயிழை – உமாதேவி;
மன்னவன் – ஈசன்.

44. திருக்கச்சியேகம்பம்

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 7 காண்க.

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

434. நம்பனை நகர மூன்றும்
எரியுண வெருவ நோக்கும்
அம்பனை அமுதை ஆற்றை
அணிபொழிற் கச்சியுள்ளே
கம்பனை கதிர்வெண் திங்கள்
செஞ்சடைக் கடவுள் தன்னைச்
செம்பொனைப் பவளத் தூணைச்
சிந்தியா எழுகின் றேனே.

தெளிவுரை: சிவபெருமான், எல்லாராலும் நம்புவதற்கு உரியவராய் ஏத்தப்படுபவர்; முப்புர அசுரர்களை எரித்த அம்பினை உடையவர்; பக்தர்களுக்கு அமுதம் போன்றவர்; அடியவர்களுக்கு நல்வழி காட்டும் நெறியாகத் திகழ்பவர்; கச்சித் திருவேகம்பத்தில் விளங்குபவர்; வெண்திங்களைச் சிவந்த சடைமுடியில் சூடிய கடவுளாவார்; செம்மை திகழும் பொன் போன்றவர்; பவளத் தூண் போன்று ஒளிர்பவர். அப்பெருமானை நான் சிந்தித்து, மேன்மையாய்த் திகழும் அருள் விளங்க எழுகின்றனன்.

435. ஒருமுழம் உள்ள குட்டம்
ஒன்பது துளையு டைத்தாய்
அரைமுழம் அதன்அ கலம்
அதனில்வாழ் முதலை ஐந்து

பெருமுழை வாய்தல் பற்றிக்
கிடந்துநான் பிதற்று கின்றேன்
கருமுகில் தவழு மாடக்
கச்சியே கம்ப னீரே.

தெளிவுரை: இத் தேகமானது ஒன்பது துளையுடைய சிறிய குட்டை போன்றது. அதில் ஐம்புலன்கள் என்னும் முதலைகள் பற்றி இழுக்க, அதன் வாயில் அகப்பட்டுக் கிடந்து மீளும் வழி தெரியாது நான் பிதற்றுகின்றேன். மேகம் தவழும் உயர்ந்த மாடங்கள் திகழும் கச்சியில் வீற்றிருக்கும் ஏகம்பப் பெருமானே! என்னைக் காத்தருள் புரிவீராக.

சிறப்புரை: ஒரு முதலையால் பற்றிக் கவ்வப்பட்டாலும் மீண்டு வர இயலாத நிலையில், ஐந்து முதலைகள் நீரில் திகழ்ந்து என்னைப் பற்றி இழுக்க நான் எங்ஙனம் மீள்வேன்! ஏகம்பனே! என்று ஆற்றாமையும் அச்சமும் ஒரு சேர உணர்த்தியதாயிற்று. ஐந்து புலன்களும் ஐந்து முதலைகளாக உருவகிக்கப் பெற்ற பாங்கினை ஓர்க.

கம்பனீரே – திருவேகம்பர், ஈசன் திருநாமம்; முதலையின் வாயிலிருந்து காக்கும் தூண் போன்ற உறுதியான பற்றுக் கோடு நீவிரே.

436. மலையினார் மகளோர் பாக
மைந்தனார் மழுவொன்று ஏந்திச்
சிலையினால் மதில்கள் மூன்றும்
தீயெழச் செற்ற செல்வர்
இலையினார் சூலம் ஏந்தி
ஏகம்பம் மேவி னாரைத்
தலையினால் வணங்க வல்லார்
தலைவர்க்கும் தலைவர் தாமே.

தெளிவுரை: சிவபெருமான், மலைமகளாகிய உமா தேவியைப் பாகமாகக் கொண்ட அழகர்; முப்புரங் களைத் தீயினால் எரித்த செல்வர்; மூவிலையுடைய சூலப் படை ஏந்தி, ஏகம்பம் மேவி வீற்றிருப்பவர்; யாவராலும் தலை தாழ்த்தி ஏத்தி வணங்கத் திகழ்பவர். அப்பெருமான், உலகிடைத் தலைவர் என மதிக்கப் பெறும் அனைவருக்கும் தலைவராக விளங்குபவர்.

இது ஈசனே யாவருக்கும் தலைவராக இருந்து புரந்தருள் செய்யும் பெற்றியை ஓதுதலாயிற்று.

437. பூத்தபொற் கொன்றை மாலை
புரிசடைக்கு அணிந்த செல்வர்
தீர்த்தமாம் கங்கை யாளைத்
திருமுடி திகழ வைத்து
ஏத்துவார் ஏத்த நின்ற
ஏகம்பம் மேவி னாரை
வாழ்த்துமாறு அறிய மாட்டேன்
மால்கொடு மயங்கி னேனே.

தெளிவுரை: சிவபெருமான், பொன்போன்று பூத்து விளங்கும் கொன்றை மாலையைச் சடை முடியின் மீது அணிந்த செல்வர்; புனித தீர்த்தமாய் இருந்து பாவங் களைத் தீர்க்கும் கங்கையைத் திருமுடியில் திகழ்ந்து விளங்க வைத்தவர்; ஏத்தித் தொழுகின்ற திருவேகம்பம் என்னும் திருக்கோயிலில் மேவி இருந்து, பக்தர்களுக்கு அருள் புரிபவர். அப்பெருமானை வாழ்த்திப் போற்றும் நெறியினை அறியாது, மயக்கத்தில் சோர்ந்து ஏங்குகின்றேன்.

438. மையினார் மலர்நெ டுங்கண்
மங்கையோர் பங்கர் ஆகிக்

கையிலோர் கபாலம் ஏந்திக்
கடைதொறும் பலிகொள்வார்தாம்
எய்வதோர் ஏனம் ஒட்டி
ஏகம்பம் மேவி னாரைக்
கையினால் தொழவல் லார்க்குக்
கடுவினை களைய லாமே.

தெளிவுரை: சிவபெருமான், குவளை மலர் போன்ற கண்ணுடைய உமாதேவியை ஒரு பாகமாக உடையவர்; கையில் பிரம கபாலம் ஏந்தி, மனைகள் தோறும் சென்று பலி ஏற்பவர்; பாசுபதம் வேண்டித் தவம் புரிந்த அருச்சுனனைத் தாக்க வந்த, பன்றி வடிவம் தாங்கிய அசுரனைத் தொடர்ந்து சென்று அம்பு எய்தவர்; கச்சியேகம்பத்தில் வீற்றிருப்பவர். அப்பெருமானைக் கையால் தொழுது ஏத்தி வணங்கு பவர்களுக்குக் கடுமையாய் வாட்டும் வினை யாவும் விலகிப் போகும்.

சிறப்புரை: உமாதேவியின் விழியின் சிறப்பானது, "மையினார் மலர் நெடுங்கண்" என உணர்த்தப் பெற்றது. இது மைவண்ணமும், மலரின் மென்மையும், தண்மையின் ஒளியும், அருளின் திறமும் ஒரு சேரக் குவளை மலரை உவமித்து உணர்த்தும் தன்மையதாம். இத்தகைமையில் மாணிக்கவாசகர், "குவளைக் கண்ணி கூறன் காண்க; அவளும் தானும் உடனே காண்க" என அருளிச் செய்தமையும் நோக்குக. இத் திருத்தலத்தின் தேவியாக விளங்கும் அம்பிகை, "காமாட்சி" என்னும் திருப்பெயராதலும், அப்பெரு மாட்டி, தனது விழியின் நோக்கினால் அடியவர்களின் விருப்பத்தை நிறைவு செய்பவள் என்பதும், உணர்த்தும் பாங்கு ஆயிற்று (அட்சி – கண்).

அடியவர்தம் அன்பின் பெருக்கமும் அரனின் அருள் வல்லமையும் ஒருசேர விளங்கும் தன்மையில், மன்னுயிர்கள் திறம் பெற்று மேவுதல் "தொழவல்லார்" என்பது உணர்த்துதல் ஆயிற்று.

வினை சிறிதாயினும் பெரிதாயினும் உறுத்து வந்து ஊட்டும் தன்மையாய் இருத்தலின், கடு வினை என ஓதுதலாயிற்று.

கடுவினை – வினையை உணர்த்தும் கடுமையை ஓதுதலாம்.

439. தருவினை மருவுங்கங்கை
தங்கிய சடையன் எங்கள்
அருவினை யகல நல்கும்
அண்ணலை அமரர் போற்றும்
திருவினைத் திருவே கம்பம்
செப்பிட உறைய வல்ல
உருவினை உருகி யாங்கே
உள்ளத்தால் உகக் கின்றேனே.

தெளிவுரை: சிவபெருமான், தன்பால் அடைந்து நீராடும் அன்பர்களின் பாவத்தைத் தீர்த்து, நன்மை தரும் பெருஞ் சிறப்புடைய கங்கை தங்கிய சடை உடையவர்; எங்கள் அரிய வினை தீர்க்கும் அண்ணல்; தேவர்கள் போற்றும் செல்வர்; "திருவேகம்பனே" எனச் சொல்லும் அடியவர்களின் உள்ளத்தில் உறையும் உருவமானவர். அப்பெருமானை நான் உள்ளம் ஒன்றி ஏத்தி மகிழ்கின்றேன்.

440. கொண்டதோர் கோல மாகிக்
கோலக்கா உடைய கூத்தன்
உண்டதோர் நஞ்ச மாகில்
உலகெலாம் உய்ய உண்டான்

எண்டிசை யோரும் ஏத்த
நின்றஏ கம்பன் றன்னைக்
கண்டுநான் அடிமை செய்வான்
கருதியே திரிகின் றேனே.

தெளிவுரை: ஈசன், பலவாகிய திருக்கோலங்களைத் தாங்கி மேவுபவர்; திருக்கோலக்காவில் வீற்றிருந்து நடனம் புரிபவர்; உலகம் யாவும் உய்ய வேண்டும் என்னும் அருளுகையால் நஞ்சினை உட்கொண்டவர்; எட்டுத் திக்குகளில் உள்ள மக்களும் ஏத்தி வணங்கும் திருவேகம்பர். அப்பெருமானைத் தரிசித்து அடிமை செய்யும் நோக்கத்தில் நான் திரிகின்றேன்.

441. படம்உடை அரவி னோடு
பனிமதி யதனைச் சூடிக்
கடம்உடை உரிவை மூடிக்
கண்டவர் அஞ்ச அம்ம
இடம்உடைக் கச்சி தன்னுள்
ஏகம்பம் மேவினான்றன்
நடம்உடை ஆடல் காண
ஞாலந்தான் உய்ந்த வாறே.

தெளிவுரை: சிவபெருமான், படம் எடுத்து ஆடுகின்ற அரவத்தோடு, குளிர்ந்த சந்திரனையும் சூடியுள்ளவர்; மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்வையாக்கிக் கொண்டு கண்டவர் அஞ்சுமாறு வீரம் விளைவித்தவர்; கச்சியுள் மேவும் திருவேகம் பத்தில் வீற்றிருப்பவர்; நடனச் சிறப்புடைய திருநடனம் புரிபவர். அப் பெருமானைக் கண்டுற்ற இவ்வுலகமே உய்ந்தது.

இது மக்கள் தரிசித்து உய்தலையும் அதன்வழி உலகம் உய்தலையும் சுட்டுதலாம்.

442. பொன்திகழ் கொன்றை மாலை
பொருந்திய நெடுந்தண் மார்பர்
நன்றியில் புகுந்துஎன் உள்ளம்
மெள்ளவே நவில நின்று
குன்றியில் அடுத்த மேனிக்
குவளையங் கண்டர் எம்மை
இன்துயில் போது கண்டார்
இனியரே கம்ப னாரே.

தெளிவுரை: சிவபெருமான், பொன் போன்று திகழும் கொன்றை மாலை அணிந்த நெடிய மார்பினை உடையவர்; நன்றி செய்யும் கடப்பாடு உடைய இவ்வுடம்பில் புகுந்து, என் உள்ளமானது மெள்ள ஏத்தித் தொழக் குன்றிமணியின் செவ்வண்ணராகக் காட்சி தருபவர், நீலகண்டர். அப் பெருமான் நான் இனிய யோக நித்திரையில் இருந்த போதுகண்டவர்; இனியவர். அவர் திருவேகம்பரே.

சிறப்புரை: இத்திருப்பாட்டானது, ஈசனைத் தியானித்து ஏத்தும் பெருமையினையும், கிரியைகளால் வணங்கி ஏத்தும் கடப்பாட்டினையும் உணர்த்துவதாயிற்று.

இன்துயில் – இனிய யோக நித்திரை.

443. துருத்தியார் பழனத் துள்ளார்
தொண்டர்கள் பலரும் ஏத்த
அருத்தியால் அன்பு செய்வார்
அவரவர்க்கு அருள்கள் செய்தே
எருத்தினை இசைய ஏறி
ஏகம்பம் மேவி னார்க்கு
வருத்திநின்று அடிமை செய்வார்
வல்வினை மாயு மாறே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவபெருமான், திருத்துருத்தி யென்னும் தலத்தில் விளங்குபவர்; திருப்பழனத்தில் வீற்றிருப்பவர்; திருத்தொண்டர்கள் செலுத்தும் அன்பு வழிபாட்டினை ஏற்று அவரவர்களுக்கு வேண்டிய வாறு அருள்களைப் புரிபவர்; இடபவாகனத்தில் உகந்து ஏறித் திருவேகம்பத்தில் திகழ்பவர். அப் பெருமானுக்கு, உடலை வருத்தி மெய்த் தொண்டு செய்வதானது அன்பர்களின் வினை யாவும் மாய்வதற்குரிய வழியாகும்.

சிறப்புரை: திருநாவுக்கரசர் உழவாரப் பணி புரிந்த சிறப்பானது, அவருக்கே உரியதாகப் போற்றப்படுதல், "வருத்தி நின்று மேவி னார்க்கு வல்வினை மாயு மாறே" என ஓதப் பெறுதலாயிற்று. இத் தன்மையில் அப்பர் சுவாமிகள் ஆற்றிய உழவாரப் பணியின் சிறப்பினைச் சிவஞானசுவாமிகள்,

இடையறாப் பேரன்பும் இணைவிழியும் உழவாரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே
பதித்தநெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகை தன்
ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் திருவேடப் பொலி வழகும்
துதித்துவாழ்வோம்

என அருளிச் செய்தவாறும் காண்க.

வினை மாயு மாறே – வினையானது மாயும் வழியேயாதல்.

45. திருவொற்றியூர்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம் 32இல், இது 20ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. இருபத்தேழு நட்சத்திரங்கள் வழிபட்ட தலம்.

சுந்தரர், சங்கிலியாரைத் திருமணம் செய்து கொண்ட திருத்தலம். சூள் தவறியதால் இத் தலத்தின் எல்லையை நீங்கிய சுந்தரருக்குக் கண் பார்வை நீங்கியது. பின்னர் அவர் காஞ்சியில் இடக் கண்ணும், திருவாரூரில் வலக் கண்ணும் திரும்பப் பெற்றார் என்பது வரலாறு.

மற்றும் முதல் திருமுறை. பதிகம் எண் 57 காண்க.

சுவாமி : ஆதிபுரீஸ்வரர், புற்றிடங்கொண்டார், படம் பக்க நாதர், எழுத்தறியும் பெருமான், தியாகேசர்

அம்பிகை : வடிவுடையம்மை, திரிபுரசுந்தரி

தல மரம் : மகிழ மரம்

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

444. வெள்ளத்தைச் சடையில் வைத்த
வேதகீ தன்றன் பாதம்
மெள்ளத்தான் அடைய வேண்டின்
மெய்தரு ஞானத் தீயால்
கள்ளத்தைக் கழிய நின்றார்
காயத்துக் கலந்து நின்று
உள்ளத்துள் ஒளியும் ஆகும்
ஒற்றியூர் உடைய கோவே.

தெளிவுரை: கங்கையைச் சடையில் வைத்த வேதகீதன், சிவபெருமான். அப் பெருமானுடைய திருப்பாதத்தில் சேர வேண்டுமானால், மெய்ஞ்ஞானத்தின் துணை கொண்டு, மனத்தில் தோன்றும் கள்ளம் முதலான குற்றங்களை நீக்குமின். அப்போது, இத்தேகத்துள் கலந்து மேவும் உள்ளத்தின் ஒளியாக விளங்கும்

பெருமான் தோன்றுவார். அவர் ஒற்றியூரில் மேவும் தலைவரே.

445. வசிப்பெனும் வாழ்க்கை வேண்டா
வானவர் இறைவன் நின்று
புசிப்பதோர் பொள்ளல் ஆக்கை
அதனொடும் புணர்வு வேண்டில்
அசிர்ப்பெனும் அருந்த வத்தால்
ஆன்மாவின் இடம தாகி
உசிர்ப்பெனும் உணர்வும் உள்ளார்
ஒற்றியூர் உடைய கோவே.

தெளிவுரை: மனை வாழ்க்கையைப் பெரிதாகக் கொள்ள வேண்டாம். இவ்வுடம்பின் நிலையற்ற தன்மையை உணர்ந்து கொள்வீராக. ஈசன், ஆன்மாவை இடமாகக் கொண்டுள்ளவர். அதன் சிறப்பினை அருந்தவத்தின் உணர்வுடையவர்கள் அறிவர். ஒன்றி நின்று ஏத்தினால் பரமன் அவ்வுணர்வில் திகழ்பவர். அவரே ஒற்றியூரில் வீற்றிருக்கும் தலைவர்.

446. தானத்தைச் செய்து வாழ்வான்
சலத்துளே அழுந்து கின்றீர்
வானத்தை வணங்க வேண்டில்
வம்மின்கள் வல்லீ ராகில்
ஞானத்தை விளக்கை யேற்றி
நாடியுள் விரவ வல்லார்
ஊனத்தை ஒழிப்பர் போலும்
ஒற்றியூர் உடைய கோவே.

தெளிவுரை: தானம் செய்து பெருமையுடைய வாழ்க்கையில் மேவினும், பிறவி என்னும் துன்ப மானது வந்தடைதல் மெய்ம்மை. மேலான சிறப்பினை

அடைய வேண்டும் என விழைவீராயின், வம்மின். ஞான விளக்கை ஏற்றுவீர்! உள்ளத்தில் ஒளி பெறுவீர். அஞ்ஞானத்திலிருந்து நீங்குவீர். அத்தகைய ஊனத்தை ஒழிப்பவர் ஒற்றியூரில் வீற்றிருக்கும் பரமனே.

447. காமத்துள் அழுந்தி நின்று
கண்டரால் ஒறுப்புண் ணாதே
சாமத்து வேத மாகி
நின்றதோர் சயம்பு தன்னை
ஏமத்தும் இடையி ராவும்
ஏகாந்தம் இயம்பு வார்க்கு
ஓமத்துள் ஒளியதாகும்
ஒற்றியூர் உடைய கோவே.

தெளிவுரை: மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை எனப்படும் மூன்று வகையான் ஆசையின்பால் அழுந்திப் பாவம் செய்து, கால தூதர்களால் தண்டனை அடையாது, சாமவேதமாக நின்ற சுயம்புவாகிய ஈசனை ஏத்துமின். பகலும் இரவும் ஏகாந்தமாக இருந்து தியானம் செய்மின். அப்பெருமான், புறவேள்வியின் ஒளியாகும் மாண்பினைப் போன்று, அகத்துள் மேவி ஒளி தந்து உய்வு பெறச் செய்பவர். அத்தகைய பெருமான், ஒற்றியூரில் வீற்றிருக்கும் பரமனே.

சாமத்து – சாமவேதம்; கண்டர் – எமதூதர்கள்;
ஏமம் – பகல்; ஓமம் – வேள்வி.

448. சமைய மேல் ஆறுமாகித்
தானொரு சயம்பு வாகி
இமையவர் பரவி யேத்த
இனிதில் அங்கு இருந்த ஈசன்
கமையினை யுடைய ராகிக்
கழலடி பரவு வார்க்கு

உமையொரு பாகர் போலும்
ஒற்றியூர் உடைய கோவே.

தெளிவுரை: சிவபெருமான், மேலான சமயங்கள் ஆறும் ஆகியவர்; சுயம்பாகி விளங்குபவர்; தேவர்களால் பரவிப் போற்றப்படுபவர்; மனத்தின்கண் பரப்பு அற்ற தன்மையில் சாந்தத்தைக் கொண்டு விளங்கித் திருக் கழலை ஏத்தும் அன்பர்களுக்கு, உமையொரு பாகராய் விளங்குபவர். அவர், ஒற்றியூரில் மேவும் தலைவரே.

கமை – பொறுமை, அமைதி, சாந்தம்;
ஆறு சமயம் – திருப்பாட்டு 136 காண்க.

449. ஒருத்திதன் தலைச்சென் றாளைக்
கரந்திட்டான் உலகம் ஏத்த
ஒருத்திக்கு நல்ல னாகி
மறுப்படுத்து ஒளித்து மீண்டே
ஒருத்தியைப் பாகம் வைத்தான்
உணர்வினால் ஐயம் உண்ணி
ஒருத்திக்கு நல்ல னல்லன்
ஒற்றியூர் உடைய கோவே.

தெளிவுரை: ஈசன், கங்கையைச் சடையுள் வைத்து, நல்லன் என ஏத்துமாறு ஆகியவர். அவர், உமா தேவியைப் பாகமாக வைத்துக் கங்கையை ஒளித்த தன்மையினை உள்ளத்தில் ஐயமாகக் கொண்டு, நல்லன் அல்லராகியவாறு விளங்குபவர். அவர் ஒற்றியூரில் மேவும் தலைவரே.

இது, இரு தேவியரையுடைய ஈசனின் அருள் வண்ணத்தைக் கவி நயம் தோன்ற ஓதப் பெற்றதாம்.

450. பிணமுடை யுடலுக் காகப்
பித்தராய்த் திரிந்து நீங்கள்

புணர்வெனும் போகம் வேண்டா
போக்கலாம் பொய்யை நீங்க
நிணமுடை நெஞ்சின் உள்ளால்
நினைக்குமா நினைக்கின் றார்க்கு
உணர்வி னோடு இருப்பர் போலும்
ஒற்றியூர் உடைய கோவே.

தெளிவுரை: பிணமாகக்கூடியதும், முடை நாற்றம் கொள்ளக்கூடியதும் ஆகிய உடலுக்காகப் பித்தர் போல் திரிந்து, போகத்தைக் கொள்ள வேண்டாம். இது, பொய்ம்மை உடையது. நெஞ்சார நினைத்து ஏத்தும் அன்பர்களுக்கு உணர்வாக விளங்குபவர், சிவபெருமான். அப்பெருமானை நினைமின். அவர், ஒற்றியூரில் மேவும் கோவே.

451. பின்னுவார் சடையான் றன்னைப்
பிதற்றிலாப் பேதை மார்கள்
துன்னுவார் நரகம் தன்னுள்
தொல்வினை தீர வேண்டில்
மன்னுவான் மறைகள் ஓதி
மனத்தினுள் விளக்கொன்று ஏற்றி
உன்னுவார் உள்ளத் துள்ளார்
ஒற்றியூர் உடைய கோவே.

தெளிவுரை: முறுக்கிய சடை முடியுடைய ஈசனைத் தியானம் செய்து, அப் பெருமானுடைய திருநாமங் களைத் திரும்பத் திரும்ப ஓதி உச்சாடனம் செய்யா தவர்கள், பேதையர்களே. அத்தகையோர் நரகத்தை அடைவர். தொல்வினை தீர வேண்டுமானால், பெருமையுடைய மறைகளை ஓதுவீராக. அப் பெருமான், அத்தகையவர் மனத்துள் ஒளி விளக்காகத் திகழ்கின்றவர். அப்பெருமானை, உள்ளத்தில் எண்ணுவீராக. அவர், ஒற்றியூரில் மேவும் கோவே.

இது, ஈசனை உள்ளத்தால் ஓதியும் தியானம் செய்தும் ஏத்துதலை ஓதிற்று.

452. முள்குவார் போகம் வேண்டில்
முயற்றியால் இடர்கள் வந்தால்
எள்குவார் எள்கி நின்றங்கு
இதுஒரு மாயம் என்பார்
பள்குவார் பத்த ராகிப்
பாடியும் ஆடி நின்றும்
உள்குவார் உள்ளத் துள்ளார்
ஒற்றியூர் உடைய கோவே.

தெளிவுரை: உடலால் மேவும் போகமானது பேரருளாளர்களால் எள்ளப்படுவதாகும். இதனை மாயம் என்பர். எனவே, இத்தகைய செயல்களை நீக்குக. ஈசனின் பத்தர்களாகிப் பாடியும் ஆடியும் ஏத்தி நின்று உள்ளத்தால் உருகி நிற்பீராக. அப் பெருமான், அத்தகைய உள்ளத்துள் ஒளிர்பவர். அவர், ஒற்றியூரில் மேவும் கோவே.

453. வெறுத்துகப் புலன்கள் ஐந்தும்
வேண்டிற்று வேண்டு நெஞ்சே
மறுத்துக ஆர்வச் செற்றக்
குரோதங்க ளான மாயப்
பொறுத்துகப் புட்ப கத்தேர்
உடையானை அடர வூன்றி
ஒறுத்துகந்து அருள்கள் செய்தார்
ஒற்றியூர் உடைய கோவே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: புலன்கள் ஐந்தும், வேண்டுவனவற்றை நாடி அலையும் நெஞ்சே! அவற்றை வெறுத்து விடுக. ஆசை, குரோதம் என்னும் மாயையை நீக்குக. புட்பக

விமானத்தையுடைய இராவணனை, திருப்பாதத்தால் ஊன்றி அடர்த்துப் பின்னர் அருள் செய்தவர், ஈசன். அவர் நுமக்கும் அருள்பவர். அப் பெருமான், ஒற்றியூரில் வீற்றிருக்கும் கோவே. அவரை ஏத்துக என்பது குறிப்பு.

46. திருவொற்றியூர்

தல விளக்கம்: திருப்பதிகம் எண் *45* காண்க.

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

454. ஓம்பினேன் கூட்டை வாளா
உள்ளதோர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழை போலக்
கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின் வாய்த் தேரை போலப்
பலப்பல நினைக்கின் றேனை
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய்
ஒற்றியூர் உடைய கோவே.

தெளிவுரை: ஈசனே! நான் இந்த சரீரத்தை ஓம்பினேன். காம்பில்லாத அகப்பையைப் பயன்படுத்த முடியாதது போல, இத்தேகமானது பயனற்றது. நான், தேவரீரின் கருணை மேவும் அமுதை முகக்காதவனானேன். பாம்பின் வாயில் அகப்பட்ட தேரை போல, அச்சத் தால் பலப்பல நினைக்கின்றேன். என்னைத் தேவரீர் உய்யுமாறு கொண்டருள வேண்டும். என் அச்சத்தை நீக்க வேண்டும். ஒற்றியூரினை உடைய ஈசனே! அருள் புரிவீராக.

சிறப்புரை: *பாம்பின் வாய் நெளியும் தேரையானது, அச்சம் கொண்டு பலவாக நினைத்து வருந்தியும், தன் செயலற்றும் உள்ள நிலையை, இவ்வுலக வாழ்க்கைக்கு ஏற்றிக் காலன் வாய்க் காணும் உயிரின் தன்மையை உணர்த்துவதாயிற்று. இது, "பாம்பின் வாய்த் தேரை போலப் பலப்பல நினைக்கின்றேன்" எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில் திருஞானசம்பந்தர், "செடிகொள் நோய் ஆக்கை ஐம்பாம்பின் வாய்த் தேரைவாய்ச் சிறுபறவை கடிகொள் பூந்தேன் வைத்து இன்புறலாம் என்று கருதினாயே" (இரண்டாம் திருமுறை; பதிகம் எண் 215; திருவாரூர்; பாட்டு வ.எண் 860) என அருளிச் செய்தவாறும் காண்க.*

மூழை – அகப்பை.

455. மனமெனும் தோணி பற்றி
மதியெனும் கோலை யூன்றிச்
சினமெனும் சரக்கை யேற்றிச்
செறிகடல் ஓடும் போது
மனன்எனும் பாறை தாக்கி
மறியும்போது அறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடைய கோவே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *மனம் என்னும் தோணியினை, அறிவு என்பதைத் துடுப்பாகக் கொண்டு, சினம் என்னும் சரக்கினை ஏற்றிக் கொண்டு, கடல் என்னும் வாழ்க்கையில் செலுத்திக் கொண்டு இருக்கும் நிலையில், மன்மதன் என்னும் பாறை தாக்கிப் படகானது கவிழும்போது, ஈசனே! தேவரீரை அறியும் தன்மை வயப்படாது. ஒற்றியூரில் விளங்கும் கோவே!*

தேவரீரை நினைத்து ஏத்தும் உணர்வினை அருள் வீராக.

மனன் – மன்மதன்.

47. திருக்கயிலாயம்

தல விளக்கம்: வட நாட்டுத் தலம் ஐந்தனுள் 5ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது.

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 68 காண்க.

சுவாமி : பரமசிவன்

அம்பிகை : பார்வதி தேவி

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

456. கனகமா வயிரம் உந்து
மாமணிக் கயிலை கண்டும்
உனகனாய் அரக்கன் ஓடி
எடுத்தலும் உமையாள் அஞ்ச
அனகனாய் நின்ற ஈசன்
ஊன்றலும் அலறி வீழ்ந்தான்
மனகனாய் ஊன்றி னானேன்
மறித்து நோக் கில்லை யன்றே.

தெளிவுரை: பொன்னும் வயிரமும் மாணிக்கமும் போன்று ஒளிர்விடும் கயிலை மலையைக் கண்டு, இழிந்த குணத்தை உடைய இராவணன் ஓடிச் சென்று பெயர்த்தெடுக்க, உமாதேவி அஞ்சினள். அஞ்ஞான்று, யாவுமாய் விளங்கும் சிவபெருமான், திருப்பாத விரலால் அம்மலையை ஊன்ற, அவ்வரக்கன் அலறி

வீழ்ந்தான். பெருமையுடைய மனத்தராகிய அப்பெருமானுக்கு எதிர் நிற்பவர் யாரும் இல்லை அல்லவா!

457. கதித்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை யோடி
அதிர்த்தவன் எடுத் திடலும்
அரிவைதான் அஞ்ச ஈசன்
நெதித்தவன் ஊன்றி யிட்ட
நிலையழிந்து அலறி வீழ்ந்தான்
மதித்திறை யூன்றி னானேன்
மறித்து நோக் கில்லை யன்றே.

தெளிவுரை: உள்ளம் சினந்து கண் சிவந்து உமாதேவி அஞ்சுமாறு கயிலை மலையை இராவணன் எடுக்கவும், சிவபெருமான், தன் திருப்பாத விரலால் அம்மலையை ஊன்றி, அவ் அரக்கனை அடர்த்து அலறி வீழச் செய்தவர். அப் பெருமானுக்கு எதிர் நிற்பவர் யாரும் இல்லை.

458. கறுத்தவன் கண் சிவந்து
கயிலைநன் மலையைக் கையால்
மறித்தலும் மங்கை யஞ்ச
வானவர் இறைவன் நக்கு
நெறித்தொரு விரலால் ஊன்றி
நெடுவரை போல வீழ்ந்தான்
மறித்திறை யூன்றி னானேன்
மறித்து நோக் கில்லை யன்றே.

தெளிவுரை: கறுத்த நிறத்தினனாகிய இராவணன் கண்கள் சிவக்கக் கயிலை மலையைப் பெயர்த்தனன். அஞ்ஞான்று உமாதேவி அஞ்ச, சிவபெருமான் தனது திருப்பாத விரலால் அம் மலையை ஊன்றி,

அவ் அரக்கனை நெரித்து அடர்த்தார். அப் பெருமானை மறித்து நோக்குபவர் யாரும் இல்லை.

459. கடுத்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை யோடி
எடுத்தலும் மங்கை யஞ்ச
இறையவன் இறையே நக்கு
நொடிப்பள விரலால் ஊன்ற
நோவதும் அலறி யிட்டான்
மடித்திறை யூன்றி னானேன்
மறித்து நோக் கில்லை யன்றே.

தெளிவுரை: இராவணன், சினந்தவனாய், உமாதேவி அஞ்சுமாறு கயிலை மலையை எடுக்க, ஈசன், அதே நொடியில் புன்முறுவல் செய்து, தன் திருப்பாத விரலால் அம்மலையை ஊன்றி, அவ் அரக்கன் அலறி வீழுமாறு அடர்த்தார். அப் பெருமானை மறித்து நிற்பவர் யாரும் இல்லை.

460. கன்றித்தன் கண்சி வந்து
கயிலைநன் மலையை யோடி
வென்றித்தன் கைத்த லத்தால்
எடுத்தலும் வெருவ மங்கை
நன்றுத்தான் நக்கு நாதன்
ஊன்றலும் நகழ வீழ்ந்தான்
மன்றித்தான் ஊன்றி னானேன்
மறித்துநோக் கில்லை யன்றே.

தெளிவுரை: இராவணன், கனன்று கண் சிவந்து, உமாதேவி அச்சம் கொள்ளுமாறு, தனது கைகளால் கயிலையை எடுக்கச் சிவபெருமான், புன்முறுவல் செய்து, அம்மலையைத் திருப்பாத விரலால் ஊன்றி,

அவ் அரக்கன் வீழுமாறு செய்தார். அப்பெருமானை மறித்து நிற்பவர் யாரும் இல்லை.

461. களித்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை யோடி
நெளித்தவன் எடுத்திடல்லும்
நேரிழை அஞ்ச நோக்கி
வெளித்தவன் ஊன்றி யிட்ட
வெற்பினால் அலறி வீழ்ந்தான்
மளித்திறை யூன்றி னானேன்
மறித்து நோக்கில்லை யன்றே.

தெளிவுரை: மும்மலக் களிப்பினால் கண் சிவந்து கயிலை மலையை எடுத்தான், இராவணன். அதன் அசைவினால் உமாதேவி அஞ்சினள். அதனை நோக்கிய ஈசன், தனது திருப்பாத விரலால் அம் மலையை ஊன்றி, அவ் அரக்கன் அலறி வீழுமாறு செய்தார். அப் பெருமானை மறித்து நிற்பவர் யாவர் உளர்? இது ஈசனின் பேராற்றலை வியந்து ஏத்துதலாயிற்று.

462. கருத்தனாய்க் கண்சி வந்து
கயிலைநன் மலையைக் கையால்
எருத்தனாய் எடுத்தவாறே
ஏந்திழை யஞ்ச ஈசன்
திருத்த னாய் நின்றதேவன்
திருவிரல் ஊன்ற வீழந்தான்
வருத்துவான் ஊன்றி னானேன்
மறித்து நோக் கில்லை யன்றே.

தெளிவுரை: இராவணன், கண்கள் சிவக்கக் கயிலையாகிய நல்மலையைக் கையால் எடுத்தபோது, உமாதேவி அஞ்சி நிற்க, ஈசன் தனது திருப்பாத

விரலால் ஊன்றி, அவ் அரக்கனை வீழுமாறு செய்தார். அப் பெருமானின் ஆற்றலின் முன் யார் நிற்க முடியும்?

சிறப்புரை: இராவணனுக்கு நல்லறிவு வாய்க்கப் பெற்று சாம கானத்தால் இசைக்கும் பேற்றினையும்; பின்னர் வாளும் வாழ்நாளும் பெற்றமையும், நன்கு உணர்த்தும் தன்மையில், "கயிலை நன் மலை" எனவும்; "ஈசன் திருத்தனாய் நின்ற தேவன் திருவிரல் ஊன்ற" எனவும் ஓதப் பெற்றமை காண்க.

463. கடியவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை யோடி
வடிவுடை மங்கை யஞ்ச
எடுத்தலும் மருவ நோக்கிச்
செடிபடத் திருவிரல் லால்
ஊன்றலும் சிதைந்து வீழ்ந்தான்
வடிவுற வூன்றி னானேன்
மறித்துநோக் கில்லை யன்றே.

தெளிவுரை: இராவணன், சினம் கொண்டவனாய்க் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்தபோது, அவ் அசைவினால் அஞ்சிய உமாதேவியை நோக்கிய வராய், ஈசன் தனது திருப்பாத விரலால் ஊன்றி, அரக்கனை வீழச் செய்தார். அத்தகைய ஈசனின் பேராற்றலை மறித்து நோக்குபவர் யாரும் இல்லை.

464. கரியத்தான் கண்சி வந்து
கயிலைநன் மலையைப் பற்றி
இரியத்தான் எடுத்தி டல்லும்
ஏந்திழை அஞ்ச ஈசன்
நெரியத்தான் ஊன்றா முன்ன
நிற்கிலாது அலறி வீழ்ந்தான்

மரியத்தான் ஊன்றினா னேன்
மறித்துநோக் கில்லை யன்றே.

தெளிவுரை: இராவணன், கயிலை மலையைப் பற்றி எடுத்திட, உமாதேவி அஞ்சுவதை நோக்கிய ஈசன், தனது திருப்பாதத்தால் அம்மலையை ஊன்றி, அவ்வரக்கனை நெரித்து, அலறி வீழுமாறு செய்தார். அப் பெருமானின் பேராற்றலின் முன்னால் யார் மறித்து நோக்க வல்லவர்!

ஏந்திழை – உமையவள்; ஊன்றாமுன்ன – ஊன்றவும்.

465. கற்றனன் கயிலை தன்னைக்
காண்டலும் அரக்கன் ஓடிச்
செற்றவன் எடுத்த வாறே
சேயிழை யஞ்ச ஈசன்
உற்றிறை யூன்றா முன்னம்
உணர்வழி வகையால் வீழ்ந்தான்
மற்றிறை யூன்றி னானேன்
மறித்து நோக்கில்லை யன்றே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசனின் திருக்கயிலையைக் கண்ட அரக்கனாகிய இராவணன், ஓடிச் சென்று பெயர்த்து எடுக்க, உமாதேவி அஞ்சினார். அதனை நோக்கிய பெருமான், தனது திருப்பாத விரலால் அம் மலையை ஊன்றி, அவ் அரக்கனின் உணர்வு அழியுமாறு செய்து அடர்ந்தார். அப் பெருமானின் பேராற்றலின் முன் யாரால் மறித்து நிற்க முடியும்!

இறை – நொடிப்பொழுது; கற்றனன் – சிவபெருமான், ஈசன்.

48. திருவாப்பாடி

தல விளக்கம்: *காவிரி வடகரைத் தலம் 63இல், இது 40ஆவது திருத்தலம், திருநாவுக்கரசர் பாடல் பெற்றது. திருவாப்பாடி என வழங்கப்படுவது.*

சுவாமி : *பால் உகந்த நாதர்*

அம்பிகை : *பிருகந்நாயகி, பெரியநாயகி*

தல மரம் : *ஆத்தி*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

466. கடலகம் ஏழினோடும் பவனமும் கலந்த விண்ணும்
உடலகத்து உயிரும்பாரும் ஒள்ளழல் ஆகிநின்று
தடமலர்க் கந்தமாலை தண்மதி பகலுமாகி
மடலவிழ் கொன்றைசூடி மன்னுமாப் பாடியாரே.

தெளிவுரை: *ஈசன் — ஏழு கடல், காற்று, ஆகாயம், உயிர், நிலம், நெருப்பு என வழங்கப் பெறும் மூர்த்தம் ஆகியவர்; சூரியன் சந்திரன் ஆகியவர்; அப்பெருமான், கொன்றை மலர் சூடிப் பெருமையுடன் மேவும் ஆப்பாடியில் வீற்றிருப்பவரே ஆவார்.*

467. ஆதியும் அறிவுமாகி அறிவினுள் செறிவு மாகிச்
சோதியுள் சுடருமாகித் தூநெறிக் கொருவனாகிப்
பாதியிற் பெண்ணுமாகிப் பரவுவார் பாங்கராகி
வேதியர் வாழும் சேய்ஞல் விரும்புமாப் பாடியாரே.

தெளிவுரை: *ஈசன், ஆதியாக விளங்குபவர்; அறிவாக வும், அறிவுக்குள் விளங்கும் ஞானமாகவும் விளங்கு பவர்; சோதியுள் சுடராகவும், தூய நெறிக்கு உரிய*

ஒருவராகவும் விளங்குபவர்; அம்மையும் அப்பனும் ஆகி அர்த்தநாரியாகத் திகழ்பவர். அப் பெருமான், பரவி ஏத்தப் பெறும் அன்பர்களின் தன்மையாகி, வேதியர் வாழ்கின்ற சண்டேசர் விரும்பும் ஆப்பாடியில் வீற்றிருப்பவர்.

சேய்ஞல் விரும்பும் ஆப்பாடி – சண்டேஸ்வரர் விரும்பி மேய்த்த ஆக்களின் பாடி.

468. எண்ணுடை இருக்குமாகி இருக்கினுட் பொருளுமாகிப்
பண்ணொடு பாடல்தன்னைப் பரவுவார் பாங்கராகிக்
கண்ணொரு நெற்றியாகிக் கருதுவார் கருதலாகாப்
பெண்ணொரு பாகமாகிப் பேணுமாப் பாடியாரே.

தெளிவுரை: ஈசன், எண்ணத்தில் திகழும் இருக்கு வேதமாகவும், அதன் உட்பொருளுமாகவும் விளங்கு பவர்; பண் இசையுடன் பாடிப் பரவும் அன்பர்தம் பாங்கினராய் விளங்குபவர்; நெற்றியில் கண்ணுடை யவர்; சிவஞானியர்க்கே அன்றி, ஏனோர்க்குக் கருதற் கரிய அம்மையப்பராய் விளங்குபவர். அவர், ஆப்பாடியில் வீற்றிருப்பவர்.

சிறப்புரை: அர்த்தநாரியாய் மேவும் ஈசனின் திருக்காட்சியானது எல்லாராலும் உணர்தற்கு அரியதாம் என்பது, "கருதுவார் கருதலாகாப் பெண்ணொரு பாகமாகி" என ஓதப் பெறுவதாயிற்று.

469. அண்டமார் அமரர் கோமான் ஆதியெம்
அண்ணல்பாதம்
கொண்டவன் குறிப்பினாலே கூப்பினான் தாபரத்தைக்
கண்டவன் தாதை பாய்வான் காலற வெறியக் கண்டு
தண்டியார்க் கருள்கள் செய்த தலைவராப் பாடியாரே.

தெளிவுரை: ஈசன், அண்டங்களில் உள்ள எல்லாத் தேவர்களுக்கும் தலைவராக மேவும் மகாதேவர்; ஆதி அண்ணலாய் விளங்குபவர்; சண்டீச நாயனாரின் பூசனையை ஏற்றும், தாதை இடறிய காலை எறியக் கண்டும், சண்டேசப்பதம் அருளியவர். அத்தகைய தலைவர், ஆப்பாடியில் வீற்றிருக்கும் பரமர்.

470. **சிந்தையும் தெளிவுமாகித் தெளிவினுள் சிவமுமாகி**
வந்தநற் பயனுமாகி வாணுதல் பாகமாகி
மந்தமாம் பொழில்கள்சூழ்ந்த மண்ணித்தென் கரைமேல்மன்னி
அந்தமோடு அளவிலாத அடிகள் ஆப் பாடியாரே.

தெளிவுரை: ஈசன், சிந்தையும் அதன் தெளிவும், அத் தெளிவினுள் மேவும் சிவமும், அதன் பயனும் ஆகியவர்; உமாதேவியைப் பாகமாக உடையவர். அவர், தென்றல் வீசும் பொழில்கள் சூழ்ந்த மண்ணி ஆற்றின் தென்கரையின் மீது, அந்தமும் அளவும் அற்ற அடிகளாய் ஆப்பாடியில் மேவும் பரமர்.

471. **வன்னிவா ளரவும் மத்த மதியமும் ஆறும் சூடி**
மின்னிய உருவாம் சோதி மெய்ப்பொருட் பயனுமாகிக்
கன்னியோர் பாகமாகிக் கருதுவார் கருத்துமாகி
இன்னிசை தொண்டர் பாட இருந்தஆப் பாடியாரே.

தெளிவுரை: ஈசன், வன்னிப் பத்திரம், அரவம், ஊமத்தம், பிறைச்சந்திரன், கங்கை ஆகியவற்றைச் சூடிய மின்னல் போன்ற சிவந்த வடிவமாக விளங்கு பவர்; சோதியாகவும் மெய்ப்பொருளாகவும், அதன் பயனாகவும் – முத்தியாகவும், உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டும் விளங்குபவர். அப்பெருமான், கருதுபவர்களின் கருத்தாகி, இன்னிசையால் தொண்டர்கள் பாடும் ஆப்பாடியில் வீற்றிருப்பவர்.

கன்னி – உமாதேவியார்.

472. உள்ளுமாய்ப் புறமுமாகி உருவுமாய் அருவுமாகி
வெள்ளமாய்க் கரையுமாகி விரிகதிர் ஞாயிறாகிக்
கள்ளமாய்க் கள்ளத்துள்ளார் கருத்துமாய் அருத்தமாகி
அள்ளுவார்க்கு அள்ளல் செய்திட்டு இருந்தஆப்
பாடியாரே.

தெளிவுரை: ஈசன், அகமாகவும் புறமாகவும் திகழ்பவர்; உருவமும், உருவம் தெரியாத அருவமாகவும் விளங்கு பவர்; வெள்ளப் பெருக்கெடுக்கும் நீராகவும் அதன் கரையாகவும் விளங்குபவர்; விரிந்து கதிர்களைப் பெருக்கும் சூரியனாய் விளங்குபவர்; கள்ளமும், அதனை உள்ளிருந்து ஆக்குபவரும் ஆகுபவர்; கருத்தும் ஆகி அதற்குரிய விளக்கமும் ஆகுபவர்; அப்பெருமான், வேண்டியவர்களுக்கெல்லாம் வேண்டியவாறு அருளிச் செய்யும் திருஆப்பாடியில் வீற்றிருக்கும் பரமர்.

அள்ளுவார் – வேண்டுபவர்; அள்ளல் செய்திட்டு – வள்ளல் என வழங்கும் தன்மை.

473. மயக்கமாய்த் தெளிவுமாகி மால்வரை வளியுமாகித்
தியக்கமாய் ஒருக்கமாகிச் சிந்தையுள் ஒன்றிநின்று
இயக்கமாய் இறுதியாகி எண்டிசைக்கு இறைவராகி
அயக்கமாய் அடக்கமாயவை வராப் பாடியாரே.

தெளிவுரை: ஈசன், மயக்கமும் தெளிவும் ஆனவர்; மலையும் காற்றும் ஆனவர்; சிந்தையுள் ஒன்றி நின்று இயக்குபவராகவும் அதன் முடிவாகவும் ஆகியவர்; எண் திசைக்கும் இறைவராகி அசைவாகவும் அசைவற்ற உறுதித் தன்மையாகவும் ஆகியவர்; அப் பெருமான், இச் செயல்களின் வகையில்

மாறுபட்டிருப்பினும் அதனின்று மாறாதவராய் ஆப்பாடியில் வீற்றிருக்கும் பரமர்.

474. ஆரழல் உருவமாகி அண்டமேழ் கடந்த எந்தை
பேரொளி உருவினானைப் பிரமனும்மாலும் காணாச்
சீரவை பரவியேத்திச் சென்றடி வணங்குவார்க்குப்
பேரருள் அருளிச் செய்வார் பேணுமாப் பாடியாரே.

தெளிவுரை: ஈசன், நெருப்பின் வடிவமானவர்; அண்டங்கள் யாவும் கடந்து நிற்கும் எந்தை; பிரமனும் திருமாலும் காணுதற்கு அறியவொண்ணாத பேரொளியாய்த் திகழ்பவர். அப் பெருமானுடைய புகழ்களைப் பரவி ஏத்தித் திருவடியை வணங்குகின்ற பக்தர்களுக்குப் பேரருள் புரிபவர். அவர், யாவரும் பேணும் ஆப்பாடியில் மேவும் பரமர்.

475. திண்டிறல் அரக்கனோடிச் சீகயி லாயம்தன்னை
எண்டிறல் இலனுமாகி எடுத்தலும் ஏழையஞ்ச
விண்டிறல் நெரியவூன்றி மிகக்கடுத்து அலறிவீழப்
பண்டிறல் கேட்டுகந்த பரமர்ஆப் பாடியாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: உறுதியும் திறனும் உடைய அரக்கனாகிய இராவணன், சிறப்பின் மிக்க கயிலை மலையைப் பெயர்த்து எடுக்க, உமாதேவியானவர் அஞ்சி மேவ, சிவபெருமான் அவ்வரக்கனுடைய பெருந்திறன் நெரியுமாறு அம்மலையைத் தமது திருப்பாத விரலால் ஊன்றி, வலிமை அற்றவனாக அவனை ஆக்கி அலறி வீழச் செய்தார். அவ் அரக்கன் இசைத்த பண்ணின் திறத்தைக் கேட்டு உகந்த அவர், ஆப்பாடியில் மேவும் பரமரே.

49. திருக்குறுக்கை வீரட்டம்

தெளிவுரை: *காவிரி வடகரைத் தலம் 63இல், இது 26ஆவது திருத்தலம். திருநாவுக்கரசர் பாடல் பெற்றது. கொருக்கை என வழங்கப்படுகிறது. அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. மன்மதனை எரித்த தலம். யோகீச புரம், காமதகனபுரம், கம்பகரபுரம் என்பன இத் தலத்தின் வேறு பெயர்களாகும்.*

இலக்குமி, திருமால், பிரமன், முருகன், ரதி ஆகியோர் வழிபட்ட தலம்.

சுவாமி : *வீரட்டேஸ்வரர்*

அம்பிகை : *ஞானாம்பிகை*

தல மரம் : *கடுக்காய் மரம்*

தீர்த்தம் : *சூல தீர்த்தம்*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

476. ஆதியிற் பிரம னார்தாம்
அர்ச்சித்தார் அடியி ணைக்கீழ்
ஓதிய வேத நாவர்
உணருமாறு உணர லுற்றார்
சோதியுள் சுடராய்த் தோன்றிச்
சொல்லினை இறந்தார் பல்பூக்
கோதிவண்டு அறையும் சோலைக்
குறுக்கைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: *ஈசன், பிரமனால் அருச்சித்து வழிபடப் பெற்றவர்; வேதம் ஓதும் நாவுடையவராகிய அப்பிரமன் தன்னை உணருமாறு உணர வைத்தார்;*

திகழ்கின்ற சோதியின் சுடராய் விளங்குபவர்; சொற் பதங் கடந்த பெரும் புகழ் உடையவர்; அப்பெருமான் பல விதமான பூக்களைக் கோதி வண்டுகள் ரீங்காரம் செய்யும் சோலை சூழ்ந்த குறுக்கையின் வீரட்டனாரே.

சிறப்புரை: பிரமன் பூசித்த தலக் குறிப்பும் ஈசன் திருநாமமும் இத்திருப்பாட்டின்கண் ஓதப் பெற்றது.

477. நீற்றினை நிறையப் பூசி
நித்தலும் நியமம் செய்து
ஆற்றுநீர் பூரித் தாட்டும்
அந்தண னாரைக் கொல்வான்
சாற்றுநாள் அற்றதென்று
தருமரா சற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர் போலும்
குறுக்கைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: திருவெண்ணீற்றைக் குழையப் பூசி நித்தமும் நியமத்துடன் தூய நீர் கொண்டு ஈசனைப் பூசித்து மகிழும் அந்தணராகிய மார்க்கண்டேயரின் உயிரைக் கவரும் பொருட்டு, எமதருமராசனின் தூது வனாய் வந்த கூற்றுவனைத் திருப்பாதத்தால் உதைத்து அழித்தவர், சிவபெருமான். அவர் குறுக்கையில் வீற்றிருக்கும் வீரட்டனாரே.

சிறப்புரை: "தருமராசற்காய் வந்த கூற்றினைக் குமைப்பர்" என்பது, எமதருமராசனும் கூற்றுவனும் வேறு வேறானவர் என்பதும், தருமராசனின் ஏவலராய்க் கூற்றுவன் பணியாற்றுபவன் என்பதும் உணர்த்துதலாயிற்று.

குமைப்பர் – அழிப்பர்.

478. தழைத்ததோர் ஆத்தி யின்கீழ்
தாபரம் மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக்
கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப்
பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோர் அமுதம் ஈந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: ஆத்தி மரத்தின் நிழலில் மணலால் சிவலிங்கத்தைத் தாபித்து, அதற்குப் பசுவின் பாலைச் சொரிந்து சண்டேசர் ஏத்துவதனைக் கண்ட அவருடைய தந்தை, அச் சிவலிங்கத்தை மதியாது பிழை செய்தார். அதனைக் கண்ட மகனார், தன் தாதையின் தாளை மழுவாள் வீசி வீழ்த்தினார். ஈசன் பால் கொண்ட அவர்தம் பேரன்பிற் குழைந்து அருள் செய்த பெருமான், குறுக்கை வீரட்டனாரே.

479. சிலந்தியும் ஆனைக் காவில்
திருநிழல் பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே
கோச்செங்க ணானும் ஆகக்
கலந்தநீர்க் காவிரி சூழ்
சோணாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: திருவானைக்கா என்னும் திருத்தலத்தில், சிலந்தியானது, ஈசனுக்குத் திருநிழல் பந்தலைத் தன் வாயினால் அமைத்துச் சிவபுண்ணியம் செய்து வந்தது. அது இறந்த போதும் சிவபுண்ணியம் தொடரக் கோச் செங்கட் சோழனாகப் பிறக்கச் செய்து அருள் புரிந்தவர், பரமன். அவர் குறுக்கை வீரட்டனாரே.

உலந்து அவன் இறந்த போது – சிவனை நினைத்தலும் தன்னை வருத்திக் கொள்ளலும் ஆகிய தன்மையில் இறத்தல்.

480. ஏறுடன் ஏழ டர்த்தான்
எண்ணிஆ யிரம்பூக் கொண்டு
ஆறுடைச் சடையி னானை
அர்ச்சித்தான் அடியி ணைக்கீழ்
வேறுமோர் பூக்கு றைய
மெய்ம்மலர்க் கண்ணை ஈண்டக்
கூறுமோர் ஆழி யீந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: கிருஷ்ணாவதாரத்தில் ஏழு காளைகளை அடக்கி வீரங்காட்டிய திருமால், ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு, கங்கையைச் சடையில் மேவும் சிவபெருமானைப் பூசித்து அர்ச்சித்தார். அஞ்ஞான்று அவர், ஒரு மலர் குறைவுற்றதை ஒட்டித் தன் மெய்யில் உள்ள செந்தாமரை மலர் போன்ற கண்ணை இட்ந்து அருச்சித்து ஏத்தினார். அவ்வன்பிற் குழைந்த ஈசன், ஆழிப்படையை ஈந்தருளினார். அவர், குறுக்கை வீரட்டனாரே.

481. கல்லினால் எறிந்து கஞ்சி
தாமுணும் சாக்கி யனார்
நெல்லினார் சோறு ணாமே
நீள்விசும்பு ஆள வைத்தார்
எல்லியாங்கு எரிகை யேந்தி
எழில்திகழ் நட்டம் ஆடிக்
கொல்லியாம் பண்ணு கந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: உண்பதன் முன் மறவாது ஈசன்பால் கல்லெறிந்து வழிபட்ட சாக்கியனாருக்கு நெல்லின்

அமையும் சோறு கொள்ளாது, சிவானந்த அமிர்தத்தை அருந்துமாறு முத்திப் பேற்றினை அருளிச் செய்தவர், சிவபெருமான். அப்பெருமான், நெருப்பினைக் கையில் ஏந்தி, இரவில் எழில் மிக்க நடனம் புரிபவர்; கொல்லிப் பண்ணின் இசையை உகந்தவர். அவர் குறுக்கை வீரட்டனாரே.

சிறப்புரை: ஈசனால் படைக்கப் பெற்றவையே அனைத்தும் ஆதலால், கல்லையே மலராகக் கருதி, ஈசன்பால் அருச்சித்து வழிபட்ட சாக்கிய நாயனாரின் வழிபாடானது, "கல்லினால் எறிந்து கஞ்சி தாம் உணும் சாக்கியனார்" என ஓதப் பெற்றது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "வார்கொண்ட வனமுலை யாள் உமைபங்கன் கழலே மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்" என அருளிச் செய்தவாறும் காண்க.

482. காப்பதோர் வில்லும் அம்பும்
கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெரும் செருப்புத் தொட்டுத்
தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய
குருதிநீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: காவல் செய்வதற்குரிய வில்லும் அம்பும் கையில் ஏந்தி, இறைச்சியும் கைக் கொண்டு, தோலால் ஆகிய காற்செருப்பு தொட்டுத் தூய்மையான வாய்க்கலசம் ஏந்தி ஈசனைப் பூசித்தவர், கண்ணப்ப நாயனார். அஞ்ஞான்று, இலிங்கத் திருமேனியின் திருவிழியில் இரத்தம் கசிந்து பெருகுவதைக் கண்டு,

தன் கண்ணை இடந்து அப்புகையில், தடுத்துப் பற்றி அருள் புரிந்தவர் ஈசன் அவர், குறுக்கை வீரட்ட னாரே.

483. நிறைமறைக் காடு தன்னில்
நீண்டெரி தீபம்தன்னைக்
கறைநிறத்து எலிதன் மூக்குச்
சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும்
நீண்டவான் உலகும் எல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலும்
குறுக்கைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: திருமறைக்காடு என்னும் தலத்தில், எரியும் விளக்கில் காணும் எண்ணெயை உண்ணும் எலியின் மூக்கு தீயினாற் சுட, அவ்வசைவினால் தீபமானது, சுடர்விட்டு எரிந்தது. அபுத்தி பூர்வமான இச்சிவ புண்ணியத்தின் பயனாய், எலியானது மறுபிறவியில் மாவலிச் சக்கரவர்த்தியாகி, விண்ணும் மண்ணும் ஆளும் பேறுற்றது. இத்தகைய அருள் புரிபவர் ஈசன். அவர் குறுக்கை வீரட்டனாரே.

484. அணங்குமை பாக மாக
அடக்கிய ஆதி மூர்த்தி
வணங்குவார் இடர்கள் தீர்க்கும்
மருந்துநல் லருந்த வத்தி
கணம்புல்லர்க்கு அருள்கள் செய்து
காதலாம் அடியார்க்கு என்றும்
குணங்களைக் கொடுப்பர் போலும்
குறுக்கைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: ஈசன், உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு மேவும் ஆதிமூர்த்தியாய் விளங்குபவர்;

வணங்கி ஏத்தும் அடியவர்களுடைய இடர் நீக்கும் நன்மருந்தாகத் திகழ்பவர்; கணம்புல்ல நாயனாரின் வேண்டுதலை ஏற்று அருள் புரிந்தவர். மெய்யடியார் களுக்குச் சத்துவ குணங்களைக் கொடுப்பவர். அவர், குறுக்கை வீரட்டனாரே.

சிறப்புரை: புல்லரிந்து விற்று அத்தொகை கொண்டு திருக்கோயிலுக்கு நெய் விளக்கு ஏற்றித் திருத்தொண்டு ஆற்றி வந்தவர் கணம்புல்லர். ஒருநாள், புல் கட்டு விலை போகாத நிலையில், அதனையே திரியாகக் கொண்டு ஏற்றி, அதுவும் நிறைவடையாத தன்மையில் அவர், தன் திருமுடியை விளக்காக எரித்தார். இவ்வரலாறாகிய சிவபுண்ணியச் செயலானது, "கணம் புல்லர்க்கு அருள்கள் செய்து" என இத்திருப்பாட்டில் ஓதுதலாயிற்று.

அணங்கு உமை – தெய்வமாம் உமாதேவி அழகிய உமை.

485. எடுத்தனன் எழிற் கயிலை
இலங்கையர் மன்னன் றன்னை
அடுத்தொரு விரலால் ஊன்ற
அலறிப்போய் அவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைந ரம்பால்
வேதகீ தங்கள் பாடக்
கொடுத்தனர் கொற்ற வாணாள்
குறுக்கைவீ ரட்ட னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: உயிர்க்கு எழில் தருகின்ற கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த இராவணனைத் திருப்பாத விரலால் ஊன்றி அடர்த்தவர், ஈசன். அவ் வரக்கன் கைநரம்பால் இசைத்துச் சாமவேத கீதங் களைப் பாட, அரசாட்சியும் வாழ்நாளும் நனி

அளித்தவர், அப்பெருமான். அவர், குறுக்கை வீரட்ட னாரே.

50. திருக்குறுக்கை வீரட்டம்

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 49 காண்க.

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

486. நெடியமால் பிரமனோடு நீரெனும் பிலயங் கொள்ள
அடியொடு முடியும் காணார் அருச்சுனற்கு அம்பும் வில்லும்
துடியுடை வேடராகித் தூயமந்திரங்கள் சொல்லிக்
கொடிநெடுந் தேர்கொடுத்தார் குறுக்கைவீ ரட்ட னாரே.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் அடியும் முடியும் காணப் பெறாதவராகி ஓங்கி உயர்ந்த ஈசன், அருச்சுன ருக்கு, வில்லும் அம்பும் கொண்ட வேடராகிப் பாசுபதம் முதலான அத்திரங்களும் மந்திரங்களும் ஓதிக் கொடுத்தவர். அவர், குறுக்கை வீரட்டனாரே.

சிறப்புரை: சிவபெருமானுடைய திருவடி பாதாளம் தாண்டிச் சென்ற பெருமை, "நீரெனும் பிலயம் கொள்ள" என ஓதப் பெற்றது. இத்தன்மையில், "பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர் போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே" என அருளிச் செய்த (திருவெம்பாவை–10) மாணிக்க வாசகரின் அமுத வாக்கும் காண்க.

பிலயம் – பாதாளம்.

487. ஆத்தமாம் அயனும் மாலும் அன்றிமற் றொழிந்த தேவர்
சோத்தம் எம் பெருமான் என்று தொழுது தோத் திரங்கள் சொல்லத்

தீர்த்தமாம் அட்டமீமுன் சீருடை ஏழுநாளும்
கூத்தராய் வீதிபோந்தார் குறுக்கைவீ ரட்டனாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அன்பின் நெருக்கமாகும் திருமால் பிரமன் மற்றும் தேவர்கள் எல்லாரும் எம்பெருமானே என்று தொழுது ஏத்த, அட்டமிக்கு முன்னுள்ள ஏழு நாட்களும் திருவீதியுலா போந்து, வினை தீர்த்தருள்பவர், குறுக்கை வீரட்டனார்.

(இப் பதிகத்தில் இரு பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.)

51. திருக்கோடிக்கா

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம் 63இல், இது 37ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது.

மற்றும் இரண்டாம் திருமுறை பதிகம் எண் 99 காண்க.

சுவாமி : கோடீஸ்வரர், கோடிகாநாதர்

அம்பிகை : திரிபுரசுந்தரி, வடிவாம்பிகை

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

488. நெற்றிமேற் கண்ணினானே நீறுமெய் பூசினானே
கற்றைப்புன் சடையினானே கடல்விடம் பருகினானே
செற்றவர் புரங்கள் மூன்றும் செவ்வழல் செலுத்தினானே
குற்றமில் குணத்தினானே கோடிகா வுடைய கோவே.

தெளிவுரை: சிவபெருமான், நெற்றியில் விழியுடையவர்; திருநீறு பூசிய திருமேனியர்; கற்றையாக விளங்கும் சடை முடியினர்; கடலில் தோன்றிய நஞ்சினைப் பருகி நீலகண்டராக விளங்குபவர்; பகைமை கொண்டு முப்புர அசுரர்களின் கோட்டைகளை எரித்துச் சாம்பலாக்கியவர். அப்பெருமான், எத்தகைய குணக் குற்றமும் அற்றவராய் மன்னுயிர்களின் வினைக் குற்றமும் மலக்குற்றமும் இற்று ஒழியச் செய்து விளங்கும் எண் குணத்தினராய்க் கோடிக்காவில் வீற்றிருக்கும் தலைவரே ஆவார்.

489. கடிகமழ் கொன்றையானே கபாலம்கை யேந்தினானே
வடிவுடை மங்கைதன்னை மார்பிலோர் பாகத்தானே
அடியிணை பரவ நாளும் அடியவர்க்கு
அருள்செய்வானே
கொடியணி விழவ தோவாக் கோடிகா உடையகோவே.

தெளிவுரை: சிவபெருமான், நறுமணம் கமழும் கொன்றை மலரைத் தரித்தவர்; கபாலத்தைக் கையில் ஏந்தியவர்; வடிவுடை மங்கையாக மேவும் உமா தேவியைத் திருமார்பில் பாகமாகக் கொண்டவர்; திருவடியை நாள்தோறும் பரவி ஏத்தும் அடியவர் களுக்கு அருள் புரிபவர். அப் பெருமான், கொடி ஏற்றித் திருவிழாக்கள் ஓய்வில்லாது நிகழும் கோடிக் காவில் மேவும் தலைவர் ஆவார்.

வடிவுடை மங்கை – திருத்தலத்தில் மேவும் அம்பிகையின் பெயரைக் குறித்தது.

490. நீறுமெய் பூசினானே நிழல்திகழ் மழுவி னானே
ஏறுகந்து ஏறினானே இருங்கடல் அமுதொப்பானே
ஆறுமோர் நான்குவேதம் அறம்உரைத் தருளினானே
கூறுமோர் பெண்ணினானே கோடிகா உடைய கோவே.

தெளிவுரை: சிவபெருமான், திருநீறு பூசிய திருமேனி உடையவர்; ஒளி திகழும் மழுப்படை உடையவர்; இடப வாகனத்தை உகந்து ஏறியவர்; பாற்கடலைத் தேவர்கள் கடைந்து பெற்ற அமுதத்திற்கு நிகராக இருந்து, மன்னுயிர்களுக்கு இன்பத்தையும் செல்வத்தையும் தருபவர்; ஆறு அங்கமும் நான்கு வேதங்களும் காட்டும் அறங்களை உரைத்தருளியவர்; உமாதேவியை ஒரு பாகமாக உடையவர். அப்பெருமான் கோடிக்காவில் மேவும் தலைவரே.

ஆறு – வேதத்தின் ஆறு அங்கங்கள்.

491. காலனைக் காலாற் செற்றன்று அருள்புரி கருணையானே
நீலமார் கண்டத்தானே நீள்முடி அமரர் கோவே
ஞாலமாம் பெருமையானே நளிரிளந் திங்கள் சூடும்
கோலமார் சடையினானே கோடிகாவுடைய கோவே.

தெளிவுரை: சிவபெருமான், காலனைத் திருப்பாதத்தால் உதைத்து அழித்து, மார்க்கண்டேயருக்கு அருள் புரிந்த கருணை வள்ளல்; நீலகண்டத்தினர்; நீண்டு ஒளிரும் மணி முடியுடைய தேவர்களின் தலைவர்; இவ்வுலகம் எல்லாம் திகழ்ந்து விளங்கும் பெருமை உடையவர். குளிர்ச்சி பொருந்திய பிறைச் சந்திரனைச் சூடி மேவும் அழகிய சடை முடியுடையவர். அவர், கோடிக்காவில் வீற்றிருக்கும் தலைவர் ஆவார்.

சிறப்புரை: இந்த ஞாலத்தை – உலகத்தை ஆக்கும் பெருமையுடையவர், சிவபெருமான் ஞாலம் ஆவதும், ஞாலத்தை ஆக்குவதும் ஈசனே எனச் சிறப்பித்து ஓதுமாறு, "ஞாலமாம் பெருமையனே" என உரைத்தலாயிற்று. இந்நெறியில் "ஞாலமாம் தில்லை தன்னுள் நவின்ற சிற்றம்பலத்தே நீலஞ் சேர் கண்டனார்தாம்

நீண்டெரி யாடு மாறே" (பா.வ,எண் 227) என ஓதப் பெறுதலும் காண்க. மற்றும் மணிவாசகப் பெருமான், "சோதியனே! துன்னிருளே! தோன்றா பெருமையனே!" என அருளிச் செய்தமையும் நோக்குக. இது ஞாலத்தை ஆக்கும் ஈசன், அத்தகைய பெருமையன் என உணர்த்துதலாம்.

நளிர் – குளிர்ச்சி.

492. **பூணரவு ஆரத்தானே புலியுரி அரையினானே**
காணில் வெண் கோவணம்மும் கையிலோர் கபாலம்ஏந்தி
ஊணுமோர் பிச்சையானே உமையொரு பாகத்தானே
கோணல்வெண் பிறையினானே கோடிகா வுடையகோவே.

தெளிவுரை: சிவபெருமான், அரவத்தை மாலையாகக் கொண்டு, அதனையே ஆபரணமாகப் பூண்டவர்; புலியின் தோலை அரையில் கட்டியவர்; காணப் பெறுமாறு, வெண்மையான வண்ணம் உடைய கோவணத்தைக் கொண்டவர்; கையில் பிரமகபாலம் ஏந்தி, மனைதொறும் திரிந்து பிச்சை ஏற்றவர்; உமா தேவியை ஒரு பாகமாகக் கொண்டு, அம்மையப்பராக விளங்குபவர்; வளைந்த பிறைச் சந்திரனைச் சூடியவர். அப் பெருமான், கோடிக்கா என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் தலைவர் ஆவார்.

சிறப்புரை: ஈசன் நான்கு மறைகளைக் கோவண ஆடையாகக் கொண்டு விளங்கும் பெற்றியினை, மாணிக்க வாசகர், "மன்னுகலை துன்னு பொருள் மறை நான்கே வான் சரடாத் தன்னையே கோவணமாச் சாத்தினன் காண் சாழலோ" என அருளிச் செய்தவாறும் காண்க.

வெண்கோவணம் – மறையின் தூய்மையை உணர்த்தியது.

493. கேழல்வெண் கொம்புபூண்ட கிளரொளி மார்பி னானே
ஏழையேன் ஏழையேனான் என்செய்கேன் எந்தை பெம்மான்
மாழையொண் கண்ணினார்கள் வலைதனில் மயங்கு கின்றேன்
கூழையேறு உடைய செல்வா கோடிகா வுடைய கோவே.

தெளிவுரை: சிவபெருமான், பன்றியின் வெண் கொம்பைப் பூண்டவர்; கிளர்ந்து எழுகின்ற ஒளியுடைய திருமார்பு உடையவர். ஈசனே! தேவரீரின் பேரருளுக்கும் கருணைக்கும், யான் பாத்திரமற்ற ஏழையாகி, அத்தகைய மெய்த்தன்மையை அற்றவனாக உள்ளேன். எந்தை பெருமானே! யான் மோகத்தால் மயங்குகின்றேன். போர்த்தன்மையுடைய இடபத்தை வாகனமாகக் கொண்ட செல்வனே! கோடிக்காவில் வீற்றிருக்கும் தலைவனே! அருளிச் செய்வீராக என்பது குறிப்பு.

கூழை – போர்.

494. அழலுமிழ் அங்கையானே அரிவையோர் பாகத்தானே
தழலுமிழ் அரவம் ஆர்த்துத் தலைதனில் பலிகொள் வானே
நிழலுமிழ் சோலைசூழ நீள்வரி வண்டினங்கள்
குழலுமிழ் கீதம்பாடும் கோடிகாவுடைய கோவே.

தெளிவுரை: சிவபெருமான், எரியும் நெருப்பினை உள்ளங்கையில் ஏந்தியவர்; உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு அம்மையப்பராய் விளங்குபவர்; சீறி ஆர்க்கும் அரவத்தைக் கொண்டுள்ளவர்; பிரமனுடைய கபாலத்தைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு பலி ஏற்பவர். அப்பெருமான், குளிர்ச்சியான நிழல் தரும் சோலைகளில், வண்டினங்கள் குழல்

போன்று இசைத்துக் கீதம் பாடுகின்ற சிறப்பு மிக்க கோடிக்கா என்னும் தலத்தில் வீற்றிருக்கும் தலைவர் ஆவார்.

தலை – பிரமகபாலம்.

495. ஏவடு சிலையினானே புரமவை எரிசெய்தானே
மாவடு வகிர்கொள் கண்ணாள் மலைமகள் பாகத்தானே
ஆவடு துறையுளானே ஐவரால் ஆட்டப்பட்டேன்
கோவடு குற்றம் தீராய் கோடிகாவுடைய கோவே.

தெளிவுரை: மேருமலையை வில்லாகக் கொண்டு அம்பு செலுத்தி, முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கிய சிவபெருமான், மாவடுவகிர் கொண்ட கண்ணினாளாகிய உமாதேவியைப் பாகமாக உடையவர்; ஆவடு துறையுள் வீற்றிருப்பவர். கோடிக்காவில் மேவும் தலைவரே! ஐம்புலன்கலால் ஆட்டப் பெற்று நான் அலைகின்றேன்; பசுவைக் கொன்ற பாவத்தை ஒத்த குற்றம் உடையேன்; வினை தீர்த்து அருள் புரிவீராக.

சிறப்புரை: அம்பிகையின் எழில் மேவும் சிறப்பானது, "மாவடுவகிர் கொள் கண்ணாள்" என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், "மாவடுவகிரன்ன கண்ணிபங்கா நின் மலரடிக்கே கூவிடுவாய், கும்பிக்கே இடுவாய் நின் குறிப்பறியேன்" (அடைக்கலப் பத்து 8) என வரும் திருவாசக அமுத வாக்கும் காண்க.

ஏ – அம்பு; அடு – அடுத்தல், சேர்தல், பொருதல்.

496. ஏற்றநீர்க் கங்கையானே இருநிலம் தாவினானும்
நாற்றமா மலர்மேல் ஏறு நான்முகன் இவர்கள்கூடி
ஆற்றலால் அளக்கலுற்றார்க்கு அழலுரு வாயினானே
கூற்றுக்கும் கூற்றதானாய் கோடிகா வுடைய கோவே.

தெளிவுரை: சிவபெருமான், கங்கையைச் சடை முடியில் தரித்திருக்கும் பரமன். திருமாலும் நான் முகனும் சேர்ந்து அப்பரமனைத் தமது ஆற்றலால் அளக்கலுற்றனர். ஆயினும் அவர், பேரழலரு ஆகியவராய் அவ்விருவருக்கும் புலனாகாதவாறு ஓங்கி உயர்ந்தவர்; காலனுக்கும் காலனாகியவர்; அவர், கோடிக்காவில் மேவும் தலைவர் ஆவார்.

497. பழகநான் அடிமைசெய்வேன் பசுபதீ பாவநாசா
மழகளி யானையின்தோல் மலைமகள் வெருவப் போர்த்த
அழகனே அரக்கன் திண்டோள் அருவரை நெரிய ஊன்றும்
குழகனே கோல மார்பா கோடிகாவுடைய கோவே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தேவரீருக்கு அடிமையாகும் தன்மையைப் பழக்கத்தால் செய்பவன் ஆவேன். பசுபதீ! பாவநாசனே! யானையின் தோலை, உமாதேவி அஞ்சுமாறு போர்த்த அழகனே! இராவணனுடைய தோள் நெரியுமாறு கயிலையை ஊன்றிய அன்பனே! அழகிய திருமார்பு உடைய நாதனே! கோடிக்காவில் வீற்றிருக்கும் தலைவனே!

என்னை அடிமையாக ஏற்று அருள்க! என்பது குறிப்பு.

கோடிக்கா உடைய கோ – கோடிக்காநாதர், திருத்தலத்தில் மேவும் ஈசனின் திருநாமம்.

52. திருவாரூர்

தல விளக்கம்: *திருப்பதிகம் எண் 4 காண்க.*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

498. படுகுழிப் பவ்வத்தன்ன பண்டியைப் பெய்தவாற்றால்
கெடுவதிம் மனிதர் வாழ்க்கை காண்தொறும்
கேதுகின்றேன்
முடுகுவர் இருந்துள்ஐவர் மூர்க்கரேல் இவர்களோடும்
அடியனேன் வாழமாட்டேன் ஆரூர்மூ லட்டனீரே.

தெளிவுரை: *ஈசனே! கடல் போன்று வயிறு உடைய வனாகி, அதற்கே நன்கு உணவைப் பெய்து, படுகுழியில் உளைந்தேன்; கெடுவது இம்மனித வாழ்க்கை. அதனை நினைத்துக் கதறுகின்றேன்; இதனைக் காணும் தோறும் கதறுகின்றேன்; மூர்க்கரான ஐம்புலன்கள் என்னைத் துன்புறுத்துகின்றனர்; ஆரூர் மேவும் மூலட்டநாதரே! அடியவனை ஈடேற்றுக.*

இது, வயிற்றிற் கொள்ளும் பேருணவை இழித்து ஓதுதல் ஆயிற்று. ஐம்புலன்களை வெறுத்தலும் ஆயிற்று.

பண்டி – வயிறு; கேதுதல் – கதறுதல்.

499. புழுப் பெய்த பண்டி தன்னைப் புறம்ஒரு தோலால் மூடி
ஒழுக் கறா ஒன்பதுவாய் ஒற்றுமை ஒன்றும் இல்லை
சழக்குடை இதனுள்ஐவர் சங்கடம் பலவும் செய்ய
அழிப்பனாய் வாழமாட்டேன் ஆரூர் மூலட்ட னீரே.

தெளிவுரை: *ஆரூர் மூலட்டத்தானத்தில் வீற்றிருக்கும் நாதரே! புழுக்களின் கூடு போன்ற வயிறு, தோலால்*

மூடப் பெற்று ஒன்பது வாயில்களை உடைய ஒழுக்க மற்ற இத்தேகத்தில் விளங்குகிறது. ஒற்றுமை அற்ற தன்மையில் இவ்வாயில்கள் உள்ளன. சழக்குடைய இதனுள் ஐம்புலன்கள் இடையூறுகள் பல செய்கின்றன. இதனால் நான் அழிகின்றேன்.

என்னை ஈடேற்றுக என்பது குறிப்பு. ஒழுக்கறா ஒன்பது வாய் – தேகத்தைக் குறித்தது.

500. பஞ்சின்மெல் லடியி னார்கள் பாங்கராய் அவர்கள் நின்று
நெஞ்சில்நோய் பலவும் செய்து நினையினும் நினையவொட்டார்
நஞ்சணி மிடற்றினானே நாதனே நம்பனேநான்
அஞ்சினேற்கு அஞ்சல் என்னீர் ஆரூர்மூ லட்டனீரே.

தெளிவுரை: ஆரூர் மூலத்தானத்தில் மேவும் ஈசனே! பஞ்சினும் மென்மையான அடியுடைய மங்கையர் பால் சார்ந்து நெஞ்சில் துன்பம் எய்தி தேவரீரை நினையாதவனாய் இருந்தேன். நீல கண்டனே! என் நாதனே! நம்பனே! நான் அச்சம் கொண்டு ஏங்கு கின்றேன். அஞ்சாதே என்று கூறி, அருள்வீராக.

501. கொண்டையந் தடங்கண் நல்லார் தம்மையே கெழுவ வேண்டிக்
குண்டராய்த் திரிதந்து ஐவர்குலைத்து இடக் குழியில் நூக்கக்
கண்டுநான் தரிக்ககில்லேன் காத்துக் கொள் கறைசேர் கண்டா
அண்ட வானவர் போற்றும் ஆரூர் மூலட்டனீரே.

தெளிவுரை: ஆரூரின்கண் மேவும் மூலத்தானத்தில் வீற்றிருக்கும் நாதரே! கெண்டை போல் விழியுடைய மங்கையரின் மோகத்தில் ஐம்புலன்களால் தள்ளப்

பட்டு இடருழன்றேன். நான் ஈடேற, தேவரீரே, காத்து அருள் புரிவீராக. நீலகண்டப் பெருமானே! தேவர்கள் போற்றும் நாதரே! அருள்வீராக.

502. தாழ்குழல் இன்சொல் நல்லார் தங்களைத் தஞ்சம்என்று
ஏழையே னாகிநாளும் என்செய் கேன் எந்தைபெம்மான்
வாழ்வதேல் அரிது போலும் வைகலும் ஐவர்வந்து
ஆழ்குழிப் படுக்க ஆற்றேன் ஆரூர்மூ லட்டனீரே.

தெளிவுரை: ஆரூரின்கண் மேவும் மூலத்தானத்தில் வீற்றிருக்கும் நாதரே! கெண்டை போல் விழியுடைய மங்கையரின் மோகத்தில் ஐம்புலன்களால் தள்ளப் பட்டு இடருழன்றேன். நான் ஈடேற, தேவரீரே, காத்து அருள் புரிவீராக. நீலகண்டப் பெருமானே! தேவர்கள் போற்றும் நாதரே! அருள்வீராக.

502. தாழ்குழல் இன்சொல் நல்லார் தங்களைத் தஞ்சம்என்று
ஏழையே னாகிநாளும் என்செய்கேன் எந்தை பெம்மான்
வாழ்வதேல் அரிது போலும் வைகலும் ஐவர்வந்து
ஆழ்குழிப் படுக்க ஆற்றேன் ஆரூர்மூ லட்டனீரே.

தெளிவுரை: ஆரூரில் மேவும் மூலத்தானத்தில் வீற்றிருக்கும் நாதரே! இனிய சொல் பகரும் மகளிரின் வயத்தினனாய் இருந்து மதியிழந்தேன். எந்தை பெருமானே! நான் என்ன செய்வேன்! நல்ல வாழ்க்கை நெறியில் மேவுவது, அரிது ஆகியதே! நாள் தோறும் ஐம்புலன்களால் யான் படுகுழியில் தள்ளப் பட்டுத் துன்புறுகின்றேன். ஐயனே யான் ஈடேறுமாறு புரிவீராக.

சிறப்புரை: ஐம்புலன்களால் தாக்கப்பெறும் தன்மை, "வைகலும் ஐவர் வந்து ஆழ்குழிப்படுக்க ஆற்றேன்" என ஓதப் பெற்றது. இத்தன்மையில் சுந்தர மூர்த்தி

சுவாமிகள், "ஐவர்கொண்டு இங்கு ஆட்டம் ஆடி ஆழ்குழிப்பட்டு அழுந்துவேனுக்கு உய்யுமாறு ஒன்று அருளிச் செய்யீர் ஓணகாந்தன் தளியுளீரே" எனவும்; மாணிக்கவாசகர், "அடற்கரிபோல் ஐம்புலன்களுக்கு அஞ்சி அழிந்த என்னை விடற்கு அரியாய் விட்டிடுதி கண்டாய்" எனவும் அருளிச் செய்தமை காண்க.

இத்தகைய ஆற்றாமையானது மன்னுயிரைத் தன்னுயிராகப் பாவித்து ஏத்தப் பெறுதலாகும். இறைவனால் ஆட்கொள்ளப் பெற்று நஞ்சின் விடத்தி லிருந்தும், யானையின் பிடியிலிருந்தும், நீற்றறையின் வெம்மையிலிருந்தும் மீண்டு, கல்லைப் பிணைத்துக் கட்டினாலும் அதனையே தெப்பமாகக் கொண்டு திரும்பிய நாயனார், மும்மலங்களையும் இருவினை களையும் வென்றவர் என்பதனை ஓர்க.

503. மாற்றம்ஒன்று அருள கில்லீர் மதியிலேன் விதியிலாமை
சீற்றமும் தீர்த்தல் செய்யீர் சிக்கன வுடையராகிக்
கூற்றம் போல் ஐவர்வந்து குலைத்திட்டுக்கோகு செய்ய
ஆற்றவும் கில்லேன் நாயேன் ஆரூர் மூலட்ட னீரே.

தெளிவுரை: ஆரூரில் மேவும் மூலட்ட நாதரே! நான், மதியற்றவனானேன்; நல்ல விதியிலாமையால் உண்டாகும் வினைச் சீற்றத்தையும் தீர்த்தருள் செய்ய மாட்டீர்! ஐம்புலன்கள் என்னைச் சிக்கெனப் பிடித்துக் கூற்றம் போல நின்று குலைத்து என்னை வதைக்கின்றது. நான் ஆற்றாமையால் ஏங்குகின்றேன். இதற்கு மாற்றம் புரிந்து அருள்வீராக.

504. உயிர்நிலை யுடம்பே காலா உள்ளமே தாழியாகத்
துயரமே ஏற்றமாகத் துன்பக் கோல் அதனைப் பற்றிப்
பயிர்தனைச் சுழிய விட்டுப் பாழ்க்குநீர் இறைத்துமிக்க
அயர்வினால் ஐவர்க்கு ஆற்றேன் ஆரூர் மூலட்டனீரே.

தெளிவுரை: ஆரூரில் மேவும் மூலட்டானத்தில் வீற்றிருக்கும் நாதரே! உயிரானது நிலைப்படுகின்ற இந்த உடம்பினையே கால்களாகவும், உள்ளத்தைத் தாழிக் காம்பாகவும், துயரத்தை ஏற்றமாகவும், துன்பமாகிய கோலைப் பற்றிப் பயிருக்கு அல்லாது, பாழ் நிலத்திற்கு நீர் இறைத்து அயர்ந்தேன். ஐம்புலன்கள் என்னைத் துன்புறுத்தக் கலங்குகின்றேன்.

இது, நல்வினையை நாடிப் போற்றி ஈசனை ஏத்தாது, தீவினையைப் பெருக்கி நைந்து வருந்தும் செயலை உருவகித்து உணர்த்துதலாயிற்று.

505. கற்றதேல் ஒன்றுமில்லை காரிகை யாரோ டாடிப்
பெற்றதேற் பெரிதும் துன்பம் பேதையேன் பிழைப்பினாலே
முற்றினால் ஐவர்வந்து முறைமுறை துயரம் செய்ய
அற்றுநான் அலந்து போனேன் ஆரூர்மூ லட்டனீரே.

தெளிவுரை: ஆரூரில் மேவும் மூலட்டநாதரே! யான் நல்ல நூற்களைக் கற்றது இல்லை. காம வயத்தினனாய்த் துன்புற்றுப் பேதையானேன். ஐம்புலன்கள் ஒவ்வொருவராக என்னைத் தொடர்ந்து வந்து துயருள் சேர்க்க, என் நிலையும் அற்றுக் கலங்கினேன்.

அலந்தேன் – கலங்கினேன்.

506. பத்தனாய் வாழமாட்டேன் பாவியேன் பரவிவந்து
சித்தத்துள் ஐவர்தீய செய்வினை பலவும் செய்ய
மத்துறு தயிரே போல மறுகும் என்உள்ளம் தானும்
அத்தனே அமரர்கோவே ஆரூர்மூ லட்டனீரே.

தெளிவுரை: அன்புக்குரிய தேவர் தலைவரே! ஆரூரில் மேவும் மூலட்டானரே! நான், பக்தி கொண்டு

வாழாதவன்; பாவத்தைப் புரிந்தவன்; சித்தத்தில் ஐந்து புலன்களும் நன்கு பரவி, எல்லாத் தீமைகளும் புரிய, மத்தினால் கடையப் பெறும் தயிர் போலத் துன்பத்தால் மெலிகின்றேன். என் உள்ளமானது கலங்குகின்றதே!

சிறப்புரை: உள்ளம் கலங்கும் தன்மையினை மத்தால் கடையப் பெறும் தயிர் என அலைக்கப் பெறுதலை உவமையாக, "மத்துறு தயிரே போல மறுகும் என் உள்ளம்" என உணர்த்தப் பெற்றது. இந்நெறியில், மாணிக்கவாசகர், "மத்துறு தண் தயிரிற் புலன் தீக்கதுவக் கலங்கி வித்துறு வேனை" (நீத்தல் விண்ணப்பம் 30) என, அருளிச் செய்தவாறும் காண்க.

507. தடக்கைநால் ஐந்துக் கொண்டு தடவரை
தன்னைப்பற்றி
எடுத்தவன் பேர்க்கலூடி இரிந்தன பூதம் எல்லாம்
முடித்தலை பத்தும் தோளும் முறிதர இறையேஊன்றி
அடர்த்தருள் செய்ததென்னே ஆரூர்மூ லட்டனீரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இருபது கைகளைக் கொண்டு, கயிலையைப் பற்றி எடுத்த இராவணனுடைய முடிகளும் தோள்களும் நலியுமாறு, நொடி நேரத்தில் திருப்பாதத்தால் ஊன்றி அடர்த்த ஆரூர் மேவும் மூலட்ட நாதரே! தேவரீர், அவ் அரக்கனுக்கும் அருள் செய்த கருணை தான் என்னே!

மூலட்டானர் – மூலத்தானத்தில் வீற்றிருப்பவர், புற்றிடங்கொண்ட நாதர்.

53. திருவாரூர்

தல விளக்கம்: *திருப்பதிகம் எண் 4 காண்க.*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

508. குழல்வலம் கொண்ட சொல்லாள் கோலவேற் கண்ணிதன்னைக்
கழல்வலம் கொண்டு நீங்காக் கணங்களக் கணங்களார
அழல்வலம் கொண்ட கையான் அருட்கதிர் எறிக்கும் ஆரூர்
தொழல்வலம் கொண்டல் செய்வான் தோன்றினார் தோன்றினாரே.

தெளிவுரை: *சிவகணங்கள், புல்லாங்குழல் இசை போன்ற இனிய சொல்லுடைய, வேல் போன்ற கண்ணுடைய தேவியைத் தொழுது, நீங்காது இருந்து வணங்கும் தன்மையினர் ஆவர். அக்கணங்கள் மகிழுமாறு ஈசன், நெருப்பைக் கை ஏந்தியவராகி அருளொளியை வழங்குபவர். அவர், அச் சிவ கணத்தினர் வணங்கிப் போற்ற, ஆரூரின்கண் மேவி உமாதேவியை பாகமாகக் கொண்டு விளங்குபவர். அப்பெருமான், அருள் தன்மையுடையவராய்த் தானே தோன்றியவர்.*

509. நாகத்தை நங்கையஞ்ச நங்கையை மஞ்சை யென்று
வேகத்தைத் தவிர நாகம் வேழத்தின் உரிவை போர்த்து
பாதத்தில் நிமிர்தல் செய்யாத் திங்களை மின்னென்று அஞ்சி
ஆகத்திற் கிடந்த நாகம் அடங்கும்ஆரூர னார்க்கே.

தெளிவுரை: சிவபெருமான் திருமுடியில் மேவும் நாகத்தைக் கண்டு, கங்கையானவள் அஞ்சுகின்றாள்; அந் நங்கையை மயில் என்று கருதி, நாகம் அஞ்சுகின்றது. ஈசன், போர்வையாகக் கொண்டுள்ள யானையின் தோலானது, மேகம் போன்று கருமையாகத் திகழவும், திங்களை மின்னல் என்று கருதிப் பெருமானுடைய திருமார்பில் தவழும் நாகம் அஞ்சுகின்றது. இத்தன்மையில் ஆரூரில் மேவும் ஈசன்பால் நாகமும் கங்கையும் கொள்ளும் பாங்கானது விளங்குதல் ஆயிற்று.

சிறப்புரை: இத் தன்மையில் நாகமும் தேவியும் அச்ச முறும் கவிதை நயம் தோன்றக் குறிக்கப் பெற்றுள்ள பாங்கு, திருப்பாட்டு, வ.எண் 101இல் (10 திருவதிகை வீரட்டானம் பதிகம்) உரைத்தலும் ஆயிற்று.

510. தொழுதகங் குழைய மேவித் தொட்டிமை யுடைய தொண்டர்
அழுதகம் புகுந்து நின்றார் அவரவர் போலும்ஆரூர்
எழிலக நடுவெண்முத்தம் அன்றியும் ஏர்கொள்வேலிப்
பொழிலகம் விளங்கு திங்கள் புதுமுகிழ் சூடினாரே.

தெளிவுரை: திருத்தொண்டர்கள், ஈசனைத் தொழுது, அகம் குழைய மேவி, இமைகள் ஒன்றையொன்று தொட்டுப் பக்திப் பரவசம் கொள்ள அழுது இறைஞ்சுபவர்கள் ஆவர். அவரவர்களுடைய உள்ளம் புகுந்து நிறைபவர், ஆரூர் மேவும் பெருமான். அவர், பெருமையுடைய ஐந்து வேலி கொண்ட பொழில் விளங்கும் தலத்தில், வெண் முத்து போன்று விளங்கும் சந்திரனைச் சூடி விளங்குபவர்.

தொட்டிமை – இமைகள் ஒன்றோடு ஒன்று பொருந்த (தொட) தியானம் செய்யும் அடியவர்களின் மாண்பினைச் சுட்டுதலாம்;

வேலிப்பொழிலகம் – திருக்கோயில் ஐந்து வேலியும் திருக்குளம் – கமலாலயம் ஐந்து வேலியும் ஓடை ஐந்து வேலியும் உடைய பெருமையை உணர்த்தியது.

511. நஞ்சிருள் மணிகொள் கண்டர் நகையிருள் ஈமக்கங்குல்
வெஞ்சுடர் விளக்கத் தாடி விளங்கினார் போலு மூவா
வெஞ்சுடர் முகடு தீண்டி வெள்ளிநா ராசமன்ன
அஞ்சுடர் அணிவெண் திங்கள் அணியுமா ரூரனாரே.

தெளிவுரை: *சிவபெருமான், நஞ்சினை அருந்திக் கரிய மணி போன்ற கண்டத்தைப் பெற்றவர்; மயானத்தில் நள்ளிருளில் நெருப்பினை ஏந்தி ஆடுபவர்; வெம்மை உடைய சுடராகிய சூரியனின் முகட்டினைத் தீண்டும் வெண்மையான கதிர் பரப்பும் சந்திரனைச் சூடியவர். அவர், ஆரூரில் மேவும் பெருமான்.*

512. எந்தளிர் நீர்மைகோல மேனியென் றிமையோர் ஏத்தப்
பைந்தளிர்க் கொம்பர்அன்ன படர்கொடி பயிலப்பட்டுத்
தஞ்சடைத் தொத்தினாலும் தம்மதோர் நீர்மையாலும்
அந்தளி ராகம் போலும் வடிவர் ஆரூரனாரே.

தெளிவுரை: *ஈசன், தளிர் போன்ற குளிர்ந்த தன்மை உடையவள் என்று தேவர்கள் ஏத்தக் கொடி போன்று படர்ந்து விளங்கும் கங்கையைத் தம் சடை முடியின் மீது பொருத்தியுள்ளவர். அத் தன்மையில் இனிமை யுடன் மேவும் அப் பெருமான், அந்தாளி இசை போன்று இனிமை உடையவர். அவர் ஆரூர் மேவும் அழகிய வடிவினர்.*

513. வானகம் விளங்கமல்கும் வளங்கெழு மதியம் சூடித்
தானகம் அழியவந்து தாம்பலி தேர்வர் போலும்
ஊனகம் கழிந்த ஒட்டில் உண்பதும் ஒளிகொள் நஞ்சம்
ஆனகம் அஞ்சும் ஆடும் அடிகள்ஆ ரூரனாரே.

தெளிவுரை: சிவபெருமான், வானத்தில் விளங்கும் வளமை திகழும் சந்திரனைச் சூடியவர்; மகளிரின் மனம் குழையுமாறு மனைதோறும் சென்று பலி கொள்பவர்; அத்தகைய உணவைப் பிரம கபாலத்தில் ஏற்றவர்; நஞ்சினை உண்டவர்; பசுவின் பஞ்ச கௌவியத்தை அபிடேகப் பொருளாக ஏற்றுப் பூசனை பெறுபவர். அத்தகைய அடிகள், ஆரூரனாரே.

ஊனகம் கழிந்த ஓடு – பிரம கபாலம், மண்டையோடு; ஆனகம் அஞ்சு – பஞ்சகௌவியம்.

514. அஞ்சணை கணையினானை யழலுற அன்றுநோக்கி
அஞ்சணை குழலினாளை அமுதமா அணைந்துநக்கு
அஞ்சணை யஞ்சுமாடி ஆடரவு ஆட்டுவார்தாம்
அஞ்சணை வேலியாரூர் ஆதரித்து இடங்கொண்டாரே.

தெளிவுரை: ஈசன், ஐந்து மலர்க் கணைகளையுடைய மன்மதனை எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர். அவர், சுருண்ட கூந்தலையுடைய உமாதேவியை அமுதமென ஏற்றுப் பாகமாகக் கொண்டவர். அப்பெருமான், பூசிக்கப் பெறும் பஞ்சகௌவியத்தை ஏற்றுப் பூசனையாகக் கொண்டு, ஆடுகின்ற அரவத்தையும் ஆடுமாறு நடம் புரியும் தன்மையர். அவர், ஐந்து வேலியுடைய கோயில், குளம், நீரோடை ஆகிய திருவாரூரில் விரும்பி இடம் கொண்டவரே.

அஞ்சணை கணை – மன்மதனுடைய ஐங்கணையைக் குறித்தது; ஐம்மலராவன: தாமரை, அசோகு, மா, முல்லை, கருங்குவளை; அஞ்சணை குழலி – உமாதேவியின் சுருள் கூந்தல்; அஞ்சணை யஞ்சும் – பஞ்ச கௌவியம்; அஞ்சணை வேலி – திருக்கோயில் பரப்பு. பாட்டு வ.எண் 510 காண்க.

515. வணங்கிமுன் அமரர்ஏத்த வல்வினை யானதீரப்
பிணங்குடைச் சடையில் வைத்த பிறையுடைப்
பெருமையண்ணல்

மணங்கமழ் ஓதிபாகர் மதிநிலா வட்டத்தாடி
அணங்கொடி மாடவீதி ஆரூரெம் அடிகளாரே.

தெளிவுரை: தேவர்கள் முன்னர் வணங்கி ஏத்த, அவர்களுடைய வினையைத் தீர்த்த சிவபெருமான் பிணித்து மேவும் சடையில், பிறைச் சந்திரனை வைத்தவர்; நறுமணம் கமழும் கூந்தலையுடைய உமாதேவியைப் பாகமாக உடையவர். அப்பெருமான், அழகிய கொடிகளையும் மாட வீதிகளையும் உடைய ஆரூரில் மேவும் அடிகளே.

516. நகலிடம் பிறர்கட்காக நான்மறை யோர்கள்தங்கள்
புகலிடமாகி வாழும் புகலிலி இருவர் கூடி
இகலிட மாகநீண்டங்கு ஈண்டெழில் அழலதாகி
அகலிடம் பரவியேத்த அடிகள்ஆ ரூரனாரே.

தெளிவுரை: பிறர் மகிழ்ந்து விளங்குகின்ற இடமாகவும், மறையவர்களுக்குப் புகலிடமாகவும், தனக்கு மேல் புகலக் கூடியவர் ஒருவர் யாரும் இல்லை எனவும் பிரமன் திருமால் ஆகிய இருவரும் தேடியஞான்று அழல் என ஓங்கி விரிந்தவராகவும் உடைய அடிகள், ஆரூரனாரே.

நகலிடம் – மகிழ்ச்சி.

517. ஆயிர நதிகள் மொய்த்த அலைகடல் அமுதம்வாங்கி
ஆயிரம் அசுரர் வாழும் அணிமதில் மூன்றும் வேவ
ஆயிரம் தோளும் அட்டித்து ஆடிய அசைவு தீர
ஆயிரம் அடியும் வைத்த அடிகள்ஆ ரூரனாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், பலவாகிய நதிகள் சேரும் அலை கடலில் கடையப் பெற்று அமுதம் கிடைக்குமாறு செய்தவர்; அசுரர்கள் வாழும் முப்புரங்களின்

கோட்டைகளை எரித்துச் சாம்பலாக்கியவர்; தோள்கள் வீசியாடிய அசைவு தீர அடி வைத்து ஆடும் அடிகள் ஆரூரனாரே.

ஆயிரம் அடி – ஆரூரில் மேவும் தியாகேசரின் அஜபா நடனத்தை உணர்த்தியது; ஆயிரம் – அனேகம், பலப்பல, மிகை.

54. திருப்புகலூர்

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 16 காண்க.

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

518. பகைத்திட்டார் புரங்கள் மூன்றும்
பாறிநீ றாகி வீழப்
புகைத்திட்ட தேவர் கோவே
பொறியிலேன் உடலம் தன்னுள்
அகைத்திட்டங்கு அதனை நாளும்
ஐவர்கொண் டாட்ட ஆடித்
திகைத்திட்டேன் செய்வ தென்னே
திருப்புக லூர னீரே.

தெளிவுரை: சிவபெருமானே! மூன்று புரங்களும் எரிந்து சாம்பலாகுமாறு செய்தவரே! தேவரின் தலைவரே! ஐம்புலன்கள் என்னைத் தாக்கி அடர்த்தல் செய்ய நான் அறிவு நீங்கப் பெற்றவனானேன். திகைத்துச் செய்வது அறியாது கலங்குகின்றேன். திருப்புகலூரில் மேவும் தேவரீரே! காத்தருள் புரிவீராக.

பொறி – அறிவு; அகைத்தல் – வருத்தல்.

519. மையரி மதர்த்த ஒண்கண்
மாதரார் வலையிற் பட்டுக்

கையெரி சூலம் ஏந்தும்
கடவுளை நினைய மாட்டேன்
ஐநெரிந் தகமி டற்றே
அடைக்கும் போது ஆவியார்தாம்
செய்வதொன் றறிய மாட்டேன்
திருப்புக லூரனீரே.

தெளிவுரை: மை அணிந்த மாதரார் வலைப்பட்டுக் கையில் நெருப்பும் சூலமும் ஏந்திய கடவுளாகிய தேவரீரை நினையாதவனானேன். நெஞ்சில் கோழை கட்டி அடைப்புண்டு உயிரானது வருந்தும்போது, அத் துன்பத்திலிருந்து மீளும் வகை தெரியாது, செய்வ தொன்றும் அறியாதவனானேன். திருப்புகலூரில் மேவும் பெருமானே! தேவரீர் அருள் புரிவீராக.

ஐ – கோழை; ஆவி – உயிர்.

520. முப்பது முப்பத்தாறு
முப்பதும் இடுகு ரம்பை
அப்பர்போல் ஐவர்வந்து
அதுதரு கிதுவி டென்று
ஒப்பவே நலிய லுற்றால்
உய்யுமாறு அறிய மாட்டேன்
செப்பமே திகழு மேனித்
திருப்புக லூர னீரே.

தெளிவுரை: இவ்வுடம்பானது 96 தத்துவங்களைக் கொண்டு மேவ, அதற்குத் தலைவராக ஐம்புலன்கள் வந்து, "அதனைத் தருவாயாக," "இதனை விட்டு விடு" என்று நலிவு செய்ய, நான் உய்யும் நெறியை அறியாதவனானேன். செம்மேனியராகத் திகழும் திருப்புகலூரில் வீற்றிருக்கும் ஈசனே! தேவரீரே! அருள் புரிவீராக.

முப்பது முப்பத்தாறு முப்பதும் – (31 + 36 + 30) 96 தத்துவங் களையுடைய உடம்பு. பாட்டு வ.எண். 252 காண்க; அப்பர் – தலைவர்; செப்பம் – செம்மை, செந்நிறம்.

521. பொறியிலா அழுக்கை யோம்பிப்
பொய்யினை மெய்யென் றெண்ணி
நெறியலா நெறிகள் சென்றே
நீதனேன் நீதி யேதும்
அறிவிலேன் அமரர் கோவே
அமுதினை மனனில் வைக்கும்
செறிவி லேன் செய்வதென்னே
திருப்புக லூர னீரே.

தெளிவுரை: *பொலிவற்ற மலத்தையுடைய, மெய் என்று சொல்லப்படும் பொய்யுடம்பினை ஓம்பி – பொய்யை மெய்யென்று எண்ணி, நன்னெறி பயவாத தீய வழியில் சென்று கீழ்மையுற்றேன். நல்லறிவு பயக்கும் நீதிகளை அறிகிலேன். தேவர்களின் தலைவனே! அமுதம் போன்ற தேவரீரை, என் மனத்தில் பதிய வைக்கும் அறிவு இல்லாதவனானேன். யான் என் செய்வேன்! திருப்புகலூரில் மேவும் தேவரீரே! அருள் புரிவீராக.*

நீதனேன் – நீசன். கீழ்மையன்.

522. அளியினார் குழலி னார்கள்
அவர்களுக்கு அன்ப தாகிக்
களியினார் பாடல் ஓவாக்
கடவூர்வீ ரட்ட மென்னும்
தளியினார் பாத நாளும்
நினைவிலாத் தகவில் நெஞ்சம்
தெளிவி லேன் செய்வ தென்னே
திருப்புக லூர னீரே.

தெளிவுரை: *ஈசனே! வண்டுகள் ரீங்காரம் செய்யும் கூந்தலையுடைய மங்கையர்பால் அன்பு கொண்டு, காலத்தைக் கழித்தேன். பக்திப் பெருக்கின்வழி மேவும் புகழ்ப் பாடல்கள் ஓய்வின்றி பாடப் பெறும் திருக்கடவூர் வீரட்டம் என்னும் கோயிலில் வீற்றிருக்கும் ஈசனின் திருப்பாதத்தை, ஒரு நாளும் நினையாதவனாய்க் கழிந்தேன். நெஞ்சம் தெளிவற்ற வனாய் வருந்துகின்றேன். நான் என் செய்வேன். திருப்புகலூர் மேவும் தேவரீரே! அருள் புரிவீராக.*

523. இலவினார் மாதர் பாலே
இசைந்துநான் இருந்து பின்னும்
நிலவுநாள் பலவென்று எண்ணி
நீதனேன் ஆதி யுன்னை
உலவிநான் உள்க மாட்டேன்
உன்னடி பரவு ஞானம்
செலவிலேன் செய்வ தென்னே
திருப்புக லூர னீரே.

தெளிவுரை: *ஈசனே! இலவம் போல் மென்மையுடைய மாதர்பால் இசைந்து, அதன் வழியே நாள் கழித்து இழிந்தேன். ஆதிப் பிரானாகிய ஈசனே! தேவரீரை நெஞ்சில் பதித்து நினைக்காமலும், திருவடியைப் பரவும் ஞானத்தைப் பெறாமலும் இருந்தேன்! நான் என் செய்வேன்! திருப்புகலூரில் மேவும் தேவரீரே! அருள் புரிவீராக.*

524. காத்திலேன் இரண்டு மூன்றும்
கல்வியேல் இல்லை யென்பால்
வாய்த்திலேன் அடிமை தன்னுள்
வாய்மையால் தூயேன் அல்லேன்
பார்த்தனுக்கு அருள்கள் செய்த
பரமனே பரவு வார்கள்

தீர்த்தமே திகழும் பொய்கைத்
திருப்புக லூர னீரே.

தெளிவுரை: ஈசனே! ஐம்புலன்கள் என்னை வெருட்டாதவாறு காத்திலேன். ஞானமும் பெற்றேனில்லை. தேவரீருக்கு அடிமை செய்யும் தன்மையில் தூயவனாகவும் இல்லை. அருச்சுனனுக்கு அருள் புரிந்த பெருமானே! பரவி ஏத்தும் அடியவர் களுக்குத் தீர்த்த மகிமையுடைய பொய்கை திகழும் திருப்புகலூரில் மேவும் தேவரீரே, அருள் புரிவீராக.

இரண்டு மூன்றும் – 2 + 3 ஐம்புலன்களை உணர்த்தியது. இது இரு வினைகளும் மும்மலங்களும் உடைமையை நீக்குதல் அற்ற தன்மையையும் சுட்டும். தீர்த்தமே திகழும் பொய்கை – அக்கினி தேவன் பூசித்த தலம். தீர்த்தம் அக்கினி தீர்த்தம். ஆன்மாவை எரிக்கும் இருவினைகளையும், மும்மலங்களையும் தீய்த்துக் குளிர்ச்சி செய்யும் மகிமையைச் சுட்டுதல் எனல் சிறக்கும்; கல்வி – ஞானம்.

525. நீருமாய்த் தீயு மாகி
நிலனுமாய் விசும்பு மாகி
ஏருடைக் கதிர்க ளாகி
இமையவர் இறைஞ்ச நின்றார்
ஆய்வதற்கு அரிய ராகி
அங்கங் கே ஆடுகின்ற
தேவர்க்கும் தேவர் ஆவார்
திருப்புக லூரனா ரே.

தெளிவுரை: ஈசன், நீராக விளங்குபவர்; தீயாக விளங்குபவர்; நிலமும் ஆகாயமும் ஆக விளங்குபவர்; சூரியனும் சந்திரனுமாக விளங்குபவர்; தேவர்கள் ஏத்தி இறைஞ்ச விளங்குபவர்; யாவராயினும் அறிதற்கு அரியவர்; அப்பெருமான், யாவரையும் ஆட்டுவிக்க, அவர் தேவர்க்கும் தேவராக விளங்குபவர்; அவரே திருப்புகலூரில் வீற்றிருப்பவர்.

ஏர் – சிறப்புப் பொருந்திய.

526. மெய்யுளே விளக்கை யேற்றி
வேண்டளவு உயரத் தூண்டி
உய்வதோர் உபாயம் பற்றி
உகக்கின்றேன் உகவா வண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர்
அவர்களே வலியர் சாலச்
செய்வதொன்று அறிய மாட்டேன்
திருப்புக லூர னீரே.

தெளிவுரை: திருப்புகலூரில் மேவும் ஈசனே! என்னுடைய தேகத்தில் ஞான விளக்கை ஏற்றித் தேவையான அளவு ஒளி பெருக்கி, உய்யும் உபாயம் நோக்கி மகிழ்கின்ற நிலையினைக் காணும் போது, நான் மகிழாதபடி ஐம்புலன்களை உள்ளே வைத்தீரே! அவர்கள், வலிமையானவர்களாக என்னை வஞ்சித்து நலியச் செய்கின்றனர். நான் செய்வதொன்றும் அறியாது ஏங்குகின்றேன். தேவரீரே! அருள் புரிவீராக.

527. அருவரை தாங்கி னானும்
அருமறை யாதி யானும்
இருவரும் அறிய மாட்டா
ஈசனார் இலங்கை வேந்தன்
கருவரை எடுத்த ஞான்று
கண்வழி குருதி சோரத்
திருவிரல் சிறிது வைத்தார்
திருப்புக லூர னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கோவர்த்தன கிரியைத் தாங்கிய திருமாலும் வேதம் ஓதுபவராகிய பிரமனும் ஆகிய இருவரும் கண்டு அறிய முடியாத ஈசன், இராவணன், கயிலையை எடுத்த போது, அவன் நெரிந்து அலறுமாறு

திருப்பாத விரலால் சிறிது ஊன்றினார். அப் பெருமான், திருப்புகலூரில் மேவும் பெருமானே.

கருவரை – கயிலை மலை.

55. திருவலம்புரம்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 44ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. இது மேலப் பெரும்பள்ளம் என வழங்கப் படுகிறது. திருமால் வழிபட்டு வலம்புரிச் சங்கைப் பெற்ற தலம். ஏரண்ட முனிவர் திருவலஞ்சுழியில் காவிரியில் இறங்கி இவ்வூரில் கரை ஏறியதாகக் கூறப்படுகிறது.

மற்றும் மூன்றாம் திருமுறை பதிகம் எண் 103 காண்க. இது மாடக் கோயில்.

சுவாமி : வலம்புரநாதர்

அம்பிகை : வடுவகிர்க் கண்ணி

தல மரம் : பனை

தீர்த்தம் : பிரம தீர்த்தம், லட்சுமி தீர்த்தம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

528. தெண்டிரை தேங்கி யோதம்
சென்றடி வீழுங் காலைத்
தொண்டிரைத் தண்டர் கோனைத்
தொழுதடி வணங்கி யெங்கும்
வண்டுகள் மதுக்கண் மாந்தும்
வலம்புரத்து அடிகள் தம்மைக்

கொண்டுநற் கீதம் பாடக்
குழகர்தாம் இருந்த வாறே.

தெளிவுரை: தெளிந்த கடலலைகளின் ஓதம் ஈசன் திருப்பாதத்தில் பதிந்து வணங்குகின்ற தன்மை உடையது. திருத்தொண்டர்கள் அண்டர் நாயகனாகிய அப் பெருமானைத் தொழுது போற்றுகின்றனர். வண்டுகள், மகரந்தங்களை மாந்தும் வலம் புரத்தில் பெருமானைக் கண்டு பக்திக் கீதங்களை இசைத்துப் பாடி ஏத்த, அப் பெருமான் அருள் வழங்கும் பெற்றி யினராய் இருந்தவாறுதான் என்னே!

529. மடுக்களில் வாளை பாய
வண்டினம் இரிந்த பொய்கைப்
பிடிக்களிறு என்னத் தம்மிற்
பிணைபயின்று அணைவ ரால்கள்
தொடுத்தநன் மாலை யேந்தித்
தொண்டர்கள் பரவி யேத்த
வடித்தடங் கண்ணி பாகர்
வலம்புரத் திருந்த வாறே.

தெளிவுரை: மடுக்களில் வாளை மீன்கள் துள்ளிக் குதிக்கவும், வண்டினங்கள் அஞ்சிப் பொய்கையை நோக்கிச் செல்ல, ஆங்கு பிடியும் களிறும் போன்று வரால்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து விளங்க, திருத்தொண்டர்கள் மலர் மாலைகளைத் தொடுத்து ஏந்தி, ஈசனைப் பரவி ஏத்த, உமாதேவியைப் பாகமாக உடைய அப்பெருமான், வலம்புரத்தில் வீற்றிருக்கின்ற அருமைதான் என்னே!

வடித்தடங் கண்ணி – உமாதேவியார்.

530. தேனுடை மலர்கள் கொண்டு
திருந்தடி பொருந்தச் சேர்த்தி

ஆனிடை அஞ்சும் கொண்டு
அன்பினால் அமரஆட்டி
வானிடை மதியம் சூடும்
வலம்புரத்து அடிகள் தம்மை
நானடைந்து ஏத்தப் பெற்று
நல்வினைப் பயனுற் றேனே.

தெளிவுரை: தேன் விளங்கும் நறுமலர்களைக் கொண்டு திருவடியில் பொருந்துகின்ற மனத்தினால் பூரித்துச் சேர்த்தும், பசுவின் பஞ்ச கௌவியத்தைக் கொண்டு குளிர அபிடேகம் செய்தும், சந்திரனைச் சூடிய வலம்புரத்து நாதரை நான் அடைந்து ஏத்தி, நல் வினைப் பயனை உற்றனன்.

சிறப்புரை: ஈசனுக்குப் பூக்களைச் சாற்றி மனம் பொருந்த ஏத்துதலும், பஞ்சகௌவியத்தைக் கொண்டு அபிடேகம் செய்தலும், நல்வினைப் பயனை அளிக்கும் என ஏத்தப் பெற்றது. ஈசனைப் பூக்கள் கொண்டு ஏத்திப் போற்றி நல்வினைப் பெறுதலைத் திருஞானசம்பந்தர், "பூ நாளும் தலை சுமப்பப் புகழ் நாளும் செவி கேட்ப நாநாளும் நவின்று ஏத்தப் பெறலாமே நல்வினையே" (இரண்டாம் திருமுறை பா.வ.எண் 439) என அருளிச் செய்தவாறும் காண்க.

இத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஈசன் திருநாமமானது இத்திருப்பாட்டில் வலம்புரத்து அடிகள் என ஓதப் பெற்றது. இது இத் தலத்தின் பெயரையும் சுட்டுவதாயிற்று.

531. முளைஎயிற் றிளநல் ஏனம்
பூண்டுமொய் சடைகள் தாழ
வளைஎயிற் றிளைய நாகம்
வலித்தரை இசைய வீக்கிப்

புளைகயப் போர்வை போர்த்துப்
புனலொடு மதியம் சூடி
வளைபயில் இளையர் ஏத்தும்
வலம்புரத்து அடிகள் `தாமே.

தெளிவுரை: *பன்றியின் கொம்பினைப் பூண்டு, சடை முடிகள் தாழ, வளைந்த பல்லுடைய நாகத்தை அரையில் பொருந்தக் கட்டி, யானையின் தோலைப் போர்த்துக் கங்கையும், சந்திரனும் சூடி விளங்குபவர், ஈசன். அவர், வளையல் அணிந்த மகளிர் ஏத்தும் வலம்புரநாதரே.*

கயப் போர்வை – யானையின் தோல்.

532. சுருளுறு வரையின் மேலால்
துளங்கிளம் பளிங்குசிந்த
இருளுறு கதிர்நு ழைந்த
இளங்கதிர் பசலைத் திங்கள்
அருளுறும் அடியர் எல்லாம்
அங்கையின் மலர்கள் ஏந்த
மருளுறு கீதங் கேட்டார்
வலம்புரத்து அடிக ளாரே.

தெளிவுரை: *மலையின் மீது பளிங்கு போன்ற வெண் கதிர்களை வீசும் சந்திரனைச் சூடிய ஈசனை, அடியவர்கள் எல்லாம் அழகிய கையில் மலர்களை ஏந்தித் தூவி வழிபடவும், அவர்கள் பாடும் கீதங் களைக் கேட்டு வீற்றிருப்பவர், வலம்புரநாதரே.*

533. நினைக்கின்றேன் நெஞ்சு தன்னால்
நீண்டபுன் சடையி னானே
அனைத்துடன் கொண்டு வந்தங்கு
அன்பினால் அமைய ஆட்டிப்

புனைக்கின்றேன் பொய்மை தன்னை
　　மெய்ம்மையைப் புணர மாட்டேன்
எனக்குநான் செய்வ தென்னே
　　இனிவலம் புரவனீரே.

தெளிவுரை: *வலம்புரத்தில் மேவும் நாதரே! நீண்ட சடை முடியுடைய பெருமானே! அனைத்துப் பூசனைப் பொருள்களும் கொண்டு பூசித்து வழிபட வேண்டும் என்று நினைக்கின்றேன். ஆயினும் பொய்மையால் மயங்குகின்றேன். மெய்ம்மையை உணராதவன் ஆனேன். இனி நான் என் செய்வேன். அருள் புரிவீராக என்பது குறிப்பு.*

534. செங்கயல் சேல்கள் பாய்ந்து
　　தேம்பழம் இனிய நாடித்
தங்கயம் துறந்து போந்து
　　தடம்பொய்கை யடைந்து நின்று
கொங்கையர் குடையுங் காலைக்
　　கொழுங்கனி அழுங்கி னாராம்
மங்கல மனையின் மிக்கார்
　　வலம்புரத்து அடிக ளாரே.

தெளிவுரை: *கயல்களும் சேல்களும் சுவை மிக்க கனிகளை நாடித் தாம் இருக்கின்ற நீர் நிலைகளை விட்டுப் பெரிய குளங்களை அடைகின்றன. ஆங்கு, மகளிர் குடைந்து நீராடி மகிழ்கின்றனர். அத்தகைய மங்கல மனைகள் மிகுந்த தலத்தில் வலம்புரநாதர் வீற்றிருப்பார்.*

சிறப்புரை: *மகளிர் பொய்கையில் நீராடும் சிறப்பானது, இத் திருப்பாட்டில் நன்கு ஓதப் பெறுவதாயிற்று. இத் தன்மையில், மகளிர் பொய்கையில் நீராடும் சிறப்பினைத் திருஞானசம்பந்தர், "மடையில் வாளை*

பாய மாதரார் குடையும் பொய்கைக் கோலக்கா வுளான்'' (முதல் திருமுறை; பா. வ. எண் 239) என அருளிச் செய்தமை காண்க. மாணிக்கவாசகர், "மொய்யார் தடம் பொய்கைபுக்கு முகேரென்னக் கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி'' என அருளிய அமுத வாசகமும் காண்க.

535. அருகெலாம் குவளை செந்நெல்
அகவிலை ஆம்பல் நெய்தல்
தெருவெலாம் தெங்கு மாவும்
பழம்விழும் படப்பை எல்லாம்
குருகினம் கூடி யாங்கே
கும்மலித் திறகு லர்த்தி
மருவலாம் இடங்கள் காட்டும்
வலம்புரத் தடிக ளாரே.

தெளிவுரை: சூழ்ந்து விளங்கும் இடங்களில் குவளையும் செந்நெலும் விளைய, இடையில் ஆம்பலும் நெய்தலும் திகழ, தெருக்களில் தென்னையும் மாமரங்களும் திகழ, கனிகள் வழங்கும் தோட்டங்கள் பெருக, ஆங்கு குருகினம் கூடி மகிழ்ந்து இறகுகளை விரித்து மகிழ வலம்புரம் என்னும் தலமானது உடையதாகும். ஆங்கு வீற்றிருப்பவர், வலம்புரநாதரே.

அருகெலாம் – சூழ்ந்து; படப்பை – தோட்டம்.

536. கருவரை யனைய மேனிக்
கடல்வண்ணன் அவனும் காணான்
திருவரை யனைய பூமேற்
றிசைமுகன் அவனும் காணான்
ஒருவரை யுச்சி யேறி
ஓங்கினார் ஓங்கிவந்து

அருமையில் எளிமை யானார்
அவர்வலம் புரவ னாரே.

தெளிவுரை: *திருமாலும் நான்முகனும் தேடியும் காணற்கு அரியவராகிய சிவபெருமான், ஓங்கி நெடிது உயர்ந்து தோன்றியவர். பின்னர் அருமைமிகு எளிமையாய் விளங்கினார். அவர் வலம்புரநாதரே.*

537. வாளெயிறு இலங்க நக்கு
வளர்கயி லாயம் தன்னை
ஆள்வலி கருதிச் சென்ற
அரக்கனை அரைக்கீழ் அன்று
தோளொடு பத்து வாயும்
தொலைந்துடன் அழுந்தவூன்றி
ஆண்மையும் வலியும் தீர்ப்பார்
அவர்வலம் புரவ னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *தனது ஒளி மிக்க கோரைப்பல் நெரியுமாறு நகை செய்து, கயிலாயத்தை எடுத்த அரக்கனாகிய இராவணனை, மலையின்கீழ்ப் பத்துத் தோளும் நெரிய வாயும் அலறுமாறு, திருப்பாத விரலால் ஊன்றி அடர்த்தவர், ஈசன். அவர், வலம்புரநாதரே.*

56. திருவாவடுதுறை

தல விளக்கம்: *காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 36ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. கோகழி, சிவபுரம், பிரமபுரம் முதலான பெயர்கள் உண்டு. இறைவன் வீர சிங்காசனத்தில் இருந்து சுந்தர நடனம் புரிந்து அருளிய தலம்.*

திருஞான சம்பந்தருக்குப் பொற்கிழி அருளிய தலம். அம்பிகை பசு வடிவத்தில் ஈசனை வழிபட்ட தலம்.

மற்றும் மூன்றாம் திருமுறை பதிகம் எண் 4 காண்க.

சுவாமி : மாசிலாமணீஸ்வரர், கோமுக்தீஸ்வரர்

அம்பிகை : ஒப்பிலா முலையம்மை, அதுல்ய குஜாம்பிகை

தல மரம் : படர் அரசு

தீர்த்தம் : கோமுக்தி தீர்த்தம், பத்ம தீர்த்தம், கைவல்ய தீர்த்தம்

தல விநாயகர் : துணைவந்த விநாயகர்

நந்தி : தருமநந்தி

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

538. மாயிரு ஞாலமெல்லா மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க்கு அம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே.

தெளிவுரை: இப் பெரிய உலகம் எல்லாம் ஈசனின் திருவடியை வணங்கி ஏத்தும். அப் பெருமான், கங்கையைப் படர்ந்து மேவும் சடை முடியின் மீது வைத்தவர்; பெரிய பொழில்கள் சூழ்ந்த திருக்கழுமல நகரினராகிய திருஞானசம்பந்தருக்கு, ஆயிரம் பொன் கொடுத்த அருளாளர். அவர், ஆவடுதுறையில் வீற்றிருக்கும் ஈசனே.

சிறப்புரை: இத் திருப்பாட்டானது, திருஞான சம்பந்தருக்கு ஈசன், ஆயிரம் பொன் அருளிச் செய்த பேற்றினைக் குறிக்கப் பெற்றது. இதனையொட்டி ஆளுடைய பிள்ளையார், "இடரினும் தளரினும்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை எடுத்தோதினார் (மூன்றாம் திருமுறை; பதிகம் எண் 4) என்பதும் காண்க.

திருஞானசம்பந்தர் ஆயிரம் பொற்கிழி பெற்ற அற்புதத்தைச் சேக்கிழார் பெருமான்,

நச்சி இன்தமிழ் பாடிய ஞானசம் பந்தர்
இச்சை யேபுரிந்து அருளிய இறைவர்இன் னருளால்
அச்சி றப்பருள் பூதமுன் விரைந்தகல் பீடத்து
உச்சி வைத்தது பசும்பொன் ஆயிரக்கிழி ஒன்று.

— திருஞானசம்பந்தர் புராணம், பாடல் 426

என அருளியமை காண்க.

539. மடந்தைபா கத்தர்போலும் மான்மறிக் கையர்போலும்
குடந்தையிற் குழகர் போலும் கொல்புலித்
தோலர்போலும்
கடைந்தநஞ் சுண்பர் போலும் காலனைக்
காய்வர்போலும்
அடைந்தவர்க்கு அன்பர் போலும் ஆவடு துறையனாரே.

தெளிவுரை: சிவபெருமான், உமாதேவியைப் பாகமாகக் கொண்டுள்ளவர்; மான் கன்றைக் கையில் வைத்துள்ள வர்; குடந்தை என்னும் தலத்தில் அழகராய்த் திகழ்ந்து விளங்குபவர்; புலித் தோலை உடுத்தியவர்; நஞ்சினை உட்கொண்டு நீலகண்டராக விளங்குபவர்; காலனைக் காலால் உதைத்து மாய்த்தவர். தன்னை அடைந்து ஏத்துபவர்களுக்கு அன்பராகி அருள் நல்கும் அப் பெருமான், ஆவடுதுறையில் வீற்றிருப்பவரே.

540. உற்றநோய் தீர்ப்பர்போலும் உறுதுணை யாவர்போலும்
செற்றவர் புரங்கள்மூன்றும் தீயெழச் செறுவர்போலும்
கற்றவர் பரவியேத்தக் கலந்துலந்து அலந்து பாடும்
அற்றவர்க்கு அன்பர்போலும் ஆவடு துறையனாரே.

தெளிவுரை: மும்மலம் மற்றும் பிறவி நோய் தீர்த்து, உயிர்க்கு உறுதுணையாய் விளங்கும் சிவபெருமான், பகைத்துத் திரிந்து போர் செய்த முப்புர அசுரர்களின் கோட்டைகள், எரித்து சாம்பலாகுமாறு செய்தவர். அப்பெருமான், வேதம் வல்ல அந்தணர்கள் பரவி ஏத்தப் பக்திப் பெருக்கால் கசிந்து உருகியும், விரதம் இருந்தும், பாடிப் போற்றியும், தன்னை மறந்தவராயும், இவ்வுலகில் அகப்பற்றும் புறப்பற்றும் அற்றவராயும் மேவும் அடியவர்களுக்கு அன்பராகவும் விளங்குபவர். அவர், ஆவடுதுறையில் வீற்றிருக்கும் இறைவரே.

541. மழுவமர் கையர் போலும் மாதவள் பாதர்போலும்
எழுநுனை வேலர்போலும் என்புகொண் டணிவர்போலும்
தொழுதெழுந்து ஆடிப்பாடித் தோத்திரம் பலவும்சொல்லி
அழுமிவர்க்கு அன்பர்போலும் ஆவடு துறையனாரே.

தெளிவுரை: சிவபெருமான், மழுப்படையைக் கையில் கொண்டுள்ளவர்; உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்கும் திருமேனி உடையவர்; கூரிய முத்தலை வேல் எனப்படும் சூலத்தை உடையவர்; எலும்பு மாலை அணிபவர்; தொழுது போற்றியும், பக்தியால் ஆடிப் பாடியும், தோத்திரங்கள் சொல்லியும், அழுது நெக்குருகி ஏத்தியும் வணங்கு பவர்களுக்கு அன்புடையவர். அவர், ஆவடுதுறையில் வீற்றிருக்கும் இறைவரே.

542. பொடியணி மெய்யர் போலும் பொங்குவெண்
ணூலர்போலும்
கடியதோர் விடையர்போலும் காமனைக் காய்வர்போலும்

வெடிபடு தலையர்போலும் வேட்கையால்
பரவும்தொண்டர்
அடிமையை ஆள்வர்போலும் ஆவடு துறைய னாரே.

தெளிவுரை: சிவபெருமான், திருநீறு பூசிய திருமேனியர்; ஒளி திகழும் முப்புரிகளையுடைய வெண்ணூல் தரித்தவர்; இடப வாகனத்தை உடையவர்; மன்மதனை எரித்தவர்; மண்டை ஓடுகளைக் கோத்து மாலையாக அணிந்தவர்; விரும்பும் மனத்தினரராய் அடிமை பூண்ட தொண்டர்களைத் தாங்கி, அவர்களுக்கு எல்லா நன்மைகளையும் புரிபவர். அவர், ஆவடு துறையில் வீற்றிருப்பவரே.

வெடிபடு தலையர் – மண்டை ஒட்டு மாலை.

543. வக்கரன் உயிரைவவ்வக் கண்மலர் கொண்டுபோற்றச்
சக்கரம் கொடுப்பர்போலும் தானவர் தலைவர் போலும்
துக்கமா மூடர்தம்மைத் துயரிலே வீழ்ப்பர்போலும்
அக்கரை ஆர்ப்பர் போலும் ஆவடு துறையனாரே.

தெளிவுரை: வக்கராசுரன் என்பவனை வதம் செய்யும் பொருட்டுத் திருமால் கண் மலர் சாற்றி வேண்ட, சக்கரப் படையை அருளிச் செய்தவர், சிவபெருமான். அவர், தேவர்களுக்கெல்லாம் தலைவர்; உலகப் பற்றினைக் கொண்ட பேதையரைப் பிறவித் துயரில் வீழ்த்துபவர்; எலும்பினை அரையில் கட்டியவர்; அவர், ஆவடுதுறையில் வீற்றிருக்கும் பெருமானே.

சிறப்புரை: இது, உலகப் பற்றுடையவர்களைப் பிறவித் துயரில் வீழ்த்துவர் என்பதானது, அத்தகைய பற்றின்றி ஈசனைப் பற்றி மேவும் திருத்தொண்டர்களுக்குப் பிறவித் துயரை நீக்கி அருள்பவர் ஈசனே என உணர்த்துவதாயிற்று.

அக்கரை – அக்கு அரை, அக்கு – எலும்பு.

544. விடைதரு கொடியர் போலும் வெண்புரிநூலர் போலும்
படைதரு மழுவர்போலும் பாய்புலித் தோலர் போலும்
உடைதரு கீளர்போலும் உலகமும் ஆவர்போலும்
அடைபவர் இடர்கள் தீர்க்கும் ஆவடு துறையனாரே.

தெளிவுரை: சிவபெருமான், இடபக் கொடியுடையவர்; வெண்மையான முப்புரி நூல் அணிந்தவர்; மழுப்படை உடையவர்; புலித்தோலை உடுத்தியவர்; கோவணத்தைக் கீழ் உடையாகக் கொண்டவர்; எல்லா உலகமும் ஆகுபவர்; அப்பெருமான், தன்னைச் சரண் அடைந்து ஏத்தும் அடியவர்களுடைய இடர்களைத் தீர்க்கும் பாங்குடையவராய், ஆவடு துறையில் வீற்றிருப்பவரே.

545. முந்திவா னோர்கள்வந்து முறைமையால் வணங்கியேத்த
நந்திமா காளர்என்பார் நடுவுடை யார்கள் நிற்பச்
சிந்தியா தேயொழிந்தார் திரிபுரம் எரிப்பர் போலும்
அந்திவான் மதியம்சூடும் ஆவடு துறையனாரே.

தெளிவுரை: தேவர்கள், வணங்கும் நெறிமுறைப்படி வணங்கி ஏத்த சிவகணங்கள் தொழுது நிற்கச் சிந்தியாத முப்புர அசுரர்களை எரித்தவர், சிவபெருமான். அவர், பிறைச் சந்திரனைச் சூடி மேவும், ஆவடுதுறையின் நாதரே.

நந்திமாகாளர் – சிவ கணங்கள்.

546. பானமர் ஏனமாகிப் பாரிடந் திட்ட மாலும்
தேனமர்ந் தேறும் அல்லித் திசைமுகம் உடையகோவும்
தீனரைத் தியக்கறுத்த திருவுரு வுடையார்போலும்
ஆனரை யேற்றர்போலும் ஆவடுதுறைய னாரே.

தெளிவுரை: பன்றி வடிவம் கொண்டு பூமியைக் குடைந்து சென்ற திருமாலும், தாமரை மலரில் விளங்

கும் நான்கு முகம் உடைய பிரமனும் தேடியும் காண மாட்டாத திருவுடையவர் ஈசன். அவர், இடப வாகனத்தில் ஏறி விளங்கும் ஆவடுதுறையனாரே.

அல்லி – தாமரையின் அக இதழ்.

547. பார்த்தனுக்கு அருள்வர்போலும் படர்சடை முடியர் போலும்
ஏத்துவார் இடர்கள்தீர இன்பங்கள் கொடுப்பர் போலும்
கூத்தராய்ப் பாடியாடிக் கொடுவலி யரக்கன் றன்னை
ஆர்த்தவாய் அலறுவிப்பார் ஆவடு துறைய னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவபெருமான், அருச்சுனருக்குப் பாசுபதாத்திரம் அருளியவர்; படர்ந்த சடை முடியுடையவர்; ஏத்தி வணங்குபவர்களுடைய இடரைத் தீர்ப்பவர்; அவர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பவர்; கூத்தப் பெருமானாய்ப் பாடுதலும் ஆடுதலும் செய்பவர்; இராவணனை, மலையின்கீழ் அடக்கி அலறச் செய்தவர்; அவர், ஆவடு துறையனாரே.

57. திருவாவடுதுறை

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 56 காண்க.

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

548. மஞ்சனே மணியு மானாய் மரகதத் திரளுமா னாய்
நெஞ்சுளே புகுந்து நின்று நினைதரு நிகழ்வினானே
துஞ்சும்போ தாகவந்து துணையெனக் காகிநின்று
அஞ்சலென் றருள வேண்டும் ஆவடு துறையுளானே.

தெளிவுரை: திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் பெருமானே! ஈசனே! தேவரீர், மைந்தராயும், மணியாகவும், மரகதத் திரளாகவும் நெஞ்சுள் புகுந்து நினைவுகளை நிகழ்விப்பவராகவும் விளங்குபவரே! துஞ்சும்போது துணையாக வந்து என்னைக் காத்து அஞ்சாதே என அருளிச் செய்வீராக.

சிறப்புரை: ஈசனை, மஞ்சனே! என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், "மஞ்சா போற்றி மணாளா போற்றி" என அருளிச் செய்த மாணிக்கவாசகர் அமுதவாக்கும் காண்க.

மஞ்சன் – மைந்தன்.

549. நானுகந் துன்னை நாளும் நணுகுமா கருதியேயும்
ஊனுகந் தோம்பு நாயேன் உள்ளூற ஐவர் நின்றார்
தானுகந் தேயுகந்த தகவிலாத் தொண்டனே னான்
ஆனுகந் தேறுவானே ஆவடு துறையு ளானே.

தெளிவுரை: இடப வாகனத்தை உகந்து ஏறும் ஈசனே! ஆவடுதுறையில் மேவும் பெருமானே! தேவரீரை உகந்து, கருதி ஏத்த வேண்டும் என்றாலும், நான் ஊனுடம்பை ஓம்பும் நாயேன் ஆனேன். ஐம்புலன்கள் என்னை உள்ளிருந்து பற்றி நிற்க, அவர்கள் விரும்பியவற்றையே நான் செய்து உகந்து, தகவில்லாத தொண்டனாக உள்ளேன்.

இது, தன் ஆற்றாமையைப் புலப்படுத்திப் பரமனின் கருணைவயத்தை இறைஞ்சி, அருளுமாறு வேண்டுதலாம்.

ஆன் – இடபம்.

550. கட்டமே வினைகளான காத்திரை நோக்கியாளாய்
ஒட்டவே யொட்டி நாளும் உன்னையுள்
வைக்கமாட்டேன்
பட்டவான் தலைகையேந்திப் பலிதிரிந்து ஊர்கள்
தோறும்
அட்டமாவு ருவினானே ஆவடு துறையுளானே.

தெளிவுரை: *அட்ட மூர்த்தமாய் மேவும் நாதனே! ஆவடு துறையுள் மேவும் ஈசனே! வினைகள் யாவும் துன்பத்தையே தருவன. அவை அகலவொட்டாது நான் அவற்றைப் பேணிக் காக்கின்றவனாகி, அதற்கு ஆளாகி, அதனோடு இயையப் பொருந்தி, தேவரீரை ஒரு நாள் கூட நினைத்து ஏத்தாதவனானேன். பிரம கபாலம் ஏந்தி ஊர்கள்தோறும் திரிந்து பலியேற்ற தேவரீர், அருள் புரிவீராக.*

சிறப்புரை: *கட்டம் தரும் வினைகள் என உரைத்த தன்மையானது, வினைத் துன்பத்தை உணர்த்துத லாயிற்று. இத்தன்மையில், "கட்டமும் பிணியும் களைவானை" (திருவாமூர் திருப்பதிகம் 2) என அருளிச் செய்த சுந்தரர் திருவாக்கும் காண்க. மாணிக்கவாசகர், "சிட்டனே! சிவலோகனே! சிறு நாயினுங் கடையாய வெங்கட்டனேனையும் ஆட் கொள்வான் வந்து காட்டினாய் கழுக்குன்றிலே"என அருளிச் செய்தமையும் காண்க.*

மற்றும், துன்பமானது ஒட்டி நிற்க, ஈசனை ஒட்டி நின்று ஏத்தாத தன்மையினை, "ஒட்டவே ஒட்டி நாளும் உன்னை உள்வைக்க மாட்டேன்" என உரைத்தலாயிற்று. இத்தன்மையில், "ஒட்டி ஆட்கொண்டுபோய் ஒளித்திட்ட உச்சிப் போதனை"

(திருவாரூர்ப் பதிகம் 10) என அருளிச் செய்த சுந்தரர் திருவாக்கும் காண்க.

கட்டம் – (கஷ்டம்) துன்பம்; பட்டவான் தலை – மண்டை ஓடு, பிரம கபாலம்.

551. பெருமைநன் றுடையதில்லை யென்றுநான் பேசமாட்டேன்
ஒருமையால் உன்னையுள்கி உகந்துவான் ஏறமாட்டேன்
கருமையிட் டாயஊனைக் கட்டமே கழிக்கின் றேனான்
அருமையா நஞ்சம்உண்ட ஆவடு துறையுளானே.

தெளிவுரை: உண்பதற்கு அருமையதாகிய நஞ்சினை உண்ட ஆவடுதுறை அரனே! தேவரீரைத் தரிசிக்க முத்தி தரும் பெருமை உடைய தில்லை என, நான் பேசிப் புனிதம் அடையாதவனானேன். மனத்தை ஒன்றி இருக்குமாறு செய்து, தேவரீரை உள்கி, மகிழ்ந்து, சிறப்பினை அடைகின்ற மேல்நிலைக்குச் செல்ல மாட்டேன். கருக்கொண்ட பிறவியைக் கொண்டு, ஊனை வளர்த்துப் பெருக்கித் துன்பத்தையே பெற்றுக் கழிக்கின்றேன். நான் என் செய்வேன்! ஈசனே, காத்தருள வேண்டும் என்பது குறிப்பு.

சிறப்புரை: தில்லையின் சிறப்பானது, "பெருமை நன்றுடைய தில்லை" என ஓதப் பெற்றது. இத் தன்மையில், "வேதங்கள் தொழுதேத்தும் விளங்கு தில்லை கண்டேனே" எனத் திருவாதவூரர் அருளிச் செய்த அமுத மொழியும் (கண்டபத்து 10) காண்க. திருநாவுக்கரசர் இத் திருப்பதிகத்தில் தில்லை என்று குறித்த சிறப்பினை ஓர்க. இத் தகைமையில் திருக்கச்சி யேகம்பம் பதிகம் பா.வ.எண் 443இல் திருத்துருத்தி மற்றும் திருப்பழனமும்; திருக்கோடிக்கா திருப்பதிகம்; பா.வ.எண் 495இல் ஆவடு துறையும்; திருவையாறு

திருப்பதிகம் பா.வ.எண் 381இல் இடை மருதும்; திருப்புகலூர் திருப்பதிகம், பாட்டு. வ.எண் 522இல் திருக்கடவூர் வீரட்டமும் சுட்டப் பெற்றதை ஓர்க.

கருமை – பிறவி நோய்.

552. துட்டனாய் வினைய தென்னும் சுழித்தலை அகப்பட்டேனைக்
கட்டனா ஐவர்வந்து கலக்காமைக் காத்துக் கொள்வாய்
மட்டவிழ் கோதை தன்னை மகிழ்ந்தொரு பாகம் வைத்து
அட்டமா நாகமாட்டும் ஆவடு துறையுளானே.

தெளிவுரை: கொடுமை உடையவனாகி வினையாகிய சுழியில் அகப்பட்டு வருந்துகின்றேன். எட்டுப் பாம்பு களை ஆட்டி ஆவடுதுறையுள் வீற்றிருக்கும் அரனே! உமாதேவியாரை ஒரு பாகமாகக் கொண்டு மேவும் ஈசனே! ஐம்புலன்கள் என்னைத் தாக்கிக் கலங்கச் செய்யாதவாறு காத்தருள் புரிவீராக.

சிறப்புரை: ஈசன் எட்டு நாகங்களைக் கொண்டு ஆடுகின்ற சிறப்பு, "அட்டமா நாக மாட்டும்" என ஏத்தப் பெற்றது. இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "அட்டபுயங்கப் பிரானதிடம் கலிக்கச்சி அனேகதங் காவதமே" என அருளிச் செய்தவாறும் காண்க.

புயங்கம் – பாம்பு.

553. காரழல் கண்டமேயாய் கடிமதிற் புரங்கள் மூன்றும்
ஓரழல் அம்பினாலே யுகைத்துத்தீ எரிய மூட்டி
நீரழற் சடையுளானே நினைப்பவர் வினைகள் தீர்ப்பாய்
ஆரழல் ஏந்தியாடும் ஆவடு துறையு ளானே.

தெளிவுரை: திருக்கரத்தில் நெருப்பினை ஏந்தி ஆடும் ஆவடுதுறையின் ஈசனே! கரிய கண்டத்தை உடைய

நாதனே! முப்புரங்களை ஓரம்பினால் எரியச் செய்த பெருமானே! கங்கையை ஒளி திகழ் சடையில் வைத்த பரமனே! தேவரீரை நினைத்துப் போற்றுகின்ற அடியவர்களின் துன்பத்தைத் தீர்ப்பவர் தேவரீரே, ஆவார்.

554. செறிவிலேன் சிந்தையுள்ளே சிவனடி தெரியமாட்டேன்
குறியிலேன் குணமொன்றில்லேன் கூறுமா கூறமாட்டேன்
நெறிபடு மதியொன்றில்லேன் நினையுமா நினைய
மாட்டேன்
அறிவிலேன் அயர்த்துப் போனேன் ஆவடு
துறையுளானே.

தெளிவுரை: ஆவடுதுறையில் மேவும் அரனே! சிந்தையால் ஞானமில்லாத நான், சிவனடியை ஓர்கிலேன்; குறிக்கோளும் நற்குணங்களும் இல்லாதவன்; தேவரீரின் திருநாமங்களை எவ்வாறு கூற வேண்டுமோ அந்நெறியில் கூறாதவனானேன். நன்னெறியைப் பற்றுவதற்கு, மதியற்றவனானேன்; நினைத்துப் போற்றும் பாங்கும் இல்லாதவனாய், நினையாதவனாய், அறிவற்றவனாய் அயர்ந்து போனேன்.

இத்தகைய நிலையில், ஈசனைத் தவிரக் காப்பவர் வேறில்லை என்பதும், ஈசனே காத்தருள வேண்டும் என்பதும் குறிப்பு.

555. கோலமா மங்கைதன்னைக் கொண்டொரு கோலமாய
சீலமே அறியமாட்டேன் செய்வினை மூடிநின்று
ஞாலமாம் இதனுள் என்னை நைவியா வண்ணநல்காய்
ஆலமா நஞ்சமுண்ட ஆவடு துறையுளானே.

தெளிவுரை: ஆவடுதுறை அரனே! தேவரீர், அழகிய தன்மையில் உமாதேவியைப் பாகமாகக் கொண்டு அம்மையப்பராய் மேவும் சீலத்தை அறிய மாட்டேன். நஞ்சினை அருந்தி, நீலகண்டராக விளக்கும் ஈசனே! நான் செய்த வினை யாவும் கண்ணுக்குத் தெரியாமல் நின்று இந்த உலகில் என்னை நலியச் செய்யாதவாறு காத்தருள் புரிவீராக.

சிறப்புரை: செய்த வினையானது, சஞ்சிதமாகத் தேங்கி நின்று, மேற்கொண்டு எடுக்கும் பிறவிகளுக்குத் தொடரவும் பிராரத்த வினையால் இப்பிறவித் துயரை நல்க, இப் பிறவியில் செய்யும் ஆகாமியம் என்னும் வினையானது, மேற்கொண்டு வரும் பிறவிகளில் சஞ்சித வினையோடு இயையும். இவ்வினை யாவும் ஈசனை வணங்குதலால் நைந்தழியும் என்பது, அருளாளர்களின் திருவாக்கு. அஃது, இத்திருப் பாட்டின்வழி நன்கு ஓதப் பெற்றது. இத்தன்மையில், "சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால் அவனருளாலே அவன் தாள் வணங்கிச் சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை முந்தை வினை முழுதும் மோய உரைப்பனியான்" என அருளிச் செய்த மாணிக்க வாசகர்தம் அமுத மொழியும் காண்க.

556. நெடியவன் மலரினானும் நேர்ந்திரு பாலுநேடக்
கடியதோர் உருவமாகிக் கனலெரி யாகிநின்ற
வடிவின வண்ணம்என்றே என்றுதாம் பேசலாகார்
அடியனேன் நெஞ்சினுள்ளார் ஆவடுதுறையு ளானே.

தெளிவுரை: பிரமனும், திருமாலும் மேலும் கீழும் என இரு பக்கமும் தேடியும் பேருருவமாய் எரியாகி நின்றவர், ஈசன். அப் பெருமான் இத்தகைய வடிவினர் எனவும், இவ்வண்ணம் உடையவர் எனவும் கூறுதற்கு

அறியாதவராயினர். அவர், ஆவடுதுறையுள் மேவும் அரனேயாவார். அவர், அடியவனின் நெஞ்சில் உள்ளவர்.

சிறப்புரை: ஈசன், நாவுக்கரசர்தம் நெஞ்சில் குடி கொண்டு விளங்கியமையை, "நாடி நாரணன் நான் முகன் என்றிவர் தேடியும் திரிந்தும் காண வல்லரோ! மாட மாளிகை சூழ் தில்லை அம்பலத்து ஆடிபாதம் என் நெஞ்சுள் இருக்கவே" என்னும் திருவாக்காலும் காண்க. *(ஐந்தாம் திருமுறை; பா.வ.எண் 10)*

557. மலைக்கு நேராயரக்கன் சென்றுற மங்கை யஞ்சத்
தலைக்கு மேற் கைகளாலே தாங்கினான் வலியைமாள
உலப்பிலா விரலால்ஊன்றி ஒறுத்தவற்கு அருள்கள் செய்து
அலைத்தவான் கங்கைசூடும் ஆவடு துறையுளானே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: உமாதேவி அஞ்சுமாறு, கயிலையைப் பெயர்த்து எடுத்த இராவணனுடைய வலிமை அழியுமாறு, தெவிட்டாத் தீஞ்சுவையுடைய திருப்பாத மலரால் ஊன்றி, ஒறுத்து அருள் செய்தவர், கங்கை தரித்து விளங்கும் ஆவடுதுறை அரன்.

சிறப்புரை: ஈசனின் திருப்பாத விரலானது, "உலப்பிலா விரல்'' என ஏத்தப் பெற்றது. இந்நெறியில், மாணிக்கவாசகர், "பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே" என அருளிச் செய்தவாறும் காண்க.

58. திருப்பருப்பதம்

தல விளக்கம்: வட நாட்டுத் தலம் ஐந்தனுள் இது முதலாவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. ஸ்ரீசைலம் என வழங்கப்படுவது. ஜோதிர் லிங்கத் தலம்.

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 118 காண்க.

சுவாமி : *மல்லிகார்ச்சுனர்; ஸ்ரீசைல நாதர், சீபர்ப்பதநாதர்*

அம்பிகை : *பிரமராம்பிகை, பருப்பதநாயகி*

தல மரம் : *மருத மரம், திரிபலா*

தீர்த்தம் : *பாலாழி*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

558. **கன்றினார் புரங்கள் மூன்றும்**
கனலெரி யாகச் சீறி
நின்றதோர் உருவம் தன்னால்
நீர்மையும் நிறையும் கொண்டு
ஒன்றியாங்கு உமையும் தாமும்
ஊர்பலி தேர்ந்து பின்னும்
பன்றிப்பின் வேட ராகிப்
பருப்பத நோக்கி னாரே.

தெளிவுரை: சிவபெருமான், முப்புரங்களை நெருப்பில் எரிந்து சாம்பலாகுமாறு சீறியவர்; உமாதேவியாரை ஒருபாகமாக வரித்து, அம்மையப்பராக விளங்குபவர். கபாலம் ஏந்திப் பிச்சை ஏற்றவர். அவர், அருச்சுனருக்கு அருள் செய்யும் தகைமையில்

வேட்டுருவம் தாங்கிப் பன்றியாக வந்த அசுரனை மாய்க்கத் தொடர்ந்தவர். அப் பெருமான், பருப்பத மலையில் வீற்றிருந்து அருள் நோக்கு புரியும் பரமரே.

559. கற்றமா மறைகள் பாடிக்
கடைதொறும் பலியும் தேர்வார்
வற்றலோர் தலைகை யேந்தி
வானவர் வணங்கி வாழ்த்த
முற்றவோர் சடையில் நீரை
யேற்றமுக் கண்ணர்தம்மைப்
பற்றினார்க்கு அருள்கள் செய்து
பருப்பத நோக்கி னாரே.

தெளிவுரை: ஈசன், பெருமை மிக்க வேதங்களைப் பாடியும், மனைகளின் வாயில்கள்தோறும் சென்றும், மண்டை ஓட்டினைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டும் உணவு ஏற்றுத் திரிந்தவர்; தேவர்கள் எல்லாம் வாழ்த்த, கங்கையைச் சடை முடியில் வைத்த முக்கண்ணர்; தம்மைச் சரணடைந்து பற்றும் அடியவர்களுக்கு அருள் புரிபவர். அவர் பருப்பதத்தில் மேவுபவரே.

560. கரவிலா மனத்த ராகிக்
கைதொழு வார்கட் கென்றும்
இரவு நின்று எரியது ஆடி
இன்னருள் செய்யும் எந்தை
மருவலார் புரங்கள் மூன்று
மாட்டிய வகையராகிப்
பரவுவார்க்கு அருள்கள் செய்து
பருப்பத நோக்கி னாரே.

தெளிவுரை: சிவபெருமான், வஞ்சனை இல்லாத நன் மனத்துடன் கைதொழுது ஏத்தும் அடியவர்பால்

விளங்குபவர்; இருள் மேவும் மயானத்தில் கையில் நெருப்பேந்தி, நடனம் புரிந்து, உலகினர்க்கு இனிய அருளைப் புரிபவர்; பகைமை கொண்டு தீமை புரிந்த முப்புர அசுரர்களின் புரங்களை எரித்து அழித்தவர்; பரவி ஏத்தும் அடியவர்களுக்கு வேண்டியன வழங்கிப் பாதுகாப்பவர். அப்பெருமான், பருப்பதத்தில் மேவு பவரே.

சிறப்புரை: ஈசனைக் கரவிலாத மனத்தினராகி வழிபடும் அடியவர்தம் பெற்றியினை, "கரவிலா மனத்தராகிக்கை தொழுவார்கட்கு என்றும் அருள் செய்யும் எந்தை" என ஓதப் பெற்றது. இது, ஈசனை அகமலராக விளங்கும் அட்ட மலராகிய கொல்லாமை, அருள், ஐம்பொறியடக்கல், பொறை, தவம், வாய்மை, அன்பு, அறிவு ஆகியவற்றைக் கொண்டு ஏத்துதலாம். அத்தகையோர்க்கு, மாயை விலகி, ஞான ஒளி பெருகத் திருவருள் செய்யும் ஈசனின் அருள் வண்ணமானது, "இரவு நின்று எரியதாடி இன்னருள் செய்யும் எந்தை" என ஓதப் பெற்றது.

இறைவன் கரவுடையவர்பால் சாராத தன்மையை அப்பர் பெருமான், "கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானைக் கரவார்பால் விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை" (பாட்டு வ.எண் 62) என ஏத்தி அருளிச் செய்தவாறும் காண்க.

561. கட்டிட்ட தலைகை யேந்திக்
கனலெரி யாடிச்சீறிச்
சுட்டிட்ட நீறு பூசிச்
சுடுபிணக் காடர் ஆகி

விட்டிட்ட வேட்கை யார்க்கு
வேறிருந்து அருள்கள் செய்து
பட்டிட்ட உடைய ராகிப்
பருப்பத நோக்கி னாரே.

தெளிவுரை: சிவபெருமான், மண்டை ஓட்டினை ஏந்தியவர்; நெருப்பைக் கையில் ஏந்தி ஆடுபவர்; சுட்ட சாம்பலைத் திருமேனியில் பூசிச் சுடுகாட்டில் இருப்பவர்; பற்று விட்டவர்களுக்கு வேறாக விளங்கும் தனிச் சிறப்புடையதாக அருள்களைப் புரிபவர்; பட்டு உடையர். அவர் திருப்பருப்பதத்தில் மேவுபவரே.

சிறப்புரை: ஈசன், எல்லா உயிர்களிலும் விளங்கி அருள் புரியும் பெற்றி உடையவர். ஆயினும், அப் பெருமான், உலகப் பற்று நீங்கியவராய்த் தான் என்னும் அகப் பற்றும் தனது என்னும் புறப் பற்றும் ஆகிய வேட்கையை விட்டவர்களாகிய சிவஞானியர் களுக்குப் பேரருள் புரிபவர். அத்தகைய அருள் வண்ணமானது, "வேறு இருந்து அருள்கள் செய்து" எனச் தனிச் சிறப்புடன் ஏத்தப் பெற்றது.

கட்டிட்ட தலை – மண்டை ஓடு.

562. கையராய்க் கபாலம் ஏந்திக்
காமனைக் கண்ணாற் காய்ந்து
மெய்யராய் மேனி தன்மேல்
விளங்குவெண் ணீறுபூசி
உய்வராய் உள்கு வார்கட்கு
உவகைகள் பலவும் செய்து
பையரா அரையில் ஆர்த்துப்
பருப்பத நோக்கி னாரே.

தெளிவுரை: சிவபெருமான், கபாலத்தைக் கையில் ஏந்தியவர்; மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்துச்

சாம்பலாக்கியவர்; திருமேனியில் திருவெண்ணீறு பூசியவர்; ஒரு மனத்தினராய் மேவி, உய்ய வேண்டும் என்னும் கருத்தில் பிறவித் தளையை அறுக்க வேண்டும் என நினைப்பவர்களுக்குப் பேரின்பத்தை அருள்பவர்; நாகத்தை அரையில் இறுகக் கட்டியவர். அவர் பருப்பத மலையில் மேவும் பரமரே.

563. வேடராய் வெய்ய ராகி
வேழத்தின் உரிவை போர்த்து
ஓடராய் உலகம் எல்லாம்
உழிதர்வர் உமையும் தாமும்
காடராய்க் கனல்கை யேந்திக்
கடிய தோர் விடைமேல் கொண்டு
பாடராய்ப் பூதம் சூழப்
பருப்பத நோக்கி னாரே.

தெளிவுரை: ஈசன், அருச்சுனனுக்கு அருள் செய்யும் பொருட்டு வேட்டுவத் திருக்கோலம் தாங்கியவர்; கடுமை உடையவராகி யானையின் தோலை உரித்துப் போர்த்தவர்; கையில் ஓடு ஏந்தி உலகம் எல்லாம் திரிந்து மேவுபவர்; உமாதேவியுடன் காட்டில் உள்ள வராய் விளங்குபவர்; கையில் அனல் ஏந்தி, இடப வாகனத்தில் ஏறி விளங்குபவர். அப் பெருமான், பண் இசைத்துப் பாடுபவராய்ப் பூத கணங்கள் சூழப் பருப்பதத்தில் மேவுபவரே.

சிறப்புரை: ஈசன், பல வடிவங்களில் தோன்றி விளங்கும் பெருமை, "வேடராய்" என ஏத்தப் பெறுவதாயிற்று. இதனைத் திருஞானசம்பந்தர், "பலபல வேடமாகும் பரனாரி பாகன் பசுவேறும் எங்கள் பரமன்" என அருளிச் செய்தவாறும் காண்க. ஈசன் அருச்சுனருக்குக் கருணை புரியக் காடு சென்றணைந்த தன்மையானது,

"காடராய்" எனச் சுட்டப் பெற்றது. இது, காடு என்னும் சொல்லில் திகழும் திருவெண்காடு, திருமறைக்காடு, திருவாலங்காடு, காரைக்காடு முதலான திருத்தலங்களை உணர்த்துதலும் ஆகும்.

564. மேகம்போல் மிடற்ற ராகி
வேழத்தின் உரிவை போர்த்து
ஏகம்ப மேவினார்தாம்
இமையவர் பரவி ஏத்தக்
காகம்பர் கழறர் ஆகி
கடியதோர் விடையொன் றேறிப்
பாகம் பெண் ணுருவம் ஆனார்
பருப்பத நோக்கி னாரே.

தெளிவுரை: ஈசன், மேகம் போன்ற கரிய மிடற்றினை உடையவர்; யானையின் தோலைப் போர்த்தியவர்; திருவேகம்பத்தில் மேவி விளங்குபவர்; இமையவர் பரவி ஏத்தக் காத்து அருள் புரியும் தாணுவாகுபவர்; வீரக் கழல் அணிந்த திருப்பாதம் உடையவர்; இடப வாகனத்தில் ஏறி அமர்ந்து உமையொரு பாகனாக விளங்குபவர். அப்பெருமான், பருப்பதத்தில் மேவு பவரே.

சிறப்புரை: தேவர்கள், வெம்மையுடைய நஞ்சினைக் கண்டு அஞ்சி ஓடி, ஈசனை ஏத்த, அப் பெருமான் அதனை உட்கொண்டு கண்டத்தில் இருத்திக் கொண்டவர். பயனை நோக்காது மழை தரும் மேகம் போன்று விளங்கிய சிறப்பினை நனியுணர்த்தும் பெற்றிமையில், கரிய நஞ்சு, மேகத்திற்கு உவமையாகச் சுட்டப் பெற்றது. இது, ஈசன் நீலகண்டராய் மேவி அருள் செய்த கருணையை ஓதுதலாயிற்று.

565. பேரிடர்ப் பிணிகள் தீர்க்கும்
பிஞ்ஞகன் எந்தை பெம்மான்
காருடைக் கண்ட ராகிக்
கபாலமோர் கையில் ஏந்திச்
சீருடைச் செங்கண் வெள்ளேறு
ஏறிய செல்வர் நல்ல
பாரிடம் பாணி செய்யப்
பருப்பத நோக்கி னாரே.

தெளிவுரை: *சிவபெருமான், அடியவர்களுடைய இடர்களையும் பிணிகளையும் தீர்த்தருளும் பிஞ்ஞகன்; எந்தை பெருமான்; கரிய கண்டம் உடையவர்; கபாலத்தைக் கையில் ஏந்தியவர்; புகழ் மிக்க இடபவாகனத்தின் மீது ஏறும் செல்வர். அப்பெருமான், பூதகணங்கள் பக்கத்தில் சூழ்ந்து ஆரவாரித்து மகிழ்ந்திருக்கப் பருப்பதத்தில் மேவுபவரே.*

566. அங்கண் மால் உடையராய
ஐவரால் ஆட்டு ணாதே
உங்கண் மால் தீர வேண்டில்
உள்ளத்தால் உள்கி யேத்தும்
செங்கண்மால் பரவி யேத்திச்
சிவன்என நின்ற செல்வர்
பைங்கண்வெள் ளேற தேறிப்
பருப்பத நோக்கி னாரே.

தெளிவுரை: *சிவபெருமான், திருமாலால் பரவி ஏத்தப் பெற்றவராய்ச் சிவன் எனத் திகழ்பவர். அவர், இடப வாகனத்தை உடையவராகிப் பருப்பதத்தில் மேவுபவர். மயக்கம் உடையவராகியும் ஐம்புலன்களால் ஆட்டுவிப்பவராகவும் வருந்தும் உங்கள் அறியாமை*

தீரவேண்டுமானால், அப்பெருமானை உள்ளத்தால் ஒன்றி இருந்து ஏத்துவீராக.

567. அடல்விடை யூர்தி யாகி
அரக்கன் தோள் அடர ஊன்றிக்
கடலிடை நஞ்சம் உண்ட
கறையணி கண்டனார்தாம்
சுடர்விடு மேனி தன்மேல்
சுண்ணவெண் ணீறு பூசிப்
படர்சடை மதியம் சேர்த்திப்
பருப்பத நோக்கி னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவபெருமான், இடப வாகனத்தில் அமர்ந்தவர்; இராவணனுடைய தோளை நெரித்தவர்; கடல் நஞ்சினை உண்ட நீல கண்டர்; ஒளிமயமாய் மேவும் திருமேனியில் திருநீறு பூசியவர். அப்பெருமான், படர்ந்து மேவும் சடை முடியின் மீது சந்திரனைச் சூடிப் பருப்பதத்தில் விளங்குபவரே.

59. திருஅவளிவள் நல்லூர்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத்தலம் 127இல் இது, 100ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. திருமால், காசிப முனிவர், முருகப் பெருமான், சூரியன், அகத்தியர், கண்வ முனிவர் ஆகியோர் வழிபட்டது.

இத்தலத்தில், ஈசனைப் பூசித்து வந்த ஆதிசைவச் சிவாச்சாரியாருக்காக, அவள் இவளே எனக் காட்டி அவர் மகளுக்காக இறைவன் சாட்சி சொன்னார் என்பது வரலாறு.

மற்றும் மூன்றாம் திருமுறை, பதிகம் எண் 82 காண்க.

சுவாமி : *சாட்சிநாதர்*

அம்பிகை : *சௌந்தர நாயகி, சௌந்தர வல்லி*

தல மரம் : *பாதிரி*

தீர்த்தம் : *சந்திர தீர்த்தம்*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

568. தோற்றினான் எயிறுகவ்வித்
தொழிலுடை யரக்கன் றன்னைத்
தேற்றுவான் சென்று சொல்லச்
சிக்கெனத் தவிரும் என்று
வீற்றினை யுடைய னாகி
வெடுவெடுத்து எழுந்த வன்றன்
ஆற்றலை அழிக்க வல்லார்
அவள்இவள் நல்லூராரே.

தெளிவுரை: *அரக்கனாகி வளைந்த பற்களை உடைய வனாய், நல்லுரையைக் கேட்டு நடக்காதவனாகித் தீயனவே புரியும் இராவணன், தற்பெருமையால், மிக வேகமாகச் சென்று கயிலை மலையை எடுக்க அவனுடைய கொடிய வலிமையை அழித்தவர், அவளிவள் நல்லூரில் மேவும் பரமரே.*

வீறு – தற்பெருமை.

569. வெம்பினார் அரக்கர் எல்லாம்
மிகச் சழக்கு ஆயிற் றென்று
செம்பினால் எடுத்த கோயில்
சிக்கெனச் சிதையும் என்ன
நம்பினார் என்று சொல்லி
நன்மையால் மிக்கு நோக்கி

அம்பினால் அழிய எய்தார்
அவளிவள் நல்லூ ராரே.

தெளிவுரை: செம்பினால் செய்யப்பட்ட கோயிலா யினும் சிதைக்கும் சழக்குடைய அரக்கர்களின் தலைவனாகிய இராவணன் அழியுமாறு, தன்னை நம்பியவர்களுக்கு ஆறுதலும் நன்மையும் புரியும் நோக்குடைய இராமபிரானுடைய அம்பின் வழியே இருந்து அருள் செய்தவர், அவளிவள் நல்லூரில் மேவும் பெருமானே.

570. கீழ்ப்படக் கருத லாமோ
கீர்த்திமை யுள்ளதாகில்
தோட்பெரு வலியி னாலே
தொலைப்ப னான் மலையைஎன்று
வேட்பட வைத்த வாறே
விதிர்விதிர்த்து அரக்கன் வீழ்ந்து
ஆட்படக் கருதிப் புக்கார்
அவளிவள் நல்லூராரே.

தெளிவுரை: தன்னுடைய கீர்த்தியையும் தோளின் வலிமையையும் நிலை நாட்டிக் கயிலையைப் பெயர்த் தெடுப்பேன் என்று முனைந்த இராவணனுடைய தோளும் முடியும் நெரித்து அழித்தவர், சிவபெருமான். அச்செயலானது, மன்மதனை எரித்துச் சாம்பலாக்கிப் பின்னர் இரதியின் வேண்டுகோளை ஏற்று அருளிச் செய்த பாங்கினைப் போன்று, இராவணன் மலையின் கீழிருந்து பாடிப் போற்றி, ஏத்த, வாளும் வாழ் நாளும் அருளப் பெற்றது. அவ்வாறு, ஆட்கொள்ளும் பாங்கினர் அவளிவள் நல்லூரில் வீற்றிருக்கும் பரமரே.

வேள் – மன்மதன்.

571. நிலைவலம் வல்லன் அல்லன்
நேர்மையை நினைய மாட்டான்
சிலைவலம் கொண்ட செல்வன்
சீரிய கயிலை தன்னைத்
தலைவலம் கருதிப் புக்குத்
தாக்கினான் றன்னை யன்று
அலைகுலை யாக்கு வித்தார்
அவளிவள் நல்லூ ராரே.

தெளிவுரை: இராவணன், நிலைத்து மேவும் வெற்றியை உடையவன் அல்லன்; நேர்மையை எண்ணிப் போற்றாதவன். அவ்வரக்கன், மேருமலையை வில்லாகத் தாங்கிய செல்வனாகிய ஈசனின் புனித மலையாகிய கயிலையைத் தன்னுடைய முடியின் வலிமையால் பெயர்த்தான். அஞ்ஞான்று அவனை, நிலைகுலையச் செய்து, திருப்பாத விரலால் ஊன்றி அடக்கியவர், அவளிவள் நல்லூரில் வீற்றிருக்கும் பரமரே.

செல்வன் – சிவபெருமான்; தலைவலம் – முடியின் வலிமை.

572. தவ்வலி யொன்ற னாகித்
தனதொரு பெருமை யாலே
மெய்வ்வலி யுடையன் என்று
மிகப்பெருந் தேரை யூர்ந்து
செவ்வலி கூர்விழியாற்
சிரம் பத்தால் எடுக்குற் றானை
அவ்வலி தீர்க்க வல்லார்
அவளிவள் நல்லூ ராரே.

தெளிவுரை: தனது வலிமையைப் பெருமையாகக் கருதியும், தனது வலிமையே மெய்யானது என்றும், அதற்கு இணையாக வேறு எதுவும் இல்லை என்றும்,

எண்ணிய இராவணன், பெரிய தேரில் ஊர்ந்து சென்ற போது, தனது பத்துத் தலைகளும் கொண்டு கயிலையை எடுக்கலுற்றான். அவ்வரக்கனுடைய வலிமையினை நெரித்து அழித்தவர் அவளிவள் நல்லூரில் மேவும் பரமரே.

573. நன்மைதான் அறிய மாட்டான்
நடுவிலா அரக்கர் கோமான்
வன்மையே கருதிச் சென்று
வலிதனைச் செலுத்த லுற்றுக்
கன்மையால் மலையை யோடிக்
கருதித்தான் எடுத்து வாயால்
அம்மையோ என்னவைத்தார்
அவளிவள் நல்லூ ராரே.

தெளிவுரை: நடுவு நிலைமையற்ற அரக்கர் கோமானாகிய இராவணன், நன்மை தரும் நெறியை அறியாதவன்; வன்மையே கருதித் தனது புயவலிமையால் கல்லென்று கருதிக் கயிலை மலையை எடுத்தவன். பின்னர் அவன், "அம்மா" என்று அலறுமாறு செய்த ஈசன், அவளிவள் நல்லூரில் வீற்றிருக்கும் பெருமானே.

574. கதம்படப் போது வார்கள்
போதுமக் கருத்தி னாலே
சிதம்பட நின்ற நீர்கள்
சிக்கெனத் தவிரும் என்று
மதம்படு மனத்த னாகி
வன்மையால் மிக்கு நோக்க
அதம்பழத் துருவு செய்தார்
அவளிவள் நல்லூராரே.

தெளிவுரை: சினம் மிகுந்த போது, அதன் கருத்தினால் நல்லறிவு கெடுமாறு எண்ணி, அதனில் சிக்கி மதம்

பொருந்திய மனத்தினனாகிய இராவணனை நன்கு நோக்கி அத்திப் பழம் போன்று நசிந்தும் நலிந்தும் செய்த ஈசன், அவளிவள் நல்லூரில் மேவும் பரமரே.

கதம் – சினம், சிதம் – அறிவு; அதம்பழம் – அத்திப் பழம் – நலிதலை உணர்த்தியது.

575. நாடுமிக் குழிதர் கின்ற
நடுவிலா அரக்கர் கோனை
ஓடுமிக் கென்று சொல்லி
ஊன்றினான் உகிரி னாலே
பாடிமிக் குய்வன் என்று
பணியநற் றிறங்கள் காட்டி
ஆடுமிக் கரவம் பூண்டார்
அவளிவள் நல்லூராரே.

தெளிவுரை: எல்லா நாடுகளிலும் திரிந்து ஆதிக்கம் செலுத்தி, நடுநிலையின்றி வாழும் அரக்கர் கோனாகிய இராவணன், கயிலையை எடுத்தபோது, ஈசன் திருப்பாத விரலால் ஊன்றியவர். அவ்வரக்கன், நலிவுற்றுப் பாடிப் பணிந்து உய்வேன் என்று ஏத்தி நிற்க, அவனுக்கு நல்லருளைப் புரியும் பாங்கில், அருள்கலை நல்கியவர், அவர். அப்பெருமான், ஆடுகின்ற அரவத்தை அணிகலனாகப் பூண்டு அவளிவள் நல்லூரில் மேவும் பரமரே.

576. ஏனமா இடந்த மாலும்
எழில்தரு முளரியானும்
ஞானந்தான் உடைய ராகி
நன்மையை யறிய மாட்டார்
சேனந்தான் இலாவ ரக்கன்
செழுவரை எடுக்க வூன்றி

ஆனந்த அருள்கள் செய்தார்
அவளிவள் நல்லூ ராரே.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் தன்னுணர்வு உடையவர்களாகி சிவபெருமானை, அறியாதவர்கள் ஆயினர். அந்நிலையில் கயிலையை எடுத்த இராவணனைக் கயிலை மலையைத் திருவிரலால் ஊன்றி நல்லருள் புரிந்தவர் அப்பெருமான். அவர், அவளிவள் நல்லூரில் மேவும் பரமரே.

577. ஊக்கினான் மலையை யோடி
உணர்விலா அரக்கன் றன்னைத்
தாக்கினான் விரலி னாலே
தலைபத்தும் தகர வூன்றி
நோக்கினான் அஞ்சத் தன்னை
நோன்பிற வூன்று சொல்லி
ஆக்கினார் அமுத மாக
அவளிவள் நல்லூ ராரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கயிலை மலையை எடுத்த இராவணன் நெரியுமாறு திருப்பாத விரலால் ஊன்றித் தலை பத்தும் துன்புறுமாறு செய்து, அவன் அஞ்சி ஏத்த அருள் புரிந்தவர் ஈசன். அவர் அவளிவள் நல்லூரில் மேவும் பரமரே.

குறிப்பு: இத்திருப்பதிகமானது இராவணனுக்கு அருள் செய்த ஈசனின் கருணைத் திறத்தை ஓதுதலாயிற்று. இத்தன்மையில் திருப்பதிகம் எண் 34 திருமறைக் காட்டுத் திருப்பதிகமும் இத்தன்மையை உடையது என்பதாம்.

60. திருப்பெருவேளூர்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 91ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. மனக்கால் ஐயன் பேட்டை என, வழங்கப்படுவது. முருகப் பெருமான் வழிபட்டது. திருமால், பிருங்கி முனிவர், கௌதமர் வழிபட்டது. இது மாடக் கோயில்.

மற்றும் மூன்றாம் திருமுறை, பதிகம் எண் 64 காண்க.

சுவாமி : அபிமுகேஸ்வரர், பிரியா ஈஸ்வரர்

அம்பிகை : ஏலவார் குழலி, அபின்னாம்பிகை

தல மரம் : வன்னி

தீர்த்தம் : சரவணப் பொய்கை

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

578. மறையணி நாவி னானை
மறப்பிலார் மனத்து ளானைக்
கறையணி கண்டன் றன்னைக்
கனலெரி யாடி னானைப்
பிறையணி சடையி னானைப்
பெருவே ளூர்பேணி னானை
நறையணி மலர்கள் தூவி
நாள்தொறும் வணங்கு வேனே.

தெளிவுரை: ஈசன், வேதம் ஓதும் நாவினர்; மறவாது ஏத்தும் அன்புடையவர்களின் இனிய மனத்தில் விளங்குபவர்; எரியும் நெருப்பைக் கையில் ஏந்தி

ஆடுபவர்; பிறைச் சந்திரனை அணிந்த சடையினர். அப்பெருமான் பெருவேளூர் என்னும் தலத்தில் விரும்பி வீற்றிருப்பவர். அவரைத் தேன் விளங்குப் நறுமண மலர்கள் கொண்டு தூவிப் போற்றி நாள தோறும் நான் வணங்குவேன்.

579. நாதனாய் உலகம் எல்லாம்
நம்பிரான் எனவும் நின்ற
பாதனாம் பரம யோகி
பலபல திறத்தி னாலும்
பேதனாய்த் தோன்றி னானைப்
பெருவேளூர் பேணி னானை
ஓதநா வுடையனாகி
உரைக்குமாறு உரைக்குற் றேனே.

தெளிவுரை: ஈசன், உலகங்களுக்கெல்லாம் நாதன் எனப்படுபவர்; நமது பிரான் என்று எல்லாரும் ஏத்து மாறு விளங்கும் திருப்பாதத்தினர்; பரமயோகி யானவர்; பலப்பல வடிவு தாங்கிப் பேரருள் புரியும் அருள் திறத்தினர். அப்பெருமான், பெருவேளூரில் மேவி விளங்குபவர்; அவரை, ஓதும் நாவுடையனாகி, உரைத்து ஏத்தலுற்றேன்.

580. குறவிதோள் மணந்த செல்வக்
குமரவேள் தாதை என்றும்
நறவிள நறுமென் கூந்தல்
நங்கையோர் பாகத் தானைப்
பிறவியை மாற்று வானைப்
பெருவேளூர் பேணி னானை
உறவினால் வல்ல னாகி
உணருமாறு உணர்த்து வேனே.

தெளிவுரை: குறத்தியாய்த் தோன்றிய வள்ளிப் பிராட்டியைத் திருமணம் புரிந்த செல்வக்

குமரவேளின் தந்தை, சிவபெருமான். அவர், தேன் மணக்கும் மென்மையான கூந்தலையுடைய உமா தேவியை ஒருபாகமாகக் கொண்டு விளங்குபவர்; தன்னை ஏத்தும் அடியவர்களின் பிறவி நோயைத் தீர்த்தருள்பவர். அப்பெருமான், பெருவேளூர் என்னும் தலத்தில் விரும்பி வீற்றிருப்பவர். அவரை நன்கு பற்றி இருந்து ஒன்றவல்லவனாகி நான் உணரும் வகையில் உணர்த்துவேன்.

சிறப்புரை: இத்திருப்பாட்டானது சோமாஸ் கந்த மூர்த்தமாக விளங்குதலைக் காண்க. குமாரக் கடவுள் குற மகளை மணங் கொண்ட அருளிச் செயலும் ஓதுதல் ஆயிற்று. இது குமாரக் கடவுள் ஈசனைப் பூசித்த தலச்சிறப்பாதலும் ஆயிற்று.

அம்பிகையின் திருநாமச் சிறப்பானது "நறவிள நறுமென் கூந்தல் நங்கை" என உணர்த்தப் பெற்றது. இது, திருத்தலத்தில் மேவும் தேவியின் திருப் பெயரைச் சுட்டுதலும் ஆம்.

ஆன்மாவோடு ஒன்றி நிற்கும் பாங்கானது, பிரியா ஈஸ்வரர் என்னும், திருத்தலத்தில் மேவும் பெருமானின் திருப்பெயரை உணர்த்துமாறு, "உறவினால் வல்லனாகி" எனக் குறிப்பால் ஓதப் பெறுதலும் ஆயிற்று.

குறவி – வள்ளிப் பிராட்டி.

581. மைஞ்ஞவில் கண்டன் றன்னை
வலங்கையின் மழுவொன் றேந்திக்
கைஞ்ஞவின் மானி னோடும்
கனலெரி யாடி னானைப்
பிஞ்ஞகன் றன்னை யந்தண்
பெருவேளூர் பேணி னானைப்

பொய்ஞ்ஞெக நினைய மாட்டாப்
பொறியிலா அறிவிலேனே.

தெளிவுரை: சிவபெருமான், மைபோன்ற கரிய கண்டத்தை உடையவர்; வலது கையில் மழுப்படை ஏந்தியவர்; கையில் மானும், எரியும் நெருப்பும் விளங்க மேவுபவர்; அழகிய முடிவண்ணம் மேவும் பிஞ்ஞகர்; அழகிய குளிர்ச்சி மிக்க பெருவேளூரில் விரும்பி வீற்றிருப்பவர். அவரைப் பொய்மை நீங்கிய தன்மையில் நினையாதவனாகி சிவஞானமும் அறிவும் அற்றவன் ஆகினனே.

ஞுவில் – உடைய; பொய்ஞ்ஞெக – பொய் நீங்க.

582. ஓடைசேர் நெற்றி யானை
உரிவையை மூடி னானை
வீடதே காட்டுவானை
வேத நான்கு ஆயினானைப்
பேடைசேர் புறவ நீங்காப்
பெருவேளூர் பேணினானைக்
கூடநான் வல்ல மாற்றம்
குருகுமாறு அறிகிலேனே.

தெளிவுரை: சிவபெருமான், அகன்ற மடல் போன்ற நெற்றியில் பட்டம் உடையவர்; யானையின் தோலைப் போர்த்தியவர்; சிவஞானிகளுக்கு முத்திப் பேற்றினை அளிப்பவர்; நான்கு வேதமும் ஆனவர்; புறாக்கள் தம் பேடையோடு மகிழ்ந்து மேவும் பெருவேளூரில் விரும்பி வீற்றிருப்பவர். அப் பெருமானைக் கூடியிருந்து மகிழுமாறு அடையும் வழி அறிகிலேன். அதற்கு இணையாக உள்ள வேறு மாற்றமும் அறிகிலேனே.

சிறப்புரை: இத்திருப்பாட்டானது முத்திப் பேறளிக்கும் ஈசனின் அருள்வண்ணத்தை நனி ஓதுதலாயிற்று.

அத்தகைய பெருமானைக் கூடியிருக்கக் குறுகும் நெறியினை மன்னுயிர்கள் பின்பற்ற வேண்டும் என்பதும், இதற்கு இணையாக வேறு எதுவும் இல்லை என்பதும் "வல்ல மாற்றம் குறுகுமாறு அறிகிலேனே" என, ஓதப் பெற்றது. இது அடியாரோடு கூடியும் குலவியும் இருத்தலானது அப்பெருமானின் திருவருளில் கூடியும் குலவியும் இருத்தலை உணர்த்து தலாகும். இத்தன்மையில் மாணிக்கவாசகர், "கோதில் அமுதானைக் குலாவுதில்லை கண்டேனே'' (கண்டபத்து 5) எனவும், "சடை முடியான் மன்னு திருப்பெருந்துறை இறை சீர்கற்று ஆங்கு அவன் கழல் பேணினரொடும் கூடுமின் கலந்தே" (உயிருண்ணிப் பத்து5) எனவும் அருளிச் செய்த பாங்கினை ஓர்க.

குறுகுமாறு – நெஞ்சம் கலந்து அடையும் நெறி.

583. கச்சைசேர் நாகத் தானைக்
கடல்விடம் கண்டத் தானைக்
கச்சியே கம்பன் றன்னைக்
கனலெரி யாடுவானைப்
பிச்சைசேர்ந்து உழல்வி னானைப்
பெருவேளூர் பேணி னானை
இச்சை சேர்ந்து அமர நானும்
இறைஞ்சு மாறு இறைஞ்சு வேனே.

தெளிவுரை: சிவபெருமான், நாகத்தைக் கச்சையாகக் கட்டியுள்ளவர்; நஞ்சினைக் கண்டத்தில் தேக்கி யுள்ளவர்; திருக்கச்சியில் விளங்கும் திருவேகம்பத்தில் வீற்றிருப்பவர்; எரியும் நெருப்பைக் கையில் ஏந்தி நடனம் புரிபவர்; பலியேற்றுத் திரிபவர்; பெருவேளூரில் விரும்பி உறைபவர். அப்பெருமான், என் விருப்பத்திற்கு உரியவராகி, என் நெஞ்சில் குடி

கொண்டு அமர, நானும் அக மலராகிய அட்ட புஷ்பங்களால் ஏத்தி இறைஞ்சுவன்.

சிறப்புரை: ஈசன், திருநாவுக்கரசர் தம் நெஞ்சில் அமர்ந்து விளங்கும் பாங்கானது, "இச்சை சேர்ந்து அமர" என ஏத்தப் பெற்றது. இது "மனமணி இலிங்கமாக நேயமே நெய்யும் பாலாய் நிறையநீர் அமைய ஆட்டிப் பூசனை ஈசனார்க்குப் போற்று அவிக்காட்டினோமே" என உரைக்கும் (பாட்டு வ.எண் 739) பாங்கும் ஆயிற்று.

584. சித்தராய் வந்து தன்னைத்
திருவடி வணங்கு வார்கள்
முத்தனை மூர்த்தி யாய
முதல்வனை முழுதுமாய
பித்தனைப் பறரும் ஏத்தப்
பெருவேளூர் பேணினானை
மெத்தநே யவனை நாளும்
விரும்புமாறு அறிகிலேனே.

தெளிவுரை: சிவபெருமான், தன்னைச் சித்தத்தில் கொண்டு வணங்கும் அடியவர்களுக்கு, முதல்வ ராகவும் இருந்து, அருள் புரியும் தலைவர்; அண்டங்கள் முழுவதும் நிரம்பி, வியாபித்திருப்பவர்; தான் செய்யும் செயல்களின் விளக்கத்தைப் பிறரால் அறிந்து கொள்ளாதவாறு, காட்சி நல்கும் பித்தர். அப்பெருமான், திருத்தொண்டர்கள் மட்டும் அல்லாது, ஏனையோரும் ஏத்துமாறு பெருவேளூரில் விரும்பி உறைபவர். பேரன்பு கொண்டு திகழும் அப்பெருமானை, நாள்தோறும் அன்பு கொண்டு ஏத்தும் நித்திய வழிபாட்டு நெறியினை மேற் கொள்ளாதவனானேன்.

சிறப்புரை: ஈசன், சித்தம் முதலான அந்தக் கரணத்தில் தன்னைப் பதித்து ஏத்தும் அன்புடையவர்களுக்கு அருள் புரிபவர் என, ஓதி உணர்த்தப் பெற்றது. இது, ஈசனைச் சித்தத்தால் முத்திப் பேற்றினை அடைபவ ராவர் என்பதும், இவண் சுட்டப் பெறுவதாயிற்று. இத்தன்மையில், மாணிக்கவாசகர், "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே" எனவும், சுந்தரமூர்த்தி சுவாமிகள், "சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார்க்கும் அடியேன்" எனவும், அருளிச் செய்தமை காண்க.

585. முண்டமே தாங்கி னானை
முற்றிய ஞானத் தானை
வண்டுலாம் கொன்றை மாலை
வளர்மதிக் கண்ணி யானைப்
பிண்டமே ஆயினானைப்
பெருவேளூர் பேணி னானை
அண்டமாம் ஆதி யானை
அறியுமாறு அறிகி லேனே.

தெளிவுரை: சிவபெருமான், மண்டையோட்டு மாலை அணிபவர்; ஞான பரிபூரணர்; கொன்றை மாலையையும் பிறைச் சந்திரனையும் தரித்தவர்; உயிர்க்கு ஆகும் ஊனாகத் திகழ்பவர்; பெருவேளூரில் விரும்பி வீற்றிருப்பவர். அப்பெருமான், அண்ட மாகவும் ஆதியாகவும் விளங்க, நான் அதனை அறிந்து நோக்கும் அறிவு அற்றவனானேன்.

பிண்டம் – ஊன், ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய் என்பது திருவாசகம்.

586. விரிவிலா அறிவி னார்கள்
வேறொரு சமயம் செய்து

எரிவினாற் சொன்னா ரேனும்
எம்பிராற்கு ஏற்ற தாகும்
பரிவினாற் பெரியோர் ஏத்தும்
பெருவேளூர் பற்றி னானை
மருவிநான் வாழ்த்தி உய்யும்
வகையது நினைக்கின் றேனே.

தெளிவுரை: பெருகி ஓங்கும் ஞானம் இன்றிச் சைவ நெறியை விட்டு, வேறு, புறமாகிய சமயக் கொள்கை யொன்றைத் தோற்றுவித்து, மனத்தில் காழ்ப்புற்றுப் புறம் கூறினவரே ஆயினும், எம்பிரானாகிய சிவபெருமான், அதனை ஏற்றவராகிக் கருணை வயத்தராய் விளங்குபவர். வேத நூல்களைக் கற்றுத் தேர்ந்த அந்தணர்கள், அன்பினால் ஏத்தும் பெருவேளூரில் விரும்பி வீற்றிருக்கும் அப்பெரு மானை, நான் அன்புடன் சார்ந்து வாழ்த்தி, உய்யும் நிலையினை நினைக்கின்றேன்.

பரிவு – அன்பு; பெரியோர் – வேதவிற்பன்னர்.

587. பொருகடல் இலங்கை மன்னன்
உடல்கெடப் பொருத்தி நல்ல
கருகிய கண்டத் தானைக்
கதிரிளங் கொழுந்து சூடும்
பெருகிய சடையி னானைப்
பெருவேளூர் பேணினானை
உருகிய அடியார் ஏத்தும்
உள்ளத்தால் உள்கு வேனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவபெருமான், இலங்கையின் வேந்தனாகிய இராவணனைக் கயிலை மலையின் கீழ் அடர்த்தியவர்; கருமையான கண்டத்தையுடையவர்;

ஒளிவிடும் கதிரின் கொழுந்து போன்ற சடை முடியுடையவர். அப்பெருமான், பெருவேளூரில் விரும்பி வீற்றிருப்பவர். அவர் நெஞ்சுருகிப் போற்றும் அடியவர்களால் ஏத்தப் பெறுபவர். நான் அவரை உள்ளார உள்குவேன்.

சிறப்புரை: ஈசனை நெஞ்சுருகி ஏத்தும் அடியவர்களின் மாண்பானது, "உருகிய அடியார் ஏத்தும்" என, ஓதப் பெற்றது. "காதலாகித் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்" எனத் திருஞானசம்பந்தர் இறைவனை ஏத்தும் அடியவர் சிறப்பினை உரைத்தலும் காண்க. இத்தன்மையில், "தொழுகையர் அழுகையர், துவள்கையர் ஒருபால்" (திருப்பள்ளி எழுச்சி 4) என ஓதப் பெறும் திருவாசக அமுத வாக்கும் காண்க.

61. திருஇராமேச்சுரம்

தல விளக்கம்: பாண்டிய நாட்டுத்தலம் 14இல், இது 8ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. இது பன்னிரண்டு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்று. இராமபிரான் பூசித்து வழிபட்டது.

மற்றும் மூன்றாம் திருமுறை, பதிகம் எண் 10 காண்க.

சுவாமி : இராமநாதசுவாமி, இராமலிங்கேஸ்வரர்

அம்பிகை : மலைவளர் காதலி, பர்வத வர்த்தினி

தீர்த்தம் : அக்கினி தீர்த்தம் (கடல்) மற்றும் 22 தீர்த்தங்கள்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

588. பாசமும் கழிக்க கில்லா
அரக்கரைப் படுத்துத் தக்க
வாசமிக் கலர்கள் கொண்டு
மதியினால் மால்செய் கோயில்
நேசமிக் கன்பி னாலே
நினைமி னீர் நின்று நாளும்
தேசமிக் கான் இருந்த
திரு இரா மேச்சு ரம்மே.

தெளிவுரை: *பற்று நீங்குவதற்கு இயலாத இயல்புடைய அரக்கர்கள் மாளுமாறு போர் செய்து வென்ற இராமபிரான், சிவஞான உணர்வால் நறுமண மலர்கள் கொண்டு பூசித்த கோயில், ஒளிமிக்க தாகவிளங்கும் திருஇராமேச்சுரம். ஆங்கு எழுந்தருளி யுள்ள ஈசனை, நேயம் மிகுந்த அன்பினால் நாள் தோறும் நினைத்து ஏத்து மின்.*

மால் – இராமபிரான்.

589. முற்றின நாள்கள் என்று
முடிப்பதே கார ணமாய்
உற்றவன் போர்க ளாலே
உணர்விலா அரக்கர் தம்மைச்
செற்றமால் செய்த கோயில்
திருஇரா மேச்சு ரத்தைப்
பற்றிநீ பரவு நெஞ்சே
படர்சடை ஈசன் பாலே.

தெளிவுரை: *நெஞ்சே! இராவணனுக்குரிய வாழ் நாள்கள், முடிந்து போன நிலையில் போர் தொடுத்து வெற்றி கொண்ட இராமபிரான் அமைத்து வழிபட்ட*

கோயிலான இராமேச்சுரத்தைப் பற்றி இருந்து, நீ பரவுக. அக்கோயிலில் வீற்றிருக்கும் ஈசனை ஏத்தி உய்க.

590. கடலிடை மலைகள் தம்மால்
அடைத்து மால் தரும முற்றித்
திடலிடைச் செய்த கோயில்
திருஇரா மேச்சு ரத்தைத்
தொடலிடை வைத்து நாவிற்
சுழல்கின் றேன் தூய்மை யின்றி
உடலிடை நின்றும் பேரா
ஐவர்ஆட் டுண்டு நானே.

தெளிவுரை: கடலின் இடையில் மலைக் கற்களை அடைத்துப் பாலம் அமைத்துச் சென்று, இராவணனை அழித்து இராமபிரான், தனது பணியை முடித்துத் தீவுத் திடலில் செய்த கோயிலாகிய இராமேச்சுரத்தை, என் நெஞ்சுள் வைத்து, நாவால் உரைத்து ஏத்துகின்றேன். தூய்மையற்ற இவ்வுடலில் ஐம்புலன்கள் நின்று துன்புறுத்துகின்றனர். நான் அவர்களால் ஆட்டி வைக்கப்படுகின்றேன்.

சிறப்புரை: இராமேச்சுரம் என்னும் பெயரை நெஞ்சில் பதித்து நாவானது உச்சரித்து ஏத்துகின்ற தன்மையில், ஐம்புலன்கள் உயிரைப் பற்றி நின்று ஆட்டுதல் முறையோ என விளித்து உரைத்தல் ஆயிற்று. 'ஆட்டுண்டு' என்பது, ஆட்டாது என்னும் பொருளையும் தரும். இராமேச்சுரம் என்பது, பதிநாம மகிமையுடையதும் ஆகும்.

591. குன்றுபோல் தோளு டைய
குணமிலா அரக்கர் தம்மைக்
கொன்றுபோர் ஆழி யம்மால்
வேட்கையாற் செய்த கோயில்

நன்றுபோல் நெஞ்சமே நீ
நன்மையை யறிதி யாயில்
சென்றுநீ தொழுதுய் கண்டாய்
திருஇரா மேச்சு ரம்மே.

தெளிவுரை: குன்று போல் திரண்ட தோளுடைய சத்துவகுணமில்லாத அரக்கர்களைக் கொன்று வெற்றி கொண்ட சக்கரப் படையுடைய திருமாலாகிய இராமபிரான், சிவபூசையை விரும்பிச் செய்த கோயில் இராமேச்சுரம். நெஞ்சமே! நீ, நல்லவன் போல் தோற்றம் கொண்டனையே அன்றி, உண்மையில் நல்லவன் இல்லை, நீ, நற்பொருளை அறிய வேண்டுமானால் இராமேச்சுரம் சென்று தொழுது உய்வாயாக.

சிறப்புரை: சிவபூசையில் பற்றுகொண்டு விரும்பி ஆற்ற வேண்டும் என்னும் நுட்பம் "வேட்கையாற் செய்த கோயில்" என ஓதி உணர்த்துவதாயிற்று. ஈசனைத் தொழுது ஏத்துதலால் பெறப்படும் முத்திப் பேறு "நன்மை" என உணர்த்தப் பெற்றது.

ஈசனைத் தொழுது வணங்க, உயிர்க்கு உய்வு உண்டாகும் என அறுதியிட்டுக் காட்டும் வண்ண மானது, நெஞ்சுக்கு அறிவுரையாக, "நீ தொழுது உய் கண்டாய்" என உரைப்பதாயிற்று.

நன்மை – முத்திப் பேறு.

592. வீரமிக் கெயிறு காட்டி
விண்ணுற நீண்ட ரக்கன்
கூரமிக் கவனைச் சென்று
கொன்றுடன் கடற் படுத்துத்
தீரமிக் கான் இருந்த
திருஇரா மேச்சு ரத்தைக்

கோரமிக் கார்த வத்தாற்
கூடுவார் குறிப்பு ளாரே.

தெளிவுரை: *வீர மிக்க கோரைப் பல்லைக் காட்டும் அரக்கனாகிய இராவணன், நீண்ட வாழ் நாளைப் பெற்றுக் கொடுமை புரிபவனானான். அவனைக் கொன்றழித்த தீரமிக்க இராமபிரான், இருந்து சிவபூசை யாற்றிய திருஇராமேச்சுரத்தைத் தளராத சிந்தனை யுடன் தொழுது ஏத்துபவர்கள் நற்கதியை அடையும் குறிப்பினை அடையப் பெற்றவர்களாவார்கள்.*

வீரமிக்கெயிறு – கோரைப்பல்.

593. ஆர்வல நம்மின் மிக்கார்
என்றஅவ் அரக்கர் கூடிப்
போர்வலம் செய்து மிக்குப்
பொருதவர் தம்மை வீட்டித்
தேர்வலம் செற்றமால் செய்
திருஇரா மேச்சு ரத்தைச்
சேர்மட நெஞ்ச மேநீ
செஞ்சடை எந்தை பாலே.

தெளிவுரை: *அரக்கர்கள், தம்மை விட வலிமை யுடையவர் யாரும் இல்லை என்னும் எண்ணத்தில், வலிமை மிகுந்தவராய்ப் போர் செய்தனர். அத்தகையோரை வீழ்த்தி வெற்றி கொண்ட இராமபிரான், அமைத்தது திருஇராமேச்சுரம். மட நெஞ்சமே! நீ ஆங்கு அடைந்து செஞ்சடை நாதராகிய ஈசனை வணங்குவாயாக.*

இது, அவ்வாறு வணங்க நற்கதி உண்டாகும் என்னும் குறிப்பாயிற்று.

594. வாக்கினால் இன்பு உரைத்து
வாழ்கிலார் தம்மை எல்லாம்
போக்கி னாற் புடைத்த வர்கள்
உயிர்தனை உண்டு மால்தான்
தேக்கு நீர் செய்த கோயில்
திருஇரா மேச்சு ரத்தை
நோக்கி னால் வணங்கு வார்கள்
நோய்வினை நுணுகும் அன்றே.

தெளிவுரை: *அரக்கர்கள் இனிமையான உரைகளைப் பேசி வாழாதவர்கள். அவர்களை அழித்து வெற்றி கொண்டவர் திருமால். அவர், கடற்கரையில் அமைத்த திருஇராமேச்சுரத்தைக் கண்டு தரிசித்து வணங்குபவர்களுக்குப் பிறவி நோயும் அதற்குக் காரணமாகிய வினையும் நைந்து கெடும்.*

நுணுகும் – நைந்து கெடும்.

595. பலவுநாள் தீமை செய்து
பார்தன் மேல் குழுமி வந்து
கொலைவிலார் கொடிய ராய
அரக்கரைக் கொன்று வீழ்த்த
சிலையி னான் செய்த கோயில்
திரு இரா மேச்சு ரத்தைத்
தலையினால் வணங்கு வார்கள்
தாழ்வராம் தவம தாமே.

தெளிவுரை: *பல காலங்கள் தீமையே செய்து உலகினை வதைத்துத் துன்புறுத்திக் கொலையே புரியும் வில் தொழிலை மேவிய கொடியவராகிய அரக்கர்களைக் கொன்று வீழ்த்திய, கோதண்டம் கையிலேந்திய இராமபிரான் செய்து அமைத்த கோயில் திரு இராமேச்சுரம். அதனைத் தலைதாழ்த்தி வணங்கும்*

அடியவர்களுக்குப் பாவம் தாழ்வடைந்து இற்றழியத் தவப்பயன் பெருகிச் சேர்ந்து நற்கதி உண்டாகும்.

596. கோடிமா தவங்கள் செய்து
குன்றினார் தம்மை யெல்லாம்
வீடவே சக்க ரத்தால்
எரிந்துபின் அன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில்
திருஇரா மேச்சு ரத்தை
நாடிவாழ் நெஞ்சமே நீ
நன்னெறி யாகு மன்றே.

தெளிவுரை: அரிய பெரிய தவங்கள் செய்து பல வரபலங்களைப் பெற்றுக் குன்று போல வலிமை யுடைய அரக்கர்கள் வீழ்ந்து மடியுமாறு சக்கரப் படையைச் செலுத்தி வெற்றி கொண்டவர் திருமால், அவர் பின்னர் இராம அவதாரம் கொண்டு அன்பு மேலிடச் செய்த கோயிலானது, திருஇராமேச்சுரம். நெஞ்சமே! அதனை நாடி வாழ்வாயாக. அது உனக்கு நன்னெறியைக் கூட்டுவிக்கும்.

597. வன்கண்ணர் வாள ரக்கர்
வாழ்வினை ஒன்ற றியார்
புன்கண்ணர் ஆகி நின்று
போர்கள்செய் தாரை மாட்டிச்
செங்கண்மால் செய்த கோயில்
திருஇரா மேச்சு ரத்தைத்
தங்கணால் எய்த வல்லார்
தாழ்வராம் தலைவன் பாலே.

தெளிவுரை: கொடுமை யுடைய அரக்கர்கள், நன்கு வாழ்வதற்குரிய செயல் முறைகளை அறியாதவராவர். அவர்கள் பிறர்க்குத் துன்பம் செய்வதையே

இயல்பாகக் கொண்டவர்கள், அத்தகையோரைப் போர்செய்து அழித்த இராமபிரான் அமைத்த கோயில், திருஇராமேச்சுரம். அதனைத் தம் கண்களால் தரிசித்து ஏத்துபவர்கள், ஈசனின் திருப்பாத கமலத்தில் பதிந்து விளங்குவார்கள்.

598. வரைகள்ஒத் தேயு யர்ந்த
மணிமுடி அரக்கர் கோனை
விரையமுற் றறவொடுக்கி
மீண்டுமால் செய்த கோயில்
திரைக்கள்முத் தால்வ ணங்கும்
திருஇரா மேச்சு ரத்தை
உரைகள்பத் தாலு ரைப்பார்
உள்குவார் அன்பி னாலே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: மலைகளை ஒத்த நெடிய மணிமுடியுடைய இராவணனை முற்றும் ஒடுக்கி அழித்துத் திரும்பும் போது, இராமபிரான் செய்த கோயில், கடலலைகள் முத்துக்களைக் காணிக்கையாகச் செலுத்தி வணங்கும், திருஇராமேச்சுரம் ஆகும். அதனை இத்திருப்பதிகம் கொண்டு ஏத்துபவர்கள், அன்பின் பெருக்கத்தால் திளைப்பார்கள்.

இத்திருப்பதிகத்தை ஓதுபவர் அன்பு ததும்பும் உள்ளத்தினர் ஆவார் என்பதாம்.

மால் – இராமபிரான்.

62. திருஆலவாய்

தல விளக்கம்: பாண்டிய நாட்டுத்தலம் 14இல், இது 1ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. மதுரை

என்பது ஊர். கோயில் ஆலவாய். பஞ்ச சபைகளுள் இது வெள்ளிச் சபை. ஈசன் அறுபத்தி நான்கு திருவிளையாடல் நிகழ்த்திய திருத்தலம். மீனாட்சி அரசாள ஈசன் திருமணம் கொண்டு ஆட்சி புரிந்த திருத்தலம். மற்றும் முதல் திருமுறை - பதிகம் எண் 94 காண்க.

சுவாமி : சோமசுந்தரக் கடவுள்; சொக்க நாதர்; ஆலவாய் அண்ணல்

அம்பிகை : மீனாட்சி; அங்கயற் கண்ணி

தல மரம் : கடம்பு

தீர்த்தம் : பொற்றாமரைக்குளம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

599. வேதியா வேத கீதா
விண்ணவர் அண்ணா என்றென்று
ஓதியே மலர்கள் தூவி
ஒருங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய்
படர்சடை மதியம் சூடும்
ஆதியே ஆலவாயில்
அப்பனே அருள்செ யாயே.

தெளிவுரை: நான்கு வேதங்களாக விளங்கும் நாதனே! வேத கீதங்களை ஓதும் பெருமானே! தேவர்கள் நெருங்கி வந்து தலைவா என்று ஏத்தப் பெறுபவரே! தேவரீருடைய திருநாமங்களை ஓதி, மலர்கள் தூவி மனம் ஒன்றி கழல்களைக் காண, உமாதேவியாரைத் திருமேனியில் ஒருபாகமாக வைத்துப் படர்ந்து மேவும் சடையின் மீது சந்திரனைச் சூடும் ஆதியே! ஆலவாயில் திகழும் அப்பனே! அருள் செய்வீராக.

சிறப்புரை: இத்திருப்பாட்டானது, திரிகரணங்களாகிய மனம் வாக்கு காயத்தால் செய்யப் பெறும் வழிபாட்டினை உணர்த்துவதாயிற்று. "ஓது"தலாகிய செயல் வாக்கினால் செய்யப்படும் வழிபாடாகவும், "மலர் தூவி" ஏத்துதலாவது காயத்தால் செய்யும் வழிபாடாகவும், "ஒருங்கி கழல் காணுதல்" என்பது மனத்தால் புரியும் வழிபாடாகவும் காண்க. இவ்வாறு தேவர்கள் வழிபாடு செய்பவர். ஆயினும் மன்னுயிர்க்கும் இஃது அமையும் என்பதாம்.

600. நம்பனே நான்மு கத்தாய்
நாதனே ஞான மூர்த்தீ
என்பொனே ஈசா என்றென்று
ஏத்தி நான் ஏசற்று என்றும்
பின்பினே திரிந்து நாயேன்
பேர்த்தினிப் பிறவா வண்ணம்
அன்பனே ஆலவாயில்
அப்பனே அருசெ யாயே.

தெளிவுரை: நம்பனே! நான்கு முகம் கொண்ட நாதனே! ஞான மூர்த்தீ! என் பொன் போன்றவனே! ஈசனே! எனத் தேவரீரை ஏத்தி வணங்கி என் மனத்திலுள்ள மாசு யாவும் நீங்கப் பெற்றுத் தேவரீரைப் பின் பற்றித் திரிந்து, இனிப் பிறவாதவாறு, அன்பனே! ஆலவாயில் மேவும் அப்பனே! அருள் புரிவீராக.

சிறப்புரை: ஈசன் நான்கு முகங்களைக் கொண்டு விளங்குபவர் என, இவண் உணர்த்துதல் ஆயிற்று. "நாலு கொலாம் அவர்தம் முகமாவன" (திருப்பாட்டு வ.எண் 180) என அருளிச் செய்தமையும் காண்க. நான்கு மறைகளும் நான்கு திருமுகங்கள் எனலும்

உண்டு. இறைவனுக்கு நான்கு முகம் பன்னிரு கண், எட்டுத் தோள் என ஓதப் பெற்று, எட்டுக் கரங்களில், சூலம், மழு, வாள், அபயம், நாகம், பாசம், மணி, வரதம் ஆகியவாறு காட்டுதலும் அமையும்.

601. ஒரு மருந்தாகி யுள்ளாய்
உம்பரோடு உலகுக் கெல்லாம்
பெருமருந் தாகி நின்றாய்
பேரமுது இன்சு வையாய்க்
கருமருந் தாகி யுள்ளாய்
ஆளும்வல் வினைகள் தீர்க்கும்
அருமருந்து ஆல வாயில்
அப்பனே அருள்செ யாயே.

தெளிவுரை: ஈசனே! தேவரீர், ஒப்பற்ற மருந்தாகி விளங்குபவர்; தேவர்களுக்கும் உலகுக்கும் பெரு நன்மைகளைப் புரியும் மருந்தாகி விளங்குபவர்; பேரமுதாகியும் இனிய சுவை மிக்கவராயும் சிவாமிர்தத் தேனாகி அமுதமுமாய் விளங்குபவர்; கருவில் ஆழ்த்தும் பிறவிப் பிணியைத் தீர்க்கும் நன்மருந்தாகுபவர்; என்னை ஆட்படுத்தியுள்ள வினை களைத் தீர்க்கும் அருமருந்தாய் விளங்குபவர். ஆலவாயில் மேவும் அப்பனே! தேவரீர் அருள் புரிவீராக.

சிறப்புரை: பிறவி என்னும் நோய் தீர்க்கும் அரிய மருந்தாகி விளங்குபவர், சிவபெருமான் என, இத்திருப்பாட்டில் நன்கு ஓதப் பெற்றது. இத்தன்மை யில் அருட்பிரகாச வள்ளலார், "நல்ல மருந்து இம் மருந்து சுகம் நல்கும் வைத்திய நாத மருந்து" என அருளிச் செய்தமையும் நோக்குக. இந்நெறியில், திருஞானசம்பந்தர், "மருந்தன் அமுதன் மயானத்துள்

மைந்தன், பெருந்தண் புனல் சென்னி வைத்த பெருமான்" (முதல் திருமுறை 134 திருப்பறியலூர் வீரட்டம் - பாட்டு வ. எண் 1438) என, அருளிச் செய்த வாறும் காண்க. மற்றும், சிவபெருமான் மருந்தாகி அருளும் திறத்தினைக் "காலை எழுந்து தொழுவார் தங்கள் கவலை களைவாய் கறைக் கண்டா! மாலை மதியே! மலை மேல் மருந்தே! மறவேன் அடியேன்", (திருக்கச்சூர் ஆலக் கோயில் திருப்பதிகம் 5) எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தவாறும் காண்க.

602. செய்யநின் கமல பாதம்
சேருமா தேவர் தேவே
மையணி கண்டத் தானே
மான்மறி மழுவொன் றேந்தும்
சைவனே சால ஞானம்
கற்றறி விலாத நாயேன்
ஐயனே ஆல வாயில்
அப்பனே அருள்செ யாயே.

தெளிவுரை: தேவர்களின் தலைவரே! செந்தாமரை போன்ற தேவரீருடைய திருப்பாதங்களை மனமானது பொருந்துமாறு காணுமா! அத்தகைய அறிவைப் பெறாதவனானேன். கருமையான கண்டத்தையுடைய பெருமானே! மானும் மழுவும் ஏந்தும் சிவபெரு மானே! என் தலைவனே! ஆலவாயில் மேவும் என் தந்தையே! அருள் புரிவீராக.

603. வெண்டலை கையில் ஏந்தி
மிகவும் ஊர் பலிகொண்டு என்றும்
உண்டதும் இல்லை சொல்லில்
உண்டது நஞ்சு தன்னைப்

பண்டுனை நினைய மாட்டாப்
பளகனேன் உளமதார
அண்டனே ஆலவாயில்
அப்பனே அருள்செ யாயே.

தெளிவுரை: *மண்டை ஓட்டினைக் கையில் ஏந்தி ஊர் தொறும் சென்று பலி கொண்ட ஈசனே! தேவரீர், நஞ்சினையன்றி வேறு உணவை உண்டதும் இல்லை. பண்டு தேவரீரை உளமார நினைத்து ஏத்தாத குற்றமுடையவனானேன். அண்டமாகத் திகழ்பவனே! ஆலவாயில் மேவும் அப்பனே! அருள் புரிவீராக.*

சிறப்புரை: *முற்பிறவிகளில் இறைவனை உளமாரவும் குற்றம் நீங்கியும் நினையாத தன்மையானது, இப்பிறவியைத் தந்தது என்று உணர்த்தும் தன்மையைப் "பண்டுனை நினைய மாட்டாப் பளகனேன் உளமதார" எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "உளகறுத்து உனை நினைந்து உளம் பெருங்களன் செய்ததும் இலை நெஞ்சே! பளகு அறுத்து உடையான் கழல் பணிந்திலை பரகதி புகுவானே!" (திருச்சதகம் 35) என அருளிச் செய்த வாறும் காண்க.*

பளகு – குற்றம்.

604. எஞ்சலில் புகலி தென்றென்று
ஏத்திநான் ஏசற் றென்றும்
வஞ்சகம் ஒன்றும் இன்றி
மலரடி காணும் வண்ணம்
நஞ்சினை மிடற்றில் வைத்த
நற்பொருட் பதமே நாயேற்கு
அஞ்சலென்று ஆலவாயில்
அப்பனே அருள்செ யாயே.

தெளிவுரை: ஆலவாயில் மேவும் அப்பனே! குறைவு ஏதும் இன்றி அடைக்கலம் இதுவே என்று ஏத்தி வஞ்சம் அற்றும் நிந்தனையற்றும் விளங்கும் தேவரீருடைய மலரடியைக் காணும் வண்ணம் அருள் செய்வீராக. நஞ்சினைக் கண்டத்தில் வைத்த நற்பொருள் பதமாக விளங்கும் தேவரீர், அஞ்சாதே என அருள் செய்வீராக.

புகலி – சரணம் ஏற்கும் திருவடியை உணர்த்தியது; மிடறு – கண்டம்; நற்பொருட் பதம் – திருவைந்தெழுத்து, ஈசன்.

605. வழுவிலாது உன்னை வாழ்த்தி
வழிபடும் தொண்ட னேனுன்
செழுமலர்ப் பாதம்காணத்
தெண்டிரை நஞ்சம் உண்ட
குழகனே கோல வில்லீ
கூத்தனே மாத்தா யுள்ள
அழகனே ஆல வாயில்
அப்பனே அருள்செ யாயே.

தெளிவுரை: கடலில் தோன்றிய நஞ்சினை உண்ட குழகனே! அழகிய மேரு மலையை வில்லாகக் கொண்ட நாதனே! கூத்தப்பெருமானே! சொக்கநாதக் கடவுளே! ஆலவாயில் மேவும் அப்பனே! வழு இல்லாது தேவரீரை வாழ்த்தி வழிபடும் தொண்டனாகிய நான் தேவரீருடைய மலர்ப் பாதத்தைக் காண அருள் செய்வீராக.

மாத்தாயுள்ள அழகன் – சொக்கநாதக் கடவுள்.

606. நறுமலர் நீரும் கொண்டு
நாள்தொறும் ஏத்தி வாழ்த்திச்
செறிவன சித்தம் வைத்துத்
திருவடி சேரும் வண்ணம்

மறிகடல் வண்ணன் பாகா
மாமறை அங்கம் ஆறும்
அறிவனே ஆல வாயில்
அப்பனே அருள்செ யாயே.

தெளிவுரை: *கடல் வண்ணராக விளங்கும் திருமாலைப் பாகமாக உடைய ஈசனே! பெருமை மிக்க மறைகளும் அதன் ஆறு அங்கங்களும் அறியும் அறிவாகிய பரம் பொருளே! ஆலவாயில் மேவும் அப்பனே! தேவரீரை நறுமலரும் நீரும் கொண்டு நாள்தொறும் ஏத்திப் பூசித்து வாழ்த்திச் சித்தம் வைத்து வணங்கித் திருவடியில் சேருமாறு, அடியவனுக்கு அருள் செய்வீராக*

607. நலந்திகழ் வாயில் நூலால்
சருகிலைப் பந்தர் செய்த
சிலந்தியை அரச தாள
அருளினாய் என்று திண்ணம்
கலந்துடன் வந்து நின்றாள்
கருதிநான் காண்ப தாக
அலந்தனன் ஆலவாயில்
அப்பனே அருள்செ யாயே.

தெளிவுரை: *ஆலவாயில் மேவும் அப்பனே! வாயில் நூல்கொண்டு பந்தர் அமைத்துச் சிவபுண்ணியத்தை மேற் கொண்ட சிலந்தியை, மறுபிறவியில் கோச் செங்கட் சோழ மன்னனாக ஆக்கி, அரசாளுமாறு செய்த ஈசனே! தேவரீருடன் கலந்து நின்று அன்பிற் குழைந்து இருக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் நான் வந்து அலைந்து சோர்வுற்றேன் அருள் செய்வீராக.*

608. பொடிக்கொடு பூசிப் பொல்லாக்
குரம்பையிற் புந்தி யொன்றிப்
பிடித்துநின் தாள்கள் என்றும்
பிதற்றிநான் இருக்க மாட்டேன்
எடுப்பன்என்று இலங்கைக் கோன்வந்து
எடுத்தலும் இருபது தோள்
அடர்த்தனே ஆல வாயில்
அப்பனே அருள்செ யாயே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஆலவாயில் மேவும் அப்பனே! கயிலையைப் பெயர்த்த இராவணனுடைய இருபது தோளை அடர்த்த ஈசனே! நான், திருநீற்றை உடம்பில் பூசி, மனம் ஒன்றியும், சிந்தித்தும், தேவரீருடைய தாள் மலரைப் பற்றித் திருநாமங்களை உச்சரித்தும் தியானம் செய்யாதவன். அடியேனுக்கு அருள் செய்வீராக.

63. திருவண்ணாமலை

தல விளக்கம்: நடுநாட்டுத் தலம் 22-இல், இது 22ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. பஞ்சபூதத் தலங்களுள் இது அக்கினித் தலம். நினைக்க முத்திதரும் சிறப்புடையது. இறைவன், வல்லாள மன்னருக்குத் திருமகனாகத் தோன்றி அருளிய பதி. அடிமுடி தேடிய திருமால் பிரமன் ஆகியோருக்குச் சோதியாகக் காட்சியளித்த பதி.

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 10 காண்க.

சுவாமி : அண்ணாமலையார், அருணாசலேஸ்வரர்

அம்பிகை : உண்ணாமுலையம்மை, அபீதகுஜாம்பாள்

தல மரம் : மகிழ மரம்

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

609. ஓதிமா மலர்கள் தூவி
உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்தோள்
சுடர்மழுப் படையி னானே
ஆதியே அமரர் கோவே
அணிஅணா மலையு ளானே
நீதியால் நின்னை யல்லால்
நினையுமா நினைவி லேனே.

தெளிவுரை: உமாதேவியைப் பாகமாக உடைய பெருமானே! பெருகி எழுந்த சோதியே! எட்டுத் தோள் கொண்ட நாதனே! சுடர் விடும் மழுப் படையுடைய ஈசனே! ஆதியே! தேவர்களின் தலைவரே! அழகு மிளிரும் அண்ணாமலையுள் திகழும் பரமனே! விதிப்படி தேவரீருடைய திருப்பாதங்களில் மலர் தூவிப் போற்றித் தேவரீரையன்றி என்மனமானது வேறொன்றை நினைத்து ஏத்துமா! நான் தேவரீரையன்றி வேறு நினைவு இல்லாதவன் ஆனேன்.

சிறப்புரை: இத்திருப்பாட்டில், திருமால், பிரமன் ஆகியோருக்குச் சோதிப் பிழம்பாகிக் காட்சியளித்த, திருத்தலத்தின் பெருமையானது, “மிக்க சோதியே!” என ஓதப் பெற்றது.

ஈசனை, மலர் தூவிப் போற்றி அருச்சித்து வழிபடும் காயத்தால் செய்யும் வழிபாடும்; நினைதல் வாயிலாக மனத்தால் செய்யும் வழிபாடும்; ஓதுதல் வாயிலாக வாக்கினால் செய்யும் வழிபாடும், இவண் வலியுறுத்தித் திரிகரண சுத்தியாக, ஈசனை வணங்கும் நெறியை ஓதிற்று.

"ஓதிமா மலர்கள் தூவு"தலானது, சிறப்புடைய அட்டபுட்பங்களாகிய, புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியா வர்த்தம், நீலோற்பலம் (குவளை), பாதிரி, அலரி, செந்தாமரை ஆகியனவற்றால் அருச்சிப்பது எனவும், நீதியால் நினைதலாவது, அகமலர்களாகிய கொல்லாமை, அருள், ஐம்பொறி அடக்குதல், பொறை, தவம், வாய்மை, அன்பு, அறிவு ஆகியனவற்றால் ஏத்துதல் எனவும் கொள்க.

ஈசனைத் தற்போதம் அற்று, நான் எனது என்னும் உணர்வற்ற நிலையில் வணங்கியேத்தும் மாண்பானது, "நினைவிலேனே" என உணர்த்தப் பெற்றது.

610. **பண்தனை வென்ற இன்சொற்**
பாவையோர் பங்க நீல
கண்டனே கார்கொள் கொன்றைக்
கடவுளே கமல பாதா
அண்டனே அமரர் கோவே
அணியணா மலையு ளானே
தொண்டனேன் உன்னை யல்லால்
சொல்லுமா சொல்லில் லேனே.

தெளிவுரை: பண்ணின் இசையை வென்ற இனிய சொல் பகரும் உமாதேவியைப் பாகமாகக் கொண்ட பரமனே! நீலகண்டனே! கார்காலத்தில் மலரும் கொன்றை மலரை மாலையாகத் தரித்த கடவுளே!

தாமரை மலர் போன்ற பாதங்களையுடைய நாதனே! அண்டமாக விளங்கும் பெருமானே! தேவர்களின் தலைவனே! அழகிய அண்ணாமலையுள் வீற்றிருக்கும் ஈசனே! தொண்டனாகிய அடியேன், தேவரீரை யன்றி ஏத்திச் சொல்லுவதற்கு ஏதேனும் சொற்கள் உள்ளனவோ! தேவரீர், சொற்களுக்கு அடங்காத பெரும் பொருளல்லவா!

சிறப்புரை: உமாதேவியின் இனிய சொல்லானது, பண்ணின் இசையை விட இனிமையானது என, ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், அம்பிகையின் திரு நாம வண்ணமானது, திருமறைக்காட்டில், யாழைப் பழித்த மொழியம்மை எனவும்; திருவாய்மூரில். பாலின் நன்மொழியாள் எனவும்; தேவூரில், தேன் மொழியம்மை எனவும்; திருவிளமர் என்னும் தலத்தில், மதுரபாஷிணி எனவும், திருப்புறம் பயம் என்னும் தலத்தில், கரும்பன்ன சொல்லி எனவும், திருச்சாய்க் காட்டில், குயிலினும் நன்மொழியம்மை எனவும் வழங்கப் பெறுதல் காண்க.

சொல்லிலேனே – சொற்பதம் கடந்த நிலையில் மேவும் ஈசனின் திருப்பாங்கு சுட்டப் பெற்றது. “சொற்பதம் கடந்த தொல்லோன், உள்ளத்து உணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்” எனவரும், திருவாசக அமுத வாக்கும் காண்க.

611. உருவமும் உயிரும் ஆகி
ஓதிய உலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய்
நின்றஎம் பெருமான் மிக்க
அருவிபொன் சொரியும் அண்ணா
மலையுளாய் அண்டர் கோவே
மருவிநின் பாதம் அல்லால்
மற்றொரு மாடு இலேனே.

தெளிவுரை: வடிவமும் அதனில் இயங்கும் உயிரும் ஆகி, ஓதப் பெறும் உலகத்தில், பெருகி விளங்கும் வினையும், அதற்குரியதாகிய பிறவியும், அப்பிறவியை நீக்கும் முத்திப் பேறும் ஆகி விளங்குபவர், சிவபெருமான். அவர், அருவி பொன் சொரியும் அண்ணாமலையில், தேவர் தலைவராய்த் திகழ்பவர். அவரை மருவி நின்று திருவடியை ஏத்துதல் அல்லாது, வேறு செல்வம் யாதும் இல்லை.

சிறப்புரை: அண்ணாமலையின் அழகின் சிறப்பானது "அருவிபொன் சொரியும் அண்ணாமலை" என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், திருஞானசம்பந்தர், "பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழவு அதிரும் அண்ணாமலை" (முதல் திருமுறை 10 திருவண்ணா மலை பாட்டு. வ.எண் 97) என அருளிச் செய்தவாறும் காண்க. ஈசனின் திருவடியை அன்றி மேலான செல்வம் யாதும் இல்லை என்னும் மெய்ம்மையானது "நின்பாத மல்லால் மற்றொரு மாடிலேனே" என ஓதப் பெற்றது. இதனைத் திருஞானசம்பந்தர், "செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பல மேய செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே" (முதல் திருமுறை பாட்டு வ.எண் 868) என அருளிச் செய்தவாறும் காண்க.

மாடு – செல்வம்.

612. பைம்பொனே பவளக் குன்றே
பரமனே பால்வெண் ணீறா
செம்பொனே மலர்செய் பாதா
சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து வீழும்
அணியணா மலையு ளானே

என்பொனே யுன்னை யல்லால்
ஏதுநான் நினைவி லேனே.

தெளிவுரை: அழகு மிளிரும் பசும் பொன்னே! பவளக் குன்று போல் விளங்கும் செம்மேனியுடைய பரமனே! பால் போன்ற திருவெண்ணீற்றைத் திருமேனியில் பூசி மேவும் செம்பொன்னே! செந்தாமரை போன்ற மென்மையான திருப்பாதம் உடைய நாதனே! புகழ் மிக்க மாணிக்க மணியே! அழகு மிக்க பெருமானே! மேலான மணிகள் கொழித்து மிளிரும் அண்ணா மலையில் வீற்றிருக்கும் இறைவனே! என் உள்ளத்தில் பொன் போன்று விளங்கும் மேன்மையுடைய ஈசனே! தேவரீரை அன்றி நான் வேறு எதனையும் நினைத்தற்கு இல்லை.

613. பிறையணி முடியி னானே
பிஞ்ஞகா பெண்ணோர் பாகா
மறைவலா இறைவா வண்டார்
கொன்றையாய் வாம தேவா
அறைகழல் அமரர் ஏத்தும்
அணிஅணா மலையு ளானே
இறைவனே உன்னை யல்லால்
யாதுநான் நினைவி லேனே.

தெளிவுரை: பிறைச்சந்திரனைச் சூடிய சடை முடியுடைய ஈசனே! பிஞ்ஞகா! உமாதேவியைப் பாகமாக உடைய பெருமானே! நான்கு மறைகளும் ஆகிய நாதனே! இறைவனே! வண்டு சுழலும் கொன்றை மாலை தரித்த பெருமானே! வாம தேவனே! ஒலிக்கும் கழல் அணிந்த தேவர்கள் ஏத்தும் அண்ணாமலையில் மேவும் ஈசனே! தேவரீரை அன்றி நான் வேறு நினைவில்லாதவன்.

வாம தேவன் - ஈசனின் திருமுகங்கள் ஐந்தனுள் வடக்கு திக்கை நோக்கியது. ஏனையவை அகோரம் - தெற்கு; சத்தியோசாதம் - மேற்கு; ஈசானியம் - கிழக்கு, தற்புருடம் - நேர் நோக்கு திசை அதாவது, ஏனைய நான்கு திசைகளுள் அவ்வவ் வகையில் அத்திசை நோக்குக்கு ஏற்பக் கலந்து மேவும்.

614. புரிசடை முடியின் மேலோர்
பொருபுனல் கங்கை வைத்துக்
கரியுரி போர்வை யாகக்
கருதிய கால காலா
அரிகுல மலிந்த அண்ணா
மலையுளாய் அலரின் மிக்க
வரிமிகு வண்டு பண்செய்
பாதநான் மறப்பி லேனே.

தெளிவுரை: ஈசன், சடை முடியின் மீது கங்கையைத் தரித்தவர்; யானையின் தோலைப் போர்த்தி இருப்பவர்; காலனை மாய்த்த திருப்பாதத்தினர்; குரங்கினங்கள் மலிந்த அண்ணாமலையில் வீற்றிருப்பவர். அழகிய பண்ணிசைக்கும் வண்டுகள் சூழ்ந்த மலர்ப்பாதம் உடைய அப்பெருமானை, நான் மறவாதவன்.

சிறப்புரை: ஈசனின் திருப்பாத மலரை வண்டு பண்ணிசைத்துப் போற்றி வட்ட மிடுதலைப் போன்று, உயிரானது, அப்பெருமானின் திருவடியைப் பரவி ஏத்துதலை உணர்த்துதல் காண்க.

அரிகுலம் – குரங்கினம்.

615. இரவியும் மதியும் விண்ணும்
இருநிலம் புனலும் காற்றும்

உரகமார் பவனம் எட்டும்
திசையொளி உருவம் ஆனாய்
அரவுமிழ் மணிகொள் சோதி
அணியணா மலையு ளானே
பரவுநின் பாதம் அல்லால்
பரமநான் பற்றி லேனே.

தெளிவுரை: சூரியன், சந்திரன், ஆகாயம், பூமி, நீர், காற்று முதலான அட்டமூர்த்தமாகி ஒளியுமிழ் சோதியாய் அண்ணாமலையில் வீற்றிருக்கும் பெருமானே! தேவரீருடைய திருப்பாத மலர்களை அன்றி நான் வேறு பற்றில்லாதவன்.

616. பார்த்தனுக்கு அன்று நல்கிப்
பாசுப தத்தை ஈந்தாய்
நீர்த்ததும்பு லாவு கங்கை
நெடுமுடி நிலாவ வைத்தாய்
ஆர்த்துவந்து ஈண்டு கொண்டல்
அணியணா மலையு ளானே
தீர்த்தனே நின்றன் பாதத்
திறமலால் திறமி லேனே.

தெளிவுரை: ஈசனே! தேவரீர், பார்த்தனுக்குப் பாசுபத அத்திரத்தை அருளிச் செய்தவர்; கங்கையை நெடிய முடியின் மீது நிலவ வைத்தவர்; ஆர்த்து வந்து கூடும் மேகங்களையுடைய அண்ணாமலையில் வீற்றிருப்பவர். தீர்த்தமாய் விளங்கும் தேவரீருடைய திருப்பாதங்களை அன்றி வேறு திறம் யான் பெற்றிலன்.

சிறப்புரை: பாவங்களைத் தீர்த்தருளும் ஈசனின் மலரடியை, இத்திருப்பாட்டானது ஏத்துதலாயிற்று. இத்தன்மையில், "அண்ணாமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும் விண்ணோர்" எனவும், "ஆர்த்த

பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" எனவும், "போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்" எனவும், அருளிச் செய்த மாணிக்க வாசகர் தம் அமுத வாக்கும் காண்க.

617. பாலுநெய் முதலா மிக்க
பசுவில் ஐந்து ஆடுவானே
மாலுநான் முகனும் கூடிக்
காண்கிலா வகையுள் நின்றாய்
ஆலுநீர் கொண்டல் பூகம்
அணியணா மலையுளானே
வாலுடை விடை யாய் உன்றன்
மலரடி மறப்பி லேனே.

தெளிவுரை: *ஈசனே! தேவரீர், பால் நெய் முதலாக உள்ள பசுவின் பஞ்ச கௌவியத்தை விரும்பிப் பூசனை பெறுபவர். திருமாலும் பிரமனும் காண்பதற்கு இயலாதவராகி ஓங்கும் ஒளிப்பிழம்பாகி நின்றவர்; மழை விளங்கும் மேகத்தையுடைய பாக்கு மரங்கள் விளங்கும் அண்ணாமலையில் வீற்றிருப்பவர். தேவரீர், பெருமை மிக்க வெள் விடையின் மீது அமர்ந்தவர். உமது திருவடியை யான் மறவாதவன்.*

வால் – பெருமை, ஒளி, வெண்மை.

618. இரக்கம்ஒன்று யாதும் இல்லாக்
காலனைக் கடிந்த எம்மான்
உரத்தினால் வரையை யூக்க
ஒருவிரல் நுதியி னாலே
அரக்கனை நெரித்த அண்ணா
மலையுளாய் அமரர் ஏறே
சிரத்தினால் வணங்கி யேத்தித்
திருவடி மறப்பி லேனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இரக்கம் இல்லாத காலனை மாய்த்த எம் தலைவர் சிவபெருமான். அவர், தனது வலிமையால் கயிலையைப் பெயர்த்த இராவணனை ஒரு விரலின் நுனியால் நெரித்தவராகி, அண்ணாமலையில் வீற்றிருப்பவர். தேவர்களின் தலைவராகிய அப்பரமனை, நான் மறவாது சிரந் தாழ்த்தி வணங்கி ஏத்துகின்றேன்.

சிரத்தினால் வணங்கி – தலையே நீ வணங்காய் என்னும் நாவுக்கரசர் தம் திருவாக்கும் (பாட்டு வ.எண் 82) காண்க.

64. திருவிழிமிழலை

தல விளக்கம்: காவிரித் தென்கரைத்தலம் 127இல், இது 61ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. திருமால் பூசித்து ஆழிப்படை பெற்ற தலம். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் படிக்காசு பெற்ற தலம்.

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 4 காண்க.

சுவாமி : நேத்திரார்ப்பணேஸ்வரர், விழியழகர்

அம்பிகை : சுந்தர குஜாம்பிகை

தல மரம் : வீழிச் செடி

தீர்த்தம் : விஷ்ணு தீர்த்தம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

619. பூதத்தின் படையர் பாம்பின்
பூணினர் பூண நூலர்
சீதத்திற் பொலிந்த திங்கள்
கொழுந்தர்நஞ் சமுழ்ந்து கண்டர்

கீதத்திற் பொலிந்த ஓசைக்
 கேள்வியர் வேள்வி யாளர்
வேதத்தின் பொருளர் வீழி
 மிழலையுள் விகிர்த னாரே.

தெளிவுரை: *சிவபெருமான், பூதகணங்களைப் படையாகக் கொண்டுள்ளவர்; பாம்பை ஆபரணமாக அணிந்தவர்; முப்புரிநூல் அணிந்தவர்; குளிர்ச்சி மிக்க பிறைச் சந்திரனைச் சடைமுடியில் தரித்தவர்; நஞ்சினைத் தேக்கிய கண்டத்தை உடையவர்; வேத ஒலியாகவும் கீதமாகவும் அதன் பொருளாகவும் விளங்கி அதனை விரும்பிக் கேட்பவர்; வேள்விக்குரிய தலைவராய் இருந்து ஆள்பவர். அப்பெருமான், வீழி மிழலையுள் மேவும் விகிர்தனாரே.*

620. காலையிற் கதிர்செய் மேனி
 கங்குலிற் கறுத்த கண்டர்
மாலையின் மதியம் சேர்ந்த
 மகுடத்தர் மதுவும் பாலும்
ஆலையிற் பாகும் போல
 அண்ணித்திட்டு அடியார்க்கு என்றும்
வேலையின் அமுதர் வீழி
 மிழலையுள் விகிர்த னாரே.

தெளிவுரை: *ஈசன், காலைச் செங்கதிரவன் போன்ற செம்மேனியர்; இருள் போன்ற கரிய கண்டத்தையுடையவர்; மாலை மதி தரித்த, ஒளிரும் சடை முடியுடையவர்; தேனும் பாலும், கரும்பின் சாரும் போன்று அடியவர்களுக்கு இன் சுவையாக நெருங்கி விளங்கி, மகிழ்விப்பவர். பாற்கடலில் கடைந்தெடுக்கப் பெற்ற அமுதமாகத் திகழ்பவர். அவர், வீழி மிழலையுள் மேவும் விகிர்தனாரே.*

621. வருந்தின நெருநல் இன்றாய்
வழங்கின நாளர் ஆல்கீழ்
இருந்துநன் பொருள்கள் நால்வர்க்கு
இயம்பினர் இருவ ரோடும்
பொருந்தினர் பிரிந்து தம்பால்
பொய்யராம் அவர்கட்கு என்றும்
விருந்தினர் திருந்துவீழி
மிழலையுள் விகிர்த னாரே.

தெளிவுரை: சிவபெருமான், எதிர்காலம், முற்காலம், இக்காலம் எனப் பெறும் மூன்று காலமும் ஆகுபவர்; கல்லால மரத்தின் கீழ் இருந்து நாற்பொருள் உண்மையைச் சனகாதி முனிவர்களாகிய, சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகியவர்களுக்கு உபதேசம் செய்தவர்; திருமால், நான்முகன் ஆகியவரோடு பொருந்தி விளங்குபவர்; தமக்குள் மாறுபாடு கொண்டு, அவர்கள் தேடிய காலத்தில் காட்சிக்கு அரியவராகச் சோதிப் பிழம்பாக ஓங்கியவர். விரும்பி ஏத்தும் தகையினர்க்கு நல் விருந்தினர். அவர் வீழி மிழலையுள் மேவும் விகிர்தனாரே.

சிறப்புரை: ஈசன், பிரமன் திருமால் ஆகியோர்பால் பொருந்தி விளங்குதல், "இருவரோடும் பொருந் தினர்" என ஓதப் பெறுவதாயிற்று. திருமாலுடன் ஈசன் பொருந்தி விளங்கும் பாங்கினை "மாலும் கொப்பளித்த பாகர் *(பாட்டு வ.எண் 245)*, "அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" *(பாட்டு வ.எண் 398)*, "மாலொரு பாகமாக மகிழ்ந்த நெய்த்தானனாரே *(பாட்டு வ.எண் 370)* என, அருளிச் செய்தவாறு காண்க.

சிவபெருமானுடைய திருஉருவத்தை மனத்தில் பதித்துப் படைத்தல் தொழில் மேவும் பிரமனின்

பாங்கினை, "உயிர் அவையவை தமபவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவிய சிவன்" (முதல் திருமுறை 2 திருச்சிவபுரத் திருப்பதிகம் பா.வ.எண் 217) எனத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்தவாறும் காண்க.

பொய்யர் – காட்சிக்குப் புலனாகாதவர். அரிதாகியவர்; வருந்தினம் – எதிர்காலம், நெருநல் – இறந்த காலம்.

622. நிலையிலா ஊர்மூன்று ஒன்ற
நெருப்புஅரி காற்றுஅம் பாகச்
சிலையு நான் அதுவுநாகம்
கொண்டவர் தேவர் தங்கள்
தலையினால் தரித்த என்பும்
தலைமயிர் வடமும் பூண்ட
விலையிலா வேடர் வீழி
மிழலையுள் விகிர்த னாரே.

தெளிவுரை: *முப்புரங்களை, அக்கினி, திருமால், வாயு தேவன் ஆகியோரை அம்பாக அமைத்து, மேரு மலையை வில்லாகவும், வாசுகி என்னும் நாகத்தை நாணாகவும் கொண்டு எய்து அழித்தவர், சிவபெருமான். அவர், எலும்பு மாலையும் சடை முடியும் உடையவர். அத்தகைய பெருமைக்குரிய திருவேடப் பொலிவுடையவர் வீழி மிழலையுள் மேவும் விகிர்தனாரே.*

நிலையிலா ஊர் – ஓரிடத்தில் நில்லாது பறந்து செல்லும் புரம்.

623. மறையிடைப் பொருளர் மொட்டின்
மலர்வழி வாசத் தேனர்
கறவிடைப் பாலின் நெய்யர்
கரும்பினிற் கட்டி யாளர்
பிறையிடைப் பாம்பு கொன்றைப்
பிணையல்சேர் சடையுள் நீரர்

விறகிடைத் தீயர் வீழி
மிழலையுள் விகிர்த னாரே.

தெளிவுரை: சிவபெருமான், வேதத்தின் பொருளாக விளங்குபவர்; மலரின் நறுமணத்தின் வழித் தேனாய் இனிப்பவர்; கறந்த பாலில் விளங்கும் நெய்யானவர்; கரும்பின் கட்டி போன்று நெடிது பக்திச் சுவையை உள்ளத்தின் ஊற்றென விளைவிப்பவர்; பிறைச் சந்திரன், பாம்பு, கொன்றை மலர் ஆகியன சடை முடியில் திகழுமாறு செய்தவர்; கங்கையைத் தரித்த வர்; விறகில் கண்ணுக்குப் புலனாகாத நெருப்பு போன்றவர். அவர் வீழி மிழலையுள் மேவும் விகிர்தனாரே.

சிறப்புரை:ஈசன் "விறகில் தீயாகவும், பாலில் படுநெய் போன்றும் மறைந்து நிற்றல் "பாலின் நெய்யர்" எனவும், "விறகிடைத்தீயர்" எனவும், இத்திருப்பாட்டில் சுட்டப் பெற்றது. பக்தி உணர்வினால் அதனைக் கடைய, நெய்யும், தீயும் எழுதலைப் போன்று, ஈசன் அன்பர்தம் உள்ளுணர்விலிருந்து வெளிப்படும் மெய்ம்மை, இவண் உணர்த்தப் பெற்றது.

624. எண்ணகத்து இல்லை அல்லர்
உளரல்லர் இமவான் பெற்ற
பெண்ணகத்து அரையர் காற்றில்
பெருவலி இருவ ராகி
மண்ணகத்து ஐவர் நீரில்
நால்வர்தீ அதனில் மூவர்
விண்ணகத்து ஒருவர் வீழி
மிழலையுள் விகிர்தனாரே.

தெளிவுரை: சிவபெருமான் நமது எண்ணத்தில் இல்லாதவர் இல்லை, எப்போதும் இருப்பவர். அவர்

எப்போதும் உளர் என்று நம்மால் அறியுமாறு விளங்கி நிற்பவர் அல்லர். அவர் மலை மகளாகிய உமாதேவியைப் பாகங் கொண்டு அர்த்த நாரியாக விளங்குபவர். காற்றில் வலிமைமிக்க இருவராக விளங்கும் ஈசன், மண்ணில் ஐவராகவும், நீரில் நால்வராகவும், நெருப்பில் மூவராகவும், ஆகாயத்தில் ஒருவராகவும் திகழ்பவர். அப்பெருமான் வீழி மிழலையுள் மேவும் விகிர்தனாரே.

சிறப்புரை: ஈசன் ஐம்பூதப் பொருள்களாகவும் அதனில் மேவும் விளைவாகவும் இருத்தல் இவண் "மண்ணகத்து ஐவர்" முதலாக என ஓதப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், போற்றித் திருஅகவலில்,

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

என ஓதியருளியமையும் காண்க.

மண்ணகத்து ஐந்து: அதன் குணங்களாகிய நாற்றம், சுவை, உருவம், ஊறு, ஒலி; நீரில் நான்கு: சுவை, உருவம், ஊறு, ஒலி; நெருப்பில் மூன்று: உருவம், ஊறு, ஒலி; காற்றில் இரண்டு: ஊறு, ஒலி; விண்ணில் ஒன்று: ஒலி.

625. சந்தணி கொங்கை யாளோர்
பங்கினார் சாம வேதர்
எந்தையும் எந்தை தந்தை
தந்தையும் ஆய ஈசர்
அந்தியோடு உதயம் அந்த
ணாளர்ஆன் நெய்யால் வேட்கும்

வெந்தழல் உருவர் வீழி
மிழலையுள் விகிர்த னாரே.

தெளிவுரை: ஈசன், உமாதேவியை ஒரு பாகமாக உடையவர்; சாமவேதமாக விளங்கும்; என் தந்தையும் தந்தையின் தந்தையும், அவர் தந்தையும் ஆகிய தாதை உறவால் திகழ்பவர். உதயமும் அந்தியும் ஆகிய சந்திகளில் அந்தணர்கள் பசுவின் நெய்கொண்டு புரியும் வேள்வித் தழலாக விளங்குபவர். அவர் மிழலையுள் மேவும் விகிர்தனாரே.

எந்தை தந்தை – பாட்டன்; அவர்தந்தை பூட்டன்; பாட்டனின் பாட்டன் – ஓட்டன்; அவ்வாறே பாட்டி, பூட்டி, ஒட்டி என்பதாம். "எந்தையை எந்தை தந்தைபிரானை" (திருவாழ்கொளி புத்தூர் பதிகம் 7) என்னும் சுந்தரர் திருவாக்கும் காண்க.

626. நீற்றினை நிறையப் பூசி
நித்தல்ஆ யிரம்பூக் கொண்டு
ஏற்றுழி ஒருநாளொன்று
குறையக்கண் ணிறைய விட்ட
ஆற்றலுக்கு ஆழி நல்கி
அவன் கொணர்ந்து இழிச்சுங் கோயில்
வீற்றிருந்து அளிப்பர் வீழி
மிழலையுள் விகிர்தனாரே.

தெளிவுரை: திருமால், திருவெண்ணீற்றை நிறையப் பூசி நித்தமும் ஆயிரம் பூக்கள் கொண்டு அருச்சிக்க, ஒரு நாள் ஒரு மலர் குறைவு பட்டதனையறிந்து, தன் கண்ணை இடந்து பற்றி, அருச்சித்து அக்குறையை நிவர்த்தி செய்தார். அத்தகைய அன்பின் ஆற்றலுக்கு ஈடாகச் சக்கரப் படையை அளித்தவர், சிவபெருமான். திருமால், ஈசனைப் பூசிப்பதற்காக விண்ணிலிருந்து கொணர்ந்து மண்ணுலகில் சேர்த்த விமாதில்

வீற்றிருந்து அருள்பவர், வீழி மிழலையின் விகிர்தனாரே.

சிறப்புரை: சிவபூசை செய்யும் போது திருநீறு அணிந்து மேவுதல் வேண்டும் என்னும் உபதேச வாக்கியமானது, "நீற்றினை நிறையப் பூசி" என மகாவாக்கியமாக அருளப் பெறுதலை ஓர்க.

627. சித்திசெய் பவர்கட்கு எல்லாம்
சேர்விடம் சென்று கூடப்
பத்திசெய் பவர்கள் பாவம்
பறிப்பவர் இறப்பி லாளர்
முத்திசெய் பவள மேனி
முதிரொளி நீல கண்டர்
வித்தினின் முளையர் வீழி
மிழலையுள் விகிர்த னாரே.

தெளிவுரை: ஈசன், சித்திகளை விரும்புபவர்களுக்குச் சேரும் இடமாகுபவர்; பத்தியுடன் ஏத்தித் தொழுபவர்களுடைய பாவத்தைப் போக்குபவர்; இறப்பில்லாதவர்; முத்தியளிக்கும் பவள மேனியர்; நீலகண்டர்; வித்திற்கு முளை போன்று எல்லாச் செயல்களுக்கும் கருவாகி நின்று விளங்கச் செய்பவர். அவர் வீழி மிழலையுள் மேவும் விகிர்தனாரே.

இறப்பிலாளர் – இறப்பில்லாதவர்; இறக்குங்காலத்தில் ஆட் கொண்டு விளங்குபவர்.

628. தருக்கின அரக்கன் தேரூர்
சாரதி தடைநி லாது
பொருப்பினை யெடுத்த தோளும்
பொன்முடி பத்தும் புண்ணாய்
நெரிப்புண்டங்கு அலறி மீண்டு
நினைந்தடி பரவத் தம்வாள்

விருப்பொடும் கொடுப்பர் வீழி
மிழலையுள் விகிர்த னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தேரினைச் செலுத்த இயலாத தடையை அறிவித்தும், அதனை ஏற்காது, கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த இராவணனுடைய தோளும் முடிபத்தும் புண்ணாகுமாறு நெரிப்புண்டு அலற வைத்து, மீண்டும் அவன் நினைந்து ஏத்திப் பரவ, விருப்புடன் வாட்படையைக் கொடுத்து அருளிச் செய்தவர் வீழி மிழலையில் மேவும் விகிர்தனாரே.

65. திருச்சாய்க்காடு

தல விளக்கம்: காவிரி வடகரைத்தலம் 63இல் இது, 9ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. சாயாவனம் என வழங்கப் படுவது, உபமன்யு முனிவர், இந்திரன், ஐராவதம், இயற்பகை நாயனார் வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

மற்றும் இரண்டாம் திருமுறை பதிகம் எண் 38 காண்க.

சுவாமி : சாயாவனேஸ்வரர்

அம்பிகை : குயிலினும் நன்மொழியம்மை, கோஷாம்பாள்

தல மரம் : பைஞ்சாய்

தீர்த்தம் : ஐராவத தீர்த்தம், காவிரி

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

629. தோடுலா மலர்கள் தூவித்
தொடுதெழு மார்க்கண் டேயன்
வீடுநாள் அணுகிற் றென்று
மெய்கொள்வான் வந்த காலன்
பாடுதான் செலலும் அஞ்சிப்
பாதமே சரணம் என்னச்
சாடினார் காலன் மாளச்
சாய்க்காடு மேவி னாரே.

தெளிவுரை: இதழ்களையுடைய மலர்களால் தூவித் தொழுது போற்றும் மார்க்கண்டேயர், உரிய இறுதிக் காலம் நெருங்கி விட்டதென்று கருதி, உயிரைக் கவருமாறு வந்த காலனைக் கண்டு அஞ்சி, ஈசனுடைய திருவடியைப் பற்றிச் சரணம் அடைய, அவர், அக்காலனை மாளும்படி திருப்பாதத்தால் உதைத்தனர். அப்பெருமான் சாய்க்காட்டில் மேவியவரே.

தோடு – இதழ்; வீடு – வீழ்தல், இறுதிக்காலம்; மெய் – மெய்ம்மை யாகிய உயிரைக் குறித்தது; பாடு – பக்கம்; நெருங்கி.

630. வடங்கெழு மலைமத் தாக
வானவர் அசுர ரோடு
கடைந்திட எழுந்த நஞ்சம்
கண்டுபஃ தேவர் அஞ்சி
அடைந்துநுஞ் சரணம் என்ன
அருள்பெரிது உடையர் ஆகித்
தடங்கடல் நஞ்சம் உண்டார்
சாய்க்காடு மேவி னாரே.

தெளிவுரை: மேருமலையை மத்தாகக் கொண்டு, தேவர்கள், அசுரர்களுடன் சேர்ந்து பாற்கடலைக்

கடைந்த போது எழுந்த நஞ்சினைக் கண்டு அஞ்சி, ஈசனை அடைந்து, "தேவரீர் திருவடியே சரணம்" என்று வேண்டித் தொழுதனர். அவ்வமயம், அருளின் வயமாகிய ஈசன், அக்கடல் நஞ்சினை உண்டு அபயம் அளித்தனர். அப்பெருமான், சாய்க்காட்டில் மேவும் நாதரே.

வடங்கெழுமலை – மேருமலை.

631. அரணிலா வெளிய நாவல்
அருநிழ லாக ஈசன்
வரணிய லாகித் தன்வாய்
நூலினாற் பந்தர் செய்ய
முரணிலாச் சிலந்தி தன்னை
முடியுடை மன்னன் ஆக்கித்
தரணிதான் ஆள வைத்தார்
சாய்க்காடு மேவி னாரே.

தெளிவுரை: வெண்ணாவல் மரத்தின் நிழலில் மேவிய ஈசனுக்குப் பந்தர் ஒன்றினைத் தன்வாய் நூலினால் அமைத்த சிலந்தியை, மறுமையில் முடியுடை மன்னனாக விளங்கிய கோச் செங்கட்சோழனாகவும், நாயனாராகவும் வைத்தவர், சாய்க்காட்டில் மேவிய பரமரே.

சிறப்புரை: திருவானைக்காவில் நிகழ்ந்த செய்தியானது இத்திருப்பாட்டில் ஓதப் பெற்றது. இது, எல்லா இடங் களிலும் விரிந்து மேவும் பரம்பொருளின் கருணையை இத்திருத்தலத்தில் ஏத்திக் கூறப்பட்டது. மற்றும் இஃது ஈசன் ஒருவனே யாதலும், அப்பெருமான், ஆங்காங்கு விளங்கும் பக்தர்களுக்கு அருள் வழங்கும் மாண்பினை ஒருங்கிணைத்து ஓதுதலும் ஆயிற்று.

632. அரும்பெருஞ் சிலைக்கை வேட
னாய்விறல் பார்த்தற்கு அன்று
அரம்பெரிது உடைமை காட்டி
ஒள்ளமர் செய்து மீண்டே
வரம்பெரிது உடைய னாக்கி
வாளமர் முகத்தின் மன்னும்
சரம்பொலி தூணி ஈந்தார்
சாய்க்காடு மேவி னாரே.

தெளிவுரை: பெரிய வில்லேந்திய வேடனாகத் தோன்றி பார்த்தனுக்குத் தன்னுடைய வீரத்தைக் காட்டி அருள் நல்கும் போர் செய்து, பெரிய வரங்களை அளித்துப் பாசுபதம் முதலான அத்திரங்களை ஈந்தவர், சாய்க் காட்டில் மேவும் பரமரே.

ஒள் அமர் – அருள் நவிலும் போர்.

633. இந்திரன் பிரமன் அங்கி
எண்வகை வசுக்க ளோடு
மந்திர மறைய தோதி
வானவர் வணங்கி வாழ்த்தத்
தந்திரம் அறியாத் தக்கன்
வேள்வியைத் தகர்த்த ஞான்று
சந்திரற்கு அருள்செய் தாரும்
சாய்க்காடு மேவி னாரே.

தெளிவுரை: இந்திரன், பிரமன் அக்கினி அட்ட வசுக்கள், வேதம் ஓதுபவர்கள், தேவர்கள் ஆகியோர் வணங்கி ஏத்தத் தக்கன் வேள்வி புரிந்தனன். அவ்வேள்வியைத் தகர்த்த போது சந்திரனுக்கு அருள் செய்த பரமன் சாய்க்காட்டில் மேவியவரே. இத்திருப் பாட்டு இந்திரன் பூசித்த தலப் பெருமையையும் சுட்டும்.

சிறப்புரை: ஈசனை முதன்மையாக வைத்துப் புரியாத வேள்வி, நிறைவடையாமையும் அவ்வாறு ஈசனை முதன்மையாகக் கொண்டு வேள்வி புரியும் அறிவைத் தக்கன் பெற்றிலன் என்பதனையும் உணர்த்தும் பாங்கில், "தந்திரம் அறியாத் தக்கன்" என ஓதப் பெற்றது.

தக்க யாகத்தில் பங்கேற்ற சந்திரனைத் தமது திருப்பாதத்தால் தேய்த்த பாங்கினை எடுத்தோதிப் பாதம்பட்ட புனிதத் தன்மையை வியந்து ஏத்துதலும் ஆம். மற்றும் தூய்மை செய்து அருள் தன்மையை மறக்கருணையால் வழங்கும் வகையில், மாணிக்க வாசர், "சோமன் கலை தலை தக்கனையும் எச்சனையும் தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ" என அருளிச் செய்தவாறும் நோக்குக.

அட்டவசுக்கள்: அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன்.

634. ஆமலி பாலு நெய்யும்
　　ஆட்டியர்ச் சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப்
　　பொறாத தன் தாதை தாளைக்
கூர்மழு ஒன்றால் ஓச்சக்
　　குளிர்சடைக் கொனறை மாலைத்
தாமநற் சண்டிக்கு ஈந்தார்
　　சாய்க்காடு மேவி னாரே.

தெளிவுரை: பசுவின் பஞ்சகௌவியத்தைக் கொண்டு பூசித்துக் கொன்றை மலர்மாலை சூட்டி, ஈசனை வழிபட்ட சண்டீசரின் செயலை விரும்பாதவர், அவர் தந்தை. எனவே, சிவபூசைக்கு ஊறு விளைத்த போது அவருடைய காலை வெட்டினார், சண்டீசர்.

தந்தையின் காலை வெட்டிய மகனின் சிவபக்திக்குப் பரிசாக, ஈசன், தமக்கு அர்ப்பணித்த கொன்றை முதலான மலர்களை அப்புதல்வருக்கு அளித்து அருள் வழங்கினார். அவர் சாய்க்காட்டில் மேவிய பரமரே.

635. மையறு மனத்தி னாய
பகீரதன் வரங்கள் வேண்ட
ஐயமில் அமரர் ஏத்த
ஆயிரம் முதம தாகி
வையக நெளியப் பாய்வான்
வந்திழி கங்கை யென்னும்
தையலைச் சடையில் ஏற்றார்
சாய்க்காடு மேவி னாரே.

தெளிவுரை: குற்றமில்லாத மனத்தினனாகிய பகீரதச் சக்கரவர்த்தி, பலகாலங்கள் தவம் இருந்து, தமது மூதாதையர்கள் நரகிடை ஆழாமே நீர்க்கடன் புரிதலையொட்டிக் கங்கையை வேண்டினார். ஆயிரம் முகங்கள் கொண்டு வந்த அக் கங்கையைச் சடை முடியில் ஏற்றுச் சிறிய அளவில் உலகினில் பரவுமாறு அருள் செய்தவர் சாய்க்காட்டில் மேவிய ஈசனே!

மையறு – குற்றம் அற்ற.

636. குவப்பெருந் தடக்கை வேடன்
கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்
துவர்ப்பெருஞ் செருப்பால் நீக்கித்
தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெருங் குருதி சோர
ஒருகணை இடந்துஅங்கு அப்பத்
தவப்பெருந் தேவு செய்தார்
சாய்க்காடு மேவி னாரே.

தெளிவுரை: திரட்சியும் நீண்ட கையும் கொண்ட வேடன் கண்ணப்பர், பெரிய வில்லேந்திச் செருப்புக் காலால் நிருமாலியத்தை அகற்றித் தூயவாய்க் கலசத்தின் நீரால் பூசித்தனர். அவர், ஈசனின் திருவிழியில் குருதி சோரத் தன் கண்ணொன்றைக் கணையால் இடந்து அப்பத் தவப் பெருந் தேவராகச் செய்தவர் சாய்க்காடு மேவிய பரமரே.

637. நக்குலா மலர்பன் னூறு
கொண்டுநன் ஞானத்தோடு
மிக்கபூ சனைகள் செய்வான்
மென்மலர் ஒன்று காணா
தொக்குமென் மலர்க்கண் என்றங்கு
ஒருகணை இடந்தும் அப்பச்
சக்கரம் கொடுப்பர் போலும்
சாய்க்காடு மேவி னாரே.

தெளிவுரை: நன்கு மலர்ந்த மலர்கள் பல நூறு கொண்டு நல்ல ஞானத்தோடு சிவபூசை செய்யும் போது, ஒரு மலர் குறையத் தன் கண்ணை இடந்து அப்பிப் பூசித்த பாங்கினர், திருமால். அவருடைய அன்பினைக் கண்டு இரங்கி, சக்கரப்படை அளித்த ஈசன், சாய்க்காட்டில் மேவிய பெருமானே.

638. புயங்கள்ஐஞ் ஞான்கும் பத்தும்
ஆயகொண்டு அரக்கன் ஓடிச்
சிவன்திரு மலையைப் போக்கத்
திருமலர்க் குழலி யஞ்ச
வியன்பெற எய்தி வீழ
விரல்சிறிது ஊன்றி மீண்டே
சயம்பெற நாமம் ஈந்தார்
சாய்க்காடு மேவி னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இராவணன், இருபது தோள்களும், பத்துத் தலைகளும் கொண்டு ஓடிச் சென்று, சிவபெருமான் வீற்றிருக்கும் திருமலையாகிய கயிலையைப் பெயர்த்தான். அப்போது, உமாதேவி அஞ்ச அதனை நோக்கிய ஈசன், அவ்வரக்கன் மிகை கொண்டவனாய் வீழ்ந்து கலங்குமாறு, தனது திருப்பாத விரலால் சிறிது ஊன்றினார், அவன் ஏத்தி வணங்க, வெற்றி பெறுதற்கு உரிய வாள் படையும், இராவணன் என்னும் பெயரும் விளங்குமாறு செய்தவர், அப்பெருமான். அவர், சாய்க்காட்டில் மேவியிருப்பவரே.

இத்திருப்பதிகத்தில் சிவபூசையின் ஏற்றமும் அதன் பயனும் நன்கு அருளிச் செய்யப்பட்டது. திருப்பாட்டு எண் 629இல் மார்க்கண்டேயரும், 631இல் சிலந்தியும், 633இல் இந்திரனும், 634இல் சண்டீசரும், 636இல் கண்ணப்பரும், 637இல் திருமாலும் சிவபூசை புரிந்த செம்மையினை நனி ஓதுதல் காண்க.

வியன் – மிகுதி.

66. திருநாகேச்சரம்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 29ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. ராகு கிரகத்திற்கு உரியதலம். ஆதிசேஷன், தட்சன், கார்க்கோடகன், கௌதமர், நந்தி, நளன், பராசரர், பகீரதன் முதலானோர் வழிபட்டது. சேக்கிழார் சுவாமிகள் திருப்பணியாற்றிய சிறப்புடையது.

மற்றும் இரண்டாம் திருமுறை பதிகம் எண் 160 காண்க.

சுவாமி : சண்பகாரண்யேஸ்வரர், நாகேஸ்வரர்

அம்பிகை : கிரி குஜாம்பிகை

தல மரம் : சண்பகம்

தீர்த்தம் : சூரிய தீர்த்தம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

639. கச்சைசேர் அரவர்போலும் கறையணி மிடறர்போலும்
பிச்சைகொண் டுண்பர்போலும் பேரரு ளாளர்போலும்
இச்சையால் மலர்கள்தூவி இரவொடு பகலும்தம்மை
நச்சுவார்க் கினியர்போலு நாகஈச் சரவனாரே.

தெளிவுரை: ஈசன், அரவத்தைக் கச்சையாகக் கட்டி இருப்பவர்; நஞ்சினைத் தேக்கிக் கறையுடைய கண்டத்தை உடையவர்; கபாலம் ஏந்திப் பிச்சை கொண்டு உண்பவர்; அடியவர்களுக்குப் பேரருளை வழங்குபவர்; பெரு விருப்புடன் மலர்கள் தூவிப் போற்றி, இரவும் பகலும் வழிபடுகின்ற அடியவர் களுக்கு இனிமையானவர். அப்பெருமான் நாகேச் சரத்தில் வீற்றிருப்பவரே.

640. வேடுறு வேடராகி விசயனோடு எய்தார் போலும்
காடுறு பதியர்போலும் கடிபுனற் கங்கை நங்கை
சேடெறி சடையர் போலும் தீவினை தீர்க்கவல்ல
நாடறி புகழர்போலு நாகஈச் சரவனாரே.

தெளிவுரை: ஈசன், வேடுவத் திருக்கோலம் பூண்டு அருச்சுனரோடு போர் செய்தவர்; சுடுகாட்டினை இடமாகக் கொண்டவர்; கங்கையைச் சடையில் ஏற்றுத் திகழ்பவர்; பக்தர்களின் தீய வினைகளைத் தீர்க்க வல்லவர்; உலகெலாம் புகழ்ந்து ஏத்த

விளங்குபவர். அவர் நாகேச்சரத்தில் மேவும் பெருமானே.

641. கற்றுணை வில்லதாகக் கடியரண் செற்றார் போலும்
பொற்றுணைப் பாதர்போலும் புலியதள் உடையர்போலும்
சொற்றுணை மாலைகொண்டு தொழுதெழு
வார்கட்கெல்லாம்
நற்றுணை யாவர்போலு நாகஈச் சரவனாரே.

தெளிவுரை: ஈசன், மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கியவர்; பொன் போன்ற மலரடி கொண்டு அருள் புரிபவர்; புலித் தோலை உடுத்தியவர்; புகழ்ப் பாடல்களைப் பாடித் தொழுது போற்றும் திருத்தொண்டர்களுக்கு, நற்றுணையாக விளங்குபவர். அப்பெருமான் திருநாகேச்சரத்தில் வீற்றிருப்பவரே.

சிறப்புரை: மலர் கொண்டு அருச்சித்தலும், ஆன் ஐந்து கொண்டு பூசித்தலும், திருவடியை வணங்கி நிற்றலும் ஆகியன வழிபாடாதல் போன்று, சொற்றுணையாய் விளங்கும் புகழ்ப் பாடல்களை ஓதுதல் என்பது, வழிபாடாதலும், அவ்வாறு ஏத்தி வழிபடுபவர்களுக்கு, ஈசன் நற்றுணையாய் விளங்கி அருள் புரிதலும், இத்திருப்பாட்டில் ஓதுதல் ஆயிற்று. இத்தன்மையில், "சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை முந்தை வினை முழுதும் மோய உரைப்பன் யான்" எனவும், "இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்" எனவும், "பழுது செய்வேனை விடேல் உடையாய் உன்னைப் பாடுவனே" (நீத்தல் விண்ணப்பம்–44) எனவும், "சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை" எனவும் மாணிக்கவாசகர் அருளிச் செய்த, அமுத வாக்காலும் காண்க.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், "தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும் சார்வினும் தொண்டர் தருகிலாப் பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர் காள்'' ("திருப்புகலூர்த் திருப்பதிகம் 1) என அருளியமையும் காண்க.

கற்றுணைவில் – மேருமலைவில்.

642. கொம்பனார் பாகர்போலும் கொடியுடை விடையர்போலும்
செம்பொனார் உருவர்போலும் திகழ்திரு நீற்றர்போலும்
எம்பிரான் எம்மையாளும் இறைவனே என்றுதம்மை
நம்புவார்க்கு அன்பர்போலு நாகஈச் சரவனாரே.

தெளிவுரை: பூங்கொம்பு போன்ற உமாதேவியைப் பாகமாகக் கொண்டு மேவும் ஈசன், இடபக் கொடி உடையவர்; செம்பொன் போன்ற திருமேனி உடையவர்; திருநீறு தரித்தவர். எம் இறைவனே! எம் தலைவனே! எம்மை ஆளுடைய பெருமானே! என, ஏத்தி வழிபடும் அடியவர்களுக்கு அன்புடையவர். அவர் திருநாகேச்சரத்தில் மேவும் பரமரே.

கொம்பனாள் – உமாதேவி.

643. கடகரி உரியர்போலும் கனல்மழு வாளர்போலும்
படஅரவு அரையர்போலும் பாரிடம் பலவும்கூடிக்
குடமுடை முழவம் ஆர்ப்பக் கூளிகள் பாட நாளும்
நடநவில் அடிகள்போலு நாகஈச் சரவனாரே.

தெளிவுரை: ஈசன், யானையின் தோலை உரித்தவர்; கனல் உமிழும் வெம்மையுடைய மழுப்படை உடையவர்; அரவத்தை அரையில் கட்டியவர்; பூதகணங்கள் யாவும் கூடி குடமுழவு ஆர்க்கக் கூளிகள் இசைத்துப் பாட, நாள்தோறும் நடனம் நவிலும்

பெற்றியுடையவர். அவர் நாகேச்சரத்தில் வீற்றிருக்கும் பரமரே.

644. **பிறையுறு சடையர்போலும் பெண்ணொரு பாகர்போலும்**
மறையுறு மொழியர்போலும் மால்மறை யவன்றனோடும்
முறைமுறை அமரர்கூடி முடிகலால் வணங்க நின்ற
நறவமர் கழலர் போலு நாகஈச் சரவனாரே.

தெளிவுரை: ஈசன், பிறைச்சந்திரனைச் சடையில் தரித்தவர்; உமாதேவியைப் பாகம் கொண்டு மேவுபவர்; வேதங்களை ஓதும் சீலர்; திருமால், பிரமன் மற்றும் தேவர்கள் முறைப்படி கூடித் தலை தாழ்த்தி வணங்கும் தேன் மணம் கமழும் கழலுடையவர். அவர், நாகேச்சரத்தில் வீற்றிருக்கும் பரமரே.

645. **வஞ்சகர்க்கு அரியர்போலும் மருவினோர்க்கு எளியர்போலும்**
குஞ்சரத்து உரியர் போலும் கூற்றினைக் குமைப்பர் போலும்
விஞ்சையர் இரியஅன்று வேலைவாய் வந்தெழுந்த
நஞ்சணி மிடற்றர்போலு நாகஈச் சரவனாரே.

தெளிவுரை: ஈசன், கரவு கொண்டு மேவும் சூழ்ச்சி யுடைய வஞ்சகர்களுக்கு எட்டாதவர்; அன்புடன் சார்ந்து ஏத்துபவர்களுக்கு எளிமையானவர்; யானையின் தோலை உரித்தவர்; காலனை அழித்தவர்; தேவர்கள் கலங்குமாறு தோன்றிய கடல் நஞ்சினைத் தன் மிடற்றினில் தேக்கி வைத்து, நீலகண்டராக விளங்குபவர். அப்பெருமான், நாகேச்சரத்தில் வீற்றிருக்கும் பரமரே.

குஞ்சரம் – யானை.

646. போகமார் மோடி கொங்கை புணர்தரு புனிதர் போலும்
வேகமார் விடையர் போலும் வெண்பொடி யாடுமேனிப்
பாகமால் உடையர் போலும் பருப்பத வில்லர் போலும்
நாகநாண் உடையர்போலு நாகஈச் சரவனாரே.

தெளிவுரை: *ஈசன், உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர், இடப வாகனத்தை உடையவர்; திருவெண்ணீறு பூசிய திருமேனியர்; திருமாலைப் பாகமாக உடையவர்; மேரு மலையை வில்லாகக் கொண்டவர், வாசுகி என்ற பாம்பை அவ் வில்லுக்கு ஏற்ற நாணகக் கொண்டவர். அவர் நாகேச்சரத்தில் மேவும் பரமரே.*

பருப்பத வில் – மேருமலைவில்.

647. கொக்கரை தாளம்வீணை பாணிசெய் குழகர்போலும்
அக்கரை அணிவர்போலும் ஐந்தலை அரவர்போலும்
வக்கரை அமர்வர்போலும் மாதரைமையல் செய்யும்
நக்கரை உருவர்போலு நாகஈச் சரவனாரே.

தெளிவுரை: *ஈசன், கொக்கரை, தாளம், வீணை என மேவும் கருவிகள் முழங்கத் திருக்கூத்துப் புரிபவர்; எலும்பு அணிபவர்; ஐந்து தலையுடைய அரவத்தைக் கட்டியுள்ளவர்; திருவக்கரை என்னும் திருத்தலத்தில் வீற்றிருப்பவர்; தாருகவனத்து மகளிர், மையல் கொள்ளுமாறு திரிந்து பலியேற்றவர். அவர் நாகேச் சரத்தில் விளங்கும் பரமரே.*

கொக்கரை – வாத்தியக் கருவி.

648. வின்மையால் புரங்கள்மூன்றும் வெந்தழல் விரித்தார்
போலும்
தன்மையால் அமரர்தங்கள் தலைவர்க்கும் தலைவர்
போலும்

வன்மையால் மலையெடுத்தான் வலியினைத் தொலை
வித்தாங்கே
நன்மையால் அளிப்பர் போலுநாக ஈச் சரவனாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், மேருமலையை வில்லாகக் கொண்டு மூன்று புரங்களையும் நெருப்பில் எரிந்து சாம்பலாகு மாறு செய்தவர்; தனது அருள் வண்ணத்தால் தேவர் களின் தலைவருக்கும் தலைவராகியவர்; தனது வலிமை கொண்டு மலை எடுத்த இராவணனுடைய வலிமையை அழித்தும், அவன் ஏத்தி வணங்க, நன்மையும் அளித்தவர். அவர் நாகேச்சரத்தில் வீற்றிருக்கும் பரமரே.

வின்மை – வில்லின் வீரம், மேருமலைவில்; தன்மை – அருள் வண்ணம்.

67. திருக்கொண்டீச்சரம்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத்தலம் 127இல், இது 72ஆவது திருத்தலம். திருநாவுக்கரசர் பாடல் பெற்றது. திருக்கண்டீஸ்வரம் என வழங்கப்படுகிறது. வில்வாரண்யம் என்றும் பெயர் உண்டு. உமாதேவியார் பசு வடிவத்தில் ஈசனைப் பூசித்த தலம்.

சுவாமி : பசுபதீஸ்வரர்

அம்பிகை : சாந்த நாயகி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : க்ஷீர புஷ்கரணி

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

649. வரைகிலேன் புலன்கள் ஐந்தும்
வரைகிலாப் பிறவி மாயப்
புரையிலே யடங்கி நின்று
புறப்படும் வழியும் காணேன்
அரையிலே மிளிரு நாகத்து
அண்ணலே அஞ்சல் என்னாய்
திரையுலாம் பழன வேலித்
திருக்கொண் டீச் சரத்து ளானே.

தெளிவுரை: அலைகள் மேவும் நீர் நிலைகளும் வயல்களும் விளங்கும் திருக்கொண்டீச்சரத்தில் வீற்றிருக்கும் ஈசனே! ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி வைக்காதவனாகவும், எல்லையற்ற பிறவிப் பிணியில் நைபவனாகவும், மாயையில் அழிந்து குற்றம் உடைய வனாகி, அதிலிருந்து வெளியேறும் வழி காணாத வனாகவும் உள்ளேன். ஒளிமிக்க நாகத்தை அரையில் கட்டி விளங்கும் அண்ணலே! அஞ்சாதே என உரைத்து அருள்வீராக.

650. தொண்டனேன் பிறந்து வாளா
தொல்வினைக் குழியில் வீழ்ந்து
பிண்டமே சுமந்து நைந்து
பேர்வதோர் வழியும் காணேன்
அண்டனே அண்ட வாணா
அறிவனே அஞ்சல் என்னாய்
தெண்டிரைப் படினம் சூழ்ந்த
திருக்கொண்டீச் சரத்து ளானே.

தெளிவுரை: திருக்கொண்டீச்சரத்தில் வீற்றிருக்கும் ஈசனே! தொண்டனாகிய நான் வினைக்குழியில் வீழ்ந்து, இவ்வுடலைச் சுமந்து, இதிலிருந்து விடுதலை

பெறும் வழியைக் காணாது வருந்துகின்றேன். அண்டமாகவும், அண்டத்தில் திகழ்பவராகவும், ஞானமாகவும் விளங்கும் பெருமானே! அஞ்சாதே என உரைத்து அருள் புரிவீராக.

651. கால்கொடுத்து எலும்பு மூட்டிக்
கதிர்நரம்பு ஆக்கை யார்த்துத்
தோலுடுத்து உதிரம் அட்டித்
தொகுமயிர் மேய்ந்த கூரை
ஓலெடுத்து உழைஞர் கூடி
ஒளிப்பதற்கு அஞ்சு கின்றேன்
சேலுடைப் பழனம் சூழ்ந்த
திருக்கொண்டீச் சரத்து ளானே.

தெளிவுரை: சேல்கள் விளங்கும் வயல்கள் சூழ்ந்த திருக்கொண்டீச்சரத்தில் வீற்றிருக்கும் ஈசனே! கால்கள் அமைத்து எலும்புகளைச் சேர்த்து நரம்புகளைக் கொண்டு பிணித்து, உடம்பு என்னும் வடிவம் அமைத்து, அதில் தோலும், உதிரமும் சேர வைத்து, அதன் மீது மயிர்கள் கொண்டு வேய்ந்து காணும் தன்மையது! இந்த சரீரம். இதனை, அருகில் விளங்கும் உறவினர்கள் கூடி "ஓலம் இட்டு ஒரு காலத்தில் மண்ணிட்டு மறைப்பர். அதனை எண்ணி நான் அஞ்சுகின்றேன். தேவரீர், அஞ்சாதே என உரைத்து அருள் புரிவீராக! என்பது வேண்டுதல் குறிப்பாயிற்று.

சிறப்புரை: இத் தேகமானது மறையும் தன்மைக்கு உரியது எனவும், அதனைப் பொருட்டாகக் கருதி, இறைவனை ஏத்தாது இருத்தல் நன்றல்ல என்பதும், இவண் குறிப்பால் உணர்த்துதல் ஆயிற்று. இத் தன்மையில் இத் தேகத்தின் இயல்பினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

பரிந்த சுற்றமும் மற்றுவன் துணையும்
 பலரும் கண்டழுது எழஉயிர் உடலைப்
பிரிந்து போம்இது நிச்சயம் அறிந்தால்
 பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து
கருந்தடங் கண்ணி பங்கனை உயிரைக்
 கால காலனைக் கடவுளை விரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருள்
 சிவக்கொழுந் தினைச் சென்றடை மனனே

என அருளிச் செய்தவாறும் காண்க.

இத்தேகத்தின் புன்மையினை, மாணிக்கவாசகர், "பொத்தை ஊன் சுவர் புழுப்பொதிந்து உளுத்து அசும்பு ஒழுகிய பொய்க் கூரை, இத்தை மெய்யெனக் கருதி நின்று இடர்க்கடல் சுழிதலைப் படுவேனை" *(அதிசயப் பத்து. 7)* என, அருளிச் செய்தவாறும் காண்க.

652. கூட்டமா ஐவர் வந்து
 கொடுந்தொழில் குணத்த ராகி
ஆட்டுவார்க்கு ஆற்ற கில்லேன்
 ஆடரவு அசைத்த கோவே
காட்டிடை அரங்க மாக
 ஆடிய கடவு ளேயோ
சேட்டிரும் பழன வேலித்
 திருக் கொண்டீச் சரத்து ளானே.

தெளிவுரை: வளமையான வயல்களையுடைய திருக் கொண்டீச்சரத்தில் வீற்றிருக்கும் ஈசனே! ஐம்புலன்கள் யாவும் ஒன்று சேர்ந்து, கொடிய குணத்தை உடையவர் களாகி என்னை ஆட்டுகின்றனர். அவர்களால் நான் வருந்துகின்றேன். ஆடுகின்ற அரவத்தை அரையில் கட்டிய தலைவனே! மயானத்தை அரங்காகக்

கொண்டு நடனம் புரியும் கடவுளே! என்னை அஞ்சேல் என்று ஆட்கொண்டு அருள் புரிவீராக.

சேடு – பெருமை, வளமை.

653. பொக்கமாய் நின்ற பொல்லாப்
புழுமிடை முடைகொள் ஆக்கை
தொக்கு நின்று ஐவர் தொண்ணூற்று
அறுவரும் துயக்கம் எய்த
மிக்குநின்று இவர்கள் செய்யும்
வேதனைக்கு அலந்து போனேன்
செக்கரே திகழு மேனித்
திருக்கொண்டீச் சரத்து ளானே.

தெளிவுரை: இந்த தேகமானது, பொய்த்தன்மை உடையது; அழியக் கூடியது; முடை நாற்றம் கொண்டு மறையக் கூடியது. இதனில் ஐம்புலன்கள் நிலைத்து நின்று துன்பத்தை விளைவிக்கின்றனர். 96 வகையால் மேவி சோர்வைத் தருகின்ற, இவர்களுடைய செயல் கண்டு நான் கலங்கினேன். செம்மேனியராகத் திகழும் ஈசனே! திருக் கொண்டீச்சரத்தில் மேவும் பெருமானே! அருள் புரிவீராக!

96 வகையான தத்துவங்கள் குறித்த விளக்கங் களைப் பாடல் வ.எண் 252 மற்றும் 520இல் காண்க.

பொக்கம் – பொய்த்தன்மை; துயக்கம் – சோர்வு.

654. ஊனுலா முடைகொள் ஆக்கை
உடைகலம் ஆவ தென்றும்
மானுலா மழைக்க ணார்தம்
வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
நானெலாம் இனைய கால
நண்ணிலேன் எண்ணம் இல்லேன்

தேனுலாம் பொழில்கள் சூழ்ந்த
திருக்கொண்டீச் சரத்து ளானே.

தெளிவுரை: ஊன் பெருகிப் புலால் நாறும் தேகமானது, உடைந்த மரக்கலம் போன்று சிதறக் கூடியது, அதனை அறிகிலேன். மான் போன்ற விழியுடைய மாதருடன் வாழ்வதை மெய்யென்று எண்ணி இவ்வளவு காலமும் தேவரீரை நண்ணிலேன். நண்ணி உய்வு பெற வேண்டும் என்று எண்ணவும் இல்லை. தேன் மணம் கமழும் பொழில் சூழ்ந்த திருக்கொண்டீச்சரத்துள் மேவும் ஈசனே! அருள் புரிவீராக!

முடை – புலால் நாற்றம்.

655. சாண்இரு மடங்கு நீண்ட
சழக்குடைப் பதிக்கு நாதர்
வாணிகர் ஐவர் தொண்ணூற்று
அறுவரும் மயக்கம் செய்து
பேணிய பதியி னின்று
பெயரும்போது அறிய மாட்டேன்
சேணுயர் மாட நீடு
திருக்கொண்டீச் சரத்து ளானே.

தெளிவுரை: இத்தேகமானது ஒரு சாணுக்கு இரு மடங்கு எனப்படும் முழம் என உடையது. இதற்குத் தலைவர் உயிர். ஆயினும் தமக்கு ஒவ்வியவாறு ஐம்புலன்கள் தம்மையே பெருக்கிக் கொண்டும் 96 பேரும் மயக்கத்தைத் தந்தும் இருக்க, அவர்கள் இவ்வுடலிலிருந்து பெயரும் போது நான் அறிய மாட்டேன். திருக்கொண்டீச்சரத்துள் மேவும் ஈசனே! தேவரீர் அருள் புரிவீராக.

சிறப்புரை: ஒரு சாணின் இருமடங்கு ஒரு முழம் ஆகும். இத்தன்மையில் "ஒரு முழம் உள்ள குட்டம் ஒன்பது

துளையுடைத்தாய்'' என ஓதப் பெறும் நாவரசர் திருவாக்கும் (பாட்டு வ.எண் 435) காண்க.

ஐம்புலன்கள் யாவும் இவ்வுடலுக்குத் தலைவனாக உள்ள ஆன்மாவுக்குக் கட்டுப்படாத தன்மையானது இத்திருப்பாட்டில் நன்கு சுட்டப் பெற்றது. உயிர்க்கு உறுதியைத் தரும் வகையில் மேவாது, தன் விருப்பம் போல் இசைந்திருந்து இறுதியில் செயலற்று உடலானது அழிதல் இவண் உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவிடை மருதூர் திருப்பதிகம் வாயிலாக

அழிப்பர் ஐவர் புரவுடை யார்கள்
ஐவரும் புர வாசற ஆண்டு
கழித்துக் காற்பெய்து போயின பின்னைக்
கடைமுறை உனக்கே பொறை ஆனேன்

என அருளிச் செய்தவாறும் காண்க.

656. பொய்ம்மறித் தியற்றி வைத்துப்
புலால்கமழ் பண்டம் பெய்து
பைம்மறித் தியற்றி யன்ன
பாங்கிலாக் குரம்பை நின்று
கைம்மறித் தனைய வாவி
கழியும் போது அறிய மாட்டேன்
செந்நெறிச் செலவு காணேன்
திருக்கொண்டீச் சரத்து ளானே.

தெளிவுரை: பொய்த் தன்மையில் நின்று புலால் கமழும் இவ்வுடம்பின் வளமைக்காகப் பலவும் செய்து பேணி, இறுதியில் இத்தேகமானது கெட்டுச் சீரழிந்து, ஆவியானது கைம்மறித்து, இத்தேகமானது பயனற்றது எனக் கருதி வெளியேறும் போது, நான் அறிய

மாட்டேன்; செந்நெறியைப் பேணியதில்லை; அதனைச் சேர்க்கும் நெறியும் காணதவனானேன். திருக்கொண்டீச்சரத்தில் மேவும் ஈசனே! தேவரீர் அருள் புரிவீராக.

சிறப்புரை: இத்தேகமானது வளரும் தன்மையில் செய்தலும், அதன் ஊட்டமும் அழியக் கூடியன வாகும் என்பதும், அதனால் உயிருக்கு எத்தகைய செம்மையும் கூடப்பெறா தென்பதும், ஓதப் பெறுவ தாயிற்று. உயிருக்குச் செம்மை நல்கும் செயலை ஆற்ற வேண்டும் என்பது குறிப்பால் ஓதப் பெற்றது.

657. பாலனாய்க் கழிந்த நாளும்
 பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
 மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும்
 குறிக்கோள் இலாது கெட்டேன்
சேறுலாம் பழன வேலித்
 திருக்கொண்டீச் சரத்து ளானே.

தெளிவுரை: திருக்கொண்டீச்சரத்தில் மேவும் ஈசனே! இளமைக் காலத்தில் அறியாமையில் குழந்தை, சிறுவன், பாலன் என்னும் பெயரில் காலத்தைக் கழித்தேன். பின்னர் மாதருடன் குலவிக் காலத்தைக் கழித்தேன். மெலிவும் மூப்பும் வந்து கோலூன்றி நடக்கும் முதியவனாய் நாளைக் கழித்தேன். இத்தனை காலமும் தேவரீரை ஏத்தி வணங்கும் குறிக்கோள் இன்றிக் காலத்தை வீணாக்கினேனே!

658. விரைதரு கருமென் கூந்தல்
 விளங்கிழை வேல்ஒண் கண்ணாள்

வெருவர இலங்கைக் கோமான்
விலங்கலை எடுத்த ஞான்று
பருவரை யனைய தோளும்
முடிகலும் பாறி வீழத்
திருவிரல் ஊன்றி னானே
திருக்கொண்டீச் சரத்து ளானே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கருமையான நறுமணம் கமழும் கூந்தலை உடைய உமாதேவி வெருவுமாறு இராவணன், கயிலை மலையை எடுத்த போது, மலை போன்ற அவ்வரக்கனுடைய தோளும் முடிகளும் நலிந்து வீழுமாறு திருப்பாத விரலை ஊன்றியவர் திருக்கொண்டீச்சரத்தில் வீற்றிருக்கும் ஈசனே.

விலங்கல் – கயிலை மலை.

68. திருவாலங்காடு

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம் 32இல் இது, 15ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. வடாரண்யம் என்னும் பெயரும் உண்டு. இறைவன் காளியுடன் நடனமாடிய தலம். ஈசன் உருத்திர தாண்டவம் புரிந்த பதி. ஐந்து சபைகளுள் இது இரத்தின சபை. கார்க்கோடகன், சுநந்த முனிவர் பூசித்தது. (வடம் – ஆல்)

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 45 காண்க.

சுவாமி : தேவர் சிங்கப்பெருமான், வடாரண்யேஸ்வரர், ஆலங்காட்டு அப்பர், ஊர்த்துவதாண்டவேஸ்வரர்

அம்பிகை : வண்டார் குழலி

தல மரம் : பலா, ஆல்

தீர்த்தம் : முத்தி தீர்த்தம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

659. வெள்ளநீர்ச் சடையர் போலும்
விரும்புவார்க்கு எளியர்போலும்
உள்ளுளே உருகி நின்றங்கு
உகப்பவர்க்கு அன்பர்போலும்
கள்ளமே வினைகள் எல்லாம்
கரிசறுத் திடுவர் போலும்
அள்ளல்அம் பழனைமேய
ஆலங்காட்டு அடிகளாரே.

தெளிவுரை: *சிவபெருமான், கங்கையைச் சடைமுடியில் தரித்துள்ளவர்; விரும்பும் அன்பர்களுக்கு எளியவர்; உள்ளத்தில் பதித்து உருகிப் போற்றும் அன்பர் களுக்குச் சிவானந்தத்தைப் பருகுமாறு புரிபவர்; கண்ணுக்குப் புலனாகாமல் மறைந்திருந்து துன்புறுத்தும் வினைகளை வேரறுப்பவர். அவர், வயல் வளம் பெருகி ஓங்கும் பழையனூர் மேய ஆலங்காட்டு அடிகளாரே.*

சிறப்புரை: *இத்திருத்தலத்திலிருந்து 2கி.மீ தொலைவில் பழையனூர் என்னும் சிற்றூரில் 70 வேளாளர்கள் தமது வாக்குறுதியைக் காக்குமாறு தீயில் புகுந்து உயிர் நீத்தனர். ஆங்கு உள்ள இறைவன் – அம்மையப்பர் எனவும், தேவி – ஆனந்த வல்லி எனவும் திருநாமம் கொண்டு விளங்குகின்றனர். அத்திருத்தலத்தின் சிறப்பு தோன்ற பழனை என உணர்த்தப் பெற்றது. இச்சிறப்பினைச் சுந்தரர் தேவாரத்திலும் காணலாம்.*

பழனை – பழையனூர்.

660. செந்தழலுருவர் போலும்
சினவிடை யுடையர் போலும்
வெந்தவெண் ணீறு கொண்டு
மெய்க்கணிந் திடுவர் போலும்
மந்தமாம் பொழில் பழனை
மல்கிய வள்ளல் போலும்
அந்தமில் அடிகள் போலும்
ஆலங்காட்டு அடிகளாரே.

தெளிவுரை: சிவபெருமான், செந்தழல் போன்ற திருமேனியர்; இடபவாகனம் உடையவர்; திருநீற்றைத் திருமேனியில் பூசியவர்; தென்றல் வீசும் பொழில் விளங்கும் பழையனூரில் விளங்கும் வள்ளல்; அந்தம் இல்லாதவர். அவர் ஆலங்காட்டு அடிகளாரே.

661. கண்ணினாற் காம வேளைக்
கனல்எழ விழிப்பர் போலும்
எண்ணிலார் புரங்கள் மூன்றும்
எரியுணச் சிரிப்பர் போலும்
பண்ணின்ஆர் முழவம் ஓவாப்
பைம்பொழில் பழனை மேய
அண்ணலார் எம்மை யாளும்
ஆலங்காட்டு அடிக ளாரே.

தெளிவுரை: சிவபெருமான், நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்துச் சாம்பலாக்கியவர்; தன்னைக் கருதி ஏத்தாத முப்புர அசுரர்கள், எரிந்து சாம்பலாகு மாறு முறுவல் செய்தவர்; பண்ணில் திகழும் முழவம் ஒலிக்கும் பழையனூரில் மேவிய அண்ணலார். அவர் எம்மை ஆளும் ஆலங்காட்டு அடிகளாரே.

சிறப்புரை: முப்புரங்களை எரிக்கும் காலத்தில் பலரும் உடனிருந்து சிவபுண்ணியம் ஆற்றும் போது, ஈசன் புன்

முறுவல் புரிய, அதிலிருந்து நெருப்புத் தோன்றி அப்புரங்களை எரித்தது என்பதும் புராண வரலாறு.

662. காறிடு விடத்தை யுண்ட
கண்டர்எண் தோளர் போலும்
தூறிடு சுடலை தன்னிற்
சுண்ணவெண் ணீற்றர் போலும்
கூறிடும் உருவர் போலும்
குளிர்பொழிற் பழனை மேய
அண்ணலார் எம்மை யாளும்
ஆலங்காட்டு அடிக ளாரே.

தெளிவுரை: சிவபெருமான், கொல்லும் தன்மையுடைய கரிய விடத்தை உட்கொண்டு, கண்டத்தில் தேக்கியவர்; எட்டுத் தோள்களை உடையவர்; சுடலையில் திருநீற்றினராய்த் திகழ்பவர்; உமா தேவியை ஒரு பாகமாகக் கொண்டு அர்த்தநாரியாய் விளங்குபவர். அவர், பொழில் திகழும் பழையனூரில் மேவும் அண்ணலாய் விளங்கும் எம்மை ஆளும் ஆலங்காட்டு அடிகளாரே.

663. பார்த்த னோடு அமர்பொருது
பத்திமை காண்பர் போலும்
கூர்த்தவாய் அம்பு கோத்துக்
குணங்களை அறிவர் போலும்
போர்த்துமோர் ஆவ நாழி
அம்பொடும் கொடுப்பர் போலும்
தீர்த்தமாம் பழனை மேய
திருவாலங் காட னாரே.

தெளிவுரை: சிவபெருமான், பார்த்தனுடன் போர் புரிந்து அவனுடைய சிவபக்தியைக் காண்பவராவார்; அவனைக் குறிவைத்து அம்பு தொடுத்து, அவன்

குணங்களை அறிபவர்; மீண்டும் அம்பும் அத்திரங் களும் கொடுத்தருள்பவர். அவர், தீர்த்த மகிமை விளங்கத் திகழும் பழையனூரில் மேவிய திருவாலங் காடனாரே.

திருவாலங்காடனார் – ஈசன் திருப்பெயரைச் சுட்டிற்று. ஊர்ப் பெயரும் சேர்ந்து விளங்கிற்று.

664. வீட்டினார் சுடுவெண் ணீறு
மெய்க்குஅணிந் திடுவர் போலும்
காட்டிநின் றாடல் பேணும்
கருத்தினை உடையர் போலும்
பாட்டினார் முழவம் ஓவாப்
பைம்பொழில் பழனை மேயார்
ஆட்டினார் அரவந் தன்னை
ஆலங்காட்டு அடிக ளாரே.

தெளிவுரை: சிவபெருமான், முத்தியுலகத்தின் தலைவர்; திருவெண்ணீற்றினைத் திருமேனியில் அணிந்தவர்; சுடுகாட்டில் நின்று ஆடல் மேவும் கருத்தினர்; இசைப் பாடலில் விருப்பம் உடையவர்; முழவொலி ஓயாது மேவும் பொழில் திகழும் பழையனூரில் மேவுபவர்; அரவத்தை அணிந்து ஆட்டுபவர். அவர் ஆலங் காட்டில் வீற்றிருக்கும் அடிகளாரே.

வீட்டினார் – வீட்டுலகத்திற்கு (முத்தி) உரியதலைவர்; இறந்தவர்களின் (சாம்பலை அணிபவர்) எனலும் ஆம்.

665. தாளுடைச் செங்கமலத்
தடங்கள்சே வடியர் போலும்
நாளுடைக் காலன் வீழ
உதைசெய்த நம்பர் போலும்
கோளுடைப் பிறவி தீர்ப்பார்
குளிர்பொழிற் பழனைமேய

ஆளுடை அண்ணல் போலும்
ஆலங்காட்டு அடிக ளாரே.

தெளிவுரை: சிவபெருமான், செந்தாமரை போன்ற பெருமையுடைய திருவடி உடையவர்; வாழ்நாள் நீண்டு உடையவனாகிய காலனை வீழுமாறு செய்து மாய்த்த நம்பர்; வினையால் கொள்ளப்படும் பிறவிப் பிணியைத் தீர்த்தருள்பவர்; குளிர்ந்த பொழில் விளங்கும் பழயனூரில் மேவுபவர்; என்னை ஆளுடைய அண்ணல். அவர் ஆலங்காட்டில் வீற்றிருக்கும் அடிகளாரே.

666\. கூடினார் உமைத னோடே
குறிப்புடை வேடம் கொண்டு
சூடினார் கங்கை யாளைச்
சுவறிடு சடையர் போலும்
பாடினார் சாம வேதம்
பைம்பொழிற் பழனை மேயார்
ஆடினார் காளி காண
ஆலங்காட்டு அடிக ளாரே.

தெளிவுரை: சிவபெருமான், உமாதேவியைக் கூடி அம்மையப்பராகிய தன்மையில், அருள் குறிப்பினராய் மேவுபவர்; கங்கையைச் சடை முடியில் தரித்தவர்; சாமவேதத்தை விழைந்து பாடியவர்; பைம்பொழில் விளங்கும் பழையனூரில் மேவியவர்; காளி தேவி காணுமாறு திருநடனம் புரிந்தவர். அவர், ஆலங் காட்டில் வீற்றிருக்கும் அடிகளாரே.

சிறப்புரை: ஈசன், உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்கி உயிர்களுக்குச் சிவானந்தத்தை விளைவித்தல் "குறிப்புடை வேடம்" என உணர்த்தப்பட்டது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "தொழுமின்!

எங்கோன், எம் கூத்தன், தேவியும் தானும் வந்து எம்மை ஆளச் செம்பொன் செய் சுண்ணம் இடித்து நாமே!" என அருளிச் செய்தவாறும் காண்க.

பெருவெள்ளப் பிரவாகமாகும் கங்கை, ஈசனின் பேராற்றலால் சடை முடியின் ஒரு திரியின் கண் வற்றியது என்னும் குறிப்பானது, "கங்கையினைச் சுவறிடு சடையர்" என உரைக்கப் பெற்றது.

காளிதேவி நடனம் புரிந்த இத்திருத்தலத்தின் வரலாறும் ஈசன் நடனம் புரிந்து இரத்தின சபாபதியாக விளங்குகின்ற வரலாறும் "ஆடினார் காளி காண ஆலங்காட்டு அடிகளாரே" என ஓதப் பெற்றது.

சுவறிடுதல் – வற்றுதல்.

667. வெற்றரைச் சமண ரோடு
விலையுடைக் கூறை போர்க்கும்
ஒற்றரைச் சொற்கள் கொள்ளார்
குணங்களை உகப்பர் போலும்
பெற்றமே உகந்தங்கு ஏறும்
பெருமையை உடையர் போலும்
அற்றங்கள் அறிவர் போலும்
ஆலங்காட்டு அடிக ளாரே.

தெளிவுரை: சிவபெருமான், சமணரும் சாக்கியரும் கூறும் பொருத்தமற்ற உரைகளை ஏற்காதவர்; சத்துவ குணங்களை உகந்து ஏற்பவர்; இடப வாகனத்தை உகந்து ஏறும் பெருமையுடையவர்; யாருக்கும் தெரியாதவாறு மனத்தின் உள்ளே மறைக்கப்படும் குற்றங்களையும் அறிபவர். அவர், ஆலங்காட்டில் வீற்றிருக்கும் அடிகளே.

சிறப்புரை: ஈசன், உள்ளம் புகுந்து யாவும் அறிகின்ற பாங்கானது "அற்றங்கள் அறிவர்" என ஓதப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "கடலின் திரையது போல் வரு கலக்க மலம் அறுத்து என் உடலும் எனது உயிரும் புகுந்து ஒழியா வண்ணம் நிறைந்தான்" (உயிருண்ணிப் பத்து 6) என அருளிச் செய்தவாறும் நோக்குக.

ஒற்றரைச் சொற்கள் – மெய்ம்மை யற்றதும், பொருளற்றதும் ஆகிய பொய்யுரை; அற்றங்கள் – வஞ்சனை, குற்றம், துன்பம்; அற்றங்கள் அறிவர் – அடியவரின் துன்பத்தை அறிபவர்.

668. மத்தனாய் மலையெ டுத்த
அரக்கனைக் கரத்தோடு ஒல்க
ஒத்தினார் திருவி ரலால்
ஊன்றியிட்டு அருள்வர் போலும்
பத்தர்தம் பாவம் தீர்க்கும்
பைம்பொழிற் பழனை மேய
அத்தனார் நம்மை ஆள்வார்
ஆலங்காட்டு அடிகளாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இராவணன், மதியற்றவனாய்க் கயிலை மலையைப் பெயர்க்க, அவனை, அதன்கண் அழுந்து மாறு திருவிரலால் ஊன்றி நெரி செய்து, பின்னர் அவ்வரக்கன் ஏத்திப் போற்ற, அருள் புரிந்தவர். அவர், பத்தர்களுடைய பாவத்தைத் தீர்க்கும் பழையனூரில் மேவிய அத்தன் ஆவார்; நம்மை ஆட்கொள்பவர். அவர் ஆலங்காட்டில் வீற்றிருக்கும் அடிகளாரே.

சிறப்புரை: இத்திருப்பாட்டானது இராவணனுடைய கையறு நிலையை நனி இயம்புதலாயிற்று. பெயர்த்தெடுத்த மலையைத் திரும்பவும் மண்ணில் வைத்து

வெளியேறும் வழி இன்றியும், அத் துன்பத்திலிருந்து நீங்குதலும் அறியாதவனாகி அழிதலை உணர்த்தும் தன்மை, “ஒத்தினார்” என ஓதி உரைத்தலாயிற்று.

இத்தன்மையில், இராவணனை எவ்வகையாலும் தப்பிச் செல்ல முடியாதவாறு அடர்த்த ஈசனின் பேராற்றலை “மையார் நிறமேனி அரக்கர் தம் கோனை உய்யாவகையால் அடர்த்து இன்னருள் செய்த” (முதல் திருமுறை 31 திருக்குரங் கணில் முட்டம் திருப்பதிகம் பாடல் வ.எண் 334) எனத் திருஞான சம்பந்தர் அருளியவாறும் காண்க. இது அவனை உய்வித்தற் பொருட்டுச் செய்தலும் ஆகும்.

69. திருக்கோவலூர் வீரட்டம்

தல விளக்கம்: நடுநாட்டுத் தலம் 22இல், இது 11ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. திருக் கோயிலூர் எனப்படுவது. இது அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. அந்தகாசூரனை மாய்த்த தலம். ஔவையார் விநாயகரை வழிபட்ட தலச்சிறப்புடையது.

மற்றும் இரண்டாம் திருமுறை – பதிகம் எண் 236 காண்க.

சுவாமி : வீரட்டேஸ்வரர்

அம்பிகை : சிவானந்த வல்லி, பெரிய நாயகி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : தென் பெண்ணை (தட்சிண பிணாகினி)

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

669. செத்தையேன் சிதம்பன் நாயேன்
செடியனேன் அழுக்குப்பாயும்
பொத்தையே போற்றி நாளும்
புகலிடம் அறிய மாட்டேன்
எத்தைநான் பற்றி நிற்கேன்
இருளற நோக்க மாட்டாக்
கொத்தையேன் செய்வ தென்னே
கோவல் வீரட்ட னீரே.

தெளிவுரை: *ஈசனே! நான், பயனற்றவன், பண்பற்றவன், நாய் போன்று இழிந்தவன், குற்றம் உடையவன், அழுக்கு மேவும் உடலை உடையவன், தேவரீரைப் போற்றி நின்று புகலிடம் கொள்ள அறியாதவன். நான் எதனைப் பற்றி நிற்பேன்! மாயையின் பிணிப்பிலிருந்து வெளியேறுவதற்கு எதுவும் சிந்தியாதவனாகி, ஞான மில்லாதவனாகிக் கலங்குகின்றேன். திருக்கோவலூரில் மேவும் வீரட்டன் நீரே! அருளிச் செய்வீராக! நான் செய்வதுதான் என்னே!*

670. தலைசுமந்து இருகை நாற்றித்
தரணிக்கே பொறைய தாகி
நிலையிலா நெஞ்சம் தன்னுள்
நித்தலும் ஐவர் வேண்டும்
விலைகொடுத்து அறுக்க மாட்டேன்
வேண்டிற்றே வேண்டி எய்த்தேன்
குலைகள்மாங் கனிகள் சிந்தும்
கோவல்வீ ரட்ட னீரே.

தெளிவுரை: *ஈசனே! தலையைச் சுமந்து, இரு கைகளை யும் கீழே தொங்குமாறு நின்று, பூமிக்குச் சுமையாய் ஆனேன். அலை மோதும் மனத்துள், ஐம்புலன்கள்*

நாடி நிற்கும் பொருள்களையே நாடி, ஆசையை அறுக்காதவனானேன். அதனால் நான் தளர்ச்சி அடைந்து நலிந்தேன். திருக்கோவலூரில் மேவும் வீரட்டத்தீரே! தேவரீர் அருள் புரிவீராக!

சிறப்புரை: இது, ஐம்புலன் வழிச் செல்லாது, ஆசையை அறுக்க வேண்டும் என்பதும், ஈசனைத் தலை தாழ்த்தி, இருகரங் கூப்பி வணங்க வேண்டும் என்பதும், உயிருக்கு வழங்கும் உபதேசம் ஆயிற்று. "கரங்குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க! சிரங்குவிவார் ஓங்கு விக்கும் சீரோன் கழல் வெல்க" என்னும் திருவாசக அமுத வாக்கும் காண்க.

671. வழித்தலைப் படவு மாட்டேன்
வைகலும் தூய்மை செய்து
பழித்திலேன் பாசமற்றுப்
பரமநான் பரவ மாட்டேன்
இழித்திலேன் பிறவி தன்னை
என்நினைந்து இருக்க மாட்டேன்
கொழித்துவந்து அலைக்கும் தெண்ணீர்க்
கோவல்வீ ரட்ட னீரே.

தெளிவுரை: திருக்கோவலூர் வீரட்டானத்தில் வீற்றிருக்கும் பெருமானே! நான், தேவரீருடைய அருள் வழிப் பாதையில் நின்று, வழிபடுவதற்கு முனையாதவன்; நாள்தோறும் நெஞ்சினைத் தூய்மை செய்து, தேவரீரை வணங்கித் தியானித்துத் தீ நெறியின் பால் செல்லும் மனத்தைப் பழித்திலேன்; அவா அற்ற வனாகிப் பரவமாட்டேன். பரமனே! இப்பிறவியை இழிவானதென்று கருதாதவனாகி, என்னுள் மேவும் தேவரீரை நினைந்து ஏத்தாதவனானேன்.

672. சாற்றுவர் ஐவர் வந்து
சந்தித்த குடிமை வேண்டிக்
காற்றுவர் கனலப் பேசிக்
கண்செவி மூக்கு வாயுள்
ஆற்றுவர் அலந்து போனேன்
ஆதியை அறிவொன்று இன்றிக்
கூற்றுவர் வாயிற் பட்டேன்..
கோவல்வீ ரட்ட னீரே.

தெளிவுரை: ஈசனே! ஐம்புலன்கள் இவ்வுடம்புக்குள், இருந்து புயலாகவும் அனலாகவும் கொண்டு, கண், காது, மூக்கு, வாய் வழியாகத் தமது வலிமையைக் காட்டிச் செயல் புரிபவர்கள் ஆயினர். அவர்களுடைய செயல்களைக் கண்டு, நான் துன்புற்றேன். அவர்கள் ஆதிப் பிரானை அறியாதவராகி நிற்க, என்னைத் துன்புறுத்தக் கூற்றுவர் வாயில் அகப்பட்டது போன்ற வனானேன். திருக்கோவலூரில் மேவும் வீரட்டனீரே! அடியேனைக் காத்தருள் புரிவீராக!

சிறப்புரை: ஐம்புலன்கள் அறிவின் வழிப்படாதது என்னும் தன்மை, "அறிவொன்று இன்றி" என ஓதப் பெற்றது. இத்தன்மையில், "அனைத்துலகும் ஆய நின்னை ஐம்புலன்கள் காண்கிலா" (திருச்சதகம்) எனும் திருவாசக அமுதவாக்கும் காண்க.

673. தடுத்திலேன் ஐவர் தம்மைத்
தத்துவத் துயர்வு நீர்மைப்
படுத்திலேன் பரப்பு நோக்கிப்
பன்மலர்ப் பாத முற்ற
அடுத்திலேன் சிந்தை யார
ஆர்வலித்து அன்பு திண்ணம்
கொடுத்தி லேன் கொடிய வாநான்
கோவல்வீ ரட்ட னீரே.

தெளிவுரை: ஈசனே! நான், உண்மைத் தத்துவத்தை உணராதவனாகி, ஐம்புலன்களின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தாதவன் ஆனேன்; சிந்தையைத் தேவரீருடைய திருவடியின் பாற் சேர்த்திலேன், மலர் கொண்டு ஏத்திலேன்; அக மலராகிய அட்ட புஷ்பங்களைக் கொண்டு சிந்தையார அன்புகூர ஏத்திலேன்; உறுதி பூண்டு பற்றாதவனானேன்; இத்தனை செய்த கொடியவன் ஆனேன். திருக்கோவலூரில் மேவும் வீரட்டனீரே! அருள் புரிவீராக.

674. மாச்செய்த குரம்பை தன்னை
மண்ணிடை மயக்க மெய்து
நாச்செய்த நாலும் ஐந்து
நல்லன வாய்தல் வைத்துக்
காச்செய்த காயம் தன்னுள்
நித்தலும் ஐவர் வந்து
கோச்செய்து குமைக்க ஆற்றேன்
கோவல்வீ ரட்ட னீரே.

தெளிவுரை: பெருமையுடையதாகச் செய்யப்பட்டது இவ்வுடம்பு. இது, உலகில் மயக்கம் எய்தக் கூடியதாகும். இதனில், ஒன்பது வாயில்கள் வைத்துக் காக்கும் தன்மை கொள்ள இக்காயத்திற்குள் நாள் தோறும் ஐந்து புலன்கள் நெருங்கி நின்று ஆட்சி செய்து என்னைத் துன்புறுத்துகின்றனர். திருக்கோவலூரில் மேவும் வீரட்டனீரே! யான் ஆற்றேன்! அருள் புரிவீராக.

நாலும் ஐந்தும் நல்லன வாய்தல் – 9 வாயில் உள்ள தேகம்.

675. படைகள் போல் வினைகள் வந்து
பற்றியென் பக்கல் நின்றும்

விடகிலா ஆத லாலே
விகிர்தனை விரும்பி யேத்தும்
இடையிலேன் என்செய் கேனான்
இரப்பவர் தங்கட்கு என்றும்
கொடையிலேன் கொள்வ தேநான்
கோவல்வீ ரட்ட னீரே.

தெளிவுரை: வினைகளானவை வெம்படைகள் போன்று என்னைப் பற்றி நிற்கின்றன. திருக் கோவலூரில் மேவும் வீரட்டனீரே! விகிர்தனே! தேவரீரை விரும்பி ஏத்தும் வழி தெரியாதவனானேன். இரப்பவர்களுக்குக் கொடுத்து உதவும் நல்லறம் ஆற்றாது, ஆசை வயப்பட்டுக் கொள்வதையே குணமாகக் கொண்டுள்ளேன். நான் என் செய்வேன்! அருள் புரிவீராக.

இடை – வழி.

676. பிச்சிலேன் பிறவி தன்னைப்
பேதையேன் பிணக்கம் என்னும்
துச்சுளே அழுந்தி வீழ்ந்து
துயரமே இடும்பை தன்னுள்
அச்சனாய் ஆதி மூர்த்திக்கு
அன்பனாய் வாழ மாட்டாக்
கொச்சையேன் செய்வ தென்னே
கோவல்வீ ரட்ட னீரே.

தெளிவுரை: நான், பேதைமை உடையவனாகிப் பிறவிப் பிணியைப் பிய்த்து எறியும் வல்லமையற்றவனானேன்; பிணக்கம் கொண்டு பெருந்துயருள் மூழ்கி மன்னுயிர் கள்பால் அன்பு செலுத்தாதவனானேன்! துன்பத்தில் மூழ்கி ஆழ்கின்றேன்; கடவுளாகிய ஆதி மூர்த்தியை அன்புடன் ஏத்திலேன்; இழிந்தவனானேன். திருக்

கோவலூரில் மேவும் வீரட்டனீரே! நான் செய்வது என்னே! அருள் புரிவீராக.

677. நிணத்திடை யாக்கை பேணி
நியமம்செய்து இருக்க மாட்டேன்
மணத்திடை ஆட்டம் பேசி
மக்களே சுற்றம் என்னும்
கணத்திடை யாட்டப் பட்டுக்
காதலால் உன்னைப் பேணும்
குணத்திடை வாழ மாட்டேன்
கோவல்வீ ரட்ட னீரே.

தெளிவுரை: நான், ஊன் பெருக்கும் இவ்வுடம்பைப் பெரிதாகக் கருதிச் சிவாகம விதிப்படி அனுட்டானம் முதலான கிரியைகளைச் செய்யாது காலத்தைக் கழித்தேன்; மணவாழ்க்கையும் களியாட்டமும் மக்கள் சுற்றம் என்னும் பந்தத்தில் ஆட்பட்டுத் தேவரீரை, உள்ளம் உருகி நெகிழ்ந்து ஏத்தாதவனானேன். திருக்கோவலூரில் மேவும் வீரட்டனீரே! அருள் புரிவீராக.

678. விரிகடல் இலங்கைக் கோனை
விரிகயி லாயத்தின் கீழ்
இருபது தோளும் பத்துச்
சிரங்களும் நெரிய வூன்றிப்
பரவிய பாடல் கேட்டுப்
படைகொடுத்து அருளிச் செய்தார்
குரவொடு கோங்கு 'சூழ்ந்த
கோவல்வீ ரட்ட னாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவபெருமான், பத்துத் தலைகளும் இருபது தோள்களும் உடைய இராவணனைக் கயிலை மலையின் கீழ் நெரியுமாறு ஊன்றிப் பின்னர் அவன்

இசைத்துப் போற்றிய பாடல்களைக் கேட்டுப் படைக் கலன்களைக் கொடுத்து அருளியவர். அவர், குரவம் கோங்கு ஆகிய மரங்கள் சூழ்ந்த திருக்கோவலூர் வீரட்டத்தில் வீற்றிருப்பவரே.

70. திருநனிபள்ளி

தல விளக்கம்: காவிரித் தென்கரைத்தலம் 127இல், இது 43ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. புஞ்சை என வழங்கப்படுவது. திருஞானசம்பந்தரின் தாயார் பகவதியம்மையார் அவதரித்த பதி.

மற்றும் இரண்டாம் திருமுறை பதிகம் எண் 220 காண்க.

சுவாமி : நற்றுணையப்பர்

அம்பிகை : பர்வத புத்திரி

தீர்த்தம் : சொர்ண தீர்த்தம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

679. முற்றுணை ஆயி னானை மூவர்க்கும் முதல்வன் றன்னைச்
சொற்றுணை ஆயினானைச் சோதியை ஆதரித்து
உற்றுணர்ந்து உருகியூறி உள்கசி வுடையவர்க்கு
நற்றுணை யாவர்போலு நனிபள்ளி யடிகளாரே.

தெளிவுரை: ஈசன், முன்னின்று காக்கும் துணைவர், மும்மூர்த்திகளுக்கும் முதல்வர்; சொற்றுணையாக விளங்குபவர்; சோதியாகத் திகழ்பவர்; அன்பு செலுத்தி வழிபடும் அடியவர்களின் உள்ளம்

காதலாகிக் கசிந்து ஏத்த, நற்றுணையாக விளங்குபவர். அவர் நனிபள்ளியில் வீற்றிருக்கும் இறைவரே.

சிறப்புரை: ஈசன் சொற்றுணையாகவும் நற்றுணை யாகவும் விளங்குபவர். இச்சிறப்பானது, உயிர்க்குத் துணையாதலை இவண் உணர்த்துதல் ஆயிற்று. மற்றும் திருப்பாட்டு வ.எண் 104 நமச்சிவாயத் திருப்பதிகம் காண்க. ஈசன், முன்னின்று ஆற்றுதலும், துணையாகி மேவுதலும் ஆகிய பாங்கு, முற்றுணை என, உணர்த்தப் பெற்றது.

உள்ளம் உருகி ஏத்தும் அடியவர்களுக்கு நற்றுணையாக விளங்கும் ஈசனின் திருப்பெயர், இத் திருத்தலத்தில் மேவும் ஈசனின் திருநாமம் ஆதலையும் ஓர்க.

முற்றுணை – முன்துணை; நற்றுணை – திருத்தலத்தில் மேவும் ஈசனின் திருநாமம்.

680. புலர்ந்தகால் பூவுநீரும் கொண்டடி போற்றமாட்டா
வலம்செய்து வாயில்நூலால் வட்டமைப் பந்தர்செய்த
சிலந்தியை அரையனாக்கிச் சீர்மைகள் அருளவல்லார்
நலந்திகழ் சோலை சூழ்ந்த நனிபள்ளி அடிகளாரே.

தெளிவுரை: புலர்ந்ததும் ஈசனைப் பூவும் நீரும் கொண்டு பூசனை ஆற்றுதலுக்கு இயலாத நிலையில், வலம் வந்து, வாய் நூலால் பந்தல் வேய்ந்து, சிவ புண்ணியத்தை யாத்த சிலந்தியைக் கோச்செங்கட் சோழ மன்னராக்கிய கருணை வயத்தவர், சிவபெருமான். அவர் நலம் திகழும் சோலை சூழ்ந்த நனிபள்ளியில் வீற்றிருக்கும் அடிகளாரே.

சிறப்புரை: இத்திருத்தலமானது, முதற்கண் பாலையாக இருந்து, திருஞானசம்பந்தரால் நெய்தலாகவும்

பின்னர் மருத நிலமாகவும் மாறுதல் செய்யப்பட்டது என்பது வரலாறு. இத்தன்மையில் மருத நிலத்தின் பெருமை திகழுமாறு "நலந்திகழ் சோலை சூழ்ந்த நனிபள்ளி அடிகளாரே" என ஏத்தப் பெறுதல் காண்க.

பூவும் நீரும் கொண்டு பூசை ஆற்றும் சரீரத்தைப் பெறாத சிலந்தி, வலம் வந்து பந்தல் அமைத்துச் சிவவழிபாடு செய்த தன்மையானது, மக்கட் பிறவியில் சிவபூசையை ஆற்றாது கழித்தல் பயனற்றது என்னும் மெய்ம்மையை, இத்திருப்பாட்டானது குறிப்பால் உணர்த்துதலும் ஆயிற்று.

681. எண்பதும் பத்தும் ஆறும் என்னுளே இருந்து மன்னிக்
கண்பழக் கொன்றும் இன்றிக் கலக்கநான் அலக்கழிந்தேன்
செண்பகம் திகழும் புன்னை செழுந்திரட் குரவம் வேங்கை
நண்புசெய் சோலை சூழ்ந்த நனிபள்ளி அடிகளாரே.

தெளிவுரை: தொண்ணூற்றாறு தத்துவங்களும் என்னுள்ளே பொலிந்திருந்து நான், தேவரீரைக் கருதி ஏத்தாதவனாய்க் கலங்குகின்றேன்; அவற்றால் அலைக் கழிக்கப்படுகின்றேன். செண்பகம், புன்னை, குரவம், வேங்கை ஆகிய தருக்கள் சூழ்ந்த நனிபள்ளியில் மேவும் பரமரே! தேவரீர் அருள் புரிவீராக.

எண்பதும் பத்தும் ஆறும் – 96 தத்துவம்.

682. பண்ணினார் பாடலாகிப் பழத்தினில் இரதமாகிக்
கண்ணினார் பார்வை யாகிக் கருத்தொடு கற்பமாகி
எண்ணினார் எண்ணமாகி ஏழுலகு அனைத்துமாகி
நண்ணினார் வினைகள் தீர்ப்பார் நனிபள்ளி அடிகளாரே.

தெளிவுரை: ஈசன், பண்ணொடு விளங்கும் பாடலும், பழத்தினில் சுவையும், கண்ணின் ஒளிப்பார்வையும், கருத்தில் அதன் சங்கல்பமாகிய உள் நினைவும், எண்ணப்படும் நெஞ்சின் எண்ணமாகவும் விளங்கு பவர். ஏழுலகும் ஆகிய அப்பெருமான், அன்பு கொண்டு ஏத்தும் அடியவர்கள் பால் நண்ணி நின்று வினைகளைத் தீர்ப்பவர். அவர் நனிபள்ளியில் வீற்றிருக்கும் பரமரே.

திருப்பாட்டு எண் 724உம் காண்க.

683. துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத் தோதிநாளும் அரனடிக்கு அன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோ றாக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமுது ஆக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே.

தெளிவுரை: இருள் துஞ்சும் காலையும் மாலையும் திருவைந்தெழுத்தை ஓதி, நாள்தோறும் அரனை ஏத்தி, அன்பு பூண்டு வழிபடுக. அது பெருத்த நன்மையை விளைவிக்கும். வஞ்சனையாகப் பால் சோற்றில் நஞ்சு கலந்து கொடுத்த ஞான்று, அக்கொடிய நஞ்சானது அழிந்து அமுதாகுமாறு புரிவித்தவர் ஈசன். அவர் நனிபள்ளியில் மேவும் இறைவரே.

சிறப்புரை: இத்திருப்பாட்டில் திருநாவுக்கரசு சுவாமி களுக்கு நஞ்சு கலந்த உணவு கொடுக்கப்பட்ட வரலாறு சுட்டப் பெற்றது. இதனைச் சேக்கிழார் பெருமான்,

> நஞ்சும்அமு தாம்எங்கள் நாதரடி யார்க்கு என்று
> வஞ்சமிகு நெஞ்சுடையார் வஞ்சனையாம் படியறிந்தே
> செஞ்சடையார் சீர்விளக்கும் திறலுடையார் தீவிடத்தால்
> வெஞ்சமணர் இடுவித்த பாலடிசின் மிசைந்திருந்தார்.
>
> —திருநாவுக்கரசு நாயனார் புராணம், 104

என அருளிச் செய்தவாறும் காண்க.

684. செம்மலர்க் கமலத்தோனும் திருமுடி காணமாட்டான்
அம்மலர்ப் பாதம் காண்பான் ஆழியான் அகழ்ந்தும் காணான்
நின்மலன் என்றங்கு ஏத்து நினைப்பினை அருளிநாளும்
நம்மலம் அறுப்பர் போலும் நனிபள்ளி அடிகளாரே.

தெளிவுரை: *பிரமனும் ஈசனின் திருமுடியைக் காணாதவர். அப்பெருமானுடைய திருப்பாதத்தைக் காணச் சென்ற திருமாலும் காணவில்லை. அத்தகைய சிவபெருமானை நினைந்து ஏத்த நம்முடைய மும் மலங்களாகிய ஆணவம் கன்மம் மாயை நீங்கும். அவ்வாறு அருள் புரியும் அடிகள், நனிபள்ளியில் வீற்றிருக்கும் பெருமானே.*

685. அரவத்தால் வரையைச் சுற்றி அமரரோடு அசுரர் கூடி
அரவித்துக் கடையத் தோன்றும் ஆலநஞ்சு அமுதா உண்டார்
விரவித்தம் மடியராகி வீடிலாத் தொண்டர் தம்மை
நரகத்தில் வீழவொட்டார் நனிபள்ளி அடிகளாரே.

தெளிவுரை: *வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகச் சுற்றி மேருமலையை மத்தாகக் கொண்டு தேவர்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடலைக் கடைந்த போது தோன்றிய நஞ்சினை அமுதமாக உட்கொண்டவர், ஈசன். அவர் தமது அடியவர்களை நரகத்தில் வீழுமாறு விட்டு விடாது காப்பாற்றுபவர். அவர் நனிபள்ளியில் வீற்றிருக்கும் இறைவரே.*

686. மண்ணுளே திரியும்போது வருவன பலவும் குற்றம்
புண்ணுளே புரைபுரையன் பழுப்பொதி பொள்ளல் ஆக்கை
. . . .

தெளிவுரை: இவ்வுலகத்தில் பிறந்து வாழும் போது எல்லாக் குற்றமும் அமையும். இவ்யாக்கையும் புண்ணுடையது, அழுக்கும் உடையது.

687. பத்துமோர் இரட்டி தோளான் பாரித்து மலையெடுக்கப்
பத்துமோர்இரட்டி தோள்கள் படருடம்பு அடரவூன்றிப்
பத்துவாய் கீதம் பாடப் பரிந்தவற்கு அருள்கொடுத்தார்
பத்தர்தாம் பரவி யேத்து நனிபள்ளிப் பரமனாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இருபது தோளுடைய இராவணன், ஆரவாரம் செய்து கயிலை மலையை எடுக்க, அவனுடைய அத்தனை தோள்களும் அடர, ஊன்றிப் பின்னர் கீதங்களைப் பாடக் கேட்டு பரிவுடன் அருள் புரிந்தவர், சிவபெருமான். அவர், பக்தர்களால் பரவி ஏத்தப் பெறும் நனிபள்ளியில் வீற்றிருக்கும் பரமனாரே.

71. திருநாகைக்காரோணம்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 82ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. புண்டரீக முனிவரை இறைவன் தனது திருமேனியில் ஆரோகணம் செய்து கொண்ட பதி. ஊர்: நாகை. கோயில்: காரோணம்

மற்றும் முதல் திருமுறை – பதிகம் எண் 84 காண்க.

சுவாமி : காயாரோகணேஸ்வரர்

அம்பிகை : நீலாயதாட்சி

தல மரம் : மா மரம்

தீர்த்தம் : புண்டரீக தீர்த்தம், தேவதீர்த்தம்

தியாக
ராஜர் : சுந்தர விடங்கர் பாராவார தரங்க நடனம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

688. மனைவிதாய் தந்தைமக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ்நாகை மன்னுகாரோணத்தானை
நினையுமா வல்லீராகில் உய்யலா நெஞ்சினீரே.

தெளிவுரை: நன்னெஞ்சுடையவரே! மனைவி, தாய், தந்தை, மக்கள், மற்றும் உள்ள சுற்றங்கள் யாவும் வினைப் பயனால் வந்தவை. அதில் அழுந்தி வேதனை கொள்ளுவதற்கு இடம் அளிக்காதீர். நாகைக் காரோணத்தில் மேவும் ஈசனை நினைத்து ஏத்த வல்லீராகில் உய்யலாம்.

சிறப்புரை: உலகிடைத் தோன்றும் பந்தங்களாகிய, மனைவி, தாய், தந்தை, மக்கள், சுற்றம் எனவாகியன வினையுள் அழுத்தி வேதனைக்கிடமாகும் என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் இத்தகைய சித்த விகாரத்திலிருந்து தெளிவு பெறுதலை மாணிக்க வாசகர், "வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும் பித்த உலகிற் பிறப்போடு இறப்பு என்னும் சித்தவிகாரக் கலக்கம் தெளிவித்த வித்தகத் தேவர்க்கே சென்றூ தாய் கோத்தும்பீ" என அருளிச் செய்தவாறும் காண்க.

689. வையனை வையமுண்ட மாலங்கம் தோள்மேற்கொண்ட
செய்யனைச் செய்யபோதிற் றிசைமுகன்
சிரமொன்றேந்தும்

கையனைக் கடல்சூழ் நாகைக் காரோணம்
கோயில்கொண்ட
ஐயனை நினைந்த நெஞ்சே அம்மநாம் உய்ந்த வாறே.

தெளிவுரை: ஈசன், உலகமாக விளங்குபவர்; உலகத்தை உண்ட திருமாலைத் தோளின் மீது சட்டையாகக் கொண்டு மேவும் செம்மேனியர்; பிரமனின் ஒரு தலையைக் கொய்து, கபாலமாக ஏந்தியவர். அவர், காரோணத்தில் கோயில் கொண்ட தலைவர். அப்பெருமானை நினைந்து ஏத்திய நெஞ்சமே! உய்வு பெற்றனை.

வையன் – உலகமாக விளங்குபவன். வையன் – ஊர்தி உடையவர். இடபவாகனத்தில் ஊர்பவர் எனலும் ஆம். மாலங்கம் – திருமால். செருக்குற்றபோது அடக்கி, அவரது உடலைத் – தோலைச் சட்டையாக அணிந்தார் ஈசன். இவ்வடிவமே சட்டை நாதர் (சீகாழித்தலம்) வடிவம் ஆகும்.

690. நிருத்தனை நிமலன்றன்னை நீணிலம் விண்ணின் மிக்க
விருத்தனை வேதவித்தை விளைபொருள் மூலமான
கருத்தனைக் கடல்சூழ் நாகைக் காரோணம்
கோயில்கொண்ட
ஒருத்தனை உணர்தலால்நாம் உய்ந்தவா நெஞ்சினீரே.

தெளிவுரை: ஈசன், நடனம் புரிபவர்; நிமலனாய் விளங்கி அடியவர்தம் மும்மலங்களையும் நீக்குபவர்; மண்ணுலகம், விண்ணுலகம் ஆகியவற்றில் உள்ளவர்கள் அனைவர்க்கும் மேலானவராயும் பழைமையராகவும் உள்ளவர்; வேதத்தின் வித்தானவர், தோன்றும் எல்லாப் பொருளுக்கும் ஆதிமூலமாக விளங்குபவர்; நாகைக் காரோணத்தில் கோயில் கொண்டு மேவும் ஒப்பற்றவர். நன்னெஞ்சுடையீரே! அப்பெருமானை ஏத்துதலால் நாம் உய்ந்தனம்.

691. மண்தனை இரந்துகொண்ட மாயனோடு
அசுரர்வானோர்
தெண்டிரை கடையவந்த தீவிடம் தன்னையுண்ட
கண்டனைக்கடல் சூழ்நாகைக் காரோணம்
கோயில்கொண்ட
அண்டனை நினைந்தநெஞ்சே அம்மநாம் உய்ந்தவாறே.

தெளிவுரை: *மூவடி மண் வேண்டிப் பெற்ற திருமாலும் அவருடன் அசுரர்களும் தேவர்களும் சேர்ந்து பாற் கடலைக் கடையத் தோன்றி வெளிப்பட்ட கொடிய நஞ்சினை, உண்டு நீல கண்டராக விளங்கியவர், நாகைக் காரோணத்தில் கோயில் கொண்ட ஈசன். அப்பெருமானை ஏத்திய நெஞ்சே! நாம் உய்ந்தனம்.*

692. நிறைபுனல் அணிந்தசென்னி நீணிலா அரவம்சூடி
மறையொலி பாடியாடல் மயானத்து மகிழ்ந்த மைந்தன்
கறைமலி கடல்சூழ் நாகைக் காரோணங்கோயில்
கொண்ட
இறைவனை நாளும் ஏத்த இடும்பை போய் இன்பம்
ஆமே.

தெளிவுரை: *ஈசன், கங்கையைச் சடைமுடியில் அணிந்தவர்; சந்திரனையும் அரவத்தையும் சூடியவர்; வேதங்களைப் பாடியும், ஆடல் புரிந்தும் மயானத்தில் மகிழ்ந்து விளங்குபவர்; நாகைக் காரோணத்தில் கோயில் கொண்ட இறைவன். அப்பெருமானை நாள் தோறும் ஏத்திப் போற்றத் துன்பம் யாவும் தீரும்; இன்பம் பெருகும். இது, இம்மை நலத்தினோடு பிறவிப் பிணி நீங்கி, மறுமைக்குரிய முத்திப் பேறும் கையுறும் என்பதாம்.*

693. வெம்பனைக் கருங்கை யானை வெருவஅன்று உரிவை
போர்த்த
கம்பனைக் காலற் காய்ந்த காலனை ஞாலம் ஏத்தும்

உம்பனை உம்பர் கோனை நாகைக்கா ரோணமேய
செம்பொனை நினைந்தநெஞ் சேதிண்ணநாம் உய்ந்த வாறே.

தெளிவுரை: *கொடிய பனைபோன்ற நீண்ட துதிக்கை உடைய கரிய யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர், திருவேகம்பர். அவர், காலனை அழித்த திருப்பாதத்தை உடையவர்; உலகம் எல்லாம் போற்றும் தேவர்; தேவர்களின் தலைவர். நாகைக் காரோணத்தில் மேவிய செம்பொன்னானவர். அப்பெருமானை நினைந்த நெஞ்சமே! திண்ணமாக நாம் உய்ந்தனம். திண்ணம், உய்ந்தவாறு – உறுதித் தன்மையை நன்கு வலியுறுத்தி உணர்த்துதலாயிற்று.*

694. வெங்கடுங் கானத்தேழை தன்னொடும் வேடனாய்ச் சென்று
அங்கமர் மலைந்து பார்த்தற்கு அடுசரம் அருளினானை
மங்கைமார் ஆடலோவா மன்னுகா ரோணத்தானைக்
கங்குலும் பகலும் காணப் பெற்றுநாம் களித்த வாறே.

தெளிவுரை: *வெம்மை பொருந்திய காட்டில் உமாதேவியோடு வேட்டுவ வடிவு தாங்கிச் சென்று போர் செய்து பார்த்தனுக்குப் பாசுபதம் அருளிச் செய்த ஈசன், மங்கையர் நடனம் ஓய்வின்றி விளங்கும், நாகைக் காரோணத்தில் வீற்றிருக்கும் பெருமான். அவரை, இரவும் பகலும் தரிசித்து நாம் மகிழ்ந்தனம். இது, சிவனாந்தத் தேனைப் பருகிப் பேரின்பம் உற்றனம் என்பதாம்.*

695. தெற்றினர் புரங்கள்மூன்றும் தீயினில் விழவோர் அம்பால்
செற்றவெஞ் சிலையர் வஞ்சர் சிந்தையுட் சேர்விலாதார்
கற்றவர் பயிறு நாகைக் காரோணம் கருதியேத்தப்
பெற்றவர் பிறந்தார் மற்றுப் பிறந்தவர் பிறந்திலாரே.

தெளிவுரை: பகைமை கொண்ட முப்புர அசுரர் களையும் கோட்டை மதில்களையும் நெருப்பில் சாம்பலாகுமாறு ஓர் அம்பு தொடுத்த வில்லையுடைய ஈசன் வஞ்சகரின் சிந்தையில் மேவாதவர். அவர் நான்கு வேதங்களையும் கற்றுத் தேர்ந்தவர்கள் விளங்கும் நாகைக் காரோணத்தில் திகழ்பவர். அப்பெருமானைக் கருதி ஏத்துபவர்கள், இப்பூவுலகில் நற்கதியடையப் பிறந்தவர்கள் ஆவார்கள். ஏனையோர் பிறந்தும் பிறவாதவராய் நரகிடை உழல்பவரோடு ஒப்பர் என்பதாம்.

தெற்றினர் – நன்னெறி யற்றவர் – முப்புர அசுரர்கள்.

696. **கருமலி கடல்சூழ் நாகைக் காரோணர் கமலபாதத்து**
ஒருவிரல் நுதிக்கு நில்லாது ஒண்திறல் அரக்கனுக்கான்
இருதிற மங்கை மாரோடு எம்பிரான் செம்பொனாகம்
திருவடி தரித்து நிற்கத் திண்ணநாம் உய்ந்தவாறே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கடல் சூழ்ந்த நாகைக் காரோணத்தில் மேவும் ஈசன், ஒரு விரல் நுனிய ஊன்ற, அவ்வாற்ற லுக்கு ஆற்றாது இராவணன் நெரிப்புண்டு நைந்தான். இருதிறத்து மங்கையராகிய, கங்கையும் உமாதேவியும் கொண்டு விளங்கும் ஈசன், செம்மேனியராக விளங்கு பவர். நெஞ்சே! அப்பரமனின் திருவடியைப் பதித்து இருக்க நாம் உய்ந்தனம்.

இது ஈசன் திருவடியானது, அடியவரின் நெஞ்சில் மேவுதலும் அப்பெருமான் அவர்களுக்குப் புரியும் அருளும் நனி ஓதப் பெறுதலாயிற்று.

72. திருஇன்னம்பர்

தல விளக்கம்: காவிரி வடகரைத்தலம் 63இல், இது 45ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. ஐராவதம் வழிபட்டது. அகத்தியர் வழிபட்டு இலக்கண உபதேசம் பெற்ற பதி.

மற்றும் மூன்றாம் திருமுறை, பதிகம் எண் 95 காண்க.

சுவாமி : எழுத்தறி நாதர், தான்தோன்றீசர்

அம்பிகை : சுகந்த குந்தளாம்பிகை, நித்யகல்யாணி (இரு சந்நிதிகள்)

தல மரம் : சண்பகம். பலா

தீர்த்தம் : ஐராவத தீர்த்தம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

697. விண்ணவர் மகுடகோடி மிடைந்த சேவடியர் போலும்
பெண்ணொரு பாகர் போலும் பேடலி ஆணர்போலும்
வண்ணமால் அயனும்காணா மால்வரை எரியர்போலும்
எண்ணுரு அநேகர் போலும் இன்னம்பர் ஈசனாரே.

தெளிவுரை: ஈசன், தேவர்கள் தங்கள் தலையில் தரித்துள்ள மணிமுடிகள் வணங்க மேவும் செம்மையான பாதங்களை உடையவர்; உமாதேவியைப் பாகமாகக் கொண்டு, அம்மையப்பராக விளங்குபவர்; அலியாகவும் ஆணாகவும் திகழ்பவர்; திருமாலும் நான்முகனும் காண்பதற்கு அரியவராகி நெருப்பு மலையாக உயர்ந்தவர்; ஐம்பூதங்களும் இரு

சுடரும் உயிரும் ஆகிய எட்டுவடிவமுடைய அட்ட மூர்த்தம் ஆனவர்; அநேகராய் விளங்கி அளவிடு வதற்கு அரியவர். அவர், இன்னம்பரில் மேவும் ஈசனாரே.

சிறப்புரை: தேவர்கள், ஈசனை வணங்கும் பெற்றியினை, "அண்ணா மலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும் விண்ணோர் முடியின் மணித் தொகை வீறு அற்றாற் போல்" எனவும், "பேடலி ஆணர்" என்பதனைப் "பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கு ஒளி சேர் விண்ணாகி" எனவும் மாணிக்க வாசகர் அருளிச் செய்தவாறும் காண்க.

அநேகர் – ஏகன் அநேகன் இறைவன் என்பது மணிவாசகர் திருவாக்கு. எல்லையற்ற வடிவினர்.

698. பன்னிய மறையர் போலும் பாம்பரை யுடையர் போலும்
துன்னிய சடையர் போலும் தூமதி மத்தர் போலும்
மன்னிய மழுவர் போலும் மாதிட மகிழ்வர் போலும்
என்னையும் உடையர் போலும் இன்னம்பர் ஈசனாரே.

தெளிவுரை: ஈசன், வேதங்களை நன்கு விரித்தருள்பவர்; பாம்பினை அரையில் கட்டியவர்; நெருங்கிய சடை முடியுடையவர்; பிறைச்சந்திரனும் ஊமத்த மலரும் சூடியவர்; ஒளி மிகுந்த மழுப்படை உடையவர்; உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டு மகிழ்பவர்; என்னையும் அடியவனாக உடையவர். அவர் இன்னம் பரில் மேவும் ஈசனாரே.

699. மறியொரு கையர் போலும் மாதுமை யுடையர் போலும்
பறிதலைப் பிறவிநீக்கிப் பணிகொள வல்லர்போலும்
செறிவுடை அங்கமாலை சேர்திரு உருவர் போலும்
எறிபுனற் சடையர் போலும் இன்னம்பர் ஈசனாரே.

தெளிவுரை: ஈசன், மானைக் கையில் ஏந்தியவர்; உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குபவர்; அடியவர்களின் பிறவிப் பிணியை நீக்கிச் சிவபுண்ணியத்தைச் செய்விப்பவர். தலை மாலை (மண்டையோடு)யை அணியும் அழகிய வடிவத்தினர். செஞ்சடையில் கங்கை தரித்தவர். அவர் இன்னம்பரில் மேவும் ஈசனாரே.

சிறப்புரை: பிறவி நீக்கிப் பிணி கொள வல்லர் என்பது, திருநாவுக்கரசரைச் சமணிலிருந்து மீட்டுத் திருவருளைச் சொரிந்து தலயாத்திரை, உழவாரப் பணி, பாடும் பணி முதலானவற்றுக்கு ஆட்படுத்தியமையும் அமையும்.

எறிபுனல் – கங்கை.

700. விடமலி கண்டர் போலும் வேள்விமை அழிப்பர்போலும்
கடவுநல் விடையர் போலும் காலனைக் காய்வர்போலும்
படமலி அரவர்போலும் பாய்புலித் தோலர் போலும்
இடர்களைந்து அருள்வர் போலும் இன்னம்பர் ஈசனாரே.

தெளிவுரை: ஈசன், நஞ்சினைக் கண்டத்தில் கொண்டு நீலகண்டராக விளங்குபவர்; தக்கன் செய்த வேள்வியை அழித்தவர்; வேகமாகச் செல்லும் இடபத்தை வாகனமாக உடையவர்; காலனை உதைத்து மாய்த்தவர்; படம் கொண்ட அரவத்தை உடையவர்; புலித்தோலை ஆடையாக உடையவர்; அடியவர்களுடைய இடர்களைத் தீர்த்து அருள்பவர். அவர், இன்னம்பரில் மேவும் ஈசனாரே.

701. அளிமலர்க் கொன்றை துன்றும் அவிர் சடையுடையர் போலும்
களிமயிற் சாயலோடும் காமனை விழிப்பர் போலும்

வெளிவளர் உருவர் போலும் வெண்பொடி அணிவர் போலும்
எளியவர் அடியர்க் கென்றும் இன்னம்பர் ஈசனாரே.

தெளிவுரை: ஈசன், வண்டுகள் ரீங்காரம் செய்யும் கொன்றை மலர் பொதிந்த சடை முடியுடையவர்; உமாதேவியை உடனாகக் கொண்டிருப்பினும், யோகியராய் விளங்கி, மன்மதனை விழித்து எரிப்பவர்; வான் முழுவதும் நிறைந்த விசுவரூபமானவர்; திருவெண்ணீறு அணிந்து விளங்குபவர்; அடியவர்களுக்கு எளியவராகக் காட்சி நல்கி, அருள்புரிபவர். அவர் இன்னம்பர் மேவும் ஈசனாரே.

702. கணையமர் சிலையர்போலும் கரியுரி யுடையர் போலும்
துணையமர் பெண்ணர்போலும் தூமணிக்குன்றர் போலும்
அணையுடை அடியர்கூடிஅன்பொரு மலர்கள் தூவும்
இணையடி யுடையர்போலும் இன்னம்பர் ஈசனாரே.

தெளிவுரை: திருமாலைக் கணையாகவும் மேரு மலையை வில்லாகவும் கொண்டு மேவும் ஈசன், யானையின் தோலை அணிந்திருப்பவர்; உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்குபவர்; தூய மணியைப் போன்ற கயிலை மலையை உடையவர்; அடியவர்கள் கூடி அன்புடன் ஏத்தப் பெறும் திருவடிப் பெருமையுடையவர். அவர் இன்னம்பரில் வீற்றிருக்கும் ஈசனாரே.

703. பொருப்பமர் புயத்தர்போலும் புனலணி சடையர் போலும்
மருப்பிள ஆமைதாங்கு மார்பில் வெண்ணூலர் போலும்
உருத்திரமூர்த்தி போலும் உணர்விலார்புரங்கள் மூன்றும்
எரித்திடு சிலையர் போலும் இன்னம்பர் ஈசனாரே.

தெளிவுரை: ஈசன், மலை போன்ற திரட்சியான தோளுடையவர்; கங்கை தரித்த சடைமுடியுடையவர்; ஆமையோடும், முப்புரி நூலும் திருமார்பில் கொண்டு விளங்குபவர்; மகாசங்கரா கால மூர்த்தியாக விளங்குபவர்; முப்புரங்களை எரித்த மேருமலை வில்லுடையவர். அவர் இன்னம்பரில் வீற்றிருக்கும் ஈசனாரே.

704. காடிடம் உடையர்போலும் கடிகுரல் விளியர் போலும்
வேடுரு வுடையர் போலும் வெண்மதிக் கொழுந்தர் போலும்
கோடலர் வன்னிதும்பை கொக்கிறகு அலர்ந்த கொன்றை
ஏடமர் சடையர் போலும் இன்னம்பர் ஈசனாரே.

தெளிவுரை: ஈசன், மயானத்தினை இடமாக உடையவர்; பேரொலி கொண்டு விளி செய்து ஆடுபவர்; அருச்சுனருக்கு அருள்புரியும் பாங்கில் வேட்டுவ வடிவம் தாங்கியவர்; வெண்பிறைச் சந்திரனைச் சூடியவர்; வன்னி, தும்பை, கொக்கிறகு, கொன்றை மலர் ஆகியவற்றைச் சடைமுடியில் தரித்தவர். அவர், இன்னம்பரில் வீற்றிருக்கும் ஈசனாரே.

705. காறிடு விடத்தையுண்ட கண்டர்எண் தோளர் போலும்
நீறுடை உருவர்போலும் நினைப்பினை அரியர்போலும்
பாறுடைத் தலைகை யேந்திப் பலிதிரிந்து உண்பர் போலும்
ஏறுடைக் கொடியர் போலும் இன்னம்பர் ஈசனாரே.

தெளிவுரை: ஈசன், கைக்கும் கொடிய நஞ்சினைக் கண்டத்தில் கொண்டுள்ளவர்; எட்டுத் தோளுடை யவர்; திருநீறு தரித்த திருமேனியர்; அடியவர்தம்

உள்ளக் கிடக்கைகள் அனைத்தினையும் அறிபவர், ஆயினும் அவர் நம் மனம் வாக்கு காயத்திற்கு அப்பாற் பட்டவராகி அறிதற்கு அரியவர். பிரமனுடைய மண்டை ஓட்டைக் கபாலமாக ஏந்திப் பலியேற்று உண்பவர்; இடபக் கொடி ஏந்தியவர். அவர் இன்னம் பரில் மேவும் ஈசனாரே.

706. **ஆர்த்தெழும் இலங்கைக்கோனை அருவரை அடர்ப்பர் போலும்**
பார்த்தனோடு அமர்பொருது படைகொடுத்து அருள்வர் போலும்
தீர்த்தமாம் கங்கைதன்னைத் திருச்சடைவைப்பர் போலும்
ஏத்தஏழ் உலகும்வைத்தார் இன்னம்பர் ஈசனாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், ஆர்த்து எழுந்து வந்த இராவணனைக் கயிலை மலையால் அடர்த்தவர்; அருச்சுனருடன் போர் செய்து படையாகிய பாசுபதத்தைக் கொடுத்து அருள்பவர்; கங்கையைத் திருச்சடைமுடியில் வைத்திருப்பவர்; தன்னை ஏத்தி வணங்க ஏழு உலகங்களையும் படைத்தவர். அவர், இன்னம்பரில் வீற்றிருக்கும் ஈசனாரே.

73. திருச்சேறை

தல விளக்கம்: காவிரித் தென்கரைத்தலம் 127இல், இது 95ஆவது, திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. மார்க்கண்டேய முனிவர், தௌமிய முனிவர் வழிபட்டது.

மற்றும் மூன்றாம் திருமுறை, பதிகம் எண் 86 காண்க.

சுவாமி : செந்நெறியப்பர், சாரபரமேஸ்வரர்

அம்பிகை : ஞானவல்லி

தல மரம் : மாவிலங்கை

தீர்த்தம் : மார்க்கண்டேய தீர்த்தம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

707. பெருந்திரு இமவான் பெற்ற
பெண்கொடி பிரிந்த பின்னை
வருந்துவான் தவங்கள் செய்ய
மாமணம் புணர்ந்து மன்னும்
அருந்திரு மேனிதன்பால்
அங்கொரு பாக மாகத்
திருந்திட வைத்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே.

தெளிவுரை: தக்கனுடைய திருமகளாக அவதரித்த உமாதேவியார், அவ்வடிவத்தை நீத்துப் பர்வத இராசனின் புதல்வியாகத் திருஅவதாரம் செய்து, சரீரத்தை வருத்தும் நற்றவம் புரிய, ஈசன், அப்பெருமாட்டியை மாமணம் கொண்டு தனது திருமேனியில் பாகமாக ஏற்று அம்மையப்பராக மேவினர். அவர், சேறை என்னும் தலத்தில் வீற்றிருக்கும் செந்நெறிச் செல்வனாரே.

இத்திருத்தலத்தில் வீற்றிருக்கும் ஈசனின் திருநாமம், இத்திருப்பாட்டில் உரைக்கப் பெறுதல் காண்க.

பெருந்திரு – உமாதேவி; அருந்திரு – ஈசன்.

708. ஓர்த்துள வாறு நோக்கி
உண்மையை உணராக் குண்டர்
வார்த்தையை மெய்யென் றெண்ணி
மயக்கில் வீழ்ந்து அழுந்து வேனைப்
பேர்த்தெனை யாளாக் கொண்டு
பிறவிவான் பிணிகள் எல்லாம்
தீர்த்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே.

தெளிவுரை: உண்மையை உணராதவராகிய சமணர்களின் உரைகளை மெய்யென்று எண்ணி அதில் அழுந்திய என்னை, அதிலிருந்து விடுவித்து, ஆளாகக் கொண்டு, பிறவியாகிய பெரும் பிணி முதலான யாவும் தீர்த்தருள் செய்தவர், சேறையில் மேவும் செந்நெறிச் செல்வனாரே.

709. ஒன்றிய தவத்து மன்னி
உடையனாய் உலப்பில் காலம்
நின்றுதம் கழல்கள் ஏத்து
நீள்சிலை விசய னுக்கு
வென்றிகொள் வேட னாகி
விரும்பிவெங் கானகத்துச்
சென்றருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே.

தெளிவுரை: ஒன்றிய மனத்தை உடையவனாகித் தவத்தை மேற்கொண்டு, திருவடியை ஏத்திய விசயனுக்கு, வெற்றி கொள் வேடுவ வடிவம் தாங்கி, வெங்கானகத்தினை நாடி அருள் செய்த இறைவன், சேறையில் மேவும் செந்நெறிச் செல்வனாரே.

710. அஞ்சையும் அடக்கி ஆற்றல்
உடையனாய் அநேக காலம்

வஞ்சமில் தவத்துள் நின்று
　　மன்னிய பகீரதற்கு
வெஞ்சின முகங்க ளாகி
　　விசையொடு பாயும் கங்கை
செஞ்சடை யேற்றார் சேறைச்
　　செந்நெறிச் செல்வ னாரே.

தெளிவுரை: ஐம்புலன்களையும் அடக்கிய ஆற்றல் உடையவனாகி, அநேக ஆண்டுகள் தூய்மையால் மேவும் தவங்களைப் புரிந்த பகிரதனுக்காகப் பல முகங்களாகப் பேராரவாரத்துடன் வேகமாக வந்த கங்கையைத் தனது செஞ்சடையில் ஏற்று அருள் புரிந்தவர், சேறையில் திகழும் செந்நெறிச் செல்வனாரே.

711. நிறைந்தமா மணலைக் கூப்பி
　　நேசமோடு ஆவின் பாலைக்
கறந்துகொண்டு ஆட்டக் கண்டு
　　கறுத்ததன் தாதை தாளை
எறிந்தமா ணிக்குஅப்போதே
　　எழில்கொள்சண் டீசன்என்னச்
சிறந்தபேர் அளித்தார் சேறைச்
　　செந்நெறிச் செல்வ னாரே.

தெளிவுரை: மணலைக் கூப்பி, நேசமோடு பசுவின் பாலைக் கறந்து பூசனை செய்த செயலைக் கண்டு வெறுத்துச் சினந்து இடர் செய்த எச்சதத்தன் என்னும் பெயர் கொண்ட தன் தந்தையின் தாளை வெட்டி வீழ்த்தியவர் சண்டீசர். அவருக்கு, அஞ்ஞான்றே எழில் மிக்க சண்டீசப் பதம் தந்து சிறந்த பேர் அளித்தவர், சேறையில் மேவும் செந்நெறிச் செல்வனாரே.

இது, சிவ புண்ணியத்தின் சிறப்பினை ஏத்திப் போற்றுதலாயிற்று.

மாணி – பிரமச்சாரி. சண்டீசர்; பேர் அளித்தார் – ஈசன் சூடிய மாலைகளை ஏற்கும் பெரும் புகழ்.

712. விரித்தபல் கதிர்கொள் சூலம்
வெடிபடு தமருகம் கை
தரித்ததோர் கோல கால
பயிரவ னாகி வேழம்
உரித்துமை அஞ்சக் கண்டு
ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே.

தெளிவுரை: மூன்று இலையாக விரிந்து ஒளிக் கதிர்களை நவிலும் சூலப் படையும், வெடியோசை போன்று எழுப்பும் தமருகம் என்னும் உடுக்கையும் கையில் கொண்டு, அழகிய கால பைரவனாகி யானையின் தோலை உரித்து, உமாதேவி அஞ்சுமாறு ஒளி மிக்க திருவாய் மலரச் சிரித்தருள் செய்தவர் சேறையில் திகழும் செந்நெறிச் செல்வனாரே.

கால பைரவரது அழகிய திருக்கோலத்தை நவிலும் இத்திருப்பாட்டை ஓதும் அன்பர்களுக்கு, அச்சம், இடர், வறுமை, பிணி முதலான தீங்குகள் தீர்ந்து மகிழ்ச்சி பெருகிச் செல்வம் நிறையும் என்பது ஆன்றோர் திருவாக்கு.

713. சுற்றுமுன் இமையோர் நின்று
தொழுதுதூ மலர்கள் தூவி
மற்றெமை உயக்கொள் என்ன
மன்னுராான் புரங்கள் மூன்றும்
உற்றொரு நொடியின் முன்னம்
ஒள்ளழல் வாயில்வீழச்

செற்றருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ் னாரே.

தெளிவுரை: தேவர்கள் சூழ்ந்து நின்று தொழுது மலர் தூவி ஏத்தி, எங்களை உய்யுமாறு காத்தருள்வீராக என்று வேண்டுதல் செய்ய, மூன்று புரங்களையும் ஒரு நொடியில் எரிந்து சாம்பலாகுமாறு செய்து அருள் புரிந்தவர், சேறையில் மேவும் செந்நெறிச் செல்வனாரே.

714. முந்தியிவ் வுலகம் எல்லாம்
படைத்தவன் மாலி னோடும்
எந்தனி நாத னேஎன்று
இறைஞ்சி நின்று ஏத்தல் செய்ய
அந்தமில் சோதி தன்னை
அடிமுடி அறியா வண்ணம்
செந்தழல் ஆனார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே.

தெளிவுரை: உலகத்தைப் படைக்கும் தொழில் மேவும் பிரமன், திருமாலுடன் இணைந்து எமது ஒப்பற்ற நாதனே! என்று இறைஞ்சி ஏத்தித் துதிக்க, அந்த மில்லாத சோதியாகவும், அடியும் முடியும் அளவிட முடியாதவாறும் ஆகியவர், சேறையில் வீற்றிருக்கும் செந்நெறிச் செல்வனாரே.

715. ஒருவரு நிகரி லாத
ஒண்திறல் அரக்கன் ஓடிப்
பெருவரை எடுத்த திண்டோள்
பிறங்கிய முடிகள்இற்று
மருவிளம் பெருமான் என்ன
மலரடி மெள்ள வாங்கித்

திருவருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தனக்கு ஒருவரும் நிகரில்லாத ஆற்றலுடைய இராவணன் கயிலையை எடுத்த போது விரலால் அழுத்தி அவனுடைய தோளும் முடிகளும் நெரிந்து அழியுமாறு புரிந்த அவன், எம்பெருமானே! என்று, ஏத்திய போது, அழுத்திய திருவடியை மெள்ள வாங்கித் திருவருள் செய்தவர், சேறையில் விளங்கும் செந்நெறிச் செல்வனாரே.

74. பொது

பதிகக் குறிப்பு: நினைந்த என ஈற்றடியில் கொண்டு திகழ்தலால் நினைந்த திருநேரிசை எனும் சிறப்புற்றது.

நினைந்த திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

716. முத்தினை மணியைப் பொன்னை
முழுமுதற் பவளம் ஏய்க்கும்
கொத்தினை வயிர மாலைக்
கொழுந்தினை அமரர்சூடும்
வித்தினை வேத வேள்விக்
கேள்வியை விளங்க நின்ற
அத்தனை நினைந்த நெஞ்சம்
அழகிதா நினைந்த வாறே.

தெளிவுரை: ஈசன், முழு முதலாக விளங்குபவர். அவர், முத்து, மணி, பொன், பவளக் கொத்து, வயிரம் என விளங்குபவர்; தேவர்கள் ஏத்தி வணங்க, வேதமாகவும் வேள்வியாகவும் விளங்கி நிற்பவர். அன்புடைய

வராகிய அக்கடவுளை நினைந்த நெஞ்சமானது, அழகுற்ற நெஞ்சமாகிறது.

சிறப்புரை: முத்து, மாணிக்கம், பொன், வைரம் என்பன சடப் பொருளாயினும் மாசு இல்லாதனவாகியும், ஒளி மிக்கு உடையனவாகியும், மக்களின் மனத்தில் இக நலனைத் தரும் பொருளாகியும் விளங்குதலைக் கொண்டு, இறைவன் பால் ஏத்தி விளம்புதலாயிற்று.

ஈசனை நினைந்துருகி ஏத்த இனிக்கும் நெஞ்சம், சிவானந்தத் தேனைப் பருகும் சிறப்பினையுடையது. எனவே இது, நெஞ்சழகு எனப்பட்டது.

717. முன்பனை உலகுக் கெல்லாம்
மூர்த்தியை முனிகள் ஏத்தும்
இன்பனை இலங்கு சோதி
இறைவனை அரிவை அஞ்ச
வன்பனைத் தடக்கை வேள்விக்
களிற்றினை உரித்த எங்கள்
அன்பனை நினைந்த நெஞ்சம்
அழகிதா நினைந்த வாறே.

தெளிவுரை: ஈசன், யாவர்க்கும் முந்தையராகி விளங்குபவர்; உலகத்தாரால் தொழுது வணங்கப் பெறும் மூர்த்தியானவர்; முனிவர்களால் ஏத்தப் பெறும் தியானப் பொருளாக இன்பம் பயப்பவர்; நன்கு பரவும் சோதியாகத் திகழ்பவர்; இறைவனாகிக் காப்பவர்; வேள்வியிலிருந்து தோன்றி வந்த யானையின் தோலை உரித்து, உமாதேவி அஞ்சுமாறு வீரம் புரிந்தவர்; எங்கள் அன்புக்குரியவர். அப்பெருமானை நினைத்த நெஞ்சமானது அழகுற்றது.

718. கரும்பினும் இனியான் றன்னைக்
காய்கதிர்ச் சோதி யானை
இருங்கடல் அமுதம் தன்னை
இறப்பொடு பிறப்பி லானைப்
பெரும்பொருட் கிளவி யானைப்
பெருந்தவ முனிவர் ஏத்தும்
அரும்பொனை நினைந்த நெஞ்சம்
அழகிதா நினைந்த வாறே.

தெளிவுரை: *ஈசன், கரும்பினும் இனிமையானவர்; கதிரவன் போன்ற ஒளியுடையவர்; கடலில் விளைந்த அமுதமானவர்; இறப்பும் பிறப்பும் அற்றவர்; பெரும் பொருட் சொல்லாகிய திருவைந்தெழுத்தாகுபவர்; பெருந்தவத்தினரால் ஏத்தப் பெறும் ஒண்பொருளாகு பவர். அப்பெருமானை நினைந்து ஏத்துதலே, அழகு மிளிரும் நெஞ்சமாகும்.*

சிறப்புரை: *இயல்பான இனிமையுடைய கரும்பும் இயல்பான ஒளியுடைய சூரியனும் ஈசன் பால் மருவி நிற்றலை ஓதுதல் ஆயிற்று. இத்தன்மையில் மாணிக்க வாசகர், "கண்ணகத்தை நின்று களிதருதேனே! கடலமுதே! விரும்பு அடியார் எண்ணகத்தாய் உலகுக்கு உயிரானாய் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே" என அருளிச் செய்தவாறும் காண்க.*

பெரும் பொருட் கிளவி – திருவைந்தெழுத்து

719. செருத்தனை அருத்தி செய்து
செஞ்சரம் செலுத்தி ஊர்மேல்
கருத்தனைக் கனக மேனிக்
கடவுளைக் கருதும் வானோர்க்கு
ஒருத்தனை ஒருத்தி பாகம்
பொருத்தியும் அருத்தி தீரா

நிருத்தனை நினைந்த நெஞ்ச
நேர்பட நினைந்த வாறே.

தெளிவுரை: போர் செய்தாலன்றி முப்புர அசுரர்களை அழித்தல் ஆகாது என்னும் திருக்குறிப்பால் சரம் தொடுத்த கருத்தன், சிவபெருமான். அவர், கனகம் போன்ற திருமேனியுடைய கடவுள். அவரைக் கருதி ஏத்தும் வானவர்களுக்குத் தலைவராகிய அப்பெருமான், உமாதேவியை உடனாகக் கொண்டு மகிழ்ந்து, தீராக் காதலுடன் திருநடனம் புரிந்து மன்னுயிர்களுக்குப் பேரின்பத்தை வழங்குபவர். அப்பெருமானை நினைக்கும் நெஞ்சமே பெருமை உடையது.

அருத்தி – விருப்பம், அன்பு, காதல்.

720. கூற்றினை உதைத்த பாதக்
குழகனை மழலை வெள்ளேறு
ஏற்றனை இமையோர் ஏத்த
இருஞ்சடைக் கற்றை தன்மேல்
ஆற்றனை அடியார் ஏத்தும்
அமுதனை அமுத யோக
நீற்றனை நினைந்த நெஞ்ச
நேர்பட நினைந்த வாறே.

தெளிவுரை: ஈசன், கூற்றுவனை உதைத்த பாதத்தினர்; குழகர்; மழவிடை ஏறுபவர்; தேவர்கள் ஏத்த சடை முடியின் மீது கங்கையை ஏற்றுத் தரித்தவர்; அடியவர் ஏத்தும் அமுதமாகுபவர்; அமுத யோகத்தை நல்கும் திருநீற்றுமேனியர். அப்பெருமானை நினைக்கும் நெஞ்சமே, பெருமையுடையது.

721. கருப்பனைத் தடக்கை வேழக்
களிற்றினை உரித்த கண்டன்

விருப்பனை விளங்கு சோதி
வியன்கயி லாயம் என்னும்
பொருப்பனைப் பொருப்பன் மங்கை
பங்கனை அங்கை யேற்ற
நெருப்பனை நினைந்த நெஞ்ச
நேர்பட நினைந்த வாறே.

தெளிவுரை: *ஈசன், யானையின் தோலை உரித்தவர்; வீரம் மிக்கவர்; அடியவர்களால் விரும்பப்படுபவர்; நன்கு மேவும் சோதிப் பொருளாகுபவர்; பெருமை யுடைய கயிலாயத்தை உடையவர்; மலையரசன் மகளாகிய உமாதேவியைப் பாகமாக உடையவர்; அழகிய கையில் நெருப்பினை ஏந்தியுள்ளவர். அப்பெருமானை நினைந்து ஏத்தும் நெஞ்சமே, சிறப்புடையது.*

722. நீதியால் நினைப்பு ளானை
நினைப்பவர் மனத்து ளானைச்
சாதியைச் சங்க வெண்ணீற்று
அண்ணலை விண்ணில் வானோர்
சோதியைத் துளக்கம் இல்லா
விளக்கினை அளக்க லாகா
ஆதியை நினைந்த நெஞ்சம்
அழகிதா நினைந்த வாறே.

தெளிவுரை: *ஈசன், விதிப்படி பூசித்து ஏத்துபவர் களுக்கு அருள் புரிபவர்; உளம் கசிந்து ஏத்துவார் மனத்துள் விளங்குபவர்; மேலானவர்; திருவெண்ணீறு தரித்துள்ளவர்; தேவர்களுக்கெல்லாம் ஒளி போன்றவர்; தூண்டாத மணி விளக்காய்த் திகழ்பவர்; அளவிட்டுக் கூற முடியாத சொற்பதம் கடந்த தொன்மையானவர். அப்பெருமானை நினைந்த நெஞ்சம் அழகுடையது.*

சிறப்புரை: *ஈசனுடைய புகழை அளவிட்டுக் கூற முடியாது என்பதும், அவர் ஆதியானவர் என்பதும் "அளக்கலாகா ஆதி" என ஓதப் பெற்றது. இத் தன்மையில், "சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க" என மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசக அமுத வாக்கும் காண்க.*

723. பழகனை உலகுக் கெல்லாம்
பருப்பனைப் பொருப்போடு ஒக்கும்
மழகளி யானையின் தோல்
மலைமகள் நடுங்கப் போர்த்த
குழகனைக் குழவித் திங்கள்
குளிர்சடை மருவ வைத்த
அழகனை நினைந்த நெஞ்சம்
அழகிதா நினைந்த வாறே.

தெளிவுரை: *ஈசன், அன்னியம் யாதும் இன்மையால் யாவும் பழகிய தன்மையுடையவர்; உலகுக்கெல்லாம் பருப்பொருள் ஆகியவர்; மலை போன்ற யானையின் தோலை உரித்தவர்; அழகானவர்; பிறைச் சந்திரனைக் குளிர்ந்த சடை முடியின் மீது பொருந்த வைத்தவர். அவரை நினைந்து ஏத்திய நெஞ்சம் அழகுடையதாகும்.*

724. விண்ணிடை மின்னொப் பானை
மெய்ப்பொரும் பொருளொப் பானைக்
கண்ணிடை மணியொப் பானைக்
கடுவிருட் சுடரொப் பானை
எண்ணிடை எண்ண லாகா
இருவரை வெருவ நீண்ட
அண்ணலை நினைந்த நெஞ்சம்
அழகிதா நினைந்த வாறே.

தெளிவுரை: ஈசன், மேகத்தின் இடையில் ஒளிரும் மின்னலைப் போன்றவர்; மெய்ம்மையில் பெரும் பொருளானவர்; கண்ணுக்குள் கண்மணி போன்றவர்; இருளின்கண் சுடர் போன்றவர்; எண்ணத்தில் ஏத்தி நினைக்காது, திருமால் பிரமன் ஆகிய இருவரும் தேடியபோது நெடிது உயர்ந்த அண்ணலாகியவர். அப்பெருமானை நினைந்த நெஞ்சம், அழகுடையதே.

சிறப்புரை: ஒன்றின் தன்மையை அதற்குள் நின்று வெளிப்படுத்தும் செம்மை "விண்ணிடை மின் ஒப்பானை" எனவும் "கண்ணிடை மணியொப் பானை" எனவும் ஏத்தப் பெற்றது. இத்தன்மையில் திருப்பாட்டு வ.எண் 682இல் ஓதியருளிய வண்ணமும் காண்க. இது, ஈசன், யாவற்றையும் உள் நின்று உணர்த்துதலை ஓதிற்று. இந்நெறியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் மணியொப்பாய் கருவிருள் சுடர் ஒப்பாய்" (திருக்குருகாவூர் வெள்ளடை பாட்டு 6) என அருளிச் செய்தவாறும் காண்க.

725. உரவனைத் திரண்ட திண்டோள்
அரக்கனை ஊன்றி மூன்றூர்
நிரவனை நிமிர்ந்த சோதி
நீள்முடி அமரர் தங்கள்
குரவனைக் குளிர்வெண் திங்கள்
சடையிடைப் பொதியும் ஐவாய்
அரவனை நினைந்த நெஞ்சம்
அழகிதா நினைந்த வாறே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வலிமையுடைய இராவணனை மலையின் கீழ் அடர ஊன்றிய ஈசன், முப்புரங்களை எரித்துச்

சாம்பலாக்கியவர். தேவர்கள் தலைவராகிய அப்பெருமான், பிறைச் சந்திரனைச் சடையின் கண் வைத்து, ஐந்து தலையுடைய நாகத்தைத் தரித்தவர். அவரை நினைந்து ஏத்தும் நெஞ்சம், அழகியதாகும்.

75. பொது

தனித் திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

726. தொண்டனேன் பட்ட தென்னே
தூயகா விரியி னன்னீர்
கொண்டிருக் கோதி யாட்டிக்
குங்குமக் குழம்பு சாத்தி
இண்டைகொண் டேற நோக்கி
ஈசனை எம்பி ரானைக்
கண்டனைக் கண்டி ராதே
காலத்தைக் கழித்த வாறே.

தெளிவுரை: ஈசனே! தொண்டனாகிய நான் இத்துணைக் காலமும் என் செய்தேன்! நன்னீர் கொண்டு பூசனை செய்யவில்லை. குங்குமம் முதலான நறுமணப் பொருள்களைக் கொண்டு ஏத்தவில்லை! இருக்கு முதலான வேதங்களை ஓதியும், தோத்திரங் களைப் பாடியும், இண்டை மாலை புனைந்து சாற்றியும் வழிபடவில்லை. தேவரீரைக் கண்டு தரிசிக்க வில்லை. இவ்வாறு காலத்தைக் கழித்தேனே! தேவரீர் அருள் புரிவீராக.

727. பின்னிலேன் முன்னிலே னான்
பிறப்பறுத்து அருள்செய் வானே
என்னிலேன் ஆயினே னான்
இளங்கதிர்ப் பயலைத் திங்கள்

சின்னிலா எறிக்கும் சென்னிச்
சிவபுரத்து அமரர் ஏறே
நின்னலாற் களைகண் ஆரே
நீறுசேர் அகலத் தானே.

தெளிவுரை: சிவபெருமான் பெருங்கருணை மேவி ஆட் கொண்ட அருள்வயத்தால், பின்னால் நுகர வேண்டிய வினையும் முன் வினையும் நீங்கிப் பெற்றனன். என்னுடையது என்னும் பற்றும், இல்லாதவன் ஆனேன். வெண் திங்களைச் சடைமுடியில் சூடிய ஈசனே! சிவபுரத்தில் மேவும் தேவர் தலைவரே! திருநீறு தரித்த அகன்ற திருமார்பினை உடையவரே! தேவரீரை அன்றித் தாங்கி நின்று அருள் நல்குபவர் யார் உளர்!

அகலம் – திருமார்பு.

728. கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடனிருந்து அறிதி என்று
வெள்கினேன் வெள்கி நானும்
விலா இறச் சிரித்திட் டேனே.

தெளிவுரை: ஈசனே! கள்ளனாகிய நான், அத்தன்மை யில் தொண்டினைச் செய்து, காலத்தைக் கழித்தேன். பின்னர், தெளிவு அடைந்தவனாகித் தேவரீரைத் தேடினேன். நினைப்பவர்களின் நினைப்பினை உள்ளிருந்து அறிபவர், தேவரீரே என்று, நாடிக் கண்டேன். எனவே, நான் வெட்கம் கொண்டேன். என்னுடைய கள்ளத் தன்மையும் தேவரீருடைய

திருக்குறிப்பின் வழி ஆயிற்று என்பதால், நான் என் அறியாமையில் இருந்த நிலை எண்ணி நகைத்தேன்.

சிறப்புரை: இத்திருப்பாட்டானது, ஈசனால் முழுமையாக ஆட்கொள்ளப்பட்ட தன்மையை ஓது தலாயிற்று. ஈசன் உணர்த்தி யருள, யாவும் உணர்ந்த தன்மை, "உள்குவார் உள்கிற் றெல்லாம் உடனிருந்து அறிதி என்று வெள்கினேன்" என, உணர்த்தப் பெற்றது. இந்நிலையை, "அறிவிலாத எனைப் புகுந்து ஆண்டு கொண்டு அறிவதை அருளி மேல் நெறியெலாம் புலம் ஆக்கிய எந்தையைப் பந்தனை அறுப்பானை" (திருச்சதகம் 32) என அருளிச் செய்த மாணிக்கவாசகர் அமுத மொழியாலும் காண்க.

வெள்குதல் – வெட்கப்படுதல்; அஞ்சுதல்.

729. உடம்பெனும் மனைய கத்து
 உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி
 உயிரெனும் திரி மயக்கி
இடம்படு ஞானத் தீயால்
 எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
 கழலடி காண லாமே.

தெளிவுரை: உடம்பு என்னும் மனையில் (இல்லம்) உள்ளத்தை அகல் விளக்காகவும், உணர்வினை நெய்யாகவும் கொண்டு, உயிர் என்கிற திரியை வைத்து ஞானமாகிய நெருப்பால் எரியுமாறு செய்து நோக்கினால், கடம்பமலர் மாலை அணிந்த முருகக் கடவுளின் தாதையாகிய சிவபெருமானின் திருக் கழலைக் காணலாம்.

இது, வாழும் வீட்டிற்கு விளக்கு இன்றியமைமை யாதல் போன்று, இத்தேகத்திற்கு ஞான தீபம் இன்றியமையாதது என உணர்த்துவதாயிற்று.

தகளி – அகல் விளக்கு.

730. வஞ்சப்பெண் ணரங்கு கோயில்
வாளெயிற்று அரவந் துஞ்சா
வஞ்சப் பெண் ணிருந்த சூழல்
வான்தவழ் மதியம் தோயும்
வஞ்சப்பெண் வாழ்க்கை யாளன்
வாழ்வினை வாழலுற்று
வஞ்சப்பெண் ணுறக்க மானேன்
வஞ்சனேன் என் செய்கேனே.

தெளிவுரை: *(வஞ்சப் பெண்ணாகிய)* கங்கை சூடிய இடத்தில் அரவமானது, துயிலாது விழித்திருக்க, அச் சூழலில் அது, ஈசனின் சடையில் மேவும் சந்திரனை விழுங்க நோக்குகின்றது. உமாதேவியைப் பாகமாகக் கொண்டு மேவும் பெருமானை நோக்கும் கங்கை யினில், சந்திரன் தோய்கின்றது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிப்பினைக். கொண்டு விளங்க, நான் ஒரு வஞ்சப் பெண் போன்று, ஈசனின் அருட்பேற்றினை மனத்திற் கொண்டு, பொய் உறக்கம் கொண்டேன்.

இத்திருப்பாட்டானது, கங்கையும் உமையவளும் ஈசன் பால் துய்க்கும் பேரின்பத்தைக் கவி நயம் தோன்றுமாறு உணர்த்துலாயிற்று. நாவுக்கரசர் சிவானந்தத் தேனைப் பருகும் நோக்கில் பொய்யுறக்கம் மேவினர் எனப் புகன்றதாம்.

731. உள்குவார் உள்ளத் தானை
உணர்வெனும் பெருமை யானை

உள்கினே னானும் காண்பான்
உருகினேன் ஊறி யூறி
எள்கினேன் எந்தை பெம்மான்
இருதலை மின்னுகின்ற
கொள்ளிமேல் எறும்பென் உள்ளம்
எங்ஙனம் கூடு மாறே.

தெளிவுரை: ஈசன் தன்னை நினைப்பவர்களின் உள்ளத்தில் மேவி அவர்களுடைய உணர்வாக விளங்குபவர். அவரை, நான் உள்கி, உருகி, ஊறி நின்று, அரியவராகக் கொள்ளாது எளியவராகக் கருதினேன். இருபக்கமும் நெருப்பு மின்னி எரிய, இடைப்பட்ட எறும்புபோல, என் உள்ளமானது பரிதவிக்கின்றது. ஈசனுடைய திருவடிப் பேற்றை அடைய வேண்டும் என்று உள்ளம் அலைபாய்கின்றது.

சிறப்புரை: உள்ளம் பெறுகின்ற வேகம் கொள்ளியின் இடைப்பட்ட எறும்புக்கு ஒப்புமை கூறப்பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "இருதலைக் கொள்ளியினுள் எறும்பு ஒத்து நினைப் பிரிந்த விரிதலையேனை விடுதிகண்டாய்" (நீத்தல் விண்ணப்பம் 9) என அருளிச் செய்தவாறும் காண்க.

732. மோத்தையைக் கண்ட காக்கை
போலவல் வினைகள் மொய்த்துன்
வார்த்தையைப் பேச வொட்டா
மயக்கநான் மயங்கு கின்றேன்
சீத்தையைச் சிதம்பு தன்னைச்
சொடிகொள் நோய் வடிவொன் றில்லா
ஊத்தையைக் கழிக்கும் வண்ணம்
உணர்வு தா உலகமூர்த்தீ.

தெளிவுரை: *ஈசனே! ஊனைக் கண்டு காக்கைகள் மொய்த்தல் போல, நான் வல்வினைகளால் மொய்க்கப் பெற்றுத் தேவரீருடைய திருவைந் தெழுத்தை உரையாதவனாய் மயங்குகின்றேன். உலகமூர்த்தியாய் விளங்கும் பெருமானே! இத்தேகமானது, சீழும், புண்ணும், பிணியும், அழுக்கும் உடையது. இதனை நீக்கிப் பிறவாப் பெரு நலமாகிய வண்ணமும் அதற்கு உபாய மாகும் உணர்வையும் தந்தருள்வீராக.*

மோத்தை – ஊன். காக்கை கொத்தும் பிண்டத்தைக் குறித்தது.

733. அங்கத்தை மண்ணுக் காக்கி
ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப்
பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா
சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதா
இங்குற்றேன் என் கண்டாயே.

தெளிவுரை: *பரமனே! என்னுடைய தேகத்தை இம் மண்ணுக்கும், அன்பின் வழியாகிய உணர்வினைத் தேவரீருக்கும் அர்ப்பணித்தேன். உலகப் பற்றினைக் கழிந்து செல்லுமாறு நீக்கி, அதனைச் சிவப்பற்றாக மாற்றி நிலவுகின்றேன். திருவெண்ணீறு குழையப் பூசிச் சங்கு போன்ற திருமேனியராக மேவும் செல்வனே! சாயும் நாளாகிய அந்திமக் காலத்தில் நாயேனாகிய அடியவன், தேவரீரை எண்ணி எங்குற்றீர், என்று வினவும் போது நான் இங்கு உற்றேன் என்று உணர்த்தி அருள் புரிவீராக.*

சிறப்புரை: ஈசனை, உடலானது அட்டாங்க வணக்கத்தால் மண்ணிற் படிந்து வணங்குதலும் அவ்வமயம் உணர்வானது ஈசன் பால் செல்லுமாறு ஒருமுகப் படுத்தலும் ஆகிய மாண்பானது, "அங்கத்தை மண்ணுக்கு ஆக்கி ஆர்வத்தை உனக்கே தந்து" எனச் சுட்டப் பெறுதலாயிற்று.

பங்கம் – உலகப் பற்று; போகமாற்றி – போகுமாறு நீக்கிச் சிவப்பற்றாக மாற்றி.

734. வெள்ளநீர்ச் சடைய னார்தாம்
வினவுவார் போல வந்தென்
உள்ளமே புகுந்து நின்றார்க்கு
உறங்குநான் புடைகள் போந்து
கள்ளரோ புகுந்தீர் என்னக்
கலந்துதான் நோக்கி நக்கு
வெள்ளரோம் என்று நின்றார்
விளங்கு இளம் பிறைய னாரே.

தெளிவுரை: ஈசன், கங்கையைச் சடையில் தரித்தவர். அவர், என்னுடைய நலன்களை வினவுவார் போல் வந்து என் உள்ளத்தில் புகுந்து நின்றார். நான் அறியாமையால் உறங்கிக் கிடந்தேன். பின்னர் தெளிந்து, அப்பெருமானை நோக்கிக் கள்ளரோ புகுந்தீர்! எனக் கேட்டேன். அவர் என்னுள் கலந்த வராய் நோக்கி, "நான் கள்ளர் இல்லை, வெள்ளர்" (தூய்மையானவர்) என்று நின்றார். அவர், இளமை யான பிறைச் சந்திரனைச் சூடிய இறைவரே.

வெள்ளர் – தூய்மையானவர், கங்கை தரித்தவர். "காப்பிடு கள்ளரை வெள்ளர் தொடர்ந்திட்டுக் கூப்பிட மீண்டதோர் கூறை கொண்டாரே" என்பது (திருமந்திரம் 2900) திருமூலர் திருவாக்கு.

735. பெருவிரல் இறைதான் ஊன்றப்
பிறைஎயிறு இலங்க அங்காந்

தருவரை யனைய தோளான்
அரக்கன் அன்று அலறி வீழ்ந்தான்
இருவரும் ஒருவ னாய
உருவம் அங்கு உடைய வள்ளல்
திருவடி சுமந்து கொண்டு
காண்கநான் திரியு மாறே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், தனது பெருமை மிக்க விரல் ஒன்றினை ஊன்ற மலை போன்ற தோளுடைய அரக்கனாகிய இராவணன் அலறி வீழ்ந்தான். அப்பெருமான், கங்கையும் உமாதேவியும் திகழத் தன்பால் கொண்டு விளங்கும் வள்ளல். அவருடைய திருவடியை என் நெஞ்சின்கண் வைத்து நான் திரிகின்றேன் காண்பீராக.

சிறப்புரை: ஈசன், கங்கையைத் திருமுடியிலும் உமாதேவியைத் திருமார்பிலும் கொண்டு விளங்க, அப்பெருமான் நெஞ்சில் திகழும் பெற்றியினை இத்திருப் பாட்டு ஓதுதல் ஆயிற்று. இச்சிறப்பினைத் திருப்பாட்டு எண் 696இல் உரைத்தவாறும் காண்க.

76. பொது

தனித்திருநேரிசை

பண் : கொல்லி

736. மருளவா மனத்த னாகி
மயங்கினேன் மதியி லாதேன்
இருளவா அறுக்கும் எந்தை
இணையடி நீழல் என்னும்
அருளவாப் பெறுதல் இன்றி
அஞ்சிநான் அலமந் தேற்குப்

பொருளவாத் தந்த வாறே
போதுபோய்ப் புலர்ந்த தன்றே.

தெளிவுரை: நான், மருள் உடையவன்; ஆசையும் உடையவன். இத்தகைய தன்மையால் மயங்கி மதியில்லாதவனானேன். இருளாகிய அஞ்ஞானத்தையும், அவா என்னும் பற்றையும் அறுப்பவர், ஈசன். அப்பெருமானுடைய திருவடி நிழலில் இருந்து அருளைப் பெறாதவனாகி அச்சத்தால் துயர் கொண்டேன். அப்போது, பெரும் பொருளாகியும் நிலையானதுமாகிய தேவரீர், என்னைப் பற்றி ஆட்கொண்டு அருள் புரிந்தீர். நான் மகிழ்ந்தேன்.

சிறப்புரை: மருள் அவாவும் இருள் அவாவும் நீங்குதலும், அருள் அவா பெறும் இன்றியமையாமையும், அதுவே, பொருள் அவா என்னும் மெய்ப்பொருள் என்பதும், இவண் சுட்டப் பெற்றது. பிற பற்றுகளை நீக்குதலும், சிவனையே பற்றி இருத்தலும் இவண் ஏத்தப் பெறுவதாம்.

737. மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே.

தெளிவுரை: மெய்ம்மையாகிய உழவு செய்து, ஈசன்பால் விருப்பம் என்னும் விதைவிதைத்துப் பொய்மையாகிய அஞ்ஞானத்தைக் களை எடுத்துப் பொறுமை என்னும் நீர்பாய்ச்சி, அன்புப் பயிரை வளர்க்க

வேண்டும். அந்நிலையில் தன்னையே அறிந்து தகவு எனும் வேலி கொண்டு, செம்மை என்னும் நிலையில் மேவச் சிவகதியை விளைவிக்கும்.

தம்மை நோக்குதல் – தன்னையறிந்து இன்பம் உறுதல்.

738. எம்பிரான் என்ற தேகொண்டு
என்னுளே புகுந்து நின்றிங்கு
எம்பிரான் ஆட்ட ஆடி
என்னுளே உழிதர் வேனை
எம்பிரான் என்னைப் பின்னைத்
தன்னுளே கரக்கும் என்றால்
எம்பிரான் என்னின் அல்லால்
என்செய்கேன் ஏழை யேனே.

தெளிவுரை: நான், தலைவனாகிய ஈசனை எண்ணி இருந்தேன். அப்பெருமான், என் உள்ளத்தில் புகுந்து நின்று என்னைச் செலுத்துபவரானார். உள்ளத்தின் உள் புகுந்த அப்பெருமானை, நான் உள்ளத்தின் உள்ளே தேடித் திரிகின்றேன். அவர், என்னைத் தனக்குள்ளே மறைத்துக் கொண்ட பின்னர், அவரை, எம்பெருமான் என்று சொல்வதைத் தவிர, நான் வேறு என்ன செய்வேன்.

சிறப்புரை: இது, ஈசன், உள்ளம் புகுந்து முழுமையும் ஆட்கொண்ட ஆளுமையை ஓதுதலாயிற்று. இத்தன்மையில், "ஊன் ஆர் உடல் புகுந்தான், உயிர் கலந்தான், உளம் பிரியான். தேனார் சடை முடியான் மன்னு திருப்பெருந்துறை உறைவான்" (உயிருண்ணிப் பத்து 2) என அருளிச் செய்த மாணிக்கவாசகரின் அமுதமொழியும் காண்க.

739. காயமே கோயி லாகக்
கடிமனம் அடிமையாக

வாய்மையே தூய்மை யாக
மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா
நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப்
போற்றவிக் காட்டி னோமே.

தெளிவுரை: இவ்வுடம்பைக் கோயிலாகவும், நறுமண நினைவுகளையுடைய மனத்தை அடிமையாகவும் கொண்டு, வாய்மையைத் தூய்மையாகவும் வைத்து, மனத்தின் மணியாக மேவும் ஆன்மாவை இலிங்க மாகப் பாவித்து, நேயத்தை நெய்யும் பாலாய் நிறைய அமைத்துப் பூசித்து, இறைவனை ஏத்தினேன்.

சிறப்புரை: உயிர்க்கு உயிராகிய இறைவனை மனமணி இலிங்கமாக ஓதப் பெறுதலாம். இது அகப்பூசனை யாகவும் அதனை அகமலராகிய கொல்லாமை, அருள், ஐம்பொறி அடக்கல், பொறை, தவம், வாய்மை, அன்பு, அறிவு ஆகியன கொண்டு ஏத்துதலும் ஆயிற்று. மற்றும் திருப்பாட்டு வ.எண் 312 நோக்குக.

மனமணி – மனத்தில் ஒளிரும் மணி; மனத்தின் அணி.

740. வஞ்சகப் புலைய னேனை
வழியறத் தொண்டிற் பூட்டி
அஞ்சல்என்று ஆண்டு கொண்டாய்
அதவுநின் பெருமை யன்றே
நெஞ்சகம் கனிய மாட்டேன்
நின்னையுள் வைக்க மாட்டேன்
நஞ்சிடம் கொண்ட கண்டா
என்னென நன்மைதானே.

தெளிவுரை: வஞ்சகமும் கீழ்மையும் உடைய அடியவனைத் தொண்டனாக்கிய நீல கண்டனே!

தேவரீர் என்னை ஆண்டு கொண்டது, தேவரீருடைய பெருமையே ஆகும். ஆயினும், என் நெஞ்சம் பக்தியால் கனியவில்லை; தேவரீரை நினைத்து ஏத்தவும் இல்லை. தேவரீருடைய திருநாமத்தை ஓதி உரைத்தலானது நன்மையே தரும்.

என்னெனா – திருநாமத்தை ஓதும் தன்மையைக் குறித்தது.

741. நாயினும் கடைப்பட் டேனை
நன்னெறி காட்டி யாண்டாய்
ஆயிரம் அரவம் ஆர்த்த
அமுதனே அமுதம் ஒத்து
நீயும்என் நெஞ்சின் உள்ளே
நிலவினாய் நிலாவி நிற்க
நோயவை சாரு மாகில்
நோக்கிநீ அருள்செய் வாயே.

தெளிவுரை: ஈசனே! நான், நாயினும் இழிந்தவன். ஆயினும் நன்னெறியினைக் காட்டியருளி ஆட் கொண்டீர். ஆயிரம் அரவம் ஆர்த்துத் திகழும் அமுதனே! தேவரீர், அமுதம் போன்று என் நெஞ்சினுள் நிலவி, யாவிலும் வியாபித்து மேவும் ஈசனே! பிறவி நோய் என்னைச் சாருமானால் அதனைத் திருக்கண்ணால் விழித்து நோக்கம் செய்து காத்து, அருள் புரிவீராக.

ஆயிரம் – பல. நோய் – பிறவிப்பிணி.

742. விள்ளத்தான் ஒன்று மாட்டேன்
விருப்பெனும் வேட்கை யாலே
வள்ளத் தேன் போல நின்னை
வாய்மடுத்து உண்டி டாமே
உள்ளத்தே நிற்றி யேனும்
உயிர்ப்புளே வருதி யேனும்

கள்ளத்தே நிற்றி அம்மா
எங்ஙனம் காணு மாறே.

தெளிவுரை: ஈசனே! தேவரீருடைய திருநாமங்களைக் கூறி மனம் ஒரு மித்து ஏத்த மாட்டேன். தேவரீரை விருப்புடன் நினைத்து, வட்டிலில் உள்ள தேன் போல நும்மை வாயால் பருகி உட்கொள்ளவும் மாட்டேன். தேவரீர், என் உள்ளத்தில் நிற்பவர்; உயிர்ப்பாக விளங்குபவர்; மறைந்து விளங்கிக் கள்ளத்தராய் மேவுபவர். நான் எங்ஙனம் காண்பேன்.

ஈசன், உள்ளத்தின்கண் ஓங்காரமாய் மேவும் மெய்யனாக, "உறவே போற்றி உயிரே போற்றி" என மாணிக்கவாசகர் அருளிச் செய்தவாறு உள்ளத்தின் கண் ஒளிர்தல் ஓதுதலாயிற்று.

வள்ளம் – வட்டில், தொன்னை.

743. ஆசைவன் பாசம் எய்தி
அங்குற் றேன் இங்குற் றேனாய்
ஊசலாட் டுண்டு வாளா
உழந்து நான் உழிதராமே
தேசனே தேச மூர்த்தீ
திரு மறைக் காடு மேய
ஈசனே உன்றன் பாதம்
ஏத்துமாறு அருள்எம் மானே.

தெளிவுரை: ஈசனே! ஒளிமயமாக விளங்கும் பெருமானே! திருமறைக் காட்டில் மேவும் பெருமானே! கொடிய ஆசாபாசங்களால் இங்கும் அங்குமாய் ஊசலாடி அலைந்து, பயனின்றி உழன்று நான் திரியாதவாறும் தேவரீரை ஏத்துமாறும் அருள் புரிவீராக.

744. நிறைவி லேன் நேச மில்லேன்
நினைவிலேன் வினையின் பாச
மறைவிலே புறப்பட் டேறும்
வகையெனக்கு அருளென் எம்மான்
சிறையிலேன் செய்வ தென்னே
திருவடி பரவி யேத்தக்
குறைவி லேன் குற்றம் தீராய்
கொன்றைசேர் சடையி னானே.

தெளிவுரை: ஈசனே! நான், நிறைவு இல்லாதவன்; நேசம் இல்லாதவன்; தியானம் செய்யும் பாங்கில்லாதவன். வினையின் பாசத்தால் மறைக்கப்பட்டு அஞ்ஞானத்தில் உறங்கும் என்னை, அதிலிருந்து விடுவித்து மேல் நிலைக்குச் செல்லுமாறு அருள் புரிவீராக. இவ்வுடம்பைக் கொண்டு என்ன செய்வது? திருவடியைப் பரவி ஏத்துவதற்கு நான் குற்றத்தில் குறைவற்றவனாகியவன். கொன்றை, மலர் தரித்த சடை முடியுடைய பெருமானே! என் குறைகளைத் தீர்த்து அருள்வீராக.

சிறையிலேன் – சிறையாகிய இல்லம் உடையவன்; உடம்பு.

சிறப்புரை: ஈசன் ஒருவரே, நிறைவுடையவர். ஆதலால் "நிறைவிலேன்" என ஓதப் பெற்றது. இத்தகைய ஈசனின் பெருமையினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "குறைவிலா நிறைவே குணக்குன்றே" (திருவாவடுதுறை திருப்பதிகம் 6) என அருளிச் செய்தவாறும் காண்க.

745. நடுவிலாக் காலன் வந்து
நணுகும் போது அறிய வொண்ணா
அடுவன அஞ்சு பூதம்
அவைதமக்கு ஆற்ற லாகேன்
படுவன பலவும் குற்றம்
பாங்கிலா மனிதர் வாழ்க்கை

கெடுவதிப் பிறவி *சீசீ*
கிளரொளிச் சடையினீரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: உள்ளத்தால் ஏற்கப் பெறாத காலன் நண்ணும் போது, அறிய முடியாது. ஐந்து புலன்களும் அடர்த்துத், துன்புறுத்தி ஆற்றலை இழந்தேன். செய்வது யாவும் குற்றம் உடையது. இதுவே மனித வாழ்க்கையின் பாங்கற்ற தன்மை. இப்பிறவி நன்மைக்காக இல்லை, தீமைக்கே ஆயிற்று. இது இகழத்தக்கது. ஒளிரும் சடை முடியுடைய ஈசனே! அருள் புரிவீராக.

சீசீ – பிறப்பின் இகழ்ச்சியை விளித்தது.

77. பொது

தனித்திருநேரிசை

பண் : *கொல்லி*

திருச்சிற்றம்பலம்

746. கடும்பகல் நட்டம் ஆடிக்
கையிலோர் கபாலம் ஏந்தி
இடும்பலிக்கு இல்லந் தோறும்
உழிதரும் இறைவ னீரே
நெடும்பொறை மலையர் பாவை
நேரிழை நெறிமென் கூந்தல்
கொடுங்குழை புகுந்த அன்றும்
கோவணம் அரைய தேயோ.

தெளிவுரை: ஈசனே, கடும் பகலிலும் நடனம் ஆடிக் கையினில் ஒரு கபாலத்தை ஏந்தி, இடுகின்ற பலியை ஏற்க, இல்லங்கள் தோறும் திரியும் இறைவன்.

தேவரீரே! நீவிர், பொறுமையின் வயமாகிய மலையரசனின் மகளான உமாதேவியை உடனாகக் கொண்ட போதும், கோவண ஆடையை அணிந்திருப்பது விந்தையே.

747. கோவணம் உடுத்த வாறும்
கோளரவு அசைத்த வாறும்
தீவணச் சாம்பர் பூசித்
திருவுரு இருந்த வாறும்
பூவணக் கிழவ னாரைப்
புலியுரி அரைய னாரை
ஏவணச் சிலையி னாரை
யாவரே எழுது வாரே.

தெளிவுரை: ஈசன், கோவண ஆடை உடுத்தியவர்; அரவத்தை அரையில் கட்டியவர்; தீவண்ண முடைய செம்மேனியில், திருவெண்ணீற்றைப் பூசியவர்; செந்தாமரை ஒத்த வண்ணம் உடையவர்; புலியின் தோலை அரையில் கட்டியவர்; மேரு மலையை வில்லாகக் கொண்டு அம்பு தொடுப்பவர். அப்பெருமானை யாவர் காண இயலும்.

பூ – செந்தாமரை; ஏ – அம்பு; சிலை – மேருமலை வில்.

748. விளக்கினார் பெற்ற இன்பம்
மெழுக்கினால் பதிற்றி யாகும்
துளக்கிநல் மலர்தொ டுத்தால்
தூயவிண் ணேற லாகும்
விளக்கி ட்டார் பேறு சொல்லின்
மெய்ஞ் ஞெறி ஞான மாகும்
அளப்பில கீதம் சொன்னார்க்கு
அடிகள்தாம் அருளு மாறே.

தெளிவுரை: திருக்கோயிலைத் திருஅலகினால் தூய்மை செய்து சிவ புண்ணியத்தை ஆற்றுபவர்கள், இன்பத்தை அடைவார்கள். இத்திருச் செயலால் மட்டும் அல்லாது தூய நீர் கொண்டு மெழுகித் தூய்மை செய்பவர் களுக்கு, அத்தகைய இன்பமானது பத்து மடங்கு பெருகும். ஈசனை மலர் கொண்டு தூவி அருச்சிப் பவர்கள், தூய்மையான விண்ணுலகத்தை அடையும் பெருமை பெறுவார்கள். சிவாலயத்திற்குத் தீபம் ஏற்றி ஒழுகுபவர்கள், மெய்ஞ்ஞானத்தைப் பேறாகக் கொள்வார்கள். இறைவனைப் போற்றிப் பாடும் அன்பர்களுக்கு ஈசன் திருவருள் புரிபவர்.

இது, திருக்கோயிலில் விளக்கிடுதலும், மெழுகிடுதலும் தீபம் ஏற்றுதலும், ஈசனுக்கு மலர் தொடுத்துச் சாற்றுதலும், அப்பெருமானுடைய புகழைப் பாடுதலும் மாந்தர்க்கு உரிய பணியாதலையும். அவற்றின் வாயிலாக அடையப் பெறும் பேறு ஆதலையும் உணர்த்திற்று.

விளக்கினார் – திருவலகால் தூய்மை செய்தல்;
விளக்கிட்டார் – தீபம் ஏற்றுதல்.

749. சந்திரற் சடையில் வைத்த
சங்கரன் சாம வேதி
அந்தரத்து அமரர் பெம்மான்
ஆன்நல்வெள் ஊர்தி யான்றன்
மந்திர நமச்சிவாய
ஆகநீறு அணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும்
வெவ்வழல் விறகிட்டு அன்றே.

தெளிவுரை: ஈசன், சந்திரனைச் சடை முடியில் திகழ வைத்தவர்; சங்கரன்; சாமவேதத்தை ஓதுபவர்; தேவர்

களின் தலைவர்; வெள்ளை இடபத்தை வாகனமாக உடையவர். திருவைந்தெழுத்தாகிய நமச்சிவாய என ஓதித் திருவெண்ணீற்றினை அணிய, வினையாகிய நோயானது, எரியும் நெருப்பில் விறகினை இட்டது போல, அழியும்.

சிறப்புரை: இத்திருப்பாட்டானது, திருவைந்தெழுத்தினை ஓதுதலையும், அப்பெரியதாகிய மகா மந்திரத்தை ஓதி, திருநீறு அணிதலையும் ஏத்துவதாயிற்று. இத்தன்மையில், "விண்ணுற அடுக்கிய விறகில் வெவ்வழல் உண்ணிய புகில் அவை ஒன்றும் இல்லையாம்; பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே" என்னும் திருப்பாட்டும் (வ.எண் 106) காண்க. திருவைந்தெழுத்தின் சிறப்பினை, மாணிக்கவாசகர், "நமச்சிவாய என்று உன்னடி பணியாப் பேயனாகிலும் பெருநெறி காட்டாய்" (ஏசத்திலாப் பத்து 7) என, அருளிச் செய்தவாறும் ஓர்க.

சங்கரன் – மங்களம் செய்பவர், அருளும் கரத்தினர்.

750. புள்ளுவர் ஐவர் கள்வர்
புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறை கொள்வர்
தூநெறி விளைய வொட்டார்
முள்ளுடை அவர்கள் தம்மை
முக்கணான் பாத நீழல்
உள்ளிடை மறைந்து நின்றங்கு
உணர்வினால் எய்ய லாமே.

தெளிவுரை: வஞ்சகராகிய ஐந்து புலன்கள், கள்வர் எனப் புகுந்து துள்ளிச் சுறை கொண்டு, தூய நெறியினை விளைவிக்காதவராகி உள்ளனர். முள்

போன்று குத்தித் தாக்கும் அக் கொடியவர்களை, முக்கண் நாயகனாகிய ஈசனின் திருப்பாத நீழலில் நின்று இருந்து சிவஞான உணர்வு எய்தி, வெல்லலாம்.

புள்ளுவர் – வஞ்சகர்.

751. தொண்டனேன் பிறந்து வாளாத்
தொல்வினைக் குழியில் வீழ்ந்து
பிண்டமே சுமந்து நாளும்
பெரிய தோர் அவாவிற் பட்டேன்
அண்டனே அமரர் கோவே
அறிவனே அஞ்சல் என்னாய்
தெண்டிரைக் கங்கை சூடும்
திகழ்தரு சடையி னானே.

தெளிவுரை: தொண்டனாகிய யான், பிறந்து, சஞ்சித பிராரத்த வினைக் குழியில் வீழ்ந்து, இவ்வுடம்பைச் சுமந்து, நாள்தோறும், ஆசை வயப்பட்டு அழிகின்றேன். இது இப்பிறவியில் செய்யும் ஆகாமிய வினையைப் பெருக்குவதாயிற்று. ஈசனே! தேவர்களின் தலைவனே! யாவையும் அறிந்த பெருமானே! கங்கை சூடும் சடையுடைய நாதனே! அஞ்சாதே என, உரைப்பீராக.

752. பாறினாய் பாவி நெஞ்சே
பன்றி போல் அளற்றிற் பட்டுத்
தேறிநீ நினைதி யாயிற்
சிவகதி திண்ண மாகும்
ஊறலே உவர்ப்பு நாறி
உதிரமே ஒழுகும் வாசல்
கூறையால் மூடக் கண்டு
கோலமாக் கருதி னாயே.

தெளிவுரை: பாவத்தில் தோயும் நெஞ்சே! சேற்றில் திளைக்கும் பன்றியைப் போன்று வினைச் சேற்றில்

அழுந்தி இழிவாகின்றனையே! நீ, ஈசனை நினைத்து ஏத்தினால், சிவகதி உறுதியாகக் கிடைக்கும். உவர்ப்பு நீர் பெருகி, நாற்றம் கொண்டு, உதிரம் ஒழுகும் துவாரங்கள் கொண்ட தேகத்தால் மூடப்பெற்ற இவ்வுடம்பினை, அழகுடையதெனக் கொண்டனையே! அதனைத் தவிர்க. ஈசனை எண்ணுக.

இது, பன்றியானது இழிவுறுதலை உணராத தன்மையைப் போன்று, உடலின் இழிவை உணராது மயங்கும் உயிருக்கு, உபதேசம் வழங்குதல் ஆயிற்று.

753. உய்த்தகால் உதயத்து உம்பர்
உமையவள் நடுக்கம் தீர
வைத்தகால அரக்க னோதன்
வான்முடி தனக்கு நேர்ந்தான்
மொய்த்தகான் முகிழ்வெண் திங்கள்
மூர்த்தியென் உச்சி தன்மேல்
வைத்தகால் வருந்தும் என்று
வாடிநான் ஒடுங்கி னேனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கயிலையின் மீது ஊன்றிய ஈசனது திருவிரலைத் தாங்காத இராவணன், நைந்து வாடினான். திங்களைச் சூடிய நாதனாகிய அப்பெருமான், என் உச்சியின் மீது திருவடியை வைத்த ஞான்று, எனது வன்மைக்கு இறைவனின் மென்மை யான மலர்ப்பாதம் வருந்தும் என வாடி நான் ஒடுங்கினேன்.

78. பொது

குறைந்த திருநேரிசை

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

754. வென்றிலேன் புலன்கள் ஐந்தும்
வென்றவர் வளாகந் தன்னுள்
சென்றிலேன் ஆதலாலே
செந்நெறி அதற்கும் சேயேன்
நின்றுளே துளும்பு கின்றேன்
நீசனேன் ஈசனேயோ
இன்றுளேன் நாளை இல்லேன்
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: ஈசனே! நான், என்னுள் நிலவித் துன்புறுத்தித் தீங்கு விளைவிக்கும் ஐம்புலன்களை வெற்றி கொள்ளாதவன். புலன்களை வென்ற யோகிகளின் பால் சென்றடைந்து, வெற்றி கொள்ளும் செந்நெறியைக் கொள்ளாதவன். உள்ளத்தில் துன்பம் அடைந்து, நீசனாக இழிகின்றேன். இன்று இருப்பதும், நாளை இல்லை என்பதும் ஆகிய தன்மையில் நான், எக்காரணத்தை யொட்டிப் பிறந்தேன். தேவரீர், அருள் புரிந்து ஆட்கொள்வீராக.

755. கற்றிலேன் கலைகள் ஞானம்
கற்றவர் தங்க ளோடும்
உற்றிலேன் ஆத லாலே
உணர்வுக்கும் சேயன் ஆனேன்
பெற்றிலேன் பெருந்தடங் கண்
பேதைமார் தமக்கும் பொல்லேன்

எற்றுளேன் இறைவ னேநான்
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: இறைவனே! நான், வேதசாத்திர நூல் களைக் கற்றிலேன்; கற்றவர் பால் அடைந்து அதன் சாரத்தைக் கேள்வி ஞானத்தால் பெற்றிலேன்; ஞான உணர்வுக்கு அப்பாற்பட்டவனாகி அஞ்ஞானத்தின் பிடியில் இழிகின்றேன்; நன்மை ஏதும் பெற்றிலேன்; பேதையர் பால் திரிந்து புன்மையனாகிப் பொலி விழந்தேன். நான் எதன் பொருட்டு இப்பிறவியைக் கொண்டு இங்கு உள்ளேன்! தேவரீர் அருள் புரிவீராக.

756. மாட்டினேன் மனத்தை முன்னே
மறுமையை உணர மாட்டேன்
மூட்டிநான் முன்னை நாளே
முதல்வனை வணங்க மாட்டேன்
பாட்டினாய் போல நின்று
பற்றதாம் பாவம் தன்னை
ஈட்டினேன் களைய மாட்டேன்
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: ஈசனே! மனத்தை, இக வாழ்க்கையின் தன்மையில் செலுத்தி, மறுமைக்குரிய உணர்வற்ற வனாகி, இளம் பிராயத்தில் முனைந்திருந்து தேவரீரை வணங்காதவனானேன். மெய்ப்பயனின்றித் தன்பற்று உடையவனாகிப் பாடுபட்டுப் பாவத்தை ஈட்டினேன். அதனைப் போக்கிக் கொண்டு உய்வு பெறுமாறு தேவரை ஏத்த மாட்டேன். நான் யாது பற்றி இப்பிறவி யைக் கொண்டுள்ளேன். தேவரீர் அருள் புரிவீராக.

757. கரைக்கடந்து ஓதம் ஏறும்
கடல்விடம் உண்ட கண்டன்

உரைக் கடந்து ஓது நீர்மை
உணர்ந்திலேன் ஆத லாலே
அரைக் கிடந்து அசையு நாகம்
அசைப்பனே இன்ப வாழ்க்கைக்கு
இரைக் கடைந்து உருகு கின்றேன்
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: கடலில் தோன்றிய விடத்தை உண்டு தேவர்களைக் காத்தருளிய நீலகண்டராகிய சிவபெருமான், சொல்லும் உரைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவராகி, வாக்கு மனோதீதமானவர். அப்பெருமானை, நான் உணராதவனானேன். அரவத்தை அரையில் கட்டிய பெருமானே! உலகத்தில் பெறும் இரையாகிய உணவைக் கொள்ளும் உடல் வாழ்க்கைக்கே உருகித் தேவரீரை உணராத வனானேன். நான் எதன் பொருட்டு இப்பிறவியைக் கொண்டேன்! அருள் புரிவீராக.

758. செம்மைவெண் ணீறு பூசும்
சிவனவன் தேவ தேவன்
வெம்மைநோய் வினைகள் தீர்க்கும்
விகிர்தனுக்கு ஆர்வம் எய்தி
அம்மைநின்று அடிமை செய்யா
வடிவிலா முடிவில் வாழ்க்கைக்கு
இம்மைநின்று உருகு கின்றேன்
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: ஈசன், உயிர்களுக்குச் செம்மையாகிய சிவப் பேற்றினை அளிக்க வல்ல திருவெண்ணீற்றைப் பூசி விளங்குபவர். அவர், தேவர்களுக்கெல்லாம் தலைவர். வெம்மையாகிய பிறவி நோயும், அதற்குக் காரண மாகிய வினையும், தீர்ப்பவர். விகிர்தராகிய அவ்விறைவன் பால் முன்னரே ஏத்தி வணங்காமை

யால் முடிவற்ற பிறவியை அமைத்துக் கொண்டு இப்போது கலங்குகின்றேன். அன்புடன் ஏத்துகின்றேன். நான் எதன் பொருட்டு இப்பிறவியை அடைய வேண்டும்! தேவரீர், அருள் புரிவீராக.

அம்மை – முற்பிறவி. இளமைக்காலம்; உருகுதல் – கசிந்து ஏத்துதல்; கலங்கி வருந்துதல்.

759 பேச்சொடு பேச்சுக் கெல்லாம்
பிறர்தமைப் புறமே பேசக்
கூச்சிலேன் ஆதலாலே
கொடுமையை விடுமாறு ஓரேன்
நாச்சொலி நாளு மூர்த்தி
நன்மையை உணர மாட்டேன்
ஏச்சுளே நின்று மெய்யே
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: ஈசனே! பிறரைப் பற்றிக் குறை கூறுவதையே என் இயல்பாகக் கொண்டு பேசினேன். அத்தகைய சொற்களைக் கூறுதல் கொடியது என்று அறிகிலேன். அவற்றைக் கூச்சம் இல்லாது செய்து, அத்தகைய கொடுமையிலிருந்து விடுபடாதவனானேன். நாள்தோறும் தேவரீருடைய திருநாமத்தைக் கூறி, அதனால் நன்மை பெறவேண்டும் என உணரமாட்டேன். எல்லாரும் இகழுமாறு உள்ள இவ்வுடம்பைக் கொண்டு, எதற்காகப் பிறவி எடுத்தேன்! தேவரீரே! அருள் புரிவீராக.

760. தேசனைத் தேசமாகும்
திருமா லோர் பங்கன் றன்னைத்
பூசனைப் புனிதன் றன்னைப்
புணரும்புண் டரிகத்தானை
நேசனை நெருப்பன் றன்னை
நிவஞ்சகத்து அகன்ற செம்மை

ஈசனை அறிய மாட்டேன்
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: சிவபெருமான், ஒளிமயமானவர்; ஒளி மயமாகிய திருமாலை ஒரு பாகமாக உடையவர்; யாவராலும் பூசிக்கப்படுபவர்; எத்தகைய குற்றமும் மேவாத புனிதத் தன்மையுடையவர்; அகத்தாமரையில் வீற்றிருப்பவர்; அன்புடையவர்; தீத்திரட்சியாய் நெடிது ஓங்கிய வடிவத்தை உடையவர்; பஞ்சகிலேசம் அற்ற செம்மை உடையவர். அப் பெருமானை அறியாத வனாகி நான் எதற்கு இப் பிறவியைக் கொண்டேன்.

நிவஞ்சகம் – பஞ்சகிலேசம் – அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு.

761. விளைக்கின்ற வினையை நோக்கி
வெண்மயிர் விரவி மேலும்
முளைக்கின்ற வினையைப் போக
முயல்கிலேன் இயல வெள்ளம்
திளைக்கின்ற முடியி னான்றன்
திருவடி பரவ மாட்டாது
இளைக்கின் றேன் இருமி யூன்றி
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: ஈசனே! இப் பிறவியில் நுகரப்படுகின்ற பிராரத்த வினையும், எஞ்சியுள்ள சஞ்சித வினையும், இப் பிறவியில் பெருக்கும் ஆகாமிய வினையும், வாழ்நாள் முடிவுறுதலைக் காட்டும் நரைத்த முடியும், முதுமையும் கொண்ட தேகமும் ஆகியவற்றைச் சிந்தனை செய்யாதவனானேன். வினையைப் போக்கிக் கொள்ளாதவனானேன். கங்கையைச் சடை முடியுள் தரித்த சிவபெருமானே! தேவரீருடைய திருவடியைப் பரவாதவனாகி, உடல் நைந்து இருமல் கொண்டு

இழிகின்றேன். நான் எதற்கு இப் பிறவியை எடுத்தேன்! தேவரீரே! அருள் புரிவீராக.

இது, இப்பிறவியை எடுத்தது பிறவாமை என்னும் பெருஞ் செல்வத்தை அடைவதற்கே ஆகும் என்னும் மெய்ம்மையை உணர்த்திற்று.

762. விளைவறிவு இலாமை யாலே
வேதனைக் குழியில் ஆழ்ந்து
களைகணும் இல்லேன் எந்தாய்
காமரங் கற்றும் இல்லேன்
தளையவிழ் கோதை நல்லார்
தங்களோடு இன்பம் எய்த
இளையனும் அல்லேன் எந்தாய்
என்செய் வான் தோன்றினேனே.

தெளிவுரை: ஈசனே! இம்மை செய்வது யாவும் அதற்கு உரிய வினையை நல்கி வேதனையில் ஆழ்த்தும் என்னும் அறிவு அற்றவனாகித் தீமையே புரிந்தேன்; பற்றுக் கோடு இல்லாதவனாகி வருந்துகின்றேன். எந்தையே! இசைப் பிரியராகிய தேவரீரை மகிழ்வித்து ஏத்தும் தன்மையில் பண்ணிடை வளரும் இசை அறியாதவன்; அழகிய மகளிர் புரியும், அலகிடல் மெழுகிடல் போன்ற பணிகள் ஆற்றி மகிழும் தன்மை யில் உடன் விளங்கித் திருத்தொண்டாற்ற இளைஞனும் அல்லேன். நான் எதற்கு இப் பிறவியை எடுத்தேன்!

763. வெட்டன உடைய னாகி
வீரத்தால் மலையெ டுத்த
துட்டனைத் துட்டுத் தீர்த்துச்
சுவைபடக் கீதங் கேட்ட

அட்டமா மூர்த்தி யாய்
ஆதியை ஓதி நாளும்
எட்டனை எட்ட மாட்டேன்
என்செய்வான் தோன்றி னேனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கடுமை உணர்வு உடையனாகி, வீரத்தால் மலையெடுத்த இராவணனை அடக்கி, அவன் பாடிய கீதத்தைக் கேட்டு அருள் செய்தவர், சிவபெருமான். அவர் அட்டமூர்த்தியாய் மேவும் ஆதிக் கடவுள். அப்பெருமானை எள்ளளவும் சிந்தியாதும், சிவ வழி பாடின்றியும் இருத்தலால், நான் எட்டி இருந்து நோக்கி மகிழ்வதற்கும் இயலாதவனானேன். நான் எதற்கு இப் பிறவியைக் கொண்டேன்!

இத் திருப்பதிகமானது, சிவ வழிபாட்டின் மேன்மையை உணர்த்திற்று. இப்பிறவியின் பயன் ஈசனை வணங்குதலாகும். அவ்வாறு வணங்குவதற்கு இவ்வுடலை அருளிச் செய்தவர் இறைவன். இப்பிறவி யின் நோக்கமானது இவ்வுடலைக் கொண்டு ஈசனை வழிபட்டுப் பிறவாமையை அடைதலே ஆகும் எனக் கொள்க.

79. பொது

குறைந்த திருநேரிசை

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

764. தம்மானம் காப்ப தாகித்
தையலார் வலையுள் ஆழ்ந்து

அம்மானை அமுதன் றன்னை
ஆதியை அந்த மாய
செம்மான ஒளிகொள் மேனிச்
சிந்தையுள் ஒன்றி நின்ற
எம்மானை நினைய மாட்டேன்
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: *தனது பெருமையைக் காத்துக் கொள்ளும் தன்மையாகும் என நினைத்துக் கொண்டு மாதர்பால் மயங்கி ஆழ்ந்து, அமுதனாகிய சிவபெருமானை ஒன்றி நிற்குமாறு நான், சிந்தை செய்யாதவனானேன். அவர், சோதி வடிவாக விளங்குபவர். அப் பரமனை நினையாத தன்மையில், நான் பிறவி எடுத்ததன் பயன்தான் யாது!*

765. மக்களே மணந்த தாரம்
அவ்வயிற்று அவரை யோம்பும்
சிக்குளே அழுந்தி ஈசன்
திறம்படேன் தவமது ஓரேன்
கொப்புளே போலத் தோன்றி
அதனுளே மறையக் கண்டு
இக்களே பரத்தை யோம்ப
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: *மக்கள், அவர்களுடைய மனைவி மக்கள் முதலானவர்களைப் பாதுகாக்கும் வாழ்க்கைப் பந்தத்தில் சிக்கி அழுந்தி, நான் ஈசனுடைய புகழைப் பாடிப் போற்றாதவனானேன்; தவநெறியைச் சிந்தனை செய்கிலேன். நீர்க் குமிழியானது நீரில் தோன்றி, நீரிலேயே மறையும் தன்மையைப் போன்று; இவ்வுடம்பைப் பாதுகாப்பதற்கே பிறந்தவனானேன். யாது செய்வேன்!*

கொப்புள் – நீர்க்குமிழி; களேபரம் – உடம்பு.

766. கூழையேன் ஆக மாட்டேன்
கொடுவினைக் குழியில் வீழ்ந்து
ஏழினின் னிசையி னாலும்
இறைவனை யேத்த மாட்டேன்
மாழையொண் கண்ணின் நல்ல
மடந்தைமார் தமக்கும் பொல்லேன்
ஏழையேன் ஆகி நாளும்
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: நான், இறைவன்பால் குழைந்து அன்பு செலுத்தாதவன்; வினையாகிய குழியில் வீழ்ந்து அழுந்துபவன்; ஏழிசை கொண்டு ஈசனை ஏத்தாதவன்; இனிய வகையில் திருத்தொண்டு மேவும் மடந்தை நல்லார்களுக்குத் தீயவன்; அறிவற்றவனாகி நாள் தோறும் உடலையே பேணுபவன். நான் எடுத்த பிறவியின் பயன்தான் யாது!

767. முன்னையென் வினையி னாலே
மூர்த்தியை நினைய மாட்டேன்
பின்னைநான் பித்த னாகிப்
பிதற்றுவன் பேதை யேனான்
என்னுளே மன்னி நின்ற
சீர்மைய தாயி னானை
என்னுளே நினைய மாட்டேன்
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: என்னுடைய தீவினையின் காரணமாக, நான் ஈசனை நினையாதவனானேன். பின்னர் தெளிவு பெற்று, ஈசன்பால் பெரும் பித்தனாகி, அப் பெருமானின் திருநாமத்தைத் திரும்பத் திரும்ப ஓதிப் பிறிதொன்றினையும் நோக்காதவனானேன். சிவபெருமான், என் உள்ளத்தில் விளங்கி நின்ற சிறப்புடையவராகியவர். அவரை நான் உள்ளத்தில்

கண்டு தியானித்து ஏத்தாது, புறத்தில் தேடுகின்றேன். என் பிறவியின் பயன்தான் யாது கொல்!

சிறப்புரை: ஈசன்பால் பித்தனாகியும், பேதையாகியும் உள்ள தன்மையானது, அளவற்ற பக்தி கொண்ட அன்பின் திறத்தை இயம்புதலாயிற்று. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "பித்தென்னை யேற்றும் பிறப் பறுக்கும் பேச்சரிதாம் மத்தமே யாக்கும் வந்து என் மனத்தை" (திருவெண்பா 5) என அருளிச் செய்த வாறும் காண்க.

768. கறையணி கண்டன் றன்னைக்
காமரம் கற்றும் இல்லேன்
பிறைநுதல் பேதை மாதர்
பெய்வளை யார்க்கும் அல்லேன்
மறைநவில் நாவி னானை
மன்னிநின்று இறைஞ்சி நாளும்
இறையேயும் ஏத்த மாட்டேன்
என்செய்வான் தோன்றி னேனே.

தெளிவுரை: நான், கறை போன்ற கண்டத்தையுடைய சிவபெருமானைப் பண் இசைத்துப் பாடிப் போற்றும் கல்வியில்லாதவன்; மாதர்கள் என்னைக் கனிந்து நோக்காதவாறு கொடுமை செய்த தீயவன். வேதங் களை விரித்தோதிய ஈசனை நெஞ்சிருத்தி ஏத்தாது யான் இவ்வுடம்புடன் இருப்பதுதான் யாது பற்றி!

காமரம் – பண் வகை – சீகாமரம்.

769. வளைத்துநின்று ஐவர் கள்வர்
வந்தெனை நடுக்கம் செய்யத்
தளைத்துவைத்து உலையை யேற்றித்
தழலெரி மடுத்த நீரில்

திளைத்துநின்று ஆடுகின்ற
ஆமைபோல் தெளிவி லாதேன்
இளைத்துநின்று ஆடுகின் றேன்
என்செய்வான் தோன்றினேனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஐம்புலன்கள் எனப்படும் கள்வர்கள் என்னை வளைத்து, நடுக்கத்தைச் செய்கின்றனர். அதனை உண்மையில் அறியாதவனாகி, நீர் உலையில் நெருப்பு எழ அவ்வெம்மையில் மகிழும் ஆமையைப் போன்று, புலன்களால் மகிழ்ச்சி கொண்டு பின்னர், வெம்மை தாங்காது மடியும் அவ்வாமையெனப் புலன்களால் சீரழிந்து, உடல் கெட்டு மடிகின்றேன். தெளிவற்றவனாகிய யான் இவ்வாறு மடிவதற்கென்றே இருப்பனோ! யாது பற்றி இவ்வுடம்பினை அடைந்தேன்!

இது, புலனால் நைந்தழியும் உடலின் தன்மையும் அதனை உணராத உயிரின் ஆற்றாமையையும் ஓதுதல் ஆயிற்று.

80. கோயில்

தல விளக்கம்: திருப்பதிகம் வ.எண் 22 காண்க.

திருவிருத்தம்

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

770. பாளை யுடைக்கமுகு ஓங்கிப்
பன்மாட நெருங்கியெங்கும்
வாலை யுடைபுனல் வந்து எறி
வாழ்வயல் தில்லை தன்னுள்

ஆளவுடைக் கழற்சிற்
றம்பலத்தரன் ஆடல் கண்டால்
பீளை யுடைக் கண்களாற் பின்னைப்
பேய்த் தொண்டர் காண்பதென்னே.

தெளிவுரை: *பாக்கு மரங்களும், மாட மாளிகைகளும், வாளை குதித்து மகிழும் நீர் பாயும் வயல்களும் திகழும் தில்லையில் எழுந்தருளிச் சிற்றம்பலத்தில் ஆடுகின்ற திருநடனத்தைக் கண்ட தொண்டரின் கண்கள், பிறவற்றைக் காண்பதற்கு நாடுமோ! காண்பதற்கு வேறு யாது உளது!*

சிறப்புரை: *தில்லை அம்பலவன் திருநடனத்தை அன்றி ஏனையவற்றைக் காண்பவர்கள் பேய்த் தொண்டர் என்பதும், அத்தகையோரின் கண்கள் பீளையுடைய கண்கள் எனவும் சுட்டுதல் காண்க.*

771. பொருளிடை யொன்றுடைப் புண்ணிய
மூர்த்தி புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை
மணாளன் உலகுக் கெல்லாம்
திருவுடை அந்தணர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
திருவடியைக் கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்ப தென்னே.

தெளிவுரை: *சிவபெருமான், இடப வாகனத்தையுடைய புண்ணிய மூர்த்தி; புலித்தோலை உடையவர்; அழகிய மலை மகளின் மணாளர்; எல்லா உலகங்களுக்கும் செல்வப் பேறாக விளங்கும் அந்தணர்கள் வாழ்கின்ற தில்லையில், சிற்றம்பலத்தில் விளங்குபவர். அப்பெருமானுடைய திருவடியைக் கண்டு மகிழ்ந்த*

கண் கொண்டு, வேறு ஒன்றினைக் காண்பதற்கு யாது உளது!

772. தொடுத்த மலரொடு தூபமும்
சாந்தும் கொண்டு எப்பொழுதும்
அடுத்து வணங்கும் அயனொடு
மாலுக்கும் காண் பரியான்
பொடிக்கொண்டு அணிந்து பொன்னாகிய
தில்லைச் சிற் றம்பலவன்
உடுத்த துகில்கொண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

தெளிவுரை: மலர் தொடுத்து மாலை சாற்றித் தூபம் காட்டிச் சந்தனம் முதலானவற்றைக் கொண்டு, எப்போதும் வணங்குகின்ற பிரமன்–திருமால் ஆகியோருக்கும் காண்பதற்கு அரியவனாகியவர் சிவபெருமான். அவர், திருவெண்ணீற்றை நன்கு அணிந்து, பொற்சபையாகிய தில்லைச் சிற்றம்பலத்தில் விளங்குபவர். அப்பெருமான் உடுத்திய துகிலைக் கண்டு மகிழ்ந்த கண் கொண்டு, வேறு ஒன்றைக் காண்பதற்கு யாது உள்ளது!

773. வைச்ச பொருள்நமக்கு ஆகும்என்று
எண்ணி நமச்சிவாய
அச்சம் ஒழிந்தேன் அணிதில்லை
அம்பலத்து ஆடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி
உந்தியின் மேலசைத்த
கச்சின் அழகுகண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே.

தெளிவுரை: நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத் தாகிய ஒண்பொருளானது பிற்காலத்திற்காகச் சேர்த்து

வைக்கப் பெறும் பொருளாகும் என்று எண்ணித் தியானித்தேன். அச்சத்தை ஒழித்தேன். அத் திருவைந்தெழுத்துக்கு உரியவரான தில்லையம் பலத்தாடுகின்ற ஈசன், பித்தராகவும், பிறப்பில்லா தவராகவும் விளங்குபவர்; நந்தி என்னும் திருநாமத்தை உடையவர்; உந்தியின் மீது அழகிய கச்சு அணிந்தவர். அப்பரமனின் திருக்கோலத்தைக் கண்ட கண் கொண்டு பிறிது ஒன்றைக் காண்பதற்கு யாது உள்ளது!

நமச்சிவாய பாட்டு வ.எண் 779 காண்க.

774. செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற
தில்லைச் சிற்றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள்
கண்டு மகிழ்ந்து நிற்க
நெய்ஞ்ஞின்று எரியும் விளக்கொத்த
நீல மணி மிடற்றான்
கைஞ்ஞின்ற ஆடல்கண் டாற்பின்னைக்
கண்டுகொண்டு காண்பதென்னே.

தெளிவுரை: வயல்கள் நன்கு திகழ, விளங்கும் நீலோற் பலம் மலர்கின்ற தில்லையில் மேவும் சிற்றம்பலத்தில் திகழும் சிவபெருமான், மை விளங்கும் ஒளிமிகுந்த கண்ணுடைய உமாதேவி கண்டு மகிழுமாறு, நெய் கொண்டு எரியும் நெருப்பேந்தி, ஒளி திகழும் நீல கண்டத்தை உடையவராய்க் கையை உயர்த்தி ஆடலைப் புரிபவர். அதனைக் கண்டு மகிழ்ந்த பின்னர் வேறு ஒன்றைக் காண்பதற்கு யாது உள்ளது!

செய் – வயல்; ஞின்ற – நின்ற.

775. ஊனத்தை நீக்கி உலகறிய
என்னை யாட்கொண்டவன்

தேனொத்து எனக்குஇனி யான்தில்லைச்
சிற்றம் பலவன்எங்கோன்
வானத் தவர்உய்ய வன்நஞ்சை
உண்டகண் டத்துஇலங்கும்
ஏனத்து எயிறு கண்டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே.

தெளிவுரை: ஈசன், என்னுடைய மலமாகிய ஊனத்தை நீக்கி, உலகெலாம் அறியுமாறு ஆட்கொண்டவர்; தேன் போன்று இனிமையானவர்; தில்லைச் சிற்றம்பலத்தில் மேவும் எம் தலைவர்; தேவர்கள் உய்யுமாறு கொடிய நஞ்சை உட்கொண்டு, கண்டத்தில் தேக்கி நீல கண்டராகியும், பன்றியின் கொம்பை அணிந்து மேவும் திருமார்பினராகியும், திகழும் அப்பெருமானுடைய திருக்கோலத்தைக் கண்டு, மகிழ்ந்த கண்கள், வேறு ஒன்றைக் காண்பதற்கு யாது உள்ளது!

776. தெரித்த கணையால் திரிபுரம்
மூன்றும் செந்தீயில் மூழ்க
எரித்த இறைவன் இமையவர்
கோமான் இணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

தெளிவுரை: முப்புரங்களை எரித்துச் சாம்பலாகுமாறு செய்த இறைவன் தேவர்களின் தலைவர் ஆவார். அப்பெருமானுடைய திருவடியை நெஞ்சில் தரித்த நன்மனத்தினர் வாழ்கின்ற தில்லையில், திகழும் சிற்றம்பலநாதனின் புன்முறுவல் கொண்ட திருமுகத்தைக் கண்டு தரிசித்த கண் கொண்டு, மற்றொன்றைக் காண்பதற்கு யாது உள்ளது!

777. சுற்றும் அமரர் சுரபதி
நின்திருப்பதா மல்லால்
பற்றொன்று இலோம்என்று அழைப்பப்
பரவையுள் நஞ்சையுண்டான்
செற்றங்கு அநங்கனைத் தீவிழித்தான்
தில்லை அம்பலவன்
நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பது என்னே.

தெளிவுரை: தேவேந்திரனும், மற்றும் உள்ள தேவர்களும் சூழ்ந்து, ஈசனின் திருப்பாதம் அல்லாது வேறு பற்றுக்கோடு அறிகிலோம் என்று ஏத்தி நிற்க, பாற்கடலில் தோன்றிய நஞ்சினையுண்டு, நீல கண்டராகி நின்று அருள் புரிந்தவர், சிவபெருமான். அவர், மன்மதனை நெற்றிக் கண்ணால் விழித்து நோக்கி எரித்தவர். அப்பெருமான், தில்லையில் திகழும் அம்பலக் கூத்தன் ஆவார். அவருடைய நெற்றியில் விளங்கும் கண்ணைக் கண்டு தரிசித்து மகிழ்ந்த பின்னர் வேறு ஒன்றைக் காணும் தன்மையில் யாது உள்ளது!

பரவை – பாற்கடல்; அநங்கன் – மன்மதன் (அங்கம் இல்லாதவன்.)

778. சித்தத்து எழுந்த செழுங்கமலத்
தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
முத்தும் வயிரமும் மாணிக்கந்
தன்னுள் விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்ப தென்னே.

தெளிவுரை: இதயத் தாமரையில் திருவடியைப் பதித்த மனத்தினர் வாழ்கின்ற தில்லையில் மேவும் சிற்றம்பல

நாதன்; முத்து, வயிரம், மாணிக்கம் ஆகியன திகழும் திருமுடியில், ஊமத்த மலர் கொண்டவர். அப்பெருமானுடைய திருக்கோல முடியின் அழகைக் கண்ட கண்கள், மற்றொன்றைக் காண்பதற்கு யாது உளது!

சிறப்புரை: ஈசன் திருமுடியில் சந்திரனைச் சூடிய தன்மையில் அதிலிருந்து தோன்றும் முத்தும், நாகத்தைத் தரித்த நிலையில், அதனிடை தோன்றும் மாணிக்கமும் இயல்பாதல் ஓர்க.

செழுங்கமலம் – இதயத்தாமரை. அக மலராகிய அட்ட புட்பங்களும் ஆம்.

779. தருக்கு மிகுத்துத்தன் தோள்வலி
உன்னித் தடவரையை
வரைக்கைக ளால்எடுத்து ஆர்ப்ப
மலைமகள் கோன்சிரித்து
அரக்கன் மணிமுடி பத்தும்
அணிதில்லை அம்பலவன்
நெருக்கி மிதித்த விரல்கண்ட
கண்கொண்டு காண்பதென்னே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஆணவம் மிகுந்தவனாகித் தன் தோளின் வலிமை கொண்டு மலையைக் கைகளால் எடுத்து ஆர்த்த இராவணனுடைய பத்துத் தலைகளும் நெரியுமாறு ஊன்றியவர், உமாதேவியின் தலைவராகிய தில்லை அம்பலநாதன். அப்பெருமானுடைய திருப்பாத விரல் கண்டு, மகிழ்ந்த கண் கொண்டு, வேறு ஒன்றைக் காண்பதற்கு யாது உள்ளது!

சிறப்புரை: இத்திருப்பாட்டானது, திருநடனக் காட்சியை நவின்று, பாதாதி கேசம் வரை ஓதிப் பின்னர் இறுதியாகத் திருப்பாதத்தை ஏத்துதலாய் விளங்கும் மாண்பும் ஆயிற்று.

பாடல் 770 திருநடனக் காட்சிசையும், 771 திருவடியையும், 772 உடுத்திய துகிலையும், 773 உந்தியையும், 774 திருக்கரத்தையும், 775 ஏனத்து எயிறு அணிந்த திருமார்பினையும், 776 திருமுகத்தையும், 777 திருநுதலையும், 778 திருமுடியையும் ஓதுதலாயிற்று. இத்திருப்பாட்டு, (779), திருப்பாதத்தை ஓதி உரைத்தலாம். கூத்தப் பெருமானின் திருவடிவமானது, திருவைந்தெழுத்தை நவிலும் பாங்கினை உண்மை விளக்கம் திருப்பாட்டு எண் 33இல் உரைத்தவாறு, பாதாதி கேசமாக உரைக்கப் பெறுதலும் காண்க.

பாடல் 771	திருவடி	ந
பாடல் 773	உந்தி	ம
பாடல் 775	ஏனத்து எயிறு – மார்பு	சி
பாடல் 776	திருமுகம்	வ
பாடல் 778	திருமுடி	ய

81. கோயில்

தல விளக்கம்: திருப்பதிகம் வ. எண் 22 காண்க.

திருவிருத்தம்

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

780. கருநட்ட கண்டனை அண்டத்
தலைவனைக் கற்பகத்தைச்

செருநட்ட மும்மதில் எய்யவல்
லானைச்செந் தீமுழங்கத்
திருநட்டம் ஆடியைத் தில்லைக்கு
இறையைச்சிற் றம்பலத்துப்
பெருநட்டம் ஆடியை வானவர்
கோனென்று வாழ்த்துவனே.

தெளிவுரை: சிவபெருமான், கருமை நிலவும் கண்டத்தை உடையவர்; அண்டங்களின் தலைவர்; கற்பகத் தருவைப் போன்று அடியவர்கள் உள்ளத்தில் மேவி, விரும்பியதைத் தருபவர்; போரை நிலை நாட்டிய அசுரர்களுடைய மூன்று மதில்களையும் எரித்துச் சாம்பலாக்கியவர்; கையில் எரியும் நெருப்பை ஏந்தித் திருநடனம் புரிபவர்; தில்லையில் விளங்கும் இறைவர்; சிற்றம்பலத்தில் பெருமை மிகும் திருநடனம் புரிபவர்; தேவர்களின் தலைவர். அப்பெருமானை யான் வாழ்த்தினேன்.

781. ஒன்றி யிருந்து நினைமின்கள்
உந்தமக்கு ஊனமில்லைக்
கன்றிய காலனைக் காலால்
கழந்தான் அடியவர்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட்
சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாய்என்னும் எம்பெரு
மான்றன் திருக்குறிப்பே.

தெளிவுரை: சிவபெருமானைச் சிந்தை ஒன்றி இருந்து நினைப்பீராக. அது, பிறவி நோய் என்னும் ஊனத்தை விலக்கும். அப் பெருமான், மார்க்கண்டேயருக்காகக் காலனை உதைத்தவர். அவர், திருநடம் புரியும் தில்லைச் சிற்றம்பலத்தை நாடிச் சென்று தொழுமின். உயரே எழுப்பிக் காட்டும் அருள் தன்மையுடைய

அப்பரமனின் வலக்கரமானது, 'என்று வந்தாய்' என்று நும்மை வினவி அருள் புரியும் திருக்குறிப்பை உணர்த்துவதாகும்.

782. கன்மன வீர்கழி யுங்கருத்
தேசொல்லிக் காண்பதென்னே
நன்மன வர்நவில் தில்லையுள்
சிற்றம் பலத்து நட்டம்
பொன்மலை யில்வெள்ளிக் குன்றது
போலப் பொலிந்திலங்கி
என்மன மேயொன்றிப் புக்கனன்
போந்த சுவடில்லையே.

தெளிவுரை: கல் போன்ற வன்மையுடைய நெஞ்சினை உடையீர்! பயனற்ற சொற்களைப் பேசிக் காணும் பயன்தான் என்ன? நல்ல மனத்தையுடையவர்கள் போற்றும் தில்லைச் சிற்றம்பலத்தில், கனகசபையில் திருவெண்ணீறு பூசிய திருமேனியராகிப் பொலிந்து விளங்கிய ஈசன் என் மனத்துள் ஒன்றிப் புகுந்தனர். அப்பெருமான் புகுந்த சுவடுதான் தெரியவில்லை.

பொன்மலை – கனக சபை; வெள்ளிக் குன்று – திரு வெண்ணீற்றுத் திருமேனி; சுவடு இல்லை – உள்ளம் புகுந்து கலந்த அன்பாகித் திளைத்து நெஞ்சில் மேவுதல் ஆயிற்று.

783. குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியில் பால்வெண் ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேஇந்த மாநிலத்தே.

தெளிவுரை: வளைந்த புருவம், கோவைப் பழம் போன்ற சிவந்த வாய், இனிய புன்னகை, குளிர்ந்த சடை, பவளம் போன்ற செம்மேனி, திருமேனியில் திகழும் பால்போன்ற திருவெண்ணீறு, உயிர்க்கு இனிமை சேர்க்கும் தூக்கிய திருவடி ஆகிய இவற்றைக் கொண்டு புரியும் ஈசனின் திருநடனக் காட்சியைக் காணப் பெற்றால், இவ்வுலகத்தில் மனிதப் பிறவி யானது தேவையுடைய ஒன்றே. இத்திருக்கோலக் காட்சியைக் கண்டு தரிசித்த செம்மையானது பிறவியின் பயனாயிற்று.

784. வாய்த்தது நந்தமக்கு ஈதுஓர்
பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள்
செய்தவன் பத்தருள்வீர்
கோத்தன்று முப்புரம் தீவளைத்
தான் தில்லை அம்பலத்துக்
கூத்தனுக்கு ஆட்பட்டு இருப்பதன்
றோ நந்தம் கூழைமையே.

தெளிவுரை: இப்பிறவியானது, நமக்கு வாய்த்த நற்பேறு என மதித்துப் பெருமை கொள்வீராக. பக்திப் பெருந்தகையீர்! பார்த்தனுக்குப் பாசுபதத்தை அருளிச் செய்த சிவபெருமான், முப்புரங்களை நெருப்பால் எரித்துச் சாம்பலாக்கியவர். அவர் தில்லை அம்பலக் கூத்தன். அப்பெருமானுக்கு அடிமை பூண்டு அன்புடையவனாக இருப்பதல்லவா நமக்குக் குழைந்து மேவும் பக்திமையாகும்!

785. பூத்தன பொற்சடை பொன்போல்
மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி அரித்தன
பல்குறட் பூதகணம்

தேத்தென என்றுஇசை வண்டுகள்
பாடுசிற் றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல் லாருளரோ
என்றன் கோல்வளைக்கே.

தெளிவுரை: *அழகிய சடையானது, பொன் போன்று பூத்து மிளிரப் பக்த கணங்கள் ஆர்த்து எழ, முழவு முதலான வாத்தியங்களைக் குறள் வடிவப் பூதகணங்கள் முழங்கத் தேத்தென என வண்டுகள் இசைபாடச் சிற்றம்பலத்தில் ஆடும் கூத்தப் பெருமானுடைய திருநடனத்தைவிட வலிமை உடையது வேறு உண்டோ!*

786. முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின்
நோக்கு முறுவலிப்பும்
துடிகொண்ட கையும் துதைந்த
வெண்ணீறும் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்
தோலும்என் பாவி நெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை அம்பலக்
கூத்தன் குரைகழலே.

தெளிவுரை: *திருமுடியில் ஊமத்த மலரும், முக்கண்ணின் நோக்கும், முறுவலிக்கும் திருநகையும், திருக்கரத்தில் உடுக்கையும், குழையப் பூசிய திருவெண்ணீறும், உமாதேவியைப் பாகமாக கொண்டு திகழும் திருவடிவமும், புலித் தோலாடையும் கொண்டு விளங்கும் சிவபெருமான், என்னுடைய நெஞ்சில் குடிகொண்ட பெருமைதான் என்னே! தில்லை அம்பலக் கூத்தனின் திருக்கழலின் பெருமை தான் என்னே!*

துடி – உடுக்கை; பாவி – நெஞ்சின் சிறுமை நோக்கி உலகியலின் இயல்பும் தோன்ற உணர்த்தியவாறு ஆயிற்று.

787. படைக்கல மாகஉன் நாமத்து
எழுத்துஅஞ்சு என் நாவிற் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்
பும்உனக்கு ஆட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது
வணங்கித் தூநீறு அணிந்துன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச்
சிற்றம் பலத்து அரனே.

தெளிவுரை: *ஈசனே!* தேவரீருடைய திருநாமமாகிய திருவைந்தெழுத்தைப் படைக்கலமாகக் கொண்டு, என் நாவால் உச்சரிப்பவனானேன்; இடையில் மாறுபாடு கொள்ளமாட்டேன்; எழுகின்ற பிறப்புகள் தோறும் தேவரீருக்கே அடிமை பூண்டு ஆட் செய்கின்றேன்; என்னை ஒதுக்கித் தள்ளினும் பிரிந்து போக மாட்டேன். தில்லைச் சிற்றம்பலத்தில் மேவும் அரனே! தூய்மை நல்கும் திருவெண்ணீறு அணிந்து தேவரீருக்கு அடிமை பூண்டு தொழுது வணங்கி, அடைக்கலம் ஆனேன்.

சிறப்புரை: ஈசனின் திருவடியை ஏத்தித் தொழும் பத்தராக விழையும் பேரன்பு, “எழு பிறப்பும் உனக்கு ஆட் செய்கின்றேன்” என ஓதப் பெற்றது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், “ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன் அடியவர்க்கு அடியனும் ஆனேன் உரிமையால் உரியேன் உள்ள மும் உருகும் ஒண்மலர்ச் சேவடி காட்டாய்” (திருப்பாச்சிலாச்சிராமம் பா. 11) என அருளிச் செய்த வாறும் காண்க.

படைக்கலமாக – அல்லற் படையும் மாயப்படையும் வாராமே காக்கும் திருவைந்தெழுத்தின் மகிமையை உணர்த்துதலாம்.

788. பொன்னொத்த மேனிமேல் வெண்ணீறு
அணிந்து புரிசடைகள்
மின்னொத்து இலங்கப் பலிதேர்ந்து
உழலும் விடங்கர்வேடச்
சின்னத்தி னால்மலி தில்லையுள்
சிற்றம்பலத்து நட்டம்
என்அத்தன் ஆடல்கண்டு இன்புற்ற
தால்இவ் இருநிலமே.

தெளிவுரை: *ஈசன், பொன் போன்ற அழகிய திருமேனியில் வெண்ணீறு அணிந்து, சடைமுடிகள் மின் போன்று ஒளிர்ந்து விளங்கப் பலி தேர்ந்து உழலும் விடங்கர்; திருநீறு, உருத்திராக்கம் அணியப் பெற்ற சிவ சின்னத்தினால் பொலியும் தில்லையுள், சிற்றம் பலத்துள் நடனம் புரிபவர். என் அத்தனாகிய அப்பெருமான் புரியும் ஆனந்தத் திருநடனத்தால், இவ்வுலகமானது இன்புற்றதே.*

789. சாட எடுத்தது தக்கன்றன்
வேள்வியிற் சந்திரனை
வீட எடுத்தது காலனை
நாரண நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுட்
சிற்றம் பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதமன்
றோ நம்மை ஆட்கொண்டதே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *ஈசனுடைய திருப்பாதமானது, தக்கன் செய்த வேள்வியில் பங்கேற்ற சந்திரனைத் தேய்ப் பதற்காகத் தூக்கி எடுக்கப்பட்டது; அத்திருப்பாதம் காலனை உதைப்பதற்கும், நாரணனும் பிரமனும் தேடும் தன்மையிலும் எடுக்கப் பெற்றது; அத்திருப்*

பாதம் தில்லைச் சிற்றம்பலத்தில் நடனம் புரிய எடுக்கப்பட்டது; அது அன்றோ நம்மை ஆட்கொண்டது.

சிறப்புரை: சந்திரனைத் தேய்ப்பதற்காகத் தூக்கிய திருவடியின் பெருமையை, "சந்திரனைத் தேய்த் தருளித் தக்கன்தன் வேள்வியினில்" என்னும் திருவாசக அமுதவாக்காலும் கொள்க.

வீட – மாய்க்க.

82. திருக்கழுமலம்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம் 63இல், இது 14ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. சீகாழிக்குரிய பன்னிரு பெயர்களுள் இது ஒன்று. திருஞானசம்பந்தரின் திருஅவதாரத்தலம். இத் தலத்தில், கால் மிதிக்க அஞ்சிய சுந்தரமூர்த்தி சுவாமி களுக்கு ஈசன் திருக்காட்சி நல்கிய திருத்தலம்.

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 1 காண்க.

சுவாமி : பிரமபுரீஸ்வரர், தோணியப்பர், சட்டைநாதர்

அம்பிகை : திருநிலைநாயகி, பெரியநாயகி

தல மரம் : பாரிசாதம்

தீர்த்தம் : பிரமதீர்த்தம் முதலான 22

திருவிருத்தம்

பண் : கொல்வி

திருச்சிற்றம்பலம்

790. பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட
ஞான்றுநின் பாதமெல்லாம்

நாலஞ்சு புள்ளினம் ஏந்தின
என்பர் நளிர்மதியம்
கால்கொண்ட வண்கைச் சடைவிரித்து
ஆடும் கழுமலவர்க்கு
ஆளன்றி மற்றும் உண்டோ அந்தண்
ஆழி அகலிடமே.

தெளிவுரை: *உலகில், வெள்ளம் பரவிப் பிரளய காலம் கண்ட போதும் பறவை இனங்கள் ஏந்திக் காக்கும் பெருமையுடையது கழுமலம். அத்தலத்தில் வீற்றிருந்து, சடை விரித்து ஆடும் ஈசனுக்கு ஆளாக இருப்பதன்றி, வேறு புகலிடம் இப்பூவுலகில் உள்ளதோ!*

சிறப்புரை: *புள்ளினங்கள் விமானத்தைத் தாங்கி நிற்றல் இத்திருப்பாட்டில் ஏத்தப் பெற்றது. இதனைத் "தொல்பறவை சுமந்தோங்கு செம்மைத் தோணிபுரம்" என்னும் திருஞானசம்பந்தர் திருவாக்காலும் ஓர்க. (3ஆம் திருமுறை – 100)*

791. கடையார் கொடிநெடு மாடங்கள்
எங்கும் கலந்திலங்க
உடையான் உடைதலை மாலையும்
சூடி உகந்தருளி
விடைதான் உடையஅவ் வேதியன்
வாழும் கழுமலத்துள்
அடைவார் வினைகள் அவைஎள்க
நாடொறும் ஆடுவரே.

தெளிவுரை: *வாயில்கள் விளங்கும் நெடு மாடங்களில் கொடிகள் திகழ விளங்கத் தலைமாலை (மண்டை ஓட்டு மாலை) சூடி மகிழ்ந்து, இடப வாகனத்தினை உடைய சிவபெருமான் வீற்றிருக்கும் கழுமல நகரினை*

அடைபவர்களுக்கு, வினையானது பற்றாது விலகிச் செல்லும்.

சிறப்புரை: ஈசன் திருநடனம் புரிவதானது, மன்னுயிரை மகிழ்வித்தலுக்கும், வினைகளைத் தீர்ப்பதற்கும் ஆதல், "வினைகள் எள்க நாடோறும் ஆடுவரே" என ஏத்தப் பெற்றது.

792. திரைவாய்ப் பெருங்கடல் முத்தம்
குவிப்ப முகந்துகொண்டு
நுரைவாய் நுளைச்சியர் ஓடிக்
கழுமலத்துள் எழுந்து
விரைவாய் நறுமலர் சூடிய
விண்ணவன் றன்னடிக்கே
வரையாப் பரிசிவை நாள்தொறும்
நந்தமை யாள்வனவே.

தெளிவுரை: கடலலையின் வாயிலாகக் கடலானது முத்துக்களைக் குவிக்க, நெய்தல் நில மகளிர் விரைவில் அவற்றைக் கொண்டு இம் முத்துக்கள் யாவும் கழுமலத்துள் மேவும் விண்ணோர் பெருமானாகிய ஈசனுக்கு உரிய பரிசு இதுவே என நாள்தோறும் ஏத்தும் தன்மையுடையதாகும்.

நுளைச்சியர் – நெய்தல் நில மகளிர்;
வரையாப் பரிசு – மேலான பரிசு.

793. விரிக்கும் அரும்பதம் வேதங்கள்
ஓதும் விழுமிய நூல்
உரைக்கில் அரும்பொருள் உள்ளுவர்
கேட்கில் உலக முற்றும்
இரிக்கும் பறையொடு பூதங்கள்
பாடக் கழுமலவன்

நிருத்தம் பழம்படி யாடும்
கழல்நம்மை ஆள்வனவே.

தெளிவுரை: வேதங்கள் ஓதும் திருப்பாதம் கழுமலத்தில் மேவும் ஈசனின் திருவடியாகும். அவ்வேதமானது, ஓதும் விழுமிய நூலாகவும், உரைக்கும் பொருளாகவும், திகழும். உலகமெல்லாம் ஒலிக்கும் பறைகொண்டு பூதகணங்கள் பாட நடனம் புரியும் அப் பரமனின் திருக்கழலே, நம்மை ஆளும் தகைமைத்து.

794. சிந்தித்து எழுமனமே நினை
யா முன் கழுமலத்தைப்
பந்தித்த வல்வினை தீர்க்கவல்
லானைப் பசுபதியைச்
சந்தித்த கால மறுத்தும்என்று
எண்ணி இருந்தவர்க்கு
முந்தித் தொழுகழல் நாள்தொறும்
நந்தமை ஆள்வனவே.

தெளிவுரை: மனமே! திருக்கழுமலத்தைச் சிந்தித்து எழுவாயாக. பந்தம் கொண்டு நின்னைப் பற்றிக் கொண்டிருக்கும் கொடிய வினைகளைத் தீர்த்தருளும் உயிர்த் தலைவர், அக்கழுமலத்தில் விளங்கும் ஈசன். வாழ் நாளில் - சென்று கழிந்த காலங்களில் நேர்ந்த வினைகளை அறுத்து நீக்குவது எவ்வாறு கூடும் என்று எண்ணி இருந்தவர்களுக்கு, அப் பரமனுடைய திருவடியானது, நாள்தோறும் ஆட்கொண்டு அருள் புரியும் தன்மையதே.

பசுபதி – உயிர்க்குத் தலைவன்; ஈசன்.

795. நிலையும் பெருமையும் நீதியும்
சால அழகுடைத்தாய்

அலையும் பெருவெள்ளத்து அன்று
மிதந்தஇத் தோணிபுரம்
சிலையில் திரிபுரம் மூன்று
எரித் தார்தம் கழுமலவர்
அலரும் கழலடி நாள்தொறும்
நந்தமை ஆள்வனவே.

தெளிவுரை: *மகாப் பிரளய காலத்திலும் அழியாது மிதந்து நிலைத்தும், பெருமையுடனும் நியமம் வழுவாதும் அழகுடனும் விளங்கும் சிறப்புடையது, தோணிபுரம். ஆங்கு, மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரங்களை எரித்த இறைவனாகிய கழுமல நாதர் வீற்றிருக்க, அப்பெருமானுடைய மலர் போன்ற திருவடியானது, நாள்தோறும் நம்மை ஆட்கொண்டு அருள் புரிவனவே.*

கழுமலம், தோணிபுரம் – சீகாழியின் வேறு பெயர்கள்.

796. முற்றிக் கிடந்துமுந் நீரின்
மிதந்துடன் மொய்த்தமரர்
சுற்றிக் கிடந்துதொழப் படு
கின்றது சூழரவம்
தெற்றிக் கிடந்துவெங் கொன்றளந்
துன்றிவெண் திங்கள்
கற்றைச் சடைமுடி யார்க்கிடம்
ஆய கழுமலமே.

தெளிவுரை: *மிகத் தொன்மையாகி முதிர்ந்ததும், கடலில் மிதந்து விளங்கியும், தேவர்களால் சூழ்ந்து தொழப்படுவதும் உடையது, கழுமலம். ஒளிமிக்க கொன்றை மலரும், வெண்மையான சந்திரனும் இணைந்து, கற்றையாக மேவும் சடை முடியுடன் திகழ விளங்கும் ஈசனுக்கு இடமாவது அக்கழுமலமே.*

797. உடலும் உயிரும் ஒருவழிச்
செல்லும் உலகத்துள்ளே
அடையும் உனைவந்து அடைந்தார்
அமரர் அடியிணைக் கீழ்
நடையும் விழவொடு நாள்தொறும்
மல்கும் கழுமலத்துள்
விடையன் தனிப்பதம் நாள்தொறும்
நம்மை ஆள்வனவே.

தெளிவுரை: ஈசனே! புலன்கள் தாக்குதலால் மோதுறும் உடல் ஒரு வழியும், உயிர் ஒரு வழியும் ஆகிய தன்மையில் மாறுபட்டு இயங்கும் இவ்வுலகத்தில், தேவரீரைத் தரிசிக்கும் தன்மையில் தேவர்கள் எல்லாரும் கூடி நாள்தோறும் விழா மல்கும் கழுமலத்துள் வந்து திருவடியை வணங்குகின்றனர். இடப வாகனத்தில் வீற்றிருக்கும் தேவரீரின் திருப்பாதம் நாள்தோறும் ஏத்தும் எம்மை ஆட்கொள்ளும் செம்மையானதே.

சிறப்புரை: இவ்வுடலானது ஐம்பூதங்களாகி உள்ள தன்மையில், மானுட உடலிலிருந்து உயிர் நீங்கியதும் மண்ணில் அல்லது எரியில் இட்டுக் கலக்கப் பெறுதல் இயல்பு. விலங்குகளின் உடல்களும் அத்தகைத்தே. இதனை அருணகிரிநாதர், இவ்வுடலின் தன்மை யானது அழியும் நிலைபற்றி,

கழுகொடு நரியும் எரிபுவி மறலி
கமலனும் மிகவாய் அயர்வானார்
கடனுனது அபயம் அடிமையுன் அடிமை
கடுகியுன் னடிகள் தருவாயே

என அருளிச் செய்தவாறும் காண்க.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், "வான் எனை வந்து எதிர் கொள்ள மத்தயானை அருள் புரிந்து ஊன் உயிர் வேறு செய்தான் நொடித் தான்மலை உத்தமனே" (திரு நொடித்தான் மலை 1) என அருளிச் செய்தவாறும் காண்க.

இவ் உடலானது, ஒரு நிலைக்கண்ணும், உயிரானது பிறிதொரு நிலைக் கண்ணும் செல்லுதலை இத்திருப்பாட்டு நனி ஓதுதலாயிற்று.

798. பரவைக் கடல்நஞ்சம் உண்டதும்
இல்லைஇப் பார்முழுதும்
நிரவிக் கிடந்து தொழப்படு
கின்றது நீண்டிருவர்
சிரமப் படவந்து சார்ந்தார்
தழலடி காண்பதற்கே
அரவக் கழலடி நாள்தொறும்
நந்தமை ஆள்வனவே.

தெளிவுரை: பரந்து விளங்குகின்ற பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உட்கொண்டபோது திருமேனி யில் கலவாது, ஈசனின் திருக்கண்டமானது தன்னிடையே நிறுத்திக் கொண்டு, நீலகண்டம் என்று மிளிர்ந்தது. திருமால், பிரமன் ஆகிய இருவரும், அத்தகைய பெருமானைக் காண்பதற்குத் திரிய, அவருடைய திருக்கழல் நாள்தொறும் நம்மை ஆட்கொள்கின்றன.

799. கரையார் கடல்சூழ் இலங்கையர்
கோன்றன் முடிசிதறத்
தொலையா மலரடி ஊன்றலும்
உள்ளம் விதிர் விதிர்த்துத்

தலையாய்க் கிடந்துயர்ந் தான்றன்
கழுமலம் காண்பதற்கே
அலையாப் பரிசிவை நாள்தொறும்
நந்தமை ஆள்வனவே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *இராவணனுடைய முடி பத்தும் சிதறுமாறு, தனது திருப்பாத மலரால் ஊன்றித் தலைவனாய் உயர்ந்த ஈசன் வீற்றிருக்கும் திருக்கழுமலத்தைக் காண்பதற்குப் பெரும் பரிசாகிய பேறு வாய்க்கப் பெற்றது. அது, நாள்தொறும் நம்மை ஆட்கொள்ளும் தன்மைத்தே.*

அலையாப் பரிசு – இப்பரிசினும் வேறொன்றும் சிறந்தது என்று மனத்தால் கொள்ளாத வகையில் சிறப்புறும் பெரும் பரிசு, ஈடு இணையற்ற பரிசு, திருவடிப் பேறு.

83. திருக்கழுமலம்

தல விளக்கம்: *திருப்பதிகம் எண் 82 காண்க.*

திருவிருத்தம்

பண் : *கொல்லி*

திருச்சிற்றம்பலம்

800. படையார் மழுவொன்று பற்றிய
கையன் பதிவினவில்
கடையார் கொடிநெடு மாடங்கள்
ஓங்கும் கழுமலமாம்
மடைவாய்க் குருகினம் பாளை
விரிதொறும் வண்டினங்கள்
பெடைவாய் மதுவுண்டு பேரா
திருக்கும் பெரும்பதியே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கையில் மழுப்படை ஏந்தியுள்ள ஈசனுடைய பதியானது, யாது என வினவில், அது, நீண்ட வாயில்களில் கொடிகள் திகழ, மாட மாளிகைகள் பெருகும் கழுமலம் என்னும் நகரம் ஆகும். அப்பெரும்பதியானது, மடைகளில் திகழும் குருகுகளுடன், வண்டினங்கள் பெடையுடன் மதுவுண்டு மகிழ்ந்திருக்கும் இயல்புடையது.

84. பொது

பதிகக் குறிப்பு: ஆருயிர் என முடிவதனைக் கொண்டு ஆருயிர்த் திருவிருத்தம் என்னும் பெயர் வழங்கலாயிற்று என்பர் ஆன்றோர்.

ஆருயிர்த் திருவிருத்தம்
பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

801. எட்டாம் திசைக்கும் இரு திசைக்
கும்இறை வா முறையென்று
இட்டார் அமரர்வெம் பூசல்
எனக் கேட்டு எரிவிழியா
ஒட்டாக் கயவர் திரிபுர
மூன்றையும் ஓரம்பினால்
அட்டான் அடிநிழல் கீழ்அதன்
றோ என்றன் ஆருயிரே.

தெளிவுரை: ஈசனே! எட்டுத் திசைகளாகிய தெற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடக்கு, வடகிழக்கு, வட மேற்கு, மேற்கு, கிழக்கு மற்றும் இரு திசைகளாகிய மேல் நோக்காகிய ஆகாயம், கீழ் நோக்காகிய பாதாளம் ஆகியவற்றின் இறைவரே! தேவர்கள்

அஞ்சிக் கலங்கி முறையிட, முப்புர அசுரர்களையும் அவர்களுடைய கோட்டைகளையும் ஓரம்பினால் எரித்த ஈசனே! என் ஆருயிரானது தேவரீருடைய திருவடிக்கீழ் உள்ளதே அன்றோ.

802. பேழ்வாய் அரவின் அரைக்கமர்ந்து
ஏறிப் பிறந்திலங்கு
தேய்வாய் இளம்பிறை செஞ்சடை
மேல்வைத்த தேவர்பிரான்
மூவான் இளகான் முழுஉல
கோடு மண் விண்ணு மற்றும்
ஆவான் அடிநிழற் கீழதன்
றோ என்றன் ஆருயிரே.

தெளிவுரை: அரவத்தை அரையில் கட்டிய ஈசன், இளைய பிறைச் சந்திரனைச் சிவந்த சடையின் மீது விளங்குமாறு சூடிய தேவர்பிரான் ஆவார். அப் பெருமான், மூப்பில்லாதவர்; மெலிவும் இல்லாதவர்; அவர், உலகமாகவும், மண்ணுலகும் விண்ணுலகும் ஆகியவர். அவருடைய திருவடியின் நிழற்கீழ் அன்றோ என் ஆருயிர் திகழ்கின்றது.

இளகு – மெலிவு.

803. தரியா வெகுளிய னாய்த் தக்கன்
வேள்வி தகர்த்துகந்த
எரியார் இலங்கிய சூலத்தி
னான்இமை யாதமுக்கட்
பெரியான் பெரியார் பிறப்பறுப்
பான் என்றும் தன் பிறப்பை
அரியான் அடிநிழற் கீழதன்
றோ என்றன் ஆருயிரே.

தெளிவுரை: பெருஞ் சினம் கொண்டவனாகிய தக்கனின் வேள்வியைத் தகர்த்து உகந்த ஈசன், எரி உமிழும் சூலப்படையுடையவர்; முக்கண்ணுடைய பெருந்தகையாளர்; வேதத்தைக் கற்றுத் தேர்ந்த பெரியவர்களின் பிறப்பினை அறுப்பவர்; தான் பிறப்பில்லாதவர். அப் பெருமானுடைய திருவடி நிழலின் கீழ் அன்றோ எனது ஆருயிர் உள்ளது.

சிறப்புரை: வேதங்களைக் கற்றுணர்ந்தவர்களைப் பெரியார் என உபதேசிக்கப் பெற்றது. இத்தன்மையில், "கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல் கையால் தொழுது ஏத்தப் பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே" (முதல் திருமுறை; பாடல் வ.எண் 2) எனத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்த வாறும் காண்க.

804. வடிவுடை வாள்நெடுங் கண்ணுமை
யாளையொர் பால்மகிழ்ந்து
வெடிகொள் அரவொடு வேங்கை
அதள்கொண்டு மேல்மருவிப்
பொடிகொள் அகலத்துப் பொன்பிதிர்ந்
தன்னபைங் கொன்றையந்தார்
அடிகள் அடிநிழற் கீழதன்
றோஎன்றன் ஆருயிரே.

தெளிவுரை: அழகுடைய நெடிய கண்ணுடைய உமாதேவியை ஒரு பாகத்தில் மகிழ்ந்து ஏற்று, அம்மை அப்பராக மேவும் சிவபெருமான், அரவத்தை அணி கலனாகக் கொண்டவர்; புலித்தோலை உடையாகக் கொண்டு விளங்குபவர்; திருநீற்றினைத் திருமார்பில் தரித்தவர்; பொன் விரிந்தது போன்ற கொன்றை மலரை மாலையாக அணிந்தவர். அவருடைய திருவடி நிழலின்கீழ் அல்லவா என்னுடைய ஆருயிர் உள்ளது.

805. பொறுத்தான் அமரர்க்கு அமுதருளி
நஞ்சம் உண்டுகண்டம்
கறுத்தான் கறுப்பழ காஉடை
யான் கங்கை செஞ்சடைமேல்
செறுத்தான் தனஞ்சயன் சேணார்
அகலம் கணையொன்றினால்
அறுத்தான் அடிநிழற் கீழதன்
றோ என்றன் ஆருயிரே.

தெளிவுரை: சிவபெருமான், கடலில் தோன்றிய நஞ்சினைத் தனது கண்டத்தில் தங்குமாறு செய்து உண்டு, அத்தகைய கண்டத்தைக் கறுப்பழகாய் மிளிறுமாறு செய்தவர். அவர், கங்கையைச் செஞ்சடையின் மீது பொருந்தி இருக்குமாறு புரிந்தவர்; அருச்சுனன் மீது அம்பு தொடுத்தவர். அப்பெருமானுடைய திருவடி நிழற் கீழ் அன்றோ, என்னுடைய ஆருயிர் திகழ்கின்றது.

806. காய்ந்தான் செறற்குஅரி யான்என்று
காலனைக் காலொன்றினால்
பாய்ந்தான் பணைமதில் மூன்றும்
கணையென்னும் ஒள்ளழலால்
மேய்ந்தான் வியனுலகு ஏழும்
விளங்க விழுமிய நூல்
ஆய்ந்தான் அடிநிழற் கீழதன்
றோ என்றன் ஆருயிரே.

தெளிவுரை: எவராலும் பேரிட்டு வெல்வதற்கு அரியவனாகிய காலனைத் திருப்பாதம் ஒன்றினால் உதைத்து வீழ்த்திய சிவபெருமான், முப்புர அசுரர்களுடைய கோட்டைகளை ஓர் அம்பினால் எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர். ஏழு உலகங்களையும் காத்தருளும் அப் பெருமான், விழுமிய நூலாகிய வேத

ஆகமங்களை விரித்து ஓதியவர். அவருடைய திருவடியின் கீழன்றோ என்னுடைய ஆருயிர் விளங்குகின்றது.

807. உளைந்தான் செறுதற்கு அரியான்
தலையை உகிரதனால்
களைந்தான் அதனை நிறைய
நெடுமால் கணார்குருதி
வளைந்தான் ஒருவிர லின்னொடு
வீழ்வித்துச் சாம்பர் வெண்ணீறு
அளைந்தான் அடிநிழற் கீழதன்
றோ என்றன் ஆருயிரே.

தெளிவுரை: ஈசன், பிரமனுடைய ஐந்து தலைகளில் ஒன்றைத் தன் நகத்தினால் கொய்து அதனைக் கபாலமாக ஏந்திப் பலி கொண்டவர்; திருமால் தனது ஒரு கண்ணினைக் குருதி சோர இடந்து பூசிக்க மகிழ்ந்து ஏற்றவர்; திருவெண்ணீற்றை நிறையப் பூசுபவர். அப் பெருமானுடைய திருவடி நிழற்கீழ் அன்றோ எனது ஆருயிர் திகழ்கின்றது.

808. முந்திவட் டத்திடைப் பட்டதெல்
லாமுடிவேந்தர் தங்கள்
பந்திவட் டத்திடைப் பட்டு அலைப்
புண்பதற்கு அஞ்சிக்கொல்லோ
நந்திவட் டம்நறு மாமலர்க்
கொன்றையும் நக்கசென்னி
அந்திவட் டத்தொளி யான்அடிச்
சேர்ந்தது என் ஆருயிரே.

தெளிவுரை: முற்காலத்தில் (இளமையில்) மன்னர்களின் படை பலத்திற்கும் ஆணைக்கும் அஞ்சி, அலைப்புண்டு இருந்தனன். ஆனால் இன்று, அட்ட மலர்களில்

ஒன்றாகிய நந்தியாவட்டம், பிரணவபுட்பமாகிய கொன்றை மலர் ஆகியவற்றினைத் திருமுடியில் சூடிய செஞ்சடை நாதருடைய திருவடியின்கீழ் என்னுடைய ஆருயிரானது சேர்ந்து பதிந்து விளங்குகின்றது.

809. மிகத்தான் பெரியதொர் வேங்கை
யதள்கொண்டு மெய்ம் மருவி
அகத்தான் வெருவநல் லாளை
நடுக்குறுப் பான்வரும் பொன்
முகத்தாற் குளிர்ந்திருந்து உள்ளத்தி
னாலுகப் பான்இசைந்த
அகத்தான் அடிநிழற் கீழதன்
றோ என்றன் ஆருயிரே.

தெளிவுரை: ஈசன், புலியின் தோலை உடுத்தி உமாதேவியின் உள்ளத்தில் அச்சம் கொள்ளுமாறு செய்பவர்; அழகிய திருமுகத்தில் பொலிவும், உள்ளத்தில் உவகையும் கொண்டு விளங்குபவர்; அப் பெருமானுடைய திருவடி நிழலின்கீழ் அன்றோ என்னுடைய ஆருயிர் பொருந்தி விளங்குகின்றது.

810. பைம்மாண் அரவல்குற் பங்கயச்
சீறடி யாள் வெருவக்
கைம்மா வரிசிலைக் காமனை
அட்ட கடவுள் முக்கண்
எம்மான் இவனென்று இருவரும்
ஏத்த எரிநிமிர்ந்த
அம்மான் அடிநிழற் கீழதன்
றோ என்றன் ஆருயிரே.

தெளிவுரை: பாம்பின் படம் போன்ற அல்குலும் தாமரை போன்ற மென்மையான சிற்றடியும் உடைய உமாதேவி அஞ்சுமாறு, யானையின் தோலை

உரித்தவர், சிவபெருமான். அவர், மன்மதனை எரித்தவர்; திருமாலும் பிரமனும் ஏத்திப் போற்றப் பெருஞ் சோதி வடிவாகியவர். அவருடைய திருவடி நிழலின்கீழ் அன்றோ என்னுடைய ஆருயிரானது விளங்குகின்றது.

811. பழகவொர் ஊர்தியரன் பைங்கண்
பாரிடம் பாணிசெய்யக்
குழலும் முழவொடு மாநட
மாடி உயர்இலங்கைக்
கிழவன் இருபது தோளும்
ஒருவிர லால்இறுத்த
அழகன் அடிநிழல் கீழதன்
றோ என்றன் ஆருயிரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இடபத்தை வாகனமாகக் கொண்ட சிவபெருமான், பூதகணங்கள் தாளம் இடவும், குழலும் முழவும் இயம்பவும், சிறப்பான நடனம் புரிந்தவர். அவர் இலங்கையின் வேந்தனாகிய இராவணனுடைய இருபது தோளும், திருப்பாதத்தின் ஒரு விரல் கொண்டு அடர்த்து, நலியுமாறு செய்த அழகர். அப் பெருமானுடைய திருவடி நிழலின்கீழ் அன்றோ என்னுடைய ஆருயிர் விளங்குகின்றது.

கிழவன் – உரிமையானவன்; வேந்தன்.

85. திருச்சோற்றுத்துறை

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 41 காண்க.

திருவிருத்தம்

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

812. காலை எழுந்து கடிமலர்
தூயன தாம் கொணர்ந்து
மேலை அமரர் விரும்பும்
இடம்விரை யான்மலிந்த
சோலை மணங்கமழ் சோற்றுத்
துறையுறை வார் சடைமேல்
மாலை மதியம் அன்றோஎம்
பிரானுக்கு அழகியதே.

தெளிவுரை: தேவர்கள் காலை எழுந்து, தூய நறுமண மலர்களைக் கொணர்ந்து, விரும்பி ஏத்த, மணம் கமழும் சோலை விளங்குகின்ற இடமாவது, சோற்றுத் துறையாகும். ஆங்கு வீற்றிருக்கும் எம்பெருமானுக்கு, நீண்ட சடை முடியின் மீது விளங்குகின்ற சந்திரன் அன்றோ அழகுடையது.

இத் தலத்தில் எழுந்தருளியுள்ள ஈசனின் திருப்பெயரும் தலத்தின் பெயரும் இத் திருப்பாட்டில் சுட்டப் பெறுதல் காண்க.

813. வண்டணை கொன்றையும் வன்னியும்
மத்தமும் வாளரவும்
கொண்டணைந் தேறு முடியுடை
யான்குரை சேர்கழற்கே
தொண்டணைந் தாடிய சோற்றுத்
துறையுறை வார்சடைமேல்
வெண்டலை மாலையன் றோஎம்
பிரானுக்கு அழகியதே.

தெளிவுரை: வண்டுகள் சுழன்று ஒலிக்க மணம் கமழும் கொன்றை மலர், வன்னிப் பத்திரம், ஊமத்தம் மலர் ஆகியவற்றுடன் ஒளி மிக்க அரவத்தைக் கொண்டு

விளங்கும் முடியுடையவர், சிவபெருமான். அப் பெருமான், தொண்டர்கள் பூசிக்க, விளங்கும் சோற்றுத் துறையில் வீற்றிருப்பவர். அவருக்கு வெண்மையான தலை மாலை அல்லவா அழகுடையது!

வெண்டலை மாலை – தலைமாலை, மண்டை ஓட்டு மாலை.

814. அளக்கு நெறியினன் அன்பர்கள்
தம்மனத்து ஆய்ந்துகொள்வான்
விளக்கும் அடியவர் மேல்வினை
தீர்த்திடும் விண்ணவர்கோன்
துளக்கும் குழையணி சோற்றுத்
துறையுறை வார்சடை மேல்
திளைக்கும் மதியமன் றோளம்
பிரானுக்கு அழகிய தே.

தெளிவுரை: ஈசன், உலகத்தவர்க்குப் படியளப்பவர்; அன்பர்களின் உள்ளத்தை நன்கு அறிபவர்; பக்தியால் பாடிப் போற்றும் அடியவர்களின் மீது உள்ள வினைகளைத் தீர்த்தருளும் தேவதேவர். அவர், அசைகின்ற குழையைக் காதில் அணிந்து சோற்றுத் துறையில் உறைபவர். அப் பெருமானுடைய சடை முடியின் மீது திளைத்து மேவும் சந்திரன் அல்லவா அவருக்கு அழகினைத் தரவல்லது!

815. ஆய்ந்தகை வாளர வத்தொடு
மால்விடை யேறியெங்கும்
பேர்ந்தகை மானிடம் ஆடுவர்
பின்னு சடையிடையே
சேர்ந்தகைம் மாமலர் துன்னிய
சோற்றுத் துறையுறைவார்

ஏந்துகைச் சூல மழுஎம்
பிரானுக்கு அழகியதே.

தெளிவுரை: ஈசன், கையில் அரவத்தைக் கொண்டும், இடப வாகனத்தில் ஏறியும், மானை இடக் கரத்தில் ஏந்தியும் நடனம் புரிபவர். அவர், சிறப்புடைய மலர்கள் சடை முடியில் பின்னிச் சூடியவராய்ச் சோற்றுத் துறையில் உறைபவர். அத்தகைய எம்பிரானாகிய அவருக்குக் கையில் ஏந்திய சூலமும் மழுவும் அழகுடையதாகும்.

816. கூற்றைக் கடந்ததும் கோளரவு
ஆர்த்ததும் கோளுழுவை
நீற்றில் துதைந்து திரியும்
பரிசதும் நாமறியோம்
ஆற்றிற் கிடந்துஅங்கு அலைப்ப
அலைப்புண்டு அசைந்த தொக்கும்
சோற்றுத் துறையுறை வார்சடை
மேலதொர் தூமதியே.

தெளிவுரை: ஈசன், கூற்றுவனை உதைத்து அழித்தவர்; நாகத்தைக் கங்கணமாகக் கட்டியும் ஆபரணமாகக் கொண்டும் உள்ளவர்; புலித்தோலை உடுத்தியவர்; திருநீற்றினைத் திருமேனியில் பூசிக் கையில் கபாலம் ஏந்திப் பலி ஏற்றவர். ஆயினும் அச்சிறப்புக்களை நாம் நேரில் கண்டதில்லை. அப் பெருமான், சோற்றுத் துறையில் வீற்றிருந்து கங்கையைச் சடை முடியில் தரித்து மேவ, அதனுடன் விளங்கும் சந்திரன், கங்கை நீரின் அலைகளால் அசைந்து மேவும் சிறப்பைக் கொண்டு திகழ்கிறது.

817. வல்லாடி நின்று வலிபேசு
வார்கோளர் வல்லசுரர்

கொல்லாடி நின்று குமைக்கிலும்
வானவர் வந்திறைஞ்சச்
சொல்லாடி நின்று பயில்கின்ற
சோற்றுத் துறை யுறைவார்
வில்லாடி நின்ற நிலைஎம்
பிரானுக்கு அழகியதே.

தெளிவுரை: வலிமை மிக்கவராகியும் வன்மை பேசியும், தீமைகள் புரிந்தும், கொன்றும், கொடுமை புரியும் அசுரர்கள், தேவர்களைத் துன்புறுத்தி அழித்தாலும் அத்தேவர்கள், பக்தியுடன் ஏத்திப் போற்றிச் சோற்றுத் துறையில் வீற்றிருக்கும் ஈசனைப் பணிபவராயினர். எம் தலைவராகிய அப்பெருமானுக்கு, வில்லேந்தி மேவும் திருவடிவமானது, அழகியதாக மிளிர்கின்றது.

சொல்லாடி – தோத்திரப் பாக்கள், வேதம்.

818. ஆயம் உடையது நாமறி
யோம்அர ணத்தவரைக்
காயக் கணைசிலை வாங்கியும்
எய்தும் துயக்கறுத்தான்
தூயவெண் ணீற்றினன் சோற்றுத்
துறையுறை வார்சடைமேல்
பாயும்வெண் ணீர்த்திரைக் கங்கைஎம்
மானுக்கு அழகியதே.

தெளிவுரை: ஈசன், மேவும் படைகளின் சிறப்பினை யாம் அறியோம். முப்புர அசுரர்கள் அழியுமாறு வில்லேந்திக் கணை தொடுத்துத் தேவர்களின் துயர்களைத் தீர்த்தருளிய பரமன், தூய திருவெண்ணீறு அணிந்தவராய்ச் சோற்றுத் துறையில் உறைபவர். எம்பெருமானுக்கு, நீண்ட சடை முடியின்

மீது பாய்ந்து செல்லும் அலையுடைய கங்கையானது அழகுடையது ஆகும்.

819. அண்டர் அமரர் கடைந்தெழுந்து
ஓடிய நஞ்சதனை
உண்டும் அதனை ஒடுக்கவல்
லான்மிக்க உம்பர்கள் கோன்
தொண்டு பயில்கின்ற சோற்றுத்
துறையுறை வார்சடைமேல்
இண்டை மதியமன் றோஎம்
பிரானுக்கு அழகியதே.

தெளிவுரை: அசுரர்களும், தேவர்களும் கடைந்தபோது எழுந்த நஞ்சை உட்கொண்டு கண்டத்தில் ஒடுக்க வல்லவர், தேவர்களின் தலைவராகித் திருத் தொண்டர்கள் பரவி ஏத்தும் சோற்றுத் துறையில் வீற்றிருக்கும் ஈசன் ஆவார். நீண்ட சடை முடியின்மீது விளங்கும் இண்டைசேர் சந்திரன் அன்றோ எம்பிரானாகிய இறைவனுக்கு அழகுடையது!

அண்டர் – அண்மையில் இராதவர், பகைவர், அசுரர்.

820. கடல்மணி வண்ணன் கருதிய
நான்முகன் தானறியா
விடமணி கண்டம் உடையவன்
தான்எனை ஆளுடையான்
சுடரணிந்து ஆடிய சோற்றுத்
துறையுறை வார்சடைமேல்
படமணி நாகமன் றோஎம்
பிரானுக்கு அழகியதே.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் அறியாதவராகி விளங்கிய நீலகண்டர், என்னை ஆளுடைய ஈசன். அவர், சூரிய பகவான் பூசித்து வழிபட்ட சோற்றுத்

துறையுறையும் எம்பெருமான். அவருக்குச் சடை முடியின் மீது விளங்கும் படம் கொண்ட நாகம் அன்றோ அழகுடையது!

சுடரணிந்து – சூரிய பகவான் பூசித்து வழிபட்ட தலப் பெருமையானது ஓதப் பெற்றது; சுடர் – சூரியன்.

821. இலங்கைக்கு இறைவன் இருபது
தோளும் முடிநெரியக்
கலங்க விரலினால் ஊன்றி
அவனைக் கருத்தழித்த
துலங்கல் மழுவினன் சோற்றுத்
துறையுறை வார் சடைமேல்
இலங்கு மதியம்அன் றோஎம்
பிரானுக்கு அழகியதே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இராவணனுடைய இருபது தோளும் முடியும் நெரியுமாறு, விரலினால் ஊன்றி, அவ்வரக்கனின் கருத்தினை அழித்தவர், ஒளி மிகுந்த மழுப்படை உடையவராய்ச் சோற்றுத்துறையில் வீற்றிருக்கும் ஈசன். நீண்ட சடை முடியுடைய எம்பிரானாகிய அவருக்கு, ஒளிகொண்டு திகழும் சந்திரன் அல்லவா அழகுடையது!

துலங்கல் – ஒளிர்தல்; இலங்குதல் – திகழ்தல்.

86. திருஒற்றியூர்

தல விளக்கம்: திருப்பதிகம் எண் *45* காண்க.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

822. செற்றுக் களிற்றுரி கொள்கின்ற
ஞான்று செருவெண் கொம்பொன்று
இற்றுக் கிடந்தது போலும்
இளம்பிறை பாம்பதனைச்
சுற்றிக் கிடந்தது கிம்புரி
போலச் சுடரிமைக்கும்
நெற்றிக்கண் மற்றதன் முத்தொக்கு
மாலொற்றி யூரனுக்கே.

தெளிவுரை: *சிவபெருமான், யானையைக் கொன்று அதன் தோலை உரித்த போது அதன் கொம்பு ஒன்று ஒடிந்து விழுந்ததானது, ஒற்றியூர் மேவும் ஈசனின் இளம்பிறை போன்றும்; பாம்பு சுற்றிக் கொண்டு இருப்பதானது, கிம்புரி போன்றும்; நெற்றிக் கண்ணானது, முத்துப் போன்றும் விளங்கிற்று.*

கிம்புரி – ஓர் ஆபரணம்; யானைத் தந்தப் பூண்; ஆல் – அசை.

823. சொல்லக் கருதியது ஒன்றுண்டு
கேட்கில்தொண் டாய்அடைந்தவர்
அல்லற் படக்கண்டு பின்என்
கொடுத்தி அலைகொள் முந்நீர்
மல்லல் திரைச்சங்க நித்திலம்
கொண்டுவம் பக்கரைக்கே
ஒல்லைத் திரைகொணர்ந்து எற்று
ஒற்றி யூர்உறை உத்தமனே.

தெளிவுரை: *வளப்பம் மிகுந்த சங்குகளும் முத்துக்களும் கொண்டு கரைக்குக் கடலலைகள் வாயிலாகச் சேர்க்கும் ஒற்றியூரில் மேவும் உத்தமனே! நான் சொல்ல வேண்டும் என்று கருதுவது ஒன்று உண்டு. திருத்தொண்டர்கள், அல்லல் அடைந்து துன்புறு*

வதைக் கண்டு வாளா இருக்கின்றீர். பின் யாதுதான் கொடுக்கப் போகின்றீர்!

சிறப்புரை: இத் திருப்பாட்டானது, திருத்தொண்டர் களுக்கு இகபர நலன்களை அருள் செய்ய வேண்டும் என்னும் வேட்கையை, இறைவன்பால் முன் வைத்த தாயிற்று. முத்தும் சங்கும் பெருக விளங்கும் திருத்தலத்தில் மேவும் இறைவன், திருத்தொண்டர் களுக்கு அருளாதது எங்ஙனம்? என்று வியந்துவாறு, ஏத்துதலாயிற்று.

இந்நெறியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "வாரமாகித் திருவடிக்குப் பணிசெய் தொண்டர் பெறுவதென்னே! ஆரம் பாம்பு வாழ்வது ஆரூர் ஒற்றியூரேல் உம்மது அன்று" (திருஓணகாந்தன்தளி; பாட்டு 9) என அருளிச் செய்தவாறும் காண்க.

மல்லல் – வளர்ப்பம்; வம்பு – நிலையின்மை.
கடலலை மோதும் கரையின் தன்மையைக் குறித்தது.

824. பரவை வருதிரை நீர்க்கங்கை
பாய்ந்துக்க பல்சடைமேல்
அரவம் அணிதரு கொன்றை
இளந்திங்கள் சூடியதோர்
குரவ நறுமலர் கோங்கம்
அணிந்து குலாய சென்னி
உரவுதிரை கொணர்ந்து எற்றொற்றி
யூருறை உத்தமனே.

தெளிவுரை: பரவி வரும் அலைகளை உடைய கங்கை, சடை முடியின்மேல் இருந்து சிதற; அரவம், அழகிய கொன்றை மலர், பிறைச்சந்திரன், குரவம், கோங்கம் ஆகியன சென்னியில் சூடிக் கடல் அலைகளைக்

கொணர்ந்து மோதும் ஒற்றியூரில், உத்தமனாகிய ஈசன் வீற்றிருப்பவர்.

825. தானகம் காடரங் காக
உடையது தன்னடைந்தார்
ஊனக நாறு முடைதலை
யிற்பலி கொள்வதுந்தான்
தேனக நாறுந் திருவொற்றி
யூருறை வாரவந்தாம்
தானக மேவந்து போனகம்
வேண்டி உழிதர்வரே.

தெளிவுரை: தேன் மணம் கமழும் திருவொற்றியூரில் உறையும் பெருமான், இல்லங்கள் தோறும் சென்று உணவு கொள்ளும் தன்மையில், ஊன் நாற்றம் உடைய முடைத் தலையாகிய பிரம கபாலம் ஏந்திப் பலி ஏற்பவர். அப் பெருமான், மயானத்தை அரங்காகக் கொண்டு நடனம் புரிபவர்.

826. வேலைக் கடல்நஞ்சம் உண்டுவெள்
ளேற்றோடும் வீற்றிருந்த
மாலைச் சடையார்க்கு உறைவிடம்
ஆவது வாரிகுன்றா
ஆலைக் கரும்பொடு செந்நெற்
கழனி அருகணைந்த
சோலைத் திருவொற்றி யூரை
எப்போதும் தொழுமின்களே.

தெளிவுரை: பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு, வெள்ளை இடபத்தின் மீது வீற்றிருக்கும் மாலைக் கதிரவனின் வண்ணம் போன்ற செஞ்சடையுடைய ஈசனுக்குரிய உறைவிடமாவது, வருவாய் குன்றாத கரும்பும், செந்நெல்லும் விளையும் கழனிகளும், அதன்

அருகில் நெருங்கிய சோலைகளும் உடைய, திருவொற்றியூர் ஆகும். அத்திருத்தலத்தை எப்போதும் தொழுவீராக.

எப்போதும் – எல்லாப் பொழுதுகளிலும் நடைபெறும் பூசைகளில் கலந்து வழிபட்டு நன்னலம் பெறுவீராக என்பது குறிப்பால் உணர்த்துதலாயிற்று; வேலைக் கடல் – வேலி (கரை) யுடைய கடல்; வாரி – வருவாய்.

827. புற்றினில் வாழும் அரவுக்கும்
திங்கட்கும் கங்கைஎன்னும்
சிற்றிடை யாட்கும் செறிதரு
கண்ணிக்கும் சேர்விடமாம்
பெற்றுடை யான்பெரும் பேச்சுடை
யான்பிரி யாதெனையாள்
விற்றுடை யான்ஒற்றி யூருடை
யான்றன் விரிசடை யே.

தெளிவுரை: ஈசன், இடபத்தை வாகனமாக உடையவர்; பெரும்பொருள் நல்கும் சொல்லாகிய திருவைந் தெழுத்துக்கு உரியவர்; பிரிதல் இல்லாது என்னை ஆட்கொள்பவர்; என்னை விற்பதற்கும் உரியவர். அவர் ஒற்றியூரில் விளங்குகின்றவர். அப்பெருமான் தரித்து மகிழும் அரவம், சந்திரன், கங்கை, செழுமை யான மலர்கள் ஆகியவற்றுக்குச் சேர்விடமாகத் திகழ்வது, அவருடைய விரிந்த சடையே.

சிறப்புரை: ஈசனுக்கு முழுமையான ஆளாக மேவும் தன்மை. "பிரியாது எனையாள் விற்றுடை யான்" என உணர்த்தப் பெறுதலைக் காண்க. இத் தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே" எனவும், "விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்"

(திருவாரூர்த் திருப்பதிகம்; பாடல்கள் 1, 2) என அருளிச் செய்தவாறும் காண்க.

செறிதரு கண்ணி – செழுமையான மலர்; பெற்று – பெற்றம் – இடபம்; பெரும் பேச்சு – திருவைந்தெழுத்து.

828. இன்றரைக் கண்ணுடை யார்எங்கும்
இல்லை இமயம் என்னும்
குன்றரைக் கண்ணல் குலமகட்
பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணும் கொடுத்துஉமை
யாளையும் பாகம் வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர்
ஒற்றி யூருறை உத்தமனே.

தெளிவுரை: *இக் காலத்தில் அரைக் கண்ணுடையவர் எவரும் இல்லை. இமாசல மன்னனின் நற்குல மகளாகிய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்ட போது, அரைக் கண்ணும் கொடுத்துத் தான் ஒன்றரைக் கண்ணுடையவராய்த் திகழ்பவர், ஒற்றியூரில் உறையும் உத்தமனாகிய ஈசனே.*

829. சுற்றிவண்டி யாழ்செயும் சோலையும்
காவும் துதைந் திலங்கும்
பெற்றிகண் டால்மற்றி யாவரும்
கொள்வர் பிறரிடை நீ
ஒற்றிகொண் டாய்ஒற்றி யூரையும்
கைவிட்டுறுமென்று எண்ணி
விற்றிகண் டாய்மற்று இதுஒப்பது
இல்லிடம் வேதியனே.

தெளிவுரை: *வண்டுகள் சுற்றி யாழ் போன்று இசைக்கும் வளமும் எழிலும் மிகுந்த சோலையும், காவும் நெருங்கி விளங்குவதைக் கண்டால், யாவரும் அதனை ஏற்பர்.*

ஈசனே! தேவரீர், பிறரிடம் ஒற்றி கொண்டு விளங்குபவர்; ஒற்றியூரையும் கைவிட்டுவிட வேண்டும் என்று எண்ணினால், வேதநாயகனே! இதைப் போன்ற இனிய இடம் வேறு யாது உளது!

830. சுற்றிக் கிடந்து ஒற்றி யூரன்என்
சிந்தை பிரிவறியான்
ஒற்றித் திரிதந்து நீயென்ன
செய்தி உலகம் எல்லாம்
பற்றித் திரிதந்து பல்லொடு
நாமென்று கண்குழித்துத்
தெற்றித்து இருப்பதல் லால்என்ன
செய்யும்இத் தீவினையே.

தெளிவுரை: ஒற்றியூரில் வீற்றிருக்கும் ஈசன், என் சிந்தையிலிருந்து நீங்காதவராகி என்னைச் சுற்றி இருப்பவர். எனவே தீவினையானது. செயலற்று, யாங்கும் திரிந்து, பல்லைக் கடித்தும், நாக்கைத் துழவி மென்றும், சோக வயப்பட்டு கண்ணைக் குழித்தும், ஒரு புறமாக வேறுபட்டுச் செயலற்றும் இருப்பதன்றி, வேறு என்ன செய்யும்?

ஈசன், சிந்தையில் புகுந்த நிலையில் தீவினை யானது செயலற்றதாகும் என ஓதப் பெறுவதாயிற்று. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "சித்தமே புகுந்து எம்மை ஆட்கொண்டு தீவினை கெடுத்து உய்யலாம்" (சென்னிப் பத்து 6) என அருளிச் செய்தவாறும் காண்க.

831. அங்கட் கடுக்கைக்கு முல்லைப்
புறவ முறுவல் செய்யும்
பைங்கண் தலைக்குச் சுடலைக்
களவி பருமணிசேர்
கங்கைக்கு வேலை அரவுக்குப்
புற்றுக் கலைநிரம்பாத்

திங்கட்கு வானம் திருவொற்றி
யூரர் திரு முடியே.

தெளிவுரை: திருவொற்றியூரில் வீற்றிருக்கும் ஈசனின் திருச்சடை முடியானது, தேன் துளிர்க்கும் கொன்றைக்குத் திகழும் முல்லை நிலமாகும்; மண்டை ஓட்டுக்குச் சுடலை ஆகும்; முத்தும் பவளமும் கொண்டு செழிப்புடன் மேவும் கங்கைக்குக் கடலாகும்; சூடும் அரவத்திற்குப் புற்றாகும்; பிறைச் சந்திரனுக்கு வானமாகும்.

அங்கட் கடுக்கை – அழகிய கள் (தேன்) நிறைந்த கொன்றை மலர்; பைங்கண்தலை – மண்டை ஒடு.

832. தருக்கின வாளரக் கன்முடி
பத்திறப் பாதந்தன்னால்
ஒருக்கின வாறுஅடி யேனைப்
பிறப்பறுத்து ஆளவல்லான்
நெருக்கின வானவர் தானவர்
கூடிக் கடைந்த நஞ்சைப்
பருக்கினவாறு என்செய்கேன் ஒற்றி
யூருறை பண்டங்கனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஒற்றியூரில் வீற்றிருந்து, பண்டரங்கம் என்னும் திருக்கூத்து புரியும் ஈசன், தருக்குற்ற இராவணனுடைய பத்துத் தலைகளையும் தன் பாதத்தால் அழுத்தி நெரியச் செய்தவர்; அடியேனுடைய பிறவிப் பிணியைத் தீர்த்து ஆட்கொள்பவர்; தேவர்களும் அசுரர்களும் இணைந்து பாற்கடலைக் கடைந்தபோது எழுந்த நஞ்சை அருந்தி, அருள் புரிந்தவர். தேவரீருடைய பெருங் கருணைக்கு நான் எவ்வகையில் அன்பு செலுத்தி ஏத்துவேன்!

87. திருப்பழனம்

தல விளக்கம்: திருப்பதிகம் வ.எண் 12 காண்க.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

833. மேவித்து நின்று விளைந்தன
வெந்துயர் துக்கமெல்லாம்
ஆவித்து நின்று கழிந்தன
அல்லல் அவைஅறுப்பான்
பாவித்த பாவனை நீயறி
வாய்பழ னத்தரசே
கூவித்துக் கொள்ளும் தனையடி
யேனைக் குறிக்கொள்வதே.

தெளிவுரை: பழனத்தில் வீற்றிருக்கும் ஈசனே! என்னைப் பற்றிக் கொண்டு நின்று விளைவித்திருந்த துன்பம் எல்லாம் கழிந்தன. அத்தகைய துன்பம் யாவும் தீருமாறு செய்த செயல்களைத் தேவரீர், அறிவீர். தேவரீர், அடியேனைக் கூவித்து அடிமை கொண்ட குறிப்பன்றோ இத் தன்மைக்கு ஆயிற்று.

சிறப்புரை: ஈசன் அடியவர்களைக் கூவித்து அழைத்து அருள் செய்யும் மாண்புதனை இத்திருப்பாட்டானது ஓதுதல் ஆயிற்று. இது. ஈசன் திருக்குறிப்பின் வண்ணமே யாவும் நிகழும் என்பதனை உணர்த்திற்று. இத் தன்மையில், "மாவடுவகிரன்ன கண்ணி பங்கா! நின் மலரடிக்கே கூவிடுவாய்! கும்பிக்கே இடுவாய்! நீன் குறிப்பறியேன்!" (அடைக்கலப்பத்து 8) என, அருளிச் செய்தவாறும் காண்க.

834. சுற்றிநின் றார்புறம் காவல்
அமரர் கடைத்தலையில்
மற்றுநின் றார்திரு மாலொடு
நான்முகன் வந்தடிக்கீழ்ப்
பற்றிநின் றார்பழ னத்தர
சேயுன் பணியறிவான்
உற்றுநின் றார்அடி யேனைக்
குறிக்கொண்டு அருளுவதே.

தெளிவுரை: *பழனத்தில் வீற்றிருக்கும் ஈசனே! தேவர்கள் புறம் சூழ்ந்து நிற்கத் திருமாலும் பிரமனும் திருவடியின் கீழ் வந்து, பற்றுக் கொண்டு விளங்கித் தேவரீருடைய ஆணையை நோக்கிக் காத்திருக்கின்றனர். அஞ்ஞான்று தேவரீர் அடியேனைக் குறித்து ஆட்கொண்டு அருளும் கருணைதான் என்னே!*

835. ஆடிநின் றாய்அண்டம் ஏழும்
கடந்துபோய் மேலவையும்
கூடிநின் றாய்குவி மென்முலை
யாளையும் கொண்டுடனே
பாடிநின் றாய்பழ னத்தர
சேஅங்கொர் பால்மதியம்
சூடிநின் றாய்அடி யேனைஅஞ்
சாமைக் குறிக்கொள்வதே.

தெளிவுரை: *பழனத்தில் மேவும் ஈசனே! தேவரீர், திருநடனம் புரிந்து விளங்குபவர்; ஏழு அண்டங் களையும் கடந்து ஓங்குபவர்; உமாதேவியாரை உடனாகக் கொண்டு திகழ்பவர்; பால் போன்ற வெண் மதியைச் சூடுபவர்; தேவரீர், அடியேனைக் குறியாகக் கொண்டு, அஞ்சாமையை அருளிச் செய்த கருணை தான் என்னே!*

836. எரித்துவிட் டாய்அம்பி னாற்புர
மூன்றுமுன் னேபடவும்
உரித்துவிட் டாய்உமை யாள்நடுக்
கெய்தவொர் குஞ்சரத்தைப்
பரித்துவிட் டாய்பழனத் தரசே
கங்கை வார்சடைமேல்
தரித்துவிட் டாய்அடி யேனைக்
குறிக்கொண்டு அருளுவதே.

தெளிவுரை: பழனத்தில் மேவும் ஈசனே! தேவரீர், முப்புரங்களை அம்பு தொடுத்து எரித்தவர்; உமாதேவியார் நடுங்குமாறு யானையின் தோலை உரித்தவர்; வேகத்தை உடைய கங்கையைக் கட்டுப் படுத்தி, நீண்ட சடை முடியின் மீது தரித்தவர். தேவரீர், அடியவனுக்குக் குறிக்கொண்டு அருளிய கருணைதான் என்னே!

பரித்துவிட்டாய் – கங்கையின் ஆற்றலைக் குறைத்தலை உணர்த்துதல் ஆயிற்று.

837. முன்னியு முன்னி முளைத்தன*
மூவெயி லும்உடனே
மன்னியும் அங்கும் இருந்தனை
மாய மனத்தவர்கள்
பன்னிய நூலின் பரிசறி
வாய்பழ னத்தரசே
முன்னியும் முன்னடி யேனைக்
குறிக்கொண்டு அருளுவதே.

தெளிவுரை: முன்னி நின்று முளைத்து எதிர்த்த மூன்று கோட்டைகளையும் மாயுமாறு செய்தவர் ஈசன். அவர், பல்வேறு சமயங்களில் சொல்லப்படும் பொருள் களையும் அறிபவர். அவர் பழனத்தில் மேவும்

இறைவர். அப்பெருமான், அடியேனை முன்னின்று ஆட்கொண்ட குறிப்பானது அருளின் தன்மைத்தே.

* முன்னி முனைத்தன என்பதும் பாடம் முன்னடியேனை – முன் அடியேனை, உன்னடியேனை.

838. ஏய்ந்தறுத் தாய்இன்ப னாய்இருந்
தேபடைத் தான்தலையைக்
காய்ந்தறுத் தாய்கண்ணி னாலன்று
காமனைக் காலனையும்
பாய்ந்தறுத் தாய்பழ னத்தரசே
என் பழவினை நோய்
ஆய்ந்தறுத் தாய்அடி யேனைக்
குறிக் கொண்டு அருளுவதே.

தெளிவுரை: *பழனத்தில் மேவும் அரசே! தேவரீர், படைத்தல் தொழில் புரியும் பிரமனின் தலை ஒன்றினை இன்பனாக இருந்து அறுத்தீர்; மன்மதனை நெற்றிக் கண்ணால் தீய்த்தீர்; காலனைப் பாய்ந்து, திருப்பாதத்தால் உதைத்து அழித்தீர்; என்னுடைய பழவினையாகிய சஞ்சித கன்மத்தையும் பிராரத்த கன்மத்தையும் நைந்து அழியுமாறு செய்தீர். தேவரீர், அடியேனைக் குறித்து அருள் புரிந்த கருணைதான் என்னே! இது எல்லா வினைகளும் நீங்கியதை உணர்த்திற்று.*

839. மற்றுவைத் தாய்அங்கொர் மாலொரு
பாக மகிழ்ந்துடனே
உற்றுவைத் தாய்உமை யாளொடும்
கூடும் பரிசெனவே
பற்றிவைத் தாய்பழ னத்தரசே
அங்கொர் பாம்பு ஒருகை

சுற்றிவைத் தாய்அடி யேனைக்
குறிக்கொண்டு அருளுவதே.

தெளிவுரை: பழனத்தில் வீற்றிருக்கும் ஈசனே! தேவரீர், திருமாலை ஒரு பாகத்தில் வைத்தவர்; உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு அம்மையப்பராக மேவுபவர்; பாம்பைக் கையில் கட்டி வைத்திருப்பவர். தேவரீர், அடியேனைக் குறியாகக் கொண்டு அருளிய கருணைதான் என்னே!

840. ஊரினின் தாயொன்றி நின்றுவிண்
டாரையும் ஒள்ளழலால்
போரினின் றாய்பொறை யாய்உயிர்
ஆவிசுமந்து கொண்டு
பாரில்நின் றாய்பழ னத்தரசே
பணி செய்பவர் கட்கு
ஆரநின் றாய்அடி யேனைக்
குறிக்கொண்டு அருளுவதே.

தெளிவுரை: பழனத்தில் வீற்றிருக்கும் ஈசனே! தேவரீர், ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குத் தாவித் திரிந்து சென்று தாக்கும் முப்புர அசுரர்களின் கோட்டைகளை, எரித்துச் சாம்பலாகச் செய்தவர்; உடலின்கண் மேவும் உயிருக்கு உயிராகி விளங்குபவர். திருப்பணி யாற்றும் திருத்தொண்டர்களின் மனம் நிறையுமாறு திகழ்பவர். தேவரீர் அடியேனைக் குறியாகக் கொண்டு அருளிச் செய்த கருணைதான் என்னே!

841. போகம்வைத் தாய்புரி புன்சடை
மேலோர் புனலதனை
யாகம்வைத் தாய்மலை யார்மட
மங்கை மகிழ்ந்துடனே
பாகம்வைத் தாய்பழ னத்தரசே
உன் பணியருளால்

ஆகம்வைத் தாய்அடி யேனைக்
குறிக் கொண்டு அருளுவதே.

தெளிவுரை: *பழனத்தில் வீற்றிருக்கும் ஈசனே! தேவரீர், மென்மையான சடையில் கங்கையை வைத்தவர்; உமாதேவியைத் திருமார்பில் பாகமாகக் கொண்டு விளங்குபவர்; திருத்தொண்டர்கள் திருப்பணி செய்வதற்கும் தொண்டு செய்வதற்கும் இத்தேகத்தை அருளிச் செய்தவர். தேவரீர், அடியவனைக் குறிக் கொண்டு ஆளாக்கி அருளிய கருணைதான் என்னே!*

842. அடுத்திருந் தாய்அரக் கன்முடி
வாயொடு தோள்நெரியக்
கெடுத்திருந் தாய்கிளர்ந்தார்வலி
யைக்கிளை யோடுடனே
படுத்திருந் தாய்பழ னத்தரசே
புலியின் னுரிதோல்
உடுத்திருந் தாய்அடி யேனைக்
குறிக்கொண்டு அருளுவதே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *பழனத்தில் வீற்றிருக்கும் அரசே! தேவரீர், இராவணனுடைய முடி, வாய், தோள் ஆகியன நெரியுமாறு அடர்த்தவர்; அசுரர்களை அழித்தவர்; புலியின் தோலை உடுத்தியவர். தேவரீர், அடியேனைக் குறிக்கொண்டு ஆளாக ஏற்று அருள் புரிந்த கருணை தான் என்னே!*

88. திருப்பூந்துருத்தி

தல விளக்கம்: *காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 11ஆவது திருத்தலம். திருநாவுக்கரசர் பாடல் பெற்றது.*

இந்திரன், திருமால், இலக்குமி, சூரியன், காசிப முனிவர் வழிபட்டது. திருவையாற்றினை மையமாகக் கொண்ட ஏழூர்த்தலங்களுள் இது ஒன்று இதனைச் சப்த ஸ்தானத் தலங்களுள் ஒன்று என்பர். அப்பர் உழவாரப் பணி செய்த இத்திருத்தலத்தைக் காலால் மிதிக்கவும் அஞ்சி, வெளிப்புறத்தில் நின்ற திருஞான சம்பந்தருக்கு, ஈசன், நந்தியை விலகி இருக்கச் செய்து திருக்காட்சி நல்கிய தலம். திருஞானசம்பந்தரின் பல்லக்கைத் திருநாவுக்கரசர் தோளில் சுமந்த தலம். திருக்கோயில் மேலைப் பூந்துருத்தியில் உள்ளது. (திருத்துருத்தி என்னும் தலம் வேறு. அது குத்தாலம் என அழைக்கப்படுகிறது. காவிரித் தென்கரைத் தலம் 127இல், 37ஆவது திருத்தலம் திருக்குற்றாலம் – பாண்டிய நாட்டுத் தலம் – வேறு)

சுவாமி : ஆதிபுராணர், பொய்யிலியர், புஷ்பவனேஸ்வரர்

அம்பிகை : சௌந்தரநாயகி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : சூரிய தீர்த்தம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

843. மாலினை மாலுற நின்றான்
மலைமகள் தன்னுடைய
பாலனைப் பால்மதி சூடியைப்
பண்புஉண ரார்மதில் மேல்
போலனைப் போர்விடை யேறியைப்
பூந்துருத் திம் மகிழும்
ஆலனை ஆதிபு ராணனை
நாம்அடி போற்றுவதே.

தெளிவுரை: பூந்துருத்தியில் மகிழ்ந்து வீற்றிருக்கும் ஈசன், திருமால் மயக்கம் உறுமாறு நின்றவர்; உமாதேவியைத் தன்பால் கொண்டு அம்மையப்பராய் விளங்குபவர்; பால் போன்ற வெண்மையான பிறைச் சந்திரனைச் சூடியவர்; நற்பண்பு நீங்கிய அசுரர்களின் முப்புரங் களை எரித்தவர்; இடபவாகனத்தில் ஏறி விளங்குபவர்; ஆல் நிழலில் மேவி அறம் உறைத்தவர். ஆதி புராணராகிய அப்பெருமானின் மலரடியைப் போற்றி நாம் வணங்குகின்றனம்.

ஆதிபுராணன் – இத்திருத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவனின் திருநாமம்.

844. மறியுடை யான்மழு வாளினன்
மாமலை மங்கையொர்பால்
குறியுடை யான்குணம் ஒன்றுஅறிந்
தார்இல்லை கூறில்அவன்
பொறியுடை வாளர வத்தவன்
பூந்துருத்திய் யுறையும்
அறிவுடை ஆதிபு ராணனை
நாம் அடி போற்றுவதே.

தெளிவுரை: பூந்துருத்தியில் வீற்றிருக்கும் ஆதி புராணர், மானும் மழுப்படையும் உடையவர்; மலைமகளாகிய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர்; அப்பெருமானுடைய குணவிசேடத்தை அறிந்தவர் யாரும் இல்லை. அரவத்தை அணியாக உடைய அப்பரமனின் திருவடியை நாம் போற்றுவோம்.

845. மறுத்தவர் மும்மதில் மாயவொர்
வெஞ்சிலை கோத்தொர் அம்பால்
அறுத்தனை ஆலதன் கீழனை
ஆல்விடம் உண்டு அதனைப்

பொறுத்தனைப் பூதப் படையனைப்
பூந்துருத்திய் யுறையும்
நிறத்தனை நீல மிடற்றனை
யான்அடி போற்றுவதே.

தெளிவுரை: சிவபெருமான், பகைத்து நின்ற முப்புர அசுரர்கள் மாயுமாறு, மேரு மலையை வில்லாகக் கொண்டு அம்பு தொடுத்து அழித்தவர்; கல்லால மரத்தின்கீழ் இருந்து அறங்களை உபதேசித்தவர்; கொடிய விடத்தை உட்கொண்டு அதனைக் கண்டத்தில் தேக்கிக் கொண்டவர்; பூத கணங்களைப் படையாகக் கொண்டவர்; பூந்துருத்தியில் உறையும் ஒளிமயமானவர். அப் பெருமானுடைய திருவடியை யான் போற்றினேன்.

நிறம் – ஒளி.

846. உருவினை ஊழி முதல்வனை
ஓதி நிறைந்து நின்ற
திருவினைத் தேசம் படைத்தனைச்
சென்றடைந் தேனுடைய
பொருவினை யெல்லாம் துரந்தனைப்
பூந்துருத்திய் யுறையும்
கருவினைக் கண்மூன்று உடையனை
யான்அடி போற்றுவதே.

தெளிவுரை: சிவபெருமான், அழகிய வடிவு உடையவர்; ஊழியின் முதல்வராக விளங்குபவர்; வேத ஆகமங் களை விரித்து ஓதிப் பூரண ஞானம் உடையவராய்ச் செழித்துத் திகழ்பவர்; சோதி வடிவாகியவர்; சென்றடைந்து, திருவடியைப் பற்றிய என் வினை முழுதும் தீர்த்தவர். பூந்துருத்தியில், மூலமாகிய கருப்பொருளாய் உறையும் முக்கண்ணனுடைய — அப்

பெருமானுடைய திருவடிக் கமலங்களை, யான் போற்றுவேன்.

பொருவினை – சிறிதளவே ஆயினும், உயிரைப் பற்றி நின்று பிறவிப் பிணியை நல்கும் தன்மையைப் புரிதலால் பொருவினை எனச் சுட்டப் பெற்றது; பொரு – போர்த்தன்மை கொண்டு துன்பத்தைத் தருதல்.

847. தக்கன்றன் வேள்வி தகர்த்தவன்
சாரம் அதுவன்று கோள்
மிக்கன மும்மதில் வீயவொர்
வெஞ்சிலை கோத்தொர் அம்பால்
புக்கனன் பொன்திகழ் தன்னதோர்
பூந்துருத் தியுறையும்
நக்கனை நங்கள்பி ரான்றனை
நான்அடி போற்றுவதே.

தெளிவுரை: சிவபெருமான் தக்கனுடைய வேள்வியைத் தகர்த்தவர்; நற்பயன் விளைவிக்காத வலிமையுடைய தான மூன்று மதில்களையும் மேருமலையை வில்லாகக் கொண்டு, ஓர் அம்பினால் எய்து, எரித்துச் சாம்பலாக்கியவர்; பொன் போன்று பெருமையுடன் திகழும் பூந்துருத்தியில் உறையும் ஈசன் ஆவார். எங்கள் பெருமானாகிய அத்தலைவனின் திருவடி மலரை நான் போற்றி வணங்குகின்றேன்.

848. அருகடை மாலையும் தான்உடை
யான்அழ கால்அமைந்த
உருவுடை மங்கையும் தன்னொரு
பால்உல காயுநின்றான்
பொருபடை வேலினன் வில்லினன்
பூந்துருத்திய் யுறையும்
திருவுடைத் தேச மதியனை
யானடி போற்றுவதே.

தெளிவுரை: சிவபெருமான், அருகருகே தொடுக்கப் பெற்றுக் கட்டிய இண்டை மாலையை உடையவர்; அழகு மிளிரும் உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர்; உலகம் யாவுமாகவும் விளங்குபவர்; சூலப்படை உடையவர்; மலை வில்லேந்திய பிநாகபாணியாகத் திகழ்பவர்; பூந்துருத்தியில் உறைபவர்; வளமையும் ஒளியும் உடைய சந்திரனைச் சூடியவர். அப் பரமனை நான் போற்று கின்றேன்.

சிறப்புரை: இத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகையின் திருநாமமாகிய சௌந்தரநாயகி என்னும் திருப்பெயரானது, "அழகால் அமைந்த உருவுடை மங்கை" என ஓதப் பெறுதலாயிற்று. ஈசன் — நீலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர் ஆகிய அட்டமூர்த்தியாக விளங்குதலை, "தன்னொருபால் உலகாயும் நின்றான்" என ஏத்தப் பெற்றது.

பொருபடை வேல் – சூலம்; வில்லினன் – மேருமலையை வில்லாக ஏந்திய ஈசன்; பிநாகபாணி என்னும் திருநாமம் வழங்கப் பெறுதலும் காண்க; பினாகம் – சிவன் வில்.

849. மன்றியும் நின்ற மதிலரை
மாய வகைகெடுக்கக்
கன்றியும் நின்று கடுஞ்சிலை
வாங்கிக் கனல்அம்பினால்
பொன்றியும் போகப் புரட்டினன்
பூந்துருத் தியுறையும்
அன்றியும் செய்தபி ரான்றனை
யான்அடி போற்றுவதே.

தெளிவுரை: பகைத்தும் எதிர்த்தும் நின்ற முப்புர அசுரர்களையும், அவர்களுடைய கோட்டைகளையும்,

பெரிய மலைவில் கொண்டு நெருப்பாகிய அம்பினால் எய்து, எரித்து மாய்த்தவர் சிவபெருமான். பூந் துருத்தியில் உறையும் அப்பெருமான், யாவற்றினையும் உள்ளதாகச் செய்பவர்; இல்லாததாகவும் செய்பவர். அப் பரமனின் திருவடி மலரை நான் போற்றினேன்.

850. மின்னிறம் மிக்க இடையுமை
நங்கையொர் பால்மகிழ்ந்தான்
என்னிறம் என்றம ரர்பெரியார்
இன்னந் தாம்அறியார்
பொன்னிற மிக்க சடையவன்
பூந்திருத்திய் யுறையும்
என்னிற எந்தை பிரான்றனை
யான்அடி போற்றுவதே.

தெளிவுரை: *மின்னலைப் போன்ற ஒளிமிக்க இடை உடைய உமாதேவியை ஒரு பக்கத்தில் பாகமாகக் கொண்டு மகிழ்ந்த சிவபெருமான் எத்தகைய வண்ணம் உடையவர் என்று, தேவர்களும் மற்றும் உள்ள பெரியவர்களும் அறியாத தன்மையில் உள்ளவர். பொன் போன்று ஒளி மிகும் சடையுடைய அப்பெருமான், பூந்துருத்தியில் உறைபவர்; ஒளி வண்ணம் ஆகுபவர். எந்தை பெருமானாகிய அவருடைய திருவடி மலரை ஏத்திப் போற்றுவோமாக.*

என்னிறம் – எல்நிறம், ஒளி வண்ணம்; கதிரோன் ஒளி.

851. அந்தியை நல்ல மதியினை
ஆர்க்கும் அறிவரிய
செந்தியை வாட்டும்செம் பொன்னிசைச்
சென்றடைந் தேனுடைய
புந்தியைப் புக்க அறிவினைப்
பூந்துருத்திய் யுறையும்

நந்தியை நங்கள்பி ரான்றனை
நானடி போற்றுவதே.

தெளிவுரை: சிவபெருமான், அந்திப் பொழுதாகத் திகழ்பவர்; நல்ஞானமாக விளங்குபவர்; அறிதற்கு அரிய செந்தீவண்ணர்; செம்பொன் போன்று ஒளிர்பவர்; திருவடியைச் சென்றடைந்த அடியவனின் புந்தியில் மேவுபவர்; பூந்துருத்தியில் உறையும் ஈசன் ஆவார். எங்கள் தலைவராகிய அவருடைய திருவடி மலரை நான் பணிந்து போற்றுகின்றேன்.

நந்தி – சிவபெருமான்.

852. பைக்கையும் பாந்தி விழிக்கையும்
பாம்பு சடையிடையே
வைக்கையும் வானிழி கங்கையும்
மங்கை நடுக்குறவே
மொய்க்கை யரக்கனை ஊன்றினன்
பூந்துருத் தியுறையும்
மிக்கநல் வேத விகிர்தனை
நானடி போற்றுவதே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: படத்தை விரித்தும் பதுங்கியும் விளங்கும் பாம்பைச் சடையில் வைத்து மேவும் சிவபெருமானின் முடியில் விளங்கும் கங்கையும் அங்கத்தில் பாகம் கொண்டுள்ள உமாதேவியும் நடுங்குமாறு கயிலையை எடுத்த இராவணனைத் திருப்பாதத்தால் ஊன்றி நெரித்தவர், பூந்துருத்தி உறையும் இறைவன். அத்தகைய வேத முதல்வனின் திருவடி மலரை நான் போற்று கின்றேன்.

89. திருநெய்த்தானம்

தல விளக்கம்: தில்லை ஸ்தானம் எனப்படுவது. திருப்பதிகம் எண் 37 காண்க.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

853. பாரிடம் சாடிய பல்லுயிர்
வானம ரர்க்கருளிக்
காரடைந் தகடல் வாயுமிழ்
நஞ்சமு தாகஉண்டான்
ஊரடைந்து இவ்வுல கிற்பலி
கொள்வது நாம்அறியோம்
நீரடைந் தகரை நின்றநெய்த்
தானத்து இருந்தவனே.

தெளிவுரை: பாரில் உள்ள உயிர்களுக்கும் மற்றும் தேவர்களுக்கும் அருள் புரியும் தன்மையில் கடலில் தோன்றிய நஞ்சினை அமுதம் போன்று உட்கொண்டு, நீலகண்டனாகிய ஈசன் ஊர்தொறும் சென்று கபாலம் ஏந்திப் பலி ஏற்ற செயலை, நாம் அறியோம். காவிரி ஆற்றின் கரையில் மேவும் நெய்த்தானத்தில் வீற்றிருக்கும் அவ் இறைவன் கருணை வயத்தவரே.

சிறப்புரை: இது, ஈசனின் பெருமையையும் அடியவர் களுக்கு அருளும் திறத்தையும் உன்ரத்தருளியது. தேவர் களுக்குக் கடந்த காலத்தில் புரிந்த அருள் இயல்பாத லாகும் எனவும், அது வியக்கத்தக்கதும் அல்ல எனவும் குறிப்புத் தோன்ற, "நாம் அறியோம்" என ஓதப் பெறுதலாயிற்று. நெய்த்தானத்து மேவும் பெருமான்,

வினை நீக்கி அடியவர்களை ஆட்கொள்ளும் சிறப்பு இவண் நன்கு சுட்டப் பெறுதலும் காண்க.

பாரிடம் சாடிய – உலகிடை வருந்திய.

854. தேய்ந்திலங் கும்சிறு வெண்மதி
யாய்நின் திருச்சடைமேல்
பாய்ந்த கங்கைப் புனல்பன்
முகமாகிப் பரந்தொலிப்ப
ஆய்ந்திலங் கும்மழு வேலுடை
யாய்அடி யேற்குஉரைநீ
ஏந்திள மங்கையும் நீயும்நெய்த்
தானத்து இருந்ததுவே.

தெளிவுரை: *சிவபெருமானே! தேவரீர், பிறைச் சந்திரனைச் சடை முடியில் சூடியவர்; பல முகங்களாக விரிந்தோடும் கங்கையைத் தரித்தவர்; மழுப் படையும் சூலப் படையும் ஏந்தியவர்; தேவரீர் உமாதேவியை உடனாகக் கொண்டு நெய்த்தானத்தில் வீற்றிருக்கும் அருள் தன்மையை அடியேனுக்கு உரைத்தருள்வீராக.*

இளமங்கை – இத் திருத்தலத்தில் மேவும் அம்பிகையின் திருநாமத்தை உரைத்ததாம்.

855. கொன்றடைந் தாடிக் குமைத்திடும்
கூற்றம்ஒன் னார்மதில் மேல்
சென்றடைந்து ஆடிப் பொருததும்
தேசமெல் லாம்அறியும்
குன்றடைந்து ஆடும் குளிர்பொழில்
காவிரி யின்கரைமேல்
சென்றடைந் தார்வினை தீர்க்கும்நெய்த்
தானத்து இருந்தவனே.

தெளிவுரை: ஈசனே! கூற்றுவனைப் போன்று கொலைத் தன்மையுடைய கொடுமைகள் செய்யும் முப்புர அசுரர் களின் மதில்களை எரித்த தேவரீருடைய வீரச் செயலை, உலகம் யாவும் அறியும். குன்றுகளின் இடையில் அடைந்து, பாய்ந்து வரும் காவிரியின் கரையில் குளிர்ந்த பொழில்கள் விளங்கச் சென்று தரிசித்தவர்களின் வினை தீர்க்கும் நெய்த்தானத்தில் இருப்பவர், தேவரீரே.

856. கொட்டு முழவர வத்தொடு
கோலம் பலஅணிந்து
நட்டம் பலபயின்று ஆடுவர்
நாகம் அரைக் கசைத்துச்
சிட்டர் திரிபுரம் தீயெழச்
செற்ற சிலை யுடையான்
இட்டம் உமையொடு நின்றநெய்த்
தானத்து இருந்தவனே.

தெளிவுரை: ஈசன், கொட்டுகின்ற முழவு ஒலித்து மேவப் பல வண்ணங்களையுடைய திருக்கோலம் தாங்கிப் பல விதமான நடனங்களைப் புரிபவர்; நாகத்தை அரையில் கட்டியவர்; தவத்தினர்; முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கும் தன்மையில் மேரு மலையை வில்லாகக் கொண்டுள்ளவர். அப்பெருமான், உமாதேவியை உடனாகக் கொண்டு அம்மையப்பராக நெய்த்தானத்தில் இருப்பவரே.

முழவரவம் – முழவின் ஒலி.

857. கொய்ம்மலர்க் கொன்றை துழாய்வன்னி
மத்தமும் கூவிளமும்
மெய்ம்மலர் வேய்ந்த விரிசடைக்
கற்றைவிண் ணோர்பெருமான்

மைம்மலர் நீல நிறங்கருங்
கண்ணியோர் பால்மகிழ்ந்தான்
நின்மலன் ஆடல் நிலயம்
நெய்த்தானத்து இருந்தவனே.

தெளிவுரை: ஈசன், கொன்றை மாலை, வன்னிப் பத்திரம், ஊமத்த மலர், வில்வ இதழ் மற்றும் மெய்ம் மலர் வேய்ந்த விரிந்த சடை உடையவர்; தேவர்களின் தலைவர்; நீலோற்பல மலர் போன்ற கண்ணுடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு உகந்தவர். மலத்துள் சாராது திகழ்ந்து, அடியவர்களின் மும்மலங் களை, இன்மையாக்குபவர். அப்பெருமான் திருநடனம் புரியும் கூத்தராக, நெய்த்தானத்தினை இடமாகக் கொண்டு திகழ்பவரே.

மெய்ம்மலர் – அட்ட மலர்களாகிய புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம் (குவளை), பாதிரி, அலரி, செந்தாமரை எனக் கொள்க; கூவிளம் – வில்வ இதழ்; நிலயம் – இருப்பிடம்.

858. பூந்தார் நறுங்கொன்றை மாலையை
வாங்கிச் சடைக்கணிந்து
கூர்ந்தார் விடையினை யேறிப்பல்
பூதப் படைநடுவே
போந்தார் புறவிசை பாடவும்
ஆடவும் கேட்டருளிச்
சேர்ந்தார் உமையவ ளோடுநெய்த்
தானத்து இருந்தவனே.

தெளிவுரை: ஈசன், நறுமணம் கமழும் கொன்றை மாலையை விரும்பி அணிந்தவர்; இடப வாகனத்தில் ஏறிப் பூதப் படைகளின் நடுவே விளங்கியவர்; அக் கணத்தினர் இசைத்துப் பாடும் புகழ்ப் பாடல்களைக்

கேட்டு அருளியவர். அப்பெருமான், உமாதேவியை உடனாகக் கொண்டு நெய்த்தானத்தில் வீற்றிருப்பவரே.

859. பற்றின பாம்பன் படுத்த
புலியுரித் தோலுடையன்
முற்றின மூன்று மதில்களை
மூட்டி எரித்தறுத்தான்
சுற்றிய பூதப் படையினன்
சூல மழுவொருமான்
செற்றுநம் தீவினை தீர்க்குநெய்த்
தானத்து இருந்தவனே.

தெளிவுரை: ஈசன், பாம்பைக் கையில் பற்றி உள்ளவர்; புலியைக் கொன்று அதன் தோலை உரித்து உடையாகக் கொண்டவர்; மூன்று அசுரர் புரங்களை எரித்துச் சாம்பலாக்கியவர்; பூதப் படைகள் சூழ விளங்குபவர்; மான், மழு, சூலம் ஆகியவற்றைக் கொண்டுள்ளவர்; அப் பெருமான் நம்முடைய தீய வினைகளைத் தீர்க்கும் நெய்த்தானத்தில் வீற்றிருப் பவரே.

தீவினை தீர்க்கும் நெய்த்தானம் – திருத்தல விசேடமானது, இவண் சுட்டப் பெறுதலாயிற்று.

860. விரித்த சடையினன் விண்ணவர்
கோன்விடம் உண்டகண்டன்
உரித்த கரியுரி மூடிஒன்
னார்மதில் மூன்றுடனே
எரித்த சிலையினன் ஈடழி
யாதுஎன்னை ஆண்டுகொண்ட
தரித்த உமையவ ளோடு நெய்த்
தானத்து இருந்தவனே.

தெளிவுரை: ஈசன், விரிந்து மேவிய சடை உடையவர்; தேவர்களின் தலைவர்; நஞ்சினை உண்டு நீல கண்டனாக விளங்குபவர்; யானையின் தோலைப் போர்த்திருப்பவர்; பகைவராகிய மூன்று அசுரர் களுடைய கோட்டைகளை, மேருவை வில்லாகக் கொண்டு எரித்தவர்; அடியவர்களுக்கு அருள் செய்யும் பெருமைக்குரியவராகிக் குறைவின்றி என்னை ஆட்கொண்டவர். அவர், உமாதேவியை ஒரு பாகமாகத் தரித்துள்ளவராகி, நெய்த்தானத்தில் வீற்றிருப்பவரே.

தரித்த – உமாதேவி உலகங்களைத் தாங்கியருளும் பாங்கினையும் உணர்த்தும்; ஈடு – பெருமை.

861. தூங்கான் துளங்கான் துழாய்கொன்றை
துன்னிய செஞ்சடைமேல்
வாங்கா மதியமும் வாளர
வும்கங்கை தான்புனைந்தான்
தேங்கார் திரிபுரம் தீயெழ
எய்து தியக்கறுத்து
நீங்கான் உமையவ ளோடுநெய்த்
தானத்து இருந்தவனே.

தெளிவுரை: ஈசன், உறக்கம் இல்லாதவர்; அசைவு அற்றவராகி நிலைப்பாடு உடையவர்; செஞ்சடையில் கொன்றை மாலை சூடியவர்; கங்கையும் சந்திரனும், அரவும் தரித்தவர், திரிபுரங்களை அழித்துத் தேவர் களின் அயற்சியை நீக்கியவர். அவர், உமாதேவியோடு பிரியாது நெய்த்தானத்தில் இருப்பவரே.

862. ஊட்டிநின் றான்பொரு வானில
மும்மதில் தீயம்பினால்
மாட்டிநின் றான்அன்றி னார்வெந்து
வீழவும் வானவர்க்குக்

காட்டிநின் றான்கத மாக்கங்கை
பாயவொர் வார்சடையை
நீட்டிநின் றான்திரு நின்றநெய்த்
தானத்து இருந்தவனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், வானில் திரியும் மும்மதில்களைக் கொண்ட அசுரர்களின் கோட்டைகளை அக்கினி யாகிய அம்பு எய்து எரித்துச் சாம்பலாக்கியவர்; கங்கையைச் சடை முடியில் ஏற்றவர். அவர், திருமகள் செழித்து மலரும் நெய்த்தானத்தில் வீற்றிருப்பவரே.

சிறப்புரை: ஈசன், அம்பினை வில்லில் மாட்டியும், மும்மதிலில் தீயை ஊட்டியும், வானவர்க்கு அருள் தன்மையை விரைந்து காட்டியும், கங்கைக்குச் சடையை நீட்டியும் விளங்குதல் கவி நயம் மேவ உரைக்கப்படுதல் காண்க.

திருநின்ற நெய்த்தானம் – திருநின்ற செம்மையைச் சுட்டுதலும் ஆம்.

90. திருவேதிகுடி

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 14ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. பிரமன் பூசித்த பதி. திருவையாற்றை மையமாகக் கொண்ட சப்த ஸ்தானங்களுள் ஒன்று.

மற்றும் மூன்றாம் திருமுறை பதிகம் எண் 78 காண்க.

சுவாமி : வேதபுரீஸ்வரர், வாழைமடுநாதர்

அம்பிகை : மங்கையர்க்கரசி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : வேத தீர்த்தம்

தல
விநாயகர் : வேதவிநாயகர்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

863. கையது காலெரி நாகங் கனல்விடு சூலமது
வெய்யது வேலைநஞ் சுண்ட விரிசடை விண்ணவர்கோன்
செய்யினில் நீல மணங்கம ழும்திரு வேதிகுடி
ஐயனை ஆரா அமுதினை நாமடைந்து ஆடுதுமே.

தெளிவுரை: ஈசன், கையினில் காற்றுடன் சேர்ந்து கொழுந்து விட்டு எரியும் நெருப்பை ஏந்தியவர்; நாகத்தைக் கொண்டுள்ளவர்; கனல் உமிழும் வெம்மை உடைய சூலத்தை உடையவர்; கொடிய நஞ்சினை உட்கொண்டவர்; விரிந்த சடையுடைய தேவதேவர். அவர், வயல்களில் நீலோற்பலம் மலர விளங்கும் வேதிகுடியின் தலைவர். ஆராஅமுதமாக விளங்கும் அப்பெருமானை, நாம் சார்ந்து மகிழ்ந்திருப்போமாக.

கால் – காற்று; செய் – வயல்; நீல – நீலோற்பலம் (குவளை) இறைவனுக்குரிய அட்ட மலர்களுள் ஒன்று.

864. கைத்தலை மான்மறி யேந்திய கையன் கனல்மழுவன்
பொய்த்தலை யேந்தி நற்பூதி யணிந்து பலிதிரிவான்
செய்த்தலை வாளைகள் பாய்ந்துகளும் திரு வேதிகுடி
அத்தனை ஆராஅமுதினை நாம்அடைந்து ஆடுதுமே.

தெளிவுரை: ஈசன், கையில் மான் கன்றும், கனன்று வெம்மை உமிழும் மழுவும் ஏந்தியவர்; பிரம கபாலம் ஏந்தித் திருநீறு பூசிப் பலிக்காகத் திரிபவர்; வாளை

பாய்ந்து குதிக்கும் வளப்பம் மிகுந்த வயல்களையுடைய திருவேதிகுடியில் மேவும் இறைவன், ஆவார்; ஆரா அமுதமாக இனிமை தருபவர். அவரை நாம் சென்றடைந்து மகிழ்வோமாக.

கைத்தலை – தாருக முனிவர்களால் ஈசன்பால் வெறுப்புக் கொண்டு தாக்கும் உபாயத்தால், வேள்வியில் தோற்றுவிக்கப்பட்ட மானுக்கு அடைமொழியாயிற்று; பொய்த்தலை – ஈசனின் திருமுடியைக் கண்டதாகப் பொய் கூறிய பிரமனின் தலையைக் குறிக்கும் அடைமொழி; நற்பூதி – திருநீற்றின் பெருமையை இயம்பிற்று.

865. முன்பின் முதல்வன் முனிவன்எம் மேலை
வினைகழித்தான்
அன்புஇல் நிலையில் அவுணர் புரம்பொடி யானசெய்யும்
செம்பொனை நன்மலர் மேலவன் சேர்திரு வேதிகுடி
அன்பனை நம்மை யுடையனை நாமடைந்து ஆடுதுமே.

தெளிவுரை: ஈசன் முன்னைப் பழம் பொருளுக்கும் முன்னைப் பழம் பொருளாகியும், பின்னையும் புதுமை உடையவராகியும், ஆதியும் அந்தமும் இல்லா முதல்வராய் சீலத்தில் மேவுபவர்; என்னைப் பற்றியிருந்த வினைகளை நீக்கியவர்; அன்பு அற்ற நிலையினராகிய அசுரர்களுடைய மூன்று புரங்களையும் எரித்துச் சாம்பலாக்கியவர்; செம்பொன் போன்ற பெருமையும் தூய்மையும் உடையவர். அவர், பிரமன் வழிபாடு செய்த திருவேதிகுடியில் வீற்றிருக்கும் அன்புக்குரியவர். அப்பெருமான், நம்மை ஆளாக உடையவர். அவரை நாம் அடைந்து மகிழ்வோமாக.

866. பத்தர்கள் நாளு மறவார் பிறவியை ஒன்றறுப்பான்
முத்தர்கள் முன்னம் பணிசெய்து பாரிடமுன்னுயர்த்தான்
கொத்தன கொன்றை மணங்கம ழுந்திரு வேதிகுடி
அத்தனை ஆரா அமுதினை நாம்அடைந்து ஆடுதுமே.

தெளிவுரை: சிவபெருமான், நாள்தோறும் மறவாது ஏத்தி வழிபடும் பக்தர்களின் பிறவிப் பிணியைத் தீர்த்தருள்பவர்; பற்று நீங்கிய சீவன் முத்தர்களாய்த் திகழ்ந்த பெருமக்களை இவ்வுலகத்திலிருந்து உயர்த்தி, மேல் நிலைக்குச் செலுத்துபவர்; கொத்துப் போன்று விளங்கும் கொன்றை மலர் சூடித் திருவேதி குடியில் மேவும் இறைவன். அவர், ஆராஅமுது போன்று விளங்க நாம் சென்றடைந்து ஏத்தி மகிழ்வோமாக.

சிறப்புரை: மறத்தல் இன்றி, நாள்தோறும் ஏத்தி வழிபடும் அன்பர்களுக்கு அல்லாது, ஏனையவர் களுக்குப் பிறவிப் பிணி தீராது என்பது, "நாளும் மறவார் பத்தர்கள் பிறவியை ஒன்றுப்பான்" எனச் சுட்டப் பெற்றது. இதன் வழியில், "இறைவனடி சேராதார், பிறவிப் பெருங்கடல் நீந்தார்; பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; இறைவனடி சேர்ந்தார்" என்று உணர்த்தும் திருக்குறள் கருத்தும் காண்க. இது, இறைவனை நாள்தோறும் நினைத்து ஏத்துதலை உணர்த்துதலாயிற்று. இந்நெறியில் திருஞானசம்பந்தர், "நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய்" (இரண்டாம் திருமுறை திருச்சாய்க்காடு; பாட்டு வ.எண் 439) என அருளிச் செய்தவாறும் காண்க. மற்றும், "ஏத்தாது இருந்தறியேன், இமையோர் தனி நாயகனே! மூத்தாய் உலகுக்கெல்லாம் முதுகுன்றம் அமர்ந்தவனே!" எனவும்; "வார் கொண்டவன முலையாள் உமைபங்கன் கழலே மறவாது கல் எறிந்த சாக்கியற்கும் அடியேன்" எனவும் அருளிச் செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கும் மறவாது ஏத்துதலின் சிறப்பெனக் காண்க.

பாரிடம் – உலகம்.

867. ஆன்அணைந்து ஏறும் குறிகுணம் ஆர்அறி
வார்அவர்கை
மான்அணைந்து ஆடு மதியும் புனலும் சடைமுடியன்
தேன்அணைந்து ஆடிய வண்டு பயில்திரு வேதிகுடி
ஆன்அணைந்து ஆடு மழுவனை நாம்அடைந்து
ஆடுதுமே.

தெளிவுரை: ஈசன், இடபத்தை வாகனமாகக் கொண்டு விளங்குபவர். அப் பெருமானுடைய திருக்குறிப்பை அறிபவர் யார் உளர்! அவர் கையில் மான் விளங்கும். சந்திரனும் கங்கையும் சடையில் விளங்கும். தேன் பருகிய வண்டுகள் ஆடுகின்ற திருவேதிகுடியில் பசுவின் பஞ்ச கௌவியத்தால் அபிடேகம் கொள்ளும் மழுவேந்திய அப் பரமனை, நாம் சென்றடைந்து ஏத்தி மகிழ்வோமாக.

ஆன் அணைந்து ஏறும் – இடப வாகனத்தில் ஏறும்; ஆன் அணைந்து ஆடும் – பஞ்ச கௌவியத்தால் அபிடேகம் கொள்ளும்.

868. எண்ணும்எழுத்தும் குறியும் அறிபவர் தாம் மொழியப்
பண்ணின் இசைமொழி பாடிய வானவர் தாம்பணிவார்
திண்ணென் வினைகளைத் தீர்க்கும் பிரான்திரு
வேதிகுடி
நண்ண அரிய அமுதினை நாம்அடைந்து ஆடுதுமே.

தெளிவுரை: ஈசன் – எண்ணும், எழுத்தும், அதன் பொருளும் விரிவும், குணமும் குறிப்பும் அறிபவர். யாவும் அறியும் ஈசனைத் தோத்திரங்களாலும், இசை மொழியாலும் வானவர்கள் ஏத்திப் பணிவர். பணி பவர்களுடைய கொடிய வினைகள் யாவையும் தீர்க்கும் தலைவர், அப்பெருமான் ஆவார். அவர், நண்ணுதற்கு அரிய அமுதம் போன்றவர். அப்பரமன், திருவேதிகுடியில் வீற்றிருந்து அருள் புரிபவர். அவரை

அடைந்து மகிழ்வோமாக. அரியதாகிய அமுதினை அடையும் இடம் திருவேதிகுடி என்பதாம்.

எண்ணும் எழுத்தும் – திருப்பாட்டு வ.எண் 426 காண்க.

869. ஊர்ந்த விடையுகந்து ஏறிய செல்வனை நாம்அறியோம்
ஆர்ந்த மடமொழி மங்கையொர் பாக மகிழ்ந்துடையான்
சேர்ந்த புனற்சடைச் செல்வப் பிரான்திரு வேதிகுடிச்
சார்ந்த வயலணி தண்ணமு தையடைந்து ஆடுதுமே.

தெளிவுரை: *ஈசன் இடபத்தை உகந்து வாகனமாகக் கொண்டு திகழும் செல்வர். அவர், உமாதேவியை உடனாகக் கொண்டு அம்மையப்பராக மகிழ்ந்து வீற்றிருப்பவர்; கங்கையைச் சடையில் வைத்து மேவும் செல்வர். அவர் வயல்கள் சூழ்ந்த திருவேதிகுடியில் குளிர்ந்த அமுதம் போன்று விளங்குபவர். அவரை அடைந்து மகிழ்ந்து ஏத்தி இன்புறுவோமாக.*

நாம் அறியோம் – ஈசன் இடப வாகனத்தில் வீற்றிருந்து அருள் புரிதல் சிறப்புடைத்து என்பதும்; அப்பெருமான், தண்ணமுதமாய் வீற்றிருந்து அருள் புரிய, ஆங்குச் சென்று மகிழ்தல் மன்னுயிர்க்குப் பேறு ஆதலையும், உணர்த்திற்று.

870. எரியும் மழுவினன் எண்ணியு மற்றொரு வன்தலையுள்
திரியும் பலியினன் தேயமும் நாடும்எல்லாம் உடையான்
விரியும் பொழிலணி சேறுதிகழ்திரு வேதிகுடி
அரிய அமுதினை அன்பர்க ளோடுஅடைந்து ஆடுதுமே.

தெளிவுரை: *ஈசன், கனல் உமிழும் மழுப்படையுடையவர்; பிரம கபாலத்தைக் கையில் ஏந்திப் பலி ஏற்பவர்; ஆயினும் எல்லா உலக்ங்களும் உடையவர். அவர் குளிர்ந்த பொழில் திகழும் திருவேதிகுடியில் அரிய அமுதமாக விளங்க, நாம் அடியவர் திருக்கூட்டத்தினரோடு சென்றடைந்து ஏத்தி, மகிழ்ந்து இன்புறுவோமாக.*

எரியும் மழு – மழுப்படையின் ஆற்றல் எரி என ஏத்தப் பெற்றது.

871. மையணி கண்டன் மறைவிரி நாவன் மதித்துகந்த
மெய்யணி நீற்றன் விழுமிய வெண்மழு வாட்படையான்
செய்ய கமல மணங்கம ழுந்திரு வேதிகுடி
ஐயனை ஆராஅமுதினை நாம்அடைந்து ஆடுதுமே.

தெளிவுரை: ஈசன், கரிய கண்டத்தை உடையவர்; வேதங்களை விரித்து ஓதும் திருநாவினர்; மதிப்புடையதும் மகிழ்வினைத் தரவல்லதும் ஆகிய திருநீற்றினை உடையவர்; மழுப்படை உடையவர்; செந்தாமரை மலரின் மணம் கமழும் திருவேதிகுடியில், ஆராஅமுது எனத் திகழும் தலைவர். அவரை அடைந்து மகிழ்வோமாக.

872. வருத்தனை வாளரக்கன்முடி தோளொடு பத்திறுத்த
பொருத்தனைப் பொய்யா அருளனைப் பூதப் படையுடைய
திருத்தனைத் தேவர்பிரான் திருவேதி குடியுடைய
அருத்தனை ஆரா அமுதினை நாம்அடைந்து ஆடுதுமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், இராவணனுடைய தோள்களுடன் பத்துத் தலைகளும் நெரியுமாறு வருத்திக் கயிலை மலையைப் பொருத்தி ஊன்றியவர்; பின்னர் ஏத்த அருள் புரிந்தவர்; பூத கணங்களைப் படையாகக் கொண்டவர்; தேவர்களின் தலைவர். அவர் திருவேதிகுடியில் மேவும் உமாதேவியோடு வீற்றிருக்கும் ஆராஅமுது ஆனவர். அவருடைய திருவடியை அடைந்து, நாம் மகிழ்ந்து விளங்குவோமாக.

91. திருவையாறு

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 3 காண்க.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

873. குறுவித்த வாகுற்ற நோய்வினை
 காட்டிக் குறுவித்த நோய்
உறுவித்த வாவுற்ற நோய்வினை
 தீர்ப்பான் உகந்தருளி
அறிவித்த வாறடி யேனைஐ
 யாறன் அடிமைக்களே
செறிவித்தவா தொண்ட னேனைத்தன்
 பொன்னடிக் கீழ்எனையே.

தெளிவுரை: ஈசனே! தேவரீர், என்னைக் குறுகுமாறு செய்து அருளியவர்; யான் வேறு சமய நெறியில் இருந்த குற்றத்தால் சூலை நோய் காட்டித் தேவரீர் பால் நெருங்கிச் சேர வைத்து, அதனைத் தீர்த்தருளி யவர்; என்னை உலகுக்கெல்லாம் நாவுக்கரசர் என்று அறிவித்தவர்; திருவையாற்றில் வீற்றிருக்கும் அடிமைத் தன்மையைச் செழிப்புற அருள்வித்தவர். தொண்டனாகிய அடியேனைத் திருப்பாத மலரடிக் கீழ் சேர்த்தவர் நீவிரே!

சிறப்புரை: ஈசன், நாவுக்கரசர் என்னும் திருநாமம் வழங்கிய சிறப்பானது, "உகந்தருளி அறிவித்தவாறு" எனச் சுட்டப் பெறுதலாயிற்று. இத் தன்மையில், சேக்கிழார் பெருமான், "பாவுற்றலர் செந் தமிழின் சொல் வளப்பதிகத் தொடை பாடிய பான்மையினால் நாவுக்கர சென்று உலகேழினும் நின் நல்நாமம் நயப்புற

நண்ணுக என்று யாவர்க்கும் வியப்புற மஞ்சுறை வானிடையே ஒரு வாய்மை எழுந்ததுவே'' (திருநாவுக்கரசு நாயனார் புராணம்; திருப்பாட்டு எண் 74) என அருளியவாறும் காண்க.

874. கூர்வித்த வாகுற்ற நோய்வினை
காட்டியும் கூர்வித்தநோய்
ஊர்வித்த வாஉற்ற நோய்வினை
தீர்ப்பான் உகந்தருளி
ஆர்வித்த வாறுஅடி யேனைஐ
யாறன் அடிமைக்களே
சேர்வித்த வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழ்எனை யே.

தெளிவுரை: *ஈசனே! தேவரீர் என்னைத் திருவடியின் கீழ் விளங்குமாறு சேர்ந்தவர்; என் குற்றத்தின் விளைவாகச் சூலை நோய் காட்டிச் சேர்வித்தவர்; அந் நோயைத் தீர்த்தருளி உகந்து அருளியவர்; அன்பின் ஆர்வம் பெருக, ஐயாற்றில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு அடிமை செய்யுமாறு சேர்வித்தவர். தேவரீருடைய திருவடிக்கீழ்த் தொண்டனாகிய அடியேன் இருக்க அருளியவர், தேவரீரே.*

875. தாக்கினவா சல மேவினை
காட்டியுந் தண்டித்த நோய்
நீக்கினவாநெடு நீரினின்று
ஏற நினைந்தருளி
ஆக்கின வாறுஅடி யேனைஐ
யாறன் அடிமைக்களே
நோக்கின வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழ்எனையே.

தெளிவுரை: *ஈசனே! தேவரீர், நான் பிழை செய்தபோது தாக்கி, வினையின் செயல்காட்டிச் சூலை நோய்*

காட்டித் தண்டித்துப் பின், அந்நோய் நீங்குமாறு செய்தவர்; கடலின்கண் எறிந்தபோது என்னை அதிலிருந்து கரையேறச் செய்தருளி அடியவன் ஆக்கியவர்; ஐயாற்றில் மேவும் இறைவனுக்கு அடிமை பூணச் செய்தவர். தொண்டனேனைத் திருவடிக்கீழ் இருத்தியவர் தேவரீரே.

876. தருக்கின நான்தக வின்றியும்
ஓடச் சலமதனால்
நெருக்கின வாநெடு நீரினின்று
ஏற நினைந்தருளி
உருக்கின வாறடி யேனைஐ
யாறன அடிமைக் களே
பெருக்கின வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழ்எனையே.

தெளிவுரை: ஈசனே! நான் தருக்கின நாளில் என்னை வளைத்தும் சூலை நோயால் நெருக்கிய தேவரீர், அருள்புரிந்து கடலில் இருந்து கரை ஏறி உய்யுமாறு புரிந்தருளியவர்; அடியேன் பக்தியால் கசிந்து உருகுமாறு செய்தவர்; ஐயாற்றின் இறைவன் மாட்டு அடிமைகள் பெருக்கி ஏத்துமாறு புரிந்தவர். தொண்டனாகிய என்னைத் திருவடிக்கீழ் இருத்தியவர் தேவரீரே.

சலம் – சூலை நோய்.

877. இழிவித்த வாறிட்ட நோய்வினை
காட்டி இடர்ப்படுத்துக்
கழிவித்த வாகட்ட நோய்வினை
தீர்ப்பான் கலந்தருளி
அழிவித்த வாறடி யேனைஐ
யாறன் அடிமைக்களே

தொழுவித்த வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழ்எனையே.

தெளிவுரை: *ஈசனே! தேவரீர், அடியனை இழிவாகு மாறு சூலை நோய் காட்டி, என் வினையின் தன்மையையும் காட்டி, இடரைத் தந்து, பின்னர் விலகு வித்து, நோயும் வினையும் தீர்த்தருளியவர்; ஐயாற்றில் மேவும் பெருமானின் அடிமைக்கண் செலுத்தி என்னைப் பேரின்பத்தில் அழுத்தியவர்; தொழுமாறு பணிவித்தவர். தொண்டனேனைப் பொன்னடிக்கீழ் இருத்தியது, தேவரீரே அன்றோ!*

878. இடைவித்த வாறுஇட்ட நோய்வினை
காட்டி இடர்ப் படுத்து
உடைவித்த வாறுஉற்ற நோய்வினை
தீர்ப்பான் உகந்தருளி
அடைவித்த வாறுஅடி யேனைஐ
யாறன் அடிமைக்களே
தொடர்வித்த வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழ்எனையே.

தெளிவுரை: *ஈசனே! தேவரீர், நான் இடைப்பட்டுப் புறத்தே இருக்க, இடைப் புகுந்து சூலை நோய் காட்டி, வினை காட்டி, இடர் தந்து, பின் அவை யாவும் உடைந்து சிதறுமாறு, உற்ற நோயும் வினையும் தீர்த்தவர்; உகந்து அருள் செய்து என்னைத் திருவடிக் கண் அடைவித்தவர்; ஐயாற்று இறைவன்பால் அடிமைப் பணிகளை ஆற்றத் தொடர்வித்தவர். தொண்டனேன்னத் தன் பொன்னடிக்கீழ் சேர்த்து இருத்தியது தேவரீரே அன்றோ!*

879. படக்கின வாபட நின்றுபன்
னாளும் படக்கினநோய்

அடக்கின வாறுஅது அன்றியும்
தீவினை பாவம் எல்லா
மடக்கின வாறுஅடி யேனைஐ
யாறன் அடிமைக்களே
தொடக்கின வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழ்எனையே.

தெளிவுரை: *ஈசனே! பல நாளும் சேர்ந்த வினையால் நான் துன்புற்றபோது, தேவரீர், என்னைக் கடிதில் திருப்பி அடக்கியவர்; தீவினையும் பாவமும் தீர்த்தருதளியவர்; அடியேனைத் தடுத்து அடக்கி ஐயாற்றின் இறைவனுக்கு அடிமைகள் பூணுமாறு செய்தவர். தொண்டனேனைத் தன் பொன்னடிக்கீழ் இருத்தியவர், தேவரீரே அல்லவா!*

மடக்கினவாறு – எல்லாம் அடக்கினவாறு எனவும் பொருந்தும்.

880. மறப்பித்த வாவல்லை நோய்வினை
காட்டி மறப்பித்தநோய்
துறப்பித்த வாதுக்க நோய்வினை
தீர்ப்பான் உகந்தருளி
இறப்பித்த வாறுஅடி யேனைஐ
யாறன் அடிமைக்களே
சிறப்பித்த வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழ்எனையே.

தெளிவுரை: *ஈசனே! தேவரீரை, நான் மறக்குமாறு செய்து, வலிய வினையாகிய சூலை நோயைக் காட்டிய நீவிர், மறப்பாகிய நோயைப் போக்கி, உடல் நோயாகிய சூலையைப் போக்கி, வினைகளைப் போக்கி உகந்து அருள் புரிந்தவர்; என்னைப் பாசங்களிலிருந்து கடக்கச் செய்து, ஐயாற்று இறைவனுக்கு அடிமை ஆக்கியவர்; சிறப்பாகிய சிவானந்தத்தைப் புரிந்தவர்.*

தொண்டனேனைத் தன் பொன்னடிக்கீழ் இருத்தியவர், தேவரீரே அல்லவா!

இறப்பித்தல் – பாசக் கட்டிலிருந்து கடக்க வைத்தல்.

881. துயக்கின வாதுக்க நோய்வினை
காட்டித் துயக்கினநோய்
இயக்கின வாறுஇட்ட நோய்வினை
தீர்ப்பான் இசைந்தருளி
அயக்கின வாறுஅடி யேனைஐ
யாறன் அடிமைக்களே
மயக்கின வாதொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழ்எனையே.

தெளிவுரை: ஈசனே! நான் தளர்ந்து சோர்வு கொண்டு இருந்தபோது, தேவரீர், நோயும் வினையும் காட்டி என்னை இயக்கித் துன்பத்தை விளைவித்த நோயும், வினையும் தீர்த்தருள் புரிந்தவர். அடியேனை, ஐயாற்றின் இறைவனுக்கு இசையுமாறு அருளி, அடிமைகள் ஆகுமாறு பக்தி கொள்ளச் செய்தவர். தொண்டனேனைத் தன் பொன்னடிக்கீழ் இருத்தியவர் தேவரீரே அல்லவா!

மயக்கினவா – ஈசன்பால் பற்று கொண்டு, சிவானந்தத் தேனைப் பருகுமாறு செய்வித்துப் பேரின்பத்தில் திளைக்கச் செய்தல்.

882. கறுத்தும்இட் டார்கண்டம் கங்கை
சடைமேற் கரந்தருளி
இறுத்தும்இட் டார்இலங் கைக்குஇறை
தன்னை இருபது தோள்
அறுத்தும்இட் டார்அடி யேனைஐ
யாறன் அடிமைக்களே
பொறுத்தும்இட் டார்தொண்ட னேனைத்தன்
பொன்னடிக் கீழ்எனையே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசனே! தேவரீர், நஞ்சினைக் கண்டத்தில் கறையுறுமாறு தேக்கியவர்; கங்கையைச் சடை முடியின் மீது கரந்து (மறைத்து) வைத்தருளியவர்; இராவணனுடைய இருபது தோளும் நெரியுமாறு ஊன்றியவர்; அடியேனை ஐயாற்று இறைவனுக்கு அடிமை பூணுமாறு அருளித் தொண்டனேனைத் தன் பொன்னடிக்கீழ் இருத்தியவர், தேவரீரே அல்லவா!

இத் திருப்பதிகமானது, ஈசன் பொன்னடிக்கீழ் இருந்து அடிமை கொண்டு விளங்கி, மன்னுயிரானது சிவானந்தத் தேனைப் பருகி இன்பத்தில் திளைத்தல் வேண்டும் என உணர்த்துவதாயிற்று.

92. திருவையாறு

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 3 காண்க.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

883. சிந்திப் பரியன சிந்திப்
பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி
கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை
தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந்து ஆடும்ஐ
யாறன அடித்தலமே.

தெளிவுரை: சடையில், பாம்பினைச் சுற்றிப் பிறைச் சந்திரனை அணிந்து, திருநடம்புரியும் ஐயாற்றீசரின் திருவடித்தலமானது, சிந்தனை செய்யும் அறிவிற்கு எட்டாததும், சிந்தையில் ஏத்தும் அன்பர்களுக்குத்

தேன் என இனிமை தருவதும், மன்னுயிர்களுக்கு முத்தியைக் கொடுப்பதும் ஆகும். அவை உயிரை மொய்த்துப் பந்தம் கொண்டு பிறவியைத் தரும் வினை களைத் தீர்ப்பனவே.

884. இழித்தன ஏழேழ் பிறப்பும்
அறுத்தன என்மனத்தே
பொழித்தன பேரெழிற் கூற்றை
உதைத்தன போற்றவர்க்
கிழித்தன தக்கன் கிளரொளி
வேள்வியைக் கீழமுன்சென்று
அழித்தன ஆறங்கம் ஆனஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: திருவையாற்றில், வேதத்தின் அங்கமாக விளங்கும் ஐயாற்றீசனுடைய திருவடித்தலமானது, இழித்தற்குரியதாகிய ஏழேழ் பிறவிகளையும் அறுத் தொழிக்கும். அத் திருவடி மலர்கள், என் மனத்தில் புகுந்து பேரெழில் நல்கின; கூற்றுவனை உதைத்தன; தக்கன் வேள்வியைப் போற்றி நின்று துணை புரிந்தவர் களைத் தாக்கி அழித்து, அவ்வேள்வியையும் அழியுமாறு செய்தன.

சிறப்புரை: ஈசன் திருவடியை வணங்கும் அன்பர் களுக்கு எழுகின்ற பிறப்புக்களை நீக்கி, நல்லருள் புரிதலை, இத் திருப்பாட்டு உணர்த்துதல் ஆயிற்று. சிவஞானியர்கள், பிறவாமையாகிய செல்வத்தைப் பெறுதலோடு, தமது சுற்றத்தினரும் மற்றும் இருபத் தோரு தலைமுறையினரும் நரகிடை ஆழாது காப்பவர் ஆகின்றனர் என்பதனை, "மூவேழ் சுற்றம் முரண் உறு நரகிடை ஆழாமேயருள் அரசே போற்றி" (போற்றித் திருஅகவல் 118,119) என வரும் மாணிக்கவாசகர் அமுத வாக்கும் காண்க.

ஏழு பிறவிகளாவன: 1. தேவர்; 2. மனிதர்; 3. மிருகம்; 4. பறவை; 5. ஊர்வன; 6. நீர் வாழ்வன; 7. தாவரம். இதன் விளக்கமாக, "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருட்சமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்; எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்" என அருளிச் செய்த திருவாதவூரர் தம் திருமொழியும் காண்க. இது பிறப்பின் இழிவை உரைத்ததாயிற்று.

தக்கன் புரிந்த வேள்வியில் பங்குற்ற தேவர்கள் முதலானோரை, ஈசன், வீரபத்திரராகத் தோன்றித் தண்டித்த செய்கை, "போற்றவர்க் கிழித்தன தக்கன் கிளரொளி வேள்வியைக் கீழ முன் சென்று இழித்தன" எனச் சுட்டப் பெற்றது. இதனை, "சாடிய வேள்வி சரிந்திட," "அங்கி விழுங்கத் திரட்டிய கையைத் தரித்தான்," "பகனொளித்து ஓடாமே கண்ணைப் பறித்தவாறு," "நாமகள் நாசி சிரம் பிரமன் பட" என வரும் திருவாசகத் தொடர்களால் (திருவுந்தியார்) காண்க.

கிழித்தன, இழித்தன – தண்டித்தல், இழிவு செய்தல் எனலும் பொருந்தும்.

885. மணிநிறம் ஒப்பன பொன்னிற
மன்னின மின்னியல் வாய்
கணிநிறம் அன்ன கயிலைப்
பொருப்பன காதல்செய்யத்
துணிவன சீலத்தர் ஆகித்
தொடர்ந்து விடாத தொண்டர்க்கு
அணியன சேயன தேவர்க்குஐ
யாறன் அடித் தலமே.

தெளிவுரை: திருவையாற்றில் மேவும் ஐயாற்றீசனது திருவடித் தலமானது, மாணிக்கம் போன்ற செம்மையும், பொன் போன்ற அழகும், மின்னல் போன்ற ஒளியும் உடையன; கயிலை மலையைப் போன்று விளங்குவன; பத்தி செய்யப்படுவன; ஆசார சீலமும் ஒழுக்க நெறியும் உடைய திருத்தொண்டர் களுக்கு அண்மையுடையதாகவும் அது அல்லா தவர்க்கு அரியதாகவும் உடையன.

சேயன தேவர்க்கு – சரியை கிரியை வயப்படாத போகிகளாகிய தேவர்களுக்கு அரியதாகிய திருவடித் தலமானது சேயன என ஓதப் பெற்றது; திருத்தலம் – ஐயாறு; திருத்தலத்தின் இறைவன் – ஐயாற்றீசன்.

886. இருள்தரு துன்பப் படல
மறைப்ப மெய்ஞ்ஞான மென்னும்
பொருள்தரு கண்ணிழந்து உண்பொருள்
நாடிப் புகலிழந்த
குருடரும் தம்மைப் பரவக்
கொடுநர கக்குழிநின்று
அருள்தரு கைகொடுத்து ஏற்றும்ஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: ஐயாற்றில் மேவும் ஈசனின் திருவடித் தலமானது, அஞ்ஞானமாகிய துன்பத்தால் மெய்ஞ் ஞானம் என்னும் நற்பொருள் தோன்றாது, துன்புறு வோருக்கு அருள் தந்து நரகக் குழியிலிருந்து கை கொடுத்து மேலே ஏற்றும் பெருமையுடையன.

887. எழுவாய் இறுவாய் இலாதன
வெங்கட் பிணி தவிர்த்து
வழுவா மருத்துவம் ஆவன
மாநர கக்குழிவாய்

விழுவார் அவர்தம்மை வீழ்ப்பன
மீட்பன மிக்கஅன்போடு
அழுவார்க்கு அமுதங்கள் காண்கஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: திருவையாற்றில் எழுந்தருளியுள்ள ஈசனின் திருவடித்தலமானது, ஆதியும் அந்தமும் இல்லாதன; கொடிய பிணி தீர்க்கும் மருந்தாய் விளங்குவன; நரகத்தில் சேர்ந்து அழுந்தாதவாறு அடியவர்களை மீட்டு அருள் புரிவன; பக்தி பூண்டு, கசிந்து உருகும் அன்பர்களுக்கு, அமுதம் போன்று இனிமை தரவல்லன.

சிறப்புரை: ஈசனின் திருவடிக் கமலங்கள் ஆதியும் அந்தமும் அற்று எக்காலத்திலும் மேவி விளங்குதல், "எழுவாய் இறுவாய் இலாதன" என ஏத்தி உரைக்கப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "ஆதியும் அந்தமும் அகன்றோன் காண்க" என அருளிச் செய்தமை காண்க.

ஈசன், மருந்தாகிப் பிணி தீர்த்தருள் புரியும் பெற்றியும் அமுதமாகிப் பேரின்பம் நல்கும் பாங்கும் ஏத்தித் திருஞானசம்பந்தர், "மருந்தன் அமுதன் மயானத்துள் மைந்தன் பெருந்தண் புனற் சென்னி வைத்த பெருமான்" (முதல் திருமுறை 134 திருப்பறியலூர் வீரட்டம்; திருப்பாட்டு வ.எண் 1438) என அருளிச் செய்தவாறும் காண்க. மற்றும், இத் திருமுறையில் திருப்பாட்டு வ.எண். 601உம் நோக்குக.

எழுவாய் – ஆதி; இறுவாய் – அந்தம்.

888. துன்பக் கடலிடைத் தோணித்
தொழில்பூண்ட தொண்டர்தம்மை

இன்பக் கரைமுகந்து ஏற்றும்
திறத்தன மாற்றயலே
பொன்பட் டொழுகப் பொருந்தொளி
செய்யும்அப் பொய்பொருந்தா
அன்பர்க்கு அணியன காண்கஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: ஐயாற்றீசனின் திருவடித் தலமானது, திருத்தொண்டர்களைத் துன்பக் கடலிலிருந்து கறை யேறச் செய்யும் தோணி போன்று விளங்கி அருளும் தகைமையுடையது. பொன்னும் பொருளும் பொய்மை உடையதெனக் கண்டு, உலகப் பற்றினை ஒழிந்த மெய்யன்பர்களுக்கு அப் பெருமானின் திருவடி அண்மையில் இருப்பன எனக் காண்பீராக.

889. களித்துக் கலந்ததொர் காதற்
கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் னின்றஇப்
பத்தரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமுது ஊட்டி
அமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வம் ஆக்கும்ஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: ஐயாற்றீசனின் திருவடித் தலமானது, மனம் கலந்த அன்போடு கசிந்து உருகிக் காவிரித் தீர்த்தத்தில் நீராடித் தொழுது, முன்னின்று வணங்கும் பக்தர் களுக்குத் தேவர்கள் ஏத்தத் தேனும் அமுதும் பரிவுடன் அளித்துப் பெருஞ் செல்வத்தைப் பெறுமாறு செய்யும்.

சிறப்புரை: ஈசன், அன்பிற் கலந்தும் உருகிக் கசிந்து போற்றும் அன்பர்களுக்கு அருள் செய்தலை இத் திருப்பாட்டானது உணர்த்துதலாயிற்று. இத்தன்மை

யில், "கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும் நலம்" என மாணிக்கவாசகரும், "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்" எனத் திருஞான சம்பந்தரும் உரைத்தருளிய மாண்பும் நோக்குக.

முந்தைய திருப்பாட்டில் (பாட்டு வ.எண் 888) உலகப் பற்றின்றி வாழும் மெய் அன்பர்களுக்கு அண்மையனாய் விளங்கும் ஈசன், இத்திருப்பாட்டில், அத்தகைய பக்தர்களுக்குத் தேவர்கள் வாயிலாகப் பெருஞ் செல்வத்தை அளித்தலைச் சுட்டுதலாயிற்று.

பெருஞ்செல்வம் – மறுமையில் காணும் முத்திச் செல்வத்தையும் குறிக்கும்.

890. **திருத்திக் கருத்தனைச் செவ்வே**
நிறுத்திச் செறுத்துடலை
வருத்திக் கடிமலர் வாளெடுத்து
ஒச்சி மருங்கு சென்று
விருத்திக் குழக்கவல் லோர்கட்கு
விண்பட் டிகையிடுமால்
அருத்தித்து அருந்தவர் ஏத்தும்ஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: நன்கு விருப்பத்துடன் ஏத்தி வணங்கும் ஐயாற்றீசனின் திருவடித்தலமானது, அடியவர்கள், தம்மையும் அறியாது தீவினைப் பயனால் புறம் சென்றாலும், அவர்களைத் திருத்திப் புறம் போக ஒட்டாது காத்து, நன்னெறிக்கு ஆட்படுத்தும்; விரதம் முதலானவை அனுட்டித்து மணம் கமழும் மலர் கொண்டு ஏத்தும் திருத்தொண்டர்களுக்குச் சாமீப நிலையினை அருளிச் செய்து, மருங்கு இருக்கும் மாண்பு அளித்து, உயர்ந்த விருதும் வழங்கும் தன்மையைப் புரியும்.

சிறப்புரை: அடியவர்களைத் திருத்தி ஆட்கொள்ளும் ஈசனின் கருணை "திருத்திக் கருத்தனைச் செல்வே நிறுத்தி" என உரைக்கப் பெற்றது. இத் தன்மையில், "ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே" என அருளிச் செய்த திருவாசக அமுத மொழியும் காண்க.

891. பாடும் பறண்டையும் ஆந்தையும்
ஆர்ப்பப் பரந்து பல்பேய்
கூடி முழவக் குவிகவிழ்
கொட்டக் குறுநரிகள்
நீடும் குழல் செய்ய வைய
நெளிய நிணப்பிணக்காட்டு
ஆடும் திருவடி காண்கஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: பறண்டை, ஆந்தை முதலானவை ஆர்த்துப் பாடல் வகை போன்று ஒலித்து மேவ பேய்க் கூட்டங்கள் கூடி முழவத்தைக் கொட்டி முழக்க, நரிகள் நீண்டு ஊளையிட்டு ஒலி எழுப்ப, பூமியில் மனம் சுளித்து நெளியுமாறு உள்ள பிணங்கள் உடைய மயானத்தில் ஐயாற்றீசனின் திருவடித் தலமானது நடனத்தைக் கொள்கின்றன.

பறண்டை – மயானத்தில் உள்ள பறவை இனம்; ஒரு செடி வகையும் உண்டு; பாடு – ஓசை, பக்கம்.

892. நின்போல் அமரர்கள் நீள்முடி
சாய்த்து நிமிர்த்துகுத்த
பைம்போது உழக்கிப் பவளம்
தழைப்பன பாங்கறியா
என்போலிகள் பறித்திட்ட
இலையும் முகையுமெல்லாம்

அம்போது எனக்கொள்ளும் ஐயன்ஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: ஐயாற்றீசன் திருவடித் தலமானது, தேவர்கள் நீண்ட முடிகளைச் சாய்த்துப் பவளம் முதலான உயர்ந்த மணிகளும் மலர்களும் கொண்டு ஏத்தித் திகழ, என் போன்றவர்களும் பறித்த இலை மொட்டு ஆகியவற்றையும் அழகிய மலர்களாகக் கொள்ளும் பெருமையுடையன.

893. மலையார் மடந்தை மனத்தன
வானோர் மகுடமன்னி
நிலையா இருப்பன நின்றோர்
மதிப்பன நீணிலத்துப்
புலையாடு புன்மை தவிர்ப்பன
பொன்னுல கம்அளிக்கும்
அலையார் புனற்பொன்னி சூழ்ந்தஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: அலைகளைக் கொண்டு விளங்கும் பொன்னிக் கரையில் மேவும் ஐயாற்றீசன் திருவடித் தலமானது, மலைமகளாகிய உமாதேவியாரின் மனத்தில் விளங்குவன; வானவர்களின் மகுடத்தில் ஒளிர்ந்து நிலைத்திருப்பன; யோக நெறியில் நிற்போர் உணர்வன; மண்ணுலகத்தில் புன்மையாகிய பிறவி கொள்ளும் பிறவியை நீக்குவன; பொன்னுலகத்தை அளிப்பன.

894. பொலம் புண்டரீகப் புதுமலர்
போல்வன போற்றியென்பார்
புலம்பும் பொழுதும் புணர்துணை
யாவன பொன்னனையாள்
சிலம்பும் செறிபா டகமும்
செழுங்கிண் கிணித்திரளும்

அலம்பும் திருவடி காண்கஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: ஐயாற்றீசனின் திருவடித் தலமானது, பொன் போன்று ஒளிர்ந்து விளங்கும் தாமரை மலர் போன்று விளங்குவன; போற்றி செய்து ஏத்துபவர் களுக்குத் துணையாக விளங்குவன; உமாதேவிக்குரிய சிலம்பும், பாடகமும் கிண்கிணியும் ஆகியன அணிந்து மேவும் சிறப்புடையன.

895. உற்றார் இலாதார்க்கு உறுதுணை
யாவன ஓதி நன்னூல்
கற்றார் பரவப் பெருமை
யுடையன காதல்செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி
வானகந் தான்கொடுக்கும்
அற்றார்க்கு அரும்பொருள் காண்கஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: ஐயாற்றீசனின் திருவடித் தலமானது, இல்லறத்தினர்க்கும் துறவறத்தினர்க்கும் உறுதுணை யாக விளங்குவன; சிவாகமங்களில் தேர்ந்த சிவஞானி களால் பெருமையுடன் விரும்பி ஏத்தப்படுவன; மனம் உருகிப் போற்றும் அன்பர்களுக்கு, மேல் நிலையைக் கொடுப்பன; பற்று நீங்கிய பரமஞானிகளுக்கு, அரும் பொருளாக விளங்குவன.

896. வானைக் கடந்தண்டத் தப்பால்
மதிப்பன மந்திரிப்பார்
ஊனைக் கழித்துய்யக் கொண்டருள்
செய்வன உத்தமர்க்கு
ஞானச் சுடராய் நடுவே
உதிப்பன நங்கைஅஞ்ச

ஆனை உரித்தன காண்கஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: ஐயாற்றீசனின் திருவடித் தலமானது, தேவர்களுடைய உலகத்தைக் கடந்து, அண்டம் கடந்து அப்பாலும் மதிக்கப் பெறுவன; திருவைந்தெழுத்தாகிய மந்திரத்தை ஓதுபவர்களுக்குப் பிறவிப் பிணியைத் தீர்த்தருள் புரிவன; உத்தமர்களுக்கு ஞானச் சுடராக விளங்குவன; அப்பெருமான், உமாதேவி அஞ்சுமாறு யானையின் தோலை உரித்தவர். அப் பரமனைக் கண்டு தொழுமின்.

897. மாதிர மானில மாவன
வானவர் மாமுகட்டின்
மீதன மென்கழல் வெங்கச்சு
வீக்கின வெந்நமனார்
தூதரை யோடத் துரப்பன
துன்பறத் தொண்டுபட்டார்க்கு
ஆதர மாவன காண்கஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: ஐயாற்றீசன் திருவடித் தலமானது, பெருமையுடைய நிலவுகம் ஆவன; விண்ணவர் உலகம் ஆவன; கொடிய இயமனின் தூதரை உதைத்து ஓடச் செய்வன; பிறவித் துன்பத்திலிருந்து நீங்க வேண்டும் என்னும் நோக்கத்தில் உள்ள திருத்தொண்டர்களுக்கு, அன்புடன் ஆக்குவிப்பன. அத்தகைய திருவடித் தலத்தைத் தரிசித்து ஏத்துக.

மானிலம் – மால் நிலம்.

898. பேணித் தொழுமவர் பொன்னுலகு
ஆளப் பிறங்கருளால்

ஏணிப்படிநெறி யிட்டுக்
கொடுத்திமை யோர்முடிமேல்
மாணிக்கம் ஒத்து மரகதம்
போன்று வயிரமன்னி
ஆணிக் கனகமும் ஒக்கும்ஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: *ஐயாற்றீசனின் திருவடித் தலமானது, தொழுபவர்களுக்குப் பொன்னுலகத்தை ஆளும் அருளைத் தருவன; தேவர்களின் முடிமேல் திகழும் மாணிக்கம், மரகதம், வயிரம், பொன் என விளங்குவன.*

சிறப்புரை: *ஈசனின் திருப்பெயர்களுள் ஒன்றாகிய செம்பொற் சோதி என்னும் குறிப்பு இத்திருப்பாட்டில் குறிப்பால் சுட்டப் பெறுதல் காண்க.*

899. ஓதிய ஞானமும் ஞானப்
பொருளும் ஒலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியும்
ஆவன விண்ணு மண்ணும்
சோதியும் செஞ்சுடர் ஞாயிறும்
ஒப்பன தூமதியோடு
ஆதியும் அந்தமும் ஆனஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: *ஐயாற்றீசனின் திருவடித் தலமானது, ஞானமும் அதன் பொருளாகவும், வேத ஒலியாகவும் வேள்வியாகவும் ஆவன; விண்ணுலகமும், மண்ணுலகமும், சோதியும், செஞ்சுடராகிய சூரியனும் சந்திரனும் ஆவன; ஆதியும் அந்தமும் ஆகி விளங்குவன.*

900. சுணங்கு முகத்துத் துணைமுலைப்
பாவை சுரும்பொடு வண்டு
அணங்கும் குழலி அணியார்
வளைக்கரம் கூப்பி நின்று
வணங்கும் பொழுதும் வருடும்
பொழுதும் வண்காந்தள் ஒண்போது
அணங்கும் அரவிந்தம் ஒக்கும்ஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: ஐயாற்றீசனின் திருவடித் தலமானது, வண்டுகள் மொய்க்கும் கூந்தலுடைய அழகிய வளையல் அணிந்த உமாதேவியார் காந்தள் போன்று விளங்கும் கைகளால் கூப்பி வணங்கச் செந்தாமரை மலரை ஒக்கும்.

காந்தள் – கார்த்திகைப் பூ; அரவிந்தம் – செந்தாமரை.

901. கழலார் துயர்வெயிற் சுட்டிடும்
போதடித் தொண்டர்துன்னும்
நிழலா வனஎன்றும் நீங்காப்
பிறவி நிலைகெடுத்துக்
கழலா வினைகள் கழற்றுவ
கால வனங்கடந்த
அழலார் ஒளியன காண்கஐ
யாறன் அடித்தலமே.

தெளிவுரை: ஐயாற்றீசனின் திருவடித் தலமானது, கடுமையான வெயிலின் வெப்பத்தால் திருத் தொண்டர்கள் சோர்ந்து நலியாது, நிழல் போன்று செறிந்து விளங்குவன; பிறவாமையைக் கொடுத்து அருள்வன; நீங்காத வினைகள் யாவும் நீங்குமாறு செய்வன. அழல் போன்ற ஒளியுடையன.

902. வலியான் தலைபத்தும் வாய்விட்டு
அலற வரைஅடர்த்து
மெலியா வலியுடைக் கூற்றை
உதைத்துவிண் ணோர்கள் முன்னே
பலிசேர் படுகடைப் பார்த்துப்பன்
னாளும் பலர்இகழ
அலியா நிலைநிற்கும் ஐயன்ஐ
யாறன் அடித்தலமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தலைவனாகிய ஐயாற்றீசனின் திருவடித் தலமானது, வலிமை மிக்க இராவணனை வாய்விட்டு அலறுமாறு அடர்த்தும், மெலிதல் இல்லாத கூற்று வனை உதைத்தும், தேவர்களின் முன்பாக மனை தொறும் கபாலம் ஏந்திப் பலி ஏற்றும், பலரும் இகழுமாறு அலியாகவும் விளங்குவன.

93. திருக்கண்டியூர் வீரட்டம்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 12ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. திருவையாற்றை மையமாகக் கொண்ட சப்த ஸ்தானங்களுள் ஒன்று. பிரமனின் ஐந்து சிரங்களுள் ஒன்றினைக் கொய்த தலம். அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. சூரியன் வழிபட்ட தலம்.

மற்றும் மூன்றாம் திருமுறை; பதிகம் எண் 38 காண்க.

சுவாமி : பிரமசிரக்கண்டீஸ்வரர், வீரட்டேஸ்வரர்,
பிரமநாதர், ஆதிவில்வனநாதர்

அம்பிகை : மங்கள நாயகி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : நந்திதீர்த்தம், பிரம தீர்த்தம்,
தக்ஷ தீர்த்தம், குடமுருட்டியாறு

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

903. வானவர் தானவர் வைகல்
மலர்கொணர்ந்து இட்டிறைஞ்சித்
தானவர் மால்பிர மன்னறி
யாத தகைமையினான்
ஆனவன் ஆதிபு ராணனன்
றோடிய பன்றி எய்த
கானவனைக் கண்டி யூர்அண்ட
வாணர் தொழுகின்றதே.

தெளிவுரை: ஈசன், தேவர்களாலும் அசுரர்களாலும் நாள்தோறும் மலர் கொண்டு ஏத்தப்படுபவர்; திருமால் பிரமன் ஆகியவர்களால் அறிதற்கு அரியவராகித் திகழ்ந்தவர்; ஆதி புராணர்; அருச்சுனருக்கு அருள் செய்யும் தகைமையால் வேட்டுவ வடிவம் தாங்கிப் பன்றி வடிவத்தில் இருந்த அசுரனை மாய்த்தவர். அப் பெருமான் கண்டியூரில் மேவும் அண்டவாணர். அவரை, என் நெஞ்சமானது தொழுது ஏத்துகின்றது.

ஆதிபுராணன் – ஈசன், பூந்துருத்தியில் வீற்றிருக்கும் ஈசனின் திருநாமங்களில் ஒன்று; அண்டவாணர் – அண்டங்கள் தோறும் விளங்கி மேவும் ஈசன்.

904. வான மதியமும் வாளர
வும்புன லோடுசடைத்
தானம் அதுஎன வைத்துழல்
வான்தழல் போலுருவன்

கான மறியொன்று கையுடை
யான்கண்டி யூர்இருந்த
ஊனமில் வேதம் உடையனை
நாம்அடி உள்குவதே.

தெளிவுரை: ஈசன், பிறைச் சந்திரனும், அரவும், கங்கையும் சடை முடியில் வைத்துத் திரிபவர்; தழல் போன்ற செம்மேனியர்; காட்டில் திரியும் மானைக் கையில் கொண்டுள்ளவர். பெருமையுடன் திகழும் வேதநாயகனாகிய அப்பெருமான், கண்டியூரில் வீற்றிருப்பவர். அவருடைய திருவடியை நெஞ்சில் பதித்து ஏத்துவோமாக.

905. பண்டங் கறுத்ததொர் கையுடை
யான்படைத் தான்தலையை
உண்டங் கறுத்ததும் ஊரொடு
நாடவை தானறியும்
கண்டங் கறுத்த மிடறுடை
யான்கண்டி யூர்இருந்த
தொண்டர் பிரானைக் கண்டீர்அண்ட
வாணர் தொழுகின்றதே.

தெளிவுரை: ஈசன், யானையின் தோலை உரித்தவர்; பிரமனின் தலையைக் கொய்தவர்; நஞ்சினை உண்டு கறுத்த மிடறு உடையவர்; அண்டவாணரர்ய்க் கண்டியூரில் வீற்றிருப்பவர்; தொண்டர்களால் ஏத்திப் போற்றப்படுபவர். அப் பெருமானைக் கண்டு மகிழ்ந் தவர்களே! என் நெஞ்சமானது அவரைத் தொழுது ஏத்துகின்றது.

சிறப்புரை: ஈசனுடைய வீரச் செயல்களாகிய யானை யின் தோலை உரித்ததும், புலியின் தோலை உரித்ததும் "பண்டு அங்கு அறுத்ததொர் கையுடையான்" என

ஏத்தப் பெற்றது. இதனைப் பண்தங்கு அறுத்த தொர்கையுடையான் என்று கொண்டு, ஈசன் யாழினைக் கையில் உடையவர் என்பதும் ஆன்றோர் உரைத்த திருவாக்கு.

பிரமனின் தலையைக் கொய்த தலச் சிறப்பானது இத் திருப்பாட்டில் சுட்டப் பெறுதல் காண்க.

906. முடியின்முற் றாததொன்று இல்லைஎல்
லாம்உடன் தானுடையான்
கொடியும் உற்றவ் விடை யேறியொர்
கூற்றொரு பாலுடையான்
கடியமுற் றவ்வினை நோய்களை
வான்கண்டி யூர்இருந்தான்
அடியுமுற் றார்தொண்டர் இல்லைகண்
டீர்அண்ட வானவரே.

தெளிவுரை: ஈசனின் திருக்குறிப்பில் தோன்றுவன யாவும், உடனே நிகழ்ந்து நிறைவேறத் தக்கதாகும். அவர், எல்லாவற்றையும் உடையவர்; இடபக் கொடி உடையவர்; உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு இடப வாகனத்தில் வீற்றிருப்பவர்; அடியவர்களின் வினைகளைத் தீர்த்தருள்பவர்; கண்டியூரில் வீற்றிருப்பவர். அப் பெருமானின் திருவடிக்கீழ் உள்ளவர்கள் திருத்தொண்டர்களே; வானவர்கள் இல்லை.

இது, ஈசன் திருவடியின்பால் திருத்தொண்டர்கள் அன்றி, மற்றவர்கள் எத்துணை உயர்ந்தவர்களாயினும் நாடுதல் இயலாது ஒதிற்று.

கூற்று – உமாதேவி; திருவைந்தெழுத்தும் ஆம்.

907. பற்றியொர் ஆனை உரித்தபி
ரான்பவ ளத்திரள்போல்
முற்றும் அணிந்ததொர் நீறுடை
யான்முன்ன மேகொடுத்த
கற்றங் குடையவன் தானறி
யான்கண்டி யூர்இருந்த
குற்றமில் வேதம் உடையானை
யாம்அண்டர் கூறுவதே.

தெளிவுரை: ஈசன், யானையைப் பற்றி அதன் தோலை உரித்தவர்; பவளம் போன்ற செம்மேனியின் முழுமையும் திருவெண்ணீறு அணிந்து விளங்குபவர்; காவியுடை அணிந்த சமணரால் அறியப்படாதவர்; கண்டியூரில் வீற்றிருப்பவர்; எல்லாக் குற்றங்களையும் களைந்து தீர்க்கும் வேதத்தை உடையவர். அவரை யாம் அணித்து இருக்குமாறு ஏத்துதும்.

சிறப்புரை: அஞ்ஞானமும் பொருள் திரிபினால் உண்டாகும் குற்றங்களையும் நீக்கி, ஞானத்தையும் பொருள் விளக்கத்தையும் நல்கும் வேதத்தின் பெருமை யானது, குற்றம் இல் வேதம் என ஏத்தப் பெறுவ தாயிற்று.

கற்றங்கு உடை – கல்தங்கு உடை – காவியுடை; நாவுக்கரசர் முன்னம் உடுத்திய உடைக் குறிப்பும் ஆம்; குற்றமில் வேதம் – குற்றங்களை இன்மையாக்கும் வேதம்; அண்டர் – அண்மையுறுதல்; வானவர்; அண்டர் கூறுவதே – தேவர்களும் உரைத்து ஏத்துவர்.

908. போர்ப்பனை யானை உரித்த
பிரான்பொறி வாயரவம்
சேர்ப்பது வானத் திரைகடல்
சூழுல கம் இதனைக்
காப்பது காரண மாகக்கொண்
டான்கண்டி யூர்இருந்த

கூர்ப்புடை யொள்வாள் மழுவனை
யாமண்டர் கூறுவதே.

தெளிவுரை: ஈசன், போர்த் தன்மையுடைய பனை போன்ற நீண்ட துதிக்கையுடைய யானையின் தோலை உரித்தவர்; அரவத்தை அணிந்துள்ளவர்; இவ்வுலக மானது ஆதிசேடனால் தாங்கப்படுகிறது என்னும் காரணத்தைக் கொண்டு அரவத்தைச் சடை முடியில் சேர்த்து விளங்குபவர். அவர் கண்டியூரில் மழுப்படை ஏந்தி வீற்றிருப்பவர். அப் பரமனை, யாம் அண்மை யுறக் கூறி ஏத்துதும்.

909. அட்டது காலனை ஆய்ந்தது
வேதம்ஆறு அங்கம்அன்று
சுட்டது காமனைக் கண்ணத
னாலே தொடர்ந்துஎரியக்
கட்டவை மூன்றும் எரித்த
பிரான்கண்டி யூர்இருந்த
குட்டமுன் வேதப் படையனை
யாம்அண்டர் கூறுவதே.

தெளிவுரை: ஈசன், காலனை அழித்தவர்; நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் ஆய்ந்து விரித்து ஓதியவர்; யோக நிட்டையில் இருந்த அன்று மன்மதனை நெற்றிக் கண்ணால் சுட்டு எரித்தவர்; மூன்று அசுரர்களின் கோட்டைகளை எரித்த தலைவர்; கடல் போன்று விரிந்து விளங்கும் வேதங் களைப் படைத்தவர். அப் பெருமானை யான் அண்மையுறப் போற்றி ஏத்துதும்.

குட்டம் – கடல்; படையன் – படைத்தவன்.

910. அட்டும் ஒலிநீர் அணிமதி
யும்மல ரானவெல்லாம்

இட்டுப் பொதியும் சடைமுடி
யான்இண்டை மாலையங்கைக்
கட்டும் அரவது தானுடை
யான்கண்டி யூர்இருந்த
கொட்டும் பறையுடைக் கூத்தனை
யாம்அண்டர் கூறுவதே.

தெளிவுரை: *ஈசன், கங்கையும் சந்திரனும் மலர்களும் கொண்டு விளங்கும் சடை முடியில் இண்டை மாலை உடையவர்; கையில் அரவத்தைக் கங்கணமாகக் கட்டி உள்ளவர்; கண்டியூரில் வீற்றிருப்பவர்; கொட்டுகின்ற பறைக்கு ஏற்பத் திருக்கூத்து ஆடுபவர். அப் பரமனை, யாம் அண்மையுறக் கூறி ஏத்துதும்.*

911. மாய்ந்தன தீவினை மங்கின
நோய்கள் மறுகிவிழத்
தேய்ந்தன பாவம் செறுக்ககில்
லாநம்மைச் செற்றநங்கைக்
காய்ந்த பிரான்கண்டி யூர்எம்
பிரான்அங்கம் ஆறினையும்
ஆய்ந்த பிரானல்ல னோஅடி
யேனையாட் கொண்டவனே.

தெளிவுரை: *யாராலும் செற்று அழிக்க இயலாத வலிமையுடைய மன்மதனை எரித்த பெருமான், கண்டியூரில் வீற்றிருக்கும் எம்பிரான் ஆவார். அவர், வேதத்தின் அங்கங்கள் ஆறினையும் ஆய்ந்தவர்; அடியேனை ஆட்கொண்டவர். அதனால் என் தீவினை மாய்ந்தன; நோய்கள் யாவும் நீங்கின; பாவங்கள் அழிந்தன.*

சிறப்புரை: *மன்மதனின் ஆற்றல் வலிமையுடையது. அத்தகைய மன்மதனை அழித்த பெருமையானது, "செறுக்ககில்லா நம்மைச் செற்ற அநங்கைக் காய்ந்த*

பிரான்" என ஏத்தப் பெற்றது. இத் தன்மையில் திருஞானசம்பந்தர், "ஐங்கணை வரிசிலையான் அநங்கனை அழகழித்த பைங்கண் வெள்ளேறுடையான்" (முதல் திருமுறை 118 திருப்பருப்பதம்; பாட்டு வ.எண் 1274) என உரைத்தருளியவாறும் காண்க.

அநங்கு – மன்மதன்; பிரானல்லனோ – பிரான் நல்லன் ஓ!; பிரான் அல்லனோ!

912. மண்டிமலையை எடுத்துமத்து
ஆக்கிஅவ் வாசுகியைத்
தண்டிஅமரர் கடைந்த
கடல்விடம் கண்டருளி
உண்ட பிரான்நஞ்சு ஒளித்த
பிரான்அஞ்சி ஓடி நண்ணக்
கண்ட பிரான்அல்ல னோகண்டி
யூர்அண்ட வானவனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: மேரு மலையை எடுத்து மத்தாக ஆக்கி வாசுகி என்னும் நாகத்தைக் கயிறாகக் கொண்டு கடலைக் கடைந்தபோது எழுந்த நஞ்சினைக் கண்டு, தேவர்கள் அஞ்சி ஓடினர்; ஈசனை நண்ணி ஏத்தினர். அப்பெருமான், அக்கடல் நஞ்சினைத் தன் கண்டத்தில் ஒளித்த நீல மணி மிடற்றினராக அருள்புரிந்தவர். தேவர்களின் தலைவராகிய அவர், கண்டியூரில் வீற்றிருப்பவர் அல்லவா!

94. திருப்பாதிரிப்புலியூர்

தல விளக்கம்: நடுநாட்டுத் தலம் 22இல், இது 18ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. கடலூரில் உள்ளது.

அகத்தியர், உபமன்யு முனிவர், வியாக்ரபாதர், கங்கை, அக்கினி முதலானோர் வழிபட்டது. கல்லில் பிணித்துக் கடலில் எறியப்பட்ட திருநாவுக்கரசர், கரை ஏறி வந்து வழிபட்ட திருத்தலம்.

மற்றும், இரண்டாம் திருமுறை பதிகம் எண் 257 காண்க.

சுவாமி : *பாடலேஸ்வரர், தோன்றாத்துணைநாதர்; கன்னிவன நாதர், சிவக்கொழுந்தீசர்; உத்தார நாதர், கரையேற்றும்பிரான்*

அம்பிகை : பெரியநாயகி, அருந்தவநாயகி, தோகையம்பிகை

தல மரம் : *பாதிரி (பாடலம்) - அட்ட மலர்களில் ஒன்று*

தீர்த்தம் : சிவகர தீர்த்தம், கெடில நதி, *பிரம தீர்த்தம் (கடல்)*

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

913. ஈன்றாளு மாய்எனக்கு எந்தையு
மாய்உடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துஉகந்
தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன்
திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன்
தன்னடி யோங்களுக்கே.

தெளிவுரை: *ஈசன், என்னை ஈன்ற தாய் ஆகியவர்; எனக்குத் தந்தை ஆகியவர்; எனக்கு உடன் தோன்றின வராயினர். இம் மூன்றினையும் படைத்து உகந்த ஈசன், என் மனத்துள் இருப்பவர். அவர், என்னைத் தாங்கிக்*

கொண்டவர். தேவர்களுக்கு அன்பனாகிய அப்பெருமான் திருப்பாதிரிப்புலியூரில் தன் அடியவர்களுக்குத் தோன்றாத் துணையாக விளங்குபவர்.

சிறப்புரை: இத் திருப்பாட்டானது, நாயனார் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்த தாய், தந்தை ஆகியோரை நினைந்து ஏத்துதல் ஆயிற்று எனலாம். திருவருள் நெறிக்கு மீட்டவராகிய திலகவதியாரை உடன் தோன்றினர் என ஏத்தி, இம் மூவரும் ஆகிய உலகம் ஈசனால் அருளி விளங்கப் பெற்றது எனக் குறிப்பால் சுட்டப் பெறுதல் ஆயிற்று. திருநாவுக்கரசர் இக வாழ்க்கையில் துறவற நெறியைப் பின்பற்றியவர் எனக் கொள்ளுவதற்கு உரிய சான்றாகவும் இது அமையும்.

இத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஈசனின் திருநாமமாகிய தோன்றாத் துணை நாதர் என்பது இத் திருப்பாட்டில் ஓதுதலும் ஆயிற்று.

ஈசன், ஈன்று ஆளும் தாயாகவும், தந்தையாகவும், உடன் தோன்றுபராகவும் விளங்குபவர் என ஓதுதலானது, ஈசனை அன்றி வேறு பற்றின்மையை உணர்த்துதல் ஆகும். இத்தன்மையில், "அப்பன் நீ! அம்மை நீ! ஐயனும் நீ! அன்புடைய மாமனும் மாமியும் நீ! ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ! ஒரு குலமும் சுற்றமும் ஒரூரும் நீ!" என அருளிச் செய்தமையும் காண்க. மாணிக்கவாசகர், "அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே! அன்பினில் விளைந்த ஆரமுதே!" என அருளிச் செய்தமையும் காண்க. இந் நெறியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "தந்தைதாய் உலகுக்கோர் தத்துவன் மெய்த் தவத்தோர்க்குப் பந்தமாயின பெருமான்" (திருவானைக்கா திருப்பதிகம் 4) என அருளிச் செய்தவாறும் காண்க.

ஏன்றுதல் – தாங்கிக் கொள்ளுதல், ஏன்று கொள்ளுதல்.

914. பற்றாய் நினைந்திடப் போதுநெஞ்
சேஇந்தப் பாரை முற்றும்
சுற்றா யலைகடல் மூடினும்
கண்டேன் புகனமக்கு
உற்றான் உமையவட்கு அன்பன்
திருப்பா திரிப்புலியூர்
முற்றா முளைமதிக் கண்ணியி
னான்றன் மொ.ய்கழலே.

தெளிவுரை: நெஞ்சமே! இவ் உலகத்தைச் சுற்றி அலையாதே! மகாப்பிரளயம் கண்டு இவ் உலகமானது கடலால் சூழப்பட்டாலும், நமக்குப் புகலிடமாக விளங்குவதும், உற்ற பாதுகாப்பாகத் திகழ்வதும், உமாதேவியாரின் அன்புக்கு உரியவராகிய ஈசன் ஆவார். அப் பெருமானைப் பற்றாகக் கொண்டு நினைந்து சரண் அடைவாயாக. அவர், திருப்பாதிரிப் புலியூரில் இளம்பிறைச் சந்திரனைச் சூடி அமர்ந்திருப்பவர். அவருடைய திருக்கழலை ஏத்துக.

915. விடையான் விரும்பியென் உள்ளத்து
இருந்தான் இனிநமக்குஇங்கு
அடையா அவலம் அருவினை
சாரா நமனை அஞ்சோம்
புடையார் கமலத்து அயன்போல்
பவர்பா திரிப்புலியூர்
உடையான் அடியர் அடிஅடி
யோங்கட்கு அரியதுண்டே.

தெளிவுரை: ஈசன், இடபத்தை வாகனமாக உடையவர்; என் உள்ளத்தில் விரும்பிக் குடிகொள்பவர். எனவே, நமக்குத் துன்பம் தரும் வினை அடையாது; நமனைக் கண்டு அஞ்ச மாட்டோம். தாமரையில் வீற்றிருக்கும் பிரமன் போன்ற மேலானவர்கள் எல்லாம் திருப்

பாதிரிப்புலியூரில் மேவும் ஈசனுக்கு அடியவர்கள் ஆவார். எனவே அப் பெருமானின் திருவடிக்கு அடியோங்களாகிய எமக்குக் கைகூடுவதற்கு அரியது என்று ஏதேனும் உள்ளதோ! எதுவும் அரியது இல்லை என்பது குறிப்பு.

916. மாயமெல் லாம்முற்ற விட்டிருள்
நீங்க மலைமகட்கே
நேய நிலாவ இருந்தான்
அவன்றன் திருவடிக்கே
தேயமெல் லாநின்று இறைஞ்சும்
திருப்பா திரிப்புலியூர்
மேயநல் லான்மலர்ப் பாதம்என்
சிந்தையுள் நின்றனவே.

தெளிவுரை: ஈசன், மாயத் தன்மையை அகற்றி, அஞ்ஞானம் நீங்க, உமாதேவியை நேயத்தோடு பொருந்தி விளங்குபவர். அப் பெருமானுடைய திருவடியை உலகம் யாவும் ஏத்தும். அது, திருப்பாதிரிப் புலியூரில் வீற்றிருக்கும் நலம் புரியும் ஈசனின் மலர்ப் பாதம் ஆகும். அத் திருப்பாதம் என் சிந்தையுள் நின்றனவே.

917. வைத்த பொருள்நமக்கு ஆம்என்று
சொல்லி மனத்தடைத்துச்
சித்தம் ஒருக்கிச் சிவாய
நமவென்று இருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வார்
அவர்பா திரிப்புலியூர்
அத்தன் அருள்பெற லாமோ
அறிவிலாப் பேதைநெஞ்சே.

தெளிவுரை: அறிவு இலாத பேதை நெஞ்சே! நாம் சேர்த்து வைக்கும் இகப் பொருள் யாவும் நமக்கு ஆகும்

என்று சொல்லி மயங்கும் மனத்தினைத் தடுத்து நிறுத்துக. சித்தத்தை ஒருமுகப்படுத்திச் சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தை நெஞ்சில் நிறுத்துக. அவ்வாறு இருந்தாலன்றித் திருப்பாதிரிப் புலியூரில் விளங்கும் தண்ணொளி போன்ற அத்தனின் அருள் பெறல் ஆகுமோ! ஆகாது என்பது குறிப்பு.

சிறப்புரை: இத் திருப்பாட்டானது, சூக்கும பஞ்சாட்சரத்தை ஓதி அருளிச் செய்ததாயிற்று. (திருப்பதிகம் எண் 11; நமச்சிவாயத் திருப்பதிகமானது தூல பஞ்சாட்சரத்தின் இயல்பினை இயம்புதலாம்.) இத்திருவைந்தெழுத்தைச் சிந்தையில் நிறுத்தத் திருவடிப் பேற்றினை அடைய வேண்டும் என உபதேசிக்கப் பெற்றது. இத் தன்மையில் மாணிக்கவாசகர், "நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன் தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்" (திருவேசறவு 10) என அருளிச் செய்தவாறும் காண்க.

918. கருவாய்க் கிடந்துன் கழலே
நினையும் கருத்துடை யேன்
உருவாய்த் தெரிந்து உன்றன்நாமம்
பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய
நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா
திரிப்புலி யூர்அரனே.

தெளிவுரை: திருப்பாதிரிப்புலியூரில் வீற்றிருக்கும் ஈசனே! இம் மண்ணுலகில் பிறந்து தேவரீரின் திருக்கழலையே நினைக்கும் கருத்துடையவனானேன். தேவரீருடைய திருநாமத்தினைத் தெரிந்து உமது திருவருளால் வாயின் செம்மை பொலியச் "சிவாய

நம'' என்று ஓதித் திருவெண்ணீறு அணிந்தேன். சிவகதியைத் தருவீராக.

சிறப்புரை: சிவாயநம என்று மொழியும் வாய் “திருவாய் பொலிய” என ஏத்தி உரைக்கப் பெறுதலை ஓர்க. இத்திருப்பாட்டானது, மனம் மொழி மெய்யால் ஈசனை ஏத்துதலைக் “கருத்துடையேன்,” “நாமம் பயின்றேன்,” “நீறணிந்தேன்” என வழிபட்டு ஏத்தும் பெற்றியை உணர்த்துதல் ஆயிற்று.

919. எண்ணாது அமரர் இரக்கப்
பரவையுள் நஞ்சையுண்டாய்
திண்ணார் அசுரர் திரிபுரம்
தீயெழச் செற்றவனே
பண்ணார்ந்து அமைந்த பொருள்கள்
பயில்பா திரிப்புலியூர்க்
கண்ணார் நுதலாய் கழல்நம்
கருத்தில் உடையனவே.

தெளிவுரை: ஈசனே! தேவர்கள், இறைஞ்சி ஏத்திப் பாற்கடலில் தோன்றிய நஞ்சின் வெம்மையிலிருந்து காத்தருள வேண்டும் என வேண்டுதல் புரிய, அக்கொடிய நஞ்சினை ஒரு பொருட்டாக எண்ணாது தேவரீர், உட்கொண்டீர். வலிமை மிக்க அசுரர்களின் மூன்று கோட்டைகளையும் எரித்துச் சாம்பலாக்கினீர். பண்ணின் இசை விளங்கும் பாதிரிப்புலியூரில் வீற்றிருக்கும் ஈசனே! நெற்றியில் கண்ணுடைய பரமனே! தேவரீருடைய திருக்கழல்கள் அடியேனின் கருத்தில் உடையனவே.

920. புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி என் மனத்தே

வழுவாது இருக்க வரந்தர
வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே.

தெளிவுரை: *இவ்வுலகில் தொழுகின்றவர்களுக்குக் கருணையுடன் வீற்றிருந்து அருள் புரியும் பாதிரிப் புலியூரில், கங்கையைச் செஞ்சடை மேல் வைத்து மேவும் தீ வண்ணனே! புழுவாகப் பிறவி கொண் டாலும் தேவரீருடைய திருவடியானது, வழுவுதல் இல்லாது என்னுடைய மனத்தில் பதிந்து இருக்கு மாறு வரம் தருவீராக.*

சிறப்புரை: *பிறவியை, வேண்டாமையாகக் கொள்ளும் உபாயத்தை, "தருவாய் சிவகதி" எனத் திருப்பாட்டு எண் 918இல் ஓதி நின்ற மாண்பினை ஓர்க.*

ஈசனின் திருவடியை மன்னுயிரானது நெஞ்சில் கொள்ளுதல் வேண்டும். அது இறைவனை ஏத்துதற்கே. அதன் பொருட்டே பிறவியை வேண்டுதல் எனக் கொள்க. இத்தன்மையில், "இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" (திருப்பாட்டு வ.எண் 783) என அருளிச் செய்தமையும் காண்க.

921. மண்பாத லம்புக்கு மால்கடல்
மூடிமற்று ஏழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர்
வீழினும் அஞ்சல் நெஞ்சே

திண்பால் நமக்கொன்று கண்டோம்
திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட்
சுடரான் கழலிணையே.

தெளிவுரை: மண்ணுலகம் கடலால் மூடப்பட்டு அழிந்தாலும், சூரியன் சந்திரன் ஆகிய சுடர்கள் திசையிலிருந்து திரிந்து மாறுபட்டு வீழ்ந்து அழிவைத் தந்தாலும் நெஞ்சே! அஞ்சாதே! நமக்கு உறுதியாக இருந்து காக்கும் பொருள் ஒன்று கண்டோம். அது, திருப்பாதிரிப் புலியூரில் வீற்றிருக்கும், நெற்றியில் கண்ணுடைய கடவுட் சுடராகிய, ஈசனின் கழலிணையே.

922. திருந்தா அமணர்தம் தீநெறிப்
பட்டுத் திகைத்து முத்தி
தருந்தாள் இணைக்கே சரணம்
புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா அரக்கன் உடல்நெரித்
தாய்பா திரிப்புலியூர்
இருந்தாய் அடியேன் இனிப்பிற
வாமல் வந்து ஏன்றுகொள்ளே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருப்பாதிரிப்புலியூரில் வீற்றிருக்கும் அரனே! திருத்தம் கொள்ளாத அமணரின் தீய நெறியில் உழன்று திகைத்து, முத்தி தரும் தாளிணை யாகிய தேவரீரிடம் சரணம் புகுந்தேன். கயிலையை எடுத்த இராவணனுடைய உடலை நெரித்த ஈசனே! அடியேன் இனிப் பிறவாது இருக்கும் தன்மையில் தேவரீர் வந்து ஏற்றுத் தாங்கிக் கொள்வீராக.

95. திருவிழிமிழலை

தல விளக்கம்: *திருப்பதிகம் எண் 64 காண்க.*

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

923. வான்சொட்டச் சொட்டநின்று அட்டும்
வளர்மதி யோடு அயலே
தேன்சொட்டச் சொட்டநின்று அட்டும்
திருக்கொன்றை சென்னி வைத்தீர்
மான்பெட்டை நோக்கி மணாளீர்
மணிநீர் மிழலையுளீர்
நான்சட்ட வும்மை மறக்கினும்
என்னைக் குறிக் கொள்மினே.

தெளிவுரை: *ஈசனே! வானில் அமுத தாரைகளைப் பொழியும் சந்திரனையும், அருகே தேன் துளிர்க்கும் கொன்றை மலர்களையும் சென்னியில் வைத்து மேவும் தேவரீர், உமாதேவியாரின் மணாளராக மிழலையுள் வீற்றிருப்பவர். தேவரீரை நான் மறக்கினும், அடியேனை மறவாது குறியாகக் கொண்டு அருள் புரிவீராக.*

மான் பெட்டை நோக்கி – உமாதேவி "மானேர் நோக்கி மணவாளர்" என்பது திருவாசகம் (குழைத்த பத்து 4).

924. அந்தமும் ஆதியும் ஆகிநின்
றீர்அண்டம் எண்திசையும்
பந்தமும் வீடும் பரப்புகின்
றீர்பசு ஏற்றுகந்தீர்
வெந்தழல் ஓம்பும் மிழலையுள்
ளீர்என்னைத் தென்திசைக்கே

உந்திடும் போது மறக்கினும்
என்னைக் குறிக்கொள்மினே.

தெளிவுரை: ஈசனே! தேவரீர், அந்தமும் ஆதியும் ஆனவர்; அண்டங்களும் எட்டுத் திக்குகளும், பந்தம் தரும் உலகமும், முத்திப் பேறும் நிலவச் செய்பவர்; இடப வாகனத்தில் வீற்றிருப்பவர்; வேள்வி புரிந்து உலகினை மலரச் செய்யும் மிழலை நகருள் உள்ளவர். என்னைத் தென்திசைக்கு உரியவனான காலன், உந்தித் தள்ளும்போது, நான் மறந்தாலும், தேவரீர் அடியேனை மறவாது குறியாகக் கொண்டு காத்தருள் புரிவீராக.

சிறப்புரை: ஈசன், எல்லா இடங்களிலும் கலந்தும் விரிந்தும் மேவுதலையும், பிறவியைத் தருகின்ற பந்தமாகவும், அதிலிருந்து விடுவிக்கும் முத்திப் பேறுக் குரிய வீட்டுலகமாகவும் இருத்தலை, இத்திருப் பாட்டானது முதலிரு அடிகளில் சுட்டுதலாயிற்று. இத்தன்மையில், "ஆதியாம் பாதமலர்" எனவும்; "அந்தமாம் செந்தளிர்கள்" எனவும்; "பந்தமும் வீடும் படைப் போன் காண்க!" எனவும் அருளிச் செய்யப் பெற்ற திருவாசக அமுத வாக்கும் காண்க.

தென்திசைக்கு உரியவனாகிய காலன், உயிரைக் கொண்டு செல்லும்போது, புலன்கள் செயல் இழந்து, மனம் தடுமாறி, உணர்விழந்த நிலையில், இறைவனை நினைக்க மாட்டேன் என்பது, "தென் திசைக்கே உந்திடும் போது மறக்கினும்" எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில், "உற்றார் ஆர் உளரோ – உயிர் கொண்டு போம் பொழுது குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு உற்றார் ஆர் உளரோ!" (திருப்பாட்டு வ.எண் *91*) என உரைத்தருளியமையும் காண்க.

புலன்கள் கலங்கி மயங்கிய நிலையில் ஈசன் அருள் புரிபவர் என்பதனைத் திருஞானசம்பந்தர், "புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி அறிவழிந் திட்டு ஐம்மேல் உந்தி அலமந்த போதாக அஞ்சேல் என்று அருள் செய்வான் அமரும் கோயில்... திருவையாறே'' (முதல் திருமுறைத் திருப்பாட்டு வ.எண் 1394) என அருளிச் செய்தவாறும் காண்க.

தென்திசைக்கே உந்திடும் போது – உயிர் பிரிந்து செல்லும் காலம்.

925. அலைக்கின்ற நீர்நிலம் காற்றனல்
அம்பரம் ஆகிநின்றீர்
கலைக்கன்று சேரும் கரத்தீர்
கலைப்பொரு ளாகி நின்றீர்
விலக்கின்றி நல்கு மிழலையு
ளீர்மெய்யிற் கையொடு கால்
குலைக்கின்று நும்மை மறக்கினும்
என்னைக் குறிக்கொள் மினே.

தெளிவுரை: *நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம் என ஐம்பூதங்களாக விளங்கும் ஈசனே! மானைக் கரத்தில் கொண்டுள்ள பெருமானே! எல்லா வடிவங்களையும் உடைய கலைப் பொருளாகி மேவும் பரமனே! வேறு பாடின்றி எல்லாருக்கும் அருள் வழங்கும் மிழலை நாதனே! கைகளும் கால்களும் அசைவின்றித் தேவரீரை நினைந்து ஏத்த மறந்தாலும் அடியேனைக் குறியாகக் கொண்டு அருள்புரிவீராக.*

அம்பரம் – ஆகாயம்.

926. தீத்தொழி லான்தலை தீயிலிட்
டுச்செய்த வேள்வி செற்றீர்
பேய்த்தொழி லாட்டியைப் பெற்றுடை
யீர்பிடித் துத்திரியும்

வேய்த் தொழி லாளர் மிழலையுள்
ளீர்விக்கி அஞ்செழுத்தும்
ஒத்தொழிந்து உம்மை மறக்கினும்
என்னைக் குறிக்கொள்மினே.

தெளிவுரை: *ஈசனே! தீய தொழில் மேவிய தக்கனுடைய வேள்வியில், அவனுடைய தலையை அறுத்துச் செற்ற தேவரீர், உமாதேவியை ஒரு பாகமாக உடையவர்; அந்தணர்கள் வேள்வி புரியும் மிழலையுள் வீற்றிருப்பவர். அந்திம காலத்தில் நான் விக்கித் திருவைந்தெழுத்தை ஓதுதற்கு மறப்பினும், தேவரீர் என்னைக் குறியாகக் கொண்டு காத்து அருள்புரிவீராக.*

பேய்த்தொழிலாட்டி – பேய்க்குத் தலைமையாகக் கொள்ளப்படும் காளி உமாதேவியின் அம்சமாகக் கொள்ளப் பெற்றது; வேய்த் தொழிலாளர் – மூங்கில் கம்பு கொண்டு திரிதண்டம் என ஏந்தி வேள்வி புரியும் அந்தணர்களைக் குறித்தது; அஞ்செழுத்தும்.. ஒத்தொழிந்தும் – சிவாய நம என்று ஓதி நீறணிந்தேன் தருவாய் சிவகதி எனத் திருப்பாட்டு எண் 918இல் ஓதியவாறு, ஓதாது ஒழிந்த நிலையில் மறக்கினும், அருள்புரிவீராக என்னும் வேண்டுதலாயிற்று.

927. தோட்பட்ட நாகமும் சூலமும்
சுற்றியும் பத்திமையால்
மேற்பட்ட அந்தணர் வீழியும்
என்னையும் வேறுடையீர்
நாட்பட்டு வந்து பிறந்தேன்
இறக்க நமன்தமர்தம்
கோட்பட்டு நும்மை மறக்கினும்
என்னைக் குறிக்கொள்மினே.

தெளிவுரை: *ஈசனே! தோளில் நாகமும் சூலப் படையும் விளங்கப் பக்தி கொண்டு ஏத்தும் அந்தணர்கள் திகழும் வீழிமிழலையை உடைய தேவரீர், அடியேனையும் ஆட்கொண்டவர். நான், என் வாழ்*

நாள் நிறைவுற்றதும் இறப்பதற்குப் பிறந்தேன். நமனுடைய தூதர்கள் என் உயிரைக் கவரும் தருணத்தில், தேவரீரை நான் மறந்தாலும், என்னைக் குறியாகக் கொண்டு காத்தருள் புரிவீராக.

சிறப்புரை: குறிப்பிட்ட வாழ்நாள் வரை இவ்வுலகில் வாழ வேண்டும் என்னும் நிர்ணயம் பிராரத்த வினையால் யாக்கப்படுகிறது என்பதும், அஞ்ஞான்று, புலன்களும் அந்தக்கரணங்களும் செயலற்ற நிலையில், திருவைந்தெழுத்தை ஓதும் பேறு வாய்க்கப் பெறாமையும், இவண் குறிப்பால் உணர்த்தப் பெறுவதாயிற்று. வினையை அறுப்பவர் ஈசனே ஆதலும், அப்பெருமானை ஓதி உய்வதற்குரிய உபாயம், திருவைந்தெழுத்தே ஆதலும் ஈண்டு உணர்த்திற்று. அஞ்ஞான்று உயிரானது, ஈசனை எண்ணித் திருவைந் தெழுத்தை ஓதுவதற்கு ஈசன் மறவாது குறித்து, அருள் புரிய வேண்டும் என விண்ணப்பித்தவாறு ஆயிற்று.

928. **கண்டியிற் பட்ட கழுத்துடை**
யீர்கரி காட்டில் இட்ட
பண்டியிற் பட்ட பரிகலத்
தீர்பதி வீழிகொண்டீர்
உண்டியிற் பட்டினி நோயில்
உறக்கத்தில் உம்மைஐவர்
கொண்டியிற் பட்டு மறக்கினும்
என்னைக் குறிக் கொள்மினே.

தெளிவுரை: உருத்திராக்க மாலையைக் கழுத்தில் அணிந்து மேவும் ஈசனே! சுடுகாட்டில் இருக்க வேண்டிய மண்டை ஓட்டினைப் பிச்சைப் பாத்திர மாக உடையவரே! வீழிமிழலையைப் பதியாக உடைய பெருமானே! நான், உணவு கொள்கின்ற போதும்,

பட்டினியாய்ப் பசித்துள்ள போதும், உடற்பிணியால் தளர்ச்சியுற்ற போதும், உறக்கத்திலும், ஐம்புலன்களால் சார்ந்து என் நிலை மறந்து இருந்த போதும், தேவரீரை நான் மறந்தாலும், அடியேனைக் குறியாகக் கொண்டு அருள் புரிவீராக.

சிறப்புரை: ஈசனை மறக்கக்கூடிய தருணமாக உடைய உணவு, பசி, பிணி, உறக்கம் மற்றும் ஐம்புலக்கட்டு ஆகியன இவண் சுட்டப் பெற்றன. 'மறக்கினும்' என்பது மறவாமையாகிய இயல்பினை உணர்த்துதலும் மறவாமைக்கு வித்திடுதலும் ஆகும் எனக் கொள்க. இத்தன்மையில் திருஞானசம்பந்தர், "உண்ணினும், உறங்கினும் நின் ஒண்மலர் அடியலால் உரையாது என் நா! கண்ணனும் கடிகமழ் தாமரை மேல் அண்ணலும் அளப்பரிதாயவனே! இதுவோ எமையாளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல் அதுவோ உனது இன்னருள் ஆவடு துறைஅரனே!" என அருளிச் செய்தவாறும் காண்க.

கண்டி – உருத்திராட்சம். பண்டி – கபாலம், மண்டை ஒடு.
ஐவர் கொண்டி – தேகம், உடம்பு.

929. தோற்றம்கண் டான்சிரம் ஒன்றுகொண்
டீர்தூய வெள்ளெருது ஒன்று
ஏற்றம்கொண் டீர்எழில் வீழி
மிழலை இருக்கை கொண்டீர்
சீற்றம்கொண்டு என்மேற் சிவந்ததொர்
பாசத்தால் வீசியவெம்
கூற்றம்கண்டு உம்மை மறக்கினும்
என்னைக் குறிக் கொள்மினே.

தெளிவுரை: ஈசனே! தேவரீர், பிரமனுடைய ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்து கபாலமாகக் கொண்டு

விளங்கியவர்; வெள்ளை இடபத்தை வாகனமாகக் கொண்டு ஏறி அமர்ந்தவர்; அருளின் எழில் திகழும் வீழிமிழலையை இருப்பிடமாகக் கொண்டவர். சீற்றத்தின் தன்மையுடைய கூற்றுவன், என்மேல் கொடிய பாசக் கயிற்றை வீசி உயிரைக் கவரும்போது, நான் தேவரீரை மறந்தாலும், என்னைக் குறிக்கொண்டு காத்தருள் புரிவீராக.

தோற்றம் கண்டான் – பிரமன்; ஏற்றம் கொண்டீர் – வாகனமாக ஏறி அமர்ந்தீர்; சிவந்ததொர் பாசம் – அச்சம் தரும் பாசக் கயிறு.

930. சுழிப்பட்ட கங்கையும் திங்களும்
சூடிச் சொக்கம் பயின்றீர்
பழிப்பட்ட பாம்பரைப் பற்றுடை
யீர்படர் தீப்பருக
விழிப்பட்ட காமனை விட்டீர்
மிழலையுள் ளீர்பிறவிச்
சுழிப்பட்டு நும்மை மறக்கினும்
என்னைக் குறிக் கொள்மினே.

தெளிவுரை: ஈசனே! தேவரீர், கங்கையும் சந்திரனும் சூடிச் சொக்கம் என்னும் நடனத்தைப் புரிந்தவர்; பாம்பை அரையில் கட்டியவர்; மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்தவர்; மிழலை என்னும் பதியில் வீற்றிருப்பவர். பிறவித் தளையால் இடர்ப்பட்டுத் தேவரீரை மறந்தாலும், என்னைக் குறியாகக் கொண்டு அருள் புரிவீராக.

931. பிள்ளையிற் பட்ட பிறைமுடி
யீர்மறை யோதவல்லீர்
வெள்ளையிற் பட்டதொர் நீற்றீர்
விரிநீர் மிழலையுள்ளீர்
நள்ளையிற் பட்டுஐவர் நக்கரைப்
பக்க நமன் தமர்தம்

கொள்ளையிற் பட்டு மறக்கினும்
என்னைக் குறிக் கொள்மினே.

தெளிவுரை: ஈசனே! தேவரீர், இளம்பிறைச் சந்திரனை முடியில் கொண்டுள்ளவர்; வேதங்களை விரித்தோத வல்லவர்; பால் போன்ற வெண்மையான திருநீறு அணிந்தவர்; நீர்வளம் மிகுந்த மிழலை நகரில் வீற்றிருப்பவர். ஐம்புலன்களின் நடுவில் நான் அகப்பட்டு, அவர்கள் என்னைப் பரிகசித்துப் பிய்த்து வஞ்சிக்க, நமனுடைய தூதுவர்கள் என் உயிரைக் கொள்ளை கொள்ளும் போது, தேவரீரை நான் மறந்தாலும், என்னைக் குறியாகக் கொண்டு காத்தருள் புரிவீராக.

பிள்ளையிற் பட்ட பிறை – இளம்பிறைச் சந்திரன்;
நீற்றிர் – திருநீற்றுக்கு உரியவர், திருநீறு அணிந்தவர்.

932. கறுக்கொண்டு அரக்கன் கயிலையைப்
பற்றிய கையுமெய்யும்
நெறுக்கென்று இறச்செற்ற சேவடி
யாற்கூற்றை நீறுசெய்தீர்
வெறிக்கொன்றை மாலை முடியீர்
விரிநீர் மிழலையுள்ளீர்
இறக்கின்று நும்மை மறக்கினும்
என்னைக் குறிக்கொள்மினே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசனே! தேவரீர், இருள் கொண்ட அரக்கனாகிய இராவணன், வஞ்சம் கொண்டவனாகிக் கயிலையைப் பற்றி எடுக்கக் கையும் மெய்யும் நெருக்கி நலியுமாறு செற்றவர்; திருவடியால் கூற்றுவனை அழித்தவர்; நறுமணம் கமழும் கொன்றை மாலை அணிந்த திருமுடியுடையவர்; நீர் வளம் மிக்க மிழலையுள் வீற்றிருப்பவர். இறக்கும் காலத்தில்

தேவரீரை நான் மறந்தாலும் என்னைக் குறியாகக் கொண்டு காத்து அருள் புரிவீராக.

நெறுக்கு – நெருக்குதல்; நீறு செய்தீர் – அழித்தவர்.

96. திருச்சத்திமுற்றம்

தல விளக்கம்: *காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 22ஆவது திருத்தலம். திருநாவுக்கரசர் பாடல் பெற்றது. உமாதேவி வழிபட்டு இறைவனைக் கட்டித் தழுவி முத்தமிட்ட சிறப்புடையது. திருநாவுக்கரசர், திருவடி தீட்சை புரிந்தருளுமாறு இறைவனை வேண்ட, திருநல்லூருக்கு வருமாறு அருளிய பெருமையுடைய பதி. திருஞானசம்பந்தருக்கு முத்துப்பந்தர் அருளிச் செய்ய, இங்கிருந்து திருப்பட்டீச்சரம் சென்றடைந்து பதிகம் பாடியருளினார்.*

சுவாமி : *சிவக்கொழுந்தீசர்*

அம்பிகை : *பெரியநாயகி*

தீர்த்தம் : *சூலதீர்த்தம்*

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

933. கோவாய் முடுகி அடுதிறற்
கூற்றம் குமைப்பதன்முன்
பூவார் அடிச்சுவடு என்மேற்
பொறித்துவை போகவிடில்
மூவாமுழுப்பழி மூடும்கண்
டாய்முழங் கும்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத்து
உறையும் சிவக்கொழுந்தே.

தெளிவுரை: நெருப்பை ஏந்தித் திருச்சத்திமுற்றத்தில் உறையும் ஈசனே! சிவக்கொழுந்தே! தானே தலைமை பூண்டவன் என்று முனைந்து, போர்த்திறமையுடைய கூற்றுவன், என்னை வஞ்சித்து அழிப்பதற்கு முன்னே, தேவரீர், பூப்போன்ற திருவடிச் சுவட்டினை என் மீது பொறித்து வைப்பீராக. அவ்வாறு செய்யாது விட்டீர் ஆயின், எக்காலத்திலும் மறையாத முழுப் பழியானது தேவரீரைச் சூழும்.

சிறப்புரை: ஈசன் அடியவருக்கு வேண்டிய அருளைப் புரியாதிருப்பின், அப் பழியானது இறைவனைச் சாரும் என்பது, "போகா விடில் மூவா முழுப்பழி மூடும் கண்டாய்" என உரைக்கப் பெற்றது. இத்தன்மையில், சுந்தரமூர்த்தி சுவாமிகள், "எற்றுக்கு அடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்! மற்றைக் கண் தான் தாராது ஒழிந்தால் வாழ்ந்து போதீரே!" (திருவாரூர் திருப்பதிகம் 2) என அருளிச் செய்தவாறும் காண்க.

மெய்யடியவர்களுக்கு ஈசன் அருள் புரியாராயின், ஏனையோரால் நகைப்பிற்கு ஆளாக நேரிடும் என்பதனை, மாணிக்கவாசகர், "விடில் என்னை மிக்கார் ஆரடியான் என்னின் உத்தரகோச மங்கைக்கு அரசின் சீரடியார் அடியான் என்று நின்னைச் சிரிப்பிப்பனே!" (நீத்தல் விண்ணப்பம் 48) என அருளியவாறும் காண்க.

சிவக்கொழுந்து – இத்திருத்தலத்தில் மேவும் ஈசனின் திருநாமம் சிவக்கொழுந்தீசர்.

934. காய்ந்தாய் அனங்கன் உடலம்
பொடிபடக் காலனைமுன்
பாய்ந்தாய் உயிர்செகப் பாதம்
பணிவார்தம் பல்பிறவி

ஆய்ந்தாய்ந்து அறுப்பாய் அடியேற்கு
அருளாய்உன் அன்பர்சிந்தை
சேர்ந்தாய் திருச்சத்தி முற்றத்து
உறையும் சிவக் கொழுந்தே.

தெளிவுரை: திருச்சத்திமுற்றத்தில் உறையும் சிவக் கொழுந்தே! தேவரீர், மன்மதனை எரித்தவர்; காலனின் உயிர் பிரிந்து ஏகுமாறு உதைத்தவர்; பணிந்து ஏத்துபவர்களுடைய பிறவிகளை ஆய்ந்து நீக்கி அருள்பவர். அன்பர்களுடைய சித்தத்தில் மேவும் தேவரீர், அடியேற்கு அருள்வீராக.

935. பொத்தார் குரம்பை புகுந்துஐவர்
நாளும் புகலழிப்ப
மத்தார் தயிர்போல் மறுகும்என்
சிந்தை மறுக்கொழிவி
அத்தா அடியேன் அடைக்கலம்
கண்டாய் அமரர்கள்தம்
சித்தா திருச்சத்தி முற்றத்து
உறையும் சிவக்கொழுந்தே.

தெளிவுரை: தேவர்களுடைய சித்தத்தில் மேவித் திருச்சத்திமுற்றத்தில் உறையும் சிவக்கொழுந்தீசப் பெருமானே! ஒன்பது துவாரங்களையுடைய இவ்வுடம்பில் புகுந்து, ஐவராகிய புலன்கள் நாள் தோறும் இடையறாது மத்தில் கடையப் பெறும் தயிர் போல, என் சிந்தையில் புகுந்து வஞ்சித்துத் துன்புறுத்து கின்றன. அத்தனே! தேவரீரிடம் அடைக்கலம் புகுந்தேன். காத்தருள் புரிவீராக.

சிறப்புரை: மத்தினால் அலைப்புறும் தயிர் போல, ஐம்புன்களால் சிந்தையானது அழிதல் இவண் சுட்டப் பெற்றது. இத்தன்மையில், "மலங்கள் ஐந்தால் சுழல்

வன்தயிரிற் பொரு மத்துறவே" எனவும், "மத்துறு தண் தயிரிற் புலன் தீக்கதுவக் கலங்கி வித்துறுவேனை" (நீத்தல் விண்ணப்பம் 29,30) எனவும் அருளிச் செய்யப் பட்ட திருவாசக அமுத வாக்கும் காண்க.

பொத்தார் குரம்பை – ஒன்பது துவாரங்களை உடைய உடம்பு.

936. நில்லாக் குரம்பை நிலையாக்
கருதிஇந் நீள்நிலத்தொன்று
இல்லாக் குழிவீழ்ந்து அயர்வுறு
வேனைவந்து ஆண்டுகொண்டாய்
வில்லேர் புருவத்து உமையாள்
கணவா விடிற் கெடுவேன்
செல்வா திருச்சத்தி முற்றத்து
உறையும் சிவக்கொழுந்தே.

தெளிவுரை: திருச்சத்திமுற்றத்தில் உறையும் செல்வனே! சிவக்கொழுந்தீசனே! நிலைத்திருக்கத் தகுதியில்லாத இவ்வுடம்பை, நிலையுடையதாக எண்ணிப் பல திறப்பட்ட இடர்க்குழியில் வீழ்ந்து அயற்சி யுற்றேன். என்னை ஆண்டு கொண்டு அருள்புரிவீராக. உமாதேவியின் நாயகரே! தேவரீர், அடியேனைக் கைவிடில் என்செய்வேன்!

937. கருவுற் றிருந்துன் கழலே
நினைந்தேன் கருப்புவியில்
தெருவிற் புகுந்தேன் திகைத்தடி
யேனைத் திகைப்பொழிலி
உருவிற் றிகழும் உமையாள்
கணவா விடிற்கெடுவேன்
திருவிற் பொலிசத்தி முற்றத்து
உறையும் சிவக் கொழுந்தே.

தெளிவுரை: செல்வம் பொலியும் சத்திமுற்றத்தில் உறையும் ஈசனே! சிவக்கொழுந்து பெருமானே! கருவுற்ற நாள் முதலாகத் தேவரீருடைய திருக் கழலையே நினைத்திருந்தேன். ஊரிடைத் தெருவில் புகுந்தபோது திகைத்து நின்றேன். அம்மையப்பராக விளங்கும் தேவரீர், அத்தகைய திகைப்பை ஒழித் தருள்வீராக. வேறுபட்டுக் கைவிடில் கெடுவேன். காத்தருள் புரிவீராக.

சிறப்புரை: கருவுற்ற காலத்தில் உயிரானது கடவுளை நினைத்திருக்கும் இயல்பினை நூல்கள் இயம்புதலைக் காணலாம். பிரகலாதன், அபிமன்யு ஆகியோர் கருவில் இருந்த காலத்தில் உபதேசங்களைக் கேட்டுணர்ந்த புராண வரலாறும் உண்டு. "கருவுற்ற நாள் முதலாக உன்பாதமே காண்பதற்கு உருகிற்று என் உள்ளமும்" (திருப்பாட்டு வ.எண் 961) என அருளிச் செய்தமையும் காண்க.

திருச்சத்திமுற்றம் என்னும் தல மகிமையானது திருவிற்பொலி சத்திமுற்றம் எனச் சிறப்பித்துரைத்து ஏத்துதல் ஆயிற்று.

938. வெம்மை நமன்தமர் மிக்கு
விரவி விழுப்பதன் முன்
இம்மைஉன் தாள்என்றன் நெஞ்சத்து
எழுதிவை ஈங்குஇகழில்
அம்மை அடியேற்கு அருளுதி
என்பது இங்கு ஆர்அறிவார்
செம்மை தருசத்தி முற்றத்து
உறையும் சிவக் கொழுந்தே.

தெளிவுரை: செம்மை தருகின்ற சத்திமுற்றத்தில் உறையும் சிவக்கொழுந்து நாதனே! கொடிய

நமனுடைய தூதுவர்கள் என்னைக் கவர்ந்து என் உடலைச் சாய்த்து, விழச் செய்வதற்கு முன்னர், இப் பிறவியில் தேவரீருடைய திருவடி மலரை என் நெஞ்சில் எழுதி வைப்பீராக. அவ்வாறு இன்றி ஈங்கு இகழ்ந்து, மறுபிறவியில் தேவரீர் அடியேற்கு அருளுதலை எங்ஙனம் அறிதல் இயலும்.

இம்மை – இப்பிறவி; அம்மை – அடுத்த பிறவி;
செம்மை – முத்திப் பேறு.

939. விட்டார் புரங்கள் ஒருநொடி
வேரஓர் வெங்கணையால்
சுட்டாய்என் பாசத் தொடர்பறுத்து
ஆண்டுகொள் தும்பிபம்பும்
மட்டார்குழலி மலைமகள்
பூசை மகிழ்ந்தருளும்
சிட்டா திருச் சத்தி முற்றத்து
உறையும் சிவக்கொழுந்தே.

தெளிவுரை: தேன் மணம் கமழும் மலர்க் கூந்தலை உடைய உமாதேவியார் பூசித்து மகிழ்ந்தருளும் சிட்டனே! திருச்சத்திமுற்றத்தில் உறையும் சிவக்கொழுந்து பெருமானே! தேவரீர், பகைவராகிய மூன்று அசுரர்களின் புரங்கள் ஒரு நொடியில் வெந்து சாம்பலாகுமாறு, அக்கினியாகிய கணையால் எரித்தவர். உலகப் பற்றுக் கொண்டு மேவும் என் பாச உணர்வினை அறுத்து, ஆண்டு கொள்வீராக.

சிறப்புரை: இத் திருப்பாட்டானது, முப்புரங்களை அழித்தபான்மையில் மும்மலங்களையும் அறுத்தாளும் ஈசனின் அருளாற்றலை நாடியதை ஓதிற்று. உமாதேவி யார் ஈசனைப் பூசித்து வழிபட்டு மகிழ்ந்த திருத்தலத்தின் வரலாறு இதனில் உரைக்கப் பெற்றது.

சிட்டன் – சிவபெருமான்.

940. இகழ்ந்தவன் வேள்வி அழித்திட்டு
இமையோர் பொறைஇரப்ப
நிகழ்ந்திட அன்றே விசயமும்
கொண்டது நீலகண்டா
புகழ்ந்த அடியேன்றன் புன்மைகள்
தீரப் புரிந்து நல்காய்
திகழ்ந்த திருச்சத்தி முற்றத்து
உறையும் சிவக்கொழுந்தே.

தெளிவுரை: திருச்சத்திமுற்றத்தில் உறையும் சிவக் கொழுந்தே! நீலகண்டப் பெருமானே! இகழ்ந்து புரிந்த தக்கனின் வேள்வியைத் தகர்த்த தேவரீர், ஆங்கு யாகத்தில் பங்கேற்ற தேவர்கள் பொறுத்தருளுமாறு வேண்ட, அவ்வாறே அருள்புரிந்து ஆற்றலைப் புரிந்தீர். ஈசனே! அதனை அடியேன் புகழ்ந்து ஏத்தியவன் ஆனேன். தேவர்களுடைய குற்றத்தைப் பொறுத்து அருள் புரிந்த பாங்கில், அடியவனின் புன்மைகளைப் பொறுத்து அருள் புரிவீராக.

941. தக்கார்வம் எய்திச் சமண்தவிர்ந்து
உன்றன் சரண்புகுந்தேன்
எக்காதல் எப்பயன் உன்திறம்
அல்லால் எனக்குளதே
மிக்கார் திலையுள் விருப்பா
மிகவட மேருஎன்னும்
திக்கா திருச்சத்தி முற்றத்து
உறையும் சிவக்கொழுந்தே.

தெளிவுரை: மிகுந்த அன்பினால் தில்லையில் தி
புரியும் அன்பனே! வடமேரு என்று போற்
மேலான திக்கில் திகழும் ஈசனே! திருச்சத்தி
வீற்றிருக்கும் சிவக்கொழுந்தே! நான் ச
தவிர்த்துப் பேரன்புடன் தேவரீரைச் சர

நான் தேவரீருடைய திருவடியில் சரணம் அடைந்த பிறகு, என்னுடைய விருப்பம் என்பதும் நான் அடையும் பயன் என்பதும் தேவரீருடைய அருள் திறமேயன்றி, எனக்கு வேறு யாது உள்ளது!

சிறப்புரை: ஈசனின் அருள் திறத்தினையன்றி வேறு ஒன்றும் அறியாத தன்மை, "எக்காதல் எப்பயன் உன்திறம் அல்லால் எனக்குளதே!" என உரைக்கப் பெற்றது. இத் தன்மையில், அடியவர்க்குரிய தேவை களை ஈசன் உணர்த்த, அவ்வாறே வேண்டப்படுகிறது என்னும் கருத்தினை உரைப்பதாயிற்று. இதனை மாணிக்கவாசகர், "வேண்டி நீயாது அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்; வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே!" (குழைத்த பத்து 6) என அருளிச் செய்த வாறும் காண்க.

942. பொறித்தேர் அரக்கன் பொருப்பெடுப்பு
 உற்றவன் பொன்முடித் தோள்
இறத்தாள் ஒருவிரல் ஊன்றிட்டு
 அலற இரங்கி ஒள்வாள்
குறித்தே கொடுத்தாய் கொடியேன்செய்
 குற்றக் கொடுவினை நோய்
செறுத்தாய் திருச்சத்தி முற்றத்து
 உறையும் சிவக்கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருச்சத்திமுற்றத்தில் உறையும் சிவக்கொழுந்தே! இராவணன், கயிலை மலையை எடுக்க, அவனுடைய பொன் முடியும் தோளும் அழியுமாறு, திருப்பாத விரல் ஒன்றினால் ஊன்றி அலறச் செய்த தேவரீர், இரக்கம் கொண்டு ஒளி மிகுந்த

வாளைக் கொடுத்தீர்; கொடியவனாகிய என்னுடைய குற்றங்களைப் பொறுத்துக் கொடிய வினைகளையும் பிறவிப் பிணியையும் நீக்கி அருள் செய்தவர், தேவரீரே.

உமது கருணையை எவ்வாறு புகழ்ந்து ஏத்துவேன்!

97. திருநல்லூர்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம். 127இல், இது 20ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. திருநாவுக்கரசருக்குத் திருவடி சூட்டிய திருத்தலம். திருவடியைச் சூட்டுமாறு வேண்டிய இடம் திருச்சத்தி முற்றம். திருப்பாட்டு எண் 933 காண்க. "பூவார் அடிச்சுவடு என் மேற் பொறித்து வை" என்பதாம். இதனைச் சேக்கிழார் பெருமான்,

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத்தொண் டனார் வணங்கி மகிழ்ந்து
எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

— திருநாவுக்கரசு நாயனார் புராணம், பா. 195

என அருளிச் செய்தமை காண்க.

இதனைத் திருநாவுக்கரசர், "இனமலர்கள் போத விழ்ந்துமதுவாய்ப் பில்கி நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூர் எம் பெருமானார் நல்லவாறே" (ஆறாம் திருமுறை; திருத்தாண்டகம்) என அருளிச் செய்தவாறும் நோக்குக.

அமர்நீதி நாயனாரை ஆட்கொண்ட தலம். கோச் செங்கட் சோழனால் கட்டப்பட்ட மாடக் கோயில்.

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 86 காண்க.

சுவாமி : பஞ்சவர்ணேஸ்வரர், கல்யாணசுந்தரேஸ்வரர், பெரியாண்டேஸ்வரர்

அம்பிகை : கிரிசுந்தரி, பர்வதசுந்தரி, கல்யாணசுந்தரி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : சப்த சாகர தீர்த்தம்

குறிப்பு: ஈசன் திருமேனியானது, ஒரு நாளைக்கு ஐந்து முறை நிறம் மாறித் தோற்றம் தரும் பஞ்சவர்ணம்.

பதிகக் குறிப்பு: இதனை அகத்துறைக் குறிப்பு உடையது என்பர், ஆன்றோர்.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

943. அட்டுமின் இல்பலி என்று என்று
அகங்கடை தோறும்வந்து
மட்டவி ழுங்குழ லார்வளை
கொள்ளும் வகையென் கொலோ
கொட்டிய பாணி எடுத்திட்ட
பாதமும் கோளரவும்
நட்டநின்று ஆடிய நாதர்நல்
லூர்இடங் கொண்டவரே.

தெளிவுரை: தாளம் கொட்டும் தன்மைக்கு ஏற்ற திருப்பாதத்தைத் தூக்கி அரவும் ஆட, நின்று ஆடியவர், நல்லூரில் வீற்றிருக்கும் ஈசன். அப்பெருமான், தாருகாவனத்தில் உள்ள மகளிரின் இல்லங்கள் தோறும் சென்று உணவு இடுவீராக என்று கூறிக் கை

வளையல்களைக் கொள்ளும் வகைதான் என்கொலோ!

சிறப்புரை: கொட்டும் பறைக்கு ஏற்ப நடனம் புரியும் எழிலைத் திருஞானசம்பந்தர் இத் தலப்பதிகத்தில் (முதல் திருமுறை; பா.வ.எண் 926) இல் உரைத்தருளிய வாறும் காண்க.

944. பெண்ணிடம் பண்டைய தன்றுஇவை
பெய்பலிக்கு என்றுழல்வார்
நண்ணிட்டு வந்து மனைபுகுந்
தாருநல் லூரகத்தே
பண்ணிட்ட பாடலர் ஆடல
ராய்ப்பற்றி நோக்கிநின்று
கண்ணிட்டுப் போயிற்றுக் காரணம்
உண்டு கறைக் கண்டரே.

தெளிவுரை: பெண்ணாசை என்பது தொன்மையான தன்மையதன்று. பலி ஏற்க வேண்டும் என்னும் பான்மையில் ஈசன் திரிந்த பாங்காயிற்று. திருநல்லூரில் மேவும் பெருமான், பண் கொண்டு பாடுபவரும் ஆடுபவரும் ஆகிக் கறையுடைய கண்டத்தையுடைய வராய்க் கண் சாடை காட்டி, மனை புகுந்து பலி கொண்டவராவார்.

இது, ஈசன், தாருகவனத்து மகளிர்தம் மனை தொறும் சென்று பலி ஏற்ற அழகினை ஓதிற்று.

945. படஏர் அரவல்குல் பாவைநல்
லீர்பக லேஒருவர்
இடுவார் இடைப்பலி கொள்பவர்
போலவந்து இல்புகுந்து
நடவார் அடிகள் நடம்பயின்று
ஆடிய கூத்தர்கொலோ

வடபாற் கயிலையும் தென்பால்
நல்லூரும்தம் வாழ்பதியே.

தெளிவுரை: படம் கொண்டு விளங்கும் அரவத்தைப் போன்ற அல்குல் உடைய பாவையர்கள் இடுகின்ற பலியைக் கொள்பவர் போல வந்து, இல்லம் புகுந்து, திருநடனம் புரியும் கூத்தர் அன்றோ, வடபுரத்தில் கயிலை மலையும், தென்புரத்தில் நல்லூரும் இடமாகக் கொண்டு வீற்றிருப்பவர்.

சிறப்புரை: தென்பால் நல்லூரில் வீற்றிருப்பவர் என்று உணர்த்தியதானது, தென் கயிலாயம் எனவும், சுந்தர கிரி எனவும் சிறப்புறும் திருத்தலப் பெருமையை உரைத்ததாயிற்று.

கூத்தர் – சிவபெருமான்.

946. செஞ்சுடர்ச் சோதிப் பவளத்
திரள்திகழ் முத்தனைய
நஞ்சணி கண்டன்நல் லூர்உறை
நம்பனை நானொருகால்
துஞ்சிடைக் கண்டு கனவின்
தலைத் தொழு தேற்கவன்தான்
நெஞ்சிடை நின்றுஅகலான்பல
காலமும் நின்றனனே.

தெளிவுரை: செஞ்சுடர் ஆகிய சோதியும் பவளத் திரளும் உடைய திருமேனியில் முத்துப் போன்று ஒளிரும் நஞ்சினைக் கண்டத்தில் கொண்டவர், நல்லூரில் உறையும் சிவபெருமான். நான் துயிலும் போது ஒருமுறை அப்பெருமானைக் கனவில் கண்டு தொழுதேன். அவர் என் நெஞ்சிலிருந்து அகலாது நெடிது காலம் நின்றனரே.

சிறப்புரை: இத் திருப்பாட்டானது திருக்கோவையார் திருப்பாட்டு எண் 355, கனவிழந்து உரைத்தலில், மாணிக்கவாசகர் உணர்த்தியவாறு, ஈசனின் தரிசனத்தை விளம்பிற்று.

நெஞ்சில் குடிகொள்ளும் இறைவனைக் கனவின் கண் தரிசித்து மகிழ்தலும், அதன்வழிப் பேரின்ப உணர்வினில் திளைத்தலும் சுட்டுதலாயிற்று.

முத்து – கருப்பு முத்தும் ஆம்.

947. வெண்மதி சூடி விளங்கநின்
றானைவிண் ணோர்கள்தொழ
நண்ணில யத்தொடு பாடல்அ
றாதநல் லூரகத்தே
திண்ணில யம்கொண்டு நின்றான்
திரிபுர மூன்றெரித்தான்
கண்ணுளும் நெஞ்சத்து அகத்தும்
உளகழற் சேவடியே.

தெளிவுரை: ஈசன், வெண்மையான சந்திரனைச் சூடியவர்; விண்ணோர்களால் தொழுது ஏத்தப் படுபவர்; இயலத்துடன் பொருந்திய பாடல்களை எல்லாக் காலங்களிலும் பாடப் பெறும் நல்லூரில், திண்மையுடன் கோயில் கொண்டு விளங்குபவர்; முப்புரங்களை எரித்தவர். அவருடைய சேவடியானது, என் கண்ணிலும் நெஞ்சிலும் உள்ளது.

சிறப்புரை: இத்திருப்பாட்டு, திரிகரணங்களால் ஈசனை ஏத்தி நிற்றலை உணர்த்திற்று. "இலயத்தொடு பாடல் அறாத நல்லூர்" என்பது வாக்கினாலும்; "கண்ணளும் நெஞ்சத்து அகத்தும்" என்பது முறையே காயத்தாலும் மனத்தாலும் செய்யப்படும் வழிபாடு எனவும் காண்க.

நிலயம் – திருக்கோயில்.

948. தேற்றப்படத்திரு நல்லூ
ரகத்தே சிவன்இருந்தால்•
தோற்றப் படச்சென்று கண்டுகொள்
ளார்தொண்டர் துன்மதியால்
ஆற்றிற் கெடுத்துக் குளத்தினில்
தேடிய ஆதரைப் போல்
காற்றிற் கடுத்துல கெல்லாம்
திரிதர்வர் காண்பதற்கே.

தெளிவுரை: சிவபெருமான், எல்லா இடத்திலும் வியாபித்து இருப்பவர்; அப்பெருமான், மெய்ப் பொருளானவர். அவர் நல்லூரில் இருப்பவர். அவரை அவ்விடத்தில் எல்லாத் தொண்டர்களும் காட்சிக்குப் புலப்படுமாறு சென்று தரிசிக்க வேண்டும். அவ்வாறின்றேல் துன்மதியால் ஆற்றில் தேடி அலைந்து குளத்திலும் தேடுதலைப் போலப் பயனற்றதாகும். இது, காற்றினும் மிக வேகமாகத் திரியுமாறு ஆகி னையும் தன்மையதாம்.

சிறப்புரை: ஈசன் மெய்ப் பொருளாக, நல்லூரில் விளங்கி இருக்கத் தொண்டர்கள் தரிசித்து உய்ய வேண்டும் என உபதேசிக்கப் பெற்றது.

சிவன் இருந்தால் - ஈசன் இருத்தலும் அதனை அறியாது நீங்கித் துன்மதியால் திரிதலையும் சுட்டுதலாம். ஆற்றிற் கெடுத்துக் குளத்தில் தேடியது: சுந்தரமூர்த்தி சுவாமிகள், முதுகுன்றத்தில் பன்னீராயிரம் பொன் பெற்று மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூரில் கமலாலயம் என்னும் திருக்குளத்தில் தேடி எடுத்த வரலாறு இங்கு பொருந்தாது என அறிக.

•"சிவன் இருந்தான்" என்பதும் பாடம்

949. நாட்கொண்ட தாமரைப் பூத்தடம்
சூழ்ந்தநல் லூரகத்தே
கீட்கொண்ட கோவணம் காவென்று
சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவி
யொடும்அங்கொர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை உரைக்கும்அன்
றோஇவ் அகலிடமே.

தெளிவுரை: *தாமரை மலரும் பொய்கையுடைய நல்லூரானது, கோவணத்தைப் பாதுகாப்பாயாக என்று சொல்லிப் பின்னர் வன்மை பேசி, அமர்நீதி நாயனாரை மனைவியோடு ஈசன் ஆட்கொண்டு அருளிய திருவருள் பதிந்த இடமன்றோ!*

இத் திருப்பாட்டானது அமர்நீதி நாயனாரின் வரலாற்றைக் கூறும் திருத்தலச் சிறப்பினை உணர்த்திற்று.

வாணிகன் – அமர்நீதி நாயனார்.

950. அறைமல்கு பைங்கழல் ஆர்ப்பநின்
றான்அணி யார்சடைமேல்
நறைமல்கு கொன்றையந்தாருடை
யானுநல் லூரகத்தே
பறைமல்கு பாடலன் ஆடலன்
ஆகிப் பரிசழித்தான்
பிறைமல்கு செஞ்சடை தாழநின்று
ஆடிய பிஞ்ஞகனே.

தெளிவுரை: *ஈசன், காலில் வீரக் கழல் ஒலிக்க, அழகுடைய சடையின் மீது கொன்றை மலர் மாலை விளங்க, நல்லூரில் மேவிப் பாடலும் ஆடலும் நிகழ்த்தி, என்னைத் தன் வயப்படுத்தியவர்.*

அவருடைய, பிறை அணிந்த செஞ்சடை விரிந்து அலைய அவர் திருநடனம் புரியும் பிஞ்ஞகனே.

951. மன்னிய மாமறை யோர்மகிழ்ந்து
ஏத்த மருவியெங்கும்
துன்னிய தொண்டர்கள் இன்னிசை
பாடித் தொழுது நல்லூர்க்
கன்னியர் தாமும் கனவிடை
உன்னிய காதலரை
அன்னியர் அற்றவர் அங்கண
னேஅருள் நல்கு என்பரே.

தெளிவுரை: *மறைவல்ல அந்தணர்கள் போற்றி மகிழ்ந்து ஏத்த, நெருங்கிய திருத்தொண்டர்கள் இனிய இசை யினால் தொழுது வணங்க, நல்லூரில்மேவும் கன்னியர் கனவிலும் மறவாது அங்கணனே அருளாய் என ஈசனை ஏத்தித் திகழ்வார்கள்.*

அன்னியர் அற்றவர் – அந்நியம் இல்லாதவர், நெருக்கமானவர், அன்பர்.

952. திருவமர் தாமரை சீர்வளர்
செங்கழு நீர்கொள் நெய்தல்
குருவமர் கோங்கம் குராமகிழ்
சண்பகம் கொன்றைவன்னி
மருவமர் நீள்கொடி மாட
மலிமறை யோர்கள் நல்லூர்
உருவமர் பாகத்து உமையவள்
பாகனை உள்குதுமே.

தெளிவுரை: *திருமகள் வீற்றிருக்கும் தாமரை, சிறப்புடைய செங்கழுநீர்ப் பூக்கள், நெய்தல், கோங்கம், குரவம், மகிழம், சண்பகம் ஆகிய மலர்கள், பிரணவ புட்பமாகிய கொன்றை மலர், வன்னி ஆகியவை*

விளங்குகின்ற நீண்ட கொடிகளும் உயர்ந்த மாடங்களும் திகழ, அந்தணர்கள் வேதம் மேவி இருப்பது நல்லூர் ஆகும். ஆங்கு அம்மையப்பராக விளங்கும் ஈசனை நினைத்து ஏத்துவோமாக.

953. செல்லேர் கொடியன் சிவன்பெருங்
கோயில் சிவபுரமும்
வல்லேன் புகவு மதில்சூழ்
இலங்கையர் காவலனைக்
கல்லார் முடியொடு தோள்இறச்
செற்ற கழலடி யான்
நல்லூர் இருந்த பிரான் அல்ல
னோநம்மை ஆள்பனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: மிகவும் கொடியவனாகிய நான், சிவ பெருமான் வீற்றிருக்கும் கோயிலும் சிவபுரமும் சார்ந்திலேன். இலங்கையின் வேந்தனாகிய இராவணனுடைய மணிகள் பதித்த முடியும், தோளும் நலியுமாறு செற்ற திருக்கழலையுடைய பெருமான், நல்லூரில் வீற்றிருக்கும் தலைவன் அல்லவா! அவர் நம்மை ஆள்பவரே.

செல் – மேகம் மிகுதியைக் குறித்தது;
கல்லார் முடி – மணிமுடி, அறியாமையையும் சுட்டும்.

98. திருவையாறு

தெளிவுரை: திருப்பதிகம் எண் 3 காண்க.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

954. அந்திவட் டத்திங்கட் கண்ணியன்
ஐயாறு அமர்ந்து வந்தென்
புந்திவட் டத்திடைப் புக்குநின்
றானையும் பொய்என்பனோ
சிந்திவட் டச்சடைக் கற்றை
அலம்பச் சிறிது அலர்ந்த
நந்திவட் டத்தொடு கொன்றை
வளாவிய நம்பனையே.

தெளிவுரை: *மாலை நேரத்தில் தோன்றும் மூன்றாம் பிறைச் சந்திரனைச் சடை முடியில் சூடி, ஐயாறு அமர்ந்த ஈசன், என் புந்தியில் புகுந்து நின்றவர். அவர், சடை முடியில் நந்தியா வட்டமும் கொன்றை மலரும் அணிந்த பெருமான். என் நெஞ்சில் புகுந்த இறைவனைப் பொய் எனல் ஒல்லுமோ?*

955. பாடகக் கால்கழற் கால்பரி
திக்கதி ருக்க அந்தி
நாடகக் கானங்கை முன்செங்கண்
ஏனத்தின் பின்னடைந்த
காடகக் கால்கணங் கைதொழுங்
காலெங் கணாய் நின்றகால்
ஆடகக் காலரி மால்தேர
வல்லன்ஐ யாற்றனவே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *ஈசன், பாடகம் எனப்படும் காலணியும் வீரக்கழலும் அணிந்து, சூரியனின் ஒளி சிந்தும் அந்தியில் உமாதேவியுடன் கானகத்தில் ஏனத்தின் பின் செல்லப் பதினெண் கணங்களும் ஏத்திய பாங்குடையது, அப் பெருமானுடைய திருப்பாதம்*

ஆகும். அத் திருப்பாதம், என் கண்களாகி நின்றன. அத்தகைய பொற்றாளினைத் திருமால் தேர்ந்து அறிய வல்லரோ! அத் திருப்பாதங்கள் ஐயாற்றில் உள்ளனவே.

நங்கை – உமாதேவி; வல்லன் – 1) மால் தேர்ந்தறிய வல்லனா – வல்லவன் அல்ல என்பது குறிப்பு; 2) மால் தேர்ந்து அறிவதற்கு இயலாத வல்லமை உடையர் ஈசன், என்பது குறிப்பு; 3) அல்லன் – திருமால் தேர்ந்து அறிய முடியாது.

99. திருக்கச்சியேகம்பம்

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 7 காண்க.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

956. ஓதுவித் தாய்முன் னறவுரை
காட்டி அமணரொடே
காதுவித் தாய்கட்ட நோய்பிணி
தீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித் தாய்நின் பணிபிழைக்
கிற்புளி யம்வளாரால்
மோதுவிப் பாய்உகப் பாய்முனி
வாய்கச்சி யேகம்பனே.

தெளிவுரை: திருக்கச்சியில் வீற்றிருக்கும் திருவேகம்பப் பெருமானே! தேவரீர், இளமையில் கல்வி புகட்டி ஓதுவித்தருளினீர்; பின்னர் சமணர்களின் தரும நூலைக் காட்டி அவர்களுடன் சேர்வித்து வருந்து மாறு செய்தீர்; சூலை நோய் கொண்டு பிணிக்கப் பெற அதனைத் தீர்த்தருளினீர்; என் நெஞ்சிற் கலந்து புகுந்து நின்றீர்; தேவரீருக்குச் செய்து ஏத்தும் திருத்தொண்டில்

வஞ்சனையாகிய குற்றம் புரியப் புளியும் வளாரினால் மோதுவிப்பீர். குற்றம் செய்பவர்களை முனிந்து மறக் கருணையும், புண்ணியம் செய்பவர்களை உகந்து அறக் கருணையும் புரிபவர் தேவரீரே ஆவீர்.

சிறப்புரை: ஆன்மாக்களுக்குத் தந்தை போல் விளங்கித் தியன புரிந்து பெரும் பிணியில் உழன்று அழுந்தாத வாறு, ஈசன் புரியும் அருட் சிறப்பு, "புளியம் வளாரால் மோது விப்பாய், உகப்பாய் முனிவாய்" என ஓதப் பெறுதலாயிற்று.

புளியம் வளாரால் மோதுவிக்க உண்டாகும் தழும்புகள் புறத்தோலை வருத்தி, அகத்து ஒளியைப் பெருக்கும் என்னும் உலகியல் கூற்றும் ஓர்க.

957. எத்தைக்கொண்டு எத்தகை யேழை
அமணொடு இசைவித்துஎனைக்
கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டு
வித்துஎன்னக் கோகுசெய்தாய்
முத்தின்திரளும் பளிங்கினிற்
சோதியும் மொய்பவளத்
தொத்தினை யேய்க்கும் படியாய்
பொழிற்கச்சி யேகம்பனே.

தெளிவுரை: முத்தின் திரட்சியும், பளிங்கின் சோதியும் பவளத்தின் கொத்தும் அன்ன தன்மையுடைய பொழிற் சிறக்கும் கச்சியில் விளங்கும் திருவேகம்பப் பெருமானே! எக்காரணத்தைக் கொண்டு அமணரோடு என்னை இசைவித்துக் குருடனுக்கு ஊமை வழிகாட்டுவதைப் போன்று என்னைக் இழியுமாறு செய்தீர்?

கொத்தை – குருடு; மூங்கர் – ஊமை;
கோகு – துன்புறும் பொருட்டுச் செல்லுவித்தல்.

958. மெய்யம்பு கோத்த விசயனொடு
அன்றொரு வேடுவனாய்ப்
பொய்யம்பு எய்துஆவம் அருளிச்செய்
தாய்புர மூன்றெரியக்
கையம்புஎய் தாய்நுன் கழலடி
போற்றாக் கயவர் நெஞ்சில்
குய்யம்பெய் தாய்கொடி மாமதில்
சூழ்கச்சி யேகம்பனே.

தெளிவுரை: பெரிய மதில்களும், நீண்ட கொடிகளும் விளங்குகின்ற கச்சியில் வீற்றிருக்கும் திருவேகம்பப் பெருமானே! தேவரீர் மெய்யான அம்புகளைத் தொடுத்துப் போரிட்ட விசயனோடு, வேடுவனாகத் திருவடிவம் தாங்கிப் பொய்க் கணை தொடுத்துப் போர் செய்து, பாசுபதம் முதலான அத்திரங்களை அருளிச் செய்தீர்; முப்புரங்கள் எரிந்து சாம்பலாகு மாறு, ஓர் அம்பு எய்து வீரம் காட்டினீர்; திருவடியைப் போற்றி ஏத்தாத கயவருடைய நெஞ்சில் மறைந்து நிற்பீர்.

சிறப்புரை: ஈசன் முப்புரத்தை எரித்த வீரச் செயல், "புரமூன் றெரியக் கையம்பு எய்தாய்" எனப் போற்றப் பட்டது. இத்தன்மையில், "ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தம் கையில் ஓர் அம்பே முப்புரம் உந்தீ பற" என அருளிச் செய்யப் பெற்ற திருவாசக அமுத மொழியும் காண்க.

மற்றும், கழலடி போற்றாக் கயவர் நெஞ்சில் மறைந்து நிற்றலை, "ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே'' என அருளிச் செய்த மாணிக்க வாசகருடைய திருவாக்கும் ஓர்க.

குய்யம் பெய்தாய் – மறைந்திருத்தல். தோற்றம் கொள்ளாது அறிவதற்கு அரியராதல்; ஆவம் – அத்திரங்கள் அம்புக் கூடு.

959. குறிக்கொண்டு இருந்துசெந் தாமரை
ஆயிரம் வைகல்வைகல்
நெறிப்பட இண்டை புனைகின்ற
மாலை நிறையழிப்பான்
கறைக்கண்ட நீயொரு பூக்குறை
வித்துக்கண் சூல்விப்பதே
பிறைத்துண்ட வார்சடை யாய்பெருங்
காஞ்சியெம் பிஞ்ஞகனே.

தெளிவுரை: காஞ்சியில் வீற்றிருக்கும் ஈசனே! தேவரீர், ஆயிரம் செந்தாமரை மலர் கொண்டு நாள்தோறும் அர்ச்சித்தும், இண்டை மாலை புனைந்து சாற்றியும், வழிபட்ட திருமாலுக்கு ஒரு பூ குறையுமாறு புரிந்து, அவருடைய கண்ணைப் பறித்து அர்ச்சிக்குமாறு செய்பவர்; பிறைச் சந்திரனை நீண்ட சடை முடியில் சூடியவர்.

வைகல் வைகல் – நாள்தோறும்;
பெருங்காஞ்சி – பெருமையுடைய காஞ்சி. பெரிய காஞ்சிபுரம்.

960. உரைக்கும் கழிந்துஇங்கு உணர்வரி
யான்உள்கு வார்வினையைக்
கரைக்கும் எனக்கை தொழுவதல்
லாற்கதி ரோர்கள் எல்லாம்
விரைக்கொள் மலரவன் மால்எண்
வசுக்கள்ஏ காதசர்கள்
இரைக்கும் அமிர்தர்க்கு அறியவொண்
ணான்எங்கள் ஏகம்பனே.

தெளிவுரை: எங்கள் திருவேகம்பப் பெருமான், சொல்லப்படும் உரைகளுக்கும் எண்ணப்படும்

உணர்வுகளுக்கும் அப்பாற்பட்டவர்; வினையைத் தீர்த்தருள் புரிவீராக எனத் தொழுது ஏத்தும் அடியவர் களுக்கு அருள் புரிபவர்; திருமால், பிரமன் மற்றும் பன்னிரு ஆதித்தர்கள், பதினொரு உருத்திரர்கள், அட்ட வசுக்கள், மருத்துவர் இருவர் என வரும் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் அறிய வொண்ணாதவர்.

கதிரோர்கள் – ஆதித்தர்கள் 12; வசுக்கள் – அட்ட வசுக்கள் 8; ஏகாதசர்கள் – உருத்திரர்கள் 11; அமிர்தர் – மருத்துக்கள் 2. ஆக 33 முப்பத்து முக்கோடி தேவர்களைக் குறித்தது.

961. கருவுற்ற நாள்முத லாகஉன்
பாதமே காண்பதற்கு
உருகிற்றேன் உள்ளமும் நானும்
கிடந்துஅலந்து எய்த்துஒழிந்தேன்
திருவொற்றியூரா திருஆல
வாயா திருஆரூரா
ஒருபற்றி லாமையும் கண்டுஇரங்
காய்கச்சி யேகம்பனே.

தெளிவுரை: திருக்கச்சித் திருவேகம்பப் பெருமானே! நான் கருவுற்ற நாள் முதல் தேவரீருடைய திருப்பாதத்தைக் காண்பதற்கு உருகினேன்; உள்ளமும் உயிரும் கிடந்து அலைந்து தேவரீருடைய திருப் பாதத்தைக் காணப் பெறாது துயர் உற்றேன்; திருவொற்றியூர், திருஆலவாய், திருஆரூர் ஆகிய திருத் தலங்களில் வீற்றிருப்பவர் நீவிரே! வேறு எப் பற்றும் இன்றித் தேவரீரையே பற்றி இருக்கும் என்னைக் கண்டு இரக்கம் கொண்டு அருள் புரிவீராக.

962. அரிஅயன் இந்திரன் சந்திர
ஆதித்தர் அமரர்எல்லாம்

உரியநின் கொற்றக் கடைத்தலை
யார் உணங்காக் கிடந்தார்
புரிதரு புன்சடைப் போக
முனிவர் புலம்புகின்றார்
எரிதரு செஞ்சடை யேகம்ப
என்னோ திருக்குறிப்பே.

தெளிவுரை: ஈசனே! திருமால், பிரமன், இந்திரன், சந்திரன், ஆதித்தன் மற்றும் தேவர்கள் எல்லாரும் தேவரீர் வீற்றிருக்கும் வாயிற்புரத்தில் நின்று காண்பதற்கு இயலாது வருந்துதல் ஆயினர். சிவானந்த போகத்தில் விளங்கி மேவும் முனிவர்கள் புலம்பு கின்றனர். எரியும் நெருப்புப் போன்று சிவந்த சடை உடைய திருவேகம்பப் பெருமானே! தேவரீருடைய திருக்குறிப்புதான் யாதோ!

சிறப்புரை: இறைவனைக் காண வேண்டும் என்று தேவர்கள் சூழ்ந்து நிற்றலை இத் திருப்பாட்டு விளம்புதல் ஆயிற்று. திருப்பாட்டு வ.எண் 960 காண்க. இத் தன்மை, "தொழுகையர் அழுகையர் துவள் கையர் ஒருபால் சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால் திருப்பெருந்துறையுறை சிவபெருமானே" என அருளிச் செய்த திருவாசக அமுத மொழியும் நோக்குக.

963. பாம்பரைச் சேர்த்திப் படரும்
சடைமுடிப் பால்வண்ணனே
கூம்பலைச் செய்த கரதலத்து
அன்பர்கள் கூடிப்பன்னாள்
சாம்பரைப் பூசித் தரையிற்
புரண்டுநின் தாள்சரண்என்று
ஏம்பலிப் பார்கட்கு இரங்குகண்
டாய்கச்சி யேகம்பனே.

தெளிவுரை: கச்சியேகம்பப் பெருமானே! பாம்பை அரையில் கட்டிப் படரும் சடை முடியுடையவராகிப் பால் போன்ற திருவெண்ணீறு பூசிய ஈசனே! அன்பர்கள் கூடி நின்று கைகளைக் கூப்பித் தொழுது பலகாலம் நோன்பிருந்து திருவெண்ணீறு பூசித் தேவரீருடைய திருவடியைச் சரணம் என்று உடல் வருத்தம் பாராது மகிழ்ச்சியுடன் ஏத்துபவர்களுக்கு இரங்கி அருளிச் செய்வீர்.

ஏம்பலித்தல் – மெய் வருத்தமும் உணர்வில் இன்பமும் கொள்ளுதல்.

964. ஏன்றுகொண் டாய்என்னை எம்பெரு
மான்இனி அல்லம்என்னில்
சான்றுகண் டாய்இவ் வுலகமெல்
லாம்தனி யேன்என்றெனை
ஊன்றிநின் றார்ஐவர்க்கு ஒற்றிவைத்
தாய்பின்னை யொற்றியெல்லாம்
சோன்றுகொண் டாய்கச்சி யேகம்ப
மேய சுடர்வண்ணனே.

தெளிவுரை: திருக்கச்சி ஏகம்பத்தில் மேவி விளங்கும் சுடர் வண்ணனே! தேவரீர், என்னை ஏற்றுக் கொண்டவர்; நான் உமது அடிமை; அதனை இல்லை என்று யாரும் சொல்ல முடியாதவாறு சான்று காட்டியவர்; நான் தனித்தவன் எனக் கருதி ஐம்புலன் களும் என்னைத் துன்புறுத்திய ஞான்று, தேவரீர் அவர்களை மாயச் செய்தவர்.

965. உந்திநின் றார்உன்றன் ஓலக்கச்
சூளைகள் வாய்தல் பற்றித்
துன்றிநின் றார்தொல்லை வானவர்
ஈட்டம் பணி யறிவான்
வந்துநின் றார்அய னும்திரு
மாலும் மதிற்கச்சி யாய்

இந்தநின் றோம்இனி எங்ஙன
மோவந்து இறைஞ்சுவதே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: மதிலின் பெருமையுடைய திருக் கச்சியேகம்பத்தில் மேவும் பெருமானே! தேவரீருடைய திருமகாமண்டபத்தில் அரம்பையர்கள் உந்திப் போந்து நிற்கவும், தேவர்கள் நெருங்கிச் சூழவும், திருக்கட்டளையை நிறைவேற்றும் பொருட்டுத் திருமாலும் பிரமனும் திருமுன்னர் மேவினர். யாம் இவ்விடத்தில் நின்று கொண்டிருக்கின்றோம். எங்ஙனம் சார்ந்து வந்து இறைஞ்சுவதே!

சிறப்புரை: தேவர்களும் மூவர்களும் ஏனையோரும் சூழ நிற்க, அடியோம் எங்ஙனம் சார்ந்து இறைஞ்சுவது என்பதாம். இது, ஈசனைப் பலரும் ஏத்தி வழிபடும் சிறப்பினை உணர்த்துதலாயிற்று.

உந்தி – முந்தித் தள்ளி; ஓலக்கம் – மண்டபம், திருமுன்னிலை; சூளைகள் – நடனமாதர், அரம்பையர்; இந்த நின்றோம் – வெளியே நிற்றலைக் குறித்தது.

100. திருஇன்னம்பர்

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 72 காண்க.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

966. மன்னு மலைமகள் கையால்
வருடின மாமறைகள்
சொன்ன துறைதொறும் தூப்பொரு
ளாயின தூக்கமலத்து

அன்ன வடிவின அன்புடைத்
தொண்டர்க்கு அமுதரும்பி
இன்னல் களைவன இன்னம்ப
ரான்றன் இணையடியே.

தெளிவுரை: இன்னம்பரில் மேவும் ஈசனின் இணையடிகள், உமாதேவியாரால் வருடப் பெற்றன; வேதங்கள் கூறும் மெய்ப் பொருளாகியன; தாமரை மலர் போன்ற மென்மையுடையன; அன்புடைய தொண்டர்களுக்கு அமுதம் அளித்து இனிமை புரிந்து துயர்களைத் தீர்க்கும் அருள் தன்மையுடையன.

சிறப்புரை: திருத்தொண்டர்களுக்கு வினை வழியாக உண்டாகும் துன்பத்தை இறைவன் தீர்த்தருளும் பெற்றி, "அமுது அரும்பி இன்னல் களைவன இன்னம்பரான்றன் இணையடியே" என ஏத்தப் பெற்றது.

967. பைதற் பிணக்குழைக் காளிவெங்
கோபம்பங் கப்படுப்பான்
செய்தற் கரிய திருநடம்
செய்தன சீர்மறையோன்
உய்தற் பொருட்டு வெங்கூற்றை
உதைத்தன உம்பர்க் கெல்லாம்
எய்தற்கு அரியன இன்னம்ப
ரான்றன் இணையடியே.

தெளிவுரை: இன்னம்பரில் மேவிய இறைவனின் இணையடிகள், கோபம் கொண்டு போட்டியிட்டு நடனம் புரிந்த காளிதேவி, பங்கம் கொள்ளுமாறு நடனம் புரிந்தன; மார்க்கண்டேயர் உய்யும் பொருட்டுக் கொடிய கூற்றுவனை உதைத்து அழித்தன;

அவை, தேவர்களும் நெருங்க முடியாதவாறு அரிய பெருமை உடையன.

சீர்மறையோன் – மார்க்கண்டேயர்.

968. கணங்குநின் றார்கொங்கை யாளுமை
சூடின தூமலரால்
வணங்கிநின் றும்பர்கள் வாழ்த்தின
மன்னு மறைகள்தம்மில்
பிணங்கிநின்று இன்னன என்றுஅறி
யாதன பேய்கணத்தோடு
இணங்கிநின்று ஆடின இன்னம்ப
ரான்றன் இணையடியே.

தெளிவுரை: இன்னம்பரில் மேவும் இறைவனின் இணையடிகளானவை, உமாதேவியாரால் ஏத்தப் பெறுவன. தேவர்களால் தூமலர் கொண்டு தூவிப் போற்றி அருச்சிகப்படுவன! வேதங்களால் தேடியும் அறியப் படாதன; பேய்க் கணங்களோடு இணங்கி நின்று ஆடுவன.

969. ஆறொன் றியசம யங்களின்
அவ்வவர்க்கு அப்பொருள்கள்
வேறொன்றி லாதன விண்ணோர்
மதிப்பன மிக்குவமன்
மாறொன்றி லாதன மண்ணொடு
விண்ணகம் மாய்ந்திடினும்
ஈறொன்றி லாதன இன்னம்ப
ரான்றன் இணையடியே.

தெளிவுரை: இன்னம்பரில் மேவும் இறைவனின் இணையடிகள், ஆறு சமய நெறிகளுக்கும் அவ்வப் பொருள்களின் நெறியாகி, விண்ணோர்களால் மதித்து ஏத்துவனவாகி, விண்ணுலகமும் மண்ணுலகமும்

மாய்ந்தாலும், எக்காலத்திலும் அழியாது நிலைத்து விளங்கும் சிறப்புடையன.

ஆறு ஒன்றிய சமயம் - திருப்பாட்டு எண் 136, 298, 329, 448 காண்க. "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்" என்பது சித்தியார் வாக்கு.

மிக்குவமன் – மிக்கு உவமன்; உவமன் – உவமை காட்டுதல்.

970. அரக்கர்தம் முப்புரம் அம்பொன்றி
னாலடல் அங்கியின் வாய்க்
கரக்கமுன் வைதிகத் தேர்மிசை
நின்றன கட்டுருவம்
பரக்கவெங் கானிடை வேடுரு
வாயின பல்பதிதோறு
இரக்க நடந்தன இன்னம்ப
ரான்றன் இணையடியே.

தெளிவுரை: இன்னம்பரில் மேவும் ஈசனின் இணையடிகள், முப்புரத்து அசுரர்களை அம்பு தொடுத்து எரித்துச் சாம்பலாக்கும் தன்மையில் வேதக் குதிரைகளைப் பூட்டிய தேர்மிசை நின்றன; அர்ச்சுனருக்கு அருள் செய்யும் பொருட்டுக் காட்டின்கண் வேடுவ வடிவம் தாங்கிச் சென்றன; பிரம கபாலம் ஏந்திப் பல ஊர்கள் திரிந்து, பலி ஏற்பதற்காக நடந்தன.

வைதிகத்தேர் – வேதத்தைக் குதிரைகளாகப் பூட்டிய தேர்.

971. கீண்டும் கிளர்ந்தும்பொற் கேழல்முன்
தேடின கேடுபடா
ஆண்டும் பலபல ஊழியும்
ஆயின ஆரணத்தின்
வேண்டும் பொருள்கள் விளங்கநின்று
ஆடின மேவு சிலம்பு

ஈண்டும் கழலின இன்னம்ப
ரான்றன் இணையடியே.

தெளிவுரை: இன்னம்பரில் மேவும் இறைவனின் இணையடிகள், திருமால் பன்றி வடிவம் தாங்கிப் பூமியைக் குடைந்து சென்று தேடியும் காலம் பல ஊழிகள் சென்றும் காண முடியாதபடி ஆயின; வேதப் பொருள்களை வேண்டுவார் தன்மையில் அவ்வவர்க்கு உரியவாறு திருநடனம் புரிவன; சிலம்பும் கழலும் கொண்டு மேவுவன.

ஆரணம் – வேதம்; கேழல் – ஏனம், பன்றி திருமால், ஏனமானதால் பொற்கேழல் எனச் சிறப்பிக்கப்பட்டது.

972. போற்றும் தகையன பொல்லா
முயலகன் கோபப் புன்மை
ஆற்றும் தகையன ஆறு
சமயத்து அவரவரைத்
தேற்றும் தகையன தேறிய
தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றும் தகையன இன்னம்ப
ரான்றன் இணையடியே.

தெளிவுரை: இன்னம்பர் என்னும் தலத்தில் மேவும் ஈசனின் இணையடிகள், யாவராலும் போற்றி ஏத்தப்படுவன; சினந்து வந்த புன்மையனாகிய முயலகன் மீது நின்று நடனம் புரிந்து விளங்குவன; ஆறு சமயத்தினரைத் தேற்றி உய்வித்தருள்வன; பக்குவம் பெற்ற ஆன்மாக்களாகிய சீவன்முத்தர் களைச் – சிவநெறியில் ஒழுகும் திருத் தொண்டர் களைச் செந்நெறிக்கே ஆக்கி, மும்மல நீக்கம் செய்து முத்தி தருவன.

973. பயம்புன்மை சேர்தரு பாவம்
தவிர்ப்பன பார்ப்பதிதன்
குயம்பொன்மை மாமல ராகக்
குலாவின கூடவொண்ணாச்
சயம்புஎன் றேதகு தாணுஎன்
றேசதுர் வேதங்கள் நின்று
இயம்பும் கழலின இன்னம்ப
ரான்றன் இணையடியே.

தெளிவுரை: இன்னம்பரில் மேவும் ஈசனின் இணை யடிகள், மன்னுயிர்களின் பயம், புன்மையைத் தரும் பாவங்கள் ஆகியனவற்றைத் தவிர்த்து ஆள்வன; உமாதேவியின் திருமேனியெனத் திகழ்வன; சுயம்பு என்றும் ஈசன் என்றும் நான்கு வேதங்களலும் ஏத்தப் பெறுவன.

சிறப்புரை: இத் திருத்தலத்தில் மேவும் ஈசனின் திருநாமமாகிய தான் தோன்றீசர் என்பது, "சயம்பு என்றேதகு தாணு" எனச் சுட்டப் பெறுதல் ஆயிற்று.

சயம்பு – சுயம்பு, தானே தோன்றுதல்; தாணு – சிவபெருமான்.

974. அயனொடு மாலிந் திரன் சந்த்ரா
தித்தர் அமரர் எலாம்
சயசய என்றுமுப் போதும்
பணிவன தண்கடல்சூழ்
வியனில முற்றுக்கும் விண்ணுக்கும்
நாகர் வியனகர்க்கும்
இயல்பரம் ஆவனஇன்னம்ப
ரான்றன் இணையடியே.

தெளிவுரை: இன்னம்பரில் வீற்றிருக்கும் ஈசனின் இணையடிகள், பிரமன், திருமால், இந்திரன், சந்திரன், ஆதித்தர், தேவர்கள் என யாவராலும் சயசய என்று

முப்போதுகளாகிய காலை, நண்பகல் (உச்சி), மாலை ஆகிய காலங்களில் போற்றி வணங்கப்படுவன; விண்ணுலகம், மண்ணுலகம், பாதாள உலகம் ஆகிய வற்றுக்கும் இயல் பரம் ஆவன.

சிறப்புரை: தேவர் முதலானோர் ஈசனை ஏத்திப் போற்றும் சிறப்பு, திருப்பாட்டு எண் *962* மற்றும் *965* ஆகியவற்றிலும் காண்க.

வியனிலம் – மண்ணுலகம்.

975. தருக்கிய தக்கன்றன் வேள்வி
தகர்த்தன தாமரைப்போது
உருக்கிய செம்பொன் உவமன்இ
லாதன ஒண்கயிலை
நெருக்கிய வாளரக் கன்தலை
பத்து நெரித்தவன்றன்
இருக்கியல் பாயின இன்னம்ப
ரான்றன் இணையடியே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இன்னம்பர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் ஈசனின் இணையடிகள், தருக்கி நின்ற தக்கனுடைய வேள்வியைத் தகர்த்தன; உவமையாகக் கூறுவதற்குத் தாமரை மலர் மற்றும் உருக்கிய செம்பொன் என்றாலும் இணையாகாதன; இராவணனுடைய பத்துத் தலைகளையும் நெரித்தன; அவன் ஏத்தி ஓதிய வேதங்களாக மேவுவன.

உவமன் – உவமை.

101. திருவாரூர்

தல விளக்கம்: *திருப்பதிகம் எண் 4 காண்க.*

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

976. குலம்பலம் பாவரு குண்டர்முன்
னேநமக்கு உண்டு கொலோ
அலம்பலம் பாவரு தண்புனல்
ஆரூர் அவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி
யான்திரு மூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

தெளிவுரை: *ஆள் பலம் உடைய மூர்க்கரின் முன்பாக நமக்குப் பலம் உண்டுகொல்! நீரின் ஒலியானது விளங்கிப் பெருகி வளம் பெருகும் ஆரூரில், பரந்த சடையுடைய ஈசன், சிலம்பின் ஒலி பரவத் திருவடியைத் தூக்கி ஆடுகின்ற பெருமான் ஆவார். அவர் வீற்றிருக்கின்ற திருமூலத்தானத்தில் திருத் தொண்டர்கள் பக்தி பூண்டு கசிந்துருகிக் கண்ணீர் பெருகி நிற்க, நாம் அத்தகையோருக்குத் தொண்டராவது புண்ணியம். அப்புண்ணியம் நமக்கு உண்டோ!*

இத்தகைய புண்ணியமானது மூர்க்கரின் ஆள் பலத்தை விட விஞ்சியது என்பது குறிப்பால் உணர்த்துதலாயிற்று.

புலம்பல் அம்பாவரு – பக்திப் பெருக்கால் கண்ணீர் கசிந்து பெருக வரும் ஆனந்தக் கண்ணீர்; அம்பு – நீர்; மூலட்டானம் – மூலத்தானம்.

977. மற்றிடம் இன்றி மனைதுறந்து
அல்லுணா வல்லமணர்
சொற்றிடம் என்று துரிசுபட்
டேனுக்கும் உண்டு கொலோ
விற்றிடம் வாங்கி விசயனொடு
அன்றொரு வேடுவனாய்ப்
புற்றிடங் கொண்டான்றன் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

தெளிவுரை: இருப்பிடம் இன்றி, மனையைத் துறந்து இரவில் உணவு கொள்ளாத வன்மையுடைய அமணர்களுடைய சொற்களை உறுதி பயப்பனவாகக் கருதி குற்றத்தினை அடைந்தேன். அத்தகைய அடியேனுக்கு, வேடுவ வடிவம் தாங்கி விசயனோடு போரிட்ட புற்றிடங் கொண்ட பெருமானுடைய திருத் தொண்டருக்குத் தொண்டராகும் புண்ணியம் உண்டு கொல்.

சிறப்புரை: இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஈசனின் – திருமூலட்டான நாதரின் திருப்பெயராகிய புற்றிடம் கொண்டார் என்பது இவண் சுட்டப் பெறுதல் ஆயிற்று.

துரிசு – குற்றம்; விசயன் – அருச்சுனன்;
விற்றிடம் – வில் திடம்; அல் – இரவு.

978. ஒருவடி வின்றிநின்று உண்குண்டர்
முன்னமக்கு உண்டுகொலோ
செருவடி வெஞ்சிலை யாற்புரம்
அட்டவன் சென்றடையாத்
திருவுடை யான்திரு வாரூர்த்
திருமூலட் டானன் செங்கண்

பொருவிடை யானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

தெளிவுரை: மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரங்களை எரித்தவர், சிவபெருமான். அவர், சென்றடையாத் திருவுடையவர்; திருவாரூர்த் திருமூலத்தானத்தில் விளங்குபவர்; போர்த் தன்மை உடைய செங்கண் மிளிரும் இடபத்தை வாகனமாக உடையவர். அப்பெருமானின் அடித்தொண்டருக்குத் தொண்டராகும் புண்ணியம் நமக்கு உண்டுகொல்!

சிறப்புரை: பிறரிடம் நாடிப் பெறாது தமது இயல்பினால் எல்லாச் செல்வமும் உடையவராக விளங்கும் ஈசனின் சிறப்பானது, "சென்றடையாத் திருவுடையான்" எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில், "சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிரும்மே" (முதல் திருமுறை 98; திருச்சிராப்பள்ளி திருப்பாட்டு; வ.எண் 1058) எனத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்தவாறும் காண்க.

979. மாசினை யேறிய மேனியர்
வன்கண்ணர் மொண்ணரைவிட்டு
ஈசனை யேநினைந்து ஏசறு
வேனுக்கும் உண்டுகொலோ
தேசனை ஆரூர்த் திருமூலட்
டானனைச் சிந்தைசெய்து
பூசனைப் பூசுரர் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

தெளிவுரை: மாசுடையவரும் கொடிய தன்மையுடைய வரும் ஆகிய சமணர் தம் நெறியினின்று விலகி ஈசனையே நினைந்து விரும்புகின்றேன். ஆரூர்த்

திருமூலத்தானத்தில் வீற்றிருக்கும் சோதியைப் பூசனை செய்யும் அந்தணர்களின் தொண்டர்களுக்குத் தொண்டராகும் புண்ணியமானது, அடியேனுக்கும் உண்டு கொல்!

பூசுரர் – அந்தணர், பூவுலகத் தேவர்.

980. அருந்தும் பொழுதுஉரை யாடா
அமணர் திறம்அகன்று
வருந்தி நினைந்துஅர னேயென்று
வாழ்த்துவேற்கு உண்டுகொலோ
திருந்திய மாமதில் ஆரூர்த்
திருமூலட் டானனுக்குப்
பொருந்தும் தவமுடைத் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

தெளிவுரை: உணவு அருந்தும் பொழுது உரையாடல் செய்யாத இயல்பினையுடைய அமணர்களின் கோட்பாட்டிலிருந்து விலகி ஈசன் திருக்கழலை நினைந்து அரனே என்று வாழ்த்தி ஏத்துகின்றேன். ஆரூரில் மேவும் திருமூலட்டானர்பால் மனத்தை அடிமையாக்கி மேவும் தவத்தினர்க்குத் தொண்டராகும் புண்ணியமானது அடியேனுக்கும் உண்டு கொல்!

981. வீங்கிய தோள்களும் தாள்களு
மாய்நின்று வெற்றரையே
மூங்கைகள் போல்உண்ணு மூடர்முன்
னேநமக்கு உண்டுகொலோ
தேங்கமழ் சோலைத்தென் னாரூர்த்
திருமூலட் டானன்செய்ய
பூங்கழ லானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

தெளிவுரை: *மிக்க பருமை யுடையவர்களாய் உண்ணும் போது உரை செய்யாது மேவும் அமணர்பால் நான் முன் இருந்திருக்க, ஆரூர்த் திருமூலட்டானரின் செம்மை மிகும் பூங்கழலைத் தொழும் தொண்டர்க்குத் தொண்டராகும் புண்ணியம் உண்டு கொல்!*

மூங்கை – உண்ணும் போது உரையாடல் செய்யாத தன்மை ஊமை எனச் சுட்டியதாயிற்று.

982. பண்ணிய சாத்திரப் பேய்கள்
பறிதலைக் குண்டரைவிட்டு
எண்ணில் புகழீசன் றன்னருள்
பெற்றேற்கும் உண்டுகொலோ
திண்ணிய மாமதில் ஆரூர்த்
திருமூலட் டானன்எங்கள்
புண்ணியன் றன்னடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

தெளிவுரை: *தாமே உண்டாக்கி வகுத்துக் கொண்ட சாத்திரங்களைக் கொள்கின்ற அமணரை விட்டு விலகி வந்து எண்ணிற்கு அடங்காத பெரும் புகழுடன் விளங்கும் ஈசனின் இனிய அருளைப் பெற்றனன். திண்மையான மதில்களையுடைய ஆரூர்த் திருமூலட்டானர் எங்கள் புண்ணிய மூர்த்தி ஆவார். அப்பெருமானின் திருவடியை ஏத்தும் தொண்டர்க்குத் தொண்டராகும் புண்ணியம் அடியேனுக்கு உண்டு கொல்.*

புண்ணியன் – புண்ணியங்களை வழங்கும் பிரான்.

983. கரப்பர்கள் மெய்யைத் தலைபறிக்
கச்சுகம் என்னும் குண்டர்
உரைப்பன கேளாதுஇங்கு உய்யப்போந்
தேனுக்கும் உண்டுகொலோ

திருப்பொலி யாரூர்த் திருமூலட்
டானன் திருக்கயிலைப்
பொருப்பன் விருப்பவர் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

தெளிவுரை: சமணர் உரைத்த சொற்களை விடுத்து இங்கு உய்வதற்காக வந்தேன். செல்வம் திகழும் ஆரூர்த் திருமூலத்தானத்தில் மேவும் இறைவன், திருக்கயிலை மலையில் விளங்குபவர். அப் பெருமானை விருப்பம் கொண்டவராய் ஏத்தும் தொண்டர்க்குத் தொண்டராகும் புண்ணியம் அடியேனுக்கும் உண்டு கொல்!

திருப்பொலி – திருவருள் பொலிவு.

984. கையிலிடு சோறு நின்றுண்ணும்
காதல் அமணரை விட்டு
உய்யுநெறி கண்டிங்கு உய்யப்போந்
தேனுக்கும் உண்டுகொலோ
ஐயன் அணிவயல் ஆரூர்த்
திருமூலட் டானனுக்குப்
பொய்யன் பிலாஅடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

தெளிவுரை: நின்று கொண்டு உணவைக் கொள்வதில் விருப்பம் உடைய அமணரை விட்டு விலகி, உய்யும் நெறியைக் கண்டு இத் தலத்தில் உய்வதற்காகப் போந்தேன். தலைவனாகிய ஆரூர் மூலட்டானத்தில் மேவும் ஈசனுக்குப் பொய்யன்பிலாத திருவடித் தொண்டர்க்குத் தொண்டராகும் புண்ணியம் அடியேனுக்கும் உண்டுகொல்!

பொய்யன்பிலா அடித் தொண்டர் – மனம் வாக்கு காயம் ஆகிய முக்கரணங்களாலும் இறைவனை வணங்கி ஏத்தும் திருத்தொண்டர்கள்; அணுக்கத் தொண்டு செய்பவர்கள்.

985. குற்றமுடைய அமணர்
திறமது கையகன்றிட்டு
உற்றகருமம் செய்து உய்யப்போந்
தேனுக்கும் உண்டுகொலோ
மற்பொலி தோளான் இராவணன்
றன்வலி வாட்டுவித்த
பொற்கழ லான்அடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: குற்றம் உடைய அமணர்தம் கொள்கையை நீத்து உற்ற பணி செய்து உய்யப் போந்தனன். இராவணனுடைய வலிமையை வதைத்த பொற்கழல் உடைய ஈசனின் அடித் தொண்டர்க்குத் தொண்டராகும் புண்ணியம், அடியேனுக்கும் உண்டுகொல்!

சிறப்புரை: சமண சமயத்திலிருந்து விலகிய திருநாவுக்கரசர், நீற்றுலை, நஞ்சூட்டு, யானை இடறல், கல்லில் கட்டிக் கடலில் எறிதல் ஆகிய இடர்களிலிருந்து மீண்டு வந்ததை யறிந்து, ஆரூர்ப் பெருமக்கள் எதிர் சென்று வரவேற்க, அடியேனுக்கும் இத்தகைய புண்ணியம் உண்டுகொல் என அருளிச் செய்தது, இத்திருப்பதிகம். தடுத்தாட் கொள்ளப்பட்ட சுந்தரர் தலங்கள் பல சென்று வணங்க ஈசன், "ஆரூருக்கு வா" எனத் தெரிவித்தார். ஆரூர் சென்ற தம்பிரான் தோழரைத் திருத்தொண்டர்கள் வரவேற்க, அவர்களை நோக்கி, "அரையன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்!" என வினவிப் பாடிய திருப்பதிகம் இத்தன்மையாம் எனக் காண்க.

பொற்கழ்ல் – நின்மலக்கழல், தூய திருக்கழல்.

102. திருவாரூர்

தல விளக்கம்: *திருப்பதிகம் எண் 4 காண்க.*

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

986. வேம்பினைப் பேசி விடக்கினை
ஓம்பி வினைபெருக்கித்
தூம்பினைத் தூர்த்தங்கோர் சுற்றம்
துணையென்று இருத்திர்தொண்டீர்
ஆம்பலம் பூம்பொய்கை ஆரூர்
அமர்ந்தான் அடிநிழற்கீழ்ச்
சாம்பலைப் பூசிச் சலமின்றித்
தொண்டுபட்டு உய்ம்மின்களே.

தெளிவுரை: *உயிர்க்கு நன்மை பயவாத கைப்புச் சொற்களைக் கூறி, ஊன் பெருக்கும் இத்தேகத்தைப் பாதுகாத்துப் பிறவிக்குக் காரணமாகும் வினையைப் பெருக்கி, வயிற்றினை வளர்த்து, நமக்குச் சுற்றமே துணை என்று கருதி இருக்கும் மாந்தர்காள்! தொண்டு பேணுவீர். ஆம்பல் பூக்களும் மலர்ப் பொய்கையும் உடைய ஆரூர் மேவிய ஈசனின் திருவடிக்கீழ் இருந்து, திருவெண்ணீறு அணிந்து, மனம் அசையாது ஒரு மித்து நின்று, தொண்டு புரிந்து, ஏத்தி உய்வீராக.*

வேம்பு – கைக்கும் சொற்கள், பயனிலாச் சொல், பேசி வெறுப்படைதல்; விடக்கு – ஊன், உடம்பைக் குறித்தது; தூம்பு – வயிறு; சாம்பல் – திருவெண்ணீறு.

987. ஆராய்ந்து அடித்தொண்டர் ஆணிப்பொன்
ஆரூர் அகத்தடக்கிப்

பாரூர் பரிப்பந்தம் பங்குனி
　　உத்திரம் பாற்படுத்தான்
நாரூர் நறுமலர் நாதன்
　　அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக்கு இட்டமை
　　நீள்நாடு அறியுமன்றே.

தெளிவுரை: *மாற்றறியா ஆணிப் பொன் போன்ற உறுதியும், தூய்மையும், மேன்மையும், பெருமையும் கொண்டு மேவும் தொண்டனார், ஆரூர்ப் பெருமானை அகத்தில் இருத்திய நம்பி நந்தி அடிகள் ஆவார். அவர் தண்ணீரால் விளக்கிட்டுத் திருப்பணி செய்தவர். பாரில் மேவும் ஊர்கள் யாவும் நன்கு மலர இணைக்கும் அன்பின் நார் போன்று விளங்கும் இத்தலமாகிய ஆரூரில் நடைபெறும் பங்குனி உத்திரப் பெருவிழா மிக்க சிறப்புடைத்தாகும்.*

சிறப்புரை: *இத் திருப்பாட்டானது, ஆரூர்ப் பெருமானின் பங்குனி உத்திரப் பெருவிழாச் சிறப்பினை நன்கு ஓதிற்று. இத்தன்மையில், கபாலீச் சரத்தில் நடைபெறும் பங்குனி உத்திரப் பெருவிழாவின் சிறப்பினைத் திருஞானசம்பந்தர், "மலிவிழா வீதி மட நல்லார் மாமயிலைக் கலிவிழா கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்; பலிவிழாப் பாடல் செய் பங்குனி உத்திர நாள் ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய்!" (இரண்டாம் திருமுறை; திருப்பாட்டு வ.எண் 508) என அருளிச் செய்தவாறும் காண்க.*

நமிநந்தி அடிகள் தண்ணீரால் விளக்கு எரித்த அற்புதமானது, இத் திருப்பாட்டில் ஏத்தி உரைக்கப் பெற்றது. இதனைச் சேக்கிழார் சுவாமிகள், "ஏதம்

நினைந்த அருகந்தர் எதிரே முதிரும் களிப்பினுடன் நாதர் அருளால் திருவிளக்கு நீரால் எரித்தார் நாடறிய" (நமிநந்தியடிகள் நாயனார் புராணம்; பாட்டு 14) என அருளிச் செய்தவாறும் காண்க.

நம்பி நந்தி – நமிநந்தியடிகள் நாயனார்.

988. பூம்படி மக்கலம் பொற்படி
மக்கலம் என்றிவற்றால்
ஆம்படி மக்கலம் ஆகிலும்
ஆரூர் இனிது அமர்ந்தார்
தாம்படி மக்கலம் வேண்டுவ
ரேற்றமிழ் மாலைகளால்
நாம்படி மக்கலம் செய்து
தொழுதும் மடநெஞ்சமே.

தெளிவுரை: நெஞ்சமே! ஆரூர்ப் பெருமான், திருவடிவத்தினைப் பூவாலும் பொன்னாலும் எழில் அலங்காரம் செய்து காண இனிது வீற்றிருப்பவர். அப்பெருமான் திருக்குறிப்பால் உணர்த்தி அருள் புரிவாராயின், தமிழ்ப் பாடல்களால் நாம் படிமம் செய்து ஏத்துதும்.

படிமக்கலம் – ஈசன் திருவ்டிவத்தை வடித்து அலங்காரம் செய்தல். எழில் அலங்கார வடிவம் அமைத்தல்.

989. துடிக்கின்ற பாம்பரை யார்த்துத்
துளங்கா மதியணிந்து
முடித்தொண்டர் ஆகிமுனிவர்
பணிசெய்வ தேயுமன்றிப்
பொடிக்கொண்டு பூசிப் புகும்தொண்டர்
பாதம் பொறுத்தபொற்பால்
அடித்தொண்டன் நந்தியென் பானுளன்
ஆரூர் அமுதினுக்கே.

தெளிவுரை: பாம்பை அரையில் இறுகக் கட்டி, அசைவில்லாத சந்திரனை மூடிக்கொண்டு மேவும் சிவசொரூபம் உடைய தலையாய தொண்டர்களும் முனிவர்களும் ஈசற்குப் பணி செய்யவும், திருநீறு பூசிய திருத்தொண்டர்கள் திருப்பாதம் தாங்கிப் புகழ் விளங்கி மேவவும், அணுக்கத் தொண்டராம் நமிநந்தியடிகள் என்பவர் தொண்டாற்றவும் உள்ளனர். அத்தகைய பேரருள் மேயபிரான் ஆரூரின் அமுதம் எனத் திகழும் பரமரே.

சிறப்புரை: ஈசனுக்குத் திருத்தொண்டு செய்பவர்களின் பெருமையானது இவண் ஏத்தப் பெற்றது. முடித் தொண்டர் என்று ஏத்தப் பெறும் உருத்திர கணத்தினர், முனிவர் முதலானவர்களின் தன்மையானது திருப்பாட்டு வ.எண் 190இல் உரைத்தருளியவாறும் காண்க.

990. கரும்பு பிடித்தவர் காயப்பட்
டார்அங்கொர் கோடலியால்
இரும்பு பிடித்தவர் இன்புறப்
பட்டார் இவர்கள் நிற்க
அரும்பவிழ் தண்பொழில் சூழ்அணி
ஆரூர் அமர்ந்த பெம்மான்
விரும்பு மனத்தினை யாதென்று
நானுன்னை வேண்டுவதே.

தெளிவுரை: கரும்பாகிய சுவையுள்ளதைக் கொண்டு விளங்கும் மன்மதனை எரித்து, இரும்பாகிய கோடலியைக் கொண்ட சண்டேசுவரருக்கு இன்புறச் செய்த பெருமான், ஈசன். அவர், தண்மை விளங்கும் பொழில் சூழ்ந்த ஆரூரில் வீற்றிருப்பவர். ஈசனே! தேவரீரை விரும்பும் மனத்தினை உடையான், யாது வேண்டுவதே!

கரும்பு பிடித்தவர் – மன்மதன்;
இரும்பு பிடித்தவர் – சண்டேஸ்வர நாயனார்.

991. கொடிகொள் விதானம் கவரி
பறைசங்கம் கைவிளக்கோடு
இடிவில் பெருஞ்செல்வம் எய்துவர்
எய்தியும் ஊனமுல்லா
அடிகளும் ஆரூர் அகத்தினர்
ஆயினும் அந்தவளப்
பொடிகொண்டு அணிவார்க்கு இருளொக்கும்
நந்தி புறப்படிலே.

தெளிவுரை: திருவாரூரில், கொடி, விதானம், கவரி, பறை, சங்கு முழக்கம், கை விளக்கு, அழிதலும் குறைதலும் இல்லாத அளவற்ற பெருஞ் செல்வம் ஆகியன யாவும் எய்தி, ஊனம் இல்லாத திருத் தொண்டர்கள் உள்ளனர். ஆயினும், அத்தகைய நீறுஅணியும் திருத்தொண்டர்கள் நமிநந்தி அடிகளின் தரிசனம் காணாராயின் இருளைக் கண்டது போல் அயர்வு கொள்வர்.

இடிவில் – இடிவுஇல் – அழிதல் இல்லாத; அந்தவளப் பொடி – அம்தவளப் பொடி, திருவெண்ணீறு; நந்தி – நமிநந்தி அடிகள்.

992. சங்கொலிப் பித்திடு மின்சிறு
காலைத் தட அழலில்
குங்குலி யப்புகைக் கூட்டென்றும்
காட்டி இருபதுதோள்
அங்குலம் வைத்தவன் செங்குரு
திப்புன லோடஅஞ்ஞான்று
அங்குலி வைத்தான் அடித்தா
மரைஎன்னை ஆண்டனவே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருத்தொண்டர்களே! சங்குகளை ஒலித்து முழக்குவீர்! குங்குலியப் புகை காட்டி ஏத்துவீர்! இருபது தோளுடைய இராவணன் நெரியுமாறு விரலினால் மலையை ஊன்றி, இரத்தப் பெருக்கினைக் செய்தவர், ஈசன். அப்பெருமானுடைய திருவடித் தாமரையானது என்னை ஆட்கொண்டன.

சிறப்புரை: தவறு செய்த இராவணன், ஈசனை ஏத்தி வழிபட்டு நின்று அருள் பெற்ற பாங்கானது, ஈசனை ஏத்தும் உயிர்க்கு, நற்கதி உண்டாகுமாறு புரியும் திருவருள் ஆற்றலையும் கருணையையும் உணர்த்துவ தாயிற்று.

103. திருநாகைக்காரோணம்

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 71 காண்க.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

993. வடிவுடை மாமலை மங்கைபங்
காகங்கை வார்சடை யாய்
கடிகமழ் சோலை சுலவு
கடல்நாகைக் காரோணனே
பிடிமத வாரணம் பேணும்
துரகநிற் கப்பெரிய
இடிகுரல் வெள்ளெருது ஏறும்இது
என்னைகொல் எம்இறையே.

தெளிவுரை: அழகும் பெருமையும் உடைய இமாசலத்தின் மங்கையாகிய உமாதேவியாரைத் திருமேனியில் பாகமாகக் கொண்டு மேவும் ஈசனே!

கங்கையை நீண்ட சடையில் கொண்டு விளங்கும் பெருமானே! நறுமணம் கமழும் சோலை விளங்கும் கடல் நாகைக் காரோணத்தில் மேவும் பரமனே! போற்றப்படுகின்ற யானையும் குதிரையும் விடுத்துத் தேவரீர், இடியோசை போன்று குரல் எழுப்பும் வெள்ளை இடபத்தை வாகனமாகக் கொண்டு ஏறுகின்றீர். எம் இறைவனே! இது என்கொல்!

சிறப்புரை: யானையும் குதிரையும் வாகனமாகக் கொள்ளத் தகுவன என்பது நவிலப் பெற்றது. அங்ஙனம் இருக்க, இடபத்தை வாகனமாகக் கொண்டு விளங்கும் தனித் தன்மையானது, இவண் சுட்டப் பெற்றது. இத் தன்மையில், "கடகரியும் பரிமாவும் தேரும் உகந்து ஏறாதே இடபம் உகந்து ஏறியவாறு எனக்கறிய இயம்பேடீ" (திருச்சாழல்) என அருளிச் செய்த திருவாசக அமுதமொழியும் காண்க. (கரி – யானை; பரி – குதிரை).

காரோணம் – கோயிலின் பெயர்; பிடி – பெண் யானை; மதவாரணம் – மதகளிறு; துரகம் – குதிரை.

994. கற்றார் பயில்கடல் நாகைக்கா
ரோணத்துஎம் கண்ணுதலே
வில்தாங் கியகரம் வேல்நெடுங்
கண்ணி வியன்கரமே
நற்றாள் நெடுஞ்சிலை நாண்வலித்
தகர நின்கரமே
செற்றார் புரம்செற்ற சேவகம்
என்னைகொல் செப்புமினே.

தெளிவுரை: வேதங்களைக் கற்ற மேன்மக்கள் பயிலும் கடல் சூழ்ந்த நாகையில் திகழும் காரோணத்தில் வீற்றிருக்கும் எம் கண்ணுதலே! தேவரீர், பகைமை

கொண்ட முப்புரங்களைக் கணை தொடுத்து எரித்து அழித்த போது, வில்லைத் தாங்கிப் பிடித்த திருக்கர மானது, இடப்பாகத்தில் வேல் போன்ற நெடிய விழி யுடைய உமாதேவியின் திருக்கரமே. நெடுமையான வில்லைத் திருப்பாதத்தால் அழுத்தி, நாண் வலித்துத் தொடுத்த கரமானது, தேவரீருடைய திருக்கரம். தேவரீருடைய அருளிச் செயலின் கருணையை, அளவிட்டு உரைப்பதற்கு அரியதே!

சிறப்புரை: உமாதேவியார் இடப்பால் இருந்து விளங்கும் சிறப்பும், ஈசன் இடக்கரத்தால் வில்லைத் தாங்கிய சிறப்பும் ஒருமிக்கச் செய்து, அம்பிகைக்கு ஏற்றிச் சொல்லும் வாயிலாக, "வில்தாங்கிய கரம் வேல் நெடுங் கண்ணி வியன் கரமே" என உரைக்கப் பெற்றது.

கற்றார் – வேதம் கற்ற அந்தணர்கள்;
நெடுஞ்சிலை – மேரு மலை வில்.

995. தூமென் மலர்க்கணை கோத்துத்தீ
வேள்வி தொழிற் படுத்த
காமன் பொடிபடக் காய்ந்த
கடல்நாகைக் காரோண நின்
நாமம் பரவி நமச்சிவாய
என்னும் அஞ்செழுத்தும்
சாம்அன்று உரைக்கத் தருதிகண்
டாய்எங்கள் சங்கரனே.

தெளிவுரை: தூய்மையான மென்மலர்களைக் கணையாகத் தொடுத்து எய்த மன்மதனை எரியுமாறு செய்து, சாம்பலாக்கிய ஈசனே! கடல் சூழ்ந்த நாகையில் மேவும் காரோணத்தில் வீற்றிருக்கும் பெருமானே! தேவரீருடைய திருநாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை, உயிரானது

பிரிகின்ற காலத்தில் எங்கள் சங்கரனே! அடியேன் உரைக்குமாறு அருள் புரிவீராக.

சிறப்புரை: திருவைந்தெழுத்தாகித் தூல பஞ்சாட்சரம் எனப்படும் நமச்சிவாய என்னும் மந்திரத்தின் சிறப்பானது, இவண் ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், இத் திருமந்திரத்தின் பெருமையை உரைக்கும் திருப்பாட்டு வ.எண் 749, 773, 779 ஆகியவற்றில் ஓதி அருளியவாறும் ஓர்க. இத் திருவைந்தெழுத்தானது பாதாதிகேசம் என ஏத்தி உரைத்தருளும் பெற்றி உடையது. இதனைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலின் குறியாக நிற்கும் மகாமந்திரம் என்பர், ஆன்றோர். பிறவி நீக்கம் செய்யும் இம் மகாமந்திரத்தினை உரைக்கும் பேறு வாய்க்காது என்பதாம். அத்தகைய பெரும் பேற்றினை அருளுமாறு ஏத்தும் இத் திருப்பாட்டானது, விண்ணப்பமாயிற்று.

'மரிக்க முத்தி' என் வழங்கப்படும் காசியில், அன்பர்களின் செவியில், அம்பிகை இத்திருமந்திரத்தை ஓதிப் பிறவாமையை வாய்க்கச் செய்கின்றார் என்பது புராண வரலாறு.

தீவேள்வி – மன்மதனை எரித்த செயலைக் குறித்தது; சாம் – மரணகாலம்; சங்கரன் – இனிமை செய்பவன், சிவபெருமான்.

996. பழிவழி யோடிய பாவிப்
பறிதலைக் குண்டர்தங்கள்
மொழிவழி யோடி முடிவேன்
முடியாமைக் காத்துக்கொண்டாய்
கழிவழி ஓதம் உலவும்
கடல்நாகைக் காரோணஎன்

வழிவழி யாளாகும் வண்ணம்
அருள்எங்கள் வானவனே.

தெளிவுரை: சமணர்களின் மொழிவாய்ப்பட்டு உழன்று, அழிய இருந்த என்னைத் தடுத்துக் காத்தருளிய ஈசனே! கடல் சூழ்ந்த நாகையில் மேவும் காரோணத்தில் வீற்றிருக்கும் நாதனே! தேவரீருக்கு வழி வழியாக ஆட்பட்டுப் பெருமையடையும் பேற்றினை அருள் வீராக.

சிறப்புரை: ஈசனார்க்கு வழியடியாராகி மேவும் சிறப்பு இவண் உணர்த்துதலாயிற்று. இத் தன்மையில், "பத்துடையீர் ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்! புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ! எத்தோ நின் அன்புடைமை! எல்லோம் அறியோமோ! சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை" எனவும், "ஐயா! வழியடியோம் வாழ்ந்தோம் காண் ஆரழல் போல் செய்யா! வெண்ணீறு ஆடி செல்வா!" எனவும் (திருவெம்பாவை) அருளிச் செய்த திருவாசக அமுத மொழியும் காண்க.

வழிவழியாக ஈசற்கு அடிமை கொண்டு வாழ்தலே மெய்யான வாழ்வு எனச் சுட்டுதலை ஓர்க.

997. செந்துவர் வாய்க்கருங் கண்ணிணை
வெண்ணகைத் தேன்மொழியார்
வந்துவலம் செய்து மாநடம்
ஆட மலிந்தசெல்வக்
கந்த மலிபொழில் சூழ்கடல்
நாகைக்கா ரோணம் என்றும்
சிந்தைசெய் வாரைப் பிரியாது
இருக்கும் திரு மங்கையே.

தெளிவுரை: செம்மையின் வண்ணம் திகழும் வாயும், கரிய கண்களும், முத்துப் போன்ற வெண்மையான பற்களும் இனிய மொழியும் உடைய மகளிர், வலம் செய்து நடனம் புரியும் நறுமணச் சோலை சூழ்ந்த இடமாவது, கடல் நாகைக் காரோணம் ஆகும். அத் திருத்தலத்தைச் சிந்தை செய்பவர்கள்பால் திருமகள் பிரியாது வாசம் செய்வாள்.

நகை – பல்; திருமங்கை – திருமகள், செல்வப் பேறு மோட்ச லட்சுமி எனவும் பகர்வர். இது, சிவனடியார்களுக்கு இக நலன்கள் தாமே வந்தடைதலும், பரமுத்தியைத் திருவடிக் கமலமானது வழங்குதலும் உணர்த்தும்.

998. பனைபுரை கைம்மத யானை
    உரித்த பரஞ்சுடரே
கனைகடல் சூழ்தரு நாகைக்கா
    ரோணத்துஎங் கண்ணுதலே
மனைதுறந்து அல்லுணா வல்லமண்
    குண்டர் மயக்க நீக்கி
எனை நினைந்து ஆட்கொண்டாய்க்கு என்இனி
    யான்செயும் இச்சைகளே.

தெளிவுரை: யானையின் தோலை உரித்த பரஞ்சுடரே! கடல் சூழ்ந்த நாகைக் காரோணத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானே! இல்லறத்தைத் துறந்து இரவில் உணவு கொள்ளாதவராகிய வலிய அமணர்பால் கொண்ட மயக்கத்தை நீக்கி அடியேனை நினைந்து ஆட்கொண்ட தேவரீருக்கு யான் செய்ய வேண்டிய கைம்மாறுதான் யாது?

இது, ஈசன் புரிந்த பேரருளுக்குக் கைம்மாறு யாதும் ஈடாகாது என்பதும், மறவாது ஏத்துதலை

அன்றி, மன்னுயிரால் ஆற்றுவதும் யாதும் இல்லை என்பதும் குறிப்பு.

கண்ணுதல் – நெற்றிக் கண்ணுடையவர், சிவபெருமான்.

999. சீர்மலி செல்வம் பெரிது
உடைய செம்பொன் மாமலையே
கார்மலி சோலை சுலவு
கடல்நாகைக் காரோணனே
வார்மலி மென்முலை யார்பலி
வந்திடச் சென்றிரந்து
ஊர்மலி பிச்சைகொடு உண்பது
மாதிமை யோஉரையே.

தெளிவுரை: சிறப்பின் மிக்க செல்வம் பெரிதும் உடைய மேருமலையாக உடைய பெருமானே! கருமுகில் தவழும் சோலை சூழ்ந்த கடல் விளங்கும் நாகையில் மேவும் காரோணத்தில் வீற்றிருக்கும் ஈசனே! மகளிர் இல்லம்தோறும் சென்று பலி தேர்ந்து பிச்சை எடுத்து உண்பது தகுந்ததாமோ! உரைப்பீராக.

சிறப்புரை: மேரு மலையில், எல்லா உலகங்களுக்கும் உரிய செல்வங்கள் இருத்தலும் அவற்றுள் இம் மண்ணுலகத்திற்கு உரிய செல்வங்களும் மிகுதியாக உள்ளன எனக் குறிப்பிட்டுத் திருவிளையாடல் புராணம் - மேருவைச் செண்டால் அடித்த படலம், ஓதுதலைக் காண்க. அத்தகைய பெருஞ் செல்வத்தை உடைய ஈசன், பலி ஏற்றுப் புரிந்த திருவிளை யாடலானது, இவண் சுட்டுதல் ஆயிற்று. இத்தன்மை யில், உலகினை உய்ய வைத்த அம்பிகை உடன் விளங்கப் பிச்சை கொள்ளும் பாங்குதான் என்னே! எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், “கொன்றைத்தார் இருந் தடமார்பு நீங்காத் தையலாள் உலகு உய்ய

வைத்த கார் இரும் பொழிற் கச்சி மூதூர்க் காமக் கோட்டம் உண்டாக, நீர்போய் ஊர் இடும் பிச்சை கொள்வது என்னே! ஓணகாந்தன் தளியுளிரே!" என அருளிச் செய்தவாறும் காண்க.

செம்பொன் மாமலை – மேருமலை; சுலவு – சூழ்தல்;
மாதிமை – தகுதி, மதிப்பு.

1000. வங்கமலிகடல் நாகைக்கா
ரோணத்துஎம் வானவனே
எங்கள் பெருமானொர் விண்ணப்பம்
உண்டது கேட்டருளீர்
கங்கை சடையுட் கரந்தாய்அக்
கள்ளத்தை மெள்ளஉமை
நங்கை அறியிற்பொல் லாதுகண்
டாய்எங்கள் நாயகனே.

தெளிவுரை: கடல் நாகைக் காரோணத்தில் வீற்றிருக்கும் நாயகனே! எம் வானவனே! எங்கள் பெருமானே! தேவரீரிடம் ஒரு விண்ணப்பம் உண்டு. கேட்டருள்க. கங்கையைச் சடை முடியில் மறைத்து வைத்துள்ளீர்! அக் கள்ளத்தைத் தேவரீருடைய திருமேனியில் பாகங் கொண்டு மேவும் உமாதேவியார் மெள்ள அறிந்தால், பொல்லாங்கு விளையும் அல்லவா! என் செய்வீர்!

இது, உலகியலை ஒட்டிக் கவி நயம் தோன்ற விளம்புதலாயிற்று.

1001. கருந்தடங் கண்ணியும் தானும்
கடல்நாகைக் காரோணத்தான்
இருந்த திருமலை என்றிறைஞ்
சாதன்று எடுக்கலுற்றான்
பெருந்தலை பத்தும் இருபது
தோளும் பிதிர்ந்தலற

இருந்தரு ளிச்செய்த தேமற்றுச்
செய்திலன் எம்இறையே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *நீலாயதாட்சி என்னும் திருநாமம் கொண்ட தேவியுடன் காரோணத்தான் மேவும் திருமலை என ஏத்தி வழிபாடு செய்யாத இராவணனுடைய தலையும் தோளும் நெரித்து அலறுமாறு அருளிச் செய்ததும் அன்றி, எம் இறைவன் செய்தது வேறு யாதும் இல்லை.*

கருந்தடங் கண்ணி – நீலாயதாட்சி – திருத்தலத்தில் மேவும் அம்பிகையின் திருநாமம்; திருமலை – கயிலாயம்; இறை – சிவபெருமான்.

104. திருவதிகைவீரட்டானம்

தல விளக்கம்: *திருப்பதிகம் எண் 1 காண்க.*

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

1002. மாசில்ஒள் வாள்போல் மறியு
மணிநீர்த் திரைத்தொகுதி
ஊசலை யாடியங்கு ஒண்சிறை
அன்னம் உறங்கலுற்றால்
பாசறை நீலம் பருகிய
வண்டுபண் பாடல்கண்டு
வீசும் கெடில வடகரைத்
தேஎந்தை வீரட்டமே.

தெளிவுரை: *எம் தந்தையாகிய ஈசன் எழுந்தருளியுள்ள வீரட்டமானது கெடில நதியின் வடகரையில் உள்ளது. அக்கெடில நதியானது, நீல மலர்களில் உள்ள தேனைப்*

பருகிய வண்டுகள் இசைக்க, அன்னப் பறவைகள் உறங்கத் தெளிந்த நீரையுடைய பெருமையுடையது.

1003. பைங்கால் தவளை பறைகொட்டப்
பாசிலை நீர்ப்படுகர்
அங்கால் குவளை மேலாவி
உயிர்ப்ப அருகு லவும்
செங்கால் குருகிவை சேரும்
செறிகெடி லக்கரைத்தே
வெங்கால் குருசிலை வீரன்
அருள்வைத்த வீரட்டமே.

தெளிவுரை: வெம்மையுடைய மேருமலையை வில்லாகக் கொண்டு ஈசன் வீற்றிருக்கும் வீரட்டமானது, கெடில நதியின் கரையில் உள்ளது. அக்கெடில நதியானது, கரையில் உள்ள நீர்க் குழிகளில் தவளைகள் பறையொலி போன்று எழுப்பவும், குவளை மலர்கள் செறிந்து மேவ செங்காற் குருகுகள் சேர்ந்து விளங்கும் பெருமையும் உடையது.

நீர்ப்படுகர் – நீர்க்குழி; பள்ளம், நீர்தங்கிய இடம்;
குருசிலை – மேருவில், பொன் வில்; குரு – பொன்.

1004. அம்மலர்க் கண்ணியர் அஞ்சனம்
செந்துவர் வாய்இளையார்
வெம்முலைச் சாந்தம் விலைபெறு
மாலை எடுத்தவர்கள்
தம்மருங் குற்கிரங் கார்தடந்
தோள்மெலி யக்குடைவார்
விம்மு புனற்கெடி லக்கரைத்
தேஎந்தை வீரட்டமே.

தெளிவுரை: எந்தை ஈசன் வீற்றிருக்கும் வீரட்டமானது கெடில நதிக்கரையில் உள்ளது. அக்கெடில நதியானது,

அழகிய செந்தாமரை போன்ற கண்களையுடைய இளைய மங்கையர்கள் மையும் சந்தனமும் பூசியவர் களாய், மலர்கள் சூடிய கூந்தலை உடையவர்களாய்க் குடைந்தாடும், நீர்வளம் உடையது.

1005. மீனுடைத் தண்புனல் வீரட்ட
ரேநும்மை வேண்டுகின்றதி
யானுடைச் சில்குறை ஒன்றுள
தானுறுந்தண் ணெருக்கின்
தேனுடைக் கொன்றைச் சடையுடைக்
கங்கைத் திரைதவழும்
கூனுடைத் திங்கட் குழவியெப்
போதும் குறிக்கொள்மினே.

தெளிவுரை: *மீன்கள் திகழும் குளிர்ந்த நீர் உடைய கெடில நதிக்கரையில் உள்ள வீரட்டத்தில் விளங்கும் ஈசனே! தேவரீர்பால் சிறிய விண்ணப்பம் ஒன்றுள்ளது. எருக்கம் பூவும், தேன் மணக்கும் கொன்றை மலரும் விளங்கும் சடையில் திகழும் கங்கையின் அலைகளால் திங்கள் குழவியைக் குறிக்கொண்டு அருள்வீராக.*

திங்கள் குழவி – இளமையான பிறைச் சந்திரன்.

1006. ஆரட்ட தேனும் இரந்துண்டு
அகமக வன்திரிந்து
வேரட்ட நிற்பித் திடுகின்ற
தால்விரி நீர்ப் பரவைச்
சூரட்ட வேலவன் தாதையைச்
சூழ்வய லார்அதிகை
வீரட்டத் தானை விரும்பா
அரும்பாவ வேதனையே.

தெளிவுரை: *யார் சமைத்தாலும் அகந்தோறும் திரிந்து நின்று அவர்கள் இடுகின்றதால், அதனை ஏற்றுக்*

கொண்டு மகிழும் ஈசன், சூரனை அழித்த வேலவனின் தாதையானவர். அவர், வயல் சூழ்ந்த அதிகையில் மேவும் வீரட்டத்தில் உள்ளவர். பாவமும் துன்பமும் அப் பெருமானை எக்காலத்திலும் அணுகுவதில்லை.

இது நிமலன், அமலன் என்னும் சொல்லின் பொருளினை உணர்த்துவதாயிற்று.

1007. படர்பொற் சடையும் பகுவாய்
அரவும் பனிமதியும்
சுடலைப் பொடியும்எல் லாம்உள
வேஅவர் தூயதெண்ணீர்க்
கெடிலக் கரைத்திரு வீரட்டர்
ஆவர்கெட் டேன்அடைந்தார்
நடலைக்கு நற்றுணை யாகும்கண்
டீர்அவர் நாமங்களே.

தெளிவுரை: படர்ந்து விரிந்து பொலியும் பொன் போன்ற சடையும், பாம்பும், சந்திரனும், சுடலையின் சாம்பலும் உடைய ஈசன், தெளிந்த நீர் விளங்கும் கெடிலந்திக் கரையில் திகழும் வீரட்டேஸ்வரர் ஆவர். அப்பெருமானின் திருநாமங்கள், துன்பத்திலிருந்து காத்துத் துணையாக விளங்கும் பெருமையுடையன எனத் தெளிவீராக.

சிறப்புரை: வீரட்டேசர் என்னும் திருநாமம் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஈசனின் திருநாமம் ஆயிற்று. மற்றும், "நற்றுணையாகும் கண்டீர் அவர் திரு நாமங்களே" என்னும் அருந் தொடரானது, ஈசனின் திருவைந்தெழுத்தை உணர்த்திற்று. இத்தன்மையில், "நற்றுணையாவது நமச்சிவாயவே" என உரைத்தருளிய திருவாக்கும் (திருப்பாட்டு எண் 104) காண்க.

நடலை – துன்பம்; நாமங்கள் – திருவைந்தெழுத்து.

1008. காளம் கடந்ததொர் கண்டத்த
ராகிக்கண் ணார் கெடில
நாளங் கடிக்கொர் நகரமு
மாதிற்கு நன்இசைந்த
தாளங்கள் கொண்டும் குழல்கொண்டும்
யாழ்கொண்டும் தாம்அங்ஙனே
வேளங்கள் கொண்டும் விசும்புசெல்
வாரவர் வீரட்டரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *நஞ்சினை உடைய கண்டத்தராகிய ஈசன், கெடில நதிக்கரையில் உள்ள நகரில் உமாதேவி யாருக்கு இசைவான பாட்டும், தாளமும், குழலும், யாழும் கொண்டு தாம் நடனம் ஆடி, வானில் திகழ்வார். அவர் வீரட்டரே.*

காளம் – நஞ்சு.

105. திருப்புகலூர்

தல விளக்கம்: *திருப்பதிகம் எண் 16 காண்க.*

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

1009. தன்னைச் சரண்என்று தாளடைந்
தேன்றன் அடியடையப்
புன்னைப் பொழிற்புக லூர்அண்ணல்
செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத்து என்வினை
கட்டறுத்து ஏழ்நரகத்து
என்னைக் கிடக்கலொட் டான்சிவ
லோகத்து இருத்திடுமே.

தெளிவுரை: நான், சரணம் என்று ஈசன் திருத்தாளைப் பற்றி அடைந்து நிற்கப் புன்னைப் பொழில் விளங்கும் புகலூரில் வீற்றிருக்கும் அண்ணல், அருளிய தன்மையைக் கேட்பீராக. அப்பெருமான், என்னுடைய பிறவியை அறுத்து, வினைக் கட்டறுத்து, ஏழ் நரகில் புகவொட்டாது காத்தருளினார். அப்பெருமானின் பேரருளானது, என்னைச் சிவலோகத்தில் இருக்கச் செய்யும்.

புன்னை – தல மரம், அட்ட மலர்களில் ஒன்று.

1010. பொன்னை வகுத்தன்ன மேனிய
னேபுணர் மென்முலையாள்
தன்னை வகுத்தன்ன பாகத்த
னேதமி யேற்கு இரங்காய்
புன்னை மலர்த்தலை வண்டுஉறங்
கும்புக லூர்அரசே
என்னை வகுத்திலை யேல்இடும்
பைக்கிடம் யாதுசொல்லே.

தெளிவுரை: பொன் போன்ற திருமேனியுடைய ஈசனே! உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்கும் பெருமானே! தமியனேற்கு இரக்கம் கொண்டு அருள் புரிவீராக. புன்னை மலர்களில் உள்ள தேனை, வண்டு உண்டு உறங்கும் புகலூரில் மேவும் நாதனே! என்னை அருள் வயத்தினைாகச் செய்யீராயின், யான் துன்பத் திற்கே இடமாகி நைவேன். அடியேனைக் காத்தருள் புரிவீராக.

சிறப்புரை: ஈசன், அருள் கொண்டு வழங்காது இருப்பின் யாதும் அமையாது என்னும் குறிப்பில் "என்னை வகுத்திலையேல் இடும்பைக்கு இடம்" என ஆதலை உணர்த்திற்று. இத்தன்மையில்,

"வகுத்தான்வகுத்த வழி யல்லால் கோடி தொகுத் தார்க்கும் துய்தல் அரிது'' என்னும் திருக்குறட் கருத்தின் வழி, அருளின் வழியானது ஈசனால் வகுத்தருளுதலை உணர்த்துதல் ஆயிற்று.

1011. பொன்னள வார்சடைக் கொன்றையி
னாய்புக லூர்அரசே
மன்னுள தேவர்கள் தேடு
மருந்தே வலஞ்சுழியாய்
என்னளவே உனக்கு ஆட்பட்டு
இடைக்கலத் தேகிடப்பார்
உன்னள வேஎனக்கு ஒன்றும்
இரங்காத உத்தமனே.

தெளிவுரை: பொன்னை ஒத்த நீண்ட சடையில் கொன்றை மலர் தரித்து மேவும் புகலூர் நாதனே! பெருமைக்குரிய தேவர்கள் தேடுகின்ற மருந்தே! திருவலஞ் சுழியில் மேவும் ஈசனே! தேவரீர்பால் நான் இடைக்காலத்தில் ஆட்பட்டுக் கிடக்கின்றேன். உத்தமனே! தேவரீர் இரக்கம் கொண்டு அருள் புரிவீராக.

மருந்தே – பிறவி நோய் தீர்ப்பவர்.

1012. ஓணப்பிரானும் ஒளிர்மா
மலர்மிசை உத்தமனும்
காணப் பராவியும் காண்கின்
றிலர்களும் நாலைந்துடைத்
தோணப் பிரானை வலிதொலைத்
தோன்தொல்லை நீர்ப்புகலூர்க்
கோணப் பிரானைக் குறுகக்
குறுகா கொடுவினையே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருவோண நாளுக்குரிய திருமாலும், மலர் மிசை விளங்கும் பிரமனும் காண்பதற்கு அரியவராகிய சிவபெருமான், இருபது கரமுடைய இராவணனுடைய வலிமையை அழித்து நீர்வளம் மேவும் புகலூரில் வீற்றிருக்கும் கோணப் பிரான் ஆவார். அப் பெருமானை நாம் அடைய, வினை நம்மை அடையாது.

கோணப்பிரான் – இத் திருத்தலத்தில் எழுந்தருளி உள்ள ஈசனின் திருநாமத்தை நவில்வதாயிற்று.

106. திருக்கழிப்பாலை

தல விளக்கம்: திருப்பதிகம் எண் 6 காண்க.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

1013. நெய்தற் குருகுதன் பிள்ளையென்று
எண்ணி நெருங்கிச்சென்று
கைதை மடற்புல்கு தென்கழிப்
பாலை யதனுறைவாய்
பைதற் பிறையொடு பாம்புடன்
வைத்த பரிசறி யோம்
எய்தப் பெறின்இரங் காதுகண்
டாய்நம் இறையவனே.

தெளிவுரை: தாழைக் குருத்தினைக் கண்டு நெருங்கிச் சென்று தனது பிள்ளை என நோக்கும் நெய்தற் குருகுகள் உள்ள இடமாகிய கழிப்பாலையில் மேவும் ஈசனே! இளமையான பிறை சந்திரனுடன் பாம்பினை உடன் வைத்த பரிசினை யாம் அறிய மாட்டோம். இறைவனே! இரக்கம் கொண்டு அருள் புரிவீராக.

1014. பருமா மணியும் பவளமுத்
தும்பரந்து உந்திவரை
பொருமால் கரைமேல் திரைகொணர்ந்து
எற்றப் பொலிந்து இலங்கும்
கருமா மிடறுடைக் கண்டன்எம்
மான்கழிப் பாலைஎந்தை
பெருமான் அவன்என்னை யாளுடை
யான்இப் பெருநிலத்தே.

தெளிவுரை: பருத்த மாணிக்க மணியும் பவளமும் முத்தும் பரந்து பெருகி உந்திக் கரையில் கொண்டு வந்து சேர்க்கும் கடல் அலைகள் எற்றும் கழிப்பாலை யில் மேவும் நீலகண்டனாகிய எம் ஈசன், இப்புவியில் என்னை ஆளாக உடையவரே.

1015. நாட்பட்டு இருந்து இன்பம் எய்தலுற்று
இங்கு நமன்தமரால்
கோட்பட்டு ஒழிவதன் முந்துற
வேகுளிர் ஆர்தடத்துத்
தாள்பட்ட தாமரைப் பொய்கையந்
தண்கழிப் பாலை யண்ணற்கு
ஆட்பட்டு ஒழிந்தமன் றேவல்ல
மாயிவ் வகலிடத்தே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நெடுங்காலம் இருந்து இன்பத்தை அடைந்து பின்னர் நமனுடைய ஆட்களால் வளைக்கப் பெற்றுத் துன்புறுவதன் முன்னர், தாமரைப் பொய்கை விளங்கும் கழிப்பாலையில் மேவும் ஈசற்கு நாம் ஆட்பட்டு, இவ் உலகத்தில் அத்தகைய இடர்களை ஒழித்தனம்.

107. திருக்கடவூர்வீரட்டம்

தல விளக்கம்: *திருப்பதிகம் எண் 31 காண்க.*

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

1016. மருட்டுயர் தீரஅன்று அர்ச்சித்த
மாணி மார்க் கண்டேயற்காய்
இருட்டிய மேனி வளைவாள்
எயிற்றெரி போலுங்குஞ்சிச்
சுருட்டிய நாவில்வெங் கூற்றம்
பதைப்ப உதைத்துங்ஙனே
உருட்டிய சேவடி யான்கட
வூர்உறை உத்தமனே.

தெளிவுரை: *மருட்சியால் உற்ற துயர் தீர அன்று அருச்சித்து ஏத்திய பிரமசாரியாகிய மார்க்கண்டேயருக்காகக் கரிய மேனியும் வளைந்த பல்லும் நெருப்பு போன்ற தலைமுடியும் சுருட்டி மடங்கிய நாவும் கொண்ட வெங்கூற்றுவனைப் பதைத்து அழியுமாறு உதைத்த சேவடி உடைய ஈசன், கடவூரில் உறையும் உத்தமனே ஆவார்.*

குஞ்சி – தலைமுடி; உங்ஙனே – முன்னிலைப்படுத்திய தன்மை.

1017. பதத்தெழு மந்திரம் அஞ்செழுத்து
ஓதிப் பரிவினொடும்
இதத்தெழு மாணிதன் இன்னுயிர்
உண்ண வெகுண்டு அடர்த்த
கதத்தெழு காலனைக் கண்குரு
திப்புனல் ஆறொழுக

உதைத்தெழு சேவடியான்கட
வூர்உறை உத்தமனே.

தெளிவுரை: பதமாக எழும் மந்திரமாகிய திருவைந்தெழுத்தை ஓதிப்பேரன்பு கொண்டு இனிமை விளங்க ஏத்தும் பிரமசாரியாகிய மார்க்கண்டேயரின் இன்னுயிரைக் கொள்ளும் நோக்கில், வெகுண்டு எழுந்த காலனைக் கண்ணில் குருதி பெருக உதைத்த சேவடியுடையவர், கடவூரில் வீற்றிருக்கும் உத்தமன் ஆவார்.

சிறப்புரை: திருவைந்தெழுத்தினை ஓதி உரைத்தலும், அங்கு ஈசனார் புரிந்த அருளிச் செயலும் இவண் சுட்டப் பெற்றது. தூல பஞ்சாட்சர மந்திரத்தின் சிறப்பினைத் திருப்பாட்டு வ.எண் 995இல் உரைத்தருளியவாறும் காண்க. திருவைந்தெழுத்தானது, சூக்கும பஞ்சாட்சரமாகிய சிவாயநம என்னும் மந்திரத்தையும் உணர்த்தும் திருப்பாட்டு எண் 926 மற்றும் 918 காண்க.

பதத்தெழுமந்திரம் – உயிரைக் கடைத் தேறவைக்கும் பதமான மந்திரம். திருவைந்தெழுத்து எனக் கொள்க.

1018. கரப்புறு சிந்தையர் காண்டற்கு
அரியவன் காமனையும்
நெருப்புமிழ் கண்ணின் நீள்புனற்
கங்கையும் பொங்கரவும்
பரப்பிய செஞ்சடைப் பால்வண்ணன்
காலனைப் பண்டொருகால்
உரப்பிய சேவடி யான்கட
வூர்உறை உத்தமனே.

தெளிவுரை: ஈசன், சிந்தையில் வஞ்சனை உடையவர்களுக்குத் தென்படாதவர்; மன்மதனை நெற்றிக்

கண்ணால் விழித்து நோக்கி எரித்துச் சாம்பலாக்கியவர்; செஞ்சடையில் பெருகும் கங்கையும் பொங்கி எழும் அரவும் கொண்டுள்ளவர்; பால் போன்ற வெண்மை திகழும் திருநீற்றைத் திருமேனியில் குழைத்துப் பூசி விளங்குபவர்; காலனைச் சேவடியால் உதைத்து அழித்தவர். அப் பெருமான், கடவூரில் உறையும் உத்தமன் ஆவார்.

1019. மறித்திகழ் கையினன் வானவர்
கோனை மனமகிழ்ந்து
குறித்தெழு மாணிதன் ஆருயிர்
கொள்வான் கொதித்தசிந்தைக்
கறுத்தெழு மூவிலை வேலுடைக்
காலனைத் தானலற
உறுக்கியசேவடி யான்கட
வூர்உறை உத்தமனே.

தெளிவுரை: சிவபெருமான், மான் கன்றைக் கையினில் உடையவர்; தேவர்களின் தலைவர்; மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வேண்டும் எனக் கொதித்தெழுந்த சிந்தையுடன் சினந்து, கையில் சூலப் படையுடன் வந்த காலனைத் தன் சேவடியால் உதைத்து அழித்தவர். அப் பெருமான் கடவூரில் வீற்றிருக்கும் உத்தமன் ஆவார்.

1020. குழைத்திகழ் காதினன் வானவர்
கோனைக் குளிர்ந்தெழுந்து
பழக்கமொடு அர்ச்சித்த மாணிதன்
ஆருயிர் கொள்ளவந்த
தழற்பொதி மூவிலை வேலுடைக்
காலனைத் தானலற
உழக்கிய சேவடி யான்கட
வூர்உறை உத்தமனே.

தெளிவுரை: ஈசன், காதில் குழையை அணிந்துள்ளவர்; தேவர்களின் தலைவர் ஆவார்; சிவபூசை செய்யும் நித்தியப் பணியை ஆற்றும் பிரமசாரியாகிய மார்க் கண்டேயரின் உயிரைக் கொள்ள வேண்டும் எனச் சூலப்படை ஏந்தி வந்த காலனைத் தன் பாதத்தால் உதைத்து, அலறுமாறு செய்து வருத்தி வீழ்த்தியவர். அப்பெருமான், கடவூரில் உறையும் உத்தமன்.

சிறப்புரை: மார்க்கண்டேயர் நித்திய வழிபாடாகச் சிவபூசை செய்தலை உடையவர் என்பது, "குளிர்ந் தெழுந்து பழக்கமொடு அர்ச்சித்த மாணி" என ஏத்தப் பெற்றது. சிவபூசை செய்யப் புகுங்கால் கொள்ளும் மனப் பக்குவமானது, "குளிர்ந்தெழுந்து" என உணர்த்திய மாண்பும் காண்க. இத் திருப்பதிகத்தில் முதல் 9 திருப்பாடல்களில் இத் திருத்தலத்தின் வரலாறாகிய காலனை வதைத்தது சுட்டப் பெற்றுள்ளது.

1021. பாலனுக்காய்அன்று பாற்கடல்
ஈந்து பணைத் தெழுந்த
ஆலினிற் கீழ்இருந்து ஆரணம்
ஓதி அருமுனிக்காய்ச்
சூலமும் பாசமும் கொண்டு
தொடர்ந்தடர்ந்து ஓடிவந்த
காலனைக் காய்ந்தபி ரான்கட
வூர்உறை உத்தமனே.

தெளிவுரை: ஈசன், உபமன்யு முனிவர் பாலுக்காக அழுதபோது, பாற்கடல் ஈந்தவர்; கல்லால மர நிழலில் இருந்து, சனகாதி முனிவர்களுக்கு வேதப் பொருளை ஓதி அருளியவர்; மார்க்கண்டேயரின் உயிரைக் கவரச் சூலமும் பாசமும் கொண்டு பின் தொடர்ந்து

அடர்த்து வந்த காலனை அழித்தவர். அவர், கடவூரில் உறையும் உத்தமனே.

சிறப்புரை: உபமன்யு முனிவர், குழந்தைப் பருவத்தில் பால் வேண்டி அழுதிடப் பாற்கடலை நல்கியவர் ஈசன். இதனைப் "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்" எனச் சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு இயம்புதல் காண்க.

பாலன் – உபமன்யு; அருமுனிவர் – மார்க்கண்டேயர்.

1022. படர்சடைக் கொன்றையும் பன்னக
மாலை பணிகயிறா
உடைதலை கோத்துழல் மேனியன்
உண்பலிக்கு என்றுழல்வோன்
சுடர்பொழி மூவிலை வேலுடைக்
காலனைத் துண்டமதா
உடறிய சேவடி யான்கட
வூர்உறை உத்தமனே.

தெளிவுரை: ஈசன், படர்ந்து விளங்கும் சடையில் கொன்றை மாலையும், பாம்பு மாலையும், பாம்பைக் கயிறாகக் கொண்டு கோத்த மண்டை ஓட்டு மாலையும் அணிந்து, உண்பதற்காகப் பலிகொண்டு உழன்றவர்; சூலப் படை கொண்டு மார்க் கண்டேயரின் உயிரைக் கவர வந்த காலனைக் காலால் அழித்தவர். அவர், கடவூரில் உறையும் உத்தமனே.

1023. வெண்டலை மாலையும் கங்கை
கரோடி விரிசடை மேல்
பெண்டுஅணி நாயகன் பேய்உகந்து
ஆடும் பெருந்தகையான்
கண்தனி நெற்றியன் காலனைக்
காய்ந்து கடலின்விடம்

உண்டருள் செய்தபி ரான்கட
வூர்உறை உத்தமனே.

தெளிவுரை: ஈசன், மண்டை ஓட்டு மாலை அணிந்தவர்; கங்கையை முடி மாலையாகக் கொண்டவர்; அதனைப் பெண் மாலையாக அணி கொண்ட நாயகர்; பேய்க் கணங்களை உகந்து அவ்ற்றுடன் ஆடுபவர்; பெருந்தகையுடைய யோகியாக இருப்பவர்; நெற்றியில் கண்ணுடையவர்; காலனை உதைத்தவர்; கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு தேவர்களுக்கு அருள்புரிந்தவர். அப்பெருமான், கடவூரில் உறையும் உத்தமனே.

கரோடி – முடிமாலை; பெண்டு – பெண்.

1024. கேழலதாகிக் கிளறிய
கேசவன் காண்பரிதாய்
வாழிநன் மாமலர்க் கண்ணிடந்
திட்டஅம் மாலவற்கு அன்று
ஆழியும் ஈந்து அடுதிறற்
காலனை அன்றடர்த்து
ஊழியுமாய பிரான்கட
வூர்உறை உத்தமனே.

தெளிவுரை: ஈசன், பன்றி வடிவாகிய திருமால், காண்பதற்கு அரிதாய் உயர்ந்தவர்; அத்திருமால் தனது கண்ணை இடந்து அருச்சிக்க ஆழிப் படை அளித்தவர்; திறல் கொண்ட காலனை அழித்தவர்! ஊழிக் காலமாகி எக்காலத்திலும் நிலைப் பொருளாய் மேவும் அப்பெருமான், கடவூரில் உறையும் உத்தமனே.

கேசவன் – அழகிய முடியுடையவர்; கேசி என்னும் அசுரன் கம்சனால் ஏவப்பட்டுக் குதிரை வடிவத்தில் வந்து போர் செய்ய கிருஷ்ணாவதாரத்தில் அழித்து வென்றவர், திருமால்.

1025. தேன்திகழ் கொன்றையும் கூவிள
மாலை திருமுடிமேல்
ஆன்திகழ் ஐந்துஉகந்து ஆடும்
பிரான்மலை ஆர்த்தெடுத்த
கூன்திகழ் வாளரக் கன்முடி
பத்தும் குலைந்து விழ
ஊன்றிய சேவடி யான்கட
வூர்உறை உத்தமனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசன், தேன் திகழும் கொன்றை மாலையும், வில்வ மாலையும், திருமுடியின்மேல் தரித்திருப்பவர்; பசுவின் பஞ்சகௌவியத்தை உகந்து பூசனையாக ஏற்பவர்; கயிலையை எடுத்த இராவணனுடைய முடிகள் பத்தும் நலியுமாறு, ஊன்றிய திருவடி உடையவர். அப்பெருமான், கடவூரில் உறையும் உத்தமனே.

கூவிளம் – வில்வம்; இச்சா சக்தி, கிரியா சக்தி ஞானா சக்தி ஆகிய முச்சத்திகளை இதழாகக் கொண்டு விளங்கும் சிறப்புடையது; திருமகள் வாசம் செய்வது, ஈசனுக்குப் பிரியமானது.

108. திருமாற்பேறு

தல விளக்கம்: தொண்டை நாட்டுத்தலம் 32இல், இது 11ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. திருமால் ஈசனை வழிபட்டுச் சக்கரப் படையைப் பெற்ற தலம். இத்தலத்திற்கு ஹரி சக்ரபுரம் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. சந்திரன் வழிபட்ட தலம்.

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 55 காண்க.

சுவாமி : மணிகண்டேஸ்வரர், தயாநிதீஸ்வரர்; பிரவாளேஸ்வரர், சாதரூபர், பவளமலையார், மால்வணங்கீசர்

அம்பிகை : அஞ்சனாட்சி, கருணாம்பிகை

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : சக்கர தீர்த்தம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

1026. மாணிக்கு உயிர்பெறக் கூற்றை
உதைத்தன மாவலிபால்
காணிக்கு இரந்தவன் காண்டற்கு
அரியன கண்டதொண்டர்
பேணிக் கிடந்து பரவப்
படுவன பேர்த்தும் அஃதே
மாணிக்கம் ஆவன மாற்பேறு
உடையான் மலரடியே.

தெளிவுரை: திருமாற்பேறு என்னும் தலத்தில் மேவும் ஈசனின் மலரடிகள், மார்க்கண்டேயருக்கு உயிர் நிலைத்திருக்கும்படி கூற்றுவனை உதைத்தன; மாவலிச் சக்கரவர்த்தியின்பால் மூவடி யாசித்த திருமாலால், காண்பதற்கு அரியன; கண்டு தரிசித்த சிவஞானி களால் ஏத்திப் பரவப்படுவன; மாணிக்கம் ஆவன.

1027. கருடத் தனிப்பாகன் காண்டற்கு
அரியன காதல்செய்யில்
குருடர்க்கு முன்னே குடிகொண்டு
இருப்பன கோலமல்கு
செருடக் கடிமலர்ச் செல்விதன்
செங்கம லக்கரத்தால்

வருடச் சிவப்பன மாற்பேறு
உடையான் மலரடியே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கருட வாகனத்தில் விளங்கும் திருமாலால் காண்பதற்கு அரியனவாகிய திருமாற்பேற்றில் வீற்றிருக்கும் ஈசனின் மலரடிகள்; புறக் கண் அற்றார்க்கும், அகக்கண்களில் விளங்கித் திகழ்வன; மலரினும் மென்மையான உமாதேவியின் அழகிய கரத்தால் வருடச் சிவப்பன.

109. திருத்தூங்கானை மாடம்

பெண்ணாகடம்

தல விளக்கம்: நடுநாட்டுத் தலங்கள் 22இல், இது 2ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. வேதகன்னியர், காமதேனு, வெள்ளை யானை (ஐராவதம்), இந்திரன் வழிபட்டது. திருநாவுக்கரசர் சூலம் இடபக் குறிகளைப் பொறிக்கு மாறு வேண்டிப் பெற்ற தலம். இதனைச் சேக்கிழார் சுவாமிகள்,

நீடுதிருத் தூங்கானை மாடத்து நிலவுகின்ற
ஆடக மேருச்சிலையான் அருளால்ஓர் சிவபூத
மாடொருவர் அறியாமே வாகீசர் திருத்தோளில்
சேடுயர்மூ விலைச்சூலம் சினவிடையி னுடன்சாத்த

— திருநாவுக்கரசு நாயனார் புராணம், பாட்டு எண். 152

என அருளிச் செய்த பெருமையுடையது.

கலிக்கம்ப நாயனார் வீடுபேறு பெற்ற தலம். மெய்கண்டார் திரு அவதாரத் தலம்.

கோயில் பெயர்: தூங்கானை மாடம்; ஊர்ப் பெயர் : கடந்தை.

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 59 காண்க.

சுவாமி : சுடர்க்கொழுந்தீசர், பிரளய காலேஸ்வரர்

அம்பிகை : ஆமோதனம்பாள், கடந்தை நாயகி
அழகிய நாயகி

தல மரம் : சண்பகம்

தீர்த்தம் : கயிலை தீர்த்தம், பார்வதி தீர்த்தம்,
இந்திர தீர்த்தம், முக்குளம், வெள்ளாறு

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

1028. பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு
விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற்கு இச்சையுண்
டேல்இருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலம்என்
மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க் கொழுந்தே.

தெளிவுரை: மேகம் சூழும் குளிர்ச்சி பொருந்திய கடந்தை என்னும் திருப்பெயர் கொண்ட தலத்தில் தூங்கானை மாடத்தில் மேவும் சுடர்க் கொழுந்தீசப் பெருமானே! தேவரீரின் பொன்னார் திருவடிக்கு விண்ணப்பம் ஒன்று உள்ளது. அதனை ஏற்று அருள் புரிவீராக. என்னுடைய உயிரானது தேவரீரைப் போற்றி செய்து வழிபடுவதற்குத் திருவுள்ளம் உடையதாயின், கூற்றுவன் என்பால் வாராது இருக்க

மின்னலைப் போன்று ஒளிரும் மூவிலைச் சூலத்தை என்மீது பொறித்து அருள்வீராக.

கடந்தை – ஊரின் பெயர்; தூங்கானை மாடம் – கோயிலின் பெயர்; சுடர்க் கொழுந்து – திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஈசனின் திருநாமம்.

1029. ஆவா சிறுதொண்டன் என்நினைந்
தான்என்று அரும்பிணி நோய்
காவா தொழியிற் கலக்குமுன்
மேற்பழி காதல்செய்வார்
தேவா திருவடி நீறென்னைப்
பூசுசெந் தாமரையின்
பூவார் கடந்தையுள் தூங்கானை
மாடத்துளம் புண்ணியனே.

தெளிவுரை: *செந்தாமரைப் பூக்கள் விளங்கும் கடந்தையுள், தூங்கனைமாடத்துள் மேவும் ஈசனே! ஆ..! ஆ..! இச்சிறிய தொண்டன் ஏதும் பெரிய அளவால் நினைத்து ஏத்திலன் என்று கருதி, என்பால் உள்ள பிணியும் நோயும் தீர்த்தருளாது இருப்பின், தேவரீர்பால் பழியே நிலவும். அன்புடன் விரும்பி ஏத்துபவர்களுக்கு அருள் புரியும் தலைவனே! தேவரீரின் திருவடியாகிய திருநீற்றினை என்மேல் பூசி அருள்புரிவீராக.*

சிறப்புரை: *ஈசன், தன்னைச் சிறுமையுடையவன் என்னும் குறிப்பில் விலக்காது, அருள் நல்குதல் வேண்டும் என்னும் விண்ணப்பத்தை உரைப்பதாயிற்று. ஈசன், இவன் சிறுமையுடையவன் என நீக்காது இருத்தலையும், அங்ஙனம் விடுத்தல், பழியாதலையும் சுட்டிற்று. திருச்சத்திமுற்றத்தில் திருவடித் தீக்கையை வேண்டிப் பெற, (திருப்பாட்டு வ.எண் 933)*

இத் திருப்பாட்டில், திருவெண்ணீற்றினைப் பூசும் கவசமாகப் பெறுதலை உணர்த்திற்று. ஈசன், திருவடிக் கமலத்தினைத் திருநீறு என ஓதும் சிறப்பினை ஓர்க. இது, திருவடிக் கமலம் புரியும் பேற்றினைத் திருவெண்ணீறு ஆற்றும் சிறப்புடன் இணைத்த பாங்கும் ஆகும். திருநீற்றின் பெருமையைப் புகலும் திருஞானசம்பந்தர் அருளிச் செய்த திருநீற்றுத் திருப்பதிகத்தின் சாரமும் இவண் கொள்க.

ஈசனின் அடிச்சுவடு பெற்ற பேற்றினை, மாணிக்க வாசகர், "பூவார் அடிச்சுவடு என்தலை மேல் பொறித் தலுமே தேவானவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என அருளிச் செய்தவாறும் காண்க. இது, அடிச் சுவடானது சிவானந்தத் தேனை உயிர்க்கு அளித்துப் பேரின்பத்தில் திளைக்கச் செய்கிறது என்னும் மெய்ம்மையை உணர்த்துவதாயிற்று.

ஆ ஆ – ஏளனக் குறிப்பு; சிறுதொண்டன் – எளியவன். (சிறுத் தொண்ட நாயனார் வேறு, இது அல்ல); திருவடி நீறு – திருவடியாகிய திருநீறு.

1030. கடவுந் திகிரி கடவாது
ஒழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிரல் ஒன்றுவைத்
தாய்பனி மால்வரை போல்
இடவம் பொறித்து என்னை யேன்றுகொள்
ளாய்இருஞ் சோலை திங்கள்
தடவும் கடந்தையுள் தூங்கானை
மாடத்துஎம் தத்துவனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தண்மையுடன் விளங்கும் சோலையும், சந்திரனை முட்டும் உயர்ந்த மாடங்களும் உடைய

கடந்தையுள், தூங்கானைமாடத்தில் வீற்றிருக்கும் ஈசனே! தேரினைத் தடுத்த கயிலையைப் பெயர்த்த இராவணனைத் திருவிரல் ஒன்றினால் நெரித்த தேவரீர், என்மீது இடபக் குறியைப் பொறித்து என்னை ஏற்றுக் கொள்வீராக.

110. பொது

பதிகக் குறிப்பு: பசுபதியே என்னும் ஈறு கொண்டு விளங்குவது.

பசுபதித் திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

1031. சாம்பலைப் பூசித் தரையிற்
புரண்டுநின் தாள்பரவி
ஏம்பலிப் பார்கட்கு இரங்குகண்
டாய்இருங் கங்கையென்னும்
காம்பலைக் கும்பணைத் தோளி
கதிர்ப்பூண் வனமுலைமேல்
பாம்பலைக் கும்சடை யாய்எம்மை
ஆளும் பசுபதியே.

தெளிவுரை: கங்கை என்னும் நங்கையையும் பாம்பினையும் சடைமுடியில் தாங்கி, எம்மை ஆட்கொண்டு மேவும் பசிபதியே! திருவெண்ணீற்றைக் குழையப் பூசித் தேவரீருடைய திருவடியைப் பரவி ஏத்தி மகிழ்பவர்களுக்கு, அருள்புரிவீராக.

சிறப்புரை: உயிர்க்குத் தலைவராகிப் பசுபதியாக மேவும் இறைவன், எல்லா அடியவர்களுக்கும் அருள் புரிய் வேண்டும் என்னும் பெருங் கருணையால் ஓதப் பெற்றது. இத்திருப்பாட்டின் சிறப்பினை, இத்திருமுறை

யுள் வரும் திருப்பாட்டு வ.எண் *963*இல் ஓதி அருளிய வாறும் கொண்டு நோக்குக.

பசுபதி – உயிர்க்குத் தலைவர், சிவபெருமான்.

1032. உடம்பைத் தொலைவித்துன் பாதம்
தலைவைத்த உத்தமர்கள்
இடும்பைப் படாமல் இரங்குகண்
டாய் இருள்ஓடச் செந்தீ
அடும்பொத் தனைய அழல்மழு
வாஅழலே உமிழும்
படம்பொத்து அரவுஅரை யாய்எம்மை
ஆளும் பசுபதியே.

தெளிவுரை: இருள் விலகுமாறு செந்தீ, அடும்பு போன்ற அனல் உமிழும், ஒளியுடைய மழுப்படையைக் கொண்ட ஈசனே! வெம்மையை உமிழும் அரவத்தை அரையில் கட்டி விளங்கும் பெருமானே! எம்மை ஆளும் பசுபதியே! உடலின் மீது பற்றின்றித் தேவரீருடைய திருப்பாதத்தைத் தலையாகக் கொண்டு மேவும் உத்தமர்களாகிய பக்தர்கள் துன்புறாதவாறு, இரக்கம் கொண்டு அருள்வீராக.

சிறப்புரை: அடியவர்கள் துன்புறாது இருக்குமாறு ஏத்தும் வேண்டுதலானது, நாயனார் ஈசன்பால் கொண்டுள்ள உரிமையும், அடியவர்கள்பால் கொண்டுள்ள கருணையும் உணர்த்துவதாயிற்று.

அடும்பு – ஒருவகைப் பூ, கொடி வகை.

1033. தாரித் திரம்தவி ராஅடி
யார்தடு மாற்றம் என்னும்
மூரித் திரைப் பௌவ நீக்குகண்
டாய்முன்னை நாளொருகால்

வேரித்தண் பூஞ்சுடர் ஐங்கணை
வேள்வெந்து வீழச்செந்தீப்
பாரித்த கண்ணுடை யாய்எம்மை
ஆளும் பசுபதியே.

தெளிவுரை: மன்மதன், பூங்கணைகள் ஐந்தினைத் தொடுக்க, அவனை வெந்து வீழுமாறு விழித்த நெற்றிக் கண்ணுடைய ஈசனே! எம்மை ஆளும் பசுபதியே! அடியவர்களின் வறுமையை நீக்குவீராக; இடம், காலம், அறிவு ஆகியவற்றால் கொள்ளும் தடுமாற்றத்தை நீக்குவீராக; மூப்பினால் வரும் தளர்ச்சியும் அலைப்பும் தீர்த்தருள்வீராக.

தாரித்திரம் – தரித்திரம், வறுமை; மூரி – கிழம், சோம்பல், முரிப்பு; ஐங்கணை – தாமரை, அசோகு, மா, முல்லை, குவளை.

1034. ஒருவரைத் தஞ்சம் என்று எண்ணாதுன்
பாதம் இறைஞ்சுகின்றார்
அருவினைச் சுற்றம் அகல்விகண்
டாய்அண்ட மேயணவும்
பெருவரைக் குன்றம் பிளிறப்
பிளந்துவேய்த் தோளியஞ்சப்
பருவரைத் தோலுரித் தாய்எம்மை
ஆளும் பசுபதியே.

தெளிவுரை: அண்டங்கள் நடுங்கப் பெரிய மலை போன்ற வடிவத்துடன் பிளிறிக் கொண்டு வந்த யானையைப் பிளந்து, அதன் தோலை உரித்து உமாதேவியும் அஞ்சுமாறு வீரம் புரிந்த ஈசனே! எம்மை ஆளும் பசுபதியே! பிறரைத் தஞ்சம் எனக் கருதாது தேவரீர் திருப்பாதத்தையே இறைஞ்சும் அடியவர் களின்பால் பற்றியுள்ள வினைகளைத் தீர்த்தருள்வீராக.

1035. இடுக்கொன்றும் இன்றிளஞ் சாமையுன்
பாதம் இறைஞ்சுகின் றார்க்கு
அடர்க் கின்ற நோயை விலக்குகண்
டாய்அண்டம் எண்திசையும்
சுடர்த்திங்கள் சூடிச் சுழல்கங்கை
யோடும் சுரும்புதுன்றிப்
படர்க்கொண்ட செஞ்சடை யாய்எம்மை
ஆளும் பசுபதியே.

தெளிவுரை: எண் திசையும் ஒளி திகழும் சந்திரனைச் சூடிக் கங்கையும் தரித்துச் சுரும்புகள் சுழலும் சடை முடியுடைய ஈசனே! எம்மை ஆளும் பசுபதியே! தேவரீருடைய திருப்பாதத்தை ஏத்தும் அடியவர் களுக்கு இடையூறு இன்றி விளங்குமாறு செய்வீராக; அவர்களை வருத்தும் நோயை விலக்குவீராக.

1036. அடலைக் கடல்கழி வானின்
னடியிணை யேஅடைந்தார்
நடலைப் படாமை விலக்குகண்
டாய்நறுங் கொன்றைதிங்கள்
சுடலைப் பொடிச்சுண்ண மாசுணம்
சூளா மணிகிடந்து
படரச் சுடர்மகு டாஎம்மை
ஆளும் பசுபதியே

தெளிவுரை: நறுமணம் கமழும் கொன்றையும் சந்திரனும், திருவெண்ணீறும், பாம்பும், சூளாமணியும் படரும் ஒளி திகழ்ச் சடா மகுடம் உடைய ஈசனே! எம்மை ஆளும் பசுபதியே! துன்பக் கடலிலிருந்து நீங்கும் பொருட்டுத் தேவரீரின் திருவடியை அடைந்தவர்கள் துயரத்தை நுகராதவாறு அருள் புரிவீராக.

அடல்கடல் – துக்கக்கடல்; கழிவான் – நீங்குதல்; நடலைப்படாமை – துயரத்தைச் சற்றும் அனுபவியாது இருக்கும் செழுமை.

1037. துறவித் தொழிலே புரிந்துன்
சுரும்படியே தொழுவார்
மறவித் தொழிலது மாற்றுகண்
டாய்மதில் மூன்றுடைய
அறவைத் தொழில் புரிந்து அந்தரத்
தேசெல்லு மந்திரத் தேர்ப்
பறவைப் புரமெரித் தாய்எம்மை
ஆளும் பசுபதியே.

தெளிவுரை: அந்தரத்தில் பறந்து சென்று அழிக்கும் தொழில்களைச் செய்த மூன்று அசுரர்களின் புரங்களை எரித்துச் சாம்பலாக்கிய ஈசனே! எம்மை ஆளும் பசுபதியே! பற்றற்றவராகிய அடியவர்கள் தேவரீரை மறவாதவாறு செய்வித்தருள்வீராக.

சுரும்படி – ஈசனின் மலர்த்தாளின் சிறப்பினை உணர்த்திற்று. வண்டு ரீங்காரம் இடும் திருவடி. சிவானந்தத் தேன் துளிர்க்கும் திருவடி.

1038. சித்தத் துருகிச் சிவன்எம்பி
ரான்என்று சிந்தையுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின்
றார்பிணி தீர்த்தருளாய்
மத்தத்து அரக்கன் இருபது
தோளும் முடியுமெல்லாம்
பத்துற்று உறநெரித் தாய்எம்மை
ஆளும் பசுபதியே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: உன்மத்தம் உற்ற இராவணனுடைய இருபது தோளும் முடி பத்தும் நலியுமாறு நெரித்த ஈசனே! எம்மை ஆளும் பசுபதியே! சித்தம் உருகக்

கசிந்து எமது தலைவன் என்று சிந்தையுள்ளே இருத்திப் பித்தர் போன்று பேரானந்தம் கொள்ளும் அடியவர் களின் பிணியைத் தீர்த்தருள்வீராக.

சிறப்புரை: ஈசன்பால் கொள்ளும் பெரும் பக்தியானது "பித்து" என ஓதப் பெற்றது. இத்தன்மையில், "பசுபாசம் அறுத்தருளிப் பித்தன் இவன் என என்னை ஆக்குவித்துப் பேராமே சித்தமெனும் திண் கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த வித்தகனார் விளையாடல் விளங்கு தில்லை கண்டேனே" (கண்ட பத்து 7) எனவும்; "பேர் அரையற்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்" (திருவெம்பாவை 15) எனவும் அருளிச் செய்யப் பெற்ற திருவாசக அமுத வாக்கும் காண்க.

உன்மத்தன் – அறிவற்றவன்.

111. பொது

சரக்கறைத் திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

1039. விடையும் விடைப்பெரும் பாகாஎன்
விண்ணப்பம் வெம்மழு வாள்
படையும் படையாய் நிரைத்தபல்
பூதமும் பாய்புலித்தோல்
உடையு முடைதலை மாலையும்
மாலைப் பிறையொதுங்கும்
சடையும் இருக்கும் சரக்கறை
யோஎன் தனிநெஞ்சமே.

தெளிவுரை: சினவிடையுடைய ஈசனே! விடையின் மீது ஏறும் பெருமானே! எனது விண்ணப்பம். வெம்மை யுடைய மழுவாகிய படையும், பூதகணங்கள் நிறைந்த

படையும், புலித்தோல் உடையும், மண்டை ஓடுகளைக் கோத்த மாலையும், பிறைச் சந்திரன் விளங்கும் சடை முடியும் என் நெஞ்சில் குடி கொண்டு விளங்கும் அது சரக்கு அறையோ!

சிறப்புரை: ஈசனின் திருக்கோலங்களை நெஞ்சில் வைத்து ஏத்தும் சிறப்பினை இத்திருப்பாட்டு இயம்பிற்று.

முடை தலை – உடைதலை, மண்டை ஓடு; முடை – நாற்றம்.

1040. விஞ்சத் தடவரை வெற்பா என்
விண்ணப்பம் மேலிலங்கு
சங்கக் கலனும் சரிகோ
வணமும் தமருகமும்
அந்திப் பிறையும் அனல்வாய்
அரவும் விரவிஎல்லாம்
சந்தித்து இருக்கும் சரக்கறை
யோஎன் தனிநெஞ்சமே.

தெளிவுரை: அகன்ற மலைகள் பல சூழ்ந்து விளங்கக் கயிலை மலையில் மேவும் ஈசனே! என் விண்ணப்பம். தேவரீரின் திருமேனியில் விளங்கும் சங்கால் ஆகிய குழையும், கோவணமும், உடுக்கையும், பிறைச் சந்திரனும், வெம்மைமிகு அரவும் ஆகியன யாவும் விரவி மேவும் என் தனி நெஞ்சமானது சரக்கு அறையோ!

சங்கக்கலன் – குழை, சங்கு மணிகளும் சுட்டும்;
தமருகம் – உடுக்கை.

1041. வீந்தார் தலைகலன் ஏந்தீஎன்
விண்ணப்பம் மேல் இலங்கு
சாந்தாய வெந்த தவளவெண்
ணீறும் தகுணிச்சமும்

பூந்தா மரைமேனிப் புள்ளி
உழைமான் அதள்புலித்தோல்
தாந்தாம் இருக்கும் சரக்கறை
யோஎன் தனிநெஞ்சமே.

தெளிவுரை: *எண்ணற்றவர்களாய் அழிந்த நூறு கோடி பிரமர், ஆறு கோடி நாராயணர், கணக்கில்லாத இந்திரர்கள் ஆகியோரின் மண்டை ஓடுகளை அணிகலனாக உடைய பெருமானே! என் விண்ணப்பம். தேவரீர்பால் மேலாக இலங்கும் திருவெண்ணீறு, தகுணிச்சம், பூந்தாமரை மேனி, மான் தோல், புலித்தோல் ஆகியன யாவும் விரவி விளங்கும் என் தனி நெஞ்சமானது சரக்கு அறையோ!*

தகுணிச்சம் - திருநடனத்தை ஒட்டிய வாத்தியக் கருவி; பூந்தாமரை மேனி - ஈசன் திருமேனி வண்ணம். "உன்னைத் தந்தனை செந்தாமரைக்காடு அனைய மேனித்தனிச் சுடரே" (திருச்சதகம் 26) என்பது மணிவாசகரின் அமுத வாக்கு.

1042. வெஞ்சமர் வேழத்து உரியாய்என்
விண்ணப்பம்மேல் இலங்கு
வஞ்சமா வந்த வருபுனல்
கங்கையும் வான்மதியும்
நஞ்சமா நாக நகுசிர
மாலை நகுவெண்தலை
தஞ்சமா வாழும் சரக்கறை
யோஎன் தனிநெஞ்சமே.

தெளிவுரை: *யானையைப் போர் செய்து கொன்று அதன் தோலை உரித்த ஈசனே! என் விண்ணப்பம். தேவரீரின் மீது இலங்குகின்ற கங்கையும், சந்திரனும்,*

நஞ்சுடைய நாகமும், தலைமாலை ஆகியன விரவி விளங்கும் என் தனிநெஞ்சமானது சரக்கு அறையோ!

1043. வேலைக் கடல்நஞ்சம் உண்டாய்என்
விண்ணப்பம் மேல்இலங்கு
காலற்க டந்தான் இடம்கயி
லாயமும் காமர்கொன்றை
மாலைப் பிறையும் மணிவாய்
அரவும் விரவி எல்லாம்
சாலக் கிடக்கும் சரக்கறை
யோஎன் தனி நெஞ்சமே.

தெளிவுரை: கடலில் தோன்றிய நஞ்சினை உட்கொண்ட ஈசனே! என் விண்ணப்பம். மேன்மை யாய் விளங்கும் காலனை மாய்த்த இடமும், கயிலாயமும், கொன்றை மாலையும், பிறைச் சந்திரனும், மணிவாய் அரவும் விரவி எல்லாம் நன்று விளங்கும் என் நெஞ்சமானது சரக்கு அறையோ!

1044. வீழிட்ட கொன்றையந் தாராய்என்
விண்ணப்பம் மேல் இலங்கு
சூழிட் டிருக்குநற் சூளா
மணியும் சுடலைநீறும்
ஏழிட் டிருக்குநல் அக்கும்
அரவும்என்பு ஆமையோடும்
தாழிட் டிருக்கும் சரக்கறை
யோஎன் தனி நெஞ்சமே.

தெளிவுரை: கொன்றை மாலை அணிந்த ஈசனே! என் விண்ணப்பம். மேன்மையாய் விளங்கும் சூளாமணி, சுடலை நீறு, அக்குமணி, அரவு, என்பு, ஆமை ஓடு ஆகியன யாவும் விளங்க மேவும் என் நெஞ்சமானது, சரக்கு அறையோ!

1045. விண்டார் புரமூன்றும் எய்தாய்என்
விண்ணப்பம் மேல்இலங்கு
தொண்டா டியதொண்டு அடிப்பொடி
நீறும் தொழுதுபாதம்
கண்டார்கள் கண்டிருக் குங்கயி
லாயமும் காமர்கொன்றைத்
தண்டார் இருக்கும் சரக்கறை
யோஎன் தனி நெஞ்சமே.

தெளிவுரை: *பகைமை கொண்டு போர் செய்த முப்புரங் களைக் கணை ஒன்றினால் எய்து, எரிந்து சாம்பலாகுமாறு புரிந்த ஈசனே! என் விண்ணப்பம். மேன்மையாக விளங்கும், திருத்தொண்டர்களும், அடியார்க்கு அடியவர்களும் திருவெண்ணீறும், திருவடி போற்றியவர்களும், விளங்கும் கயிலாயமும், கொன்றை மலரும் விரவி ஏத்தி இருக்கும் என் நெஞ்ச மானது சரக்கு அறையோ!*

1046. விடுபட்டி யேறுகந்து ஏறிஎன்
விண்ணப்பம் மேல்இலங்கு
கொடுகொட்டி கொக்கரை தக்கை
குழல்தாளம் வீணை மொந்தை
வடுவிட்ட கொன்றையும் வன்னியும்
மத்தமும் வாளரவும்
தடுகுட்ட மாடும் சரக்கறை
யோஎன் தனிநெஞ்சமே.

தெளிவுரை: *இடப வாகனத்தில் உகந்து ஏறும் ஈசனே! என் விண்ணப்பம். மேன்மையாக விளங்கும் கொடு கொட்டி, கொக்கரை, தக்கை, குழல், தாளம், வீணை, மொந்தை, கொன்றை மலர், வன்னி இலை (பத்திரம்), ஊமத்தம் பூ, அரவு என விரவுதல் செய்யும் என் நெஞ்சமானது சரக்கு அறையோ!*

கொடுகொட்டி – கூத்து வகை.

1047. வெண்திரைக் கங்கை விகிர்தாஎன்
விண்ணப்பம் மேல்இலங்கு
கண்டிகை பூண்டு கடிசூத்
திரமேற் கபாலவடம்
குண்டிகை கொக்கரை கோணற்
பிறைகுறட் பூதப்படை
தண்டிவைத் திட்ட சரக்கறை
யோஎன் தனி நெஞ்சமே.

தெளிவுரை: கங்கையைச் சடை முடியில் தரித்த ஈசனே! என் விண்ணப்பம். மேன்மையாக விளங்குகின்ற கண்டிகை, கடி சூத்திரம், தலை மாலை, கமண்டலம், கொக்கரை, பிறைச் சந்திரன், பூதப்படைகள் என விரவும் என் நெஞ்சமானது சரக்கு அறையோ!

1048. வேதித்த வெம்மழு வாளீஎன்
விண்ணப்பம் மேல்இலங்கு
சோதித் திருக்குநற் சூளா
மணியும் சுடலைநீறும்
பாதிப் பிறையும் படுதலைத்
துண்டமும் பாய்புலித் தோல்
சாதித் திருக்கும் சரக்கறை
யோஎன் தனிநெஞ்சமே.

தெளிவுரை: நன்கு வடித்த வெம்மை மிகும் மழுப்படையை ஏந்தி விளங்கும் ஈசனே! என் விண்ணப்பம். மேன்மையாக விளங்குகின்ற சோதி யுடன் திகழும் சூளாமணி, சுடலை நீறு, பிறைச் சந்திரன், மண்டை ஓடு, புலித்தோல் என விரவும் யாவும் விளங்கும் என் நெஞ்சமானது சரக்கு அறையோ!

1049. விவந்தா டியகழல் எந்தாய்என்
விண்ணப்பம் மேல்இலங்கு
தவந்தான் எடுக்கத் தலைபத்து
இறுத்தனை தாழ்புலித் தோல்
சிவந்தா டியபொடி நீறும்
சிரமாலை சூடிநின்று
தவந்தான் இருக்கும் சரக்கறை
யோஎன் தனிநெஞ்சமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வீரக்கழல் அணிந்து திருநடனம் ஆடிய எந்தை ஈசனே! என் விண்ணப்பம். மேலாக விளங்கு கின்ற தவத்தினைப் போன்று விளங்கும் கயிலை மலையை வணங்கி ஏத்தாது, அசைத்து எடுத்த இராவணனுடைய தலை பத்தும் நெரித்தவர், தேவரீர். புலித்தோல், சிவந்த திருமேனியில் ஆடிய நீறு, தலை மாலை சூடிய திருக்கோலம் ஆகியன விளங்கும் என் நெஞ்சமானது சரக்கு அறையோ!

சிறப்புரை: இத் திருப்பதிகமானது ஈசனின் திருவடிவத்தைக் கேசாதி . பாதமாகவும், பாதாதி கேசமாகவும் விளம்பி அத்துணையும் நெஞ்சில் கொள்ளும் மேலான கருவூலப் பெட்டகம் போல் விளங்குதலை உணர்த்தியதாம். ஈசனுக்கு அலங்கார மாக விளங்கும் கழல், செந்தாமரை, புலித்தோல், மான் தோல், அரை ஞாண் (கடிசூத்திரம்), அரவம், கோவணம், எலும்பு, ஆமை, சங்கு, திருநீறு, தமருகம், தலைமாலை, கொன்றை, சூளாமணி, வன்னி, மத்தம், கண்டிகை, கங்கை, பிறைச்சந்திரன், திருத்தொண்டர், கொடுகட்டி, கொக்கரை, தக்கை, குழல், தாளம், வீணை, மொந்தை, பூதப்படை, காலனைக்காய்தல், யானையின் தோல், கயிலாயம், நீலகண்டம்,

மழுப்படை, இடபம், முப்புரம் எரித்தல், இராவணனை அடக்குதல் என யாவும் கொள்ளும் நெஞ்சம் சரக்கு அறையோ என வியந்து ஏத்தப் பெற்றது.

112. பொது

தனித்திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

1050. வெள்ளிக் குழைத் துணி போலும்
கபாலத்தன் வீழ்ந்திலங்கு
வெள்ளிப் புரியன்ன வெண்புரி
நூலன் விரிசடைமேல்
வெள்ளித் தகடன்ன வெண்பிறை
சூடிவெள் ளென்பு அணிந்து
வெள்ளிப் பொடிப்பவ ளப்புறம்
பூசிய வேதியனே.

தெளிவுரை: ஈசன், வெண்மையான குழையணிந்தவர்; வெண்மையான கபாலத்தை ஏந்தியவர்; வெண்ணிற முப்புரி நூல் அணிந்தவர்; விரிந்த சடை முடியில் வெள்ளித் தகடு போன்ற வெண்பிறை சூடி, வெள்ளை எலும்பு அணிந்தவர்; பவளம் போன்ற திருமேனியில் வெண்மையான திருநீறு பூசியவர். அவர், தூய்மை திகழும் வேதியனே!

1051. உடலைத் துறந்துல கேழும்
கடந்துல வாததுன்பக்
கடலைக் கடந்துய்யப் போயிட
லாகும் கனகவண்ணப்
படலைச் சடைப்பர வைத்திரைக்
கங்கைப் பனிப்பிறைவெண்

சுடலைப் பொடிக்கட வுட்குஅடி
மைக்கண் துணிநெஞ்சமே.

தெளிவுரை: நெஞ்சமே! பொன் வண்ணமாகிய சடை முடியில் கங்கையைத் தரித்துக் குளிர்ந்த பிறைச் சந்திரனைச் சூடித் திருநீறு அணிந்து விளங்கும் கடவுளாகிய ஈசனுக்கு, அடிமை கொள்க, அவ்வாறு இருப்பின், நவத் துவாரங்களையுடைய இவ் அழுக்கு உடம்பானது துறந்து, ஏழுலகங்களாகிய அண்டத்தைக் கடந்து, பிறவித் துன்பத்திலிருந்து நீங்கிப் பாச நீக்கம் பெற்றுச் சிவானந்தத் தேனைப் பருகி, முத்திப் பேற்றினை அடைந்து இன்புற்று உய்யலாம்.

1052. முன்னே உரைத்தால் முகமனே
ஒக்கும்இம் மூவுலகுக்கு
அன்னையும் அத்தனும் ஆவாய்
அழல்வணா நீயலையோ
உன்னை நினைந்தே கழியும்என்
ஆவி கழிந்ததற்பின்
என்னை மறக்கப் பெறாய்எம்
பிரான் உன்னை வேண்டியதே.

தெளிவுரை: ஈசனே! அழல் வண்ணனே! முன்னின்று உரைக்கும் போது, முகமன் போன்று அமையும். ஆயினும், இம் மூவுலகுக்கும் அன்னையும் தந்தையும் தேவரீரே அல்லவா! தேவரீரையே நினைந்து ஏத்தும் என் ஆவியானது இவ்வுடலிலிருந்து பிரிந்து சென்ற பின்னர், என்னை மறவாது குறித்தருளுமாறு வேண்டு கின்றேன்.

சிறப்புரை: இத் திருப்பாட்டானது உயிர்த்துணையாய் விளங்கும் ஈசனின் பெருமையை உணர்த்துவதாயிற்று. முந்தைய திருப்பாட்டில் (எண் 1051) உடல் துறந்து,

உயிரானது உய்யப் போயிடலாகும் என உணர்த்திய வாறு, ஈசன் உயிர்க்கு அளிக்கும் இன்பத்தை, உரைத்த தன்மையாம் எனக் கொள்க.

1053. நின்னைஎப் போது நினையவொட்
டாய்நீ நினையப்புகில்
பின்னையப் போதே மறப்பித்துப்
பேர்த்தொன்று நாடுவித்தி
உன்னைஎப் போது மறந்திட்டு
உனக்குஇனி தாஇருக்கும்
என்னைஒப் பார்உள ரோசொல்லு
வாழி இறையவனே.

தெளிவுரை: *ஈசனே! தேவரீரை நான் எல்லாக் காலமும் நினையுமாறு செய்ய வொட்டீர்! அவ்வாறு நினைந்து வழிபட வேண்டும் எனக் கருதும் போது, அப்போதே அதனை மறக்கச் செய்து, பிறிது ஒன்றின்பால் பற்றுமாறு செய்வீர்! தேவரீரை நான் மறந்தும், தேவரீருக்கு இனியவனாக இருக்கும் என்னைப் போன்று இவ்வுலகில் யார் உளர்? வாழி.*

1054. முழுத்தழல் மேனி தவளப்
பொடியன் கனகக் குன்றத்து
எழிற்•பெருஞ் சோதியை எங்கள்
பிரானை இகழ்த்திர்கண்டீர்
தொழப்படும் தேவர் தொழப்படு
வானைத் தொழுத பின்னைத்
தொழப்படுந் தேவர்தம் மால்தொழு
விக்கும்தன் தொண்டரையே.

தெளிவுரை: *ஈசன், தழல் போன்ற திருமேனியில் திருவெண்ணீறு பூசி விளங்குபவர்; பொன்மலை போன்ற எழில் பெரும் சோதியாகத் திகழ்பவர். அவர்,*

எங்கள் பெருமான். அப் பெருமானை ஏத்தாது இருத்தல் எதற்கு? யார் யாரை நாம் கடவுளாகக் கருதித் தொழுகின்றோமோ, அவர்களால் தொழப்படுகின்றவர், அப் பரமன். ஈசனைத் தொழுது போற்றினால் தொழப்படுகின்ற ஏனையோர், தொண்டர்களைத் தொழுமாறு செய்விப்பவர் ஆவர்.

இத் திருப்பாட்டானது, தொண்டர்கள் ஈசனைத் தொழுது போற்றுதலை உணர்த்துவதும், அத்தகைய திருத்தொண்டர்கள் பல்லோராலும் தொழப்படும் சிறப்பினை அடைதலையும் ஓதுதலாயிற்று.

*பரஞ்சோதி என்பதும் பாடம்.

1055. விண்ணகத்தான்மிக்க வேதத்து
ளான்விரி நீருடுத்த
மண்ணகத் தான்திரு மாலகத்
தான்மரு வற்கினிய
பண்ணகத் தான்பத்தர் சித்தத்து
ளான்பழ நாயடியேன்
கண்ணகத் தான்மனத் தான்சென்னி
யான்எம் கறைக்கண்டனே.

தெளிவுரை: நீலகண்டனாக விளங்குகின்ற சிவபெருமான், விண்ணுலகத்தில் திகழ்பவர்; வேதப் பொருளாகியவர்; விரிந்த நீர் சூழ்ந்த மண்ணுலகில் விளங்குபவர்; திருமாலின் உள்ளத்தில் ஒளிர்பவர்; மருவுதற்கு இனிய பண்ணின் இசையில் மிளிர்பவர்; பக்தர்களின் சித்தத்தில் விளங்குபவர்; பழைமையாக அடிமை பூண்ட என்னுடைய கண், மனம், சென்னி ஆகியவற்றில் விளங்குபவர்.

சிறப்புரை: ஈசன், நாயனாரை முழுமையும் ஆட்கொண்டு செய்விக்கும் எழிலானது, “பழநாயடியேன்

கண்ணகத்தான் மனத்தான் சென்னியான் எம் கறைக் கண்டனே" என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில் கண் முதலான ஐம்புலன்களும் ஈசனால் ஆட்கொள்ளப் படுதலும், மனம் முதலான நான்கு அந்தக்கரணங் களும் அப் பரனையே ஏத்தி நிற்றலும், சென்னி என்னும் சிவன் அப் பெருமானையே பற்றிப் பேரின் பத்தில் திளைத்தலும் உணர்த்துவதாயிற்று.

1056. பெருங்கடல் மூடிப் பிரளயம்
கொண்டு பிரமனும் போய்
இருங்கடல் மூடி இறகும்
இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபர
மும்கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீளநின்று எம்இறை
நல்வீணை வாசிக்குமே.

தெளிவுரை: அண்டமெல்லாம் கடல் நீரால் மூடிப் பிரளயம் ஏற்படும் காலத்தில் பிரமன், தன் தொழிலும் மாய்ந்து தானும் மாயத் திருமாலும் அவ்வாறே மேவ, எம் இறைவனாகிய சிவபெருமான், அவர்களுடைய எலும்புகளை அணிந்து, கங்காளர் ஆகி, மீண்டும் உலகினைத் தோற்றம் செய்யும் சங்கல்பத்தால் இனிய பண் கொண்டு வீணை வாசித்தலை உடையவர் ஆவார்.

இது ஈசனின் நித்தியத்துவத்தையும் பரத்துவத்தை யும் உணர்த்துவதாயிற்று.

களேபரம் – உடம்பு, எலும்பு.

1057. வாளம் துளங்கில்என் மண்கம்பம்
ஆகில்என் மால்வரையும்

தானம் துளங்கித் தலைதடு
மாறில்என் தண்கடலும்
மீனம் படில்என் விரிசுடர்
வீழில்என் வேலைநஞ்சுண்டு
ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே.

தெளிவுரை: கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு எத்தகைய குறைவும் அடையாத சிவபெருமானுக்கு ஆட்பட்ட அடியவர்களாகிய உத்தமர்களுக்கு, வானம் அசைந்து தடுமாறினாலும்; மண்ணுலகத்தில் நடுக்கம் உற்று நிலை பிறழ்ந்தாலும், பெரிய மலைகள் பெயர்ந்து நிலை மாறினாலும், கடல் வற்றி அதில் உள்ள மீன்கள் காய்ந்தாலும், சூரிய சந்திரர்கள் தம் நிலையிலிருந்து மாறுபட்டு அழிவைத் தந்தாலும் எத் துயரும் அடையாது.

இது, எக்காலத்திலும் நிலைத்து விளங்கும் ஈசனின் அடியவர்களுக்குத் துன்பம் இல்லாத வாழ்வினை நல்கும் இறைவனின் கருணைத் திறத்தை ஓதுதலாயிற்று.

1058. சிவன்எனும் நாமம் தனக்கே
உடையசெம் மேனிஎம்மான்
அவன்எனை ஆட்கொண்டு அளித்திடும்
ஆகில் அவன்றனையான்
பவன்எனு நாமம் பிடித்துத்
திரிந்துபன் னாள்அழைத்தால்
இவன்எனைப் பன்னாள் அழைப்பொழி
யான்என்று எதிர்ப் படுமே.

தெளிவுரை: சிவன் என்னும் திருநாமத்தைத் தனக்கே உரிமையாகக் கொண்டவர், ஈசன். செம்மேனியராகிய

அப்பெருமான், என்னை ஆளாகக் கொண்டு அருளிச் செய்பவர். அப்பெருமானைப் "பவன்" என்னும் திருநாமம் கொண்டு பல்கால் அழைத்து வந்தால், "இவன், என்னைப் பல நாள் அழைத்து வருகின்றான். நாம் இவனுக்குத் தரிசனம் தந்தால் ஒழிய அழைப்பதை நிறுத்த மாட்டான்" என்று கருதி எதிர்ப்படுவார்.

சிறப்புரை: ஈசனினின் திருப்பெயராகச் சிவன் என்பதும் "பவன்" என்பதும் இவண் ஓதப் பெற்றது. இத் தன்மை, "பவன் எம்பிரான் பனிமா மதிக் கண்ணி விண்ணோர் பெருமான் சிவன் எம்பிரான் என்னை ஆண்டு கொண்டான்" (திருச்சதகம் 9) எனவும், "தேவரும் அறியாச் சிவனே காண்க," "சிவன் என யானும் தேறினன் காண்க, அவன் எனை ஆட்கொண்டு அருளினன் காண்க" எனவும் அருளிச் செய்த மாணிக்கவாசகரின் திருவாசக அமுத மொழியும் காண்க.

1059. என்னை ஒப்பார்உன்னை எங்ஙனம்
காண்பர் இகலியுன்னை
நின்னைஒப் பார் நின்னைக் காணும்
படித்தன்று நின்பெருமை
பொன்னைஒப் பார்இத் தழலை
வளாவிச் செம் மானம்செற்று
மின்னைஒப் பார மிளிரும்
சடைக்கற்றை வேதியனே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: பொன்னைத் தழலில் கலந்து, செவ்வானத்தை வெல்லும் மின்னல் போன்று பொருந்த, மிளிரும் சடைக் கற்றையுடைய வேத நாயகனே! தேவரீரையே நிகர்க்கும் தேவரீருடைய

பெருமையை யாராலும் அறியமுடியாது. என்னை ஒப்பவர்கள் எவ்வாறு, தேவரீரை வலிந்து காண இயலும்!

என்னை ஒப்பார் – என்னைப் போன்ற எளியர்;
இகல் – வலிமை, புலத்தல்.

113. பொது

தனித்திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

1060. பவளத் தடவரை போலும்திண்
 தோள்கள்அத் தோள் மிசையே
பவளக் குழைதழைத் தால்ஒக்கும்
 பல்சடை அச்சடை மேல்
பவளக் கொழுந்தன்ன பைம்முக
 நாகம்அந் நாகத்தொடும்
பவளக்கண் வால மதிஎந்தை
 சூடும் பனி மலரே.

தெளிவுரை: *எந்தை சிவபெருமான், பவளக் குன்று போன்ற திண்மையுடைய தோள்கள் உடையவர்; தோளின் மீது பவளம் குழைத்தாற் போன்று ஒளிரும் சடை முடியுடையவர்; சடை முடியில் ஒளிரும் பவளக் கொழுந்து போன்ற ஐந்தலை நாகம் உடையவர்; பவளக் கண் போன்று இளமதியாகிய குளிர்ந்த மலரைச் சூடியவர்.*

சிறப்புரை: *முந்தைய திருப்பதிகத்தில் முதல் திருப் பாட்டில் (எண் 1050) வெண்மைத் திருக்கோலத்தை எழில் பெருகக் காட்டி, இத்திருப்பாட்டில் பவள (சிவப்பு) வண்ணத்தினை ஓதியருளிய பாங்கினை ஓர்க.*

வால – பால, இளமை.

1061. முருகார் நறுமலர் இண்டை
தழுவிவண் டேமுரலும்
பெருகாறு அடைசடைக் கற்றையி
னாய்பிணி மேய்ந்திருந்த
இருகாற் குரம்பை இதுநான்
உடையது இதுபிரிந்தால்
தருவாய் எனக்குன் திருவடிக்
கீழொர் தலை மறைவே.

தெளிவுரை: நறுமணம் கமழும் அழகிய இண்டை மலர் மாலையில் வண்டு முரல அணிந்த சடைக் கற்றை யுடைய ஈசனே! பிணி கொண்டது இவ்வுடம்பு. இருகால் கொண்டு மேவும் இதனையே நான் உடைய வனாய் இருக்கிறேன். இது என்னை விட்டுப் பிரிந்தால், தேவரீருடைய திருவடிக்கீழ் இருக்கும் பேற்றைத் தருவீராக. அது, தலையானதாய் விளங்கும் ஒப்பற்ற இருப்பிடமாகும்.

பிணி மேய்ந்திருந்த இருகால் குரம்பை – பிணியுடைய சரீரம்.

1062. மூவா உருவகத்து முக்கண்
முதல்வமீக் கூர்இடும்பை
காவாய் எனக்கடை தூங்கு
மணியைக்கை யாலமரர்
நாவாய் அசைத்த ஒலியொலி
மாறியது இல்லையப்பால்
தீவாய் எரிந்து பொடியாய்க்
கழிந்த திரிபுரமே.

தெளிவுரை: எக் காலத்திலும் மூப்பு அடையாத வடிவத்தில் முக்கண்ணுடன் திகழும் முதல்வனே! எமது துன்பத்தைத் தீர்த்துக் காத்தருள்வீராக என, ஏத்தித் தேவர்கள் ஆராய்ச்சி மணியின் நாவை

அசைத்து ஒலி எழுப்ப, அது மாறுதல் இன்றி ஒலிக்க, அக் கணத்திலேயே முப்புரமானது நெருப்பின் வாய் புகுந்து சாம்பலாகியது.

இது, ஈசன் அடியவர்களுக்கு விரைந்து அருள் புரியும் மாண்பினை உணர்த்துவதாயிற்று.

கடைதூங்குமணி — திருக்கோயிலில் உள்ள ஆராய்ச்சி மணி; இத்தகைய மணியோசையில் ஈசன் விளங்குகின்றார் என்பது திருஞானசம்பர் திருவாக்கும் ஆயிற்று.

1063. பந்தித்த பாவங்கள் அம்மையிற்
செய்தன இம்மைவந்து
சந்தித்த பின்னைச் சமழ்ப்பதென்
னேவந்து அமரர்முன்னாள்
முந்திச் செழுமலர் இட்டு
முடிதாழ்த் தடிவணங்கும்
நந்திக்கு முந்துற ஆட்செய்கி
லாவிட்ட நன்னெஞ்சமே.

தெளிவுரை: தேவர்கள் முந்திச் சென்று செழுமையான மலர்களைக் கொண்டு தூவித் தொழுது முடிதாழ்த்தி ஈசனை வணங்குகின்றனர். அவ்வாறு ஈசனை வணங்கி ஏத்தாத நெஞ்சமே! முற் பிறவிகளில் செய்த பாவங்கள் தொடர்ந்து இப்பிறவி வந்து சேர்ந்து தாக்கிய பின்னர், நாணமும் வருத்தமும் கொள்வது என்கொல்?

அம்மை — முற்பிறவி; இம்மை — இப்பிறவி; சமழ்ப்பது — நாணி வருந்துதல்; நந்தி — சிவபெருமான்; நன்னெஞ்சமே! நல் — இகழ்ச்சிக் குறிப்பு.

1064. அந்திவட் டத்திளங் கண்ணியன்
ஆறமர் செஞ்சடை யான்
புந்திவட் டத்திடைப் புக்குநின்
றானையும் பொய்என்பனோ

சந்திவட் டச்சடைக் கற்றை
அலம்பச் சிறிதலர்ந்த
நந்திவட் டத்தொடு கொன்றை
வளாவிய நம்பனையே.

தெளிவுரை: சிவபெருமான், மாலை நேரத்தில் விளங்கும் பிறைச் சந்திரனைச் சூடியவர்; கங்கையைத் தரித்த சடை முடியுடையவர்; என்னுடைய புந்தியினுள் புகுந்து நின்றவர்; சுழலும் சடைக் கற்றையின் இடையில் சிறிதே மலர்ந்த நந்தியா வட்டம் என்னும் மலரையும் கொன்றை மாலையும் தரித்தவர். அப்பெருமானைப் பொய் என்று உரைப்பனோ!

சிறப்புரை: கண்களுக்குப் புலனாகாதவாறு இறைவன் உள்ள திருவருள் விளக்கத்தினை, "புந்தி வட்டத் திடைப்புக்கு நின்றானையும் பொய் என்பனோ!" என ஏத்தி உரைக்கப் பெற்றது. புறக் கண்ணால் காணுதற்கு ஒண்ணாத ஈசனின் மாட்சிமையை, இவ்வாறு உணர்த்துவதாயிற்று. இத்தன்மையில், "சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவனருளாலே அவன்தாள் வணங்கி" எனவும் "எம்பெருமான் மெய்யே! உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" எனவும் "விண்ணோர்கள் ஏத்த மறைந் திருந்தாய் எம்பெருமான்!" எனவும் அருளிச் செய்த மாணிக்கவாசகரின் திருவாசக (சிவபுராணம்) அமுத வாக்கும் காண்க.

உள்ளம் புகுந்த இறைவனைப் பொய்மையாகக் கூறுவதற்கு இயலுமோ! என்னும் தன்மையில், ஏத்து தலும் ஆயிற்று. இந்நெறியில், சுந்தரமூர்த்தி சுவாமிகள், "பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாக் கொள்வானே!" (திருக்கச்சூர் ஆலக் கோயில் திருப்பாட்டு 7) என அருளிச் செய்தமையும் நோக்குக.

குறிப்பு: திருப்பதிகம் எண் 98 திருவையாறு திருப்பாட்டு வ.எண் 954இல் ஏத்திப் பாடியதும், இத்திருப்பாட்டும் வேறுபாடு இல்லாதது எனக் கொள்ளப்படுதல் உண்டு.

1065. உன்மத்தகமலர் சூடி
உலகம் தொழச் சுடலைப்
பன்மத் தகங்கொண்டு பல்கடை
தோறும் பலிதிரிவான்
என்மத் தகத்தே இரவும்
பகலும் பிரிவரியான்
தன்மத் தகத்தொர் இளம்பிறை
சூடிய சங்கரனே.

தெளிவுரை: தேவரீருக்கே உரிய ஊமத்த மலர் சூடி, உலகமெல்லாம் தொழுது ஏத்தச் சுடலையில், பல் நகை காட்டும் மண்டை ஓட்டை ஏந்தி, மனை தொறும் பலி ஏற்பதற்காகத் திரிந்த ஈசனே! திருமுடியில் இளம்பிறைச் சந்திரனைச் சூடிய சங்கரனே! என்னுடைய சிந்தையிலிருந்து இரவும் பகலும் பிரியாது தேவரீர் விளங்குபவர்.

என் மத்தகம் – என் தன்மை – அடியாரைக் குறித்தது;
தன் மத்தகம் – ஈசன் திருமுடி.

1066. அரைப்பால் உடுப்பன கோவணச்
சின்னங்கள் ஐயம் உணல்
வரைப்பா வையைக் கொண்டது எக்குடி
வாழ்க்கைக்கு வான்இரைக்கும்
இரைப்பா படுதலை யேந்துகை
யாமறை தேடும்எந்தாய்
உரைப்பார் உரைப்பன வேசெய்தி
யால்எங்கள் உத்தமனே.

தெளிவுரை: ஈசனே! தேவரீர், அரையில் உடுப்பது சின்னஞ் சிறிய கோவண ஆடை; பிச்சை கொண்டு உண்பவர் மலை மகளாகிய உமாதேவியைத் தேவரீர் மணம் கொண்டு மேவியது எத்தன்மையான மனை வாழ்க்கை மேவுதற்கு! வானில் ஒலிக்கும் ஒலியாக விளங்கும் பெருமானே! பிரம கபாலம் ஏந்தியவரே! வேதங்களால் தேடப் பெறும் நாதரே! தேவரீர்பால் உரைத்து ஏத்துபவர்களுக்கு அவ்வாறே அருள் செய்பவர் நீவிரே.

சின்னம் – சிறிய ஆடை; உத்தமன் – ஈசன்.

1067. துறக்கப் படாத உடலைத்
துறந்துவெந் தூதுவரோடு
இறப்பன் இறந்தால் இருவிரும்பு
ஏறுவன் ஏறிவந்து
பிறப்பன் பிறந்தால் பிறையணி
வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன்கொ லோஎன்றென் னுள்ளம்
கிடந்து மறுகிடுமே.

தெளிவுரை: இவ்வுடம்பின் பற்றினை விடுத்துக் கொடிய கால தூதுவர்களால் கொண்டு சென்றாலும், வானுலகம் சென்று மீண்டும் மண்ணுலகில் பிறவி கொள்வேன். அவ்வாறு பிறந்தாலும் பிறைச் சந்திரனைச் சூடிய சடை முடியுடைய ஈசனின் திருநாமத்தை மறப்பனோ! மறவாது, என் உள்ளமானது ஏத்தும் என்பது குறிப்பு.

1068. வேரி வளாய விரைமலர்க்
கொன்றை புனைந்தனகன்
சேரி வளாயஎன் சிந்தை
புகுந்தான் திருமுடிமேல்
வாரி வளாய வருபுனல்
கங்கை சடைமறிவாய்

ஏரி வளாவிக் கிடந்தது
போலும் இளம் பிறையே.

தெளிவுரை: தேன் கலந்து விளங்கும் நறுமண மலராகிய கொன்றையைத் தரித்த சிவபெருமான், பயன் நயவாத என் சிந்தையில் புகுந்தவர். அப்பரமனுடைய திருமுடியின் மீது, கடலில் கலக்கும் புனலாகிய கங்கையைச் சடை முடி தடுத்தருளும் பாங்கானது இளம்பிறைச் சந்திரன் பெருமையாய்த் திகழ மேவி ஏரிவாய்த் திகழும் நீர் போன்று பயனுடையதாயிற்று.

அனகம் – கீழ்மை, பயனற்ற தன்மை.

1069. கல்நெடுங் காலம் வெதும்பிக்
கருங்கடல் நீர்சுருங்கிப்
பன்னெடுங் கால மழைதான்
மறுக்கினும் பஞ்சம்உண்டென்று
என்னொடும் சூளறும் அஞ்சல்நெஞ்
சேஇமை யாதமுக்கண்
பொன்னெடுங் குன்றம்ஒன்று உண்டுகண்
டீர்இப் புகலிடத்தே.

தெளிவுரை: நெடுங்காலம் வெயிலால் வெதும்பி, மலையானது வெப்பம் மிகுந்து மேவக் கடல் நீர் சுருங்கிப் பன்னெடுங்காலம் மழை நலம் காணாது பஞ்சம் ஏற்பட்டாலும், நெஞ்சமே! அஞ்ச வேண்டாம். எல்லாரும் புகலும் இம் மண்ணுலகில், பொன் மலையாகிய முக்கண் மூர்த்தி விளங்குகின்றார். அப் பெருமான் அச்சத்தையும் வறுமையையும் நீக்கி அருள் புரிபவர் என்பது குறிப்பு.

கல் – மலை.

1070. மேலும் அறிந்திலன் நான்முகன்
மேற்சென்று கீழிடந்து
மாலும் அறிந்திலன் மாலுற்ற
தேவழி பாடுசெய்யும்

பாலன் மிசைச் சென்று பாசம்
விசிறி மறந்தசிந்தைக்
காலன் அறிந்தான் அறிதற்கு
அரியான் கழலடியே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நான்முகன் அன்னப் பறவை வடிவம் தாங்கி மேலே பறந்து சென்றும் காணாத பெருமை உடையது, ஈசனின் திருமுடி. திருமால் பன்றி வடிவம் தாங்கிக் கீழ் நோக்கிக் குடைந்து இடந்தும், காணற்கு அரிய பெருமையுடையதாயிற்று, ஈசனின் திருவடி. அறிதற்கு அரியவராகிய சிவபெருமானுடைய திருவடி யானது, மார்க்கண்டேயரின் உயிரைக் கவரச் சென்ற போது காலன் அறிந்தனன்.

சிறப்புரை: காணப் பெறாத ஈசன் திருவடியானது, காலனை உதைத்ததால், காலனால் அதனை அறியப் பெற்றது என நயம் தோன்ற இவண் உரைக்கப் பெற்றது. நான்முகனால் காணப் பெறாத திருமுடியின் சிறப்பினை, "போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே" எனவும், திருமாலால் காணப் பெறாத திருவடியின் சிறப்பினை, "பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்" எனவும் மாணிக்கவாசகர் உரைத்தருளிவாறு காண்க.

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய
தேவாரத் திருப்பதிகம் – நான்காம் திருமுறை
நிறைவுற்றது

திருநாவுக்கரசு நாயனார் திருவடிகள் வாழ்க.

பாட்டு முதற் குறிப்பு அகராதி

* * *